தமிழரும் தாவரமும்

■ கு.வி. கிருஷ்ணமூர்த்தி

இ. இளவரசு
089

தமிழரும் தாவரமும்

பேராசிரியர் முனைவர் இரா. இளவரசு
நூலக நூல்கள்
நூற்கொடை : பேராசிரியர் இரா. வேலம்மாள்
பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை

முனைவர். கு.வி.கிருஷ்ணமூர்த்தி
பேராசிரியர், துறைத்தலைவர் (ஓய்வு)
தாவர அறிவியல் துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி - 620 024.
தமிழ்நாடு, இந்தியா

பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி - 620 024.
தமிழ்நாடு, இந்தியா.

பாரதிதாசன் பல்கலைக்கழக வெள்ளிவிழா வெளியீடு

தமிழரும் தாவரமும்
முனைவர் கு.வி.கிருஷ்ணமூர்த்தி
முதல் பதிப்பு : 2007
இரண்டாம் பதிப்பு : 2009
விலை : ரூ. 200

உரிமை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்

வெளியீடு
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
பல்கலைப்பேரூர்
திருச்சிராப்பள்ளி - 620 024

அச்சுக்கோப்பு
மதர்போர்டு, சென்னை - 600 014

அச்சு
யுனைடட் பைண்ட் கிராபிக்ஸ்
189, ராயப்பேட்டை நெடுஞ்சாலை
மயிலாப்பூர், சென்னை - 4
✆ : 044-24661807, 26401807

முனைவர் சி.தங்கமுத்து
துணைவேந்தர்

பாரதிதாசன் பல்கலைக்கழகம்
பல்கலைப்பேரூர்,
திருச்சிராப்பள்ளி - 620 024.

அணிந்துரை

பாரதிதாசன் பல்கலைக்கழகத் தாவரவியல் துறைப் பேராசிரியர் முனைவர் கு.வி.கிருஷ்ணமூர்த்தி (KVK என்று அன்புடன் அழைக்கப் படுபவர்) மிகச் சிறந்த அறிவியல் பேராசிரியர்களில் ஒருவர். மிகக் கடினமான அறிவியல் நுணுக்கங்களையும் எளிதே புரியும் வண்ணம் சொல்லும் ஆற்றல் மிக்கவர். தமது துறை மட்டுமின்றி, அறிவியல் என்ற பரந்து விரிந்த பல்துறைகளிலும் கற்றறிந்தவர்; கலைக்களஞ்சியமாகப் போற்றப் பெறுதலுக்குத் தக்கார். அவர் ஆக்கிய ''அறிவியலின் வரலாறு'' என்ற நூல் (ஆங்கிலத்திலும், தமிழிலும்) இவர்தம் அறிவியல் பற்றிய விசாலப் பார்வைக்குச் சான்று.

தமிழகத் தாவரங்கள் பற்றிய இவருடைய நீண்ட ஆண்டுகளின் ஆய்வு அனுபவத்தின் சாரம் இந்த அபூர்வப் படைப்பு. தமிழ் இலக்கியங் களின் வழியாகவும், தமிழர் பண்பாட்டுச் சின்னங்களாக விளங்கும் கோவில்களின் தலவிருட்சங்கள், நந்தவனங்கள் வாயிலாகவும், பண்டைய தமிழர்களின் வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்துள்ள தாவரம்சார் நாகரிக வரலாற்றை நம் கண்முன்னே படம்பிடித்துக் காட்டுகின்றார். மருதமும், முல்லையும், நெய்தலும், பாலையும் இலக்கியச் சுவைக்காக எடுத்தாளப்பட்ட களங்கள் மட்டுமன்று; தாவர அறிவியல் தமிழர்களின் நீண்டகாலச் சொத்து என்பதைப் பறைசாற்றும் ஆவணங்கள். ''வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்'' என்ற வள்ளலாரின் ஒப்புயர்வற்ற உயிர்நேயம் இந்த நூலில் இழையோடுகிறது. நம்மிடையே இருந்த எண்ணற்ற தாவர இனங்களின் அடையாளம் முழுக்கவும் அழிந்து கொண்டுள்ளமை குறித்த ஆசிரியரின் ஏக்கப் பெருமூச்சு அவ்வப்போது எதிரொலிக்கிறது.

தமிழகத் தாவரங்களின் வரலாற்றுத் தொகுப்பாய்வாகவும் இந்நூல் விளங்குகின்றது. தமிழகத்தில் இயல் தாவரங்கள் எவை, வந்தேறிய அயல்தாவரங்கள் எவை, அருமருந்தாவன எவை, உணவுக்கு

விருந்தாவன எவை, தாவரம்சார் வணிகம் யாவை, தொழில்கள் யாவை எனப் பல அரிய விவரங்கள், ஆய்வு முடிவுகள் பயில்தோறும் பயனளிக்கவல்லன. குறிப்பான சிறப்பு ஃ அறிவியல் வல்லுநர்கள் தத்தம் பகுதியின் ஒட்டுமொத்த உணர்தலையும், ஒரு குறிப்பிட்ட துறை கண்ணோட்டத்தில் எப்படி எல்லாம் புரிந்திட, புரித்திட முடியும் என்பதற்கு இந்நூல் புதிய அணுகுமுறை, வழிமுறை. நம் பல்கலைக்கழக வெளியீடாக இவ்வெள்ளிவிழா ஆண்டில் இந்நூல் வெளியிடுவதில் பெருமை.

அன்புடன்,

(சி.தங்கமுத்து)

முன்னுரை

பொருளாதார அறிவியலின் தந்தை எனக் கருதப்படும் ஆடம் ஸ்மித் (Adam Smith) உலகின் அனைத்து வளங்களும் புவியின் மடியிலிருந்து தான் (bossom of the earth) பெறப்படுகின்றன என்று கூறினார். புவியின் மடியில்தான் வளங்களான கனிம, தனிமங்களும் உயிரினங் களும் காணப்படுகின்றன. எல்லா உயிரினங்களிலேயும் மிகச் சிறப்பானவை தாவரங்கள். ஆதவனின் ஒளிச்சக்தியை வேதிய ஆற்ற லுடைய உணவுப் பொருட்களாக மாற்றும் தன்மை தாவரங்களுக்குத்தான் உண்டு. மனித இனமும் மற்ற விலங்குகளும் இந்த வேதிய ஆற்றலைப் பெறுவதற்காக நேரடியாகவோ, மறைமுகமாகவோ தாவரங்களைச் சார்ந்துள்ளன. மனிதனின் முக்கியத் தேவைகளான உணவு, உறைவிடம், உடை மட்டுமன்றி, மற்ற தேவைகளான மருந்துகள், சாயங்கள், மெழுகு கள், பிசின்கள், கோந்துகள், வாசனைப் பொருட்கள், அழகு சாதனங்கள் போன்ற மற்றவற்றையும் பெரும்பாலும் தாவரங்கள் தான் வழங்கு கின்றன. இதனால் நம்முடைய முன்னோர்களும் தாவரங்களைப் ''புவியின் திறந்த வளம்'' என்று போற்றினர்.

பல்வேறு பயன்களின் காரணமாகவே தாவரங்கள் ஒரு நாட்டின் ஒருமித்த வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமைந்துள்ளன. உலகின் எந்த ஒரு நாட்டின் நாகரிக வளர்ச்சியை எடுத்துக் கொண்டாலும், அவ்வளர்ச்சி யில் தாவரங்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகத் திகழ்ந்திருக்கும். சில நாடுகளின் வரலாற்றையே திசைதிருப்பிய பெருமையும் ஒருசில தாவரங்களுக்கு உண்டு. இதேபோன்றுதான் தமிழகத்தின் நாகரிக, பண்பாட்டு மற்றும் பொருளாதார வளர்ச்சியிலும், வரலாற்றிலும் தாவரங்கள் பெரும்பங்கு ஆற்றியுள்ளன. சமயம், காதல், ஒழுங்கு, ஒப்புரவு, ஆண்மை, வீரம், போர், அரசு, உணவு, அறம், பொருளீட்டல், கல்வி, வணிகம், ஆன்மீகம், மருத்துவம் ஆகிய அனைத்தின் வளர்ச்சி யிலும் தாவரங்களின் பங்களிப்பை அறுதியிட்டுக் கூற முடியாது. விளக்க

முடியாத மனித உணர்ச்சிக் கூறுகளையும், துடிப்புகளையும் தாவரங்கள் மூலம்தான் நம்முடைய முன்னோர்கள் எளிதில் விளக்கியுள்ளனர்.

தமிழகத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சியிலும் தாவரங்களின் தாக்கம் என்ன என்பது இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது. வரலாற்றுக்கு முந்திய காலம் தொடங்கி, சங்ககாலம் வழியாக, தற்காலத் தொடக்கம் வரை இந்தத் தாக்கத்தின் அனைத்துப் பரிமாணங்களும் வரலாற்று அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளன. சங்கப்பாடல்கள் முதலாக பாரதிதாசன் பாடல்கள் வரை அனைத்து இலக்கிய நூல்களும் இம்முயற்சிக்கு நெறித்துணை யாயின. சங்க இலக்கியங்களும், பின்வந்த இலக்கியங்களும் சமகாலத்திய தமிழ்ச் சமுதாயத்தைப் பற்றியும், தமிழகத்தைப் பற்றியும் ஏராளமான தகவல்களை அளித்துள்ளன. இருப்பினும், முனைவர் ராஜன் (தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம்) குறிப்பிடுவது போல, இத்தகவல்கள் தமிழகத் தின் பன்முகத்தையும் முற்றிலுமாகப் பிரதிபலிக்கவில்லை என்பதே உண்மை. எனவே, பிறமொழி நூல்களும், நிகண்டுகளும் பார்க்கப்பட்டு, தகவல்கள் பெறப்பட்டு, அவை இந்நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர, வல்லார் வாய்க் கேள்வி, செவிவழிச் செய்திகள், நாட்டுப் பாடல்கள், பழமொழிகள், பழங்குடி மக்கள்வழிச் செய்திகள் போன்றவைகளும் பெறப்பட்டு, அவையனைத்தும் மிகுந்த பரிசீலனைக்குப் பின்பு, ஏற்புடையதாயின், ஏற்றுக் கொள்ளப்பட்டு இந்நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஏராளமான கல்வெட்டுகளும், செப்பேடுகளும் கவனமாகப் பார்க்கப்பட்டு அவற்றிலிருந்து பெறப்பட்ட பல தகவல்களும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. தமிழகத்திலும், இந்தியாவின் மற்ற பகுதிகளிலும், உலகின் ஒருசில பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சித் தகவல்களும் இந்நூலை எழுத உறுதுணையாயின. இந்தியாவின் பிற பகுதிகளிலும், உலகின் வேறுசில நாடுகளிலும் (குறிப்பாக, மத்தியத்தரைக்கடல் பகுதி நாடுகளிலும், கிழக்கிந்திய நாடுகளிலும், இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளிலும்) வரலாற்றின் வெவ்வேறு காலகட்டங்களில் ஏற்பட்ட வரலாற்று நிகழ்வு கள், தமிழகத்தில் அதே காலகட்டங்களில் ஏற்பட்ட வரலாற்று நிகழ்வு களைப் புரிந்துகொள்ளப் பேருதவி செய்துள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. சிறந்த வரலாற்று ஆசிரியரான முனைவர் சஞ்சய் சுப்பிரமணியனின் கருத்துருவான ''தொடர்புடைய வரலாறு'' (concept of "Connected History") தமிழக வரலாற்றில் முற்றிலும் பொருத்தமுடையதாக அமைந்திருப்பதும் இந்நூலில் ஆங்காங்கே சுட்டப்பட்டுள்ளன.

தமிழக வரலாறு உணர்வுகளின் அடிப்படையில் எழுதப்படாமல் அறிவியல் உண்மைகளின் அடிப்படையில் எழுதப்பட வேண்டும். உணர்ச்சிகள் உடனே வெளிப்படும்; உண்மைகள் சற்றுக் காலம் கடந்தபின்

தான் புலப்படும். எனவே, உணர்வுகளுக்கு இடங்கொடாமல் அறிவியல் உண்மைகளின் (சற்றே கசப்பானதாக இருப்பினும்) அடிப்படையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. ஒருசில ஆதாரங்களை மட்டும் முன்னிறுத்தி எடுக்கப்படும் முடிவுகள் தவறான பாதையில் நம்மை இழுத்துச் சென்று விடும் என்பதையும் முற்றிலும் உணர்ந்துதான் இந்நூல் படைக்கப் பட்டுள்ளது.

இத்தகைய நூல் ஒன்று எழுதப்பட வேண்டும் என்ற கருத்தை என்னுள் விதைத்தவர் என்னுடைய ஆசான் பேராசிரியர் பி.ஜி.எல்.சுவாமி அவர்கள்தான். இந்தியாவின் தாவரவியல் வரலாறு பற்றி எழுதப்பட வேண்டும் என்று தமிழகத்தில் முதன்முதலில் முயன்று ஓரளவுக்கு நடைமுறைப்படுத்தியவர் அவர்தான். இறக்கும் தறுவாயில் (1980ஆம் ஆண்டு) தன்னுடைய ஆசையை என்னிடம் வெளிப்படுத்தி என்னை ஊக்குவித்தவர் அவர்தான். அவருடைய எண்ணத்தை நிறைவேற்றுவதற்கு ஏறத்தாழ 25 ஆண்டுகள் கடந்து விட்டன. இந்நூல் எழுத எனக்கு ஊக்கமளித்து உதவி செய்தவர்களில் குறிப்பிடத்தக்க வர்கள் முனைவர் பா.மதிவாணனும் (தஞ்சை, கரந்தைக் கல்லூரி) முனைவர் இராமர் இளங்கோவும் ஆவர். இவர்களின் உதவியின்றி இந் நூலைப் படைத்திருக்க முடியாது. இவர்கள் இருவருக்கும் என்னுடைய இதயங்கலந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். இவர்கள் இருவரைத்தவிர, முனைவர் கனகசபையும் (பாரதிதாசன் பல்கலைக் கழகம்) இந்நூலின் முதற்படியைப் படித்துவிட்டு ஆக்கபூர்வமான கருத்துக்களை நல்கி இந்நூல் சிறப்படைய உதவியுள்ளார்; இவருக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் தங்கமுத்து வும், பதிவாளர் முனைவர் இராதாகிருஷ்ணனும் என்னை ஆர்வத்துடன் உற்சாகப்படுத்தியவர்கள் ஆவர். என்னுடைய துணைவியார், மகன், மருமகள், பேரன் ஆகியோர் என்னுடைய முயற்சிக்கு உறுதுணையாக நின்றவர்கள். இவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றி. இந்நூலின் கையெழுத்துப் பிரதியைக் கணினியச்சு செய்து உதவிய உஷா அவர்களுக்கும், வேறுவகைகளில் உதவிய விஜயவெங்கடேஷ், திருமதி வசந்தா, முனைவர் இரவிச்சந்திரன் ஆகியோருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- கு.வி.கிருஷ்ணமூர்த்தி

பொருளடக்கம்

I.	வரலாற்றுப் பின்னணியில் தமிழகம், தமிழர்கள் தமிழ்	-	9
II.	தமிழகத்தின் இயற்கைச்சூழல்	-	30
III.	தமிழரின் தாவர அறிவியல் புலமை	-	50
IV.	தமிழகத்தின் இயல் தாவரங்களும் அயல் தாவரங்களும்	-	85
V.	தாவரங்களும் தமிழர் சமுதாயமும்	-	130
VI.	தாவரங்களும் தமிழரின் ஆன்மவியலும்	-	155
VII.	வேளாண் மற்றும் தோட்டத் தாவரங்களும் தமிழரும்	-	183
VIII.	தாவரங்களும் தமிழர் உணவும்	-	210
IX.	தாவரங்களும் தமிழர் மருந்தும்	-	228
X.	தமிழகத்தில் தாவரப் பயன்பாடும் தாவரம் சார் தொழில்களும்	-	245
XI.	தமிழகத் தாவரப் பொருட்களின் வாணிகம்	-	259
	படங்கள் இணைப்பு	-	281
	1. நெறித்துணை இலக்கிய நூல்கள்	-	305
	2. நெறித்துணை நூல்களும் கட்டுரைகளும் : ஆங்கிலம்	-	308
	3. நெறித்துணை நூல்களும் கட்டுரைகளும் : தமிழ்	-	314
	4. நெறித்துணைக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும்	-	320
பின்னிணைப்பு - 1			
	அ. தொல்காப்பியத் தாவரங்கள்	-	321
	ஆ. சங்ககாலத் தாவரங்கள்	-	322
	இ. சங்கம் மருவிய காலத் தாவரங்கள்	-	328
	ஈ. பக்தி இலக்கிய காலம் (கி.பி.600) தொடங்கி நாயக்கர் காலம் (கி.பி. 1750) வரை குறிப்பிடப்பட்டுள்ள தாவரங்கள்	-	333
பின்னிணைப்பு - 2 : தலமரங்கள்		-	340
பின்னிணைப்பு - 3 : தமிழக மருத்துவத் தாவரங்கள்		-	350
பின்னிணைப்பு - 4 : தமிழகத் தாவரங்களும் அவற்றின் தாவரவியல் பெயர்களும்		-	366

I

வரலாற்றுப் பின்னணியில் தமிழகம், தமிழர், தமிழ்

தமிழகம், தமிழர், தமிழ் பற்றிய 25 நூற்றாண்டு வரலாறு பற்றி மிகத் தெளிவாகத் தெரியவில்லை என்றே கூறலாம். இலக்கண இலக்கியங்கள் பலவற்றைத் திறமையுடன் படைத்த தமிழர், தம்முடைய வரலாறு கூறும், அறிவியல் நோக்கத்திலமைந்த, நூல் ஒன்றை எழுதாதது ஒரு பெரிய குறையே! இலக்கியங்களும் கல்வெட்டுகளும் அகழ்வாராய்ச்சிகளும் இந்த வரலாற்றைப் பற்றி அறிய ஓரளவு உதவினாலும், வரலாற்றை முழுதும் தெரிந்து கொள்ள உதவும் எழுத்துக்கள் எதுவுமில்லை என்பது தெளிவு. தாவரங்கள் எவ்வாறு இந்த வரலாற்றை அறிய உதவின என்பது பற்றியும், தமிழக வரலாற்றில் அவற்றின் தாக்கம் என்ன என்பது பற்றியும் அறிவதற்கு முன், தமிழக வரலாற்றின் பன்முகங்களை அறிந்துகொள்வது சாலச் சிறந்தது. இந்த அத்தியாயத்தில் தமிழக வரலாறு சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது.

(அ) புவிவரலாற்றுப் பின்னணியில் தமிழகம்

ஏறத்தாழ 15 பில்லியன் வருடங்களுக்கு முன்பு பெருவெடிப்பு நிகழ்ச்சியின் (big bang phenomenon) மூலம் பிரபஞ்சமும் (Universe), அதில் வெளியும் (space), காலமும் (time) உடன் தோன்றின. பிரபஞ்சத்தில் காணப்படும் பல்லாயிரக்கணக்கான நட்சத்திரக் குழுமங்களில் (galaxies) ஒன்றான பால்வெளியில் (Milky Way) *(இது 10 பில்லியன் வருடங்களுக்கு முன்பு தோன்றியது)* நம்முடைய சூரிய குடும்பம் (solar system) அமைந்துள்ளது. சூரியனும், அதை நீள்வட்டப் பாதைகளில் சுற்றும் அதன் ஒன்பது [1] கோள்களும் சற்றேறக் குறைய ஐந்து பில்லியன் வருடங்களுக்கு முன்பு தோன்றியவை. இந்த ஒன்பது

---

1) ஒன்பதாவது கோளான புளூட்டோ ஒரு கோளல்ல என்று தற்பொழுது கருதப்படுகிறது.

கோள்களில் நமது புவியும் (Earth) ஒன்று. பண்டைய தமிழ் இலக்கியம் புவியை ஞாலம் என்று குறிப்பிட்டது [1].

திண்மக் கோள வடிவான புவியில் உள்மையப் பகுதி (core) ஒன்றும், அதனைச் சுற்றி ஒரு மூடி அடுக்கும் (mantle), அதனையும் சுற்றி ஒரு புறஓடும் (crust) காணப்படுகின்றன. இந்தப் புற ஓட்டின் பரப்பில் தான் கண்டங்களும் (continents), பெருங்கடல்களும் (oceans) அமைந் துள்ளன. புவியின் புற ஓடு இடத்திற்கேற்ப 5 முதல் 40 கி.மீ. வரை தடிப்புள்ளது; பொதுவாக, இந்தப் புற ஓடு பெருங்கடற் பகுதியில் 5 கி.மீ. தடிப்பும், கண்டங்கள் பகுதியில் 40 கி.மீ. தடிப்பும் கொண்டது.

புவியின் புற ஓடு பல தகடுகளாக (tectonic plates) பிரிந்துள்ளது. ஏழு பெரிய தகடுகளும் (முறையே, பசிபிக், வடஅமெரிக்க, தென் அமெரிக்க, யூரேசிய, ஆப்ரிக்க, இண்டோ-ஆஸ்திரேலிய, அண்டார்டிகா தகடுகள்), ஐந்து சிறிய தகடுகளும் (முறையே, கோகோஸ், கரிபிய, அராபிய, பிலிப்பைன்ஸ் மற்றும் ஸ்கேரியா தகடுகள்), ஏறத்தாழ 15 மிகச் சிறியத் தகடுகளும் ஒன்று சேர்ந்ததுதான் புவியின் புறத்தோடு. புவி தோன்றிய நாளிலிருந்து புவியின் வரலாற்றில் இந்தத் தகடுகள் அனைத்தும் தம்முடைய தொடக்க இடத்திலிருந்து தொடர்ந்து இடம் பெயர்ந்துள்ளன; இன்றும் இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்றன. தகடுகள் ஒன்றிலிருந்து மற்றொன்று விலகும்போது (= விலகும் தகடுகள்), கடல்களை உண்டாக்குகின்றன; நெருங்கும்போது (= நெருங்கும் தகடுகள்) தகடுகள் ஒன்றோடொன்று மோதி உலகின் மிகப் பெரிய மலைகளை (இமயமலை உட்பட) உருவாக்கியுள்ளன. இவ்வாறு தகடுகள் மோதும்போதுதான் நிலநடுக்கங்கள் மற்றும் சுனாமி போன்ற இயற்கைப் பேரழிவுகள் நடைபெறுகின்றன. இந்தத் தகடுகளின் இடப்பெயர்ச்சியால் அவற்றின் மேலமைந்துள்ள கண்டங்களும் புவியின் வரலாற்றில் தத்தம் தொடக்க இடங்களிலிருந்து மாறி வந்திருக்கின்றன (படம் 1).

ஏறத்தாழ 3.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு புவியின் கண்டங்கள் அனைத்தும் ஒரே நிலப்பரப்பாக (land mass) இருந்தன. இந்த நிலப்பரப்புக்குப் பாஞ்சியா (Pangaea) என்ற பெயர் கொடுக்கப் பட்டது. பாஞ்சியா ஏறத்தாழ 2 முதல் 2.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தகடுகளின் பிரிவால் இரண்டு பெருங்கண்டங்களாகப் (Supercontinent) பிளவுற்றது. புவியின் வடக்கே லாரேசியா (Lauresia)

1) ''ஞாலமீமிசை வள்ளியோர்'' (புறம் : 191)

என்ற பெருங்கண்டமும் (தற்போதைய வடஅமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசியா பகுதிகள் ஒன்று சேர்ந்தது), தெற்கே கோண்ட்வானா (Gondwana) என்ற பெருங்கண்டமும் (தற்போதைய தென் அமெரிக்கா, ஆப்ரிக்கா, மடகாஸ்கர், இந்தியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, அண்டார்டிகா ஆகியவை ஒன்றுசேர்ந்தது) (படம் 1). கோண்ட்வானா வின் வட பகுதியில் இந்தியா அமைந்திருந்தது. கோண்ட்வானா தென்னிந்தியாவில் உள்ள கோண்ட் (gond) என்ற பழங்குடியினர் வாழும் பகுதியின் பெயரால் மெட்லிகாட் என்பவரால் 1872ஆம் ஆண்டு அழைக்கப்பட்டது. கோண்ட்வானா பெருங்கண்டம் முழுவதும் காணப்பட்ட தாவர மற்றும் பிராணிகளின் தொல்லுயிர் எச்சங்களில் (fossils) பெரும்பான்மையானவை தற்போதைய கோண்ட் பகுதியில் காணப்படுகின்றன. தாவரங்களைப் பொருத்தவரையில் கிளாசாப்டெரிஸ் *(Glossopteris)*, டிலோஃபில்லம் *(Ptilophyllum)*, டைக்கிராய்டியம் *(Dicroidium)* போன்றவை தொல்லுயிர் எச்சங்களாகக் கோண்ட்வானா பெருங்கண்டம் முழுவதும் காணப்படுகின்றன. இவற்றைத் தவிரப் பல ஊசியிலைத் தாவரச் சிற்றினங்கள் மற்றும் பெரணிகளின் சிற்றினங்கள் தொல்லுயிர் எச்சங்களாகக் காணப்படு கின்றன. இவற்றின் வயது 2 முதல் 1 பில்லியன் ஆண்டுகளாகும். இதற்குப் பின், 65 முதல் 40 மில்லியன் ஆண்டுகளுக்கிடையில் கோண்ட்வானா பிரிந்து பல தனிப் பகுதிகளாக மாறியது. இந்தக் காலகட்டத்தில் (Tertiary period) தென்னிந்தியாவில் காணப்பட்ட தொல்லுயிர்த் தாவர மற்றும் பிராணிகளின் எச்சங்கள் முன்பு கோண்ட்வானா பகுதிகளாக இருந்த தென்அமெரிக்கா, ஆப்ரிக்கா, ஆஸ்திரேலியா ஆகியவற்றில் இதே காலக்கட்டத்தில் காணப்பட்ட தொல்லுயிர் எச்சங்களிலிருந்து பெரிதும் வேறுபட்டிருந்தன. இதேபோன்று, 26 முதல் 7 மில்லியன் ஆண்டுகள் வயதான தாவரத் தொல்லுயிர் எச்சங்கள் (ஏறத்தாழ 50 சிற்றினங்கள்) கடலூர் படிகப் பாறைத் தொகுதிகளில் காணப்படுகின்றன. இவற்றிற்கும் இதே காலக் கட்டத்தில் மேற்கூறிய முன்னாள் கோண்ட்வானா பகுதிகளில் காணப்படும் தொல்லுயிர் எச்சங்களுக்கும் இடையே பெருத்த வேறுபாடுகள் காணப்படுகின்றன. எனவே, தாவரத் தொல்லுயிர் எச்சங்கள் புவியின் வரலாற்றுப் பின்னணியில் தமிழகத்தின் நிலையைச் சிறப்பாக எடுத்துக்கூறப் பெரிதும் உதவியுள்ளன. ஏறத்தாழ 17,000 ஆண்டுகளுக்கு முன்பு (புதிய கற்கால மனிதர் காலம்) கடல் மட்டம் தற்போதைய மட்டத்தைவிட சற்று தாழ்ந்திருந்ததால் இந்தியாவுடன் இலங்கை ஒரு குறுகிய நிலப்பரப்பால் இணைக்கப் பட்டிருந்ததாகப் புவியியல் நிபுணர்கள் (இராமசாமி & ரமேஷ் 1995) கருதுகின்றனர் (ஜெயகரன் 2002) (படம் 2).

தமிழகத்தின் தென் பகுதியிலிருந்த நிலப்பரப்பை (மூன்று கடற்கோள்கள் மூலமாக) கடல் கொண்டதாகத் தமிழறிஞர்கள் கருதுகின்றனர்; இப்பகுதியைக் குமரிக் கண்டம் என்றும் அழைத்த னர். கடல் கொண்ட குமரிக் கண்டத்தில்தான் தலை, இடைச் சங்கங்கள், முறையே தென்மதுரை, கபாடபுரம் ஆகிய இடங்களில் இருந்தன என்றும் கருதப்படுகிறது. மூன்று கடற்கோள்களுக்குப் பிறகு, குமரிக் கண்டம் முற்றிலும் அழிந்தபின், வைகை ஆற்றங் கரையில் அமைந்த மதுரையைப் பாண்டியன் தலைநகரமாக்கிக் கொண்டான் என்றும், இங்குதான் கடைச்சங்கம் செயல்பட்டது என்றும் மேலும் கருதப்படுகிறது. இது ஒரு மரபுவழிச் செய்திதான் என்றும், இச்செய்தி தமிழ் இலக்கிய வரலாற்றுடன் பிரிக்க முடியாமல் பின்னிப் பிணையப்பட்டுள்ளது என்றும் பல அறிஞர்கள், குறிப்பாக வரலாற்று மற்றும் அறிவியல் அறிஞர்கள், எடுத்துக்காட்டியுள்ளனர் (முழு விவரங்களுக்க பார்க்க ஜெயகரன் 2002). சங்கம் மற்றும் சங்கம் மருவிய காலத்து இலக்கியங்களில் கடற் கோள் பற்றிய செய்திகள் உள்ள பாடல்களுக்கு [1] ஏறத்தாழ கி.பி. 10ஆம் நூற்றாண்டில் உரை எழுதியவர்கள் அனைவரும் (இறையனார் அகப்பொருளுரை தொடங்கி நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார் வரை) இந்த மரபுவழிச் செய்தியை வலியுறுத்தினர். இலக்கியத்திலிருந்தும், அவற்றிற்கு உரை எழுதியவர்களின் உரைகளிலிருந்தும் இப்பொருள் பற்றிப் பின்வரும் 'செய்திகள்' அறியப்படுகின்றன (ஜெயகரன் 2002): குமரி தெய்வ வழிபாடு காரணமாக இந்நிலப்பகுதி 'குமரி' என அழைக்கப்பட்டது. இந்தப் பகுதியைப் பாண்டிய மன்னர்கள் (பாண்டியன் நெடியோன் உட்பட) ஏராளமானவர்கள் ஆண்டனர்.

---

1) ''முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே'' (புறம். : 9)
''குமரியம் பெருந்துறை அயிரை மாந்தி'' (புறம். : 67)
''அடியிற்றன்னள வரசர்க்குணர்த்தி
வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி'' (சிலம்பு. காடுகாண். 17-22)
''மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற் சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ் பொறித்த கிளர் கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச் சீர்த் தென்னவன்'' (முல்.பா.104)

குமரி நிலப்பரப்பின் வடகோடியில் குமரி ஆறு ஓடியது; தென்கோடியில் பஃறுளி ஆறு ஓடியது. இந்த இரண்டு ஆறுகளுக்கும் இடைப்பட்ட தூரம் 700 காதமாகும். குமரி நிலப்பரப்பில் ஏழ்தெங்க நாடு, ஏழ்குன்ற நாடு, ஏழ்குணகரை நாடு, ஏழ்குறுபனை நாடு என்ற 49 நாடுகளும், குமரி, கொல்லம் போன்ற பன்மலைப் பகுதிகளும் இருந்தன (படம் 3).

இந்த இலக்கியக் குறிப்புகள் எதிலும் 'குமரிக் கண்டம்' என்ற சொற்றொடர் கையாளப்படவில்லை. குமரி என்ற நிலப்பரப்பைக் 'கண்டம்' என்று மரபுவழியில் கூறினார்கள் என்பதுதான் மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று பல அறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளனர் (விவரங்களுக்கு பார்க்க, ஜெயகரன் 2002). 'நாடு' என்பதற்கு 'கண்டம்' என்ற பொருளும் இருந்ததாகப் பிங்கல நிகண்டு ''பைதிரமண்டிலம் பாடி தேயநீ தண்ணடை நீவரங் கோட்டஞ்சன பதஞ்சும்மை யகலுள் கண்ட மேனி யென்றின்ன விராச்சிய முலகு நாடென்ப'' என்று குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது! எனவே, கண்டம் என்பது பழந்தமிழில் மிகமிகப் பெரிய நிலப்பரப்பைக் குறிக்கவில்லை என்பதும் ஒரு நாட்டைத்தான் குறித்தது என்பதும் மிகத் தெளிவு!; மேலும் அன்றைய வழக்கில் இருந்த 'நாடு' என்ற சொல் இன்றைய 'தாலுக்கா' போன்ற சிறிய பகுதிகளுக்குத் தான் சமம்[1] என்றும் ஜெயகரன் (2002) ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டியுள்ளார். எனவே, குமரிக் கண்டத்தில் 49 நாடுகள் இருந்தன என்ற உரையாசிரியர்களின் கூற்றுக்கு உண்மையான பொருள் குமரி நாட்டில் 49 தாலூக்காக்கள் இருந்தன என்பதேயாகும் (அறவாணன் 1984); ஒரு சிலர், நாடு என்பதற்கு ''ஊர்'' என்று பொருள் கொண்டு, குமரிப்பரப்பில் 49 ஊர்கள்தான் இருந்தன என்றும் வலியுறுத்துவர்.

கி.பி. 3ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழ் இலக்கியங்களில் கடற்கோள்கள் பற்றிய குறிப்புகள் கிடையாதென்றும், பின்னர் எழுதப்பட்ட கலித்தொகை, சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களில்தான் கடற்கோள் பற்றிய செய்திகள் வருகின்றன என்றும், இக்குறிப்புகளைப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்வந்த உரையாசிரியர்கள் மிகைப்படுத்தி எழுதியுள்ளனர் என்றும் தமிழக வரலாற்று ஆசிரியர் சுப்ரமணியன் (Subramanian 1996) வலியுறுத்தியுள்ளார். பஃறுளி ஆறு மற்றும் குமரி ஆறு ஓடிய பகுதிகள் இன்றைய மாவட்டத்தின் அளவினதாக இருக்கலாம் என்றும், அவை கடலில் மறைய அவற்றை

1) பல கல்வெட்டுகள் தமிழ்ப் பேரரசு மண்டலம், நாடு எனப் பிரிக்கப்பட்டிருந்ததைச் சுட்டுகின்றன.

ஆண்ட மன்னன் தனது தலைநகரை வேறு மாவட்டத்திற்கு மாற்றியிருக்கலாம் என்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். எனவே, குமரிக் கண்டம் ஒரு மரபு தானேயொழிய வரலாறு அல்ல என்றும் அவர் முடித்துள்ளார். உரைக்காரர்களின் கூற்றுப்படி மறைந்த நிலப்பரப்பின் மொத்த நீளம் (பஃறுளி மற்றும் குமரி ஆறுகளுக்கு இடைப்பட்ட தூரம் தெற்கு வடக்காக) 700 காதங்கள் (= 7000 மைல்கள் = 11200 கி.மீ.). ஆனால் தற்போதைய குமரிமுனைக்கும் தென் துருவத்திற்கும் இடைப்பட்ட மொத்த தூரமே 8500 கி.மீ. தான். எனவே, இந்தப் பகுதியில் 700 காத தூர நிலப்பரப்பு இருந்திருக்கவே புவியியல்படி சாத்தியமில்லை (ஜெயகரன் 2002; Ramanathan 1998).

இலங்கையின் வரலாற்றைக் கூறும் 'மகாவம்சம்', 'தீபவம்சம்' (Geiger 1993; Parker 1984) என்ற பாலி மொழியில் எழுதப்பட்ட நூல்களில் (கி.பி. 5-6 நூற்றாண்டு), தமிழக மற்றும் இலங்கைப் பகுதிக்கு அருகாமையில் எந்தப் பெரிய நிலப்பரப்பும் இருந்ததற்கான குறிப்பு எதுவும் காணப்படவில்லை. இதேபோன்று டாலுமீ (Ptolemy) என்ற அறிஞர் கி.பி. 140இல் முதல் உலக வரைப்படத்தை வரைந்தார். இதில் அவர் குறிப்பிடும் Damirike மற்றும் Taprabane என்ற சொற்கள் முறையே தமிழகம் மற்றும் இலங்கையைக் குறிக்கின்றன. இந்த வரைப்படத்தில் குமரிக்கண்டம் என்று ஒன்று இருந்ததற்கான அறிகுறியே தென்படவில்லை. இதேபோன்று, கி.பி. 70இல் எழுதப் பட்ட பெரிபிளஸிலும் (Periplus) (பெரிபிளஸ் பற்றிய விவரங்களை இந்நூலின் இன்னொரு அத்தியாயத்தில் காணலாம்) குமரிக் கண்டம் பற்றிய எந்தக் குறிப்பும் இல்லை. குமரி எனும் துறைமுகம் பற்றிதான், அதுவும் தற்போதைய தமிழகத்தின் ஒரு பகுதியாகத்தான், குறிப்பு உள்ளது.

எர்னஸ்ட் ஹெக்கல் (Ernest Haeckel 1868) எழுதிய History of Creation (= படைப்பின் வரலாறு) என்ற நூலில் மனிதனின் பரிணாமத்தை விளக்க அவரால் கற்பனையாக உருவாக்கப்பட்டதுதான் லெமூரியா (Lemuria) கண்டம். ஹெக்கல் அது கடலில் மூழ்கிவிட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்த லெமூரியா கண்டம்தான் குமரிக் கண்டம் என்றும், அது கடலில் மூழ்கிவிட்டது என்றும், தமிழறிஞர்கள் நம்பி, தங்களைத் தவறான பாதைக்குக் கொண்டு சென்று விட்டனர் என்பதே அறிவியல் உண்மை. எனவே, பண்டைய தமிழகம் தன்னுடைய தெற்குப் பகுதியில் மிகப் பெரிய குமரிக்கண்டத்தைக் கொண்டிருக்க வில்லை என்பதும், ஒருசில சிறிய கடற்கோள்கள் புவியின் வரலாற்றில் அவ்வப்பொழுது தோன்றி தமிழகம் மற்றும் இலங்கை யில் சிறிய நிலப்பரப்புகளை அழித்தன என்பதும்தான் புவியில்

உண்மைகள். இந்த அழிந்த பகுதியில் பஃறுளி ஆறும் இருந்திருக்க வாய்ப்பு உண்டு. இந்த அழிவு கி.பி. 4 அல்லது 5ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்திருக்க வேண்டும் என்று புவியியல் சான்றுகள் சுட்டிக் காட்டுகின்றன.

வரலாற்று அடிப்படையில் பார்க்கும்போது, தமிழகத்தின் எல்லைகள் காலத்திற்கேற்ப சற்றே மாறி வந்திருக்கின்றன. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் இந்திய தீபகற்பத்தின் பெரும்பகுதி (தற்போதைய இலங்கையைத் தவிர்த்து) தமிழகமாகத் திகழ்ந்திருக்கிறது (அதாவது இந்தியாவின் கிழக்குப் பகுதியில் 14^0க்கு கீழேயும், நடு மற்றும் மேற்குப் பகுதியில் 13^0-க்கு கீழேயும், 8^0-க்கு மேலேயும் உள்ள பகுதிதான் தமிழகம்). பண்டைய தமிழகம் என்பது வடவேங்கடம் தென்குமரி வரை தற்போதைய கேரள மாநிலத்தையும் உள்ளடக்கிய பகுதியாகவே விளங்கியுள்ளது என்பதை விரவிக் கிடக்கின்ற தமிழ்ப் பிராமி கல்வெட்டுகள் (அண்மையில் எடக்கல் என்ற கேரளப் பகுதியில் இத்தகைய கல்வெட்டுகள் அறியப் பட்டுள்ளன) பறை சாற்றுகின்றன (ராஜன் 2004). கி.பி. 8-9 நூற்றாண்டு களில் தற்போதைய கேரளப் பகுதி தமிழகத்திலிருந்து பிரிந்தது. கி.பி. 12ஆம் நூற்றாண்டில் எழுந்த நன்னூலில் தமிழ்நாட்டின் மேற்கு எல்லையாகக் கடல் குறிப்பிடப்படாமல், குடகுநாடு எல்லையாகச் சுட்டிக்காட்டியிருப்பதை நோக்குக![1] இதே காலகட்டத்தில் தென்னிந்தியாவின் நடுப்பகுதியில் தமிழக எல்லை வடக்கில் 13^0-யில் இருந்து 12^0-யாகக் குறைந்தது. இதற்குப் பிறகு தமிழகத்தின் எல்லை ஏறத்தாழ மாறாமல் இருந்து வருகிறது (Subramanian 1996).

தொல்காப்பிய பாயிரத்தில் தமிழகத்தின் எல்லைகளாக இரண்டு மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளன. வடக்கில் திருப்பதி என்று தற்போது அழைக்கப்படும் வடவேங்கடமும், தெற்கில் குமரியும் எல்லைகளாகத் திகழ்ந்தன[2]. மற்ற இரண்டு எல்லைகளாகக் கடல்கள் திகழ்ந்தன. இப்பாயிரத்திற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் ''மேற்கும் கிழக்கும் கடலாதலின் எல்லை கூறாராயினார்'' என்று குறிப்பிட்டுள்ளார். தெற்கு எல்லையாக நிலப்பரப்பே இருந்திருக்க வேண்டும் என்றும் இந்த நிலப்பரப்பு குமரிக்கண்டமாக இருந்திருக்க வேண்டும் என்றும் சில தமிழறிஞர்கள் கருத்து கொள்வதற்கு

---

1) ''குணகடல் குமரிகுடகம் வேங்கடம் என நான்கு எல்லை' (நன்.ஃசிறப்புப்பாயிரம்)

2) ''வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம் (தொல்.ஃபாயிரம்)

நச்சினார்க்கினியரின் உரை ஒரு உந்துதலாக இருந்தது எனக் கொள்ளலாம். காக்கைப்பாடினியார் பண்டைய தமிழக எல்லை களாகப் பின்வருமாறு கூறுகிறார்:

''வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும்
வேங்கடம் குமரி தீம்புனல் பௌவம் என்று
அந்நான்கு எல்லை...''

''தென்குமரிவட பெருங்கல், குணகுட கடலா எல்லை'' (புறம். : 17) என்ற சங்க இலக்கியப்பாடல் கூறுவதிலிருந்து, அக்காலத்திலும் தென் எல்லையாகக் குமரியும் (நிலப்பகுதியும்), வட எல்லையாக வேங்கடமும் (= பெருங்கல் = பெரியமலை), கிழக்கு மேற்கு ('குணகுடா') எல்லைகளாகக் கடலும் இருந்திருக்க வேண்டும். ஆனால் இளங்கோ அடிகள் தெற்கு எல்லையாகக் கடலைக் குறிப்பிடுவதிலிருந்து[1], சிலப்பதிகாரக் காலத்தில் தற்போதைய கன்னியாகுமரி தான் தமிழகத்தின் தென் எல்லையாக இருந்திருக்க வேண்டும். டாக்டர் கால்டுவெல் (Caldwel 1875) தென்னிந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் வங்காள விரிகுடாவிற்கும் இடைப் பட்டுப் பழவேற்காடு முதல் குமரிவரை உள்ள பகுதி தமிழ் நிலம் என்கிறார்.

(ஆ) மனித பரிணாமப் பின்னணியில் தமிழர்

மனித இனம் ஆப்ரிக்காவில் தோன்றியதாக நிலைநிறுத்தப் பட்டுள்ளது. மனிதர்களின் மூதாதையர்கள் (ancestors) என்று கருதப் படும் ஹோமினிட்கள் (Hominids) ஏறத்தாழ 20 மில்லியன் ஆண்டு களுக்கு முன்பு ஆப்ரிக்காவில் தோன்றினர். ஏறத்தாழ 6 முதல் 8 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தவிர்க்க முடியாத சூழல் மாற்றங் களின் காரணமாக ஒரு பகுதி ஹோமினிட்கள் ஆப்ரிக்காவிலிருந்து ஆசியா உட்பட வேறு பகுதிகளுக்கு இடப்பெயர்ச்சி அடைந்தனர்; இந்த இடப்பெயர்ச்சி பலகாலம் தொடர்ந்தது. ஆனால், தொடர்ந்து ஆப்ரிக்காவில் இருந்து வந்த ஹோமினிட்களிலிருந்து தான் முதலில் மனிதனுக்கு மிகவும் நெருக்கமான தொடர்புடைய ஆஸ்ட்ரலோபித்தி கஸ் (*Australopithecus*) இனம் தோன்றியது. ஏறத்தாழ இரண்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு (குறிப்பாக 1.75 முதல் 2.34 மில்லியன் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில்) மேற்கூறிய இனம் மனிதப் பேரினத்தின் (*Homo*) சிற்றினங்களில் ஒன்றான *Homo habilis* என்ற மனிதச் சிற்றினத்தைத் தோற்றுவித்தது என்றும்

---

1) ''நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்'' (சிலம்பு.:8:1)

தெரியவருகிறது. *Homo habilis* படிப்படியாகப் பரிணாம வளர்ச்சி பெற்று முதலில் *Homo erectus* (= *Homo ergaster*) என்ற மனிதச் சிற்றினத்தையும் (ஏறத்தாழ 1.6 முதல் 1.8 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு), பின்பு தற்கால மனிதச் சிற்றினமான *Homo sapiens*-ஐயும் (ஏறத்தாழ ஒரு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு) உருவாக்கியது. மனிதன் முதன்முதலில் ஆப்ரிக்காவில்தான் தோன்றினான் என்பதனை அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் மட்டுமன்றி மரபியல் சார்பு (ஜீன் சார்பு) ஆதாரங்களும் வலியுறுத்துகின்றன. மனித இனம் அங்கிருந்துதான் உலகின் மற்ற பகுதிகளுக்குப் பரவியது என்பதற்கும் ஒப்புநோக்கு மரபியல் சான்றுகள் (comparative genetic evidence) உள்ளன. மிகமிகப் பழைய மனித DNA குறியீடுகளை (markers) இன்றும் தென்ஆப்ரிக்காவின் சான் (San) இன மக்களும், மத்திய ஆப்ரிக்காவின் பியாக்கா (Piaka) இன மக்களும் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது (James Shreeve 2006).

தற்கால மனிதச் சிற்றினத்தைச் சேர்ந்த மனிதர்கள் ஆப்ரிக்காவில் இருந்து ஏறத்தாழ 75,000 முதல் 50,000 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவிற்கும் வடக்கு ஆசியப் பகுதிக்கும், 45,000 ஆண்டுகளுக்கு முன்பு ஆஸ்திரேலியாவுக்கும், 20,000 ஆண்டுகளுக்கு முன்பு வட அமெரிக்காவிற்கும், 15,000 ஆண்டுகளுக்கு முன்பு பிலிப்பைன்ஸ் நாட்டிற்கும், அப்பொழுது புவியிலிருந்த நிலப்பாலங்கள் (land bridges) மூலம் இடப்பெயர்ச்சியடைந்தனர் என்று தெரிய வருகிறது (படம் 4). இதற்கான ஒப்புநோக்கு மரபியல் சான்றுகள் உள்ளன (Disotell 1999). இந்தப் பரவல் அனைத்தும் மத்தியத் தரைக்கடல் நாடுகளின் வழியாகத்தான் நடைபெற்றிருக்க வேண்டும் என்றும் தெரிய வருகிறது (கிருஷ்ணமூர்த்தி 2005). நன்கு வளர்ந்த மனித நாகரிகம் முதலில் அறியப்பட்டது மத்தியத்தரைக்கடல் பகுதியில்தான். ஏறத்தாழ 6000 முதல் 8000 ஆண்டுகளுக்கு முன்பு இப்பகுதியில் மனித நாகரிகம் துளிர்த்ததற்கான சான்றுகள் உள்ளன. மெசோபொட்டோமியா, தற்கால இஸ்ரேல், துருக்கி, அபிசினியா, பாபிலோனியா, எகிப்து போன்ற பகுதிகளில் மனித நாகரிகம் அக்காலம் தொடர்ந்து மிளிர ஆரம்பித்தது. கி.மு. 3000 போது பாபிலோனிய, எகிப்து, கிரேக்க மற்றும் சிந்துசமவெளி நாகரிகமும் தழைக்க ஆரம்பித்தது.

தமிழகத்தைப் பொறுத்தவரை கி.மு. 70,000 முதல் 50,000 ஆண்டுகளுக்குரிய கற்கால மனிதர்கள் பயன்படுத்திய ஆயுதங்கள் பல்லாவரம், வடமதுரை, செங்கல்பட்டு, அச்சிறுப்பாக்கம் போன்ற பகுதிகளில் கிடைத்துள்ளன. அத்திரம்பாக்கத்திலும் திருநெல்வேலியிலும் கி.மு. 40,000 முதல் கி.மு. 10,000 ஆண்டுகள் முன்பு வரை

பயன்படுத்திய புதிய கற்கால ஆயுதங்கள் (இவற்றில் எலும்பு மற்றும் மர ஆயுதங்கள் அடங்கும்) கிடைத்துள்ளன. இவ்விரண்டு பகுதி களிலும் வாழ்ந்த மனிதர்கள் வேளாண் யுகத்திற்கு முந்தியவர்கள் என்பதில் ஐயமேதுமில்லை. கி.மு. 4,000 ஆண்டுகளில் திருநெல்வேலிப் பகுதி தேரி நாகரிகம் துளிர்க்க ஆரம்பித்தது. கி.மு. 2000 முதல் கி.மு. 800 வரை பய்யம்பள்ளி என்ற இடத்தில் மூங்கில் குடில்கள் அமைத்தலும், கொள்ளும் அறியப்பட்டுள்ளன. ஆதிச்ச நல்லூரில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் இரண்டு வகையான மனித மண்டையோடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றை ஆராய்ந்தறிந்த எலியட் ஸ்மித் (Elliot Smith) என்ற அறிஞர் ஒருவகை மண்டையோடு ஆஸ்திரலாய்டு (ஆஸ்திரேலிய பழங்குடி மக்கள்) மக்களின் மண்டையோடு போன்றும், மற்றொன்று மத்தியத் தரைக்கடல் மக்களின் மண்டையோடு போன்றும் இருந்தன என்று நிரூபித்துள்ளார். முதல்வகை தற்போதைய தமிழ்ப் பழங்குடியினர் களான பிரான்மலைக் கள்ளர்கள், வேடர், இருளர், குறும்பர், காடர், புலையர், பனீயர் போன்றவர்களின் மண்டையோட்டுடன் ஒத்துப் போகிறது என்றும், மற்றொன்று தமிழகத்தில் மிகப் பரவலாகக் காணப்படும் திராவிட மக்களின் மண்டையோடு போன்றுள்ளது என்றும், அவர் மேலும் கருத்து தெரிவித்துள்ளார். இக்கருத்தை அவருக்குப் பின்னால் வந்தவர்களின் ஆய்வுகளும் வலியுறுத்தி யுள்ளன. மரபியல் ஆய்வுகளும் இக்கருத்தை வலியுறுத்தின (Thomas *et. al.*, 2004; Edwin *et. al.*, 2002). பிரான்மலைக் கள்ளர்களின் DNA (மரபுக்கூறு) ஆஸ்திரேலிய பழங்குடி இனத்தவர்களின் DNAயோடு ஒத்திருப்பதால், மனிதர்கள் ஆப்ரிக்காவில் இருந்து இந்தியா வழியாக ஆஸ்திரேலியாவுக்கு பரவினர் எனத் தெரிகிறது (Spencer Wells 2002).

1700 ஆண்டுகளுக்கு முன்பு தமிழகமும் இலங்கையும் ஒரு குறுகிய நிலப்பரப்பால் இணைந்திருந்தன என்று முன்னரே கூறப்பட்டது. இதன் காரணமாக, பண்டைய தமிழக மக்களினங்கள் இலங்கையிலும் குடியேற்றம் பெற்றனர் என்பது தெளிவு. தமிழக ஆதிகுடியினர் பற்றிய இலக்கியத் தகவல்கள் இல்லாத சூழலில், மகாவம்சம் நூலில் இருந்து பெறப்பட்ட இலங்கையின் ஆதிகுடியினர் பற்றிய விவரங்கள் தமிழகப் பழங்குடியினர் பற்றி அறிய ஓரளவு உதவுகின்றன. இலங்கையின் முதல் குடிமக்கள் வேடர்கள் ஆவர். இவர்களும் குறிஞ்சி நிலக்கடவுளான முருகனை வழிபட்டனர். இவர்களின் மண்டையோட்டு அமைப்பு தமிழகப் பழங்குடி மக்களின் மண்டையோட்டு அமைப்புடன் ஒத்துள்ளது (Virchow, cited in ஜெயகரன் 2002).

பண்டைய தமிழர் தொடர்பாக வரலாற்று அறிஞர் சுப்ரமணியன் (Subramanian 1996) பின்வரும் கருத்துக்களை முன் வைக்கிறார் : தமிழர் எந்த மனித முன்னோடித் தொகுதியைச் (ancestral stock) சேர்ந்தவர்கள் என்பது தெளிவாகத் தெரியவில்லை. இன்றைய தமிழரிடையே இரண்டு முக்கிய வகையானவர்கள் இருக்கிறார்கள். குட்டையான, கருப்பான, உருண்டைத் தலையுடன் கூடிய வகையினர் காடர்கள், புலையர்கள் ஆகியோர்கள் ஆவர். தமிழரிடையே உள்ள மிகப் பழமையானவர்கள் இவர்களே என்று அவர் கருதுகிறார் [1] (படம் 5). இன்றைய தமிழரிடையே காணப்படும் பெரும்பான்மையான வர்கள் இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பண்டைய மத்தியத் தரைக்கடல் பகுதி நாட்டு மக்களை (ஆர்மேனியப் பகுதி உட்பட) ஒத்துள்ளனர். இந்த வகையினர் நீண்ட, குறுகிய தலையை யும், முகத்தையும், நேரான அல்லது கழுகின் அலகு போன்ற நாசியினையும், கருமையான மயிரையும் பெற்றவர்கள். இவர்கள் மத்தியத்தரைக்கடல் நாடுகளிலிருந்தும், காஸ்பிய கடற்கரைப் பகுதிகளிலிருந்தும் கடல் மூலம் வந்து தென்னிந்தியாவின் தென்பகுதி யில் முதலில் குடியேறியிருக்கலாம் என்று அவர் மேலும் கருதுகிறார் [2]. அவ்வாறு குடியேறிய பின்பு ஆஸ்திரலாய்டு மக்களுடன் குறிப்பிடத்தக்க இனக் கலப்புகள் தொடர்ந்து ஏற்பட்டதால் அவர் களின் சிறப்புப் பண்புகள் பல மறைந்துவிட்டன என்றும் அவர் கூறுகிறார். எனினும் இக்கருத்தை பல தமிழறிஞர்கள் ஏற்கவில்லை; தமிழினம் தமிழகத்திலேயே தோன்றி பரிணாம வளர்ச்சிபெற்றது என்று இவர்கள் கருதுகின்றனர்.

---

1) இவர்கள் எலியட் ஸ்மித் குறிப்பிட்ட ஆஸ்திரலாய்டு மக்களாக இருக்க வேண்டும்; ஆப்ரிக்காவில் இருந்து 75,000 முதல் 50,000 ஆண்டுகளுக்கு முன் இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு வந்தடைந்தவர்கள்.

2) சீனிவாச ஐயங்கார் (*Srinivasa Iyengar 1983*), சோதிப்பிரகாசம் (2002) போன்றவர்கள் குமரிக்கண்டம் பிளவுண்டு, திராவிட இனம் பல்வேறு மக்கள் தொகுதிகளாகப் பிரிந்து, திராவிடப் பொதுக்கூறுகளாக, பண்டைய நாகரிகங்களான எகிப்திய, சுமேரிய, பாபிலோனிய, அசிரிய, போனிசிய நாகரிகங்கள் வளர்ந்துள்ளன என்ற முற்றிலும் எதிர்மறையான கருத்துக் களைத் தெரிவித்துள்ளனர். ஆனால், குமரிக்கண்டமே இருந்ததில்லை என்று நிரூபிக்கப்பட்டுவிட்ட நிலையில், இவர்களுடைய வாதங்கள் ஏற்புடையன அல்ல என்று அறிவியல் அறிஞர்கள் கருதுகிறார்கள். மேலும், சோதிப்பிரகாசம் குமரிக் கண்டம்தான் கோண்ட்வானா பெருங்கண்டம் என்றும் வாதிடுகின்றார். கோண்ட்வானா பிளவுபட்ட காலத்தில் மனித இனமே உலகில் தோன்றவில்லை என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

பண்டைய தமிழர், எவ்வழி வந்தவர்கள் எனினும், (கடைச்)சங்க காலத்திற்கு முன்பே பல்வழிகளில் முன்னேற்றம் பெற்றுச் சிறந்து விளங்கியிருக்க வேண்டும். ஏனெனில், சங்ககாலத் தமிழர் சமூகம் அறிவியல், தொழில் நுட்பம், எழுத்தறிவு, வெளி நாட்டுத் தொடர்பு, அரசு உருவாக்கம் போன்ற எண்ணற்ற செயல்களில் சிறப்படைந்திருந்தது. இவ்வளர்ச்சி நிலையை ஒரு குறுகிய காலகட்டத்திற்குள் அடைந்திருக்க முடியாது. இந்த எழுச்சிக்குக் காரணமாக இருந்தவர்கள் சங்க காலத்திற்கு முன்பு வாழ்ந்த தமிழரே ஆவர்; இவர்கள் பெருங்கற்படைக் காலத்தைச் (megalithic) சார்ந்த மக்களாவர். இவர்கள் ''இறந்தவர்களைப் புதைத்து அவர்களை வழிபடுகின்ற வழக்கம்'' கொண்ட திராவிட மக்களே (ராஜன் 2004). இவர்களில் பெருங்கற்படைச் சின்னங்களைப் பயன்படுத்தியவர்களும் (காலத்தால் சற்றுப் பின்னால் வந்தவர்கள்; தமிழகத்தின் வடக்குப் பகுதியில் வாழ்ந்தவர்கள்), முதுமக்கள் தாழிகளைப் பயன்படுத்தியவர்களும் (காலத்தால் சற்று முந்தியவர்கள்; தமிழகத்தின் தெற்குப் பகுதியில் வாழ்ந்தவர்கள்) அடங்குவர். இவர்கள் தமிழகத்தில் கி.மு. பத்து முதல் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு வரை பல்வேறு பண்பாட்டுப் படிநிலைகளைக்கடந்து வந்து பின்னர் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வரலாற்றுக் காலத்தில் நுழைந்தவர்கள் ஆவர் (ராஜன் 2004).

இ) மொழி வரலாற்றுப் பின்னணியில் தமிழ்

மூன்று சங்கங்கள் இருந்ததாகக் கூறப்படும் மரபு பற்றிய குறிப்புகள் நக்கீரனால் எழுதப்பட்டதாகக் கருதப்படும் இறையனார் களவியலுரையில் உள்ளன. இவ்வுரையின்படி, பாண்டிய மன்னர்கள் தங்கள் தலைநகரில் தமிழ்ப் புலவர்களைக் கூட்டித் தமிழை வளர்த்தனர். தென்மதுரையில் 4400 வருடங்கள் முதற்சங்கம் இயங்கியது. இச்சங்கத்தில் தான் பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை போன்ற நூல்களும், பேரகத்தியம் எனும் இலக்கண நூலும் இயற்றப்பட்டதாக நம்பப்படுகிறது. தென்மதுரை கடற்கோளுக்கு இரையாகிவிட்டதால் இடைச்சங்கம் கபாடபுரத்திற்கு மாற்றப்பட்டு 3700 ஆண்டுகள் செயல்பட்டதாகக் கூறப்படுகிறது. இச்சங்க காலத்தில்தான் அகத்தியம், தொல்காப்பியம், பூதபுராணம், மாபுராணம் போன்ற நூல்கள் இயற்றப்பட்டதாக நம்பப்படுகிறது. இந்நகரமும் கடற்கோளுக்கு இரையாகிவிட்டதால், 1850 ஆண்டுகள் இயங்கிய கடைச்சங்கம் மதுரையில் தொடங்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. எனவே, மொத்த சங்ககாலம் 9950 ஆண்டுகள் எனக் கூறப்பட்டுள்ளது. முதல் மற்றும் இடைச் சங்கங்கள் மட்டும் 237

பாண்டிய மன்னர்களின் ஆட்சியில் 8100 ஆண்டுகள் இயங்கின என்பதே எந்த வரலாற்று நிபுணரையும் திகைக்க வைக்கும் செய்தியாகும் (ஜெயகரன் 2002). தேவநேயப் பாவாணர்கணிப்புப்படி முதற்சங்கம் கி.மு. 10,000 முதல் கி.மு. 5,500 வரையிலும், இடைச் சங்கம் கி.மு. 4,000 முதல் கி.மு. 1,500 வரையிலும், கடைச்சங்கம் கி.மு. 1,500 முதல் கி.பி. 400 வரையிலும் நீடித்தன. சோதிப்பிரகாசத் தின் (2002) கருத்துப்படி கி.மு. 2,000, கி.மு. 1,220 மற்றும் கி.பி. 2-ம் நூற்றாண்டு ஆகியவை முறையே தலை, இடை, கடைச்சங்கங்களின் இறுதிக் காலங்களாகும். டாக்டர் கால்டுவெல் (Caldwell 1875) கி.பி. 9 அல்லது 10ஆம் நூற்றாண்டே சங்ககாலம் என்று கூறுகிறார். சாமிக்கண்ணு பிள்ளை கடைச்சங்க காலம் கி.பி. 8ஆம் நூற்றாண்டே என்று வரையறுத்துக் கூறுகிறார். மேற்கூறிய கருத்துக்களுக்கு சரியான ஆதாரங்களும் விளக்கங்களும் இல்லாததால் பல வரலாற்று அறிஞர் களும், தமிழறிஞர்களும் இதனை ஏற்காமல், கனகசபைப் பிள்ளை யின் விளக்கமான கி.பி. முதல் மூன்று அல்லது நான்கு நூற்றாண்டு களே சங்ககாலம் என்பதை ஏற்றனர். இவர்களில் மிக முக்கியமான வர்கள் நீலகண்ட சாஸ்திரி (Nilakanta Sastri 1972), சிவராஜ பிள்ளை (Sivaraja Pillai 1932), ஜெயகரன் (2002) போன்றவர்கள். சங்கத்தின் இறுதி எல்லை கி.பி. 300-க்கு முற்பட்டது என்று முனைவர் கூ.முத்துராசன் தன்னுடைய ''சங்ககாலம்'' என்ற நூலில் குறிப்பிடுகிறார் (பாவலர் எழுஞாயிறு, 2001). எனினும் திராவிட மொழிக் குடும்பங்களில் மிகவும் தொன்மையானது தமிழ்தான் என்பதிலும், அது கடந்த 3,500 ஆண்டுகள் முதல் பேசப்பட்டு வருகிற மொழி என்பதிலும் சந்தேக மில்லை. ''தமிழ் என் கிளவி'' என்றும் ''தமிழ்கூறும் நல்லுலகம்'' என்றும் தொல்காப்பியத்திலும், ''தமிழ் தலை மயங்கிய'' என்றும் ''தமிழ் கெழு கூடல்'' என்றும் புறநானூற்றிலும் தமிழ் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

சங்க இலக்கியப் பாடல்கள் எவ்வகை எழுத்துக்களால் முதலில் எழுதப்பட்டன என்பதைப் பற்றிய ஆய்வுகள் முதலில் மேற் கொள்ளப்பட வேண்டும். நமக்குக் கிடைத்துள்ள அறிவியல் ஆதாரங்களின்படி உலகின் முதல் எழுத்துக்கள் 5000 முதல் 6000 வருடங்களுக்கு முன்புதான் (ஏறத்தாழ கி.மு. 3500-3100) சுமேரியா வின் பாபல் கோபுரத்தில் (Babel Towers) காணப்படுகின்றன என்பதில் இதுவரை ஐயமெதுவுமில்லை. இதனைத் தொடர்ந்து எழுத்துக்கள் வெவ்வேறு பகுதிகளான எகிப்து (கி.மு. 3000), சிந்து சமவெளி, சீனா (கி.மு. 2000) திராவிட நாடு (கி.மு. 1000-300) போன்ற பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டன என்று கூறப்பட்டுள்ளது (கிருஷ்ணமூர்த்தி 2005). எழுதும் கலை சுமேரியாவிலிருந்து எகிப்து, சிந்து சமவெளி,

திராவிட நாடு போன்ற பகுதிகளுக்குப் பரவியிருக்கலாம் என்றும், சீனாவில் தனியாகத் தோன்றியிருக்கலாம் என்றும் பல அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவில் இதுவரை கிடைத்துள்ள வரிவடிவங்களில் காலத்தால் முந்தியவை சிந்துவெளி ''எழுத்துக்கள்'' ஆகும் [1]. இதற்கடுத்து இந்தியாவில் கிடைப்பவை ''குறியீடுகள்'' ஆகும் (படம் 6). மேற்கூறிய இரண்டும் சரியாகப் படித்தறியப்படாததால் வரலாற்றுக் காலத்தின் தொடக்கத்தைப் பின்னோக்கி எடுத்துச் செல்ல முடியவில்லை. மேற்கூறிய இரண்டும் முத்திரைகள், மோதிரங்கள், பானைஓடுகள், கல்வெட்டுகள், நாணயங்கள் போன்றவற்றில் காணப் படுகின்றன. இவற்றை அடுத்து இந்தியாவில் புழக்கத்தில் இருந்த வரிவடிவம் ''பிராமி'' ஆகும் (படம் 7). இவ்வரிவடிவத்தில் இருந்தே அனைத்து வரிவடிவங்களும் தோன்றின என்பதற்கானச் சான்றுகள் இருப்பதால் இது தாய் வரிவடிவம் என்றழைக்கப்படுகிறது (ராஜன் 2004). மேற்கூறப்பட்ட சிந்துவெளி ''எழுத்துக்களுக்கும்'', குறியீடு களுக்கும், ''பிராமி'' வரிவடிவத்திற்கும் பல ஒற்றுமைகள் காணப் படுவதால் இவை அதே வரிசையில் ஒன்றிலிருந்து மற்றொன்று தோன்றியிருக்க வேண்டும். சிந்து சமவெளி எழுத்து மறைவிற்கும் பிராமி எழுத்துக்களின் தோற்றத்திற்கும் இடைப்பட்ட ஏறக்குறைய 1200 ஆண்டுகள் இந்தியாவில் வழக்கில் இருந்தவைதான் ''குறியீடுகள்''. இக் குறியீடுகள் தமிழ்ப் பிராமி (கீழே பார்க்க) வரிவடிவம் தமிழகத்தில் தோன்றுவதற்கு முன்பாகவே மக்களின் எண்ணங்களை ஒலி வடிவமாகவோ, கருத்து வடிவமாகவோ வெளிப்படுத்தக் கூடிய கருவியாக விளங்கியிருக்க வேண்டும் (ராஜன்

---

1) 2006-ஆம் ஆண்டின் பெப்ருவரி மாதத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த செம்பியன்கண்டியூர் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கற்காலக் கல் கைக்கோடாலியில் *(Stone hand-held axe)* (கி.பி. 2500-1500) சிந்து சமவெளி எழுத்துக்கள் இருப்பது தமிழ்மொழி வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை உருவாக்கும் என்று ஐராவதம் மகாதேவன் *(The Hindu, dated May 1, 2006)* கூறியுள்ளார். இக்கண்டுபிடிப்பின் மூலம் புதிய கற்கால தமிழர் ஹரப்பா தொகுதியின் அதே மொழிக் குடும்பத்தைப் பகிர்ந்து கொண்டனர் என்பது தெளிவாகிறது. இம்மொழிக் குடும்பம் திராவிட மொழிக் குடும்பமாகத்தான் இருக்கவேண்டும் என்றும் இந்தோ-ஆர்யமொழி அல்ல என்றும் மகாதேவன் குறிப்பிடுகிறார். புதிய கற்காலத் தமிழர் திராவிட மொழி ஒன்றைப் பேசினார்கள் என்பதற்கு இந்தக் கண்டுபிடிப்பு ஒரு முக்கியச் சான்றாகும். இந்த கைக்கோடாலி வட இந்தியாவிலிருந்து இங்குக் கொண்டு வரப்பட்டிருப்ப தற்கு வாய்ப்பு இல்லை; ஏனெனில் கோடாலி செய்யப்பட்டிருக்கும் கல் தென்னிந்தியாவைச் சார்ந்தது என்றும் மகாதேவன் கருதுகிறார்.

2004). இக் குறியீடுகளும், தமிழ்ப் பிராமியும் இடமிருந்து வலமாக எழுதப்பட்டவை. தமிழ்ப்பிராமி வரிவடிவம் வழக்கில் வந்தவுடன் இக்குறியீடுகளின் பயன்பாடு குறைந்துவிட்டது. தமிழ்ப் பிராமிதான் 'தமிழி', 'திரமிழி' மற்றும் 'திராவிடி' என்று பண்டைய நூல்கள் குறிப்பிடும் தென்னகத்தில் வழக்கில் இருந்த வரிவடிவமா?

தமிழ் மொழிக்காக முதன்முதலில் பிறந்த எழுத்து வடிவம் தமிழ் - பிராமி எழுத்து வடிவம் தான் என்று கருதப்படுகிறது [1]. இந்தியாவில் கிடைத்துள்ள வரிவடிவங்களில் நன்கு படித்துணரப் பட்ட வரிவடிவமும் இதுதான் (ராஜன் 2004). ஐராவதம் மகாதேவன், நாற்பது ஆண்டுகள் ஆய்விற்குப்பின், தமிழ்பிராமி கல்வெட்டுகள் பற்றிய தன்னுடைய நூலினை 2003ஆம் ஆண்டு வெளியிட்டார் (Mahadevan, 2003) [2]. இக்கல்வெட்டுத் தொகுதி கி.மு. 3-ம் நூற்றாண்டு (= கி.மு. 300) முதல் கி.பி. 4-ம் நூற்றாண்டு (= கி.பி. 399) வரை உள்ள காலப் பிரிவுக்குள் உள்ள, பிராமி எழுத்துருவில் தமிழ் எழுதப் பெற்ற, தமிழகத்தில் காணப்படும் மிகப் பழைய, கல்வெட்டுகளாகும். தமிழகப் பண்டைய கல்வெட்டுகளை நோக்கும்போது தமிழ், பிராமி எழுத்துரு முறையில் எழுதப்படுவது அசோக பிராமி (தமிழ்ப்பிராமி அசோகர் - பிராமி என்றும் அழைக்கப்பட்டது) கல்வெட்டுக் காலத்தி லிருந்தே, அதாவது கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கப் பெற்றிருக்க வேண்டும் என்று ஐராவதம் மகாதேவன் குறிப்பிடுகிறார்.

---

1) தமிழக அகழ்வாராய்ச்சியில் கிடைக்கப் பெற்ற பல தொல்லியற் பொருட்களில் (பானை, ஓடு, நாணயங்கள், மோதிரங்கள் போன்றவற்றில்) தமிழ்ப்பிராமி வரிவடிவத்தில் எழுதப்பட்டனவாகக் காணப்பட்டாலும், சித்திர எழுத்துக்கள் காணப்படுவதும் இங்குச் சுட்டப்பட வேண்டிய செய்தியாகும். இறந்தவர் களின் அருகில் காணப்படும் எச்சங்கள் பலவற்றில் இருவகை வரிவடிவங்கள் (குறியீடுகள், தமிழ்ப்பிராமி) பரவலாகக் காணப்படுவதைப் பார்க்கும்போது, சங்க காலத்திற்கு முன்பாகவே தமிழ் மக்கள் ஒருவகையான வரிவடிவத்தைப் பயன்படுத்தினர் என்பதை உணரலாம். இக்குறியீடுகளில் பெரும்பான்மை யானவை சிந்துவெளிக் குறியீடுகளுடன் ஒத்துள்ளன (ராஜன் 2004).

2) சங்ககால ஊர்களான கொற்கை, மாங்குடி, உறையூர், அரிக்கமேடு, கரூர், கொடுமணல், அழகன் குளம் போன்ற இடங்களில் கிடைத்த அகழாய்வு எச்சங்களிலும், சமணர் குகைகளில் காணப்படுகின்ற பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன், சேரமன்னன் செல்வக் கடுங்கோவாழியாதன், அதியமான் ஆகியோரின் கல்வெட்டுகளிலும், பாண்டியன் பெருவழுதி, சேரமன்னர்கள் மாக்கோதை, கொல்லிப்பொறை போன்றோர் வெளியிட்ட காசுகளிலும் தமிழ்ப்பிராமி எழுத்து வரிவடிவமே இருப்பது, சங்க காலத்தில் தமிழகத்தில் புழக்கத்தில் இருந்த வரிவடிவம் தமிழ்ப்பிராமிதான் என்ற முடிவுக்கு வர உதவுகிறது (ராஜன் 2004).

இந்தக் கல்வெட்டு மொழியை முதலில் 'கலவை மொழி' (hybrid language) என்றாலும், பின்னால் 'பழந்தமிழ்' என்று கூறினர். தென்னிந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்திற்கு வடக்கே, காணப் படும் கல்வெட்டுகளில் பெரும்பாலும் பிராகிருத, அர்த்தமாகதி (சமணச் சார்புடையது) எழுத்துருவும் மொழியும் காணப்படுகின்றன (தமிழில் இதனை பாகதம் என்பர்); தென்னிந்தியாவின் கிழக்குக் கடற்கரையோரப் பகுதிகளில் பாலி எழுத்து மற்றும் மொழி வடிவம் (பௌத்த சார்புடையது) காணப்படுகிறது. அதாவது, தமிழ் வழங்கிய பகுதிகளில் மட்டும் இந்தத் தமிழ்பிராமி எழுத்துரு முறைமை கல்வெட்டுகளில் காணப்படுகிறது. இது தமிழ்மொழியின் செல் வாக்கினையும், வலுவினையும் எடுத்துரைப்பதாகக் கொள்ள வேண்டும். மேலும், இந்த அடிப்படையில் கி.மு. 3ஆம் நூற்றாண்டி லேயே தமிழ்மொழி, எழுத்து முறைமைக்கு வந்தது என்று ஐராவதம் மகாதேவன் வலியுறுத்துகிறார். அதாவது, சங்க இலக்கியங்கள் இந்த எழுத்துரு வளர்ச்சிக்குப் பின்புலத்திலேயே தோன்றியிருத்தல் வேண்டும் (சிவத்தம்பி 2000); குறைந்தபட்சம், எழுதப்பட்டிருக்க வேண்டும். அதாவது, மகாதேவனின் கூற்றுப்படி அதுவரை வாய் மொழி வழியாகப் பாடல் வடிவில் இருந்து வந்த சங்க இலக்கியங்கள் அப்பொழுது தான் முதன்முறையாக எழுத்துரு வடிவில் கொண்டு வரப் பட்டிருக்கவேண்டும். மொத்தம் 110 கல்வெட்டுகள் இருந்தன; இவற்றில் முந்து பிராமிக் கல்வெட்டுகள் கி.மு. 200 முதல் கி.பி. 100 வரையிலானவை. எனினும் தொல்லியல் சான்றுகளை உற்று நோக்கும்போது ஐராவதம் மகாதேவன் அவர்கள் தமிழகத்தில் கிடைக்கும் தமிழ்ப் பிராமி வரிவடிவங்களுக்கு அளித்துள்ள கி.மு. இரண்டாம் நூற்றாண்டு என்ற காலக்கணிப்பை ஏற்றுக்கொள்வதில் பல இடர்பாடுகள் உள்ளன. இவை கி.மு. நான்காம் நூற்றாண்டுக்கு முன் எடுத்துச் செல்லலாம் என்பது தான் உண்மை. இவை அசோகர் காலத்திற்கும் முற்பட்டவை என்பதிலும் எவ்வித ஐயப்பாடும் இல்லை. பிந்தைய பிராமி கல்வெட்டுகள் கி.பி. 100 முதல் ஏறத்தாழ கி.பி. 400 வரையிலானவை. இவை இரண்டும் சேர்ந்து 89 கல்வெட்டுகள் ஆகும். முந்து வட்டெழுத்துக் கல்வெட்டுகள் (மொத்தம் 21) கி.பி. 5ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 6ஆம் நூற்றாண்டு கி.பி. 400-600 வரையிலானவை என்று அறியப்படுகின்றன[1]. கி.பி.

1) வட்டெழுத்து என்பது பிராமிக்கல்வெட்டுக்களுக்கு முன்னிருந்து தமிழகத்தில் வழங்கி வந்ததாக இதுகாலம் வரை கொள்ளப்பட்டது. ஆனால், ஐராவதம் மகாதேவன் கூற்றுப்படி வட்டெழுத்துக்கள் பிராமி எழுத்து முறையின் வழியாகத்தான் தோற்றம் பெற்றன. இக்கருத்துப் பற்றித் தமிழறிஞர் களிடையே விவாதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

6ஆம் நூற்றாண்டுக்குப் பின்பு வட்டெழுத்து வரிவடிவம் தமிழகம் முழுவதையும் அடைந்தது (ராஜன் 2004). வட்டெழுத்து சங்க காலத்திற்குப் பிற்பட்டது என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை (படம் 8).

இந்தக் கல்வெட்டுகள் அனைத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களில், சொற்களின் அடி (stem) பற்றிய விவரம் பின்வருமாறு : (1) முழுக் கல்வெட்டுத் தொகுதிகளிலும் காணப்படும் சொல் அடிகள் 371; இவற்றில் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை 256, இந்தோ-ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை 101, பிற 14, (2) இந்தோ-ஆரிய மொழியில் வரும் சொற்கள் அனைத்துமே பெயர்ச் சொற்களாகும்; எல்லா வினையடிகளும் (=15) திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவையே. அதாவது, கல்வெட்டுகளில் பயன் படுத்தப்பட்டுள்ள கடன் சொற்கள் அனைத்துமே பெயர்ச் சொற் களாகும். எனவே தமிழ்மொழி பிராமி வடிவத்தில் எழுதப்பட்டா லும், வினையடிகளின் அடிப்படையில் தனித்தன்மை வாய்ந்தது என்பதை இக்கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. (3) இக்கல்வெட்டு களில், முற்று வினைவடிவம் இல்லாமை இன்னொரு முக்கியத் தரவாகும். இக்கல்வெட்டுகள் பெரும்பாலும் பேச்சொலியில் மட்டுமல்லாது பேச்சு வடிவிலும் எழுதப்பட்டுள்ளன. அதாவது தமிழ் மொழி பழமையானது, அதன் எழுத்துவடிவம்தான் சற்றுப் பின்னால் தோன்றியது என்று ஐராவதம் மகாதேவன் கருதுகிறார். எனினும், கி.மு. 2 முதல் கி.பி. 4 நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் தமிழகத்து மட்பாண்டங்களில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருப் பதும், அதில் சாதாரண மக்களின் பெயர்கள் காணப்படுவதும், சாதாரண மக்கள் வாழ்நிலையிலும் எழுத்து பயன்படுத்தப்பட்டது என்பதை வலியுறுத்துகின்றன. அதாவது, தமிழகத்தில் எழுத்து வளர்ச்சி இக்காலக் கட்டத்திலேயே மிகப் பெரிதாகக் காணப்பட்டது என்பதை மறுக்க முடியாது. தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகளில் உள்ள இந்தத் திடீர் எழுத்து ஆளுகையும், பரவலாக்கலும், செய்திகளும் தமிழ் இலக்கியத்தினுள் எத்தகைய முறையில் பிரதிபலிக்கின்றன? இக்கல்வெட்டுகளில் உள்ள செய்திகள் பல சங்க இலக்கியங்களில் காணப்படுபவனவற்றை உறுதிப்படுத்துகின்றன. இப்போது இருக்கின்ற ஆதாரங்களின் அடிப்படையில் தெரியவருவது என்ன வெனில் பண்டைய புலவர்களிடம் பாடுகின்ற மரபே முக்கியமாகக் காணப்பட்டது என்றும், எழுத்து மரபு முக்கியப்படுத்தப்படவில்லை என்பதும்தான். பின்பு எழுதப்படும் மரபு சங்க இலக்கியக் காலத்தி னூடேயே படிப்படியாக வளர்ந்தது; எழுத்து என்பது ஒலிக்கும்

முறை, எழுதுகின்ற முறை ஆகிய இரண்டையுமே குறித்தது. அதாவது முதலில் சித்திர எழுத்தையே குறித்த இச்சொல் பின்னர் எழுத்தோடு எழுத்தொலிகளையும் பதிவு செய்யும் வடிவங்களையும் குறித்தது. உண்மையில் தொல்காப்பியம் ஒலி வடிவங்களையும், சில இடங்களில் வரிவடிவ முறைகளையும் குறித்துச் சொல்லுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஈ) தமிழ் இலக்கிய வரலாறு

தமிழ் இலக்கிய வரலாறு பற்றிய பல கருத்துக்களும், நூல்களும் இதுவரை வெளிவந்துள்ளன. தமிழ்ச் சமுதாயத்தில் தாவரங்களினால் ஏற்பட்ட தாக்கங்களைப் பற்றிப் பரிணாம அடிப்படையில் தெளிவாக அறிய இத்தாக்கங்கள் தமிழக வரலாற்றின் வெவ்வேறு காலகட்டங்களில் எவ்வாறு ஏற்பட்டன, ஏன் ஏற்பட்டன என்பதை முதலில் அறிய வேண்டும். தமிழக வரலாற்றுக் காலகட்டங்களைச் சுட்டும் குறியீடுகளாகத் தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலகட்டங்களை எடுத்துக் கொள்வது சாலச் சிறந்தது [1]. ஏனெனில் முன்னால் குறிப்பிட்டது போன்று, தமிழ் இலக்கியங்களில் இருந்துதான் தாவரங்களைப் பற்றிய பெரும்பாலான செய்திகளையும் தரவுகளையும் நாம் பெற முடிகிறது.

இந்நூலில், பின்வரும் தமிழ் இலக்கிய வரலாற்றுக் கால கட்டங்கள், உணர்வுகளின் அடிப்படையில் எடுத்துக் கொள்ளப் படாமல், வரலாற்று மற்றும் அறிவியல் சான்றுகளின் அடிப்படையில் மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன :

1] **வரலாற்றுக்கு முந்தையக் காலம்** (Prehistoric period)

கி.மு. 200-க்கு முன்பு இருந்த காலகட்டத்தை வரலாற்றுக்கு முந்தைய காலம் என்பர். இந்தக் காலகட்டத்தில் எழுத்துரு

---

1) எனினும், சங்க இலக்கியங்களின் அடிப்படையில் மட்டும் ஆய்வு மேற்கொள்கின்றபோது அது சங்க காலத் தமிழர்களின் ஒரு பக்கத்தை மட்டுமே நமக்கு வெளிப்படுத்துவதாக உள்ளன. எடுத்துக்காட்டாக, சமணர்கள் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணப்படாததால் இவர்கள் அக்காலத்தில் செல்வாக்கு பெற்றுத் திகழவில்லையோ என்ற தோற்றம் ஏற்படுகிறது (ராஜன், 2004). தமிழகத்தில் இதுவரைக் கிடைத்துள்ள எண்ணற்ற தமிழ்ப்பிராமி வரிவடிவக் கல்வெட்டுகள் அனைத்தும் சமண மதத்தைச் சார்ந்தவை; எனவே சங்க காலத்தில் சமணம் சிறப்பாகத் திகழ்ந்திருக்க வேண்டும். இதுபோன்று தமிழகத்தின் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் புத்தமதம் சார்ந்த எச்சங்கள் பல சங்க காலத்தில் காணப்படுகின்றன; சங்க இலக்கியத்தில் புத்தமதம் பற்றிய செய்திகள் மிகமிகக் குறைவே.

வடிவத்தில் இலக்கியமோ கல்வெட்டுகளோ இல்லையென்று கருதப்பட்டாலும், அகழ்வாராய்ச்சிகள் மூலம் தொல்லியல் செய்திகள் பல கிடைக்கப் பெற்றுள்ளன. இந்தச் செய்திகள் மூலம் தமிழக வரலாற்றில் தாவரங்களின் தாக்கம் பற்றிய விவரங்கள் ஒருசில பெறப்பட்டுள்ளன.

2] சங்க காலம்

பெரும்பாலான அறிஞர்களின் கருத்துப்படி கி.மு. 200இல் இருந்து கி.பி. 250 வரை சங்க காலம் ஆகும். இந்தக் காலகட்டத்தில் சங்கப் பாடல்கள் பெரும்பாலும் மொழி அளவில் முழுமை பெற்று எழுத்து வடிவில் வெளிவந்ததாகக் கொள்ளலாம். இது ஐராவதம் மகாதேவனின் முந்து தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக் காலம் (கி.மு. 200 - கி.பி. 100) முழுவதையும் பிந்திய தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக் காலத்தின் (கி.பி. 100 - கி.பி. 400) முதற் பகுதியையும் உள்ளடக்கியது. சிவத்தம்பியின் (2000) கூற்றுப்படி சங்க நூல்களில் பெரும்பான்மை யானவை அவர் குறிப்பிடும் வீரயுக வேளாண்மைக் காலத்திற்கு (கி.பி. 150 - கி.பி. 250) உரியவை; பத்துப்பாட்டு நூல்களில் திரு முருகாற்றுப்படையும், எட்டுத்தொகை நூல்களில் கலித்தொகையும் பரிபாடலும் கி.பி. 250க்குப் பின்பு (அதாவது சங்கம் மருவிய காலத்தில்) தோன்றியவை என்பது அவரது கருத்து. எனினும் இந் நூலில் இந்த மூன்று இலக்கியப் படைப்புகளும் சங்க கால இலக்கியத் தோடு சேர்ந்து விவாதிக்கப்பட்டுள்ளன. ஐங்குறு நூறும் காலத்தால் சற்றுப் பிற்பட்டதென்கிறார் தட்சிணா மூர்த்தி (2003).

3] சங்கம் மருவிய காலம்

கி.பி. 250 முதல் கி.பி. 600 வரை சங்கம் மருவிய காலமாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டு பெருங்காப்பியங்களும், முத்தொள்ளாயிரம், இன்னிலை ஆகியவையும் இக்கால கட்டத்தில் தோன்றியவை என்று கருதப்படுகிறது. ஐராவதம் மகாதேவனின் பிந்திய தமிழ்ப் பிராமி கல்வெட்டுக் காலத்தின் பின்பகுதியும் வட்டெழுத்துக் கல்வெட்டுக் காலமும் இக்கால கட்டத்தில் அடங்கும். களப்பிரர் ஆட்சியும் (கி.பி. 400 - கி.பி. 600) இக்காலத்திற்குள்ளேயே வரும் என்பது மகாதேவனின் கருத்தாகும். சிவத்தம்பியின் (2000) நிலப்பிரபுத்துவ மேலாண்மைக் காலமும் (கி.பி. 250 - கி.பி. 450), சிலப்பதிகாரக் காலமும் (கி.பி. 450 - கி.பி. 600) சங்கம் மருவிய காலத்தில் அடங்கும். சிவத்தம்பியின் கூற்றுப்படி திருக்குறள், கலித்தொகை, பரிபாடல், திருமுருகாற்றுப் படை மற்றும் தொல்காப்பியம் (கி.பி. 250 - கி.பி. 400) போன்றவை

இக்காலகட்டத்தக்கவை. இவற்றில் தொல்காப்பியக் காலத்தைப் பற்றி மட்டும் அதிகக் கருத்து வேறுபாடு உண்டு. சங்க காலத்திற்கு முன்பும், சங்க காலத்தின் தொடக்கத்திலும் தொல்காப்பியத்தை வைப்பவர்கள் பலர் உண்டு. சங்கம் மருவிய காலத்தின் முடிவில் வைப்பவர்கள் ஒரு சிலரும் உள்ளனர். மகாதேவனின் முந்தைய, பிந்தைய பிராமிக் கல்வெட்டுகளின் வளர்ச்சியின் ஊடே எழுத்துரு வளர்ச்சியும் இலக்கணமும் தரப்படுத்தப்படும் நிலை ஆகியவை காணப்படுகின்ற காரணத்தாலும், முந்து தமிழ்ப் பிராமிக் கல்வெட்டு களை விட பிந்திய தமிழ்ப் பிராமி கல்வெட்டுகளில் எழுத்துப் பயில்வு சுலபமானதாக ஆவதனாலும் தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் கூறப்படும் எழுத்து மரபு பிந்தைய தமிழ்ப் பிராமி கல்வெட்டுகளில் காணப்படுவதாலும், எழுத்து முறைமையின் வளர்ச்சிப்படி தொல் காப்பியம் கி.பி. 2ஆம் நூற்றாண்டுக்கு முந்தியதாக இருக்க முடியாது என்று சிவத்தம்பி (2000) வாதிடுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. எனினும் இந்நூலில் தொல்காப்பியக் காலம் தனித்தன்மையானதாகக் கொள்ளப்பட்டுள்ளது.

4] பக்தி இலக்கியக் காலம்

கி.பி. 600 முதல் கி.பி. 850 வரை உள்ள காலம் பக்தி இலக்கியக் காலம் எனப்பட்டது. இதனைப் பல்லவர் காலம் எனவும் கூறுவர். பன்னிரு திருமுறைகள் நாலாயிர திவ்யப் பிரபந்தங்கள் ஆகியவற்றுள் பல இக்கால கட்டத்தில் தோன்றியவை.

5] சோழர் காலம்

கி.பி. 850 முதல் கி.பி. 1350 வரை உள்ள காலம் சோழர் காலமாகும். இதில் சிலப்பதிகாரம், மணிமேகலையைத் தவிர்த்த மற்ற பெருங்காப்பியங்களும் (சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி) ஐந்து சிறு காப்பியங்களும் (சூளாமணி, நீல்கேசி, உதயணகுமார காவியம், யசோதர காவியம், நாககுமார காவியம்), பெருங்கதை, கம்பராமாயணம், பெரிய புராணம், கந்த புராணம், திருவிளையாடல் புராணம், நளவெண்பா, நைடதம் போன்ற முக்கியமான இலக்கியங்களும் தோன்றின.

6] நாயக்கர் காலம்

கி.பி. 1350 முதல் கி.பி. 1750 வரையிலுள்ள காலம் நாயக்கர் காலம் எனப்படும். பிள்ளைத்தமிழ், அந்தாதிகள், கோவை, கலம்பகம், குறவஞ்சி, பள்ளு போன்ற சிற்றிலக்கியங்கள் பல இக்கால கட்டத்தில் தோன்றின; சித்தர்ப் பாடல்கள், தனிப் பாடல்கள், தலபுராணங்கள், உரைகள் முதலியனவும் தோன்றின.

7] ஐரோப்பியர் காலம்

கி.பி. 1750 முதல் ஏறத்தாழ 20ஆம் நூற்றாண்டின் பாதி வரை ஐரோப்பியர் காலம் என்பர். சீகன்பால்கு, வீரமாமுனிவர், ஜி.யூ.போப், கால்டுவெல், வேதநாயகம் பிள்ளை, ஆபிரகாம் பண்டிதர் போன்றவர்கள் இக்கால கட்டத்து முக்கியத் தமிழறிஞர்கள். இதே காலக் கட்டத்தில் மறுமலர்ச்சிக் காலம் என்பதை ஒருசில அறிஞர்கள் உள்ளடக்குகின்றனர்.

மேலே கூறப்பட்ட இலக்கிய வரலாற்றுக் கால கட்டங்களின் அடிப்படையில்தான் இந்த நூலில் உள்ள பல செய்திகள் கையாளப் பட்டுள்ளன. இந்த வகைப்பாட்டில் ஒரு சில சிக்கல்கள் இருந்தாலும், இது ஓரளவு செயற்கையாக இருந்தாலும், சொல்லப்பட வேண்டிய செய்திகளைக் கோர்வையாகக் கூற இந்த வகைப்பாடு பயனுள்ளதாக அமைந்துள்ளது.

II
தமிழகத்தின் இயற்கைச் சூழல்

அ) முன்னுரை

தாவரங்கள் இயற்கையின் முக்கியக் கூறுகளாக அமைந் துள்ளமையால் இயற்கையைப் பற்றிய தமிழரின் கருத்துக்கள் இந்த அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டுள்ளன. பண்டைய தமிழ்மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர்; அவர்களது வாழ்க்கை முறை இயற்கையிலிருந்து பிரித்துப்பார்க்க முடியாத அளவிற்கு இயைந்து இருந்தது. சங்கப் பாடல்கள் பல இயற்கையின் பின்னணியில் எழுதப்பட்டன. இயற்கையே கடவுள் என்று சுட்டும் வழக்கம் பன்னெடுங்காலமாக இருந்து வந்திருக்கிறது. எந்நிலையிலும் மாற்றமில்லாமல் என்றும் ஒருபடித்தாய் இருத்தலின் இறைவனை இயற்கை என்றனர். அள்ளூர் நன்முல்லையார், மருதனிள நாகனார், பாலை பாடிய பெருங்கடுங்கோ, இடைக்காடனார், இடைக்குன்றூர் கிழார், பெருங்குன்றூர் கிழார், குளம்பாதாயனார், கயமனார், பொய்கையார், வெள்ளெருக்கிலையார் போன்ற புலவர்களின் பெயர்கள் இயற்கையோடு அல்லது இயற்கைக் கூறுகளோடு தொடர்புடையனவாகக் காணப்பட்டன. இயற்கை, 'சூழல்' என்ற சொல்லாலும் அறியப்பட்டது. தமிழ் மக்கள் சூழலைப் பேணி வளர்த்துத் தங்களைக் காத்துக் கொண்டனர்; இயற்கையையும் காத்தனர். சூழல் பேணப்பட்டால்தான் தாமும் காக்கப்படுவோம் என்பதை முற்றிலும் உணர்ந்திருந்தனர்.

ஆ) ஐம்பூதக்கொள்கை

சூழலின் பொருட்கள் (பருப்பொருட்கள்) அனைத்தும் (தாவரங்கள், பிராணிகள் உட்பட) ஐம்பெரும் பூதங்களால் ஆனவை என்ற கருத்து பண்டைய தமிழ் மக்களிடம் வேரூன்றிக் காணப் பட்டது. எனவே, ஐம்பூதங்கள் மாசு அடையாமல் தமிழர் பார்த்துக் கொண்டனர். தமிழ் மெய்யியலில் வருகின்ற அறிவுப் பள்ளிகளும்

பிறவும் ஐம்பூதக் கருத்தினைக் கொண்டிருந்தன. 'பூதம்' என்ற சொல் பூ, பூத்தல் என்ற வேர்ச்சொற்களிலிருந்தே அரும்பியது என்று பாவாணர் சான்றுகளுடன் எடுத்துரைக்கிறார் (குணா 1980). பூதங்களை நடுவமாக வைத்துப் பின்னப்பட்ட 'உலகாய்தம்' எனப்பெறும் மெய்யியல் தமிழ்நாட்டில் தோன்றியதா அல்லது வடநாட்டில் தோன்றியதா என்ற சர்ச்சையில் ஈடுபடுவது இங்கு தவிர்க்கப் பட்டுள்ளது. எனினும் பூதக்கொள்கை அல்லது பூதவாதம் பன்னெடுங் காலமாகத் தமிழ்நாட்டில் நிலவி வந்துள்ளது என்பதை மறுக்க முடியாது. பூதவியலை 'உலகாய்தம்' என்று அழைப்பது 'உலகினை ஆய்கின்ற முறை' என்பதைச் சுட்டுவதால் ஏற்பட்டது. தொல் காப்பியம் நிலம், தீ, நீர், வளி, விசும்பு என்னும் ஐந்தும் (ஐம்பூதங் களும்) கலந்ததை உலகம் என்று கூறியது :

''நிலம் தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ...'' *(தொல். : பொ.மரபு.:644)*

இந்தக் கருத்து சங்கப் பாடல்களில் மட்டுமல்லாது அதற்குப் பின்னர் உருவான இலக்கியங்களிலும் நிலைத்து நின்றுள்ளது.

''மண்டிணிந்த நிலனும்,
நிலனேந்திய விசும்பும்,
விசும்புதைவரு வளியும்,
வளித்தலைஇயதீயும்,
தீமுரணிய நீருமென்றாங்கு
ஐம்பெரும் பூதத்தியற்கை'' (புறம்.:2)

''நீரு நிலனுந்தீயும் வளியு
மாக விசும்போடு ஐந்தும் உடனியற்றிய'' *(மது.கா.:453-454).*

''நிலம், நீர், வளி, விசும்பு என்ற நான்கின் அளப்பரியை யே!''
(பதிற்றுப்பத்து : 14)

இறைவனும் ஐம்பெரும் பூதங்களின் வடிவம் தான் என்பதை அப்பர் பின்வருமாறு குறிப்பிடுகிறார் :

''இருநிலனாய்த் தீயாகி, நீருமாகி
இயமானனாய் எறியுங் காற்றுமாகி
அரு நிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாசமாய்......'' *(அப்.தே.:திருத்தாண்டகம் எண்...?)*

திருமூலர்,

''பூதங்கள் ஐந்திற்.....'' *(திருமந்.:2730)*

என்றும்,

மாணிக்கவாசகர் திருவாசகத்தில்

''பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி'' *(போற்றித் திரு அகவல் : 137-141)*

என்றும்,

அவரே மீண்டும் திருவாசகத்தில்

''வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி.....'' *(திருச்சதகம் : 15)*

என்றும் குறிப்பிடுவதிலிருந்தும் மேற்கூறிய ஐம்பெரும்பூதக்கருத்துத் தொடர்ந்து தமிழகத்தில் வேரூன்றி இருந்தது என்பது தெளிவு.

வேதகால மற்றும் ஆரிய நாகரிகத்திலும் ஐம்பெரும் பூதங்கள் பற்றிய கருத்து ஏற்பட்டிருந்தது. வடஇந்திய நூல்களின்படி, இக்கருத்து வடஇந்தியாவில் முதலில் உபநிடதங்களில் உருவானது. பிரதிவி (=மண், நிலம்), அப் (அப்பு) (=நீர்), தேஜஸ் (தேயு) (= தீ), வாயு (=வளி), ஆகாஷ் (ஆகாயம்) (= விசும்பு) (= விண் அல்லது விண்மம்) என்று ஐம்பூதங்கள் அழைக்கப்பட்டன. தமிழகத்தைப் போலவே அங்கும் நிலம் வலிமையையும் பொறுமையையும் சுட்டியது. ''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல'' (திருக்குறள் 151) என்ற குறளில் இருந்து தன்னைத் தோண்டுபவர்களைக் கூட காப்பாற்றித் தாங்குகின்ற தன்மையுடையது என்று நிலம் பொறுமைக்கு ஒப்புகாட்டப்படுகிறது. நீர் திண்மையையும் அருளையும், நெருப்பு வெம்மையையும், திறனையும், வளி ஊக்கத்தையும், ஆற்றலையும், விசும்பு கலப்பினையும், விரிவினையும் சுட்டின.

எனினும், கிரேக்கர்கள் எம்பிடோகிளியஸ் (Empedocleus) என்பவர் வகுத்த நான்கு பூதக் கொள்கையைக் கொண்டிருந்தனர். விசும்பு என்ற ஆகாயத்தை அவர்கள் பூதங்களில் சேர்க்கவில்லை (கிருஷ்ணமூர்த்தி 2005). சமணர்களும், புத்தமதத்தினரும் கூட விசும்பினை பூதங்களில் சேர்க்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கி.மு. 600இல் வாழ்ந்த பிரகஸ்பதி தான் எழுதிய பிரகஸ்பதி சூத்திரம் என்ற நூலில் நான்கு பூதங்களை மட்டும் குறிப்பிடுகிறார். விசும்பு பற்றி அவர் குறிப்பிடவில்லை. விசும்பு என்று குறிப்பிடப்படும் ஆகாயம், ஈதர் (ether) என்ற கற்பனை ஊடகத்தைக் குறிப்பிடலாம் என

நான் கருதியதை ஹார்ட் (Hart and Hank 2002) குணா *(1980)* ஆகியோர் ஏற்கனவே சுட்டியுள்ளனர். நிலத்தின் ஓங்கிய ஆகாயம் (புறம். *: 2)*, ஓராதாரமும் இன்றித் தானே நிற்கும் காயம் (புறம். *:30)*, ஆகாயத்தின் மேற்பரப்பில் காற்று செல்லாது, அதில் விண்மீன்கள் திகழும் (புறம். *: 270)*, சூரியன், சந்திரன், மழை, மின் விசை முதலியவற்றின் தொகுதியையுடைய விசும்பு (புறம். *: 376)* போன்ற விசும்பு பற்றிய செய்திகள் இக்கருத்தை மேலும் வலியுறுத்துகின்றன. ''வறிது நிலை இய காயமும்...'' *(புறம். 30)* என்று சோழன் நலங்கிள்ளியை உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாடிய பாடலில் வரும் இவ்வரி, எவ்வகை ஆதாரமும் இன்றித் தானே நிற்கும், காற்று சற்றும் இல்லாத வெற்றிடமாய் விளங்கும் ஆகாயம் என்ற பொருளில் அமைந்துள்ளது. விசும்பு ஒரு வெற்றிடம் என்பதை இவ்வரி சுட்டுகிறது எனக் கொள்ளலாம்.

இயற்கையின் இன்னொரு முக்கியக்கூறு நீராகும். ''நீரின்றி அமையாது உலகு'' என்றும், நீர் ''மிகினும் குறையினும் நோய் செய்யும்'' என்றும் வள்ளுவம் கூறுகிறது. இதிலிருந்து சூழலிலும் நமது உடலிலும் நீரின் முக்கியத்துவம் விளங்கும். நீர் குறைந்து வறட்சி ஏற்பட்டாலும், நீர் அதிகமாகி வெள்ளம் ஏற்பட்டாலும் நோய் தோன்றும். இதே போன்று உடலிலும் நீர் அதிகமானாலும், குறைந் தாலும் நோய் உண்டாகும். கடல் நீரை 'முந்நீர்' என்றும், ஆற்று நீரை 'நன்னீர்' என்றும், குடிநீரை 'இன்னீர்' என்றும் தமிழ் இலக்கியங்கள் சுட்டியுள்ளன. நீர் நிலத்திற்கு முன்னே தோன்றிய கருத்தை வைத்தே கடலுக்கு 'முன்னீர்' என்னும் தமிழ்ச் சொல்லை அமைத்தனர் சான்றோர் என்று கூறுவோரும் உண்டு (''முன்னீர் என்று ஓதி நிலத்திற்கு முன்னாகிய நீர் என்றும் உரைப்ப'' என்று புறம். *: 9*க்கு உரை விளக்கம் கொடுக்கப்பட்டதைக் காண்க). 'முந்நீர்' என்பதற்கு மண்ணைப் படைத்தலும், அழித்தலும், காத்தலும் என்று அடியார்க்கு நல்லார் பொருள் கூறியுள்ளார். சங்ககால அரசர்கள் நீர்நிலைகள் மாசுபடாமல் இருக்க ''முந்நீர் விழவு'' என்ற விழாவை எடுத்தனர். இந்த உலகில் நீர்ரப் பாதுகாத்தவர் பெயர் நிலைத்து நிற்கும் என்றும் அவ்வாறு செய்யாதவர்கள் பெயர்கள் நிற்காது என்றும் குடபுலவிய னார் கூறியுள்ளார்.

தமிழகத்தின் முக்கிய நீராதாரங்களாகத் திகழ்ந்தவை திகழ்பவை ஆறுகள்தான். இவற்றில் தலையாயது காவிரி ஆறு. 'காவிரி' என்ற சொல்லின் பொருள் 'தோட்டங்களின் வழியாகப் பாய்ந்து வருவது' என்பதாகும். இதன் வடமொழி வடிவம் 'காவேரி' ஆகும். பழந்தமிழ் இலக்கியத்தில் ஒரே ஒரு இடத்தில்தான்

வடமொழி வடிவ 'காவேரி' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது; அதுவும் சிலப்பதிகாரத்தில். இந்த ஆறு (கானல் வரி) பொன்னி என்றும் அழைக்கப்பட்டது. காவிரியைத் தவிர்த்த மற்ற ஆறுகள் வையை (= வைகை), தாமிரவருணி, தென்பெண்ணை, பாலாறு போன்றவை. வரலாற்றுக் காலத்தில் பல ஆறுகள் தங்களுடைய பாதையை மாற்றிக் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக, வையை சங்க காலத்தில் வங்கக் கடலில் சேர்ந்தது என்று தெரியவருகிறது (பரி. : 20). சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆயிரை, குமரி? போன்ற ஆறுகள் தற்பொழுது இல்லை. தமிழகத் தாவரங்களின் வகைகளை யும், செழுமையையும், பரவலையும் (distribution) பாதிக்கும் முக்கியக் காரணியாக நீர் திகழ்ந்தது.

தமிழகத்தின் பருவங்கள் : இளவேனில் (=முன்கோடை) (ஏப்ரல் - ஜூன்), முதுவேனில் (=பின்கோடை) (ஜூன் - ஆகஸ்டு), கார் (= மழைக்காலம்) (ஆகஸ்டு - அக்டோபர்), முன்பனி (அக்டோபர் - நவம்பர்), கூதிர் (டிசம்பர் - பெப்ருவரி), பின்பனி (பெப்ருவரி - மார்ச்), பருவ காலங்களுக்கு ஏற்பத் தாவரங்களின் பல்வேறு வாழ்வியல் நிகழ்வுகள் (phenological changes) மாற்றம் பெற்றன. நாட்கள் ஆறு பகுதிகளாகப் (=பொழுது) பிரிக்கப்பட்டிருந்தன : யாமம் (= நடுஇரவு), வைகறை (= பின்னிரவு), விடியல், நண்பகல், ஏற்பது காலை, மாலை.

இ) சூழல்தொகுப்புக் கருத்துரு (Ecosystem concept)

மக்களது வாழ்வு மலையில் பிறந்து, அருவியோடு காட்டில் குதித்து, அருவி ஆறாக, ஆறே வழியாக வயலைச் செய்து, ஆற்றெழுக் கோடு ஓடி கடலில் மிதந்தது என்பார் கோவை இளஞ்சேரன் (1982). இவ்வாறு மலை, காடு, வயல், கடலோரம் என வேறுபாடுடைய நான்கு நிலவகைகளே உலகம் எனக் கண்டு உலகை நானிலம் என்றனர் தமிழர். இந்த நான்கு வகை நிலங்களும் நான்கு திணைகள் என்றும், இவற்றோடு தொடர்புடைய தாவர, பிராணிகள் இயற்கைக் காரணிகளுடன் ஒன்றுசேர்ந்ததே நான்கு வகைச் சூழல் தொகுப்புகள் என்றும் கருதப்பட்டது. தொல்காப்பியம் காடுறை உலகம், மைவரை உலகம், தீம்புனல் உலகம், பெருமணல் உலகம் என்று இந்த நான்கு வகை சூழல் தொகுப்புகளையும் (நிலங்களையும்) சுட்டுகிறது.

தமிழர் இந்த நான்கு திணை நிலங்களுக்கும் அந்நிலங்களில் விளங்கிய சிறப்பான பூவைக் கொண்டே பெயரிட்டனர் : குறிஞ்சி (படம் 9), முல்லை (படம் 10), மருதம் (படம் 11), நெய்தல் (படம் 12).

''முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே''
(தொல்.:பொ.:5)

இதையே,

''முல்லை குறிஞ்சி மருதத்தின் பின் நெய்தல்'' என்று

யாப்பருங்கல விருத்தி (ஒழிபு:2. எடுத்துக்காட்டு) கூறுகிறது. இவை நான்குமே இயற்கையான நில அல்லது சூழல் தொகுதிகளாகும். எனினும், சூழல் தொகுதிகள் பல்வேறு காரணிகளால் சிதைவடையும் மற்றும் அழிவுறும் (Ecosystem degradation) என்ற கருத்தையும் பண்டைத் தமிழர் கொண்டிருந்தனர். தமிழர், செயற்கை நிலமொன்றையும் கண்டு, அது முல்லையும் குறிஞ்சியும் சிதைவடைவதால் ஏற்படும் என்றும் அறிந்திருந்தனர். செழிப்பான மருத நிலத்திலும், கடலருகிலான நெய்தல் நிலத்திலும் வறகடம் உருவாக வாய்ப்புகள் குறைவு என்பதால், இவை இரண்டும் பாலை நிலமாக மாறாது என்றும் அறிந்திருந்தனர். சிதைவடைந்த செயற்கை நிலத்திற்கும் பாலை (படம் 13) என்ற பூவின் பெயரையே சூட்டினர்[1]. இது பின்வரும் இலக்கிய வரிகளால் தெளிவாகும் :

''முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
நல்லியல்பு இழந்து நடுங்கு துயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும் (சிலம்பு. : காடு
காண். : 64-65)

பாலை நல்லியல்பு இழந்த, கடுமையும் கொடுமையும் கொண்ட வன்மையான சூழலாகக் கருதப்பட்டது. நிலத்தை வன்புலம், மென்புலம் மற்றும் விடுபுலம் என்று சங்க இலக்கியம் பாகுபாடு செய்துள்ளதையும் நோக்குக.

---

1) ''நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப் படுதிரை வையம் பாத்திய பண்பே'' (தொல். : பொ. 2) எனத் தொல்காப்பியர் பாலை நீங்கலாக, உலகம் நானிலமாகப் பகுக்கப்பட்டுள்ளதைக் கூறுகிறார். பாலை என்பது தனி நிலம் அன்று, வேனிற்காலத்து முல்லையும், குறிஞ்சியும் பெயர் மாறிப் பாலை ஆகிறது என்பது உரையாசிரியர்கள், கோடப்பிள்ளை (2003) மற்றும் பரசுராமின் (பரசுராம் 2006) வாதம். அதாவது மலையும், காடும் ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை 'பாலை' என்ற பெயர் பெறுகிறது என்று பரசுராம் கூறுகிறார். மற்ற நான்கு திணைகளுக்கு இருக்கின்றது போல் முதல், உரி மற்றும் கருப்பொருட்கள் பாலை நிலத்திற்கும் இருப்பதால், அதை ஐந்தாவது வகை நிலமென்று கொள்ளலாம். பிற்கால இலக்கண நூலார் இவ்வாறு கொண்டனர்.

நிலங்களின் அடிப்படையில் ஐந்து வகைச் சூழல் தொகுதிகளையும் உருவாக்கிய பண்டைய தமிழர், அவற்றிற்கென முதற் பொருள், கருப்பொருள் மற்றும் உரிப்பொருள் ஆகியவற்றையும் நிர்ணயம் செய்து சூழல்தொகுதிக் கருத்துருவுக்குச் சிறப்பு செய்தனர். பண்பாட்டுச் சூழலியல் (Cultural Ecology) அடிப்படையில் இந்த ஐவகை நிலங்களின் தன்மைகளும், பண்புகளும் விளக்கப் பட்டுள்ளன. முதல், கரு மற்றும் உரிப்பொருட்களின் அமைப்பு, நிலத்திற்கேற்ற தொழில் ஒழுக்கம் மற்றும் பண்பாட்டுச் சூழலுடன் தொடர்பு கொண்டவையாகத் தொல்காப்பியரால் கருதப்பட்டன[1]. பண்பாட்டுச் சூழலியல் சூழலுக்கேற்ப மனிதர்கள் தம்மைச் சரிப்படுத்தி, பொருந்தி வாழும் அமைப்புகளையும், வழிமுறைகளையும், வளர்ச்சி முறைகளையும் பகுத்துக் காட்டுகிறது (சாரதாம்பாள் 2005). மேலும், இயற்கைச் சூழலுடனும், உயிரின வளத்தின்(biodiversity) பன்மைத்தன்மையுடனும் மக்கள் கொண்டுள்ள தகவமைவு முறைகளைக் கண்டறிவதற்குரிய தகவல் கருவிகளாகத் தாவரங்கள், மலர்கள், தொழில்கள், தெய்வங்கள், சமுதாயக் கட்டமைப்பு முதலியவற்றைப் பண்பாட்டுச் சூழலியல் குறிக்கிறது (சாரதாம்பாள் 2005; பாலாஜி 2005).

உலகின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்கள் சமுதாயங்கள் மற்றும் பழங்குடிகள் (திராவிடர்கள் உட்பட) பலவற்றில் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்தனர். இயற்கையின் ஆதாரப்பொருட்களான (resources) உயிரின வளம் போன்றவற்றை முறைப்படுத்தப்பட்ட பயன்பாட்டின் (sustainable use) மூலம் தம்முடைய தேவைக்குப் பயன்படுத்தி வந்தனர். இயற்கையையும் இயற்கைப் பொருட்களையும் தம் பண்பாட்டுச் செயல்கள் மூலம் தகுந்த முறையில் பாதுகாத்தனர். இதன் காரணமாகவே UNEP (United Nations Environmental Programme) போன்ற அமைப்புகள் இயற்கைக்கும் அதன் உயிரின வளத்திற்கும் ஒரு பண்பாட்டுப் பரிமாணத்தை (Cultural dimension) கொடுத்து, பண்பாட்டு வளம் (Cultural diversity) என்பதை அங்கீகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது (Krishnamurthy 2004). இதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகம் கடைப்பிடித்தது என்பது சிறப்பான செய்தியாகும். எடுத்துக் காட்டாக, தமிழகத்தில் இறந்தவர்களைப் புதைத்து அவர்களை வழிபடுகின்ற பழக்கம் பன்னெடுங்காலமாக இருந்து வருகிறது. பண்டைய தமிழகத்தில் ஐந்து நிலங்களுக்கேற்ப இறந்தவர்களை

1) ''முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே'' (தொல்.ஃபொ.ஃ3)

இரண்டு வகைகளில் அடக்கம் செய்தனர். குறிஞ்சி மற்றும் முல்லை நிலப்பகுதிகளில் கற்கள் அதிகம் காணப்பட்டதால் இறந்தவர்களுக்காகப் பெருங்கற்படைச் சின்னங்கள் உருவாக்கப்பட்டன. மருதநில மற்றும் நெய்தல் நிலத்திற்குரியனவாக முதுமக்கள் தாழிகள் விளங்குகின்றன.

தொல்காப்பியர் குறிப்பிட்ட முதல், கரு, உரிப் பொருள்களில், முதற் பொருள்களாக நிலமும் பொழுதும் (காலம்) காட்டப்பட்டன [1]. இங்கு நிலம் என்பது மக்கள் வாழும் இயற்கைச் சூழலுடன் சார்ந்த நிலவமைப்பே (landscape) ஆகும். ஒரு நாளின் வெவ்வேறு பகுதிகள் மற்றும் ஆண்டின் வெவ்வேறு காலங்கள் பொழுது எனப்பட்டன. பொழுது பெரும்பொழுது, சிறுபொழுது என்று பகுத்தறியப்பட்டது. பெரும்பொழுது ஒரு ஆண்டின் ஆறு பருவங்களை, அதாவது இரண்டிரண்டு திங்கள்களைக் கொண்டது. சிறுபொழுது ஒரு நாளின் ஆறுபொழுதுகளைக் கொண்டது. வெவ்வேறு திணைகளுக்கும் தனித்தனியான பெரும் பொழுது மற்றும் சிறு பொழுதுகள் சுட்டப்பட்டன.

கருப்பொருளில் அந்தந்த நிலத்திற்குரிய விலங்கு, மரம், புல், தெய்வம், விளைபொருட்கள், பயன்படுபொருட்கள், உணவு, மக்கட் பெயர்கள், தொழில் உள்ளடங்கிய பதினான்கு பொருட்கள் அடங்கும் [2] (கோடப்பிள்ளை 2003). கருப்பொருட்களில் குறிப்பிடத் தக்கது தெய்வம். ஒவ்வொரு நிலத்திற்கும் தனித்தனியான தெய்வம் அறியப்பட்டது.

''மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே''
(தொல்.ஃபொ.ஃ5)

இங்கு மாயோன் என்பது திருமாலையும் ('புட்கொடி விறல் வெய்யோன்' என்று புறநானூற்றில் அழைக்கப்பட்டவன்), சேயோன்

---

1) *''முதல் எனப்படுவது நிலம் பொழுதிரண்டின் இயல் பென மொழிப இயல் புணர்ந்தோரே'' (தொல்.ஃபொ.ஃ4)*

2) *''தெய்வம் உணர்வே மாமரம் புட் பறை*
செய்தியாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப'' (தொல்.ஃபொ.ஃ20)

என்பது முருகனையும் (புறநானூற்றில் 'செய்யோன்' என்று அழைக்கப்பட்டவன்), வருணன் (புறநானூற்றில் குறிப்பிடப்பட்ட 'பனைக் கொடியோன்' என்று அழைக்கப்பட்டவன்) என்பது மழைக் கடவுளையும் குறிக்கின்றன. முல்லை நிலக் கடவுளாக 'முல்லைவன நாதர்' என்ற சிவபெருமானும் திகழ்ந்தார் என்று கருதப்பட்டாலும், இக்கடவுள் முருகனைத் தொடர்ந்து காலத்தால் பிந்தி அறியப் பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது (மேலும் விவரங்கள், அத்தி யாயம் ஆறில் கொடுக்கப்பட்டுள்ளன). வருணன் 'வெள்ளியவன்' என்றும் அறியப்பட்டான்[1]. வேந்தன் என்பது இந்திரனைக் குறிப்ப தாகக் கருதப்படுகிறது. சிவன் 'மணி மிடற்றோன்' என்றும், 'விடஞ்சேரும்மைமிடற்றான்' என்றும் அறியப்பட்டான்[2]. தீம்புனல் எனப்பட்ட மருத நிலத்திற்குத் தெய்வமாக இந்திரன் கருதப்பட்டா லும், மருத நிலக்கடவுள் பலராமன்தான் என்று பலர் கருதுகின்றனர். மணிமிடற்றோன் என்ற சொல்லோ, வேந்தன் என்ற சொல்லோ இந்திரனைக் குறிக்கவில்லை என்றும், இந்திரன் என்று கருதியவர்கள் அனைவரும் காலத்தால் பின்னால் வந்தவர்கள் என்றும் கூறப் படுகிறது. மணிமிடற்றோன் சிவபெருமானைச் சுட்டுகிறது என்போரும் உண்டு. எனினும், மருதநிலக் கடவுள் பற்றிய தெளிவு சங்ககாலப் பிற்பகுதியிலும் கூட காணப்படவில்லை. 'வேந்தன்' என்ற சொல் பலராமனைக் குறிப்பது என்று வாதிடுவோரும் உண்டு. பலராமனின் சின்னமான கலப்பை மருதநில வேளாண் தொழிலின் ஆதாரம் ஆகும். பலராமனைக் குறிக்கும் வாலியோன் என்ற சொல் தொல்காப்பியத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் உயிர் மயங்கியல் நூற்பா 286 இதனை மறைமுகமாக எடுத்துக்காட்டுகிறது என்பார் இராகவையங்கார் (1964). இதேபோன்று பரிபாடல் 15ம் மாலிருங்குன்றம் என்னும் திருமாலிருஞ்சோலை மலையில் பலராமன் (வாலியோன்) திருமாலுடன் நேமியுடனும் கலப்பை யுடனும் பொலிந்து நிற்பதாகக் கூறும். சங்க இலக்கியங்களில் புறநானூறும் நற்றிணையும் பலராமனைத் திருமாலோடு அவனுக்கு உடன் பிறந்தவனைப் போலக் குறிக்கின்றன. கபிலர் நற்றிணையில் (பா. 32) ஒரு குறிஞ்சித் திணைப்பாடலில்

---

1) ''மாயவன் சேயவன் வெள்ளியவன்
விடஞ்சேரும் மைமிடற்றான்'' (ஞான.தே.)

2) ''ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை
மாற்றரும் கணிச்சி மணிமிடற் றோனும்'' (புறம்.ஃ56)

''மாயோன் அன்ன மால்வரைக் கவா அன்
வாலியோன் அன்ன வயங்கு வெள்ளருவி''

என இருவரையும் ஒருசேரக் குறிப்பிடுகின்றார். பாலை நிலக் கடவுளாகத் துர்க்கை கருதப்படுகிறது.

உரிப்பொருள் என்பது மக்களின் வாழ்க்கை முறை, வாழ்க்கை ஒழுகலாறு ஆகும்[1]. இந்த நிலங்களில் எல்லாம் நிகழும் ஒழுக்கங் களைக் கூட்டி 'ஐந்திணை' என்றனர்[2]. முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் ஆகிய ஐந்தும் 'நடுவண் ஐந்திணை' எனப்பட்டன. மக்கள் வாழ்வில் நிகழும் காதல் ஒழுக்கமாம் அக உணர்வுகள் ஐந்தாக அமைந்தன. காதலால் கூடிக் குலாவும் புணர்ச்சி ஒழுக்கம் (புணர் தலும், புணர்தல் நிமித்தமும்) குறிஞ்சித் திணையாகவும், காதலன் பிரியக் காத்திருக்கும் ஒழுக்கம் (இருத்தலும், இருத்தல் நிமித்தமும்) முல்லைத் திணையாகவும், காதலனோடு ஊடும் ஒழுக்கம் (ஊடலும், ஊடல் நிமித்தமும்) மருதத் திணையாகவும், காதலன் பிரிவுக்கு இரங்கும் ஒழுக்கம் (இரங்கலும், இரங்கல் நிமித்தமும்) நெய்தல் திணையாகவும், காதலனோடு உடன்போகும் ஒழுக்கம் பாலைத் திணையாகவும் அறியப்பட்டன. மணத்திலும் வெறிமணம் இல்லா நறுமணம்; நறுமணத்திலும் தினவு ஊட்டாத இன்மணம்; இன்மணத் திலும் இதமான மென்மணப் பூக்களைக் காதல் உணர்வான அகத் திணைக்குத் தமிழர்கள் தேர்ந்தெடுத்தனர் என்பார் கோவை இளஞ்சேரன் *(1982.)*

சம்பகலட்சுமி (Champakalakshmi 1989), குருக்கள் (Gurukkal 1989), சேனாவிரத்னே (Seneviratne 1989), சிவத்தம்பி (Sivathamby 1981) ஆகியோர் சங்க இலக்கியங்களில் காணப்படும் திணைக் கோட் பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஐந்திணைகளில் ஏற்படுகின்ற, ஏற்பட்ட பல்வேறு சமூகச் சூழல்களைச் சுட்டிக்காட்டி அதனடிப் படையில் எழுந்த அரசு உருவாக்கத்தை விளக்கியுள்ளனர். இத்திணை மரபுகளின் அடிப்படையில் வளமான பகுதியான மருதநிலப் பகுதியிலேயே முதன்முதலில் அரசு உருவாகியிருக்க வேண்டும் என்று இவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். உழவுத் தொழிலைப் பெரிதும் சார்ந்து அதன் மூலம் பெறப்பட்ட செல்வத்தை மனத்தில்

---

*1) ''புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங்காலைத் திணைக்குரிப் பொருளே'' (தொல்.:பொ.:16)*

*2) ''நடுவண் ஐந்திணை நடுவணதொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே'' (தொல்.:பொ.:2)*

கொண்டு இக்கருத்தினை அவர்கள் அடைந்திருக்க வேண்டும். எனினும், அண்மைக் காலங்களில் பெறப்பட்ட தொல்லியல் சான்றுகள் இக்கருத்தினை ஏற்றுக்கொள்ளாத வகையில் அமைந்துள்ளன என்று ராஜன் (2004) கூறுகிறார். எடுத்துக்காட்டாக, முல்லையும் பாலையும் இருக்கின்ற கொங்கு நாட்டுப் பகுதியில் சேர அரசு உருவானது என்ற உண்மையைச் சுட்டலாம். இப்பகுதியில் உயிரற்ற இயற்கை வளத்தை வாணிகப் பொருட்களாக மாற்றி அவற்றின் மூலம் செல்வச் செழிப்பு அடைந்து பின்பு அரசு உருவாக்கத்தை அடைந்திருக்கலாம். ரோம நாணயங்கள் மருதநிலப் பகுதியைவிட கொங்குப் பகுதியில் அதிகமாகக் கிடைத்திருப்பது இக்கருத்தை மேலும் வலியுறுத்துகிறது.

i) குறிஞ்சிச் சூழல் தொகுப்பு

மலையும் மலையைச்சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்பட்டது. அதாவது, குறிஞ்சித் திணையின் நிலம் மலையாகும். குறிஞ்சிப் பூ மலையின் தன்மைப் பூவாக விளங்குவதைக் கண்டு, இதனையே குறியீடாகக் கொண்டு மலை நிலத்திற்குக் 'குறிஞ்சி' என்று பெயர் சூட்டினர். குறிஞ்சி பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும். பண்டைக் காலத்தே பன்னீராண்டு அகவை, பெண்களுக்குத் திருமணத்திற்கு ஏற்ற பருவமாகக் கருதப்பட்டது. எனவே கூடலொழுக்கத்திற்கு (இந்நிலத்தின் உரிப்பொருள் 'புணர்ச்சி') பொருத்தமான குறியீடு குறிஞ்சி எனக் கொள்ளப்பட்டது. மேலும், குறிஞ்சிப் பூவின் கருநீல நிறம் மறையொழுக்கத்தின் குறியீடாகவும், தேன் மிகுதி களவின்ப மிகுதிக்குறியீடாகவும் கருதப்பட்டன (சாமி 1967). குறிஞ்சி நிலத்திற்குக் கோட்டுப்பூ சிறப்பானது.

குறிஞ்சி நிலக்கடவுள் முருகன். குறிஞ்சிவாழ் மக்கள் குறவர்கள், சிலம்பன், வெற்பன், பொருப்பன், கொடிச்சி ஆகியோர். குறிஞ்சி நிலத்தலைவன் ''குன்றநாடன்''. குறிஞ்சி நில உணவுகள் தேன், தினை, மலைநெல், பழங்கள், கிழங்குகள், விலங்குகள் போன்றவை. குறிஞ்சிநில முக்கியத் தாவரங்கள் குறிஞ்சி, மாமரம், மராமரம், காந்தள், வேங்கை, மூங்கில், கோட்டுப்பூ மரம், மலை நொச்சி, மலை நெல், பெருங்குரல் (பெரும்தினை), தினை, கரும்பு, பழு மிளகு போன்றவை. குறிஞ்சிநிலப் பிராணிகள் யானை, மயில், நறை, விரை, மான், படுபுள், புலி, கரடி, பன்றி, கிளி, விசும்பு ஆடு பறவை, வள்ளுகிர் ஞமலி, ஆ, வண்டு, தேனீ, இருவி, பிணை, கொக்கு, அன்றில், பாம்பு போன்றவை, குறிஞ்சிநில ஊர் சிறுகுடி எனப்பட்டது. குறிஞ்சி நிலத்தில் அருவிகளும், ஓடைகளும்

சுனைகளும் அதிகம். குறிஞ்சிநில மக்களின் முக்கியத் தொழில்கள் தேனெடுத்தல், கிழங்கெடுத்தல் மற்றும் வெறியாடல். குறிஞ்சி நிலப்பண் குறிஞ்சிப்பண், யாழ் குறிஞ்சியாழ், பறைகள் வெறியாட்டுப்பறை மற்றும் தொண்டகப் பறை. குறிஞ்சியின் பெரும்பொழுதுகள் கூதிர்க் காலம் மற்றும் முன் பனிக்காலம்; சிறுபொழுது யாமம்.

ii) முல்லைச் சூழல் தொகுப்பு

காடும், காடு சார்ந்த நிலப்பகுதியும் முல்லை எனப்பட்டது. குறிஞ்சி நிலப்பகுதியான மலையிலும் காடும், காடு சார்ந்த பகுதிகள் காணப்பட்டாலும், இரண்டு பண்புகளின் அடிப்படையில் குறிஞ்சியிலிருந்து முல்லையைப் பிரித்தறியலாம். குறிஞ்சி நிலப்பகுதி கடல் மட்டத்திலிருந்து அதிக உயரத்தில் அமைந்தது. முல்லை நிலப்பகுதிகள் கடல் மட்டத்திலிருந்து குறைந்த உயரத்தில் அமைந்தவை. முல்லை நிலத்தில் புல்வெளிகள் (grasslands) எனப்படும் மேய்ச்சல் நிலங்கள் மிக அதிகம். குறிஞ்சியில் அவை மிகக் குறைவு. முல்லை நிலம் 'புறவு' என்றும் கூறப்பட்டது. பேயனார் ஐங்குறு நூறு முல்லைப் பாடல்களைப் பாடியவர். ஏறத்தாழ 15 பாடல்களில், இவர் முல்லை நிலத்தைப் புறவு என்று குறிப்பிடுகிறார்[1]. சோழன் நல்லுருத்திரன் முல்லை நிலத்தை 'வியன்புலம்' என்று குறிப்பிடுகிறார். இது தண்புலம் என்றும் அழைக்கப்பட்டது (கலி. : 101, 106, 116).

முல்லை நிலக்கடவுள் மாயோன் என்ற திருமால். முல்லை வாழ் மக்கள் ஆயர் (= யாதவர்) (கலி. : 390-1), அண்டர் (பதிற்.: 88:9), கோவலர் (ஐங். : 2; நற்.:69:8; அகம்.: 74:16; நெடுநல்.:3), இடைமகன் (குறு.: 221:3-4), இடையர் (அகம்.: 374:13), ஆய்ச்சியர் (சிலம்பு.: அடை, 20.6), ஆய்மகள் (புறம்.: 25), ஆய்த்தி (கலி.: 108-9), பொதுவர் போன்ற சொற்களால் அழைக்கப்பட்டனர். மேலும், ''குறும்பொறை நாடர்'' என்றும் அழைக்கப்பட்டனர். இவர்கள் கருமை நிறத்தைக் கொண்டவர்கள். முல்லை நிலத் தலைவன் 'கோன்' என்றழைக்கப்பட்டான். இவர்களின் தொழில் நிரை மேய்த்தலாகும்[2]. இதனைத் தவிர முல்லை நில மக்களின் தொழிலாக வரகு களைகட்டலும்,

---

1) ''மணம் கமழ் புறவு'' (ஐங். : 414) ''தண்கமழ் புறவின் முல்லை மலரா'' (ஐங்.: 494).

2) ''முல்லைக் கண்ணிப் பல்லான் கோவலர்
புல்லுடை வியன்புலம் பல்லாபரப்பி'' (பதிற்.:21)

அவற்றை அறுத்தலும், மோர் விற்றலும், காவல் காத்தலும் (கலி. 104:25-27) அடங்கும். முல்லையாழ், முல்லைப்பண், முல்லைக்கலி போன்றவை இந்நிலத்தோடு தொடர்பு கொண்டவை. முல்லை நிலத்திற்குக் கொடிப் பூ சிறப்பானது. குழல் முல்லைநிலத்திற்குரிய இசைக்கருவி. மூங்கிலாலான புல்லாங்குழலின் வளைவாயிடத்தில் முல்லைக் கொடியை முப்புரியாகத் திரட்டி வளைவாகப் பண்ணி செறிப்பர். இது முல்லைத் தீங்குழல் எனப்படும்[1]. முல்லைப் பண்ணை (சாதாரி) எழுப்புவதற்கு இது பயன்பட்டது. இதிலிருந்து தான் (அதாவது குழலிலிருந்து தான்) மற்ற நரம்புக் கருவிகள் தோன்றியிருக்கலாம் என்று கோவை இளஞ்சேரன் (1982) கருத்து தெரிவிக்கிறார். இதனைப் பெரும்பாணாற்றுப் படையில் உருத்திரங் கண்ணனார் (பெரும்பாண்.: 175-182) அமைத்துப் பாடினார். இதனைக் காட்டி யாழ்நூல் செய்த விபுலானந்த அடிகளாரும் ''முல்லை நிலத்தவரே இசைக் கருவிகளின் மூலத்தர்'' என்று காட்டினார். முல்லைவழி தோன்றிய யாழ் 'முல்லை யாழ்' (= செவ்வழியாழ்) ஆகும்[2]. குழலால், யாழால், பண்ணால் எழும் பாடல்தான் 'முல்லை யம் தீம்பாணி' ஆகும். முல்லை நிலத்தில் இசையின் வித்து முளைத்தது என்றால் அது மிகையாகாது.

முல்லை நிலத்தவர் உணவுகள் வரகு, முதிரை, சாமை போன்றவை. இதையே முல்லைப்பாட்டு

''கானம் நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகின்
திரி மருப்பு இரலையொடு மடமான் உகள''

என்ற அடிகள் (97-99) மூலம் குறிப்பிடுகிறது. முல்லை நிலத் தாவரங் களில் முக்கியமானவை கொன்றை (படம் 14), குருந்து, புதல், காயா, வேங்கை (படம் 15), பீர்க்கம், அவரை, பிச்சி, பிடவம், காந்தள் (படம் 16) போன்றவையாகும். முல்லை நிலப் பிராணிகள் மான், முயல், புலி, கானக்கோழி, மயில் போன்றவை; போர்ச்சூழலில் குதிரை, யானை போன்றவை. முல்லை நிலத்தவர்கள் வாழ்ந்த ஊர்கள் பாடி, சேரி (கலி.: 117.6), பள்ளி போன்றவையாகும். முல்லை நில நீர் கான்யாறு ஆகும். முல்லை நிலத்தின் பெரும்பொழுது கார்காலம் ஆகும்; சிறுபொழுது மாலை ஆகும்.

---

1) ''முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி'' (சிலம்பு.: 17)

2) ''நோதிறம், பெயர்திறம், சாதாரி, முல்லையென
நாலும் செவ்வழி நல்யாழ் திறனே'' (பிங்.நி.: 1379)

ஐந்து திணைகளில் முல்லைத் திணை ஏனைய திணைகளி லிருந்து வேறுபட்ட சிறப்பினை உடையது. பிரிவு என்பதும் அப்பிரிவைப் பொறுத்திருப்பதும், வருந்தியிருப்பதும் எல்லாத் திணைகளிலும் உண்டு. ஆனால் பிரிவுக்கும், பொறுத்திருப்பதற்கும் ஒரு எல்லை வகுத்திருப்பதுதான் முல்லையின் சிறப்பாகும். எனவே, பெரும்பாலான முல்லைப் பாடல்கள் கார்காலத்தின் வரவைப் பாடுவன.

முல்லை நிலத்து மரபுகள் பல தமிழர் மரபுகளுக்கெல்லாம் முதன்மையானவை; முன்னோடியானவை. முல்லை நிலத்தில் முதன்முதலில் வரையறுக்கப்பட்ட இயற்கை நெறிகள் பல, பிற வளர்ச்சி வாழ்விற்கும் அடித்தளமாயின. குமரனையும், குமரியையும் பிணைத்து மணமகன், மணமகளாக்கும் வாழ்வியல் சின்னம் முல்லைப்பூ ஆகும். முல்லை மலர் கற்பின் சின்னமாகும். முல்லை மலரின் இயல்புகளை அடிப்படையாகக் கொண்டு பெண்களை ''முல்லை சான்ற கற்பினள்'' என்று சங்க இலக்கியம் சுட்டுகிறது. அதாவது, ஒரு சமுதாயக் கட்டமைப்பில் ஒரு பெண் எப்படி இருக்க வேண்டும் என்று சமுதாயம் வரையறுத்திருக்கிறது. அவ்வரை யறுக்கப்பட்ட சமுதாய எதிர்பார்ப்பு அந்நிலத்தில் மலரும் மலரைக் கொண்டே குறிப்பிடப்பட்டது. இங்கு முல்லை மலரின் தூய்மை (வெண்மை நிறத்தினால்), பெண்களின் கற்பைக் குறிக்கும் (கணவன் பிரிந்த சூழலிலும்) பண்பாட்டுச் சூழல் சார்ந்த குறியீட்டுப் பொரு ளாக அமைந்துள்ளது (சாமி, 1967). முல்லை கார்காலத்தில் பூக்கும் தலைமகட்குக் காமத்தை மிகுவிக்கும் கார்கால மாலைக் காலத்தும், அவர் கற்பு நெறியில் துயர் ஆற்றியிருத்தற்கு அக்காலத்தே மலரும் முல்லை மலர் குறியீடு ஆயிற்று.

iii) மருதம் சூழல் தொகுப்பு

வயலும் வயலைச் சார்ந்த பகுதியும் மருதமாகும். மென்மை யான நிலப்பகுதி என்பதால் மருதம் மென்புலம் என்றும் அழைக்கப் பட்டது. மருதநிலம் வளமானது. மருத மரங்கள் அதிகம் காணப்பட்ட தால் இந்நிலத் தொகுதி 'மருதம்' எனப்பட்டது. மருதம் பாடிய இளங்கடுங்கோவின் மூன்று பாடல்களிலும் (அகம். ః 96,176 ; புறம். ః 50) மருத நிலப்பகுதிகளைப் பழனம், கழனி என்ற சொற்களால் குறிப்பிட்டுள்ளார். இவற்றைத் தவிர மருதநிலத்திற்கு 'செறு' என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மருத நிலத்திற்கு நிலப்பூ சிறப்பானது. மருதநில இயல் தாவரங்கள் மருதம், ஆம்பல், குவளை, பிரம்பங்கொடி (அரத்தின்

வாய் போன்ற முட்களையுடைய கொடி), தாமரை, பகன்றை, வயலை, மூங்கில், வேம்பு, வஞ்சி போன்றவை [1, 2]. பயிரிடப்பட்ட தாவரங்கள் நெல், தென்னை, வாழை, கரும்பு, பலா, காஞ்சி (தோட்டங்களில்) போன்றவை. மருதநிலப் பிராணிகள், வெண் குருகுப் பறவை, களிறு, ஏறு, எருது, மகன்றிற் பறவை, வெள்ளிய நாரை, நீர் நண்டு, நீர்க்கோழி, நீர்நாய் போன்றவை. மருதநில மக்கள் ஊரார் எனப்பட்டனர். மருத நிலத் தலைவன் 'ஊரன்', 'மகிழ்நன்' என்று அழைக்கப்பட்டான். மருதயாழ், மருதப்பண் ஆகியவை மருதநிலத்திற்குரிய இசைத் தொடர்பானவை. மருதநில ஊர்கள் பேரூர் மற்றும் மூதூர் ஆகும். மருதநில நீர்நிலைகள் மனைக் கிணறு, பொய்கை, யாறு போன்றவை. மருதநிலப் பறைகள் மணமுழா, நெல்லரிகிணை போன்றவை, பண் மருதப்பண்; யாழ் மருதயாழ் ஆகும்.

பொதுநிலையில் மருதநிலப் பின்புல வருணனைகளைப் பின்வருமாறு பிரிக்கலாம்ஃ பண்படுத்தப்பட்ட விளைபுலமாக அமையும் கழனி, வயற்புலத்தை அடுத்தமையும் நீர் தேங்கிய பழனம், ஓடும் புனலைக் காட்டும் யாறு, புனல் தங்கும் பொய்கை என்றினைய நீர் நிலைகள், மரம், செடி, கொடிகள் அடர்ந்த பொழில் மற்றும் மக்கள் உறைதற்குரியதாகப் பொருந்தும் ஊர். மருதநில மக்களின் முக்கியத்

---

1) ...... கூடற் குடவயின்
இருஞ்சேற்று அகல் வயல் விரிந்து வாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள் கமழ் நெய்தல் ஊதி எல்படக்
கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்''

(திருமுருகு. ஃ 71-76 நக்கீரர் மதுரைக்கும் திருப்பரங்குன்றத்திற்கும் இடைப்பட்ட மருத நிலத்தை வருணிக்கும் பாடல்)

2) ''நறும்பூங் கோதை தொடுத்த நாட்சினைக்
குறுங்காற் காஞ்சிக் கொம்பர் ஏறி
நிலை அருங்குட்டம் நோக்கி நெடிதிருந்து
புலவுக்கயல் எடுத்த பொன்வாய் மணிச்சிரல்
வள் உகிர்கிழிந்த வடு ஆழ் பாசடை
முள் அரைத் தாமரை முகிழ்விரி நாட்போது
கொங்கு கவர் நீலச் செங்கட் சேவல்
மதிசேர் அரவின் மானத்தோன்றும்
மருதம் சான்ற மருதத் தண்பணை''

(சிறுபாண். ஃ 178-186. நல்லியக்கோடனின் ஆமூர் வளம் பற்றிக் கூறுவது).

தொழில்கள் நெல்லரித்தல், களை பறித்தல் மற்றும் கடாவிடுதல் போன்றவையாகும். வருடத்தின் ஆறு பொழுதுகளுமே மருதத்தின் பெரும்பொழுதுகளாகும் சிறுபொழுது வைகறையும், விடியற்காலை யும் ஆகும்.

iv) நெய்தல் சூழல் தொகுப்பு

கடலோரப் பகுதிப் பெருமணல் நிலத்தை 'நெய்தல்' என்ற தாவரத்தின் பூவால் அழைத்தனர். நெய்தலின் முதற்பொருள் கடல் மற்றும் கானல் ஆகும். நெய்தல் நிலக்கடவுள் வருணன். நெய்தல் நில மக்கள் பரதவர் மற்றும் நுளையர். தலைவன் 'துறைவன்', 'சேர்ப்பன்', 'புலம்பன்' என்று அழைக்கப்பட்டான். நெய்தல் நிலத்திற்கு நீர்ப்பூ சிறப்பானது. நெய்தல் நிலத் தாவரங்களில் குறிப்பிடத்தக்கவை தாழை, ஞாழல், புன்னை, காவி[1] போன்றவை. பிராணிகள் பெண்ணை, நாரை, நீர்க்காக்கை, அன்னம், சுறா, முதலை போன்றவை. நெய்தல் நில நீர் மணற்கேணி மற்றும் உவர்கழியாகும். மீனும் உப்பும் விற்று வாங்கும் உணவுப்பொருட்கள் உணவாக விளங்கின. நெய்தல் நிலமக்களின் தொழில் மீன்பிடித்தல் மற்றும் உப்பு விற்றல் ஆகும். நெய்தல் யாழினின்று பிறக்கக்கூடிய பண்ணைச் சங்க இலக்கியங்கள் செவ்வழிப் பண் என்றும் விளரிப்பண் என்றும் (இரங்கற் பண்) பதிவு செய்துள்ளன. இப் பண்களோடு இசை நிலையில் தொடர்பு கொண்டுள்ள மற்றுமொரு பண் காஞ்சிப்பண் ஆகும். ஆனால் காஞ்சிப் பண்ணுக்கு நிலம் வகுக்கப்படவில்லை. நெய்தலுக்கு உரிய பறை மீன் கோட்பறையாகும்.

நெய்தல், கடற்கரைக் கழியில் மலரும். இம்மலர் மகளிரின் கண்களை ஒக்கும். எனவே மகளிரின் இரங்கல் தன்மைக்கு இது குறியீடு ஆயிற்று. நெய்தல் நிலத்தின் பெரும்பொழுதுகள் வருடத்தின் ஆறுபொழுதுகளுமாகும்; சிறுபொழுது காலை ஆகும்.

v) பாலைச் சூழல் தொகுப்பு

முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து நல்லியல்பு இழந்து பாலைச் சூழல் உண்டாகும். இது வன்மையான நிலப் பரப்பைக் கொண்டது; கொடியது; கடுங்கதிர் வெம்மைக்கு ஆற்றாது, காய்ந்து, உலர்ந்து, நீர்ப்பசை நீங்கி வறண்ட மலைகளையும், காடுகளையும் கொண்டது. எனவே இது வன்புலம் எனப்பட்டது. பாலை வாழ் மக்கள் எயினர், எயிற்றி, மறவர் போன்றவர் ஆவர்; பாலை நிலத் தலைவன் 'காளை', 'மிடலை', 'மீளி' என்ற சொற்களால்

1) ''கழியே சிறுகுரல் நெய்தலொடு காவி கூம்ப
எறிதிரை ஓதம் தரல் ஆளாதே'' (அகம். : 350)

சுட்டப்பட்டான். பாலைநில மக்களின் தொழில்கள் ஆநிரை கவர்தல், சூறையாடல் ஆகியவை. பாலை நிலத் தாவரங்கள் பாலை, ஓமை, வேம்பு, காட்டு மல்லிகை, மரா, குரா, பாதிரி, இருப்பை போன்றவை. பாலைநில விலங்குகளில் முக்கியமானது பருந்து ஆகும். பாலை நில ஊர் குறும்பு எனப்பட்டது. பாலைத் திணையின் ஒழுக்கமான தலைவன் தலைவி 'உடன்போக்கு' பற்றிய பல செய்திகள் பட்டினப் பாலை, நெடுநல்வாடை, கலித்தொகையின் பாலைக்கலி (35 பாடல்கள்; சேரமான் பாலை பாடிய கடுங்கோவால் பாடப் பெற்றவை) போன்றவற்றில் காணப்படுகின்றன. பாலை யாழும், பாலைப் பண்ணும் பாலைச் சூழலின் இசையோடு தொடர் புடையவை. பாலைநிலப் பறைகள் போர்ப்பறை மற்றும் ஊரெறி பறையாகும். பாலை நிலத்தின் பெரும்பொழுதுகள் வேனில் மற்றும் பின்பனி; சிறுபொழுது நண்பகல் ஆகும்.

சூழல் தொகுதிகள் திணையின் அடிப்படையில் மேற்கூறியவாறு பிரிக்கப்பட்டாலும், வெவ்வேறு சூழலின் மக்கள் மனதளவில் ஒன்றுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இது பொருநராற்றுப் படையின் ஒரு பாடலில் இருந்து தெரிகிறது [1]. நெய்தல் நிலப் பரதவர் குறிஞ்சி நிலப் பண்ணைப் பாடினர்; முல்லை நில யாதவர் மருதநிலப் பண்ணை இசைத்தனர். குறிஞ்சி நிலக் குறவர் தம்முடைய தலை முடியில் நெய்தல் மலர்களைச் சூடி முல்லைப் பண்ணை இசைத்தனர் என்று இப்பாடல் குறிப்பிடுகிறது. ஒரு நிலத்தின் ஒருசில தாவரங்களும், பூக்களும் வேறு நிலங்களிலும் காணப்பட்டன. எடுத்துக் காட்டாக, நால்வகை நிலப்பூக்களும் குறிஞ்சி நிலத்திலேயே இருந்தன என்பது பதிவு செய்யப்பட்டுள்ளது [2]. இதேபோன்று கபிலர் பல நிலப் பூக்களையும் குறிஞ்சிப் பாட்டில் தொகுத்துள்ளார் [3].

---

1) *''குறிஞ்சி பரதவர் பாட, நெய்தல்*
நறும் பூங்கண்ணி குறவர் சூட
கானவர் மருதம் பாட, அகவர்
நீல்நிற முல்லைப் பல்திணை நுவல'' (பொருநர்.:218-221) பரந்த நிலப் பரப்பை ஒரு குடைக்கீழ் ஆளும் பேரரசனை - வேந்தனை - போற்றும் நோக்கில் இப் பண்பாட்டுப் பரிமாற்றம் புலவரால் பாடப்பட்டுள்ளது.

2) *''மலையவும் நிலத்தவும் சினையவும் சுனையவும்*
வண்ண வண்ணத்த மலர்'' (குறி.பா.: 113, 114)

3) *''ஒண் செங்காந்தள், ஆம்பல், அனிச்சம்*
தண் கயக்குவளை குறிஞ்சி, வெட்சி'' (குறி.பா.: 62,63)

''வாழை, வள்ளி, நீள்நறு நெய்தல்'' (குறி.பா.: 79)
''காஞ்சி, மணிக்குலைக் கட் கமழ் நெய்தல்'' (குறி.பா.:84)

ஒவ்வொரு திணைக்கும் உரிய பூவை அத்திணைக்கு உரிய சிறு பொழுதில்தான் சூட வேண்டும், அவ்வத்திணையில்தான் பாட வேண்டும் என்பது வாழ்க்கை நுகர்ச்சிக்குத் தடை விதித்ததாக ஆகும் என்பதால், இலக்கணம் வகுத்த பெருமக்கள் அத்தகைய வேலியை அமைக்கவில்லை என்பதை கோவை இளஞ்சேரன் *(1982)*, நெடுஞ் செழியன் *(2005)* போன்றோர் வலியுறுத்துகின்றனர். அதனால்தான் ஒரு விதிவிலக்கு, புறநடை விதிக்கப்பட்டது [1]. ஐந்திணைகளுக்கு உரிய முதற் பொருள்களுள் ஒரு பிரிவான நானிலத்தைக் கூறும்போது 'முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலென' *(தொல். ஃ பொ. ஃ5)* என்றும், பொழுதைக் குறிப்பிடும்போது முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், *(தொல்.ஃபொ.ஃ6,7,9,10)* என்று கூறுமுகத்தான் திணைக்குரிய தாவரக் குறியீட்டுப் பெயரைக் குறிப்பிடுகிறார் தொல்காப்பியர் (நெடுஞ்செழியன் 2005). கருப்பொருள் வகைகளில் ஒன்றாகத் தாவரங்களும் இடம்பெறுவதை ''தெய்வம் உணர்வே மாமரம் புள்பறை செய்தி யாழ்'' *(தொ.ஃபொ.ஃ20)* என்ற வரிசையில் வைத்து உணர்த்துகிறார் தொல்காப்பியர். இதன் வழித் தாவரங்களை நிலவகையான் பிரித்தறிவதற்கான வழிமுறையைத்தான் காட்டுகிறார் தொல்காப்பியர் என்று நெடுஞ்செழியன் *(2005)* வாதிடுகிறார். கருப்பொருள் வரிசையுள், மரத்தின் (=தாவரத்தின்) உறுப்புகளுள் ஒன்றாகிய பூவும் இடம்பெறுவதை உணர்த்துவதோடு, நில எல்லை கடந்து இயங்கும் பறவை இனம் போலவே பூக்களும் தத்தம் நில எல்லையைக் கடந்து நானில மக்களின் பயன்பாட்டில் ஒன்று கலந்து விடுவதையும் அடிக்குறிப்பு தொல்காப்பிய வரிகள் உணர்த்துகின்றன என்று நெடுஞ்செழியன் *(2005)* மேலும் கருதுகிறார்.

நிலங்களின் பெயர்களான முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை ஆகியவை முதலில் மலர்களைக் குறித்துப் பின்னர் நிலங்களைக் குறிக்கவும் விரிந்து, இறுதியில் காதலொழுக்கத்தின் பிரிவுகளையும் குறிக்கலாயின என்று வரதராசன் *(1964)* கூறுவார். ஆனால், நெடுஞ்செழியன் *(2005)* இக்கருத்தை ஒப்பவில்லை. பூவைக் கடந்த வளரியல்பு (habit) நோக்கிலேயே மரம், செடி, கொடி, நீர்த் தாவரம் என்ற அடிப்படையில் நானிலப் பெயரீடு அமைந்திருக்கலாம் என்று அவர் கருதுகிறார். மலர்கள், நிலங்கள், காதல் ஒழுக்கம் மற்றும் வளரியல்பு ஆகிய நான்கு நோக்கிலேயும் சூழல் தொகுதிகளின்

---

1) ''எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொரு வாராவாயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும்'' *(தொல்.ஃபொ.ஃ21. நூ.ஃ965)*

பெயரீடு அமைந்திருக்கலாம் என்பது எனது கருத்து. இக்கருத்து உயிரின வளம் (biodiversity) பற்றிய அறிவியலின் கருத்தோடு முழுதும் ஒத்துப் போகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஈ) தாவர உயிரின வளம்

சூழல் தொகுதியின் (Ecosystem) உட்கூறுகளாகத் தாவரங்கள், பிராணிகள் மற்றும் நுண்ணுயிரிகள் அமைகின்றன. இவையனைத்தும் ஒன்று சேர்ந்து 'உயிரின வளம்' (biodiversity) என்றழைக்கப்படுகின்றன. உயிரின வளத்தின் பன்மத்தைப் பின்வருமாறு மாணிக்கவாசகர் அழகாகக் குறிப்பிட்டுள்ளார்:

''புல்லாகிப் பூண்டாய்
புழுவாய் மரமாகி
பல்விருக மாகிப்
பறவையாய்ப் பாம்பாகி
கல்லா மனிதராய்ப்
பேயாய்க் கணங்களாய்
செல்லாஅ நின்ற இத்
தாவர சங்கமத்துள்
எல்லாஅப் பிறப்பும்
பிறிந்திளைத் தேன் எம்பெருமான்''

தாவரங்களும், பிராணிகளும் தமக்குள்ளேயே சிறுசிறு தொகுதிகளையும், கூட்டங்களையும் அமைத்துக் கொள்கின்றன. இவற்றைக் குறிக்க சமுதாயம் (community) என்ற சொல் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றது. ஒரு சூழல் தொகுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட தாவர மற்றும் பிராணி சமுதாயங்கள் காணப்படலாம். இத்தகைய சமுதாயங்களில் ஒரு குறிப்பிட்ட பிராணியோ, தாவரமோ மேலோங்கி (dominant) நின்று மற்றவை ''அடங்கி'' இருக்கலாம்; அல்லது பல தாவரங்கள், பிராணிகள் (இவற்றில் எவையும் ஓங்கியிருக்காமல்) ஒரு சமுதாயத்தை ஒன்றாக உருவாக்கலாம். இத்தகைய தாவரச் சமுதாயங்களைச் சுட்டப் பல சொற்கள் தமிழிலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இடப்பெயரான் தாவரங்களை ஒருங்கே சுட்டும் ''கா'' முதலான தாவர இடப்பொதுப்பெயர்கள் தொல்காப்பியக் காலத்திலேயே வழக்கில் இருந்தன (தொல்.:நூ.:1137). கானம், புறவு, படப்பை, சாரல், கானல் முதலியன திணை நெறியிலான பொதுப் பெயர்களாக இருக்க, திணை சாராப் பொதுப் பெயர்களாக கா, சோலை, பொதும்பர், பொழில், தண்டலை முதலான இடச்சார்புப் பொதுப்பெயர் வழக்குகள் புதிதாக உருவாகத் தொடங்கி

சங்க காலத்தில் இயல்பாக ஆட்சிக்கு வரலாயின. திருவெண்காடு, திருமறைக்காடு, கடம்பவனம் (=மதுரை), சந்தனத்தோப்பு போன்றவை தாவரச் சமுதாயத்தின் அடிப்படையில் இடம்பெற்ற ஊர்ப் பெயர்களாகும்.

சூழல் தொகுதியிலும், தாவர வளத்திலும் தமிழக வரலாற்றுக் காலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து அறிந்து கொள்வது நன்று. பண்டைய தமிழகத்தில் நான்கில் மூன்று பங்கு நிலப்பரப்பில் தாவரங்கள் நிறைந்திருந்தன. ஆனால் தாவர வளமும் சூழல் தொகுதி வளமும் சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டே வந்துள்ளன. கி.பி. 7 முதல் 17ஆம் நூற்றாண்டு வரை பல கல்வெட்டுகள் தமிழகத்தின் குறிப்பிட்ட பகுதிகளின் தாவர வளத்தைப் பற்றிய தகவல்களைத் தருகின்றன. எந்த ஒரு தமிழகப் பகுதியிலும் காணப்பட்ட வட்டாரத் தாவரங்களின் தொகுப்பில் (composition) குறிப்பிடத்தக்க மாற்றங்கள் தாவர சிற்றினங்களின் எண்ணிக்கை அடிப்படையில் (species richness) வெவ்வேறு காலகட்டங்களில் ஏற்படவில்லை எனினும், இயல் தாவர வளரிடங்கள் (habitats) குறைந்து அவற்றினிடத்தே பயிர்த் தாவரங்கள் பல புதியதாக நுழைக்கப்பட்டன என்பது தெரிய வருகிறது. பயிர்கள் வளர்க்கப்பட்ட நிலங்களின் பரப்பும் அதிகமாகிக் கொண்டே வந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக இயல்தாவர வளம் தவிரப் பயிர்த்தாவர வளமும் (agrobiodiversity) தமிழகத்தில் சிறப்படைய ஆரம்பித்தது எனலாம்.

III
தமிழரின் தாவர அறிவியல் புலமை

அ) தாவரம் : சொல் விளக்கம்

தாவரங்களைப் பற்றிய அறிவியல் செய்திகளைக் கொண்டது தாவரவியல். பண்டைய தமிழர் தாவரவியலில் மிகுந்த புலமை பெற்றிருந்தனர். முதலில் 'தாவரம்' மற்றும் 'தாவரவியல்' ஆகிய சொற்கள் பற்றி ஆய்வோம். 'தாவரம்' என்ற சொல் ''ஸ்தாபர'' (=ஸ்தாவர) என்ற சமஸ்கிருத சொல்லின் திரிந்த தமிழ் வடிவமாகக் கருதப்பட்டதால், 'தாவரம்' மற்றும் 'தாவரவியல்' ஆகிய சொற்கள் தனித்தமிழ் ஈடுபாடுடையவர்களால் ஏற்கப்படவில்லை. சாமி *(1967, 1972)* இவற்றிற்கு முறையே 'செடி' மற்றும் 'செடியியல்' என்று பெயரிட்டுள்ளார். கோவை இளஞ்சேரன் *(1982)* தாவரவியலைச் 'செடிமவியல்' என்பார். மேற்கூறிய இருவர் கூறிய சொற்களுமே தவறெனக் கருதலாம். ஏனெனில் தாவரங்கள் செடிகளாக மட்டும் காணப்படுவதில்லை; மேலும், சங்க இலக்கியத்திலோ, தொல் காப்பியத்திலோ 'செடி' என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை. நிலத்தில் நிலைத்து நிற்கும் (அதாவது, இடப்பெயர்ச்சியடையாமை) என்ற தலையாய பண்பைக் கொண்ட தாவர வகைகளான மரம், செடி, கொடிகளை 'நிலையியல் உயிர்கள்' என்பார் நீலகேசியின் உரையா சிரியர் சமய திவாகரர் (நீலகேசி, மொக்கல வாதச்சருக்கம்). எனவே இவற்றைப் பற்றிப் பேசும் அறிவியல் துறையை (Botany) 'நிலையியல் உயிரியல் துறை' என்று பெயரிடலாம் என்று காஞ்சனா *(2005)* வாதிடுகிறார். ஆனால், நிலையியல் என்ற சொல்லை 'Statics' என்ற இயல்பியல் (Physics) துறையைச் சுட்ட ஏற்கனவே பயன்படுத்தி விட்டதால், இச்சொல்லை ஏற்க முடியாது.

ஏற்கனவே குறிப்பிட்ட 'ஸ்தாபர' என்ற சமஸ்கிருத சொல் லிற்கு இணையான தகுந்த தமிழ் சொல் இல்லை என்பதாலும், 'தாவர சங்கமம்' என நிலைத்திணை மற்றும் இயங்குதிணைப் பொருட்

களைச் சுட்டுதல் மரபு என்பதாலும், தாவரம் எனும் சொல்லைப் புடை பெயர்ந்து இயங்காத, நகராத மரம், செடி, கொடி முதலிய அனைத்தையும் குறிக்கும் பொதுச் சொல்லாக எடுத்துக் கொள்ளலாம் என்று நெடுஞ்செழியன் (2005) வாதிடுகிறார். மேலும், நிகண்டுகளில் மரப்பொதுப் பெயர்களுள் ஒன்றாகத் தாவரம் என்ற சொல் இடம் பெறுவதால், தாவரம் என்ற சொல் இடைக்காலம் தொட்டே தமிழகத்தில் வழக்கத்திற்கு வந்திருக்க வேண்டும் என்பதும் புலனாகிறது. மர இனத்தைக் குறிப்பதற்கு உரிய பெயர்களாக அகம், அகலியம், அங்கிரி, தரு, தாரு, தாவரம், துருமம், பாபதம், மூலம், விருக்கம் (= விருட்சம்) போன்ற சொற்களைப் பிங்கல நிகண்டு எடுத்துரைக்கிறது. சங்க இலக்கியத்தில் நிலத்தின் மீது நிலத்தைத் தழுவி மூடியவாறு பரவி விளங்கும் தாவரங்களைச் சுட்ட 'தாஅ' என்ற சொல் வழங்கப் பட்டுள்ளது [1]. இச்சொல்லைத் தாவரம் என்பதற்கான வேர்ச் சொல் லாகக் கருதலாம் என்ற நெடுஞ்செழியனின் (2005) கருத்தும் இங்கு ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. அதாவது, 'தாவரம்', 'ஸ்தாபர' என்ற சமஸ்கிருத சொல்லில் இருந்து திரிபு அடையவில்லை. 'தாஅ' என்ற தமிழ் வேர்ச்சொல்லில் இருந்து தோன்றியிருக்கலாம் என்ற கருத்து எழுகிறது.

வரதராசன் (1964) தனது நூலில் தாவர இயலைப் 'பயிரியல்' என்று தமிழாக்கியிருக்கிறார். தற்போதைய வழக்கத்தின்படி 'பயிர்' என்பது வளர்க்கப்படும் தாவரத்தை (crop) மட்டும் குறிக்கிறது என்பதால், 'பயிரியல்' என்ற சொற்றொடரைத் தவிர்ப்பது நலமெனத் தெரிகிறது. அருளி (2002) தன்னுடைய அருங்கலைச்சொல் அகரமுதலி யில் தாவரவியலை 'புதலியல்' என்று குறிப்பிடுகிறார். இதற்கான வேர்ச்சொல்லான 'புதல்' கழக இலக்கியங்களுள் அறுபதுக்கும் மேற்பட்ட இடங்களில் சுட்டப்பட்டிருப்பதாலும், மரம் தவிர்த்த அனைத்து தாவர வளரியல்புகளையும் குறிக்கும் பொதுச் சொல்லாக அமைவதாலும், Botany என்ற கிரேக்க சொல்லாக்கத்திற்கு இதுவே அடிச்சொல் என்று அவர் கருதுவதாலும், புதலியல் என்ற சொல்லை அவர் தாவரவியலுக்குச் சுட்டுகிறார். மாதையன், சித்திரபுத்திரன் ஆகியோர் பழமரபு மீட்பு நோக்கில் 'மர இனம்' எனும் தொடரை முன்னிறுத்துகின்றனர். 'மரன்' என்ற சொல்லைத் தாவரப் பொதுப் -

1) ''வேங்கை தாஅய தேம்பாய் முற்றம்'' (அகம்.:12) ''கம்பலத்தன்ன பைம்பயிர் தாஅம்'' (நற்.:24) ''மணலாடு கழங்கின் அறைமிசைத் தாஅம்'' (நற்.:79) ''நறுவீ ஞாழல் மாமலர் தாஅல்'' (நற்.:96) ''புதுவீ ஞாழலொடு புன்னை தாஅம்'' (நற்.:167).

பெயராக்கிக் கொள்ளலாம் என்றும், இதிலிருந்து 'மரனியல்', 'மரனியலார்' என்ற சொற்றொடர்களை உருவாக்கிக் கொள்ளலாம் என்றும் நெடுஞ்செழியன் (2005) கருத்து தெரிவித்தாலும், அவரே தன்னுடைய நூலில் தாவரம் என்ற சொல்லை வழக்கு கருதிப் பயன்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தொல்காப்பியர் மரம், செடி, கொடி முதலானவற்றைச்சுட்டப் பயன்படுத்திய பொதுப்பெயர் 'மரம்' என்பதே. தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்தில் உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் ஆகிய இயல்களில் தாவரங்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இங்கெல்லாம், தொல்காப்பியர் தாவரப் பெயர்களை மரப்பெயர் என்றே குறிப்பிடுகிறார்[1]. அவர் 'மரம்' என்ற பெயர்ச் சொல்லை அனைத்துத் தாவரங்களையும் குறிப்பதற்காகவும், தாவரங்களில் மரங்களைச் சுட்டுவதற்காகவும் இருநிலைப் பயன்பாட்டில் வழங்கியுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது (நெடுஞ்செழியன் 2005). மரம் என்ற சொல் திராவிட இனத்திற்குரிய மூலச் சொல்லாகவும், தொன்மையான சொல்லாகவும் இருப்பதுடன், இன்றும் மரபு வழியே போற்றப்பட்டு வருகிறது (நெடுஞ்செழியன் 2005). சங்க காலத்திலும் மரம் என்ற சொல் தாவரங்கள் அனைத்தையும் குறிக்கும் பொதுச் பெயராகவே கையாளப்பட்டுள்ளது[2]. அதே சமயம், ஓங்கி வளர்ந்த தாவரத்தை (tree) சுட்டும் வகையிலும் இச்சொல் கையாளப்பட்டது[3], குறிப்பிட்ட மரங்களைச் சுட்டும் வகையிலும் கையாளப்பட்டது[4]. ஆனால், இச்சொல் ஓங்கி வளரும், பலகாலம் வாழும், அகழ்காழ் (heartwood; வைரக்கட்டை) பொருந்திய தாவர வகைகளை மட்டுமே சுட்டும்

---

1) *''அஆ என்னும் மரப்பெயர் கிளவிக்கு'' (தொல்.:உருபி.:9)*
''மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே'' (தொல்.:உயிர்.:15)
''மரப்பெயர்க் கிளவிக்கு அம்மே சாரியை'' (தொல்.:குற்.:10)
''மெல்லொற்று வலியா மரப்பெயருளவே'' (தொல்.:குற்.:11)

2) *''மரம் பயில் சோலை'' (நற்.:192)*
''மரம் பயில் இறும்பு'' (குறு.:155)
''மரம் தலைத்தோன்றா ஊரரு மல்லர்'' (குறு.:203)

3) *''பெருந்தண் என்ற மரநிழல் சிறிது இருந்து'' (நற்.:146)*
''காடே நிழல் கவின் இழந்த அழல்கவர் மரத்த'' (நற்.:256)
''வாவல் பழுமரம் தேரும்'' (குறு.:172)

4) *''யா அங் கொன்ற மரஞ்சுட்டு இயவின்'' (குறு.: 198)*
''சாந்த மரத்த'' (ஐங்.:212)

சொல்லாக நாளடைவில் மாறிவிட்டது. தாவரங்கள் அனைத்தையும் சுட்டும் பொதுச் சொல்லாகவே 'மரம்' தேவார காலம் (= பக்தி இயக்கக் காலம்) வரை நிலைத்திருந்ததாக நெடுஞ்செழியன் (2005) கருதுகிறார். நிகண்டுகளும் தாவரப் பொதுப்பெயராக 'மரப் பொதுப்பெயர்' என்பதைக் கொண்டே சுட்டின. சங்க காலத்திற்குப் பின்பு மரம் என்ற சொல் தற்போது பயன்படுத்தப்படும் பொருளில் மேன்மேலும் அமையத் தொடங்கியது. அதாவது, தாவரங்களைக் குறிக்கும் பொதுப் பெயரில் இருந்து விடுபட்டுவிட்டது. சங்கம் மருவிய காலத்தில் பொதுப் பயன்பாடு ஓரளவு தொடர்ந்து காணப் பட்டது பின்வரும் தொடர்களிலிருந்து அறியப்படுகிறது : ''வற்றல் மரம்'' (குறள் 7); ''பழுமரம்'' (நாலடி.:21), ''மருந்தாகி தப்பாமரம்'' (குறள்:217); ''நச்சுமரம்'' (குறள்:1008); ''கூழ்மரம்'' (பழ.272); ''முள்மரம்'' (குறள்:879); ''மனைமரம்'' (பழ.52); ''இடையன் எறிந்த மரம்'' (பழ.:314).

ஆ) பண்டைய தமிழரின் தாவரவியல் புலமையின் ஆழம்: ஒரு முன்னுரை

பண்டைய தமிழரின் தாவரவியல் அறிவின் ஆழம் மிகவும் அதிகமாகும். தொல்காப்பியத்தில் தொடங்கி, சங்க இலக்கியத்தின் வழியாக, சங்கம் மருவிய காலத்து இலக்கியத்திலும் பக்தி இலக்கியத் திலும், அவற்றைத் தொடர்ந்த இலக்கியத்திலும், தற்கால இலக்கியத் திலும் இந்த ஆழம் சிறப்பாக வெளிப்படுகிறது. தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், மெய்ப்பாட்டியல், மரபியல் ஆகியவற்றில் தாவரங்கள் பற்றிய பல செய்திகள் காணப்படுகின்றன. மக்களின் வாழ்வியலில் பயன்பாட்டு நிலையிலும், குறியீட்டு நிலையிலும் தாவரங்கள் இடம்பெற்றதற்கான ஆதாரங்களைப் பெற முடிகிறது. தொல்காப்பி யத்திற்கு முன்னும் பின்னுமாய்த் தோன்றிய சங்க இலக்கியத்துள் தாவரங்களைப் பற்றிய பல்வேறு செய்திகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் அடைமொழிகளின் வழியாலும் உவமைகளின் வழியாலும் இனங்கொள்ளப்படுகின்றன. தாவரங்களிலிருந்து விலகாது, தாவரங்களுடான இயைந்த தமிழர் தம் வாழ்வியல் தொடர் பையும், தாவரங்களின் வாழ்வியல் பதிவையும் தொல்காப்பியத்தை விட விரிவாகச் சங்க இலக்கியம் விளக்கிக் காட்டுகிறது.

தமிழர்களின் உணவுத் தேவையே அவர்களைத் தாவரங் களோடு நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளத் தூண்டின. சங்கப் பாடல்கள் பலவும், பாடலாசிரியர்களின் மிகச் சிறந்த 'உற்று

நோக்கல்'களின் மூலம், தாவரவியல் பற்றிய மிக ஆழமான செய்திகளை எடுத்துரைத்துள்ளன. ''சங்க இலக்கியத்தில் செடி, கொடி, மரங்கள் பற்றி பல செய்திகள் கூறப்படுகின்றன. அவை பெரும்பாலும் செடிநூலார் கண்டுபிடித்தவையோடு ஒத்திருக் கின்றன'' என்று சாமி (1967) குறிப்பிடுகிறார். இதே போன்று, வரதராச னும் (1964) ''இயற்கைக் காட்சிகளை வருணித்துக் கூறுவதில் ஸ்காட்டைப் போன்ற புலவர்களும் சங்க காலத்தில் உண்டு. அவர் களுடைய நுண்ணிய காட்சியறிவு இன்றைய பயிர்நூல் வல்லாரின் ஆராய்ச்சிக்கும் உதவக் கூடியது. தமிழகத்துப் பயிர் பச்சைகளைப் பற்றிய விவரங்களை அறிய விரும்பும் பயிர்நூல் வல்லார் சங்க இலக்கியப் பாடல்களை முழுநம்பிக்கையோடு பயிலலாம்'' என்று குறிப்பிடுகிறார். எந்தெந்தத் தாவரங்கள் எப்பொழுது பூக்கும், காய்க்கும், பழுக்கும், பயன்தரும் என்ற விவரங்களை அனுபவங்கள் மூலம் அறிந்து தமிழர்கள் தெளிவுபெற்றனர்.

இ) தாவரங்களின் வகைப்பாடு

i) வகைப்பாட்டுக்கு உதவும் பண்புகள்

தமிழிலக்கியத்தில் தாவரங்களின் வருணனைகள் கவிநயத் துடன் இருப்பது மட்டுமன்றி, அறிவியல் உணர்வும் உண்மையும் கலந்தவைகளாக இருக்கின்றன என்பது தெளிவு. இந்த வருணனைகள் பெரும்பாலான தாவரங்களை 'இதுதான் அது' எனக் கண்டுபிடிக்கும் அளவுக்குப் பொருத்தமானதாக அமைந்திருப்பதும் குறிப்பிடத் தக்கது. கவிஞர்களின் இயற்கைச் சித்தரிப்பில் உவமை, உருக்காட்சி, உள்ளுறை, இறைச்சி போன்ற கவிதை உத்திகளின் செயல்பாடு களிலேயே தாவரங்கள் இடம்பெறுகின்றன. முக்கியமாக, இந்த உத்திகள் தாவர வகைப்பாட்டியலுக்கு மட்டும் உறுதுணையாக இருப்பதோடு அல்லாமல், தாவரவியலின் மற்ற உள்துறைகளைப் பற்றிய பல செய்திகளையும் தருகின்றன.

மகளிர் உடல் உறுப்புகளோடு ஒப்பிடப்பட்ட தாவரவியல் தொடர்பான உவமைகள் சிறப்பு வாய்ந்தன. அவற்றில் ஒரு சில பின்வருமாறு :

மகளிர் பல்லுக்கு முல்லை [1]

---

1) ''நறு முல்லை நேர்முகை ஒப்ப நிரைத்த
செறிமுறை பாராட்டினாய் மற்றெம் பல்லின்
பறிமுறை பாராட்டினையோ ஐய'' (கலி.:22:9-11)

மகளிர் கண்ணுக்குக் குவளை [2], காவி [3], நெய்தல் [4], செங்கழுநீர் [5]
மகளிர் வாய்க்கு ஆம்பல் [6]
மகளிர் மூக்குக்கு எள்பூ
மகளிர் காதுக்கு வள்ளைக் கொடி
மகளிரின் முகிழ்த்த மார்புக்குக் கோங்கு மொட்டு [7]
மகளிர் விரலுக்குக் காந்தள்
மகளிர் செவ்விதழுக்குச் சீரடிக்கும் இலவம் பூ இதழ்

விலங்குகள் மற்றும் பறவைகளின் உறுப்புகளோடு ஒப்பிடப்பட்ட தாவர உறுப்புகளும் பல உள்ளன :

நண்டின் கண்ணுக்கு நொச்சி அரும்பு
வயல் நண்டின் கண்ணுக்கு வேப்பம்பூ
மயில் குடுமிக்கு வாகைப்பூ
பாம்பின் பல்லுக்கு குரவின் அரும்பு
பல்லி முட்டைக்கு புன்னை அரும்பு
நாரைக்குத் தாழை மலர்
அன்னத்திற்குத் தாழை விரிவு
மீன் கொத்தி வாய்க்குத் தளவ மலர்
கவுதாரியின் கால் நகத்திற்குத் தளவ அரும்பு

---

2) *''குவளை அம்கண்'' (குறு.:13)*
''மையவாம் குவளை யெல்லாம் மாதர் கண் மலர்கள் பூத்த
கையவாம் உருவத் தார்தம் கண்மலர் குவளை பூத்த''
(கம்ப.:பால.:நீர்விளையாட்டு:3)

3) *''காவியங் கண்ணினாய்'' (சீவக.சி.316)*
''காவியங் கண்ணார் கட்டுரை'' (சிலம்பு.:14:138)

4) *''கண்போல் பூத்தமை கண்டு நுண்பல்*
சிறு பாசடைய நெய்தல்'' (நற்.:27:9-10)
''பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்''
..
கயம் மூழ்கு மகளிர் கண்ணின் மானும் (குறு.:9)

5) *''அம் செங்கழுநீர் அரும்பவிழ்த் தன்ன... நெடுங்கண்''*
(சிலம்பு.:14:140-141)

6) *''அரக்காம்பல் நாறும் வாய்'' (நாலடி.:396)*
''செவ்வாய் ஆம்பல்'' (பரி.:116)

7) *''கோங்கின் முதிரா இள முகை யொப்ப......*
.... வன முலையாய்'' (முல்.பா.:17)

பூனையின் அடி, இறால் மீன் தலைக்கு, இலுப்பைப் பூ
ஆரல் மீன் முட்டைக்கு ஞாழல் பூ
குறும்பூழ்ப் பறவைக் குஞ்சுக்கு அடப்பம்பூ
அணில் பல்லுக்கு முள்ளி மலர்
புலி நக்கத்திற்கு முருக்கின் மலர்
கிளியின் மூக்குக்கு அவரைப் பூ
பன்றிப் பல்லுக்கு அகத்திப் பூ
முல்லையின் கூர்மைக்குப் பூனைக் குட்டியின் பல் [1]
களிற்றின் நெற்றியில் தோன்றும் புள்ளி வடிவத்தில் தெறுழ்பூ பூக்கும்
மயிலின் காலடிக்கு நொச்சியிலை
முயப்பிடிச் செவியினன்ன ஆம்பல் இலை
சேவலின் நெற்றிக் கொண்டைக்குக் கவிர் மலர்
சிட்டுக் குருவிக் குஞ்சுக்கு ஈங்கை மலர்
வௌவாலின் இறக்கை போன்ற ஆம்பல் இலையின் அடிப்புறம்
அணில் வாலுக்கு ஊகு
வெள்ளெலியின் கண்களுக்குக் குன்றி மணி
மான் குளம்புக்கு அடும்பு இலை
முதலையின் முதுகுத் தோலுக்கு ஓமை மரத்தின் அடிமரம்
பூனைக் குட்டியின் வழவழப்பான உடல் மயிர்க்குக் பெரு பூளை

இதே போன்று பல பொருட்களோடு தாவர உறுப்புகள் உருவகப் படுத்தப்பட்டுள்ளன.

அரம் போன்ற ஓரமுடைய வேப்பிலை
அம்புக்குப்பிக்கு இலுப்பைப் பூ
தேர் உருளைக்கு மகிழம்பூ
ஓவிய எழுதுகோலுக்குப் பாதிரிப்பூ
பந்திற்கு வெண்கடம்பு மஞ்சரியும், விளாம்பழமும்
பொரிக்குப் புன்கு மொட்டு
குத்திட்டு நிற்கும் வேலுக்குக் கரும்புப்பூ
குதிரைக் கழுத்தில் கட்டப்படும் சலங்கைக்கு அடும்புப்பூ
பற்றுக் குறடுக்கு பாலைக் காய்
கலப்பைக்குக் காந்தற் கிழங்கு

1) ''பிள்ளை வெருகின் முள்ளெயிறு புரையும்
பாசிலை முல்லை முகைக்கும்'' (புறம்.:117)

கொன்றைக்காய் திரண்டு தொங்கும் தோற்றம் தவம் செய்வோரது திரண்ட சடைக் கற்றை போன்றது. பகன்றை மலர் புதுத் துணியை முருக்கிக் கஞ்சி தோய்த்து நீரில் அடித்துப் பிழியும்போது நிற்பது போன்ற தோற்றம் உடையது (கோவை இளஞ்சேரன் 1982).

மேற்கூறியவற்றைத் தவிரத் தாவரங்களின் ஒரு சில பண்புகளை விளக்கும் வண்ணம் அவற்றிற்கு ''அடைமொழிகள்'' கொடுக்கப் பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. ''நறுங்காழ் ஆரம்'', ''பாராரைப் புன்னை'', ''கருங்கோட்டுப் புன்னை'', ''கருங்கால் வேங்கை'', ''நீடு சினைப் புன்னை'', ''வான்பொரு நெடுஞ்சினை'' போன்றவை அடிமரம் மற்றும் கிளைகளின் பண்புகளையும், ''மாநனை'', ''சிறியிலைச் சந்தின'', ''இலை இலபிடவம்'', ''சிறியிலை வேம்பு'', ''புல் இலை ஓமை'', ''மயிலடி இலைய மாக்குரல் நொச்சி'', ''பேரிலைப் பகன்றை'', ''பாசிலை முல்லை'', ''அகல் இலைக் காந்தள்'', ''மயிர்க்கால் உழுந்தின் அகல் இலை'', ''முள்ளிலைத் தாழை'', ''நெட்டிலை இருப்பை'' போன்றவை இலையின் பண்புகளையும், ''செங்கொடு வேரி'' என்று வேரின் பண்பினையும், ''கொடுமுள் ஈங்கை'', ''முள்தாள் தாமரை'' என்று முள்ளிருத்தலையும் குறிக்கின்றன. பூக்கள் தொடர்பான அடைமொழிகள் பின்னால் விவரிக்கப்பட்டுள்ளன.

ii) தாவர வகைப்பாட்டு முயற்சிகள்

தொல்காப்பியரின் வகைப்பாடு : உலகிலுள்ள உயிரிகள் அனைத்தும் தொல்காப்பியரால் புலனுணர்வு அடிப்படையில் ஆறு வகைகளாகப் பகுக்கப்பட்டன. இவற்றுள் உற்றறியும் ஓரறிவை மட்டுமே கொண்டனவாக, பரிணாமத்தின் அடிநிலையில் தாவரங்கள் இருப்பதை அவர் உணர்த்துகிறார்[1]. ஓரறிவுத் தாவர இனத்தைப் புல், மரம் என்ற இரண்டு வகைகளாகக் காண்கிறார் தொல்காப்பியர் (தங்கமணி 1989). இதை மேலும் விளக்கும் வகையான், தமிழர் மேற்கொண்ட மூன்று முக்கியத் தாவர வகைப்பாடுகள் பற்றி முதலில் அறிந்து கொள்ளுதல் அவசியமாகிறது. முதல்வகை தாவர வகைப்பாடு தாவரங்களின் உள்ளீடு (anatomy) (= உள்ளமைப்பு) அடிப்படையானது. இவ் வகைப்பாட்டின்படி தாவரங்கள் அகக்காழ் (wood) கொண்டவை என்றும் அகக்காழ் அற்று, புறக்காழ் உடையவை என்றும் வகைப்படுத்தப்பட்டன. அகக்காழ் அல்லது அகவயிற்பு

---

1) ''புல்லும் மரனும் ஓரறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே'' (தொல்.:மர.:28)

உடையன மரங்கள் (trees) [1]. அகக்காழ் இல்லாமல் புறக்காழ் மட்டும் பெற்றவை புல்லாகும் [2]. தொல்காப்பியர் சுட்டும் அகக்காழ் உடையவை இருவித்திலைத் தாவரங்களைக் குறிக்கின்றன. தொல்காப்பியர் சுட்டுகின்ற புல்வகைகள், தற்போதைய தாவரவியலார் குறிப்பிடும் ஒருவித்திலைத் தாவரங்களை (monocots) சுட்டுகின்றன எனக் கொள்ளலாம். பனையும் அரையும் மர இனமாக இருக்க, அவற்றுள் அரையை மட்டும் மரம் எனக் குறிப்பிட்டுப் பனையை இனச் சுட்டின்றி வழங்குதலை வைத்துப் பனையை ஒருவித்திலைத் தாவரமாகத் தொல்காப்பியர் கருதினார் எனக் கொள்வதற்கு வாய்ப்புள்ளது. மரங்களாகத் தோற்றமளித்தாலும், தெங்கு (=தென்னை), பனை, கமுகு, மூங்கில் போன்றவை அகக்காழ் அற்ற, ஆனால் புறக்காழ் பெற்ற தாவரங்கள் என்பதை இளம்பூரணர் உரை வழி அறிகிறோம் (ராஜேஸ்வரி 2005). இதிலிருந்து, தற்போது தாவரவியலில் பெரிதும் பயன்பாட்டில் உள்ள வகைப்பாடான ஒருவித்திலை, இருவித்திலைத் தாவரத் தொகுதிகள் என்ற வகைப்பாட்டு முறையைத் தொல்காப்பியர் அன்றே அறிந்திருந்தார் எனக் கொள்ளலாம். புல்லின வகைக்குரிய உறுப்புகளைக் கூறுமிடத்து,

> ''தோடே மடலே ஓலை என்றா
> ஏடே இதழே பாளை என்றா
> ஈர்க்கே குலையே நேர்ந்தன பிறவும்
> புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்'' *(தொல்.:மர.:88)*

என்று கூறுவதன் மூலம் புல் வகைத் தாவரங்களின் உறுப்புகளைக் குறிப்பதற்கென்றே தனியே பெயர் வழக்குகள் இருந்தன என்பதை மிகச் சிறப்பாகத் தொல்காப்பியர் கூறுகிறார்.

இதே போன்று அகக்காழ் உடைய மரவகைத் தாவரங்களுக்குரிய உறுப்புகளைக் குறிக்கத் தனியே பெயர் வழக்குகள் இருந்தன என்பதை,

> ''இலையே முறியே தளிரே தோடே
> சினையே குழையே பூவே அரும்பே
> நனையே உள்ளுறுத்த அனையவை எல்லாம்
> மரனொடு வரூஉம் கிளவி என்ப'' *(தொல்.:மர.:89)*

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

---

1) ''அகக்காழனவே மரமெனப்படுமே'' (தொல்.மர.:87)

2) ''புறக்காழனவே புல்லெனப்படுமே'' (தொல்.மர.:86)

புல் மற்றும் மரம் ஆகிய இரண்டு இனத்திற்கும் பொதுவான உறுப்புகளையும் தொல்காப்பியர் பின்வருமாறு சுட்டுகிறார் :

''காயே பழமே தோலே செதிளே
வீழோடு என்றாங்கு அவையும் அன்ன'' (தொல்.:மர.:90)

'காழ்' என்பதற்கு விதை என்ற பொருளும் உண்டு (பார்க்க பின்னால்) என்பதால் அகக்காழ் மற்றும் புறக்காழ் என்பனவற்றிற்கு வேறொரு விளக்கமும் கொடுக்கப்படுகிறது. விதைகள் முளைக்கும் போது முளைத்தாவரத்தில் (seedling) விதையிலைகள் மண்ணிற்கு வெளியே தோன்றினால் புறக்காழ் என்றும், மண்ணிற்கு உள்ளேயே இருந்தால் அகக்காழ் என்றும் விளக்கப்பட்டது (Epigeal and hypogeal germinations). ஆனால் இந்த வகைப்பாடு தாவரங்களைச் செயற்கையாக வகைப்படுத்தும் (artificial classification) வண்ணம் செயல்படும்.

இரண்டாவது வகையான வகைப்பாடு பூக்களின் அடிப்படையில் ஏற்பட்டது. கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ என்ற அடிப்படையில் ஏற்பட்ட இவ்வகைப்பாட்டின் விவரங்கள் பின்னால் கொடுக்கப்பட்டுள்ளன.

மூன்றாவது வகையான வகைப்பாடு தாவரங்களின் வளரியல்பு அடிப்படையில் ஏற்பட்டதாகும். சங்க இலக்கியத்தில் வளரியல்பு அடிப்படையிலான தாவர வகைப்பாடு தான் நிலவியது என்றும், பூ வகைப்பாட்டிற்கு முன்னதாகத் தாவர வளரியல்பான் அமைந்த வகைப்பாடே மேற்கொள்ளப்பட்டது என்றும் வாதிடப்படுகிறது (நெடுஞ்செழியன் 2005). இவ்வுலகத்தில் உள்ள தாவரங்கள் மரம், கொடி, புதர், நீர்த்தாவரம் என்று நான்கு வகைகளாகப் பகுக்கப் பட்டிருந்தமை தெளிவு. பூக்களின் அடிப்படையில் ஏற்பட்ட கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ என்ற வகைப்பாடே இந்த வளரியல்பு சார்ந்த வகைப்பாட்டின் அடிப்படையில் ஏற்பட்டதாகும். மரங்களின் பல பண்புகளில் உள்ளமைப்பு மிக முக்கியமானது. அகக்காழ் பெற்றவை மரங்கள் என்று ஏற்கனவே குறிப்பிடப்பட்டது. அகக்காழில் வைரக்கட்டை (heart wood) பெற்ற மரங்கள் 'பராரை' (அகம்.: 69) மரங்கள் எனப்பட்டன. இவை 'வன்மரங்கள்' என்றும் அழைக்கப்பட்டன. அதாவது அகக்காழில் ஒரு பகுதி (உள்பாதி) வைரக்கட்டையாக மாறியுள்ளது என்பதைப் பராரை என்ற சொல் குறிக்கிறது. 'என்புழி வயிரம்' எனும் திண்மையுடைய மரப்பொருள் உடைய அரைப் பகுதி பராரையாகும். பராரை நெல்லி, பராரைப் பாதிரி (நற்.:337), பராரை வேங்கை (நற்.:362), பராரைப் புன்னை (நற்.:145), பராரை வேம்பு (நற்.:218), முள்ளரை இலவம் (நற்.:105),

புல்லரை இரத்தி (நற்.:113) போன்ற சொற்றொடர்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுவது, மரங்களின் உள்ளமைப்பியல் பற்றிய தமிழரின் தெளிவான அறிவை எடுத்துக் காட்டுகிறது. 'காழ்' என்ற சொல்லும் வைரக்கட்டையைக் குறிக்கின்றது. (''வெளிறு இல் காழ்வேலம்'' நற்.:302; ''நறுங்காழ் ஆரம்'' நற்.:5). மரங்கள் மிக உயர்ந்து வளரும் தாவர வகைகள் என்பதை 'மீமிசைச்சாந்து' (நற்.:1), 'வான்பொரு நெடுஞ்சினை' (நற்.:3) என்ற சொற்றொடர்களும், பலகாலம் வாழும் தன்மை உடையவை என்பதை 'தொல் மூதாலம்' (குறு.:15) போன்ற சொற்றொடர்களும் சுட்டுகின்றன. 'சினை', 'கோடு' (= கோட்டு) என்ற இரண்டு சொற்களும் மரங்களின் கிளை களைக் குறிப்பிடுகின்றன[1].

வளரியல்பு அடிப்படையிலான தாவரங்களின் இரண்டாவது வகையைக் குறிக்கும் 'கொடி' என்ற சொல்லும் மிகப் பழமையானது. திராவிட மொழிக் குடும்பத்தில் இச்சொல் திரிந்தோ திரியாமலோ தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. ''புன்கொடி'' (மலை.:101), ''மென்கொடி'' (குறு.:186), ''நுண்கொடி'' (அகம்.:237) ஆகியவை மெல்லிய தண்டுடைய செடிவகைக் கொடிகளைக் (herbaceous climbers) குறிக்கின்றன. ''பரூஉக்கொடி'' என்ற சொற் றொடர் மரவகைத் தடித்த கொடிகளைக் (lianes; woody climbers) குறிப்பிடுகிறது. நிற அடிப்படையில் ''வெண்கொடி'' (ஐங்.:456), ''கருங்கொடி'' (மலை.:521), ''செங்கொடி'' (ஐங்.:25), ''பசுங்கொடி'' போன்றவைகளும் அறியப்பட்டுள்ளன. அடர்ந்து நெருக்கமாக வளரும் கொடியை 'பவர்' என்ற சொல் சுட்டும்[2]. பூக்களின் வகைப் பாட்டில் ''கொடிப்பூ'' சங்க இலக்கியத்தில் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஐங்குறுநூற்றில் மட்டும் ''கோட்டவும், கொடியவும் பூப்பல பழுனி'' (ஐங்.:414) என்ற வரி கொடிப்பூவைச் சுட்டுகிறது.

---

1) ''நெடுந்தண் ஆரத்து அலங்கு சினை'' (நற். : 292)
''வாங்கு சினை மருதம்'' (நற்.: 350)
''வேங்கைப் பெருஞ்சினை'' (நற்.: 168)
''நீடு சினைப் புன்னை'' (நற். : 375)
''நொச்சி... மாச்சினை'' (நற்.:246)
''இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை'' (நற்.:249).

2) ''புலிப்பொறி அன்ன புள்ளி அம்பொதும்பின் பனிப் பவர் மேய்ந்த'' (நற்.:391)
''அரில் பவர் பிரம்பின்'' (குறு.:364).

'செடி' என்ற சொல்லாட்சி தொல்காப்பியத்திலோ, சங்க இலக்கியத்திலோ காணப்படவில்லை. சூடாமணி நிகண்டு இச்சொல்லுக்கு நெருக்கம், தீமை என்ற பொருட்களை மட்டும் கொடுக்கிறது; தாவரங்களோடு இச்சொல்லைத் தொடர்பு படுத்தவில்லை. இலக்கிய வழக்கில் செடி என்ற சொல் தேவாரத்தில் தான் முதன்முதலில் இடம்பெறுகிறது [1]; இங்கும் இது தாவர வகையைச் சுட்டாமல் பிறவித் துன்பத்தைத்தான் சுட்டுகிறது. தேவாரத்தின் இன்னொரு இடத்தில் இச்சொல் இழிவு என்ற பொருளைக் கொடுக்கிறது [2]. திருவாலவாயுடையார் புராணத்திலும் செடி என்ற சொல் இழி மணத்தையே சுட்டுகிறது [3]. திருவாசகத்தில்தான் முதன்முதலில் பொழிலின் தாவரங்களின் தன்மையைச் சுட்டும் வகையில் 'செடி' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது [4]. ஆனால் இங்கும் செடி என்ற சொல் தாவரங்களின் நெருங்கியுள்ள தன்மையையே உணர்த்துகிறது. செடியினத் தாவர வகையைக் குறிக்கவில்லை. பிங்கல நிகண்டு செடி என்ற சொல்லால் செடிகள் அடர்ந்த புதரை முதன்முதலில் குறிப்பிடுகிறது. எனவே செடியினத்தைக் குறிக்க இச்சொல் பயன்பட்டது பிங்கல நிகண்டிலிருந்துதான் தொடங்கியது எனக் கொள்ளலாம்.

தாவரங்களின் மூன்றாவது வகையைக் குறிக்கும் 'புதல்' என்ற சொல்தான் செடியினத்தை மட்டும் குறிக்கும் சொல்லாகச் சங்க இலக்கியத்தில் வழக்கிலிருந்தது. புதற் பூ (= நிலப்பூ) நான்குவகைத் தாவர வளரியல்புகளில் ஒரு வகையின் பூவாகத் திகழ்ந்தது. ''புதல் புல் என்பன புறப்பிறப்பாகும்'' என்று திவாகர நிகண்டு குறிப்பிடுகிறது. புதல் எனும் சொல் பெரும்பாலும் செடிகளின் கூட்டத்தை உணர்த்துகிறது. ''நீர்வார் பைம்புதல்'' என்ற குறுந்தொகைத் தொடருக்கு விளக்கமளிக்கையில் சாமிநாதையர் (1955) ''செடிகளின் அடர்ந்து வளர்ந்த செறிவு'' தான் புதரெனப்படுகிறது என்று கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

'பூடு' என்ற சொல்லும் தாவரங்களின் வளரியல்போடு இணைத்துப் பேசப்படும் மற்றொரு இலக்கியச் சொல்லாகும் [5]. இது வளரியல்பால் புல்லொடு ஒத்தது என்றாலும் அதிலிருந்து வேறுபட்ட தரைத் தாவரமாகும் [6]. பூடு என்பதற்குச் சிறு செடி என்றும் பூண்டு

---

1) *''செடிபடு நோய் அடியாரைத் தீர்ப்பார் போலும்'' (சுந்.தே.ஃபா. 30ஃ7)*
2) *''செடி நாய் குரைக்க'' (சுந்.தே.ஃபா. 43ஃ7)*
3) *''செடிபடுந் துணியுடைச்சீரை'' (திருவால.பு.ஃ)*
4) *''செடிகொள் வான் பொழில் சூழ்'' (திருவா.ஃ 2ஃ5).*
5) *''ஓர் பூடும் ஆடுதலில்லை இப் புவியில்'' (கம்ப.ஃயுத்த சேதுபந்தன பா.ஃ63)*
6) *''புல்லாகிப் பூடாய்'' (திருவா.ஃ1ஃ26)*

என்றும் பொருள் உண்டு. பூண்டு என்பதின் இடைக் குறையாகப் பூடினைக் கொள்ளலாம் என்று நெடுஞ்செழியன் (2005) கருதுகிறார். இன்றும் தென்மாவட்ட கிராமங்கள் சிலவற்றில் பூண்டைப் பூடு என்று குறிப்பிட்டுப் பேசுவது உண்டு. எனவே, பூடு என்பதை அடியில் 'குமிழ் தண்டு' (bulb) பெற்ற வெங்காயம் போன்ற சிறிய செடித் தாவரங்களைக் குறிக்கும் சொல்லாக எடுத்துக் கொள்ளலாம்.

'பயிர்' என்ற சொல் சங்க இலக்கியத்தில் சில இடங்களில் கையாளப்பட்டுள்ளது [1]. தாவரங்களைச் சுட்டும் பொதுச் சொல்லாக வரதராசனும் (1964) (இவர் தாவர இயலைப் பயிரியல் என்று அழைப்பது பற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டது), தரைத் தாவரங் களைச் சுட்டும் குறிப்பிட்ட சொல்லாக நெடுஞ்செழியனும் (2005) கருதுகின்றனர். இன்று பயிர் என்ற சொல் வளர்க்கப்படும் வேளாண் தாவரத்தை (crop) குறிப்பிடுகிறது; இன்றைய வழக்கத்தின் அடிப்படை யில் பயிர் செடியாகவோ, கொடியாகவோ, மரமாகவோ இருக்கலாம்.

பூக்களின் அடிப்படையில் அமைந்த வகைப்பாட்டில் 'புல்' இடம் பெறவில்லை. எனினும் சங்க இலக்கியத்திலும் தொல்காப்பி யத்திலும் புல் தனித்த தாவர வகையாகவே சுட்டப்படுகிறது. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி வழங்கும் பல பொருள் களில் 'புல்' என்பது பெரும்பாலும் தாவர இனச்சுட்டாகவே பொருள் படுகிறது. அறுகம்புல், நெல், ஊகு (ஊகம்புல்), நரந்தம் (மணம்மிக்க புல்), தினை, வரகு போன்றவை குறிப்பிடப்பட்டும், புல் என்ற சொல் பொதுவாகவும் (பசும்புல், நுண்புல், முற்றாஇளம்புல், முளிபுல்) இலக்கியத்தில் காணப்படுகின்றது. தினையின் கதிர்நிலை 'குரல்' என்று அழைக்கப்பட்டது. (குலவுக்குரல், கொடுங்குரல், செழுங் குரல், வணர்குரல், கொழுங்குரல்).

கி.பி. 18ஆம் நூற்றாண்டில் வீரமாமுனிவர் தன்னுடைய சதுரகராதியில் எண்ணற்ற தாவரங்களின் பெயர்களையும், பொருள் விளக்கங்களையும், தொகுதிகளையும் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவர் மரங்களை வகைப்படுத்தியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. பல்வேறு வகை மரங்களுக்கு அவர் சுட்டிய பெயர்கள் பின்வருமாறு: இளமரம் - நாகு; காய்த்தமரம் - பலி, பலினம்; காய்க்காத மரம் - அவகேசி; பூவாது காய்க்கும் மரம் - கோளி, வானப்பத்தி, வானப்

1) ''அகல் வாய்ப் பைஞ்சுனைப் பயிர்கால் யாப்ப'' (நற். : 5:2)
''கம்பலத்தன்ன பைம் பயிர்த்தாஅம் (நற்.:24:4)
''பாஅல் பைம்பயிர் ஆரும் ஊரன்'' (குறு. : 181)
''தார் அணி புரவி தண்பயிர் துமிப்ப'' (நற். : 181:11)

பிரத்தி; பூத்துக் காய்க்கும் மரம் - வானப்பத்தியம்; ஒருமுறை காய்த்துப் படுமரம் - ஓடதி; அகவயிரம் உள்ள மரம் - ஆண்; புறவயிரம் உள்ள மரம் - பெண்; வயிர மில்லா மரம் - அலி, வெளிறு; உலர்ந்த மரம் - வானம்.

புல்லுருவி வகைத் தாவரங்களைப் பற்றி இங்கு குறிப்பிட வேண்டும். பொதுவாகத் தாவரங்கள் தமக்குத் தேவையான உணவைத் தாமே தயாரித்துக் கொள்ளும் ஆற்றல் பெற்றவை. ஆனால் புல்லுருவித் தாவரங்கள் பிற தாவரங்களைச் சார்ந்து அவற்றிலிருந்து உணவை ஈர்த்துக் கொள்கின்றன. இதற்குச் சான்றாகச் சந்தன மரத்தை நம் இலக்கியம் சுட்டுகிறது. சந்தன மரத்தின் இந்த இயல்பைப் பின்வரும் இலக்கிய வரிகள் காட்டுகின்றன (சாமி 1967).

''குறவர் கொன்ற குறைக் கொடி நறைப்பவர்
நறுங்காழ் ஆரம் சுற்றுவன அகைப்ப'' (நற். :5)

இதே போன்று கொடி வகையிலும் ஒரு தாவரம் நம் இலக்கியத்தில் புல்லுருவியாகக் கருதப்பட்டுள்ளது :

''செல்லுநீ ளாற்றிடைச் சேர்ந்தெழுந்த மரம் வாடப்
புல்லுவிட் டிறைஞ்சிய பூங்கொடி தகைப்பன'' (கலி. 3 :13)

பாலை நிலத்தின் பசுமை காணாத் தாவரச் சூழலில் இக்கொடி மட்டும் பூங்கொடி என்று அதன் வளமை தோன்றக் கூறப்பட்டுள்ளது. இது *Cassytha filiformis* என்ற பாலை நிலக் கொடிப் புல்லுருவியாக இருக்கலாம்.

தாவரங்களில் எளிமையான ஒருவகைத் தாவரங்களைக் குறிக்கும் 'பாசி' என்ற சொல் தொல்காப்பியத்தில் போர்த்துறையின் குறியீடாகப் பெயரளவில் மட்டுமே குறிப்பிடப்பட்டது [1]. ஆனால், சங்கப் பாடல்களில் பாசியின் இயல்பு ஓரளவு விவரிக்கப்பட்டுள்ளது. பாசியின் வழுவழுப்பை மலைபடுகடாம் விளக்குகிறது; குளத்தின் அருகில் நீர்க் கரையில் ஈரமான நிலப்பகுதி மீது பாசி படர்ந்திருக்கும் என்று இதன் பாடல் வரிகள் விளக்குகின்றன [2]. மேலும் 'வழும்பு' என்ற சொல் இவற்றின் வழுக்கும் பொருளான 'மியூகஸ்' (mucus) என்பதைக் குறிப்பதாகக் கொள்ளலாம். நீர்த் தரையில் மட்டுமின்றி

---

1) ''நீர்ச்செரு வீழ்ந்த பாசியும் அதா அன்று
ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்'' (தொல்.:புற.:11)

2) ''விழுந்தோர் மாய்க்கும் குண்டு கயத்து அருகா
வழும்பு கண் புதைத்த நுண்ணீர்ப் பாசி
அடிநிலை தளர்க்கும் அருப்பம்'' (மலை.:220-222)

நீரின் பரப்பிலும் பாசி மெல்லிய அடை போன்று மிதக்கும் என்பதை நற்றிணைப் பாடலும் [1], குறுந்தொகைப் பாடலும் [2], ஐங்குறுநூற்றுப் பாடலும் [3] குறிப்பிடுகின்றன. இலை போன்ற பாசிகள் இருப்பது பண்டைய தமிழருக்கு தெரிந்திருந்தது என்பதற்குச்சான்றாக ''ஊருண் கேணிப் பகட்டிலைப் பாசி'' (புறம்.:392) என்ற வரிகளையும் இழை போன்ற பாசிகள் இருப்பதற்குச் சான்றாக ''என்னரை முதுநீர்ப் பாசியன்ன உடைகளைந்து'' (புறம்.:390) மற்றும் ''பாசி வேரின் மாசொடு குறைந்த துன்னல் சிதார் நீக்கி'' (பொருநர்.:153) போன்ற வரிகளையும் கூறலாம்.

தாவரங்களில் மற்றொரு எளிமையான ஒருவகைத் தாவரங் களான காளான்கள் பற்றிய செய்திகளையும் சங்க இலக்கியம் கூறுகிறது. இவற்றை 'ஆம்பி' என்று சங்க இலக்கியம் பெயரிட் டுள்ளது. பெரும்பாணாற்றுப்படையில் [4] இது குடைக்காளானைக் குறிக்கிறது. பன்னாட்களாகச் சமைக்கப்படாத அடுப்பில் ஆம்பி தோன்றுவதைப் புறநானூறும் [5], சமையலறைச்சுவர்களில் கறையான் அரித்த புழுதிப் புற்றின் மேல் ஆம்பி தோன்றுவதைச் சிறு பாணாற்றுப்படையும் [6] சுட்டிக்காட்டுகின்றன.

ஈ) தாவர உள்ளமைப்பியல்

பண்டைய தமிழர் தாவரங்களின் உள்ளமைப்புப் பற்றிச் சிறந்த அறிவு பெற்றிருந்தனர். ஏற்கெனவே விளக்கியபடி, அகக்காழ் *(காழ்வை)* (heartwood) பற்றிய தெளிவான கருத்தினைக் கொண்டிருந்த

---

1) ''கிடங்கில் அன்ன இட்டுக் கரைக் கான்யாற்று
கலங்கும் பாசி நீர் அலைக் கலாவ'' (நற்.:65:2-3)

2) ''ஊருணன் கேணி உண்துறைத் தொக்க
பாசி அற்றே பசலைக் காதலர்'' (குறு.:399)

3) ''மாரிக் குளத்துக் காப் பாளன்னன்
தூவலின் நனைந்த தொடலை ஒள்வாள்
பாசி சூழ்ந்த பெருங்கழல்
தன்பனி வைகிய வரிக்கச்சினனே'' (ஐங்.:206)

4) ''ஆம்பி வான் முகை அன்ன கூம்பு முகிழ்
உறையமை தீந்தயிர் கலக்கி நுரை தெரிந்து'' (பெரும்பாண்.:157-158)

5) ''ஆடு நனி மறந்த கோடுயர் அடுப்பின்
ஆம்பி பூப்ப'' (புறம்.:164)

6) ''.........புல்லென் அட்டில்
காழ் சேர்முது சுவர்க்கணச்சிதல் அரித்த
பூழிபடர்ந்த புழற் காளாம்பி'' (சிறுபாண்.:132-134)

னர். மேலும் 'நார்' என்ற சொல் சங்க இலக்கியத்தில் காணப்படும் தாவர உள்ளமைப்பியல் தொடர்புடைய மற்றொரு சொல்லாகும். வேரினால் உறிஞ்சப்படும் நீரினையும் தனிமங்களையும் தாவரத்தின் பல்வேறு உறுப்புகளுக்குக் கடத்தும் திசுவான சைலம் (xylem) திசுவைத் தான் சங்கப் புலவர்கள் நார் என்று அழைத்தனர் என்று நெடுஞ்செழியன் *(2005)* கருதுவார். ஆனால், இச்சொல் இன்றும் வழக்கத்திலிருக்கும் நார்த் திசுவைக் (fibrous tissue) குறிக்கிறது என்பது என்னுடைய கருத்து. சங்க இலக்கியத்தில் 'நார்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ள வரிகளை [1] உற்று நோக்கினால் என்னுடைய கருத்து வலிமையானது என்று புலப்படும். பூக்கும் தாவரங்கள் அனைத்திலும் நீர் கடத்தும் திசுவான சைலம் காணப்படும்; அளவுதான் வேறுபடும். ஆனால், நார்த்திசு சைலம் திசுவோடும், உணவு கடத்தும் மற்றொரு தாவரத் திசுவான புளோயத்தோடும் (Phloem) தொடர்பு கொண்டது என்பதும், அதன் அளவு தாவரத்திற்கும், தாவர உறுப்பிற்கும் ஏற்றவாறு குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் காட்டும் என்பதும் தற்கால உண்மைகள்; இவற்றையே சங்க இலக்கிய வரிகளும் சுட்டுகின்றன [2]. நீர்த் தாவரங்கள் காற்றுத்திசு (aerenchyma tissue) கொண்ட உள்துளைகளைக் கொண்டிருத்தலை

''நீர்வளர் ஆம்பல் தூம்புடைத் திரள்கால்'' (நற்.:6) என்றும்,

''கழை கண்டன்ன தூம்புடைத் திரள்கால்'' (அகம்.:176)

என்றும் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது. நீர்வாழ் செடிகளின் தண்டு, இலை போன்றவற்றில் காற்றுத் துளைக் குழாய்கள் (தூம்பு) இருப்பதைப் பல பாடல்கள் குறிப்பிடுகின்றன [2].

---

1) ''சுரம்புல் லென்ற ஆற்ற அலங்கு சினை
நாரில் முருங்கை நவிரல் வான்பூ'' (அகம்.:1)
(நார்த்திசு இல்லாத மெல்லிய தண்டு கொண்ட முருங்கை).
''பிடி பிளந்திட்ட நாரில் வெண்கோட்டுக்
கொடிறு போல் காய வாலிணர்ப் பாலை'' (நற்.:107)
(பாலை மரத்தின் பட்டையில் (= புளோயம் திசு) நார் மிகுந்து காணப்படும். ஆனால், யானை இதன் பட்டையை உரித்து விட்டதால் நாரில்லாத பாலையாக மாறிவிட்டது)

2) ''கணைக்கா லாம்ப லமிழ்து நாறு தண்போது'' (நற்.:230)
''நீர்வள ராம்பல் தூம்புடைத் திரள் கால்'' (நற்.:6)
''கழை கண் டன்ன தூம்புடைத் திரள் கால் (அகம்.:176)
''வன்தூம்பு வள்ளை மயக்கி'' (அகம்.:46)

உ) ஒளிநாட்டம்

ஒளி நாட்டம் பற்றிய செய்திகள் தமிழ் இலக்கியத்தில் காணப்படுகின்றன (குறு.:315; பெருங். 2:414-415; சீவ.சி.:461; கல்.:65:14-15; வெங்.:352). நெருஞ்சிப் பூ மலர்ந்ததும் சூரியனை நோக்கியே திரியும். சூரியன் செல்லும் திசை நோக்கி நெருஞ்சிப் பூவும் வளையும்[1].

ஊ) பூக்கள் பற்றிய அறிவியல் செய்திகள்

பூக்கள் பற்றிய அறிவியல் செய்திகளை மிகச் சிறப்பாகத் திரட்டிய பெருமை கோவை இளஞ்சேரனையே (1982) சேரும் என்பதில் எவ்விதக் கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. கீழ்வரும் செய்திகளில் பல அவருடைய நூலிலிருந்து திரட்டியவை என்ற கூறினால் அது மிகையாகாது.

தாவரங்களின் முக்கிய உறுப்பு 'பூ' ஆகும். பூ இல்லையேல் தாவர இனப்பெருக்கம் இல்லை; தாவரங்களில் புதிய பண்புகள் தோன்ற வாய்ப்பில்லை. 'பூ' என்பது இயற்பெயர் மட்டுமன்றிப் பொதுப் பெயரும் ஆகும் (கோவை இளஞ்சேரன் 1982). பூவிற்கு 'மலர்' என்ற வேறொரு சொல் பயன்படுத்தப்பட்டாலும் பூ என்ற சொல்லே மிகவும் பொருத்தமானது. மலராத பூக்கள் (cleistogamous flowers) பல உள்ளன என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது; எனவே, மலர்ந்த பூக்கள் தான் மலர்கள். தொல்காப்பியத்திலும் பூ என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது; இச்சொல் ஏழு இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது[2]. 'மலர்' என்ற சொல் தொல்காப்பியத்தில் ஒரே ஒரு இடத்தில் மட்டும் காணப்படுகிறது : ''மலர் தலை உலகத்து''; அதுவும் பூவைக் குறிப்பதற்காக அல்ல. 'அரும்பு', 'நனை', 'அலர்' போன்ற சொற்களும் தொல்காப்பியத்தில் பயன்படுத்தப்பட்டாலும், அவை பூவிற்கு இணையானவையல்ல; பூவிற்கு இணையாகவும் பயன்படுத்தப்படவில்லை (கோவை இளஞ்சேரன் 1982). ''பூவென்

---

1) ''சுடரொடு திரிதரும் நெருஞ்சி'' (அகம்.:336)
''பாழூர் நெருஞ்சிப் பசலை வான்பூ ஏர்தரு
ஏர்தரு சுடரின் எதிர்கொண்டா அங்கு'' (புறம்.:155)

2) ''பூ என் ஒரு பெயர்'' (தொல்.: எழு.: 269) : ''எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்'' (தொல்.: பொரு.:21) : ''மாபெரும் தானையர் மலைந்த பூவும்'' (தொல்.: புற.:5); ''வண்டே இழையே வள்ளி பூவே'' (தொல்.:கள.:4); ''அடிசிலும் பூவும் தொடுதற் கண்ணும்'' (தொல்.:கற்பு.:5); ''சினையே, குழையே, பூவே, அரும்பே'' (தொல்.:மர.:89); ''பூப்பின் புறப்பாடு'' (தொல்.:கற்பு.:46). (பூப்பு - மகளிர் பருவமுறுதல் எனும் பொருளில்...)

ஒரு பெயர்'' என்று குறிப்பிடும் முகத்தான் தொல்காப்பியர் பூவுறுப்புக்கு முதன்மை தந்து குறிப்பிடுகிறார்.

i) பூவின் வளர் பருவங்கள்

பூவின் வளர் பருவங்களைச் சங்கத்தமிழ் மக்கள் நன்கு அறிந்திருந்தனர். ''வண்துடுப்பாய் பாம்பாய் விரலாய் வளை முறியாய் வெண் குடையாம் தண் கோடல்'' என்ற கோடல் பூவின் வளர்ச்சி நிலைகளை விவரிக்கும் இப்பாடல் வரிகள் இதனை வலியுறுத்துகின்றன. வளர் பருவங்கள் ஏழாக அறியப்பட்டன: நனை, அரும்பு, முகை, போது, மலர், அலர் மற்றும் வீ. எனினும், இந்த ஏழு பருவங்களும் அனைத்துத் தாவரங்களின் பூக்களிலும் காணப்படுவதில்லை. ஒருசில பருவங்கள் தவிர்க்கப்படுகின்றன. 'நனை' என்பது தோன்றல் அல்லது பிறப்புப் பருவமாகும்[1]. 'அரும்பு' பூவின் இரண்டாவது வளர்ச்சிப் பருவமாகும். 'முகை' மூன்றாவது வளர்ச்சிப் பருவம். இப்பருவம் பூவின் மணத்திற்கு திறப்பு விழா பருவமாகும்[2]. ''குவி முகை'', ''குவிமுகிழ்'', ''கொழு முகை'' என்றெல்லாம் இப்பருவம் இலக்கியத்தில் கூறப்படும். முகை, பூவின் மணக்க ஆரம்பிக்கும் பருவம் என்பதால் தான் இளங்காளையரும் கன்னியரும் ''முகை பருவத்தர்'' எனப்பட்டனர் (பரி.பா.:10:12). 'போது' பூவின் நான்காவது வளர் பருவமாகும்[3]. முகை திறக்கும் நிலையைப் 'போது' குறிக்கும். அதாவது, முகைக்கும் மலருக்கும் இடைப்பட்ட பருவம். இப்பருவத்திற்கு 'பொதி', 'புகில்', 'போகில்' போன்ற வேறு சொற்களும் சங்க இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. பூவின் ஐந்தாவது வளர் பருவம் 'மலர்' ஆகும். பூ விரிந்து காணப்படும் நிலையைக் குறிப்பது மலர்[4]. வளம் என்பதைக் குறிக்கும் 'மல்' என்ற வேர்ச் சொல்லில் (தொல்.சொல்.303) இருந்து மலர் என்ற சொல்

---

1) *''நனையினால் தோன்றும் நறா'' (நான்.க.:50)*
''நனைமகிழ்'' (தோன்றிய மன மகிழ்ச்சி) (சிறுபாண்.: 67 நச்சர் உரை)
''நனை உறுநறவின்'' (பதிற். 51:88)
''நனை அமை கள்ளின்'' (பதிற். 12:18)
''வள நனையின் மட்டு என்கோ'' (புறம்.:396:16)

2) *''.............. கொடி முல்லை*
முகை தலை திறந்த நாற்றம்'' (குறு.: 342:1,2)

3) *''போதின் முகை'' (கலி.:17:15)*
''நாட் போது'' (சிறுபாண்.:183)

4) *''போது அவிழ் புதுமலர்'' (மது. கா.: 564)*

தோன்றியதாகக் கோவை இளஞ்சேரன் (1982) கருதுகிறார். இந்த வளர் பருவத்தில் தான் பூ மகரந்தச் சேர்க்கைக்குத் தயாராகிறது. இது ஆங்கிலத்தில் anthesis என்று சொல்லப்படும் நிகழ்வு (அதாவது மகரந்தத்தை வேறு பூவுக்கு அனுப்புவதற்கும், வேறு பூவிலிருந்து மகரந்தத்தைப் பெறுவதற்கும் ஏற்ற மாற்றங்களைக் காட்டும் நிலை') ஆகும். இதனால்தான் 'வளத்தை' குறிக்கும் மல் என்ற வேர்ச் சொல்லின் அடிப்படையில் 'மலர்' என்ற சொல் கொடுக்கப் பட்டிருக்கலாம் என்பது என்னுடைய கருத்து. மலரினைப் பூச்சிகள். மொய்க்கும் பருவமும் இதுதான்.

பூவின் ஆறாவது வளர் பருவம் 'அலர்' ஆகும். இந்நிலையில் மகரந்தப் பையில் இருந்து மகரந்தங்கள் வெளியேற்றப்பட்டு, வேறு பூவின் மகரந்தங்கள் மகரந்தச் சேர்க்கை மூலம் சூலகத்தை அடைந்து அதனைக் கருவுறச் செய்யும் நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இதனை post-anthesis நிலை என்று ஆங்கிலத்தில் கூறுவர். பூவின் ஏழாவது மற்றும் கடைப் பருவம் 'வீ' என்று அழைக்கப்படும். பூக்காம்பி லிருந்து கழன்று பூவிதழ்கள் விழுதலைக் குறிக்கும் பருவம் இது [1]. வீ என்றால் நீங்குதல், விழுதல், ஒழிதல் எனப் பொருள் [2]. எனினும் 'வீ' பருவம் பல பூக்களில் உண்மையில் வீழும் பருவமல்ல என்பதைத் தமிழர் உணர்ந்திருந்தனர். பொதுவாக பூவின் இதழ்கள் வீழ்ந்தாலும், கருவுற்ற சூலகம் புதிய வீரியத்தோடு வளர ஆரம்பிக்கும் நிலையை 'வீ' உணர்த்துகிறது. எங்களுடைய ஆய்வுக்கூடம் உட்பட, உலகின் ஒருசில தாவரவியல் ஆய்வுக் கூடங்களில் 'வீ' நிலைப் பூக்கள் வேறுசில முக்கிய நிகழ்வுகளிலும் ஈடுபடுகின்றன என்பதைத் தெளிவாக்கி உள்ளன. இப்பூக்கள் அதன் பூங்கொத்திலோ அல்லது அதே தாவரத்தில் அருகாமையில் உள்ள பூங்கொத்திலோ இன்னும் மகரந்தச் சேர்க்கை அடையாத மலர்களுக்குப் பூச்சிகளை ஈர்க்கும் பண்புகளைத் தொடர்ச்சியாகவோ, புதிதாகவோ பெறுகின்றன என்பது ஆய்வுகள் மூலம் தெளிவாக்கப்பட்டுள்ளது. 'வீ' பூக்கள் (மகரந்தச் சேர்க்கைக்குப் பின்பு கூட) தேனை இரண்டாவது முறையாக மீண்டும் சுரக்க ஆரம்பிக்கலாம். ஏற்கனவே பெற்றிருந்த மணத்தைத் தொடர்ந்து பெற்றிருக்கலாம்; அல்லது புதிய

---

1) *''கழன்று உகு வீ'' (புறம்.: 307:5)*
''குவிகுழைக் கழன்ற
ஆலி ஒப்பின் தூம்புடைத்திரள் வீ'' (அகம்.:95)

2) *''பூவும் ஒழிவும், நீக்கமும், மடிவும், புள்ளின் பெயரும்,*
சாவும் வீயே''. (பிங்.நி. 4089)

மணங்களைப் பெறலாம். பூவிதழ்களின் நிறத்தைத் திடீரென மாற்றிக் கொள்ளலாம். இத்தகைய நிகழ்வுகள் அனைத்தும் பல பூக்களில் மகரந்தச் சேர்க்கைக்குப் பின்பு நடைபெறுகின்றன என்பதைத் தற்போதைய ஆய்வுகள் எடுத்துக் கூறினாலும் (Krishnamurthy et al. 1996), பண்டைய தமிழர் இவற்றை உற்றுநோக்கல் மூலம் அறிந்திருந்தனர் என்பது வியப்பளிக்கிறது. இக்கருத்தைச் சங்க இலக்கியச் சொற்றொடர்கள் பல வலியுறுத்துகின்றன[1].

ii) பூவின் உறுப்புகள்

கோவை இளஞ்சேரன் *(1982)* பூவின் உறுப்புகளாகப் பின்வருபவனவற்றைக் குறிப்பிடுகிறார்ஃ காம்பு, புல்லி, அல்லி, சூலகம், மகரம், தாது மற்றும் தேன். இவற்றில் 'மகரம்' என்பது மகரந்தப் பைகள் (anther) கொண்ட மகரந்தத் தாள்களை (stamens) குறிக்கும் என்று கொள்ளவேண்டும். இந்த பட்டியலில் உள்ள 'தாது' ஒரு உறுப்பு (organ) அல்ல; அதே போன்று தேனும் உறுப்பு அல்ல என்பதனையும் மனத்தில் கொள்ளவேண்டும். தேனை உருவாக்கும் தேன் சுரப்பிகளை, அதுவும் சிறப்பாக அமைந்திருந்தால் மட்டுமே, உறுப்புகளாக ஏற்றுக்கொள்ளலாம் என்பதையும் மனதில் நிறுத்திக்கொள்ள வேண்டும். மேற்கூறிய (தேன், தாது தவிர்த்த) அனைத்து உறுப்புகளும் எல்லா பூக்களிலும் காணப்படுவதில்லை. இவை அனைத்தும் இருந்தால் 'நிறைப் பூ' என்றும், அல்லாமல் இருந்தால் 'குறைப்பூ' என்றும் அழைக்கப்படும் என்று கோவை இளஞ்சேரன் *(1982)* கருதினாலும், தற்காலத் தாவர அறிவியல் உண்மைகளின்படி புல்லி, அல்லி, சூலகம் மற்றும் மகரந்தத் தாள் கொண்ட பூக்கள் நிறைப் பூக்களாகும்; இவற்றில் ஏதாவது குறைந்தால் குறைப் பூக்களாகும்.

பூவின் முதல் உறுப்பு காம்பு ஆகும். இது பூவைத் தாங்கும் செயலை மேற்கொண்டுள்ளது. காம்பு, 'தாள்', 'தண்டு', 'கால்' என்ற

---

1) ''நாறு கமழ் வீயும்'' (பரி.ஃ 8ஃ99) (=வீ நிலையிலும் மணம் கமழ்தல்)
''செல் நீர் வீவயின் தேன் சோர'' (கலி.ஃ 41ஃ11) (= வீ நிலையிலும் தேன் பெற்றிருத்தல்)
''வேங்கையின் ஒள்வீ'' (பரி.ஃ16ஃ42) (= வீ நிலையிலும் பூக்கள் வண்ணம் பெற்றிருத்தல்)
''புதுவீ ஞாழலோடு'' (நற்.ஃ160)
''பொன்மலர் புதுவீ'' (ஐங்.ஃ208)
''பைங்கொடி முல்லை மென்பதப் புதுவீ'' (அகம்.ஃ74) (கடைசி மூன்று வரிகளிலும் புது வீரியம் கொண்ட வீ என்ற கருத்து சொல்லப்படுகிறது)

சொற்களாலும் தமிழ் இலக்கியத்தில் சுட்டப்படுகிறது [1]. 'புல்லி' என்ற புறஇதழ் இரண்டாவது பூ உறுப்பாகும் [2]. புல்லி என்ற சொல் 'புல்லுதல்' என்பதிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் 'தழுவுதல்', 'அணைத்தல்' ஆகும். பூவின் மற்ற உறுப்புகளைத்தழுவி அணைப்பதால் புல்லி என்ற பெயர் பெற்றது. புல்லி இதழ்கள் பொதுவாக பசுமை நிறம் கொண்டவை; வேறு நிறமற்றவை. இவற்றிற்கு மணமும் கிடையாது [3]. புல்லி பூவிற்கு இன்றியமையாத உறுப்பு (essential part) அல்ல என்ற கருத்தினைப் பண்டைய தமிழ் மக்கள் கொண்டிருந்தனர் [4]. இக்கருத்து இன்றும் தாவரவியல் அறிஞர்கள் ஒரு சிலரிடையே நிலவுகிறது. தற்காலத் தாவரவியல் ஆய்வுகளின்படி கனி வளர்ச்சியில் புல்லி இதழ்கள் பெரும்பங்கு வகிக்கின்றன; தொடக்கத்திலேயே புல்லி நீக்கப்பட்ட பூக்களில் கனி வளர்ச்சி சரியாக நடைபெறுவதில்லை என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது.

அல்லி பூவின் அக இதழாகும் [5]. பூக்களுக்கேற்ப அல்லி பல்வேறு வண்ணங்களைக் கொண்டது. மணம் கொண்டது. மகரந்தச் சேர்க்கையில் உதவும் பூச்சிகளை ஈர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. பெரும்பாலான பூக்களில் அல்லியும், புல்லியும் இனம் காணும் அளவுக்கு நிறத்தில், உருவத்தில், மணத்தில், மென்மையில் வேறுபட்டுக் காணப்படும். ஆனால் பல தாவரங்களில், குறிப்பாக, ஒரு விதையிலைத் தாவரங்களில் பூவிதழ்களை அல்லி என்றும் புல்லி என்றும் பகுத்தறிய முடியாது. எல்லா பூவிதழ்களும் நிறத்திலும், உருவத்திலும், மணத்திலும் ஒத்திருக்கும். இவை பூவிதழ்கள் (perianth) என்று தற்காலத் தாவரவியலாரால் அழைக்கப்படுகின்றன.

---

1) *''அனிச்சப் பூ கால் களையாள்'' (குறள்: 1115)*
''காம்பு வேய் மலர்ந்தாள்'' (சூடா.நி. மரப்பெயர்: மகர வெதுகை 4:4)
2) *''புல்லி புறவிதழ்'' (பிங். நி. 2815)*
3) *''நாறாத்தகடே போல் நன்மலர் மேல் பொற்பாவாய்'' (நாலடி.:266)*
(இங்கு நாறாத் தகடு என்பது மணமில்லாத புல்லியைக் குறிக்கிறது)
4) *''நெல்லுக்கு உமியுண்டு; நீருக்கு நுரையுண்டு*
புல்லிதழ் பூவிற்கும் உண்டு - என்று
நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லார் எனினும் அடக்கிக்கொளல் வேண்டும்'' (நாலடி.:221)
(இங்கு உமி, புல்லிதழ் ஆகியவை வேண்டாதவர்க்கும் விரும்பத் தகாதவர்க்கும் ஒப்பாக்கப்பட்டுள்ளன)
5) *''அல்லி அக இதழ்'' (பிங்.நி.:2841)*
''அல்லியே அகவிதழ்ப்பேர் அணைந்திடும் புறவிதழ்ப்பேர் புல்லியே'' (சூடா.நி.: மரப்பெயர். 51)

தமிழிலக்கியத்தில் இவை 'அதழ்' என்ற சொல்லால் குறிப்பிடப் பட்டுள்ளன[1]. பூவின் இதழ்கள் (புல்லி, அல்லி, அதழ், பூவடி இதழ் ஆகிய நான்கும் சேர்த்து) அனைத்தும் ஏழு வகைகளால் ஆனவை என்று கோவை இளஞ்சேரன் (1982) இலக்கிய ஆதாரங்களுடன் வலியுறுத்துகிறார். அவையாவன: இதழ், அதழ், தோடு, ஏடு, மடல், தளம் மற்றும் பாளை. 'இதழ்' மிக மெல்லியது. 'தோடு' இதழைவிடச் சற்று தடிப்பானது. ஆனால் மென்மை குறையாதது. எடுத்துக்காட்டு: கொன்றை[2]. 'ஏடு' தோடைவிடச் சற்று தடிப்பானது. 'மடல்'[3] நீட்சியும், மடிப்பு அமைப்பும் கொண்டது. நடுவில் ஈர்க்குடையது. இம் மடல் முடங்கல் எழுதப் பயன்படுத்தப்பட்டது. 'தளம்' தட்டையானது; வளப்பமானது; இது அடிப்படையில் புறவிதழாகும்[4]. 'பாளை' மிகத் தடிப்பானது; மென்மையற்றது; மொத்தப் பூங்கொத்தையும் மூடியிருப்பது.

மகரம் என்ற மகரந்தத் தாள் பூவின் ஆண் உறுப்பாகும். மகரந்தப்பைகளும் (anthers) அவற்றைத் தாங்கும் மகரந்தத் தாள் கம்பியும் (filament) கொண்ட கூட்டமைப்புதான் மகரந்தத்தாள். மகரந்தம் அல்லது மகரந்தத் தூளைத் தமிழ் இலக்கியம் 'தாது' என்று கூறும்[5]. தாது பொதுவாகப் பொன்னிறம் கொண்டது. தாது என்பதற்கு வேறு பெயர்களும் உண்டு[6].

சூலகம் பூவின் பெண் உறுப்பாகும். இதன் வேறு பெயர்கள் பொகுட்டு, கன்னிகை போன்றவையாகும்[7]. கருவுற்ற சூலகம் கனியாகவும், சூலகத்தில் உள்ள சூல்கள் விதைகளாகவும் வளர்ச்சியடைகின்றன.

பூச்சிகளாலும், பறவைகளாலும் மகரந்தச் சேர்க்கை அடையும் பூக்களில் தேன் காணப்படும். எல்லாப் பூக்களிலும் தேன் இருக்க வேண்டும் என்ற நியதி கிடையாது. தேனின் மற்ற பெயர்கள் 'நறை',

---

1) *''ஞெலிபுடன் நிரைத்த ஞெகிழ் அதழ்க்கோடலும்'' (கலி.:101:4) (கோடல் என்ற காந்தள்மலரில் இருப்பது உண்மையான அதழ்) ''பூங்கொடி அவரைப் பொய் அதழ்'' (அகம்.:108:8) (அவரைப் பூவில் காணப்படுவது பொய் அதழ் ஆகும்)*
2) *''தோடு ஏறும் மலர்க் கொன்றை'' (அப்.: திருநல்லூர்:3)*
3) *''மடல்பெரிது தாழை'' (வாக்கு.: 12)*
4) *''தள வள முகைகொள்'' (சீவ.சி.:751)*
5) *''புதுமலர் கோங்கின் பொன்னெனத் தாது ஊழ்ப்ப'' (கலி.:33:12)*
6) *''கோசரம் மகரம் சிதரே கொங்கு கேசரம் துணரிணர் இளர் மலர்த்தாதே'' (பிங்.நி.: 2809)*
7) *''பொகுட்டே கன்னிகை பூவினுள் கொட்டை'' (சேந்.திவா.: மரம்)*

'நறா', 'கள்', 'மட்டு', 'தேறல்' போன்றவையாகும். நீர்மத்தேனுக்கு நறா, நறை என்ற சொற்களும், சற்று அடர்த்தியான தேனுக்கு மட்டு, மது என்ற சொற்களும், மிகவும் அடர்த்தியான தேனுக்குத் 'தேநெய்' என்ற சொல்லும் பயன்படுத்தப்படுகின்றன. 'தேறல்' என்பது நாட்பட்ட 'சுள்' என்ற சுவையுடைய அடர்த்தியான தேனாகும்; இது ஓரளவுக்குப் புளிக்கும். இத்தகைய தேனில் உள்ள சர்க்கரைப் பொருள் நொதித்தல் (fermentation) மூலம் அசிடிக் அமிலம் போன்ற அங்கக அமிலங்களாக மாற்றப்படுவதால் புளிப்போடு கலந்த தேள் கொட்டிய உணர்வு ஏற்படுகிறது[1].

iii) பூவின் பண்புகள்

பூவின் பண்புகள் பத்து என்று கோவை இளஞ்சேரன் *(1982)* பட்டியலிட்டுள்ளார் : மணம், மென்மை, வண்ணம், தூய்மை, தண்மை, சுவை, ஒளி, எழில், கவர்ச்சி மற்றும் மங்கலத் தன்மை. இவற்றில் பூவின் இயல்பான தன்மைகளாக (natural traits) மணம், மென்மை, வண்ணம், தண்மை, சுவை போன்றவற்றை மட்டும் கூறலாம். ஏனைய அனைத்தும் பெறப்பட்ட அல்லது தருவிக்கப்பட்ட (derived) பண்புகள் ஆகும் என்பது என்னுடைய கருத்தாகும். இரண்டாவது வகைப் பண்புகளை உணர்வதும், உணராது இருத்தலும் பூக்களை நோக்குபவர்களைப் பொருத்தது.

மணம் பூக்களுக்கே உரித்தான முக்கியப் பண்பாகும். பழந் தமிழில் இது 'நாற்றம்' எனப்பட்டது[2]. பிற்கால வழக்கில் 'நாற்றம்' என்ற சொல் விரும்பத்தகாத மணத்தை மட்டும் சுட்டுவதாக

---

1) *''தேட் கடுப்பன்ன நாட்படுதேறல்'' (புறம்.:292:16)*
''பாம்பு வெகுண்டன்ன தேறல்'' (சிறுபாண்.:237)
''அரவு வெகுண்டன்ன தேறலொடு'' (புறம்.:376:16)

2) *''நாற்றம் உரைக்கும் மலர் உண்மை'' (நான்.க.:48)*
''இணர் ஊழ்த்தும் நாறா மலர் அனையர்'' (குறள்:650)
''தீயினுள் தெறல்நீ: பூவினுள் நாற்றம் நீ'' (பரி.: 3: 63)
''நின் நாற்றமும் ஒண்மையும் பூவை உள'' (பரி.: 4:29)
''பூவுற்ற நாற்றம் போல் நின்றார் தாமே'' (அப்.தே.:ஆலங்காடு:4)
''உற்ற ஆக்கையின் உறுபொருள்
நறுமலர் எழுதரு நாற்றம்போல்'' (திருவா.:அதிசயப்பத்து)
''பூவின் நாற்றம் போன்றுயர்ந் தெங்கும்
ஒழிவற நிறைந்து'' (திருவா.: திருவண்டம்:115)
''பூவினுள் நாற்றமும் போன்றுளன் எம்மிறை'' (திருமந்.:2639)
''மாமலர் நாற்றம் போல் மணிமேகலைக்கு
ஏது நிகழ்ச்சி எதிர்ந்துளது'' (மணி.: மலர்வனம்: 3, 4)

மாறிவிட்டது. இது எவ்வாறு, வரலாற்றின் எந்த காலகட்டத்தில் ஏற்பட்டது என்பது தெளிவாகத் தெரியவில்லை. மணம் இல்லா மலரால் பயனில்லை. நாற்றத்திலிருந்து 'நறு', 'நறிய' என்ற சொற்கள் பெறப்பட்டன[1]. பூவின் நாற்றம் பூவினால் மேற்கொள்ளப்படும் விளம்பர உத்தியாகும். இந்த உத்தி மூலம் மகரந்தச் சேர்க்கை செய்ய உதவும் பூச்சிகளைப் பூவை நோக்கி ஈர்க்க முடிகிறது. பூச்சிகளால் மகரந்தச் சேர்க்கை நடைபெறும் பெரும்பாலான மலர்கள் நாற்றத்தைப் பெற்றுள்ளன. இந்த நாற்றங்களை ஏற்படுத்தும் வேதியப் பொருட்களை பூவில் காணப்படும் சிறப்பான சுரப்பிகள் சுரக்கின்றன. மனிதனுக்குப் பிடிக்கக் கூடிய மணப் பொருட்களை மட்டுமே எல்லாப் பூக்களும் உற்பத்தி செய்வதில்லை. பூக்களில் உண்டாக்கப்படும் ஒருசில நாற்றப் பொருட்கள் மனிதனுக்கு ஒவ்வாத மணத்தைக் கொடுக்கின்றன. ஆனால் இவை பூச்சிகளுக்கு, குறிப்பாக ஈக்களுக்கு (flies), இசைவானவை.

மென்மை, பூவின் வெவ்வேறு வளர்நிலைகளில் மட்டுமன்றி, முதிர்ச்சியடைந்த பூவின் எல்லா உறுப்புகளும் தனித் தனியாகவும், ஒட்டு மொத்தமாகவும் பெற்றுள்ள பண்பாகும்[2]. இப்பண்பினைப் பண்டைய தமிழர் நன்கு அறிந்திருந்தனர். ஒருசில பூக்களும், பூவின் பாகங்களும் மென்மையிலும் மென்மையானவை. மிகுந்த மென்மைப் பண்பைத் 'துய்' என்ற சொல்லால் சுட்டுவர்[3]. அனிச்ச மலர் மோந்தாலே குழையும் மென்மையுடையது[4].

வண்ணம் பூவின் சிறப்புப் பண்புகளில் மிக முக்கியமானது. 'பூ' என்ற சொல்லுக்கே வண்ணம் என்ற பொருள் வழங்கப்பட்ட தென்பதை அறிகிறோம்[5]. பூக்கள் பல்வேறு வண்ணங்களில்

---

1) ''நறிய மலர் பெரிதும் நாறாமை இன்னா'' (இன்.நாற்.:37)
''ஒளிர் நறுமலரின் ஊடே மனத்தினை உண்டு'' (அழ.சி.: தென்றல்:3)

2) ''மென்பூ மேனி'' (மணி: 29:34); ''மென்முகை'' (குறு.: 254); ''மென் பொகுட்டு'' (பரி.: 11); ''மெல்இதழ்'' (நற்.:48); ''மென்தோடு'' (நற்.:400); ''மென்மலர்'' (கலி.:103); ''மென்பதப் புதுவீ'' (அகம்.:74); ''மென்பூஞ் செம்மல்'' (மது.கா.:685); ''மென்பூ வாகை'' (அகம்.:136); ''நன்னர் மெல் இணர்'' (மலை.:428); ''மீன்கண்டன்ன மெல் அரும்பு ஊழ்த்த'' (அகம்.:10:2)

3) ''துய்ம் மலர் உதிர'' (குறு.:10) ''துய்வீ வாகை'' (பதிற்.:43)

4) ''நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம் வீழ்பவள்'' (குறள்:1111)
''அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்'' (குறள் : 1120)

5) ''பூசும் சாந்தும் கலையும் மணியும்
பூவுறு நிறம் எனப் பாத்தனர் கொளலே'' (இலக்.வி.:512)

காணப்படுகின்றன. இதன் காரணமாக்வே கபிலரும் ''வண்ண வண்ணத்த மலராய்பு விரை'' (குறி.பா.:114) என்று வண்ணங்கூட்டி முடித்தார். பூவின் வெவ்வேறு உறுப்புகளும் வண்ணங்களில் வேறுபடலாம் என்பதைத் தமிழர் அறிந்திருந்தனர். புறஇதழ்கள், பாளை போன்றவை பொதுவாகப் பசுமைநிறம் கொண்டவை[1]. அல்லியும் பூவிதழும் (=அதழ்) பல வண்ணங்களைப் பெற்றவை. கருநீல மலர்களைக் கொண்டவை நொச்சி, காயா, கருங்குவளை போன்றவை[2]. திருமாலுக்கும் கொற்றவைக்கும் காயாம்பூ நிறத்தை ஒப்பிடுவர். தாமரை, செங்கழுநீர், மாதுளம்பூ போன்றவை சதுரங்கச் செம்மை நிறத்தையும், திலகம், கவிர் மலர் ஆகியவை குருவிந்த செம்மை நிறத்தையும், செவ்வலரி, இலவமலர் போன்றவை சௌகந்தி செம்மை நிறத்தையும், குராமலர் மற்றும் கோவாங்கு செம்மை நிறத்தையும் கொண்டவை. சிவன், முருகன், அபிராமி போன்ற கடவுளருக்கு முறையே செச்சை மாமலர், செங்காந்தள் மற்றும் மாதுளம்பூ போன்றவற்றை ஒப்பிடுவர். வெண்டாமரை, வெண் கடப்பம்பூ, புன்னை, முல்லை, மல்லிகை போன்றவை வெண்மை நிறப்பூக்களைக் கொண்டவை. கழிமுள்ளி நீலநிற பூக்களைப் பெற்றது. செருந்தி பொன் போன்ற மஞ்சள்நிறப்பூவைப் பெற்றது. இச்செய்திகள் அனைத்தையும் இலக்கியம் கூறுகின்றது.

தண்மை பூவின் மற்றொரு முக்கியப் பண்பாகும். குளிர்ச்சியைக் குறிப்பது 'தண்மை'. பூக்களைக் காண்பதும், தொடுவதும், அணிவதும், நுகர்வதும் குளிர்ச்சியைத் தரும்[3]. குளிரி என்ற நீர்ச்சேம்பு மலர்தண்மையினாலேயே இப் பெயரைப் பெற்றது என்பார் கோவை

---

1) *''கமுகின் பாளையம் பசும் பூ'' (பெரும்பாண்.:7); ''பசுமலர்ச் சுணங்கு'' (ஐங்.:367)*

2) *''கருங்குரல் நொச்சி'' (புறம்.: 272);*
''கரு நனைக் காயா'' (சிறுபாண்.: 165); ''காயா மலர்மேனி'' (சிலம்பு.:வேட்டுவரி:12:4; கொற்றவையின் நிறம் குறிப்பிடப்படுகிறது)
''திரு நிறமாய்க் கருங்குவளை'' (திருவா.:பெரி.மாதவத்தோன்:3)

3) *''துஞ்சுதீயோ மெல் அஞ்சி ஓதி எனப்*
பன்மாண் அகட்டில் குவளை ஒற்றி
உள்ளினன்'' (நற்.:370) (கர்ப்பமாக உள்ள மனைவியின் வெப்ப வயிற்றைக் குளிர வைக்க அடிவயிற்றில் குவளை மலரை ஒற்றினான்)
''பொய்கைப் பூவின் நறுந்தண்ணியளே'' (ஐங்.:97)
''குளிர்மலர், மணியின் குப்பை'' (அழ.சி.:குன்றம்:3)
''குளிர் வாழைப்பூக் கொப்பூழ் போன்ற'' (பா.கு.பா.???)
''சீதக் குவளை விழியினாள்'' (பாஞ்.ச.:81)

இளஞ்சேரன் (1982). 'தண்', 'நளிர்', 'நளி' போன்ற சொற்கள் குளிரைக் குறிக்கும் சொற்களாகத் தமிழ் இலக்கியத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளன (''நளி முகை'', ''நளி மலர்'', ''நளிர் மலர்'', ''தண்டார்'' (தண்+தார்), ''நறுந்தண் மாலையர்'', ''தாமரைத் தண்தாது'', ''தண்போது'', ''தண்ணறுங்கழுநீர்'', ''நறுந்தண் எருக்கு'').

சுவை பூக்களுக்கும் உண்டு. பூக்களுக்கு ஏற்பச் சுவைமாறும். இலுப்பைப் பூ இனிக்கும்; புளியம் பூ புளிக்கும்; வேப்பம் பூ கசக்கும்; மகிழம் பூ, வாழைப் பூ, இலவம்பூ போன்றவை துவர்க்கும். துவர்ப்பு காரணமாகவே இலவம் பூவிற்கு 'துவரி' என்ற பெயரும் உண்டு. பல பூக்களின் இனிப்புச் சுவை அவற்றிலுள்ள தேனின் காரணமாகத் தான்.

பூக்களின் முக்கியப் பண்புகளிலிருந்து தருவிக்கப்பட்ட பண்புகளில் முதலாவது தூய்மையாகும். மலர் எப்பொழுதுமே தூய்மையோடு தொடர்பு படுத்தப்படுவது. இதன்காரணமாகவே இது இறைவனுக்குப் படைக்கப்படும் முக்கியப் பொருளாக ஆனது. ''தூமலர் வாடும்'', ''தூய மாமலர்'', ''தூமலர் மாலை'' போன்ற சங்க இலக்கியச் சொற்றொடர்கள் இதற்குச் சான்று பகரும். பூவின் மங்கலப் பண்பும் [1] தூய்மையின்பால் தோன்றியதே. பூக்கள் ஒளி மயமான வை [2]. ''ஒண்பூ'', ''ஒள்வீ''; ''ஒள்ளிணர்'', ''ஒள்ளிதழ்'', ''ஒண் காந்தள்'', ''ஒண்கைதை'' போன்ற சொற்கள் பூவின் ஒளித்தன்மை யைக் குறிக்கும். பூவின் எழில் மற்றும் கவர்ச்சி அதன் வண்ணத்தி லிருந்து தான் பெருமளவில் பெறப்படுகிறது. பூ என்ற சொல்லுக்கு 'அழகு' என்ற பொருளே உண்டு (பிங்.நி.ஃ3875). பூவின் எழில் மற்றும் கவர்ச்சி பற்றிச் சங்ககாலப் பாடல்கள் மட்டுமன்றித் தற்காலப் பாடல்களும் எடுத்துக் காட்டுகின்றன [3].

---

1) *''மங்கலமாகி*
....
பொழுதில் முக மலர்வு உடையது பூவே'' (நன்.ஃபொதுப்பாயிரம்ஃ80)

2) *''சோலைமலர் ஒளியோ - உன்*
சுந்தரப் புன்னகையோ'' (கண்.பா.ஃ 16ஃ2)
''தேனை மறந்திருக்கும் வண்டும் - ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்
இந்த வையம் முழுதும் இல்லை'' (கண்.பா.ஃ14ஃ5)
''ஒரு குழையவன் மார்பில் ஒண்தார் போல் ஒளி மிகப்
பொரு வறப்பொருந்திய செம்மறு'' (கலி.ஃ105ஃ11)

3) *''ஏர்த்ததும்புவன பூ அணி செறிவு'' (பரி.ஃ18ஃ30)*
''பூக்கவின் கொண்ட புகழ்சால் எழில் உன் கண்'' (கலி.ஃ131ஃ4)
''பூ எழில் இழந்த கண்'' (கலி.ஃ28ஃ18)
''பூக்கள் இன்றெல்லாம் பார்த்திட்டாலும்
தெவிட்டாத எழிலின் கூத்தே'' (அழ.சி.ஃ செந்தாமரைஃ10)

iv) பூக்களின் வகைப்பாடு

பூக்களின் வகைப்பாடு (Classification of flowers) மூலம் தாவரங்களையே வகைப்படுத்தலாம். எனினும் பூக்களின் வகைப் பாட்டை, 'பூக்களின் குடும்பவகை' என்பார் கோவை இளஞ்சேரன் (1982). இவர் நான்குவகைப் பூக்களை எடுத்துக் காட்டியுள்ளார்: கோட்டுப் பூ, கொடிப் பூ, நிலப் பூ மற்றும் நீர்ப் பூ [1]. இந்த வகைப்பாடு தமிழ் இலக்கியங்களில் காணப்படும் செய்திகளின் அடிப்படைகளில் உருவாக்கப்பட்டது ஆகும். இவற்றில் நிலப் பூ புதற்பூ என்றும் இலக்கியத்தில் அறியப்படுகிறது [2]. வழிவழியாய் இந்த வகைப்பாடு தமிழரால் போற்றப்பட்டிருக்கிறது என்பது நாட்டுப்பாடல் ஒன்றின் மூலம் தெளிவாகிறது [3].

இவற்றில் கோட்டுப்பூ தாவரங்களின் (குறிப்பாக மரம் மற்றும் குற்றுமரம்) கிளையில் பூக்கும் பூவாகும். தாவர உலகி லேயே கோட்டுப் பூக்களின் எண்ணிக்கை தான் மிக அதிகம் என்று கோவை இளஞ்சேரன் கருத்து தெரிவிக்கிறார். கபிலர் குறிஞ்சிப் பாட்டில் பட்டியலிட்டுள்ள 99 பூக்களில் 45 கோட்டுப் பூக்களாகும். குறிஞ்சி நிலத்திற்கு உரிய பூவாக கோட்டுப்பூவை ஒருசிலர் கருதினாலும், எல்லாவகை நிலங்களிலும் இவ்வகைப் பூ காணப்படுவது தெளிவு. எறுழம், கள்ளி, கூவிரம், வடவனம், வாகை, குடசம், போங்கம், திலகம், பாதிரி, மருதம் போன்றவை கோட்டுப்பூ

---

1) *''கோட்டினும், கொடியினும், நீரினும், நிலத்தினும் காட்டிய பூ'' (சிலம்பு.: அழற்படு காதை: 93, 94)*
''கோட்டு மலரும், நில மலரும், குளிர்நீர் மலரும் கொழுங்கொடியின் தோட்டு மலரும்'' (பெரி.பு.: முருக.:8)
''கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ நாட்டத்து வண்டெல்லாம் நல்ல இசை பாட'' (பா.தா.கவி.:முதல் தொகுதி)
''மணங்கொள் கொடிப்பூ முதல் நான்கு வகைப்பூ வடிவில் வயங்கு கின்ற'' (வள்ளலார்.தி.அ.சிற்சக்தி துதி:6)
''கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ தோற்றமுடைய பூவின் தொடர்பே'' (சேந்.தி.:97)

2) *''கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ வோடு புதற்பூ என்றிவை நால்வகைப் பூவே'' (பிங்.நி.:375)*

3) *''நந்தவனம் கண்திறந்து நாலு வகைப்பூ வெடுத்து, பூவெடுத்து பூசை செய்யும் புண்ணியவான் போனாரோ'' (நாட்டுப்பாடல்:பிணப்பாட்டு)*

வகையைச் சார்ந்தவை. நட்பின் இலக்கணமாக, கோட்டுப் பூ கருதப்படுகிறது [1].

கொடிப்பூ கொடியில் தோன்றும். குறிஞ்சிப்பாட்டில் கபிலர் 26 கொடிப் பூக்களைக் குறிப்பிட்டுள்ளார். முல்லை, காந்தள், பிச்சி போன்றவை கொடிப் பூக்கள்.

நிலப்பூ நிலத்தில் குத்துகுத்தான புதரில் தோன்றும் பூ ஆகும். எனவே இது புதற்பூ என்றும் அழைக்கப்படும். மருதநில வயல் காயும்போது இவை பூக்கும் என்று புறநானூறு கூறுகிறது [2]. நிலப்பூக்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள் குறிஞ்சி, தும்பை, நெருஞ்சி போன்றவை. குறிஞ்சிப்பாட்டில் கபிலர் 23 நிலப்பூக்களைக் குறிப்பிட்டுள்ளார்.

நீர்ப்பூ நெய்தல் நிலப்பூவாக இருந்தாலும், எல்லாவகை நிலங்களிலும் காணப்படும். மலையில் (குறிஞ்சி நிலம்) காணப்படும் நீர்ப்பூ சுனைப்பூ; முல்லைநில ஓடையில் உள்ள நீர்ப்பூ ஓடைப்பூ; மருதநில குளத்தில் பூப்பது கயப்பூ; மருதநில வயலில் பூக்கும் நீர்ப்பூ வயப்பூ; நெய்தல் நில நீர்ப்பூ கழிப்பூ மற்றும் கேணிப்பூ. நீர்ப் பூக்கள் பலவற்றில் தேன் இருக்காது; அப்படியே காணப்பட்டாலும் அவற்றின் அளவு மிகக் குறைவாகும் என்று கோவை இளஞ்சேரன் (1982) அந்தில் இளங்கீரனாரின் அகநானூற்றுப் பாடல் [3] ஒன்றைக் கொண்டு வலியுறுத்துகிறார். தாவரவியல் செய்திகளின்படி நீரில் முழுவதும் மூழ்கியுள்ள நீர்ப் பூக்களில் தேன் முற்றிலும் இருக்காது; ஏனெனில் இவற்றில் நீர்வழி மகரந்தச் சேர்க்கை நடைபெறும். ஆனால் நீருக்கு வெளியே நீட்டி மலரும் தாமரை, குவளை போன்ற பூக்களில் தேன் இருக்கும். இவற்றில் பூச்சிகளின் மூலம் மகரந்தச் சேர்க்கை நடைபெறும். குறிஞ்சிப்பாட்டில் கபிலர் 5 நீர்ப்பூக்களைக் குறிப்பிட்டுள்ளார்.

---

1) ''கோட்டுப் பூ போல மலர்ந்து பின் கூம்பாது
வேட்டதே வேட்டதாம் நட்பாட்சி - தோட்ட
கயப்பூப் போல் முன்மலர்ந்து பின் கூம்புவாரை
நயப்பாரும் நட்பாரும் இல்'' (நாலடி.፡ 215).

2) ''வயலகம் நிறையப் புதற்பூ'' (புறம்.፡117)

3) ''பயன் இன்மையின் பற்றுவிட்டு ஒரூஉம்
நயனில் மாக்கள் போல, வண்டினம்
சுனைப்பூ நீத்துச் சினைப்பூப்படர'' (அகம்.፡71፡2-4)

v) பூக்களின் வடிவங்கள்

சங்க இலக்கியத்திலிருந்தும் சங்கம் மருவிய கால இலக்கியத்திலிருந்தும் பூக்களின் வடிவங்கள் (Shapes of flowers) பற்றிய பல செய்திகளை அறிய முடிகிறது. பூக்கள் குடை வடிவமாகவோ (எடுத்துக்காட்டு = கோங்கு) [1], பொரி வடிவமாகவோ (எடுத்துக்காட்டுகள்ஃ புன்னை, புங்கம்) [2], விரல் (குறிப்பாக, மருதாணி இட்ட விரல் போன்ற) போன்றோ (எடுத்துக்காட்டு ஃ செங்காந்தள்) [3], நக வடிவமாகவோ (வண்ணம் தீட்டிய) (எடுத்துக்காட்டு ஃ முருக்கம்பூ) [4], சுரி வடிவமாகவோ (எடுத்துக்காட்டு ஃ மராம்பூ) [5], தேர் உருளை வடிவமாகவோ (எடுத்துக்காட்டு ஃ மகிழம்பூ) [6] உள்ளன என்று புலவர்கள் தம்முடைய உற்றுநோக்கல்களால் எடுத்துக் கூறியுள்ளனர். கோவை இளஞ்சேரன் (1982) வெண்கடப்ப பூ [7] பந்துவடிவ பூக்களைப் பெற்றது என்பார். ஆனால் இது தனிப் பூவின் வடிவமல்ல; பல தனிப் பூக்கள் ஒன்றுசேர்ந்து பந்து ஒப்ப மஞ்சரியை உருவாக்கும் [8]; உருண்டை வடிவப் பூங்கொத்துக்குள் தொடர்ந்து கோவையாக மலர்கள் தோன்றுவதை மகளிர் கைகோத்திருப்பதற்கு உவமையாகக் கபிலர் குறிப்பிடுகிறார்.

vi) பூக்களின் அமைவு

தாவரங்களில் பூக்கள் தனித்தனியாகவோ அல்லது ஒன்று சேர்க்கப்பட்ட கொத்துகள் அல்லது மஞ்சரிகளாகவோ (inflorescence)

---

1) ''புல்லிதழ்க் கோங்கின் மெல்லிதழ்க் குடைப்பூ (நற்.ஃ48)

2) ''பல்லி நெரித்தசினை போலும்
நீளிரும் புன்னைப் பொரிப்பூ'' (பழ.ஃ13)
''பொரி உரு உறழப் புன்கு பூ உதிர'' (கலி.ஃ33ஃ10) (புன்கு=புங்கம்)

3) ''காந்தள் முகை புரை விரல்'' (புறம்.ஃ144ஃ9)

4) ''குவிமுகை முருக்கின் கூர் நுனை வையெயிற்று
நகைமுக மகளிர் ஊட்டு உகிர் கடுக்கும்'' (அகம்.ஃ317) (ஊட்டு உகிர் = வண்ணம் ஊட்டிய நகம்)

5) ''வலம்புரி மரா அத்துச் சுரம் கமழ் புதுவீ'' (அகம்.ஃ83)

6) ''தேர்க்கால் மலர்ந்தன வகுளம்'' (சீவ.சி.ஃ1650)

7) ''வெண்கடம்பு பந்தணிந்தவே'' (சீவ.சி.ஃ1650)

8) ''திணைநிலைக் கடம்பின் திரளரை வளைஇய
துணையறை மாலையில் கைபிணி விடோஎம்
நுரையுடைக் கலுழி பாய்தல்'' (குறி.பா.ஃ176-178)

அமைந்துள்ளன. பூங்கொத்துகளை, இலக்கிய ஆதாரங்களுடன், ஏழு வகைகளாகக் கோவை இளஞ்சேரன் (1982) பிரித்துள்ளார். அவை யாவன: கொத்து, தொத்து, துணர், இணர், மஞ்சரி, தொடர்ச்சி, குலை. பிங்கல நிகண்டில்[1] ஐந்து வகைப் பூங்கொத்துகள் தான் குறிப்பிடப் பட்டுள்ளன. கோவை இளஞ்சேரன் இந்த ஏழு வகையான பூங்கொத்துகளுக்கு இடையேயான வேறுபாட்டினைத் தெளிவாக விளக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சற்று மயங்க வைக்கும் அவருடைய விளக்கங்கள் பின்வருமாறு: 'கொத்து' - ஒழுங்கில்லாமல் பூக்கள் மேலும் கீழுமாக அமைந்தது. 'தொத்து' - தலைகீழாகத் தொங்கும் பூங்கொத்து. 'துணர்' - துண்ணென்று வெடித்துப் பூக்கும் தொகுதி 'இணர்' - ஒழுங்குடன் நெருக்கமாக அமைந்தது (இது பூக்களைக் குறிப்பிடுகிறதா இல்லை பூங்கொத்தைக் குறிப்பிடுகிறதா என்பது தெளிவாக இல்லை).[2] மஞ்சரி - மிகச் செறிவாகத் துய்வானப் பூக்களைக் கொண்டது. தொடர்ச்சி - தொடர்ந்து மேல் நோக்கியோ, பக்கவாட்டிலோ பூப்பது. இது தாவரவியலார் தனித்தனியாகக் குறிப்பிடும் ரெசீம் (raceme) வகை மஞ்சரியையும், சைம் (cyme) வகை மஞ்சரியையும் உள்ளடக்கிய வகையாகத் தெரிய வருகிறது; குலை - தொகுப்புக் கொத்து (எடுத்துக்காட்டு : நெய்தல்)[3].

மஞ்சரியில் உள்ள மலர்கள் மஞ்சரிக்குக் கோதை அல்லது கண்ணிமாலை போன்ற தோற்றத்தைத் தருகின்றன. பிடவத்தில் மஞ்சரியின் மலர்கள் கண்ணியாக அமைந்திருப்பதை மருதன் இளநாகனார் குறிப்பிடுகிறார்[4]. காஞ்சி மரத்தில் மஞ்சரியின் மலர்கள் சற்றுப் பெரிதாக மலர்ந்து கோதை போன்ற தோற்றத்தைத் தரும்[5].

vii) பூக்கள் மலரும் காலம்

தாவரங்களின் சூழலியல் (Ecology) பண்புகளைப் பெரிதும் பாதிக்கும் காரணிகள் பலவற்றில் பூக்களின் மலரும் காலமும்

---

1) ''தொத்து மஞ்சரி துணரிணர் தொடர்ச்சி மற்றிவையனைத்தும் மலர்க்கொத்தென்ப'' (பிங்.நி.: 2803)

2) ''வால் இணர் மடல் தாழை'' (பட்.பா.:118)

3) ''மணிக்குலை கட் கமழ் நெய்தல்'' (குறி.பா.:84)

4) ''சிறுகரும் பிடவின் வெண்டலைக் குறும்புதல் கண்ணியின் மலரும்'' (அகம்.:34)

5) ''நறும்பூங் கோதை தொடுத்த நாட்சினை குறுங் காற் காஞ்சி'' (சிறுபாண்.: 178, 179)
''குறுங் காற் காஞ்சிக் கோதை மெல்லிணர்'' (அகம்.:341)

(Phenology of flowering) ஒன்று. குறிப்பிட்ட சூழலில் தாவரங்களின் இனப்பெருக்க வெற்றியை (reproductive success) நிர்ணயிக்கும் இது ஒரு மிக முக்கியக் காரணியாகும் (Sivaraj and Krishnamurthy 1989). பூக்கள் மலரும் நிகழ்வு மற்றும் காலம் பற்றிய சிறப்பான பல செய்திகளைத் தமிழ் இலக்கியம் தருகிறது என்பது மிகவும் வியப்புக்குரியதாகும். இரவில் மலரும் பூக்கள், காலையில் மலரும் பூக்கள், மாலையில் மலரும் பூக்கள் (daily phenology of flowering) என்று பிரித்தறிந்து கூறியுள்ளனர் தமிழ்ப் புலவர்கள். இதேபோன்று ஒரு ஆண்டில் மரங்கள் பெரும்பாலும் எந்தக் காலத்தில் பூக்கும், செடிகள் பெரும்பாலும் எந்தக் காலத்தில் பூக்கும் (annual phenology) என்ற செய்திகளையும் தந்துள்ளனர். ''செருந்தி அதிரல் பெருந்தண் சண்பகம்'' (குறி.பா.ஃ75) மற்றும் ''குரீஇப் பூளை திலகம் தேங்கமிழ் பாதிரி'' (குறி.பா.ஃ74) ஆகிய ஆறும் முதுவேனில் காலத்திலும், ''தண் கயக்குவளை குறிஞ்சி வெட்சி'' (குறி.பா.ஃ63) ஆகிய மூன்றும் கார்காலத்திலும் மலர்பவை. மேலும், அதிக மரங்கள் கோடைக் காலத்தில் பூக்கும் என்றும், அதிக செடிகள் கார் காலத்தில் பூக்கும் [1] என்றும் குறிப்பிட்டுள்ளனர். இச்செய்தி எங்களுடைய ஆய்வகத்தில் 600க்கும் மேற்பட்ட சேர்வராயன் மலைத் தாவரங்களில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வின் விளைவாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டுப்பூக்கும் காலங்களோடு ஒத்திருப்பது வியப்பளிக்கிறது (Sivaraj and Krishnamurthy 1989).

நள்ளிரவில் பூக்கும் மலர்களில் மயிலை மலரும் ஒன்று. இது நள்ளிரவில் பூத்து மணம் பரப்புவதால் ''நள்ளிருள் நாறி'' எனப் பட்டது. இதுபோன்று முசுண்டை மலரும் நடுயாமத்தில், கூதிர்ப் பருவத்தில் புதர்களில் மலரும். வானம் மழை பெய்து நின்று தெளிந்திருக்கும்போது இம்மலர்கள் விண்மீன்கள் பளிச்சிடுவது போன்று தோற்றமளிக்கும். ஆம்பலும் ஒரு இரவு மலராகும் [2]; காலையில் கூம்பி விடும். ஆனால், குறுந்தொகை 122ஆம் பாடலில் [3]

---

1) ''கொண்டன மலர்ப்புதல் மானப் பூ வேய்ந்து'' (மது.கா.ஃ568)

2) ''மதிநோக்கி அலர் வித்த ஆம்பல் வான் மலர்'' (கலி.ஃ 72ஃ6)
''விரிகதிர் வெண்மதியும் மீன்கணமும் ஆமென்றே விளங்கும் வெள்ளைப் புரிவளையும் முத்துங்கண்டு ஆம்பற்பொதியவிழ்க்கும் புகாரே எம்மூர்'' (சிலம்பு.ஃ7ஃ5ஃ3-4) (சங்கையும், முத்தையும் சந்திரனாகவும் விண்மீன்களாகவும் கருதி ஆம்பல் மலர்ந்தது)

3) ''குண்டு நீர் ஆம்பலும் கூம்பின, இனியே
வந்தன்று வாழியோ மாலை'' (குறு.ஃ122)

ஆம்பல் மாலையில் கூம்பியதாகக் கூறப்பட்டுள்ளது. வெண்மை மற்றும் வெளிர் மஞ்சள் மலர்கள் தான் நடுஇரவில் மலரும் என்பது தாவரவியல் தரும் செய்தி; வேறு நிறமுடைய மலர்கள் பகலில் மலரும், மாலை அல்லது இரவில் கூம்பும். எனவே, முதலில் குறிப்பிட்ட ஆம்பல் வெண்மையான பூக்களை உடைய வெள்ளாம்ப லாகவும், அடுத்து குறிப்பிடப்பட்ட ஆம்பல் செவ்வாம்பலாகவும் இருக்க வேண்டும். வைகறையில் மலரும் பூக்களில் நெய்தலும் ஒன்று [1]; இது நீலநிறப் பூக்களைக் கொண்டது. வேறுசில தாவரங் களின் மலரும் காலங்களும் இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன [2].

எ) தாவரங்களுக்குப் பெயரிடுதல்

பண்டைத் தமிழர் தாவரங்களுக்குப் பெயர்களைத் தேர்ந் தெடுத்து இட்டது மிகவும் சிறப்பு வாய்ந்த செயலாகும் (சண்முக சுந்தரம் 1970). தாவரங்களின் பெயர்களைக் குறிக்கப் பயன்படுத்தப் பட்ட தமிழ்ச் சொற்கள் குறுகிய வடிவில் இருந்தன; ஓரசைச் சொற்களாகவோ, ஈரசைச் சொற்களாகவோ தான் அவை அமைக்கப் பட்டன; சொல்வதற்கு வசதியாகவும், கவர்ச்சியாகவும் அமைக்கப் பட்டன. இச்சொற்கள் இனிய மெல்லோசை கொண்டு முடிந்திருப் பதை நாம் அறியலாம்; கரடுமுரடான ஒலியோ, வலுவான ஓசையோ இல்லாமல் இச்சொற்கள் மெத்தென்றிருக்கும்; அவை ஆ, இ, உ, ஐ, ல், ம், ர் என்ற ஓசைகளில் முடிந்து இன்பம் பெருக்கும் வகையி லிருக்கும். உகா, மா, பலா, களா, விளா முதலியன ஆ-வில் முடிந்தும், காஞ்சி, அத்தி, இத்தி, இஞ்சி, குறிஞ்சி, அல்லி, பிச்சி, வெட்சி, இருவாட்சி, கள்ளி, வஞ்சி, நொச்சி முதலியன இ-வில் முடிந்தும், கடுகு, மிளகு, கரும்பு, அசோகு, வேம்பு, கோங்கு, இலவு, தேக்கு, கமுகு, அரசு, புரசு, புன்கு, உழுந்து, தெங்கு முதலியன உ-வில் முடிந்தும், தென்னை, பனை, புன்னை, பின்னை, இலுப்பை, வேங்கை, வாழை, தாழை, கரந்தை, தும்பை, உழிஞை, வாகை, உடை, ஓமை, அவரை, ஆவிரை, துவரை, தாமரை, குவளை, மல்லிகை, முல்லை, பாலை முதலியன ஐ-யில் முடிந்தும், ஆல், வேல், நாவல் போன்றவை ல்-இல் முடிந்தும், ஆரம், நாகம், நரந்தம்

---

1) *''வைகறை மலரும் நெய்தல் போல'' (ஐங்.ః188)*

2) *''பாண்டில் ஒப்பின் பகன்றை மலரும் கடும்பனி அற்சிரம்'' (நற்.ః86); ''மாரிப்பித்தகம்'' (நற்.214); ''கூதிர் கூதளத்து அலரி'' (நற்.ః244); ''வேனில் முருக்கின் விளை துணர்'' (நற்.73); ''கான இருப்பை வேனில் முருக்கின் வெண்பூ'' (குறு.ః379); ''கானப்பாதிரி கருந்தகட்டு ஒள்வீ வேனில் அதிரலொடு விரைஇ'' (அகம்.ః261)*

போன்றவை ம்-இல் முடிந்தும், ஆர், பாங்கர், பீர் போன்றவை ர்-இல் முடிந்தும் காணப்படுவதை நோக்குக.

சங்கம் மருவிய காலத்தின் தொடக்கத்திலிருந்து மேற்கூறிய முறையில் தாவரங்களுக்குப் பெயரிடுதல் பெருமளவு குறைந்தது. இதற்கு மூன்று முக்கியக் காரணங்களைக் கூறலாம். முதலாவது, வடஇந்தியாவிலிருந்து தமிழகத்திற்கு அதிக அளவு நுழைந்த வடமொழித் தாவரப் பெயர்களாகும். வடமொழியில் வழங்கப்பட்ட அதே பெயர்கள் தமிழகத்திலும் நிலைபெற ஆரம்பித்து விட்டன. கணவீரம், அதிமதுரம், அரவிந்தம், சடமாஞ்சி, தாளிபத்திரி, துருசுபலம், நீலோற்பலம் போன்றவற்றை இதற்கு எடுத்துக்காட்டு களாகக் கூறலாம். பக்தி இலக்கியக் காலத்தில் வடமொழித் தாவரப் பெயர்கள் மிக அதிகமாகத் தமிழகத்தில் நிலைபெற்றன. இரண்டாவது, தமிழகத்தின் நகர்ப்புறங்களில் மிகவேகமாகப் பரவிய வடஇந்திய ஆயுர் வேத மருத்துவமுறையாகும் (விவரங்களுக்கு பார்க்க, அத்தியாயம் IX). ஆயுர்வேத மருத்துவர்கள் மூலம் ஆயுர்வேத மருத்துவத் தாவரங்கள் தங்களுடைய வடமொழிப் பெயர்களுடன் தமிழகத்தில் நிலைப்பாடு பெற்றன (பார்க்க, பின்னிணைப்பு 3). மூன்றாவது, கிராமப்புறங்களிலும் மலைப்பகுதிகளிலும் முக்கியத் துவம் பெற்ற நாட்டு, சித்த மற்றும் பழங்குடி மருத்துவ முறைகள். இந்த மருத்துவ முறைகளில் சாதாரண மக்களுக்குப் புரியும் வகையில் மருத்துவத் தாவரங்களின் பெயர்கள் பயன்கள் அடிப்படையில் அழைக்கப்பட்டன. இத்தகைய பெயர்கள் வட்டார வழக்கிலும் அமையப் பெற்றன. எடுத்துக்காட்டுகளாக, தண்ணீர்விட்டான் கிழங்கு, வாதமடக்கி, புளியாரை, தேள்கொடுக்காஞ்செடி, கலப்பைக் கிழங்கு போன்றவற்றைக் கூறலாம் (பார்க்க, பின்னிணைப்பு 3). ஒரே தாவரம் தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறாக அழைக்கப்படும் நிலையும் இதனால் உருவாகியது. 17ஆம் நூற்றாண்டுக்குப்பின் தமிழகத்தில் நுழைந்த தாவரங்களின் பெயர்கள் பெரும்பாலும் ஒலிபெயர்ப்பே செய்யப்பட்டன (பார்க்க : அடுத்த அத்தியாயம்). மேற்கூறிய காரணங்களால் பலதாவரங்களுக்குப் பண்டைய தமிழ்ப் பெயர்கள் மறைந்து புதிய பெயர்கள் வழக்கத்தில் நிலைப்படுத்தப்பட்டு விட்டன. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் காந்தளைக் குறிப்பிடலாம். இதனால் சங்ககாலத் தாவரங்களுக்கு இணையான தாவரஇயல் பெயர்களைக் கண்டறிவதில் சிக்கல்களும், குழப்பங்களும், கருத்து வேறுபாடுகளும் உள்ளன.

ஏ) பிற செய்திகள்

பூக்காது காய்ப்பதில்லை என்பதைப் பண்டைத் தமிழர் அறிந்திருந்தனர். கண்ணிற்குக் காட்சி தராத மலர்களாக அத்தி, ஆல், பலா போன்றவற்றைக் கருதினர்[1] என்றாலும் இவற்றில் பூவாமல் காய்கள் தோன்றும் என்று தவறாக நினைத்தனர். இத்தகைய மரங்கள் அனைத்தையுமே 'கோளி' என்ற அடைமொழியிட்டு அழைத்தனர்[2]. வேர்கள் பற்றிய பல செய்திகள் தமிழ் இலக்கியத்தில் காணப்படுகின்றன. பாலை நிலத் தாவரங்களின் வேர்கள் மிக நீண்டு ஆழமாக தரையினுள் செல்கின்றன என்றும், நீர்வாழ் செடிகளில் வேர்கள் கிழங்கு போன்றிருக்கும்[3] என்றும் கூறப்பட்டுள்ளன. இதேபோன்று பல கொடிகளின் வேர்கள் கிழங்கு போன்று இருக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது[4]. ஆல், தாழை போன்ற தாவரங்களில் வேர்கள் தண்டில் தோன்றி தரை நோக்கி வளரும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய வேர்கள் ''வீழ்'' என்று அழைக்கப்பட்டுள்ளன[5, 6]. இவ் விழுதுவேர்கள் கோட்டைச் சுவர் போன்ற இடங்களில வளரும் போது அக்காட்சி அருவி வீழ்வதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது[7]. கடப்பாறை கொண்டு பிளக்க முடியாத பாறையை வேர்கள் துளைத்து பிளந்து விடும் என்றும் அறிந்திருந்தனர் என்பதை பின்வரும் ஔவையார் பாடலால் அறியலாம் :

---

1) *''பூவாது பழுக்கும் சூலடிப்பலா'' (சித.மு.கோ.:8:17)*
''பூவாது காய்க்கும் மரமுள'' (சிறு.மூ.:22)

2) *''கோளி பூவாது காய்க்கும் மரமே'' (பிங்.நி.:2765)*
''முழுமுதல் தொலைந்த கோளி ஆலத்து'' (புறம்.58)
''கோடு பல முரஞ்சிய கோளி ஆலத்து'' (மலை.:468)

3) *''தேனா ராம்பற் கிழங்கொடு பெறூஉம்'' (புறம்.:176)*

4) *''......கொழுங்கொடி வள்ளிக்*
கிழங்கு வீழ்க் கும்மே'' (புறம்.:108)
''கிழங்கு கீழ்வீழ்ந்து தேன் மேற்றூங்கி'' (நற்.:328)

5) *''பல்வீழ் ஆலம் போல்'' (அகம்.:76)*
''நெடுவீ ழிட்ட கடவுளாலத்து'' (நற்.:243)

6) *''வீழ் தாழ்தாழைப் பூக்கமழ் கானற்'' (நற்.:78)*
''வீழ்தாழ் தாழை'' (பட்.84:கலி.131:அகம்.:20)

7) *''புல் வீ ழிற்றிக் கல்லிவர் வெள்வேர்*
வரையிழி யருவியிற் றோன்று நாடன்'' (குறு.:106)

வெட்டனவை மொத்தவை
வெல்லாவாம் வேழத்தில்
பட்டுருவும் கோல்பஞ்சில்
பாயாவாம் - நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப்
பாறை பசுமரத்து
வேருக்கு நெக்கு விடும்''

நறவத்தில் பூச்சிகளால் ஏற்படும் மகரந்தச் சேர்க்கை மற்றும் முள்முருக்கில் பறவையால் ஏற்படும் மகரந்தச் சேர்க்கை போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளன (சாமி 1967). சங்க இலக்கியத்தில் விதையை 'காழ்' அல்லது 'அரி' என்று அழைத்தனர். அரி என்ற சொல் அரிசிக்கு மட்டும் பின்னால் சுட்டப்பட்டாலும், இச்சொல் பொதுவாகத் தாவரங்களின் விதையைக் குறித்தது; வாகை விதை குறுந்தொகையில் அரிசி எனப்பட்டது. அரி என்பது சுமேரிய மொழியில்கூட விதையைத் தான் குறிக்கிறது. ஈந்து மற்றும் பலாவின் விதைகள் காழ் எனக் குறிக்கப்பட்டன.

IV

தமிழகத்தின் இயல் தாவரங்களும் அயல் தாவரங்களும்

அ) இயல், அயல், அயலியல் தாவரங்கள் குறித்த கருத்துரு

ஒரு நாட்டின் இயற்கைச் செல்வங்களாகக் கருதப்படும் தாவரங்களை இரண்டு தொகுதிகளில் வகைப்படுத்தலாம். ஒரு தொகுதி இயல்தாவரங்களையும் (wild plants) மற்றொரு தொகுதி அயல் தாவரங்களையும் கொண்டவை. இயல் தாவரங்கள் அந்த நாட்டின் இயற்கைச் சூழல்களில் (natural environments) தன்னிச்சையாக, எந்தவித மனித முயற்சிகளுமின்றி இயல்பாக வாழக் கூடியவை; அவை அந்த நாடு/பகுதிக்கே உரித்தானவை. அயல் தாவரங்கள் ஒரு நாட்டிற்கு உரித்தானவையல்ல; வெளிநாடுகளிலிருந்து மனித முயற்சிகளால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ வேளாண்மைக்கோ, பூங்கா/தோட்டத்திற்கோ, மருத்துவத்திற்கோ பயன்கருதிக் கொணரப்பட்டு இன்னொரு நாட்டில் காணப்படுபவை. இந்தச் செயலுக்குத் தாவர நுழைப்பு (plant introduction) என்று பெயர். கொண்டு வரப்பட்ட நாட்டில் அவை பொதுவாகப் பயிர்களாகவோ (crops) அல்லது தோட்டத் தாவரங்களாகவோ (horticultural plants) மனித முயற்சிகளால் வளர்க்கப்படுபவை [1]. ஒரு நாட்டின் தாவரங்களை

1) கோவை இளஞ்சேரன் (1982) தன்னுடைய நூலில், ஆன்மவியலார் உலகத்தை மேலுலகம், கீழுலகம் என்று பிரித்திருந்தார்கள் என்றும், மேலுலகத்தின் திருமரங்களாக ஐந்து மரங்கள் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளார். அவையாவன: சந்தானம், அரிசந்தானம், மந்தாரம், பாரிஜாதம் மற்றும் கற்பகம். இதேபோன்று மேலுலகத்திற்கு நம்முடைய தாமரைப் பூ சென்றதாகக் கருதப்படுகிறது. குபேரன் நம்முலகச் சீரகப் பூவை மாலையாக அணிந்தான் என்பது மரபுவழிச் செய்தி. அரசர் ஆணையால் கற்பூரமரம் இவ்வுலகிற்கு வர, அதனை விரும்பாத தேவர்களின் வஞ்சின மொழியால் அம்மரம் பூ அளவே தந்தது, மந்தாரமும் அவ்வாறே (சீவ.சி.1701) என்பது நச்சினார்க்கினியர் காட்டும் கதைக் குறிப்பு. இங்கு மேலுலகம் என்பதற் நச் சொர்க்கம் என்று பொருள் கூறுபவர் பலர் உண்டு; எனினும் இதற்கு மேற்கத்திய நாடுகள் அல்லது வட இந்தியா என்று பொருள் கொள்ளலாம்.

ஒருவர் மிக எளிதாக இயல்தாவரங்களா அல்லது அயல்தாவரங்களா என்று மேற்கூறிய அடிப்படைகளில் அடையாளங் காட்டிவிட முடியும். எனினும், ஒரு சில அயல் தாவரங்கள் புதிய நாட்டின் வளர்ப்புச் சூழலில் இருந்து விடுபட்டு, இயற்கைச் சூழலுக்குத் தாவி, இயல்தாவரங்களைப் போலவே தன்னிச்சையாக வளர ஆரம்பிக்கின்றன. இவற்றை நாம் அயலியல் தாவரங்கள் (feral plants) [1] எனலாம். இதேபோன்று ஒருசில அயல் நாட்டு இயல்தாவரங்களின் விதைகள், மனித முயற்சியின்றி, இன்னொரு நாட்டிற்குப் பல்வேறு வழிகளில் அடைந்து அங்கு வளர்ந்து இயல்தாவரங்களைப் போலவே காட்சியளிக்கின்றன. இவை பொதுவாகக் 'களைகள்' (weeds) வகுப்பைச் சார்ந்த தாவரங்களாகும்; சொந்த நாட்டிலும், வந்தடைந்த நாட்டிலும் இவை களைகளைப் போலவே செயல்பட்டு மிகவும் வேகமாகவும் பரவலாகவும் வளர்ந்து வந்தடைந்த நாட்டின் இயல்தாவரங்களைப் போலவே தோற்றமளிக்கும். இவற்றையும் அயலியல் தாவரங்களாகவே கருதலாம். ஏற்கனவே குறிப்பிட்டபடி, ஒரு நாட்டின் இயல் தாவரங்களிலிருந்து அயல்தாவரங்களை வளரும் சூழலை வைத்து எளிதாகப் பிரித்து விடலாம் என்றாலும் அயலியல் தாவரங்களை இயல் தாவரங்களிலிருந்து பிரித்தறிவது சற்றுக் கடினமான செயலாகும்; ஆனால், முடியாத செயல் அல்ல. இயல்தாவரங்களையும் அவற்றின் வட்டாரப் பெயர்களையும் (vernacular names) பண்டைய இலக்கிய நூல்கள் சுட்டிவிடும். ஒரு நாட்டின் அயல்தாவரங்கள் மற்றும் அயலியல் தாவரங்களுக்குப் பொதுவாக அந்நாட்டு மொழி / மொழிகளில் பெயர்கள் இடப்பட்டிருக்காது; அப்படியே இடப்பட்டிருந்தாலும் அவற்றின் பெயர்கள் ஏற்கனவே உள்ள அவற்றை ஒத்த இயல்தாவரங்களின் வட்டாரப் பெயர்களோடு தொடர்புப் படுத்தப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாக, காட்டாமணக்கு தமிழகத்தின் ஒரு இயல்தாவரம் ஆகும்; இதனை ஒத்த அயலியல் தாவரம் 'நெய்வேலிக் காட்டாமணக்கு' எனப் பெயரிடப்பட்டுள்ளது. ஒரு சில அயலியல் தாவரங்கள் அவற்றின் சொந்த நாட்டில் அவை அழைக்கப்படும் வட்டாரப் பெயராலேயோ, தாவரப் பெயராலேயோ ஒலி பெயர்ப்பு மட்டும் செய்யப்பட்டு, புகுந்த நாட்டிலும் அழைக்கப்படும். எடுத்துக்காட்டாக, பார்த்தீனியம் (Parthenium) என்ற

---

1) இத்தகையத் தாவரங்களைச் சுட்ட, சரியான தமிழ்ச் சொல் இல்லாததால் 'அயலியல் தாவரங்கள்' என்ற சொற்றொடர் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. இதன் பொருள், நன்கு பரவி இயல்பாகவும் தன்னிச்சையாகவும் வாழும் அயல்நாட்டுத் தாவரங்கள் என்பதாகும்.

தாவரத்தைக் குறிப்பிடலாம். இதே நடைமுறைகள் பயிர்களாக வளர்க்கப்படும் அயல் தாவரங்களுக்கும் கையாளப்படுகின்றன.

ஆ) தமிழகத்தின் இயல், அயல் தாவரங்களை அறிவதில் இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுகளின் பங்கு

அயல்நாடுகளிலிருந்து ஒரு நாட்டிற்குத் தாவர நுழைப்பு (மனித முயற்சியாலோ, மனித முயற்சியின்றியோ) பல்வேறு காலகட்டங்களில் நடைபெற்று வந்திருக்கிறது. வரலாற்றுக்கு முந்தைய காலங்களில் தொடங்கி இந்நிகழ்வு வரலாற்றுக் காலத்தில் வலுப்பெற்று, தற்பொழுது மிகப் பரவலாக நடைபெறுகிறது. இதற்குத் தமிழகம் ஒரு விதிவிலக்கல்ல. தமிழகத்திற்கே உரித்தான இயல்தாவர வளமும், பயிர்த் தாவர வளமும் காணப்பட்டாலும், காலத்தின் மாற்றத்திற் கேற்பவும், மக்களின் விருப்பு - வெறுப்புகளுக்கு ஏற்பவும் புதிய தாவரங்கள் பயிர்த் தாவரங்களாக வரலாற்றுக் காலம் முழுவதும் தமிழகத்தில் நுழைக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள விவரங்களின் படி, தமிழகத்தில் ஏறத்தாழ 4850 தாவரச் சிற்றினங்கள் (species) இயல் தாவரங்களாகவும், ஏறத்தாழ 1150 தாவரச் சிற்றினங்கள் அயல் மற்றும் அயலியல் தாவரங்களாகவும் அறியப்பட்டுள்ளன (Nair and Henry 1988). ஏற்கனவே விளக்கியபடி ஒரு நாட்டின் இலக்கியம் இயல் தாவரங்களை எளிதில் அடையாளங்காட்டி விடும். வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களில் படைக்கப்பட்ட இலக்கிய நூல்களை ஒப்பு நோக்கும் போது, அந்தந்தக் காலகட்டங்களில் ஒரு நாட்டில் புதிதாக நுழைந்த/நுழைக்கப்பட்ட தாவரங்களை எளிதாக அடையாளங் காட்டிவிட முடியும். எனினும், சாமி (1967) அவர்களின் கூற்றுப்படி ''சங்க நூல்களில் வழங்கிய பல மரம், செடி, கொடிப் பெயர்கள் மறைந்துவிட்டன. சில மாறிவிட்டன. சில பெயர்கள் திரிந்து வழங்கு கின்றன. நிகண்டுகளும், பிற்கால உரைகளும் ஓரளவு சங்கப் பெயர் களைக் கண்டுகொள்ள உதவினும் அவை பெரும்பாலும் மயங்க வைக்கின்றன.'' மேலும், ஒரு சில தாவரங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்களால் சுட்டப்பட்டுள்ளன. எனவே இலக்கியத்தில் பெயரள வில் நோக்கி ஒன்றென மயங்கும் நிலை தமிழுலகில் நிலவியது என்று நெடுஞ்செழியன் (2005) கூறுகிறார். இலக்கியங்களைத் தவிரப் பல்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த கல்வெட்டுகளும், செப்பேடு களும் இதற்குப் பெரிதும் பயன்படும். தமிழகத்தைப் பொருத்த வரையில் மிகச் சிறந்த இலக்கியவளமும் கல்வெட்டு வளமும் இருப்பதினால் அயலியல் தாவரங்களை அறிந்துகொள்வதில் அதிக சிக்கல் இல்லை என்லாம். ஆனால், இலக்கியங்களையும் கல்வெட்டு

களையும் ஆய்ந்தறிந்து தமிழகத் தாவரங்களைப் பற்றியச் செய்தி களைப் பதிவுசெய்யும் முயற்சிகள் இதுவரை சிறப்பாக மேற் கொள்ளப்படவில்லை. பண்டைய தமிழகத் தாவரங்களைப் பற்றிய நூல்கள் பல உள்ளனவே ஒழிய (சண்முகசுந்தரம் 1970; சாமி 1967; கோவை இளஞ்சேரன் 1982; சீநிவாசன் 1987; சண்முகசுந்தரம் 2002; நெடுஞ்செழியன் 2005) எவை இயல், அயல் மற்றும் அயலியல் தாவரங்கள் என்ற விவரங்களோ, எக்கால கட்டங்களில் அயல் தாவரங்களும், அயலியல் தாவரங்களும் தமிழகத்தில் நுழைந்தன / நுழைக்கப்பட்டன என்ற விவரங்களோ அல்லது எதற்காக நுழைந்தன / நுழைக்கப்பட்டன என்ற விவரங்களோ இந்நூல்களில் காணப்பட வில்லை. இந்த அத்தியாயத்தின் நோக்கங்கள் மேற்கூறிய விவரங் களைக் கூடியமட்டும் அறிந்து சுட்டுவதுதான். இந்த நோக்கங்களை ஆய்ந்தறிய முதலில் தமிழ் இலக்கிய நூல்களில் எவை எவை எந்தெந்தக் காலகட்டங்களைச் சேர்ந்தவை என்பதை நிர்ணயம் செய்துகொள்ள வேண்டியதாகிறது. பெரும்பாலான, தமிழ் மற்றும் வரலாற்று அறிஞர்கள் பல்வேறு இலக்கிய நூல்களுக்கான காலங் களைப் பற்றி ஏற்றுக்கொண்ட கருத்துக்கள் பற்றிய விவாதம் ஏற்கனவே இந்நூலில் சுட்டப்பட்டுள்ளன. மேலும் இந்த விவாதத் தின் அடிப்படையில் தமிழ் இலக்கிய வரலாற்று அறிஞர்கள் வகைப் படுத்திய இலக்கிய வரலாற்றுக் காலங்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன. அவ்வாறு ஏற்றுக்கொண்டதில் ஏதாவது காலநிர்ணய இடர்ப்பாடுகள் உள்ளனவா என்பதை இந்த அத்தியாயச் செய்திகள் விளக்க உதவும். மேற்கூறிய அடிப்படைகளில் அடையாளங் கண்டுபிடிக்கப்பட்ட தாவரங்கள் பின்னிணைப்பு - 4-இல் கொடுக்கப் பட்டுள்ளன.

i) தொல்காப்பியக்காலம் :

நமக்குக் கிடைத்துள்ள பழம்தமிழ் நூல்களிலேயே மிகப் பழமையானதாகக் கருதப்படுவது தொல்காப்பியம்தான் (எனினும், இந்த நூலின் முதல் அத்தியாயச் செய்திகளைப் பார்க்க). தொல்காப்பி யத்தில் ஏறத்தாழ ஐம்பத்து மூன்று தாவரங்கள் குறிக்கப்பட்டுள்ளன (பின்னிணைப்பு - 1). இவற்றில் மரங்கள் 31 ஆகும் (யா, மா, எகின், குமிழ், விசை, ஞெமை, நமை, பனை, அரை, ஆண், ஆர், வெதிர், சார், பூல், வேல், ஆல், வேம்பு, கடு, இல்லம், சே, ஒடு, புளி, உதி (ஒதி), மருதம், வாகை, பாலை, காஞ்சி, உன்னம், நொச்சி, வேய், தடா). குறுமரங்கள் 2 ஆகும் (பிடா, வெட்சி); புதர்ச் செடிகள் 8 ஆகும் (ஆவிரை, எள், குறிஞ்சி, தும்பை, கரந்தை, காயா, நெல், பூவை);

கொடிகள் 7 ஆகும் (தளா, பீர், வஞ்சி [1], முல்லை, உழிஞை, காந்தள், வள்ளி); நீர்த்தாவரங்கள் 4 ஆகும் (ஆம்பல், நெய்தல், தாமரை, குவளை). விரிச்சி மரமா, செடியா, கொடியா என்று சரியாக நிர்ணயம் செய்ய முடியவில்லை; மரமாக இருக்க வாய்ப்பு உள்ளது. தொல் காப்பியத் தாவரங்களின் தற்காலத் தாவரப் பெயர்கள் பின்னிணைப்பு - 4-இல் சுட்டப்பட்டுள்ளன. இவற்றில் எந்தவித ஐயப்பாடுகளு மின்றித் தற்காலத் தாவரப் பெயர்கள் கண்டுபிடிக்கப்பட்டவை பல. தற்காலத் தாவரப் பெயரே குறிப்பிடப்படாமல்/அறியப்படாமல் இருப்பவை இரண்டு (விசை மற்றும் அரை) ஆகும். தடா (தடவு)வின் தாவரப் பெயரையும் சரியாக அறிய முடியவில்லை. மீதமுள்ள தாவரங்களுக்குத் தற்காலத் தாவரப் பெயர்கள் கொடுக்கப் பட்டுள்ளன. அவற்றைப் பற்றி ஒரு சில கருத்து வேறுபாடுகள் இருப்பதால் அவை தனித்தனியாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் படுகின்றன.

எழுத்ததிகாரத்தில் குறிப்பிடப்படும் 'யா' மரத்தின் [2] தற்போதைய தாவரப் பெயர் தெரியவில்லை என்று சீநிவாசன் (1987) குறிப்பிட்டுள்ளார். 'யா' மரம் என்பது 'ஆ' மரம் என்றாகி காலப் போக்கில் 'ஆச்சா' என்று பெயர் பெற்றுள்ளது என்று சதுரகராதியில் வீரமாமுனிவர் கூறியுள்ளார். சங்க இலக்கியத்திலும் இது 'யா' என்றே சுட்டப்பட்டுள்ளது (அகம்.:33, 59, 63, 391; நற்.: 186, 193). சிலப்பதிகாரத்திலும் திவாகர நிகண்டிலும் 'ஆ' என்று வழங்கப் பட்டுள்ளது. ''யாஅ வொண்டளிர் அரக்கு விதிர்த்தன்ன'' என்று அகநானூறு (அகம்.:333) குறிப்பிடுவதிலிருந்து, இதன் தளிர்களில் ஒளிமிகுந்த செம்மையான புள்ளிகள் இருப்பதை உணர முடிகிறது. இதன் அடிப்படையில் இது ஆச்சாமரம் என்பது புலனாகிறது (ஜான் பிரிட்டோ 1994). இம்மரத்தில் ஆழமாகத் துளையிட்டால் ஒருவித நீரினைப் பெறலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பாலை நிலத்தில் நீரில்லாச் சூழலில் யானைகள் தாகத்தைத் தணிக்க யாமரக் கிளைகளை ஒடித்து அதனின்று வெளிப்படும் நீரைக் குடித்தன (சாமி 1967) என்று பின்வரும் சங்கப்பாடல் வரிகளால் தெரியவருவது மேற்கூறிய கருத்தை வலியுறுத்துகிறது : ''மிசைமரம் சேர்த்திய கவைமுறி யாஅத்து நாரரை மருங்கின் நீர்வரப் பொளித்துக் களிறு சுவைத்திட்ட

1) வஞ்சி என்பது கொடியா, மரமா என்பது தெளிவாகத் தெரியவில்லை (பார்க்க பக்கம் 93)

2) ''யாமரக் கிளவியும்'' (தொல்.:எழுத்து:உயிர்:27)
''யாமரக் கிளவியும் பிடாவும் தளாவும்'' (தொல்:எழுத்து:உயிர்:27)

கோதுடைத்த தரல்'' (அகம்:257). இந்த நீர் (''நாரரை மருங்கு'') மணமுள்ளது; இம்மரத்தின் கோது வெளியில் கிடந்தது. எனவே 'யா' என்பது ஆச்சா என்று பின்னால் அழைக்கப்பட்ட *Hardwickia binata* என்பது தெளிவாகிறது. இது இலக்கியம் கூறுவது போன்று ஒரு வறண்டநிலத் தமிழகத் தாவரமாகும்.

'பிடா' என்று தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தாவரம் சங்க இலக்கியத்தில் பிடவு மற்றும் பிடவம் என்ற வேறு சொற்களாலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஒரு குற்று மரமாகும்; இலையுதிர் மரமாகும்; இதன் பூ பெரிதாகவும், வெண்மையான தாகவும், நறுமணமுடையதாகவும் இருக்கும். கொத்தாகப் பூக்கும்; கார் காலத்தில் பூக்கும்; காட்டில் கம்மென மணக்கும். இந்த அனைத்துச் செய்திகளும் சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளன (சாமி 1967). எனினும் சாமி (1967) இதன் தாவரப் பெயரைக் குறிப்பிட வில்லை; அவரால் அறிய முடியவில்லை போலும். கோவை இளஞ்சேரன் (1982) மற்றும் சீநிவாசன் (1987) இதன் தாவரப் பெயர் *Randia malabarica* என்று குறிப்பிடுகிறார்கள். இதன் புறத்தில் முட்கள் இருக்கும் என்று கலித்தொகை குறிப்பிடுகிறது [1]. ஜான் பிரிட்டோ (1994) இதன் பெயர் *Gardenia resinifera* என்று கூறுகிறார். இது தவறான கணிப்பு எனக் கருத இடமிருக்கிறது. இதில் பூக்கள் இலக்கியத்தில் பிடவத்தின் பண்பாகக் குறிப்பிட்டது போலக் கொத்தாகப் பூப்ப தில்லை. எனவே இது *Randia malabarica* -வாகத்தான் இருக்க வேண்டும்.

தளா மற்றும் முல்லை பற்றிய விவாதங்கள் சங்க இலக்கியத் தாவரப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன (பார்க்க, பக்கம் 103)

'எகின்' என்ற மரத்தைப் பற்றித் தொல்காப்பியம் குறிப்பிட் டுள்ளது [2]. இதற்குப் புளியைக் குறிக்கும் *Tamarindus indica* என்ற தாவரப் பெயரைக் கொடுக்கின்றார் ஜான் பிரிட்டோ (1994). ஆனால், தொல்காப்பியத்திலேயே 'புளி' என்ற சொல்லும் பயன்படுத்தப் பட்டுள்ளது [3]. இதற்கும் *Tamarindus indica* என்ற பெயர் ஒரு சிலரால் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. சங்க இலக்கியத்தில் 'புளி' என்ற தாவரம் இருப்பதாக சீநிவாசன் (1987) தன்னுடைய நூலில்

---

1) *''தளிபெறு தண்புலத்துத் தலைப்பெயற்கு அரும்பீன்று முளிமுதற் பொதுளிய முட்புறப்பிடவமும்'' (கலி.:101:1-2)*

2) *''எகின் மரமாயின்'' (தொல்.:நூ.:336)*

3) *''புளிமரக் கிளவி'' (தொல்.:நூ.:244)*

குறிப்பிடவில்லை. இதைப் போன்று சாமியும் (1967), கோவை இளஞ்சேரனும் (1984) 'புளி' என்ற தாவரத்தைப் பற்றித் தங்களுடைய நூல்களில் குறிப்பிடவில்லை. சங்க இலக்கியத்தில் மதுரைக் காஞ்சியில் (மது.கா.1, 318) தீம்புளி என்ற உணவு பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது (வெல்லமும் புளியும் சேர்ந்தது). இதேபோன்று பட்டினப் பாலையில் வரண்ட நாட்டில் விளைந்த அரிசி, மூங்கிலரிசி, புளி மற்றும் அவரை சேர்க்கப்பட்ட ஒருவிதமான கஞ்சி வைக்கப் பட்டது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது (Yegna Narayan Aiyer 1956). *Tamarindus indica* என்று தற்போது பயன்படுத்தப்படும் புளியைக் கொடுக்கும் புளிய மரம் அழைக்கப்பட்டாலும், இதன் சிற்றினச் சொல்லான 'indica' என்பதிலிருந்து இது ஒரு இந்தியத் தாவரம் என்று எவரும் கருதக்கூடாது. இந்தியாவில், தமிழகம் உள்பட, இத்தாவரம் எங்கும் இயல்பாக வளர்வதில்லை. இதன் இயல்பு உறைவிடம் ஆப்ரிக்க கண்டமாகும். அங்கு இது இயல்பு சூழலில் (wild environment) காணப்படுகிறது. எனவே இது அங்கிருந்து இந்தியாவை அடைந் திருக்க வேண்டும். ஆப்ரிக்காவின் அபிசீனியா பகுதியைச் சேர்ந்த இசுலாமிய அடிமைகளால் (இவர்கள் Habishi குடியேறியவர்கள் என்று அழைக்கப்படுவர்) ஏறத்தாழ கி.பி. 14ஆம் நூற்றாண்டில்தான் இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும் (Swamy 1976). சங்க இலக்கியத்திலும், தொல்காப்பியத்திலும் குறிப்பிடப்படும் புளி தற்போது நம்மால் பயன்படுத்தப்படும் புளியாக இருக்க முடியாது. அப்படியென்றால், சங்ககாலப் புளி எந்தத் தமிழகத் தாவரத்திலிருந்து பெறப்பட்டது? தொல்காப்பியர் கூற்றுப்படி இத்தாவரம் ஒரு மரமாக இருக்கவேண்டும். இன்றும் தென்னிந்தியாவின் மேற்குத்தொடர்ச்சி மலை மற்றும் மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் காணப்படும் *Garcinia cambogea* என்ற சிற்றினத்தின் பழத்தைப் புளியாகப் பயன்படுத்து கின்றனர். வடக்கு கர்நாடக மற்றும் கோவாவின் சந்தைகளில் இந்தப் புளி இன்றும் விற்கப்படுவதைக் காணலாம். மரவகையைச் சேர்ந்த இந்தச் சிற்றினம் மேற்குமலைத் தொடர்ச்சியின் தெற்கு முனையி லிருந்து மகாராஷ்டிரா வரை இன்றும் காணப்படுகிறது. எனவே தமிழிலக்கியத்தில் இரண்டு இடங்களிலும் தொல்காப்பியத்தில் ஓர் இடத்திலும் குறிப்பிடப்படும் 'புளி' தற்போது பரவலாகப் பயன்படுத்தப்படும் *Tamarindus indica* என்ற மரத்தின் புளியல்ல; *Garcinia cambogea* பழத்திலிருந்து பெற்ற புளிதான் (= கோரக்கர் புளி). 18, 19ஆம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட பயணக் குறிப்புகளில் உணவு பற்றியும், உணவுப் பொருட்கள் பற்றியும் பலர் எழுதி யுள்ளனர். (எடுத்துக்காட்டாக, கோலா சோஷாசல கவியின் ''நீலகிரி

யாத்திரை'' என்ற பயண நூலைக் குறிப்பிடலாம்). இந்த நூல்களின் அடிப்படையில் சஞ்சய் சுப்பிரமணியன் (2004) இந்தியாவின் 'புளிக்கோடு' பற்றிய சுவாரசியமான விவரத்தைக் குறிப்பிடுகிறார். கி.பி. 1800ஆம் ஆண்டளவில் இந்தியாவின் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் பயணம் செய்தபோது ஒரு கட்டத்தில் புளியும் புளி கலந்த உணவும் கிடைப்பது கடினமாகிறது என்றும், எனுகுல வீராசாமியின் ''காசி யாத்திரை சரித்திரம்'' என்ற நூலில், இந்த புளிக்கோடு தென்னிந்தியாவின் மகாராஷ்டிரப் பகுதியின் ஆரம்பத்தில் (அதாவது வட ஆந்திராவின் முடிவில்) முடிவடைந்து விடுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளது இங்கு நோக்கத்தகுந்தது. தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'எகின்' என்ற தாவரத்தைக் குறிக்கும் சொல் சங்க இலக்கியத்தில் காணப்படுவதாகத் தெரியவில்லை. இது வேறு ஏதோ தாவரத்தைக் குறிப்பதாகும். நிச்சயமாகப் புளியை அல்ல! எகின் *Spondias pinnata* ஆக இருக்கலாம் என்பது என்னுடைய கருத்து.

'குமிழ்' என்ற தாவரம் மரம் எனத் தொல்காப்பியம் கூறுகிறது [1]. இது சங்க இலக்கியத்திலும் குமிழ், குமிழம் மற்றும் பெருங்குமிழ் என்று சுட்டப்பட்டுள்ளது. இதற்கு *Gmelina asiatica* என்ற தாவரப் பெயரைக் கோவை இளஞ்சேரனும் (1982) சீநிவாசனும் (1987) சுட்டியுள்ளனர். *Gmelina asiatica* ஒரு பெரிய முட்செடி, மரமல்ல (சண்முக சுந்தரம் 2002). எனவே தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள 'குமிழ்' *Gmelina arborea* (படம் 17) தான், *Gmelina asiatica* அல்ல. பிந்தையது இலக்கியத்தில் நிலக்குமிழ் என்று சுட்டப்பட்டுள்ளது.

'ஞெமை' ஒரு மரம் என்பதாகத் தொல்காப்பியர் சுட்டியுள்ளார் [2]. ஆனால் இந்தப் பெயர் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப் படவில்லை. சங்க இலக்கியத்தில் இது ஓமை என்றும் நமை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் தற்காலத் தாவரப் பெயராக *Anogeissus latifolia* (படம் 18) கருதப்படுகிறது (சண்முக சுந்தரம் 2002). இவரின் கூற்றுப்படி, இது தற்பொழுது வெள்ளை ஞெமை என்று அழைக்கப்படுகிறது; இது வசதியான சூழலில் மிகப்பெரிய மரமாக வளரக் கூடியது என்பதும், கிழக்கு மேற்கு மலைத் தொடர்களின் முல்லைநில இலையுதிர்க் காடுகளிலும் மற்றும் சமவெளிகளிலும் பரவலாகக் காணப்படுகிறது என்பதும் தெரியவருகிறது.

---

1) ''குமிழ் என் கிளவி மரப்பெயராயின்'' (தொல்.ஃஎழுத்து.ஃபுள்ளி.ஃ91)

2) ''விசைமரக் கிளவியும் ஞெமையும் நமையும்'' (தொல்.ஃஎழுத்து.ஃஉயிர்.ஃ80)

'ஆண்' என்றொரு மரமும் தொல்காப்பியத்தில் சுட்டப் பட்டுள்ளது [1]. இதற்கு *Alangium salvifolium* என்ற தாவரப் பெயரை நெடுஞ்செழியன் (2005) சுட்டுகிறார். அவரே தொல்காப்பியத்தில் இன்னொரு இடத்தில் குறிப்பிடப்படும் 'சே' என்ற மரத்திற்கும் இதே தாவரப் பெயரைக் குறிப்பிடுகிறார் [2]. ஆனால் சங்க இலக்கியத்தில் சே என்ற பெயர் காணப்படவில்லை (சீநிவாசன் 1987). சிலப்பதிகாரத்தி லும் (சிலம்பு.2:12.2) [3], பிங்கல நிகண்டிலும் இப்பெயர் காணப்படு கிறது. எனவே 'சே' என்பது சங்க காலத்திற்குப் பின் அழிஞ்சில் எனப்படும் *Alangium salvifolium* என்ற தாவரத்திற்குத் தொல்காப்பியர் சுட்டிய பெயராக இருக்க வேண்டும். 'ஆண்' மரம் என்பதைத் தற்போதைய தாவரப் பெயரில் அடையாளங்காட்ட முடியவில்லை. மரப்பெயர் பற்றி 68 இடங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மரங்களைப் பற்றிப் பேசும் சூடாமணி நிகண்டு வன்மரங்களை 'ஆண் மரங்கள்' என்று சுட்டுவதை இங்குக் குறிப்பிட வேண்டும். வீரமாமுனிவரும் தன்னுடைய சதுரகராதியில் அகவயிரம் உள்ள மரங்களை ஆண் மரங்கள் என்று குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது. எனவே தொல்காப்பியர் சுட்டும் 'ஆண்' என்ற சொல்லை வன்மரங்களைச் சுட்டும் பொதுவானச் சொல்லாகக் கருதலாம்.

'பீர்' என்ற கொடி [4,5] பீர்க்கம் எனப்படும் *Luffa cylindrica* ஆகும்; சீநிவாசன் (1987) குறிப்பிடப்பட்டுள்ளது போல *Luffa aegyptiaca* அல்ல.

'வஞ்சி' என்ற தாவரப் பெயர் தொல்காப்பியத்தில் சுட்டப் பட்டுள்ள மற்றொரு சொல்லாகும் [6]. இதே சொல் சங்க இலக்கியத்தில் அடிக்கடி காணப்படுகிறது. Lushington (1915) மற்றும் Gamble (1915) *Salix tetrasperma* தான் வஞ்சி என்று குறிப்பிடுகின்றனர். ''வஞ்சிக்கோட்டு உறங்கு நாரை'' (புறம் 384:2) என்று கூறப்பட்டிருப்பதால் இது ஒரு மரமாக இருக்கவேண்டும் என்றும் ''பகைவர் மேற்சேறலும், புதலும், மங்கையும், பாவிலோர்பாவும், ஓர்பதிப்பெயரும், மாற்றார் குடையும் வஞ்சி ஆகும்'' என்று பிங்கல நிகண்டு (பிங்.நி.4015)

---

1) *''ஆண் மரக்கிளவி அரை மர இயற்றே'' (தொல்.:எழுத்து.:புள்ளி.:9)*

2) *''சேவென் மரப்பெயர்'' (தொல்.:எழுத்து.:உயிர்.:76)*

3) *சே என்பதற்கு சிலம்பின் அரும்பத உரையாசிரியர் அழிஞ்சல் என்று பொருள் கொள்கிறார். ''சே என்பது ஒரு மரம்; உழிஞ்சிலுமாம் அழிஞ்சிலுமாம்''*

4) *''பீர்'' என்ற பெயர் மரவகை ஒன்றிற்கும் பெயராக அமைந்திருக்கலாம் என்று நெடுஞ்செழியன் (2005) கருதுகிறார்.*

5) *''ஆரும் வெதிரும் சாரும் பீரும்'' (தொல்.:எழுத்து.:புள்ளி.:68)*

6) *''வஞ்சிதானே முல்லையது புறனே'' (தொல்.:பொருள்.புற.:6)*

கூறுவதால், இது ஒரு புதர்ச் செடியாக இருக்க வேண்டும் என்றும், ஒரு கொடியாக (''வஞ்சிக் கொடி'' என்ற பயன்பாடு பரவலாக இருத்த லாலும் மங்கையோடு இப்பெயர் தொடர்புப்படுத்தப்படுவதாலும்) இருக்கவேண்டும் என்று வேறு சிலரும் கருத்து தெரிவித்துள்ளனர். *Salix tetrasperma*-வை ஆற்று வஞ்சி என்று சண்முகசுந்தரம் (2002) குறிப்பிடுகிறார். *Salix tetrasperma*-வின் பூக்கள் சிறியவை கதிர்களைப் போன்று Spike என்ற மஞ்சரியில் அமைந்தவை. இதன் பூக்கள் போர்ப்பூவாக அமைந்திருக்குமா என்பது சந்தேகமே. சாமி (1967) போன்ற ஒரு சிலர் வஞ்சிக்கு இலுப்பை மரத்தின் தாவரவியல் பெயரான *Bassia latifolia* என்பதைத் தவறாகக் கொடுத்துள்ளனர். இலுப்பையின் பூக்கள் பெரிதாக இருந்தாலும், வெறுக்கத்தக்க வாடையைக் கொண்டவை. எனவே இதனுடைய பூக்களும் போர்ப்பூவாக அமைந்திருக்குமா என்பது சந்தேகமே. சிறு சீந்தில் கொடியே (*Cocculus cordifolius*) வஞ்சிக் கொடி என சுந்தர சோபிதராஜ் (1994) குறிப்பிடுகிறார். கோவை இளஞ்சேரன் (1982) இது *Calamus rotang* என்ற பிரம்பின் தாவரவியல் பெயரைக் கொண்டது எனக் கருதுகிறார். ஆனால் வஞ்சி, இவை இரண்டாகவும் இருப்பதற்கு வாய்ப்பில்லை. அமிர்தலிங்கம் (Amirthalingam 1998, a, b, c) இதனை *Tinospora cordifolia* என்ற கொடித் தாவரமாகக் கருதுகிறார். எனவே தொல்காப்பிய மற்றும் சங்க இலக்கிய வஞ்சிக்குச் சரியான தாவரப் பெயரை இன்னும் அறிய முடியவில்லை என்றே கூற வேண்டும். என்னுடைய கருத்துப்படி வஞ்சி என்ற ஒரே பெயர் இலக்கியத்தில் ஒரு கொடிக்கும் ஒரு மரத்திற்கும் சுட்டப்பட்டிருக்க வேண்டும். எனவே வஞ்சிக்கொடி *Tinospora cordifolia* (படம் 19) ஆக இருக்க அதிக வாய்ப்புகள் உள்ளன. உழிஞைக் கொடி போன்றே வஞ்சியும் போர்க் கொடியாக இருக்கவேண்டும். புறநானூற்றில் (384:2) குறிப்பிடப் பட்டுள்ள வஞ்சி மரம் தற்பொழுது பூவரசு (படம் 20) என்று கூறப்படும் *Thespesia* வின் சிற்றினமாக இருக்கவேண்டும்.

'மருதம்' என்பது [1] மருத நிலத்தின் தலைமைத் தாவரமாகும். இதன் தாவரப் பெயர் *Terminalia arjuna* என்று பலர் கருதினாலும் (சீநிவாசன் 1987), *Lagerstroemia flos-reginae* (இதன் தற்போதைய தாவரப் பெயர் *Lagerstroemia reginae* ஆகும்) என்று சாமி (1967) மற்றும் கோவை இளஞ்சேரன் (1982) ஆகியோர் கருதுகின்றனர். இதற்கு இவ்விருவரும் காட்டும் முக்கியக் காரணம் என்னவென்றால் இலக்கியத்தில் மருதமரம் வெண்மை நிறமான அடிமரத்தையும், அழகான ஊதா

1) ''உழிஞைதானே மருதத்தின் புறனே'' (தொல்.:பொருள்.:புற.:8)

நிறம் கலந்த இளஞ்சிவப்பூ[1] பூக்களையும், புறவிதழ் நீலம் கலந்த பசுமை நிறத்தையும் கொண்டிருக்கின்றன என்று குறிப்பிட்டிருப்பது தான். *Terminalia arjuna* (வடமொழியில் அர்சுனம்) அழகிய சிவந்த பூக்களைக் கொண்டிருப்பதில்லை இதன் பூக்கள் அழகற்றவை. சிறியவை. கண்களைக் கவரும் நிறமற்றவை. பசுமை நிறைந்த வெண்மை நிறத்தைக் கொண்டவை. *Lagerstroemia reginae*-வின் பூக்கள் ஊதா கலந்த செந்நிறம் (mauve) கொண்டவை. இது தற்பொழுது பூ மருது என்று அழைக்கப்படுகிறது. எனவே மருதம் *Lagerstroemia reginae* தான். செம்மருதம் என்று சங்க இலக்கியம் குறிப்பிடுவதும் இத்தாவரத்தைத் தான். வெள்ளை மருது (தற்பொழுது பேச்சு வழக்கில் குலமருது என்றும் அழைக்கப்படுகிறது) என்ற தாவரம் தான் *Terminalia arjuna*-ஆக இருக்க வாய்ப்புள்ளது. பூ மருது மருத நிலத்தில் சங்க காலத்தில் மிகப் பரவலாகக் காணப்பட்டு, தற்பொழுது மிகவும் அரிதாகக் காணப்படும் மரமாக மாறிவிட்டது என்று கொள்ள வேண்டும்.

தற்பொழுது 'வாகை' என்ற பெயர் *Albizia* என்ற தாவர பேரினத்தின் சிற்றினங்களுக்கு தான் இடப்படுகிறது. ஆனால் இலக்கியத்தில் உள்ள வாகையின் உண்மையான சிற்றினப்பெயர் என்ன என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். சங்க இலக்கியச் செய்திகளை மிகக் கவனமாக ஆய்ந்தறியும் போது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மரங்கள் வாகை என்று அழைக்கப்பட்டிருக் கின்றன என்பது தெளிவாகிறது. மேலும், இலக்கியத்தில் வாகை, கருவாகை, அத்தவாகை, கடவுள்வாகை, குமரிவாகை, பார்ப்பன வாகை, பெருவாகை போன்ற மரப்பெயர்கள் காணப்படுகின்றன. இவை அனைத்தும் நிச்சயமாக *Albizia* பேரினத்தைச் சேர்ந்த சிற்றினங்களாகும். இலக்கியத்தில் குறிப்பிட்டுள்ள வாகையின் பண்புகள் பின்வருபவன : ஒருவகை வாகை மிகப் பெரியமரம்; வறண்ட நிலத்தில் வளர்வது; கவட்டு இலைக் கொண்டது; கொத்தாகப் பூக்கும்; மென்மையான பூக்கள் கொண்டது; மலர் வெண்மையானது; காற்றில் நெற்றுகளில் உள்ள விதைகள் 'கலகல' வென ஒலிக்கும். இன்னொரு வகை வாகையின் மலர்கள் செந்நீல நிறமுடையவை; பூக்கள் திரண்ட காம்பை உடையவை. *Albizia*-வின் எந்தச் சிற்றினமும் கவட்டிலைக் கொண்டதல்ல. வெண்மையான மலர் கொண்ட *Albizia* சிற்றினங்கள் *A. odoratissima* (கருவாகை) மற்றும் *A. amara* ஆகிய இரண்டும் தான். இவற்றில் மேலே கூறப்பட்ட முதல்

---

1) ''முடக்காஞ்சிச் செம்மருதின் (பொருநர்.:189)
''செவ்வீ மருதின் செம்மலோடு தாஅய்'' (குறு.:50:2).

வகை வாகை *A. odoratissima*-ஆக இருக்க வேண்டும் (படம் 21); ஏனெனில் இது மிகப் பெரிய மரமாகும். இதன் தற்போதைய 'கருவாகை' என்ற பெயர் இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'கருவாகை' என்ற பெயரோடு ஒத்துள்ளது. இலக்கிய வாகைக்கு பலர் குறிப்பிடும் சிற்றினமான *A.lebbeck*-ன் பூக்கள் வெளிர் பசுமை நிறம் கொண்டவை. கவட்டிலை வாகையின் ஒரு பண்பாக இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதால் சற்று சிக்கல் எழுகிறது. ஆனால் வாகையின் இலையைக் கூர்ந்து கவனித்தால் இச்சிக்கலுக்கு எளிதான விடை கிடைக்கும். இதன் இலை ஒரு கூட்டிலை; பல சிற்றிலைகளைக் கொண்டது. இந்த சிற்றிலைகள் இரண்டிரண்டாக ஒன்றுக்கொன்று எதிராக மையக்காம்பில் (rachis) அமைந்துள்ளன. நுனிச் சிற்றிலை இணைகள் (pairs) இரண்டும் விரிந்து 'கவட்டிலை' போன்று தோற்றமளிக்கின்றன. சங்க கால மக்கள் தனி இலை (simple leaf) மற்றும் கூட்டிலை (compound leaf) பற்றிய கருத்துருவை அறிந்திருக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆம்பல், நெய்தல், குவளை போன்றவற்றைப் பற்றிய விளக்கங்கள் சங்க இலக்கியத் தாவரங்கள் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

மேலே கூறப்பட்ட விவரங்களின் அடிப்படையில் ஒருசில முக்கிய முடிவுகள் எழுகின்றன : *(1)* தொல்காப்பியத் தாவரங்களில் தமிழகத்தின் இயல்புத் தாவரங்களாகத் திகழ்பவைகளின் எண்ணிக்கை *42* ஆகும். ஆலமரம் (*Ficus bengalensis*) மட்டும் தமிழகத்தைச் சார்ந்ததல்ல. ஆனால் தொல்காப்பியக் காலத்திற்கு முன்பே இது தமிழகத்தை அடைந்துவிட்ட ஒரு அயல்தாவரமாகும். இது தமிழகத்தில் இன்று வரை எங்கும் இயற்கையாகக் காணப்பட்டதில்லை. இது வடநாட்டிலிருந்து அசோகர் காலத்திலோ அதற்குச்சற்று முன்போ புத்த மதத்தோடு தமிழகத்தை அடைந்திருக்க வேண்டும். *(2)* மா, பீர், எள் மற்றும் நெல் தொல்காப்பியர் காலத்திலேயே தமிழகத்தில் பயிரிடப்பட்ட தாவரங்களாகும். இந்த நான்குமே இந்திய மையத்தில் தோன்றிப் பரிணாமம் அடைந்த பயிர்த் தாவரங்களான ஏறத்தாழ *120* பயிர்த் தாவரங்களில் இடம்பெறுகின்றன. வாவிலோவ் (Vavilov 1949-1950) என்ற சோவியத் நாட்டுத் தாவரவியல் அறிஞர் வலியுறுத்திய உலகின் 8 பயிர்த்தாவரப் பரிணாம மையங்களில் (Centres of origin and domestication of crop plants) ஒன்று நம் நாடு என்பது குறிப்பிடத்தக்கது. *(3)* தொல்காப்பியத்தில் சுட்டப்பட்டுள்ள ஒருசில தாவரப் பெயர்கள் சங்க இலக்கியத்தில் காணப்படவில்லை என்ற செய்தி வியப்பளிக்கிறது. எடுத்துக்காட்டு

களாக எகின், ஞெமை, ஆண்?, சார், பூல் போன்றவற்றைக் கூறலாம். இதற்கு மூன்றுவிதக் காரணங்கள் இருக்கலாம். ஒன்று தொல்காப்பியர் இருந்த காலத்தில் காணப்பட்ட இத்தாவரங்கள் சங்க காலத்தில் மறைந்திருக்கலாம். இரண்டு, இந்தத் தாவரப் பெயர்கள் மாறி சங்க காலத்தில் இவை வேறு பெயர்களைப் பெற்றிருக்கலாம். எடுத்துக் காட்டாக 'சே' என்ற தாவரம் 'அழிஞ்சில்' என்ற பெயரால் அழைக்கப் பட்டது. மூன்று, தொல்காப்பியம் ஒருசில அறிஞர்கள் குறிப்பிடுவது போன்று சங்க காலத்திற்குப் பின்பட்டதாக இருக்கலாம் அப்படி யெனில், சங்க காலத் தாவரப் பெயர்கள் மாறித் தொல்காப்பியத்தில் வேறு பெயர்களைப் பெற்றிருக்கலாம்.

(ஆ) சங்க காலம்

சங்க இலக்கியத்தில் ஏறத்தாழ 260 தாவரப் பெயர்கள் காணப்படுகின்றன. இவற்றில் ஒரு சில பெயர்கள் ஒரே தாவரத்தைச் சுட்டும் வெவ்வேறு பெயர்களாக விளங்குவதால், சங்க இலக்கியத் தாவரங்களின் சரியான எண்ணிக்கை ஏறத்தாழ 200-ஆகக் குறைகிறது. இவற்றின் விவரங்கள் பின்னிணைப்பு - 1இல் காணப்படுகின்றன.

சங்க காலத்திலேயே அவரை (மொச்சை), உழுந்து (பின்னால் உளுந்து என்று மருவியது), எள், எலுமிச்சை, ஏனல் (தினை, குரல்), நெல் (ஐவனம், செந்நெல், தோரை, வெண்ணெல்), கமுகு, கரும்பு, கறி (மிளகு), கடுகு, சேம்பு, தெங்கு (தென்னை), மா, பருத்தி, பலா, பாகல், பீர் (பீரம், பீர்க்கு), மாதுளை, முருங்கை, சேம்பு, வரகு, வாழை, வெற்றிலை, கொள்ளு போன்றவை பயிர்த் தாவரங்களாகத் தமிழகத்தில் திகழ்ந்தன. இவற்றில் அவரை, உழுந்து, எள், எலுமிச்சை, ஏனல், நெல், கரும்பு [1], மிளகு, முருங்கை, கொள்ளு,

---

1) கரும்பு நம் நாட்டுத் தாவரமல்ல என்றும், இதனை அதியமான் மரபினர் வெளிநாட்டிலிருந்து (சீனா) கொணர்ந்து தமிழகத்தில் பயிராகப் பரவலாக்கினர் என்றும் பரமசிவன் (2001) கருதுகிறார். ஆனால் அதியமான் பரம்பரை ஆண்ட பகுதிக்குத் தமிழகத்தின் மற்ற பகுதிகளில் இருந்து கரும்பு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பயிர்த் தாவரமாக நுழைக்கப்பட்டது என்பதுதான் உண்மை. விளைந்த கரும்பை வெட்டி எடுத்து அதிலிருந்து சாற்றைப் பிரித்தெடுக்கக் கரும்புபிழி எந்திரம் பயன்பட்டதைப் பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, புறநானூறு ஆகியவை சுட்டுகின்றன.

''கரும்பினெந்திரஞ் சிலைப்பினயல
திருஞ் சுவல் வாளை பிறழும்'' (புறம்.: 322:7-8)

எனவே கரும்பு தமிழ் நாட்டில் சங்க இலக்கியக் காலத்திற்கு முன்பே பயிர்த் தாவரமாகப் பரிணமித்திருக்க வேண்டும்.

வரகு, வாழை, சேம்பு, பருத்தி, மா, பலா, பாகல், பீர் போன்றவை தமிழகத்திலும் (இந்தியாவின் வேறுசில பகுதிகளிலும்) இயல் தாவரங்களில் (wild plants) இருந்து பயிர்த்தாவரங்களாகப் பரிணாமம் (domestication) அடைந்தவை. இவை அனைத்துமே சோவியத் அறிஞர் வாவிலோவ் (Vavilov 1949-1950) என்பவரால் இந்திய மையத்தில் (Indian centre) தோன்றியதாகக் கருதப்படும் ஏறத்தாழ 120 பயிர்த் தாவரங்களில் அடங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. வெற்றிலை, கமுகு (பாக்கு), தெங்கு (தென்னை), கடுகு, மாதுளை, இஞ்சி, மல்லிகை, நந்தி (நந்தியாவட்டை), மஞ்சள் போன்றவை தமிழகத்தில் பயிர்த் தாவரங்களாகப் பரிணமிக்கவில்லை என்பதும், பயிர்த் தாவரங்களாக சங்க காலத்திற்கு முன்போ, சங்க காலத்தின் போதோ தமிழகத்தில் நுழைந்தவையாகும்; அல்லது நுழைக்கப்பட்டவையாகும். யவன அரிசி என்ற பார்லி, ஜாதிக்காய், அதிமதுரம், ஒருவகை அகில் (பின்னால் பார்க்க) போன்றவை தமிழகத்தில் பயிரிடப்படவில்லை. ஆனால் இவை வாணிபப் பொருட்களாகத் தமிழகத்தில் கிடைக்கப் பெற்றன.

சங்க இலக்கியத் தாவரங்களில் கீழ்வரும் தாவரங்களின் தாவரப் பெயர்களை அறிய முடியவில்லை. அற்சிரம், அனிச்சம், இரம், கருத்தாமக் கொடி, காவிதி, கூவை, கைக்கிளை, சுள்ளி, செங்குரலி, செங்கொடுவேரி, தையகம், பாங்கர், பாடாண், பாவை, புதல், புழகு, போங்கம், மாழ்கி, வாள்வீரம் மற்றும் வானி. இவற்றில் ஒரு சிலவற்றிற்கு சீநிவாசன் (1987), கோவை இளஞ்சேரன் (1982) போன்றோர் கொடுத்துள்ள தாவரப் பெயர்கள் தவறானவையாகும். அதர்வை, காவலை, சிலை, தடா (தடவு), பூவை, வடவனம் போன்ற வற்றின் தாவரப் பெயர்கள் இந்த நூலின் ஆசிரியரால் கண்டுபிடிக்கப் பட்டாலும் அறுதியிட்டு கூற முடியவில்லை. ''ஒண் செங்காந்தள் ஆம்பல் அனிச்சம்'' (குறிஞ். 62) ''அரி நீர் அவிழ் நீலம் அல்லி அனிச்சம்'' (கலி.:91) ஆகிய இரண்டு இடங்களில் அனிச்சத்திற்கு முன்பு நீர்த் தாவரங்கள் சுட்டப்பட்டிருப்பதாலும், ''அனிச்சமும் அன்னத்தின் தூவியும்'' என நீர்வாழ் உயிரோடு தொடர்புபடுத்திக் கூறப்பட்டிருப்பதாலும், அனிச்சத்தை நீர்நிலை தொடர்புடைய தாவரமாகக் கொள்வதற்கு வாய்ப்புண்டு என்று நெடுஞ்செழியன் (2005) கருதுகிறார். இப்பார்வையோடு ''நன்னீரை வாழி அனிச்சமே'' என்ற குறளை நோக்க நன்னீர் வாழ்வி என்ற உட்பொருளும் கொண்டதாக அத்தொடரைக் காண இடம் தருகிறது என்று அவர் மேலும் கருதுகிறார். தனது நூலில் அனிச்சம் பற்றி ஆய்வு நடத்திய கோவை இளஞ்சேரன் (1982) அது ஒரு பெரிய அளவு பூ, இளவேனில்

காலத்தில் மலர்வது, கண்ணியாகவும், தாராகவும் அணியப்படுவது, மற்றும் அழகிய நிறத்தது என்ற பண்புகளை இலக்கிய அடிப்படையில் எடுத்துக் கூறியுள்ளார். இந்த அடிப்படையில் அது செங்கழுநீராக இருக்கலாம் என்று நெடுஞ்செழியன் கருதுகிறார். சித்த மருத்துவர் குமாரசாமி இதனை *Anagallis* என்ற கொடித் தாவரமாகக் கருதுகிறார். இது நிச்சயம் செங்கழுநீர் அல்ல; *Anagallis*-ம் அல்ல. சீநிவாசன் (1987) கருதுவது போன்று இது நிச்சயம் *Lagerstroemia flos-reginae*-வும் அல்ல. இதன் சரியான பெயரை இன்னும் அறிய முடியவில்லை என்பதுதான் உண்மை. சங்க இலக்கியம் ''வெண்மறி மாழ்கி யன்ன தாம்பெரும் செவிய'' (அகம் : 104) என்று குறிப்பிடும் 'மாழ்கி' என்ற தாவரம் இன்றைய தொட்டாற் சுருங்கியே என்று சாமி (1967) கருதுகிறார். ஆனால் இது தொட்டாற்சுருங்கி என்ற *Mimosa pudica* என்பதற்கான எந்தவித ஆதாரத்தையும் அவர் கொடுக்கவில்லை.

சங்க இலக்கியத் தாவரங்களில் ஒரு சிலவற்றிற்குப் பின்வரும் விவரங்கள் மட்டுமே இலக்கியத்தில் இருந்து கிடைக்கப் பெற்றுள்ளன :

1) **வாள்வீரம் :** மரம், குறிஞ்சி நிலத்தது.

2) **போங்கம் :** உயர்ந்த மரம், குறிஞ்சி நிலத்தது, நச்சினார்க் கினியர் இதையும், திலகத்தையும் மஞ்சாடி என்றார்.

3) **வடவனம் :** ''வடவனம் வாகை வான்பூங்குடசம்'' (குறி.பா.74) என்பதிலிருந்து இது வடக்கிலிருந்து வந்த வாகையாக இருக்கலாம் என்று ஒருசிலர் கருதுகின்றனர். (species of *Albizia?*)

4) **முஞ்ஞை :** இது கொடியாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஏனெனில் இது காந்தள், முல்லை, பீர் இவற்றோடு வளரக் கூடியது. ஆனால் இது *Premna* என்ற பேரினத்தைச் சேர்ந்த குறுமரமாக இருக்கலாம் என்பது என்னுடைய கருத்து.

5) **புழகு :** செடி, நெருக்கமாக வளரும், வேர்க்கிழங்கு உண்டு. ''அரக்கு விரித்தன்ன பரேரம்புழகு'' (குறி.பா.96) என்றதால் இதன் பூ பருத்தது, மிகவும் பேரழகு கொண்டது அரக்குச் சிவப்பு நிறம் உடையது. ''அகன்றலைப் புழகு'' (பெருங்.:12:27) என்றதால் இது அகன்று விரிந்து தழைக்கும். இதனை மலை எருக்கு என்கிறார் கோவை இளஞ்சேரன் (1982).

6) தெறுழ்வீ : கொடி, கறுமை நிறமானது. பூக்கள் கொத்து கொத்தாகக் காணப்படும். அவை வெளிர் மஞ்சள் நிற முடையவை; பொரி போன்ற உருவமுடைய பூக்கள் கார் காலத்தில் பூப்பவை. இது *Calycopteris floribunda* என்ற கொடித் தாவரமாகும் என்பது என்னுடைய கருத்து.

7) திலகம் : குறிஞ்சி நிலத்தது. இதன் மறுபெயர் மஞ்சாடி யாக இருக்கலாம். (பார்க்க : போங்கம்). மலர் செம்மை நிறம்.

8) நறவம் : கொடி, வெண்மை நிறப்பூ, வளைந்த அக இதழின் முதுகில் ஒரு சிவப்பு, வரிக்கோடு உண்டு; பெருந் தொலைவு மணம் வீசக் கூடியது; அணியக் கூடிய பூ; குறிஞ்சி நிலத்தது, மகரந்தம் பொன்னிறமானது.

9) தடா : பெரிய மரம்; பூ நீண்டு ஊமத்தம் பூ போன்ற உருவங்கொண்டது; பூ நறுமணம் உடையது.

10) கூவிரம் : பாலை நிலத்துத் தாவரம்; மரம்; காய் வாள் போன்று தட்டையாக நீண்டது. இது *Dolichondrone falcata* ஆகும் என்பது என்னுடைய கருத்து.

11) செங்கொடு வேரி : கோவை இளஞ்சேரன் (1982) இதனை ஒரு மரம் என்கிறார்; செம்மை நிறப்பூ உடையது. கொங்கு வேளிரும் (பெருங்கதை) இதனை முல்லை நிலத்து ஆற்றங்கரை மரமெனக் கருதுகிறார்.

12) செங்குரலி : சிறு செங்குரலி என்று கபிலரும் கொங்கு வேளிரும் பாடினர். இதனைக் கருத்தாமக்கொடி என்றும் கூறுவர். குரலி என்றால் கொத்தான பூ என்று பொருள்; எனவே சிறிய கொத்தான பூக்கள் கொண்டது எனக் கருதலாம்; மருத நிலத்தது; செம்மை நிறப்பூ; நீர்க்கொடி.

13) காவிதி : மருத நிலத்து மலராக இருக்கலாம்; நீர்ப்பூவாக, தாமரை போன்ற அல்லது செங்கழுநீர் போன்று இருக்க லாம்.

14) பாந்தட்படார் : பாம்பு போன்ற தோற்றமுடையது (Species of *Ceropegia?*).

சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற தாவரங்களில் பின்வருபவன பற்றிய விளக்கங்கள் கொடுக்கப்பட வேண்டும். அகரு மற்றும் அகில் என்று அழைக்கப்படும் தாவரத்தின் சரியான தாவரப் பெயரை நிர்ணயம் செய்வதில் சிக்கல்கள் உள்ளன. ராமச்சந்திரன்

(Ramachandran 1963/1964) குறிப்பிடும் 'aloe' என்ற தாவரப் பொருளும் அகிலைத் தான் குறிக்கிறது என்று சுவாமி (Swamy 1967) கருதுகிறார். சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள அகில் (கட்டைகள்) எரிய வைக்கப்படும் போது நறுமணப் புகை வெளியேறும் என்பதும், பெண்கள் தம்முடைய ஈரமான கூந்தலைக் காயவைக்க இதன் புகையைக் காட்டுவர் என்பதும் சங்க இலக்கியத்திலிருந்து தெரிய வருகிறது; எங்கு இந்தக் கட்டை அதிகமாகக் கிடைக்கப் பெற்றதோ அங்கு இது விறகாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிய வருகிறது (இராசமாணிக்கம் *1970*). கால்டுவெல் (Caldwell 1875) தான் முதன் முதலில் அகிலின் உண்மைத் தன்மையை உணர்த்த முயற்சி எடுத்தவர். அகில் என்ற தமிழ்ச் சொல்லில் இருந்துதான் ஹெப்ரூ (Hebrew) மொழியின் 'Shalim' மற்றும் 'ahaloth' என்ற சொற்கள் பெறப் பட்டவை என்று அவர் கருதினார். இக்கருத்தைப் பெரும்பாலான தமிழறிஞர்கள் ஏற்றுக்கொண்டனர். ஆனால், வையாபுரிப் பிள்ளை (Vaiyapuri Pillai 1958) இக்கருத்தோடு ஒப்பாமல், சந்தேகங்களை எழுப்பினார். வடமொழியில் இத்தாவரத்தைக் குறிப்பிடும் சொல் தான் ஹெப்ரூ சொற்களோடு ஒத்துள்ளது என்றும், தமிழ்மொழிச் சொல் அல்ல என்றும் அவர் கருதினார்; மேலும், கால்டுவெல் அவர்களே தன்னுடைய கருத்தை வலிமையாகக் கூறவில்லை என்றும் அவர் எடுத்துக் காட்டினார். அகிலின் சமஸ்கிருதப் பெயர் உகூரு (Ugooru); இந்தி மற்றும் பெங்காலி பெயர் உகூர் (Ugoor); அராபியப் பெயர்கள் 'ayaloogi' மற்றும் 'ayuloogin' மற்றும் பெர்சியப் பெயர் 'ayaloor-chee'. ராக்ஸ்பர்க் (Roxburgh 1820) இதைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்: ''பண்டைய நாட்டில் இருந்த 'calambac' அல்லது agallochum என்ற பொருளைக் கொடுத்த உண்மையான தாவரம் *Aquillaria agallocha* என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை. இது சீனாவின் அருகி லிருந்த கொச்சின்சைனாவிலிருந்தோ உலகின் வேறு எந்த பகுதியி லிருந்தோ சீனாவிற்குக் கொண்டு செல்லப்பட்டது என்று கருது வதற்குப் பதிலாக இந்தியாவின் வடகிழக்குப் பகுதியிலிருந்து சீனாவிற்கு கொண்டு செல்லப்பட்டது என்பதற்கு அதிக ஆதாரங்கள் உள்ளன; இது சீனாவில் அதிக அளவு தேவைப்பட்டது''. இந்தத் தாவரத்தின் உண்மையான இயற்கை உறைவிடம் கொச்சின்சைனா, மலேசியா மற்றும் இந்தியாவின் வடகிழக்குப் பகுதி; இந்தியாவின் வேறு எந்த பகுதியிலும் இது இயற்கையாக வளர்வதில்லை. மேலே கூறப்பட்ட இடங்களிலிருந்து இது பண்டைய தமிழகத்திற்கு வியாபாரப் பொருளாகக் கொண்டு வரப்பட்டதா அல்லது தமிழகத் தில் 'அகில்' என்ற பெயரில் வேறு ஒரு தாவரத்தின் மரக்கட்டைகள்

எரிக்கப்பட்டு நறுமணப் புகை பெறப்பட்டதா என்பது விவாதிக்கப் பட வேண்டிய ஒரு தலைப்பாகும். தமிழகத்தின் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் காணப்படும் அலையாத்திக் காடுகளில் (mangrove forests) இன்றும் காணப்படும் *Excaecaria agallocha* என்ற தில்லை மரமும் (சிதம்பரம் கோவிலின் தல மரம்) அகில் என்ற பெயர் கொண்டது; அதன் கட்டையின் பெயர் 'அகில்'. இதன் கட்டையும் நறுமணம் கொண்டது; அதிக அளவில் கிடைக்கப் பெற்றது; இன்றும் இது விறகாகப் பயன்படுத்தப்படுகிறது. எனவே, இராசமாணிக்கம் *(1970)* குறிப்பிட்ட அகில் இந்தத் தாவரமாக இருக்கலாம் என்பது என்னுடைய கருத்து. அகில் மரத்தை நான்மணிக்கடிகை, பழமொழி நானூறு ஆகியன கள்ளி வகை *(நான்.ம.4. பழ.87)* என்று கூறுகின்றன. *Excaecaria agallocha* கள்ளிப்பால் (latex) கொண்ட Euphorbiaceae தாவரக் குடும்பத்தைச் சார்ந்த மரமாகும். சங்க இலக்கியம் இதனைக் 'காழ்வை' என்ற பெயரால் அழைக்கின்றது [1]. திணைமாலை நூற்றைம்பது அகிலைக் காழகில் எனக் குறிப்பிடுகிறது *(தி.மா.28)*. இது ஒரு மரம் என்பதை நெடுஞ்செழியனும் *(2005)* இலக்கிய அடிப்படையில் உறுதிப்படுத்துகிறார். இவையனைத்தும் என்னுடைய கருத்திற்கு மேலும் வலிவூட்டுகின்றன. ஆனால், சுவாமி (Swamy 1976), இதனைத் தமிழ் நாட்டில் பரவலாகக் காணப்படும் *Dodonaea viscosa* (தமிழ்ப் பெயர் விராலி) என்ற தாவரமாகக் கருது கிறார். இதனுடைய கட்டையும் எரித்தால் மணம் கொடுக்கும் என்பதும், சந்தனத்தின் கலப்புப் பொருளாக இது பலகாலம் திகழ்ந்திருக்கிறது என்பதும் அவருடைய வாதங்கள். எனக்கு அவருடைய கருத்தில் உடன்பாடு இல்லை. ஏனெனில் *Dodonaea viscosa* தமிழகத்தில் எங்கும் மரமாக வளர்வதில்லை; பெருஞ்செடியாகத் தான் இருக்கும்; இது கொடுக்கும் மரக்கட்டையின் அளவு மிகமிகக் குறைவு. எனவே தமிழகத்திற்கு வெளியிலிருந்து வந்த அகில் (குறிப்பாக இந்தியாவின் வடகிழக்குப் பகுதியிலிருந்து) *Aquillaria agallocha* என்பதிலும், தமிழ்நாட்டு அகில் *Excaecaria agallocha* என்பதிலும் சந்தேகமில்லை.

முல்லை, மல்லிகை மற்றும் இவை தொடர்பான தாவரங்களின் தாவரப் பெயர்களில் மட்டுமல்லாது, அவற்றில் எவையெவை தமிழகத்தின் இயல்புத் தாவரங்கள், எவையெவை புதிதாக நுழைந்தவை என்பதிலும் சிக்கல்கள் உள்ளன. இந்த பட்டியலில்

---

1) 'காழ்' மற்றும் 'காழ்வை' என்ற சொற்கள் பல்வேறு மரங்களின் வைரக்கட்டையைக் (heartwood) குறிக்கும் பொதுச் சொற்களாகத் திகழ்ந்தன.

அடங்கும் தாவரப் பெயர்கள் பின்வருமாறு : முல்லை, மல்லிகை, தளா (தளவம், தளவு), அதிரல், இருவாட்சி, குளவி, மலை மல்லிகை, கொகுடி, கொகுட்டம், கொகுட்டை, கொடி முல்லை, செம்மல், சாதி முல்லை, சேடல், செம்முல்லை, நள்ளிருள் நாறி, மயிலம், மயிலை, பித்தகம், பிச்சி, மௌவல், மாதவி, இந்து, காட்டுமல்லிகை, காட்டு முல்லை, காவலை, கானமுல்லை, கெச்சை, ஜாதிப்பூ போன்றவை. இவை அனைத்துமே *Jasminum* என்ற தாவரப் பேரினத்தைச் சேர்ந்தவை. இவற்றிற்கான சிற்றினங்களைக் கண்டுபிடிப்பதில் நிறைய சிக்கல்கள் உள்ளன. நிகண்டுகளில் சேந்தன் திவாகரம் முல்லையையும், மல்லிகையையும் குழப்பி விடுகிறது. பிங்கல நிகண்டும் சூடாமணி நிகண்டும் இவை இரண்டையும் வெவ் வேறாகக் கருதுகின்றன. மேற்கூறியவற்றில், சங்க இலக்கியத்தில் பரிபாடல் தவிர வேறெதிலும் மல்லிகை பற்றிக் குறிப்பிடப் படவில்லை [1, 2]. சிவத்தம்பியின் கூற்றுப்படி (சிவத்தம்பி 2000), கலித்தொகை மற்றும் பரிபாடல் என்ற எட்டுத்தொகை நூல்கள் சங்க காலத்திற்கு (அதாவது கி.பி. 150 முதல் 250 வரை; இதனை அவர் 'வீரயுக மேலாண்மைக் காலம்' என்கிறார்) உரியன அல்ல என்றும், இவை இரண்டும் ஏறத்தாழ கி.பி.250 முதல் 450 வரையுள்ள காலப் பகுதிக்கு (இதனை அவர் 'நிலப்பிரபுத்துவ வேளாண்மைக் காலம்' என்கிறார்) உரியன என்றும் தெரியவருகிறது. மதுரைக்காஞ்சியின் ஈற்றில் உள்ள வெண்பாவில் மல்லிகை வருகிறது. இப்பாடல் சங்க இலக்கிய காலத்திற்குப் பின்னர் இணைக்கப்பட்டது என்ற கருத்து உண்மையானது என்று கோவை இளஞ்சேரன் (1982) கருதுகிறார். பின்னர் எழுந்த சிலப்பதிகாரத்தில் மூன்று இடங்களில் மல்லிகை குறிப்பிடப்பட்டுள்ளது [3]. மல்லிகை மாலதி என்ற பெயராலும், குறிப்பாகத் தமிழகத்திற்கு வெளியே, குறிக்கப்படுவது ஏற்கனவே உள்ள குழப்பத்தைக் கூட்டுகிறது. வடமொழி நூல்களில் முல்லை இடம்பெறவில்லை; ஆனால் மல்லிகை மட்டும் இடம் பெற்றுள்ளது; இவற்றையெல்லாம் ஒருசேர ஆய்வு மேற்கொள்ளும்போது 'மல்லிகை' வடநாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்திறங்கியதாகக்

---

1) ''................ நெய்தல் தொடுத்தாளே
மல்லிகா மாலை வளாய்'' (பரி.:11:104-105)

2) ''மல்லிகை மௌவல் மணங்கமழ் சண்பகம்
அல்லி கழுநீர் அரவிந்தம் ஆம்பல்'' (பரி.:12:77-78)

3) ''இல்வளர் முல்லை மல்லிகை மயிலை'' (சிலம்பு.:5:191)
''மாதவி மல்லிகை மனைவளர் முல்லை'' (சிலம்பு.:13:120)
''இல்வளர் முல்லையொடு மல்லிகை அவிழ்ந்த'' (சிலம்பு.:4)

கொள்ள வேண்டும்; பின்பு அது தமிழகத்தில் பரவலாக்கப்பட்டிருக்க வேண்டும். மல்லிகை *Jasminum sambac var.sambac* என்ற தாவரப் பெயரைக் கொண்டது. இது தமிழகத்தின் இயல் தாவரங்களின் பட்டியலில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. காலப் போக்கில் மல்லிகை என்ற சொல் பின் ஒட்டாக பல, பெரும்பாலும் புதிதாக நுழைந்த (குறிப்பாக வெண்மையான), மலர்களுக்கு சேர்க்கப் பட்டது; எடுத்துக்காட்டுகளாக அந்தி மல்லிகை, மரமல்லிகை, நாகமல்லிகை, பவள மல்லிகை போன்றவற்றைக் குறிப்பிடலாம். முல்லைக்குத் தொடர்பான குளவி, மலை மல்லிகை எனப்பட்டது; இது காட்டு முல்லை எனக் கூறப்பட்டிருக்க வேண்டும். இதே போன்று அதிரல் (*Jasminum angustifolium*) மோசி மல்லிகை எனப் பட்டது. முல்லை, மல்லிகை தொடர்பான மற்ற தாவரங்களுக்குச் சரியான தாவரப் பெயர் கண்டுபிடிக்க முடிந்த அளவுக்குப் பின்னிணைப்பு நான்கில் கொடுக்கப்பட்டுள்ளன. முன்னால் கூறப்பட்ட பெயர்களில் சேடல் என்பது எந்த *Jasminum* சிற்றினத்தைக் குறிக்கிறது என்பது சரியாகத் தெரியவில்லை. ஆனால் சேடல் நிச்சயமாக மற்றவர்கள் குறிப்பிட்டுள்ள [1] பவழ மல்லிகை (*Nyctanthes arbor-tristis*) அல்ல. ஏனெனில் பவழ மல்லிகை தமிழகத் தாவரமல்ல. இது பக்தி இயக்க காலத்தில் (ஏறத்தாழ கி.பி.7ஆம் நூற்றாண்டுக்குப் பின்பு) வடநாட்டில் இருந்து தமிழகத்திற்கு நுழைந்த தாவரமாகும்.

மூங்கில் தொடர்பான பல தாவரப் பெயர்கள் சங்க இலக்கி யத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன: அரி என்ற மூங்கிலரிசி, வெதிர், வேய், கழை, பெருமூங்கில், வேரல், உந்தூழ் போன்றவை. இவற்றில் வேரல் தவிர மற்ற அனைத்திற்கும் *Bambusa arundinacea* என்ற தாவரப் பெயரைக் கோவை இளஞ்சேரன் (1982) மற்றும் சீநிவாசன் (1987) ஆகியோர் சுட்டியுள்ளனர். இவர்கள் கூற்றுப்படி வேரல் *Dendrocalamus strictus* என்ற சிறு மூங்கிலாகும். நாம் தமிழில் 'மூங்கில்' என்று அழைக்கும் தாவரங்கள் அனைத்துமே *Bambusa arundinacea* என்று கொள்வது தவறாகும். அரி என்பது சிறு தானியம் என்பதைக் குறிக்கும். எனவே 'அரி' என்ற சங்க இலக்கியச் சொல் அனைத்து மூங்கில் வகைகளின் விதைகளைக் குறிக்கும். வெதிர் (வெதிரம்) பெரிய வகை மூங்கிலா, சிறிய வகை மூங்கிலா என்பது தெளிவாகத்

---

1) ''சேடல் செம்மல் சிறு செங்குரலி'' எனக் குறிஞ்சிப்பாட்டில் (குறி.பா.:82) குறிப்பிடப்படும் சேடல் என்பதற்கு நச்சினார்க்கினியர் 'பவழக்கால் மல்லிகை' என்று விளக்கியுள்ளார். உ.வே.சாமிநாதய்யர் (1955) இது ''பவழ மல்லிகை எனவும், பாரிசாதம் எனவும் வழங்கும்'' என்று கூறியுள்ளார்.

தெரியவில்லை. இதேபோன்று வேய் என்பதற்கும் சரியான தாவரவியல் சிற்றினப் பெயர் நிர்ணயிக்கப்படவில்லை. எனவே இவை அனைத்தும் (உந்தூழ் மற்றும் வேரலைத் தவிர) *Bambusa* sp. (மூங்கிலின் சிற்றினம்) என்றே குறிப்பிடப்பட வேண்டும். உந்தூழ் என்பது மிகப்பெரிய மூங்கில் சிற்றினமான *Dendrocalamus gigantea* ஆகும்.

அல்லி தொடர்பான தாவரங்களுக்கும் சரியான தாவரப் பெயர் அறிவதில் பல சிக்கல்கள் உள்ளன. அரக்காம்பல், அல்லி, குமுதம், ஆம்பல், காவி, செங்கழுநீர், செவ்வாம்பல், சேதாம்பல், வெள்ளாம்பல், கருநெய்தல், குவளை, செவ்வல்லி, நீலோற்பலம், கழுநீர், நெய்தல், கருங்குவளை, கல்லாரம், பானல், இந்தீவரம், கைரவம், எருமணம், உற்பலம் போன்றவற்றிற்கிடையே சரியான வேறுபாடுகள் கூறப்படாததால் இவற்றின் சரியான தாவரவியல் பெயர்களை ஐயமின்றி அறிய முடியவில்லை (சாமி 1967; கோவை இளஞ்சேரன் 1982 சீநிவாசன் 1987). இவற்றில் கல்லாரம் என்பது மஞ்சள் நிறப்பூக்களை உடைய நீர்முள்ளி ஆகும். எனவே இது கோவை இளஞ்சேரன் (1982) கருதுவது போன்ற அல்லி தொடர்பான தாவரம் அல்ல. தற்பொழுது குமுதம் என்ற சொல் தமிழகத்தில் பெருவழக்காக நிலவிவரும் சொல்லாகும். இச்சொல் சங்க இலக்கியங்களிலோ, தொல்காப்பியத்திலோ காணப்படவில்லை; தொல்காப்பியத்தில் 'அம்' என்ற இறுதியுடையதாகக் குறிப்பிடும் சொற்களில் குமுதம் என்ற சொல் சேர்க்கப்படவில்லை. இதனால் தமிழக வரலாற்றின் பிற்காலத்தில் தமிழகத்தில் புதிதாக நுழைந்த ஒரு நீர்த்தாவரமாக இது கருதப்பட்டது. தமிழக வரலாற்றில் பிற்காலத்தார், பொதுவாக இரவில் மலரும் (அலரும்) ஆம்பல் தாவர (மலர்) இனத்திற்கு இச்சொல்லைக் கையாண்டுள்ளனர்[1] பிங்கல நிகண்டும், ஆம்பல் குடும்பத்தின் அனைத்துத் தாவரங்களுக்கும் பொதுப் பெயராகக் குமுதத்தைக் காட்டியுள்ளது[2]. இதனால், பிற்காலத்தவரால்

---

1) ''இந்தப் புவியில் இரவலர் உண்டென்பதெல்லாம்
அந்தக் குமுதமே அல்லவோ?'' (நந்.கல.ஃதனிப்பாடல்)
(இரவு+அலர்=இரவலர்)
''................. குமுதமொடு சதவிதழ்ப் போதுமே
இருபோதையும் தெரிக்கும்'' (மு.கு.பி.த.ஃ85) (போதும் = தாமரை)

2) ''வெள்ளாம்பல் சேதாம்பல் என்றிரு விகற்பம்
கொள்ப மன்னோ குமுதப் பெயரே'' (பிங்.நி.ஃ3021), என்றும்
''ஆம்பலும், நெய்தலும், அல்லியும் குமுதம்'' (பிங்.நி.ஃ3024) என்றும்
கூறப்பட்டுள்ளது.

கணக்குக் குறியீடுகளில் 'குமுதம்' என்ற சொல் கொள்ளப்பட்டது (பார்க்க, இந்நூலின் அத்தியாயம் 10). எனவே 'குமுதம்' என்பது ஒரு பொதுப் பெயர் தான்; ஆம்பலின் தனிவகை அல்ல (கோவை இளஞ்சேரன் 1982). மேலும், இந்த அடிப்படையில் குமுதம் தமிழகத்தில் புதிதாக நுழைக்கப்பட்ட / நுழைந்த தாவரமன்று; ஆனால் புதிதாக நுழைக்கப்பட்ட / நுழைந்த சொல் என்று கொள்ளலாம்.

வழக்கத்திலிருந்த ஆம்பல் குடும்பத் தாவரங்களின் தமிழ்ச் சொற்கள் பற்றிய சீரிய விவாதம் தேவையானதாகும். இத்தகைய விவாதத்தைக் கோவை இளஞ்சேரன் (1982) ஏற்கனவே ஓரளவு செய்துள்ளார். முன்னால் குறிப்பிட்ட ஆம்பல் குடும்பத் தாவரச் சொற்களில் ஆம்பல், நெய்தல், குவளை (தாமரையைக் குறிக்கும் கமலம் என்பதையும் சேர்த்து) ஆகியவை தனித்தனியானவை என்பதைத் தொல்காப்பியம் மூலம் அறியலாம்[1]. காவியும், நெய்தலும் வேறுபட்டவை என்று அகநானூறு குறிப்பிடுகிறது[2]. குவளையும் செங்கழுநீரும் வேறுபட்டவை என்று சிலப்பதிகாரம் எடுத்துக் காட்டுகிறது[3]. அதாவது வெளித்தோற்றத்தில் (குறிப்பாகப் பூக்களின் தன்மைகளில்) ஆம்பல், நெய்தல், குவளை, காவி மற்றும் செங்கழுநீர் போன்றவை ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டவை. இவற்றில் காவி மட்டும் 'கழி' என்ற கடற்கரைப் பகுதியில் (நெய்தல்) மட்டும் காணப்படும் என்று இலக்கியத்தின் வாயிலாக அறிகிறோம். பரிபாடலின் ஒரு பாடல் கழுநீர் மற்றும் ஆம்பலில் இருந்து அல்லி வேறுபட்டதாகக் காட்டுகிறது[4]. அல்லி என்பது வெள்ளாம்பல் என்ற வெள்ளை நிறப்பூக்கள் கொண்ட ஆம்பல் என்றும் கைரவம் என்பதும் இதுவே ஆகும் என்றும் பிங்கல நிகண்டு காட்டுகிறது[5]. 'கழுநீர்' என்னும் அடைமொழியற்ற சொல் ஆம்பலைக் குறிக்கும் என்றும், செங்கழுநீர் என்பது செங்குவளையைக் குறிக்கும் என்றும் கோவை இளஞ்சேரன் கருத்து தெரிவிக்கிறார். சீநிவாசன் (1987) காவிதான் செங்கழுநீர் என்று தவறாகக் குறிப்பிடுகிறார். இதேபோன்று

---

1) ''.........................இருநிலத்து ஊழியும்
நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும்
மைஇல் கமலமும் வெள்ளமும் நுதலிய
செய்குறி ஈட்டம்'' (தொல்.ஃஎழுத்துஃ394)

2) ''கழியே சிறுகுரல் நெய்தலொடு காவி கூம்ப'' (அகம்.ஃ350ஃ1)

3) ''தாழிக் குவளையொடு தண் செங்கழுநீர்'' (சிலம்பு.ஃ4ஃ64)

4) ''அல்லி, கழுநீர், அரவிந்தம், ஆம்பல்'' (பரி.ஃ12ஃ78)

5) ''அல்லி, வெள்ளாம்பல் கைரவம் ஆகும்'' (பிங்.நி.ஃ3021)

செங்கழுநீர்தான் குவளை என்றும் இவர் குறிப்பிட்டள்ளார். இருக்கிற சிக்கல்களை ஆய்வுசெய்து கோவை இளஞ்சேரன் பெற்ற முடிவுகளைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

வரி. எண்	குடும்ப வகை	மலர்நிறம் / அடையாளம்	மாற்றுப் பெயர்கள்
1.	ஆம்பல்	செவ்வாம்பல்	கழுநீர், அரக்காம்பல், சேதாம்பல், செவ்வல்லி
		வெள்ளாம்பல்	அல்லி, கைரவம்
2.	குவளை	செங்குவளை	செங்கழுநீர், எருமணம்
		கருங்குவளை	நீலம், பானல், உற்பலம், நீலோற்பலம்
3.	நெய்தல்	வெளிர் நீலம்	இந்தீவிரம்
4.	காவி	கரு நீலம்	கழிப்பூ

இவற்றில் கருஞ்சிவப்பு நிறம் கொண்ட ஆம்பலும் (அரக்காம்பல்), வெண்மை நிறம் கொண்ட ஆம்பலும் (வெள்ளாம்பல்) கலப்பு கொண்டு தோன்றியது இளஞ்சிவப்பு கொண்ட சேதாம்பல் என்று கோவை இளஞ்சேரன் *(1982)* கருதுகிறார்.

மேற்கூறிய கோவை இளஞ்சேரனின் முடிவுகளின் அடிப்படையிலும் இலக்கியச் செய்திகளின் அடிப்படையிலும் மற்ற தாவர வியலார் கருத்துக்களின் அடிப்படையிலும் இவற்றின் உண்மையான தாவரப் பெயரை அறிய முற்படும்போது பெறப்பட்டுள்ள தகவல்கள் கீழே முன்வைக்கப்பட்டுள்ளன:

ஆம்பல் என்பதற்கு இதுவரை கொடுக்கப்பட்டுள்ள தாவரப் பெயர்கள் பின்வருமாறு:

Nymphaea lotus Hook. f & Thoms - கோவை இளஞ்சேரன் *(1982)*

N.pubescens Willd. *(அல்லி)* - சீநிவாசன் *(1987)*

N.nouchali Burm.f. *(அல்லி)* - Matthew (1983)

N. pubescens Willd. *(வெள்ளாம்பல்)* - Nair and Henry (1988)

காவி என்பதற்கு இதுவரை கொடுக்கப்பட்டுள்ள தாவரப் பெயர்கள் பின்வருமாறு:

Monochoria vaginalis - கோவை இளஞ்சேரன் *(1982)*

Nymphaea nouchali Burm.f. - சீநிவாசன் *(1987)*

குவளை என்பதற்கு இதுவரை கொடுக்கப்பட்டுள்ள தாவரப் பெயர்கள் பின்வருமாறு :

Nymphaea rubra (*செங்குவளை) - கோவை இளஞ்சேரன் (1982)*

N.stellatus (*கருங்குவளை) - கோவை இளஞ்சேரன் (1982)*

N.nouchali Burm.f. (*குவளை, செங்குவளை, செங்கழுநீர்; நீலம், நீலோற்பலம்) - சீநிவாசன் (1987)*

நெய்தல் என்பதற்கு இதுவரை கொடுக்கப்பட்டுள்ள தாவரப் பெயர்கள் பின்வருமாறு :

Nymphaea sp. - கோவை இளஞ்சேரன் *(1982)*

N.violacea - *சீநிவாசன் (1987)*

N.stellata Willd. (*நீலோற்பலம், கரு நெய்தல்)* - Matthew (1983)

N.nouchali Burm.f. (*கரு நெய்தல், நீலோற்பலம்)* - Nair and Henry (1988)

இத் தாவரப் பெயர்களின் தொகுப்புப் பற்றி இலக்கியத்தில் எந்த அளவு சிக்கல் இருக்கிறதோ அதே அளவு சிக்கல் இவற்றின் தாவரப் பெயர்களை அறிவதிலும் உள்ளது. கோவை இளஞ்சேரன் ஆம்பல், குவளை மற்றும் நெய்தல் ஆகிய மூன்றும் *Nymphaea* என்ற பேரினத்தின் தனிச் சிற்றினங்கள் என்றும், காவி என்பது *Monochoria vaginalis* என்ற ஒருவிதையிலைத் தாவரம் என்றும் கருதுகிறார். சீநிவாசன் *(1987)* ஆம்பல், காவி, குவளை, நெய்தல் ஆகிய நான்குமே Nymphaea-வின் சிற்றினங்கள் என்றும், ஆம்பல் மற்றும் அதன் வகைகள் அனைத்தும் *Nymphaea pubescens* என்ற சிற்றினத்தையும், குவளையும், காவியும் *Nymphaea nouchali* என்றும், நெய்தல் *Nymphaea violacea* என்றும் கருதுகிறார். தற்காலத் தாவர வகைப்பாட்டியல் அறிஞர்களிடமும் இதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. Matthew (1983) அல்லியை (ஆம்பலின் வகைகள் என்று எடுத்துக் கொள்ளலாம்) *N.nouchali* என்றும், கருநெய்தல் மற்றும் நீலோற்பலத்தை *Nymphaea pubescens* Willd. என்றும், நீலோத்பலம் மற்றும் கருநெய்தலை *N.nouchali* Burm.f. என்றும் கூறுகின்றனர். இவர் குவளை மற்றும் காவியைப் பற்றிக் குறிப்பிடவில்லை. Nair மற்றும் Henry *(1988)* தங்களுடைய தமிழ் நாட்டுத் தாவரங்கள் பற்றிய நூலில் வெள்ளாம்பலை (ஆம்பலின் வகைகள் என்று எடுத்துக் கொள்ளலாம்) *Nymphaea pubescens* Willd. என்றும், நீலோற்பலம் மற்றும் கருநெய்தலை *N.nouchali* Burm.f. என்றும் கூறுகின்றனர். இவர்களும் காவி மற்றும் குவளை பற்றிக்

குறிப்பிடவில்லை. Nair மற்றும் Henry-யின் கருத்துக்களோடு வேறுசில தாவர வகைப்பாட்டியலாரின் கருத்துக்கள் ஒத்திருப்பதால் பின்வரும் முடிவுகளை மேற்கொள்ளலாம். ஆம்பல் மற்றும் அதன் வகைகளான செவ்வாம்பல், வெள்ளாம்பல், கழுநீர், அரக்காம்பல், சேதாம்பல், செவ்வல்லி, அல்லி, கைரவம் போன்றவை *Nymphaea pubescens* Willd. என்ற தாவரப் பெயராலும், நெய்தல் வகைகள் (நெய்தல், கருநெய்தல், நீலோற்பலம்) போன்றவை *Nymphaea nouchali* Burm.f. என்ற தாவரப் பெயராலும் அழைக்கப்பட வேண்டும். குவளையும் அதன் வகைகளும் இந்த இரண்டு சிற்றினங்களில் எதில் சேர்ந்தவை என்பது தெரியவில்லை. இதேபோன்று பானல், இந்தீவரம், எருமணம் ஆகியவை ஆம்பல், நெய்தல், குவளை ஆகிய மூன்று வகைகளில் எவற்றோடு சேர்ந்தவை என்பதும் தெளிவாகத் தெரிய வில்லை. எனவே இவை அனைத்தும் இந்நூலில் *Nymphaea* பேரினத் தின் சிற்றினமாகக் கருதப்படுகின்றன. காவி *Monochoria* பேரினத்தைச் சேர்ந்ததாக (*M.vaginalis*) இருக்க வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

ஆம்பல் குடும்பத்தின் மற்றொரு தாவரம் தாமரையாகும். இதன் மற்ற தமிழ்ப் பெயர்கள் அரவிந்தம், போது, போதும், கமலம், பத்மம், செந்தாமரை மற்றும் வெண்டாமரை என்பன. இதன் தாவரப் பெயரான *Nelumbo nucifera* Gaertn. (பழைய பெயர் *Nelumbium speciosum*) என்பதில் எந்தக் குழப்பமும் இல்லை. தாமரை செந்தாமரை, வெண்டாமரை என்ற இரண்டு வகைகளைக் கொண்டதாக இலக்கி யத்தில் இருந்து அறியப்படுகிறது.

அலரி என்ற தாவரப் பெயர் சங்க இலக்கியத்தில் காணப்படு கிறது. இதற்கான தாவரப் பெயராக *Nerium indicum* (இதன் தற்போதைய தாவரவியல் பெயர் *Nerium oleander*) என்ற பெயரை சீநிவாசன் (1987) கொடுக்கிறார். இதன் மறுபெயர் செவ்வலரி என்றும் அவர் குறிப்பிடுகிறார். *Nerium indicum* தமிழகத் தாவரமல்ல. இது தமிழகத்தில் நுழைக்கப்பட்ட தாவரமாகும். இந்த நுழைப்பு சங்க காலத்தில் நிச்சயம் ஏற்பட்டதில்லை. எனவே சங்க இலக்கியத்தில் காணப்படும் 'அலரி' என்ற சொல் இந்தத் தாவரத்தைக் குறிக்க வில்லை என்பது திண்ணம். அப்படியெனில், 'அலரி' என்ற சொல் எந்தத் தாவரத்தைக் குறிக்கிறது? தாமரைக்கு இப்பெயர் சூட்டப் பட்டிருக்கலாமோ என்ற ஐயத்தைக் கோவை இளஞ்சேரன் (1982) எழுப்புகிறார். 'அலரி' என்றால் 'மலரும் பூ' என்று பொருள். எனவே இச்சொல் மலரும் எல்லாப் பூக்களையும் குறிக்கவல்லது. இது தாமரையைக் குறிக்கலாம் என்ற கருத்துக்குப் புறநானூற்றின் (27:2) ''நூற்றிதழ் அலரி'' என்ற சொற்றொடர் வலிவூட்டுகிறது. மற்ற

இலக்கியத்திலும் தாமரை நூற்றிதழ் அலரி என்று அழைக்கப்பட்ட தாகவும் கோவை இளஞ்சேரன் (1982) குறிப்பிட்டுள்ளார். இந்த இரண்டு அடிப்படைகளிலும் அலரி நிச்சயமாக *Nerium oleander* அல்ல. இது தாமரையைக் குறிப்பதாகத் தான் கொள்ள வேண்டும். இதன் தொடர்பாகக் கணவிரம் (சேக்கிழார் இதை கணவீரம் என்பார்) என்ற தாவரத்தைப் பற்றிய விவாதத்தையும் மேற்கொள்ள வேண்டும். கணவிரம், கணவீரம், கணவிரி, கரவீரம் என்று வெவ்வேறு பெயர் களால் அழைக்கப்பட்ட இத்தாவரம்தான் செவ்வலரி என்று நச்சினார்க்கினியர் கருதியதால், செவ்வலரி (அலரும் போது சிவப்பு நிறத்தைக் கொண்ட பூவினைப் பெற்ற தாவரம் என்பது இதன் காரணப்பெயர்) தான் சங்க கால அலரி என்று தவறான முடிவுக்கு சீநிவாசன் (1987) தள்ளப்பட்டார் எனக் கொள்ளலாம். கணவீரம் என்பது நச்சினார்க்கினியர் உரையின் அடிப்படையில் செவ்வலரி யைக் குறிக்கிறது என்று கோவை இளஞ்சேரன் (1982) கருதினார். இக் கருத்தை சீநிவாசனும் (1987) அப்படியே எடுத்துக் கொள்கிறார். கணவிரி என்ற சொல் சங்க இலக்கியத்தில் பரிபாடலிலும் (பரி.11:20), கணவிரம் என்ற சொல் அகநானூற்றுப் பாடலிலும் (அகம்.31:9) வருகின்றன. மேலும் திருமுருகாற்றுப்படை வரிகள் கணவிரம் மலர்கள் நறுமணம் மிக்கதாகச் சுட்டுகின்றன [1]; மேலும் குருதி நிறத்த இதன் பூக்கள் மாலையாகச் செய்யப்பட்டு அணியப்பட்டது என்பதை யும் இப் பாடல்வரி தெளிவுபடுத்துகிறது. செவ்வலரியின் இயற்கை உறைவிடம் வடஇந்தியா. இங்கிருந்து ஆரியரின் தீவிர வரவோடு இத்தாவரமும் தமிழகத்திற்கு வந்திருக்கவேண்டும். பக்தி இயக்க காலத்தின் நடுப்பகுதியில் இதன் ஆன்மீகப் பயன்பாடு அதிகரித் திருக்க வேண்டும்.

அரசமரம் (*Ficus religiosa*) இமயமலை அடிவாரக் குன்றுகளில் இயல்பாக வளரும் மரமாகும். ஆனால் தற்பொழுது இது நாடு முழுவதும் வளர்ப்புத் தாவரமாகக் காணப்படுகிறது. இந்துக்களாலும், புத்தமதத்தவர்களாலும் புனித மரமாகக் கருதப்படும் இதன் அடியில் தான் (= போதிமரம்) புத்தர் ஞானம் பெற்றார் என்று கூறப்படுகிறது. இந்த மரம் இயல்பாக வளரும் பகுதியில்தான் புத்தமதம் தோன்றியது; இம்மதத்தின் விரிவோடு இந்த மரமும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்குப் பரவியது. தமிழகத்தில் முக்கியப் பகுதிகளில் வளர்ப்பு மரமாகக் காணப்படுகிறது. விஜயநகர மன்னர்களில் ஒருவரான புக்கர் காலத்துக் கல்வெட்டு ஒன்று பட்டார பக்கப்பா

1) *''பெருந்தண் கணவிர நறுந்தண் மாலை'' (திருமுருகு.:236)*

(Bhattara Bakkappa) என்பவரின் புனிதச் செயல்களைப் பற்றி விளக்குகிறது; இச்செயல்களில் முக்கியமானது, நான்கு திசைகளிலும் இம்மரம் வளர்க்கப்பட்டு அதற்கு உபநயனம் (புனித நூல் விழா) செய்விக்கப்பட்டதுதான் (EC.MI.22.கி.பி.1358). நந்திக் கோட்டூர் என்ற இடத்தில் முசிலிசெட்டி என்பவரால் ஒரு கிணறு வெட்டப்பட்டது பற்றியும், அரச மரத்திற்கு மேடை கட்டப்பட்டது பற்றியும் ஒரு கல்வெட்டு கூறுகிறது (21 of 1942/1943).

'ஓமை' என்ற தாவரம் சங்க இலக்கியத்தில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ஓர் இடத்திலும் இதன் பூக்கள் பற்றிய செய்தி இல்லை. இது ஓங்கி வளரும் பெரிய மரம்; கிளைகள் உண்டு; காடாக வளரும்; இதன் அடிமரம் 'புன்தாள்', 'பொரிதாள்', 'முடத்தாள்' என்றெல்லாம் வருணனை செய்யப்பட்டுள்ளது; பாலைவனத் தாவரம்; வழிப்போக்கருக்கு நல்ல நிழலைத் தரும்; பாலைவனப் பறவையான பருந்து இதில் அடிக்கடி அமரும்; இதன் பட்டையை யானை உரித்துத் தின்னும். இது போன்ற பல செய்திகளைச் சங்க இலக்கியத்தின் மூலமாக நாம் அறிய முடிகிறது. குறிஞ்சிப்பாட்டில் (குறி.பா.ஃ85) [1] இடம்பெற்றுள்ள 'பாங்கர்' என்ற சொல்லுக்கு உரையாசிரியர் நச்சினார்க்கினியர் ஓமை என்று பொருள் கூறியுள்ளார். அவரே கலித்தொகையில் வரும் (கலி.ஃ111) [2] 'பாங்கர்' என்ற சொல்லுக்கு 'பாங்கர்க் கொடி' என்றும் உரை வகுத்துள்ளார். எனவே தற்கால அறிஞர்கள் ஓமையும் பாங்கரும் ஒன்றென்று கருதி விட்டனர் (எடுத்துக்காட்டு ஃ சீநிவாசன் 1987). இதன் காரணமாக இரண்டிற்கும் *Dillenia indica* என்ற தாவரப் பெயரையும் சீநிவாசன் (1987) அளித்து விட்டார். *Dillenia indica* வேறொரு தாவரமாகும். மேலும், இது மிகப் பெரிய மரமல்ல; பாலைவனத் தாவரமல்ல; எனவே இது நிச்சயமாக ஓமை அல்ல. அப்படியெனில் ஓமை என்ற பெயர் எந்த மரத்தைக் குறிக்கிறது? இது *Anogeissus latifolia* என்ற வரண்ட நிலத்து மரமாகும். தொல்காப்பியர் 'ஞெமை' என்று குறிப்பிட்ட மரம்தான் இது. சங்க காலத்தில் இது ஓமை என்று திரிபு அடைந்திருக்க வேண்டும், அல்லது தொல்காப்பியம் சங்க இலக்கியத் திற்கு பின் காலத்தது என்ற வையாபுரிப் பிள்ளை, சுவாமி (Swamy) சிவத்தம்பி போன்றவரின் கருத்தை ஏற்றுக்கொண்டால் ஓமை தான் ஞெமை என்று மருவியுற்றிருக்க வேண்டும். தற்பொழுது இந்த மரம்

---

1) ''பாங்கர் மராஅம் பல்பூந் தணக்கம்' (குறி.பா.ஃ85)

2) ''.................................... பாங்கரும்
முல்லையும் தாய பாட்டங்கால்'' (கலி.ஃ111)

வெள்ளை ஞெமை என்று அழைக்கப்படுவது (சண்முகசுந்தரம் 2002) இரண்டாவது கருத்தை வலியுறுத்தும் வகையில் அமைகிறது. ஓமை என்ற சொல் தற்பொழுது வழக்கத்தில் இல்லை. *Anogeissus latifolia* என்ற மரத்தின் பண்புகள் சங்க இலக்கியத்தில் ஓமைக்கு கூறப்பட்ட பல பண்புகளை ஒத்திருக்கின்றன. இன்றும் என்னுடைய கள அனுபவத்தில் (field experience), பருந்து இம்மரத்தில் வந்து அடிக்கடி அமர்வதைக் கண்டிருக்கிறேன். மேலும் சங்க இலக்கியத்தில் 'சிள்வீடு' என்ற வண்டு [1] தங்கி வெப்பம் மிக்க நடுப்பகலில் கறங்கும் என்று கூறப்பட்டிருப்பது போல ஒரு குறிப்பிட்ட வண்டினம் *Anogeissus latifolia* மரத்தில் அக்கடி காணப்படுவதையும் நான் என் கள ஆய்வின் போது கண்டுள்ளேன். நமை (ஞெமை/ஓமையின் திரிபு) என்று சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள தாவரமும் இதே தாவரம் தான்.

ஓமை ஒரு பெரிய மரம்; பாங்கர் ஒரு கொடி. பாங்கர் ஒரு கொடி என்று நச்சினார்க்கினியர் குறிப்பிட்டிருப்பதையும் நோக்குக. பாங்கர் முல்லைக் கொடியுடனும், கோடல் என்ற காந்தள் கொடியுடனும் சங்க இலக்கியத்தில் பாடப்பட்டிருப்பதால் இதுவும் ஒரு முல்லை நிலத்துக் கொடியாகத்தான் இருக்கவேண்டும். பாங்கரைப் பற்றிய பண்புகள் சங்க இலக்கியப் பாடல்களில் கிடைக்கப் பெறாமையால் (முல்லை நிலத்தது; வெண்மை நிறப் பூக்களுடையது; கார்காலத்தில் பூப்பது; சூடப்படும் பூ போன்றவற்றைத் தவிர) இதனுடைய தற்காலத் தாவரப் பெயரைச் சரியாக நிர்ணயம் செய்ய முடியவில்லை.

கவிர், முருக்கு, முள்முருக்கு, பலாசம், புழகு புனமுருக்கு ஆகிய தாவரப் பெயர்கள் விவாதத்திற்குரியவை. சங்க இலக்கியத்தில் கவிர், முருக்கு, பலாசு மற்றும் புழகு ஆகிய நான்கு தாவரங்கள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. இதில் பலாசுக்கு (அகம்.:99: குறி.பா.:88) புரசு [2] என்றும் புனமுருக்கு [2] என்றும் நிகண்டு பொருள் கூறின. புரசுவின் வடமொழிப் பெயர்தான் பலாசம். ஆனால் இப் பெயரில் இது சங்க இலக்கியத்தில் பரவலாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. பலாசத்தின் சுருக்கம் பலாசு. இது முருக்குத் தாவரத்தை ஒத்திருந்ததால் இதற்கு புனமுருக்கம் மற்றும் புனமுருங்கை என்ற பெயர்கள் வழங்கப்பட்டன. இதற்கான தாவரப் பெயர் *Butea*

---

1) ''உலவை ஓமை ஓங்கு நிலை ஒடுங்கி
சிள்வீடு கறங்கும் சேய்நாட்டு அத்தம்'' (நற்.:252:1-2)

2) பிங். நி.: (2661, 2662)

monosperma என்பதில் எவ்வித ஐயமுமில்லை. கவிர், முருக்கு ஆகிய இரண்டிற்கும் இடையே இனங்கண்டறிவது மிகவும் சிக்கலாக உள்ளது. மேற்கூறிய சிக்கலுக்குப் பிங்கல நிகண்டும் ஒரு முக்கியக் காரணம் ஆகும். கவிர் என்ற தாவரத்திற்கு முள் இருப்பதாக இலக்கியத்தில் எங்கும் சுட்டப்படவில்லை. எனினும் இதற்கு முள் முருக்கு என்று பிங்கல நிகண்டு (2695) பொருள் தருகிறது. இதனால் பின்னால் வந்த இலக்கியங்களும் கவிரை முள்முருக்கு என்றன. ஆனால் முருக்கு என்ற தாவரத்திற்கு முள் இருப்பது இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது [1]. கவிர் மலைப்பகுதியில் வளரும் என்றும் கூறப்பட்டுள்ளது [2]. சீநிவாசன் (1987) கவிரும் முருக்கும் (புழகும் கூட) ஒன்று தான் என்றும் இவற்றின் தாவரப் பெயர் *Erythrina indica* என்றும் கருத்து தெரிவித்துள்ளார். சாமி (1967), கோவை இளஞ்சேரன் (1982) ஆகிய இருவரும் இவை இரண்டும் வெவ்வேறானவை என்ற வலியுறுத்தியுள்ளனர். கவிர், முருக்கு ஆகிய இரண்டும் *Erythrina* என்ற பேரினத்தின் சிற்றினங்கள்தான் என்பது இலக்கியத்தில் காணப்படும் பூக்களின் வர்ணனைகளை வைத்து அறுதியிட்டு உறுதியாகக் கூற முடியும். இவை இரண்டுமே *Erythrina indica* (இதன் தற்போதைய தாவரப் பெயர் *Erythrina variegata*) அல்ல என்பதையும் உறுதியாகக் கூற முடியும். ஏனெனில் *Erythrina variegata* தமிழகத்தின் இயல்தாவரமல்ல; தமிழகத்தில் கி.பி. 8 அல்லது 9ஆம் நூற்றாண்டில் நுழைந்து பரவலாக்கப்பட்ட தாவரமாகும். இதற்கு முட்கள் உண்டு. இது தற்போது கலியாண முருங்கை என்றும் முள்முருக்கு என்றும் அழைக்கப்படுகிறது. கவிர் (சோற்றுக்கவிர்) முல்லை நிலக்காடுகளில் வளரும் என்று சண்முகசுந்தரம் (2002) குறிப்பிடுகிறார்; இதன் பெயராக அவர் *Erythrina suberosa*-ஐ குறிப்பிடுகிறார்; இதுதான் இலக்கியத்தில் கூறப்பட்ட கவிர் ஆகும். இலக்கியத்தில் கூறப்பட்ட முருக்கு என்பது *Erythrina stricta* ஆகும்.

'புழகு' என்ற தாவரம் கவிர் மற்றும் முருக்குடன் தொடர்பு படுத்தப்பட்டு விவாதிக்கப்பட்டுள்ளது (மேலே பார்க்க!). இது புனமுருங்கை என்றும் புனமுருக்கு என்றும் அழைக்கப்பட்டது (சீநிவாசன் 1987); இது குறிஞ்சி நிலத்தது [3]; இதன் மலர் அரக்குச் சிவப்பு நிறம் கொண்டது [4]. இம்மரத்தின் மேற்பகுதி அகன்றிருக்கும் [5]

1) ''செம்முகை அவிழ்ந்த முண்முதிர் முருக்கு'' (அகம்.ஃ99ஃ2)
2) ''கவிர்ததை சிலம்பில் துஞ்சும் கவரி'' (பதிற்.ஃ11ஃ21)
3) ''அழுந்துபட்டு அலமரும் புழகு அமல் சாரல்'' (மலை.ஃ219)
4) ''அரக்கு விரித்தன்ன பரேரம் புழகுடன்'' (குறி.பா.ஃ96)
5) ''அகன்றலைப் புழகும்'' (பெருங்.ஃ2ஃ12ஃ27)

என்றும், அடியில் கிழங்கு இருக்கும் என்றும், அடிமரம் பருத்திருக்கும் என்றும் தெரிய வருகிறது. புழகு என்பதற்கு நச்சினார்க்கினியர் தன் உரையில் 'மலைஎருக்கம்' என்று கூறியுள்ளார். இந்தத் தாவரமும் *Erythrina indica*-ஆக இருக்கலாம் என்று சீநிவாசன் (1987) கருதுகிறார்; மேலே கூறப்பட்ட காரணங்களின் அடிப்படையில் புழகு நிச்சயமாக *Erythrina indica* அல்ல. இதன் தாவரப் பெயரைச் சரியாக அறிய முடியவில்லை.

சங்க இலக்கிய ஞாழல் *Cassia sophera* என்ற தாவரப் பெயர் கொண்டது. இலக்கியச் செய்திகளாகப் பின்வருபவை ஞாழலுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன : கன்னியர் இதன் இலையை ஆடையாக உடுப்பர்; இது கடற்கரையில் மணற்பாங்கான இடத்தில் தழைக்கும்; நெய்தல் நிலமரம்; ஓரளவு உயரமானது; பூ மணமுள்ளது, மிகச் சிறியது (''ஐயவியன்ன சிறுவீ ஞாழல்''); ஆரல் மீனின் முட்டைகள் போன்றது; பூ புலிநகம் போன்றிருக்கும் (=புலிநகக் கொன்றை); பூ மஞ்சரியில் இருந்து உடனே விழுந்து விடும். மஞ்சரியில் நிறைய பூக்கள் காணப்படும்; மகளிர் இதனை அணிவர். ஞாழலின் பெயரை நிகண்டுகள் குழப்பியுள்ளன. பலினி (சூடா.நி., பிங்.நி.) மற்றும் நாகம் (பிங்.நி., சேந்.தி.) என்ற மற்ற பெயர்கள் இதற்குச் சூட்டப்பட்டுள்ளன.

தாழை சங்க இலக்கியத்தில் அதிகமாகச் சுட்டப்பட்டுள்ள தாவரங்களில் ஒன்றாகும். இதன் மற்ற பெயர்கள் கைதை, கைதகை, கண்டல், முண்டகம், முடங்கல், மடி, முசலி மற்றும் தெங்கு. கோவை இளஞ்சேரன் (1982) இத்தாவரம் பற்றிச் சிறப்பாக விவாதித்துள்ளார். இவ்விவாதத்தின்படி தாழை என்பது அனைத்துக் கால இலக்கியப் பெயர் மட்டுமல்ல; உலக வழக்குப் பெயர். கைதை என்பது அனைத்துக் கால இலக்கியப் பெயர் என்றாலும் உலக வழக்கில் அருகிய பெயர். கைதகை என்ற சொல்லாட்சி சங்க இலக்கியத்தில் இல்லை. கண்டல் என்ற பெயர் சங்க இலக்கியத்தில், பத்துப்பாட்டு தவிர மற்றவற்றில் உள்ளது; ஆனால் இச் சொல்லாட்சி கடற்கரை ஓர நெய்தல் நிலத் தாழைக்கு மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது (ஏனெனில் கண்டல் என்பது அலையாத்திக் காட்டைக் குறிக்கும் சொல்; தற்பொழுதுகூட ஒரு சில அலையாத்திக் காட்டுத் தாவரங்களின் தமிழ்ப் பெயர் 'கண்டல்' என்பதாகும்). முண்டகம் என்ற பெயர் ஐந்திணை எழுபது தொடக்கமாக ஆட்சி செய்யப்பட்டுள்ளது. மடி, முசலி ஆகிய சொற்கள் நிகண்டுப் பெயர்கள், இலக்கிய வழக்கில் இல்லை. தெங்கு என்ற சொல் தென்னையின் தொடர்பில் பயன்படுத்தப்பட்டுள்ள இலக்கிய ஆட்சி எனினும், இலக்கியத்தில்

தென்னை என்ற தெங்கிற்கும் தாழை என்ற தெங்கிற்கும் சரியான முறையில் வேறுபாடுகள் சுட்டப்பட்டுள்ளன.

குல்லை என்பது சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டிருந் தாலும் இதன் சரியான தாவரவியல் பெயர் இதுவரை குறிப்பிடப் படவில்லை. நச்சினார்க்கினியர் இதற்கு 'கஞ்சாங் குல்லைப் பூ' என்று உரை கூறுகிறார். கஞ்சாங்கோரை என்று கூறுவோரும் உண்டு. நற்றிணை உரைக்காரர் இதனை 'மலைப்பச்சை' என்கிறார். பிங்கல நிகண்டு 'புனத்துளசி' எனக் கூறுகிறது. சேந்தன் திவாகரம் இதனை கஞ்சாச் செடி என்கிறது; இதனைச் சாமியும் (சாமி 1967) ஏற்றுக் கொள்கிறார். மருத்துவ நூலார் இதனை நாய்த்துளசி என்பர். சாமிநாதய்யர் (1955) இதனை வெட்சி என்று தவறுபட குறித்தார் என்று சாமி (1967) குறிப்பிடுகிறார். குல்லை இலை பூவோடு சேர்க்கப்பட்டு (இரண்டும் மணம் உடையதால்) மாலையாகப் பயன்படுத்தப்பட்டது என்று திருமுருகாற்றுப் படை கூறுகிறது [1]. கஞ்சா செடியின் இலை நறுமணம் அற்றது; இதேபோன்று நாய்த்துளசியின் இலையும் நறுமணம் அற்றது. எனவே குல்லையைக் காட்டுத் துளசி எனக் கொள்ளலாம். சங்க இலக்கியத்தில் இதன் மற்ற பெயர்கள் துழாய், துளவு, துளவம் ஆகியவை. இதன் தாவரப் பெயர் *Ocimum canum* ஆகும். திருமால் இதன் காரணமாகவே துழாயோன் என்று அழைக்கப் பட்டான். இந்த இடத்தில் துளசியைப் பற்றிய ஒரு விவாதம் செய்யப்படவேண்டும். துளசியின் தாவரப் பெயர் *Ocimum tenuiflorum* ஆகும். இது புனிதத்தன்மை வாய்ந்த தாவரமாக வைணவர்கள் (விஷ்ணுவைக் கடவுளாகக் கொண்டவர்கள்), ஸ்ரீவைணவர்கள் (Srivaishnavites: 'கிருஷ்ணர் வழிபாட்டு மரபைக் கொண்டவர்கள்) மற்றும் ஸ்மார்த்தர்களால் (Smarthas) கருதப்பட்டு, வழிபாட்டுப் பொருளாகவும் விளங்குகிறது. கி.பி. 12ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட கல்வெட்டுகளில் துளசி பற்றிய செய்திகள் காணப்படவில்லை. இந்தக் கல்வெட்டுகளும் ஒய்சாலா நாட்டு (அதாவது தமிழ் நாட்டுக்கு வெளியே) துங்கபத்ரநதிப் பகுதியில் உள்ளவை. எனவே கி.பி. 11 மற்றும் 12ஆம் நூற்றாண்டுகளுக்கு முன் தமிழகத்திற்குத் துளசியைப் பற்றித் தெரியாது என்று கருதலாம். மேலும், தமிழகத்தின் இயல் தாவரத் தொகுதியில் (Natural vegetation) துளசி காணப்படுவதில்லை; எல்லா இடங்களிலும் இது வளர் தாவரமாக (cultivated plant) தான் இன்று காணப்படுகிறது. புனிதத் துளசியின் இயல் இருப்பிடம் மத்தியத்தரைக் கடல் பகுதியின் வடக்குக்கடற்கரை நாடுகள்தான்;

1) ''முடித்த குல்லை இலையுடை நறும்பூ'' (திருமுருகு.:201)

இங்கு தான் துளசி இயற்கையாக, களை போல வளருகிறது. இங்கிருந்து இது கடல்வழியாக (வாணிபப் பொருள்களுடன்) ஒய்சால நாடு வந்து அங்கிருந்து தமிழகத்தையும் தென் இந்தியாவின் இதர பகுதிகளையும் அடைந்திருக்க வேண்டும்; கி.பி. 11 மற்றும் 12ஆம் நூற்றாண்டுகளில் தொடங்கி இது வளர்ப்புத் தாவரமாகத் தமிழகத்தில் பரவலாக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த கால கட்டத்தில்தான் இது விஷ்ணுவின் சின்னமாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்க வேண்டும்; இத்தேர்வில் இதன் கருநீல நிறம் ஒரு முக்கியக் காரணியாகச் செயல்பட்டிருக்க வேண்டும். துளசி மணிமாலை, துளசி மாலை போன்றவை எல்லாம் பின்னால் தோன்றியிருக்க வேண்டும். புனிதத் துளசியில் இரண்டு வகைகள் உள்ளன. ஒன்றின் இலைகள் கருமை கலந்த பச்சையானவை (ஸ்ரீ துளசி); மற்றொன்றின் இலைகள் சிவப்பு கலந்த கரும்பச்சை நிறம் (கிருஷ்ணதுளசி) கொண்டவை. துளசி என்ற பெயரே ஒய்சாலப் பெயராகும். இது ஒலி பெயர்ப்பு அடைந்து தமிழிலும் துளசி என்ற பெயரைப் பெற்றது. இப்பெயர் ஏற்கனவே இருந்த ‘குல்லை’ என்ற தமிழ்ச் சொல்லை நீக்கிவிட்டுத் தமிழகத்தில் வேரூன்றி விட்டது.

சங்க இலக்கியம் கூறும் இலவம் இன்றுள்ள இலவமன்று. அவ்விலவம் அடிமரம் பருத்து, கூர்மையான முட்களைக் கொண்டது. அடிமரம் முட்டு அமைப்பாக (buttress) கூண்டு வடிவத்தில் அமைந் திருக்கும். களிறு தன் தினவைக் குறைத்துக் கொள்ள இதன் அடிமரத்தில் உராய்ந்து தேய்த்துக் கொள்ளும். சங்க இலக்கிய இலவின் தாவரப்பெயர் *Bombax ceiba*. தற்போது பரவலாகக் காணப் படும் இலவம் *Ceiba pentandra* ஆகும். இது தமிழ்நாட்டுத் தாவரமன்று. இது ஆப்ரிக்க கண்டத்திலிருந்து கி.பி. 12ஆம் நூற்றாண்டுக்குப் பின் தமிழகத்தில் நுழைந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

வெற்றிலை பற்றி மதுரைக் காஞ்சியில் குறிப்பு உள்ளது (Yegna Narayan Aiyer 1956). இக்குறிப்பின்படி வெற்றிலைகள் நன்கு வளர்ந்த வெற்றிலைக் கொடிகளில் இருந்து பறிக்கப்பட்டன. வெற்றிலைப் போடும் பழக்கம் பற்றிப் பின்னால் வந்த சிலப்பதிகாரம் பதிவு செய்துள்ளது. தன் கணவன் கோவலனுக்குக் கண்ணகி வெற்றிலையை உணவிற்குப் பின் மெல்லுவதற்காகக் கொடுத்தாள் என்றும், அரசர்களின் பணியாளர்கள் நகைப்பெட்டிகள் போன்றவற்றில் அரசர்கள் மெல்லுவதற்காக வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு மற்றும் நறுமணத் தாவரப் பொருட்களை வைத்திருந்தார்கள் என்றும் சிலப்பதிகாரம் மேலும் கூறுகிறது (Yegna Narayan Aiyer 1956). கி.பி. முதலாம் நூற்றாண்டிற்குள்ளேயே மலேசியாவிலிருந்து வெற்றிலை

யும், கமுகும் (பாக்கு) தமிழகத்தில் நுழைந்து பரவலாகப் பயிரிடப் பட்டன. வெற்றிலையும், பாக்கும் ஒன்று சேர்ந்ததுதான் தாம்பூலம் ஆகும். தாம்பூலம் என்ற சொல் மலேசியாப் பகுதியில் தான் தோன்றியது. இந்தச் சொல் டிம்பல் (timbel) என்ற மலேசிய சொல்லிலிருந்துதான் தோன்றியது. இதேபோன்று பாக்கு என்ற சொல்லும் மலேசிய சொல்லில் இருந்து தான் தோன்றியது. மற்ற மொழிகளில் / இடங்களில் பாக்கின் பெயர்கள் பின்வருமாறுஃ அபுத்தக், அபுருத்தக் (அந்தமான்), அதக் (பர்மா), புவக், புவக்கா (சிங்கப்பூர்), குவகா, புகா, ரூபகா (சமஸ்கிருதம்), அடகா, கவங்கு (மலையாளம்), அடகே, அடிகே, கவங்கு, கௌங்கு (கன்னடம்), அடக்கை, பாக்கு, கமுகு (தமிழ்), வக்கா, பொகவக்கா (தெலுங்கு). வெற்றிலைக்கு இந்தியாவின் எந்த மொழியிலும் சிறப்பான பெயர் இல்லை. வடஇந்தியா முழுவதும் இது ‘பான்’ (pan) என்று அழைக்கப்படுகிறது; இதன் பொருள் ‘இலை’ என்பதாகும். இதே போன்று தென்னிந்திய மொழிகளிலும் இது ‘இலை’ என்றுதான் அழைக்கப்படுகிறது. வெத்திலை (வெற்றிலை) என்ற சொல் தோன்றுவதற்குக் காரணம் இதன் மலேசிய சொல்லே ஆகும். மலேசியாவில் இதன் பெயர் ‘ஒதட்’ அல்லது ‘வதட்’ ஆகும். இதிலிருந்து தோன்றியதுதான் தமிழ்ச் சொல்லான வெத்திலை.

தெங்கு அல்லது தென்னை தமிழர்களுக்கு மிகவும் அறிமுகமான தாவரமாகும். இது பிலிப்பைன்ஸ்/பசிபிக் தீவுகளில் தோன்றி இலங்கை வழியாகக் கேரளத்தையும் தமிழ் நாட்டையும் அடைந்திருக்க வேண்டும். வேதகால மனிதர்களுக்கும் வட இந்தியர்களுக்கும் தென்னை பற்றி இடைக்காலத்தில்தான் தெரியவந்துள்ளது. இதன் பெயர்/இதன் உறுப்புகளின் பெயர் தென்னிந்திய மொழிகளில் பின்வருமாறுஃ தென்னைமரம், தென்னை, தேங்காய் (தமிழ்), தெங்கு (தமிழ், மலையாளம், கன்னடம்), தெங்காயி (தெலுங்கு), தெங்கின காயி (கன்னடம்). இலங்கையிலும் இதன் பெயரைக் குறிக்கும் சொல் தெற்குத் திசையின் அடிப்படையில் அமைந்ததாகும். இந்த அனைத்துச் சொற்களுக்கும் வேர்ச் சொல் ‘தென்’ ஆகும்; அதாவது இது இந்தியாவிற்கு அதன் தெற்கில் அமைந்துள்ள ஒரு நாட்டில் / நாடுகளில் இருந்து வந்தது என்பது தெளிவு. இவை பிலிப்பைன்ஸ், பாலினீசியா அல்லது பசிபிக் தீவுகள் ஆகியவைகளாக இருக்க வேண்டும்; ஏனெனில் இங்கெல்லாம் தென்னை இயல்புத் தாவரமாக வளர்கிறது. அங்கிருந்து கடல் மூலம் பரவியோ, கடல் வாணிகம் மூலமாகவோ இது இலங்கையையும், கேரளா வழியாகத் தமிழகத்தையும் அடைந்திருக்க வேண்டும். இதன் காரணமாகவே கேரளாவில்

இன்றும் பரவலாக உள்ள தெங்கு என்ற பெயரில் தான் தமிழகத்திலும் இது முதன்முதலில் அழைக்கப்பட்டது. தென்னையைப் பற்றிய குறிப்புகள் தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியத்திலும் தெங்கு [1] என்ற பெயரில் தான் காணப்படுகின்றன. குறிப்பாக கி.பி. 250க்குப் பின்னால் (சிவத்தம்பி 2000) எழுதப்பட்ட திருமுருகாற்றுப்படையில் தெங்கு பற்றி (தென்னை என்ற பெயரால் அல்ல [2]) இரண்டு குறிப்புகள் உள்ளன. கி.பி. 7ஆம் நூற்றாண்டின் பக்தி இலக்கியத்திலும், கோவில்களில் தேங்காய் உடைத்தல் பற்றிய குறிப்புகள் இல்லை. ஆனால், 7ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் தெங்கு நன்கு அறிமுகமாயிருந்தது. முதலாம் நந்திவர்மனின் கி.பி. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தண்டந்தோட்டம் செப்பேடுகளில் ''இம்மனை உள்ளிட்ட தெங்கும் பனையும் ஈழவர் ஏறப்பெறா ராகவும்'' என்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. ''தெங்கு நின்ற நந்தவனம்'' என்ற தொடரையும் இந்நூற்றாண்டில் தான் நாம் காண்கிறோம். கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரை கூட தேங்காய் இறைவனுக்குப் படைக்கப்படவில்லை.

மாதுளையின் (*Punica granatum*) பூக்கள் பற்றிச் சங்கப்பாடல்களில் எதுவும் காணப்படவில்லை. பெரும்பாணாற்றுப் படையில் மாதுளங்காய் கறிக்குதவுவது பற்றிப் பாடப்பட்டுள்ளது (பெரும்பாண்: 306-307) (பார்க்க அத்தியாயம் VIII). மாதுளை தமிழகத்தைச் சேர்ந்த தாவரமல்ல. இது ஒரு பயிர்த் தாவரமாக தமிழகத்திற்கு வடஇந்தியாவிலிருந்து சங்க காலத்தில் நுழைந்திருக்க வேண்டும். தோட்டங்களில் வளர்க்கப்பட்ட பயிராக இது மலைபடுகடாமில் பேசப்படுகிறது (Yegna Narayan Aiyer 1956).

நெடுநல்வாடையிலும், மதுரைக்காஞ்சியிலும் கடுகு பற்றிய செய்திகள் உள்ளன. ஐயவி என்ற சிறு வெண்கடுகும் தமிழகத்தில் பயிரிடப்பட்டது.

---

1) தென்னங்காயாகிய நுங்கு தேனை (இனிப்புத் திரவத்தை) அதிகமாகத் தன்னோடு சேர்த்து வைத்திருப்பதால், தேன்+நுங்கு என்பது தெங்கு என மாறிவிட்டது என்றும், தேங்காய்க்குள்ளும் இனிப்பான தேன்சுவை நீர் இருப்பதால் முதலில் தேன்காய் என்றும் பின்னால் மருவி தேங்காய் என்று அழைக்கப்பட்டது என்றும் ஒருசிலர் கருதுகின்றனர். எனினும், தென்னை மற்றும் தெங்கின் வேர்ச்சொல் 'தென்' என்பதில் ஐயப்பாடு இல்லை; 'தேன்' வேர்ச்சொல்லாக இருப்பதற்கான வாய்ப்புகள் குறைவு.

2) 'தென்னை' என்ற சொல் நாலடியாரில் முதன்முதலில் காணப்படுகிறது: ''இடையாயார் தென்னை அனையர்''.

இஞ்சியின் தாவரப் பெயர் *Zingiber officinale*. காவிரிப் பிரதேசத்தில் இது சிறப்பாக வளர்ந்தது என்று மலைபடுகடாமும், பட்டினப்பாலையும்[1] குறிப்பிடுகின்றன. அறுவடை செய்யப்பட்ட இஞ்சிகள் குவிக்கப்பட்டு சமமான கட்டாந்தரையில் காயவைக்கப் படுவதாக மதுரைக்காஞ்சி[2] தெரிவிக்கிறது. இஞ்சி நிச்சயமாகத் தமிழகத் தாவரமல்ல. இது பயிர்த் தாவரமாகவே சங்க கால ஆரம்பத்திலோ அதற்கு முன்போ நுழைந்திருக்க வேண்டும்/நுழைக்கப்பட்டு இருக்க வேண்டும். இஞ்சியின் இயல்பு உறவினங்கள் (wild relatives) வடகிழக்கு இமாலயப் பகுதிகளில் காணப்படுகின்றன. எனவே அங்குதான் இஞ்சி ஒரு பயிர்த் தாவரமாகப் பரிணமித்திருக்க வேண்டும். அங்கிருந்து இஞ்சி தமிழகத்திற்கு வந்திருக்க வேண்டும்.

மஞ்சள் பன்னெடுங்காலமாக இந்தியாவில் பயிரிடப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. எனினும் மஞ்சள் எங்கு தோன்றியது என்ற விவரங்கள் தெளிவாக இல்லை; சீனாவில் தோன்றியிருக்கலாம் என்று ஒருசிலரால் கருதப்படுகிறது. இதன் தாவரப் பெயர் *Curcuma domestica.* இந்தச் சிற்றினத்தைத் தவிர *Curcuma* பேரினத்தின் வேறு பல சிற்றினங்கள் இந்தியாவிலும், தமிழகத்திலும் இயல்பாக வளர்ந்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இதன் சமஸ்கிருதப் பெயர் 'ஹரித்ரா' ஆகும். பெரிபிளசும், டயாஸ்கோரிடீசும் இதனைப் பற்றிக் குறிப்பிடவில்லை. பைபிளிலும் இதைப் பற்றிய குறிப்புகள் இல்லை. சங்க இலக்கியம் இந்தத் தாவரத்தை 'மஞ்சள்' என்று அழைக்கின்றது. சுவாமி (Swamy 1978), மஞ்சள் என்ற பெயர் வேறொரு தாவரத்திற்கு (மஞ்சள் நிறத்தைக் கொடுக்கும்) முதலில் சூட்டப்பட்டு, பின்பு தற்போதைய மஞ்சள் தாவரம் தமிழகத்திற்கு வந்து பரவலாக்கப்பட்ட பின் அதற்கு சூட்டப்பட்டிருக்கலாம் என்று கருதுகிறார். தமிழகத்திலும் தமிழகத்தை ஒட்டிய கேரளாவிலும் இன்றும் *Coscinium fenestratum* என்ற தாவரம் மஞ்சளாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மரமஞ்சள் என்று தமிழிலும் மலையாளத்திலும், ஹரித்ரா என்று வடமொழியிலும் இது அழைக்கப்படுகிறது. இத்தாவரத்தின் இளம் குச்சிகள் சிறுதுண்டுகளாக வெட்டப்பட்டு, காயவைக்கப்பட்டு மஞ்சளாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சுவாமி (Swamy 1978) கூறியபடி இந்தத் தாவரத்திற்கு முதலிலும், பின்பு தற்போதைய மஞ்சள் தாவரத்திற்கும், மஞ்சள் என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கலாம்.

---

1) ''முதற் சேம்பின் முளை இஞ்சி'' (பட்.பா.:19)

2) ''இஞ்சி மஞ்சள் பைங்கறி பிறவும்
பல்வேறு தாரமொடு கல்லகத்து ஈண்டி'' (மது.கா.:289-290)

சுள்ளி என்ற சொல் தாவரங்களைச் சுட்டும் சொல்லாக சங்க இலக்கியத்தில் பல இடங்களில் காணப்படுகிறது. சுள்ளி என்ற சொல்லுக்கு நிகண்டுகள் அனிச்சம், நறவம், மராஅம், நாகம், ஞாழல், ஆச்சா போன்ற பல தாவரங்களைச் சுட்டுகின்றன. இச்சொல்லின் பொருட்கள் மென்மை, கூர்மை, ஈரமற்று காய்ந்தது ஆகியவையாகும். 'சுள்ளி வேலி' பற்றியும் இலக்கியமும் கல்வெட்டுகளும் கூறுகின்றன. எனவே இது ஒரு தனியான தாவரமா அல்லது பல தாவரங்களுக்கான ஒரு பொதுப்பெயரா என்பது தெளிவாகத் தெரியவில்லை. இது ஒரு பொதுப் பெயராக இருப்பதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

கண்டல் என்ற சொல்லும் சங்க இலக்கியத்தில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ள ஒரு சொல்லாகும். இது தாழை, முள்ளி, அலையாத்திக் காடுகளில் காணப்படும் ஒருசில மர இனங்கள் ஆகியவற்றைக் குறிக்கும் ஒரு பொதுவான சொல்லாகும். 'கண்டல்' என்றால் உப்பு நிறைந்த சதுப்புநிலம் (நெய்தல்) என்று பொருள். எனவே பாட்டிற்கு ஏற்பக் கண்டலின் பொருளை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

செம்மரம் என்ற சொல்லும் பல மரங்களைக் குறிக்கும் சொல்லாக இருக்கலாம். வேங்கை, சே (அழிஞ்சில்), தான்றி, *Bridelia crenulata* போன்ற தாவரங்களுக்குச் செம்மரம் என்ற பெயர் சுட்டப்பட்டுள்ளது.

இ) சங்கம் மருவியகாலம் (கி.பி. 150-600 AD)

சங்கம் மருவிய காலத்தில் வெளிவந்த பதினென்கீழ்க்கணக்கு நூல்களிலும், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டு பெரும் காப்பியங்களிலும், முத்தொள்ளாயிரம் மற்றும் இன்னிலை ஆகிய வற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ள தாவரங்கள் ஏறக்குறைய 185 ஆகும் (பின்னிணைப்பு-1). இவற்றில் பெரும்பாலானவை சங்க இலக்கியங் களில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டவையாகும். ஏறத்தாழ 20 தாவரங் கள் இக்கால கட்டத்தில் புதிதாகக் குறிப்பிடப்பட்டுள்ளன; 25 சங்க இலக்கியத் தாவரங்கள் சங்கம் மருவிய கால இலக்கியத்தில் குறிப்பிடப்படவில்லை; 15 தாவரங்களின் சங்க காலப் பெயர்கள் மாற்றப்பட்டு வேறு பெயர்களில் அவை அழைக்கப்பட்டன. இவற் றில் பலவற்றின் பெயர்கள் வடமொழித்தாக்கத்தின் காரணமாகப் பெயர் மாற்றமடைந்தன.

சங்கம் மருவிய காலத்தில் இலக்கியத்தில் புதிதாகச் சுட்டப் படும் தாவங்களில் ஒன்று கன்னிகாரம் ஆகும். இதன் தாவரப் பெயரை அறிவதில் சற்றுச் சிக்கல் உள்ளது. பொன்னைக் குறிக்கும் சொற்களில்

'காரம்' என்பதும் ஒன்று என்பதாலும் கோங்கின் பூமொட்டு கன்னியின் உறுப்பான மார்புக்கு உவமை கூறப்படும் வகையில் 'கன்னியின் பொன்' என்ற பொருளில் 'கன்னிகாரம்' என்ற பெயர் சுட்டப்பட்டதாகவும் கோவை இளஞ்சேரன் *(1982)* கூறுவார். சூடாமணி நிகண்டும் கோங்கிற்கு கன்னிகாரம் என்ற பெயரையும், துருமோற்பலம் என்ற மற்றொரு பெயரையும் கொடுக்கிறது. சிலப்பதிகாரத்தில் ''கடிமலர் அவிழ்ந்த கன்னிகாரத்துத் தொடிவளைத் தோளி ஒருந்தி தோன்றி'' *(சிலம்பு.:11:110-111)* என்று கூறப் பட்டுள்ளது. கலித்தொகையில் வரும் ''மாவீன்ற தளிரின் மேல் கணிகாரம் கொட்கும் கொல்'' *(கலி.:143:4,5)* என்ற வரிகளில் உள்ள 'கணிகாரம்' என்பதற்கு 'கோங்கமலர்' என்று பொருள் கூறப்பட் டுள்ளது. எனவே சங்க இலக்கியத்துக் கணிகாரம் தான் சிலப்பதி காரத்து கன்னிகாரம் என்று வாதிடுவோரும் உண்டு. ஆனால் கணிகாரம் என்ற சொல் நிகண்டில் இல்லை. ஈழநாட்டு நல்லூர்ப் பொன்னம்பலப் பிள்ளை என்பவர் எழுதிய ''கணிகைதுன்று அமைப்பில் கோங்கு'' என்ற வரிகள் (இரகுவமிசம் : தமிழ்) கொண்டு கணிகாரம் என்பது கணிகை ஆரம் என்று கருதலாம். அதாவது, கணிகையரின் கவர்ச்சி உறுப்பான மார்புக்கு உவமையானதால் இப்பெயர் அமைந்திருக்கலாம். பிங்கலநிகண்டு கோங்கிற்கு 'பிணர்', 'குயா' என்ற வேறு பெயர்களையும், சேந்தன் திவாகரம் 'பவனி' என்ற பெயரையும் கொடுக்கின்றன. கன்னிகாரம் என்பது ஒரே தாவரத்தின் வடமொழிப் பெயர் என்றும், கணிகாரம் என்பது தமிழ்ப்பெயர் என்றும் ஒருசிலர் வாதிடுகின்றனர். கணிகாரம், கன்னிகாரம் ஆகிய இரண்டு சொற்களுமே வடமொழிச் சொற்களாகும். இவை *Pterospermum xylocarpum* என்ற தாவரத்திற்குச் சுட்டப்பட்ட பெயர்களாகும். இத்தாவரம் தமிழகத்திலும் காணப்பட்டதால் இச் சொற்கள் தமிழிலும் பயன்படுத்தப்பட்டன. இந்தச் சிற்றினத்திற்கும் இது தொடர்பான *Pterospermum suberifolium* என்ற மற்றொரு தமிழ்நாட்டுச் சிற்றினத்திற்கும் 'பொலவு' என்ற பெயர் சூட்டப்பட் டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது; எனினும் கணிகாரம் மற்றும் கன்னிகாரம் ஆகிய இரண்டு சொற்களும் இவ்விரு தாவரச் சிற்றினங் களுக்கும் (ஆனால் கோங்கிற்கு அல்ல) பக்தி காலத்தில் அதிக அளவு பயன்படுத்தப்பட்டன.

ஈ) பக்தி இலக்கியக் காலமும் அதற்குப் பின்பும் (கி.பி. 600-க்கு பின்பு)

பக்தி இலக்கியக் காலம் *(கி.பி. 600-850)* மற்றும் அதைத் தொடர்ந்து வந்த சோழர்காலம் *(கி.பி. 850-1350)* மற்றும் நாயக்கர்

காலம் (கி.பி. 1350-1750) வரை உருவாக்கப்பட்ட இலக்கிய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள தாவரங்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 140 ஆகும் (பின்னிணைப்பு - 1). இவை பெரும்பாலும் தமிழகத்தில் முன்னால் அறியப்பட்டவையாகும். புதிதாக நுழைந்த தாவரங்கள் பற்றிய விவரங்கள் மட்டும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

குசும்பை என்ற தாவரப் பெயர் 7ஆம் நூற்றாண்டுக்குப் பின் தமிழிலக்கியத்தில் காணப்படும் பெயராகும். இத்தாவரத்தின் பூக்கள் பற்றித் திருமூலர் பாடியுள்ளார். குறுஞ்செடியான குசும்பையின் பூ கோவாங்கம் என்ற மாணிக்கக்கல் நிறம் (காவிச்சிவப்பு) கொண்டது. இதுவே செந்துருக்கம் என்று அழைக்கப்பட்டிருக்கலாம் என்று ஒரு சிலர் கருதுகின்றனர். இது தற்பொழுது 'கேசரிப்பவுடர்' என்று அழைக்கப்படும் ஒரு சாயப் பொருளைக் கொடுக்கிறது. உணவு, உடை, ஓவியங்கள் போன்றவற்றிற்கு நிறங்கொடுக்க உதவும் சாயப்பொருள் இதுவாகும். இது வடநாட்டிலிருந்து தமிழகத்திற்குக் கொண்டு வரப்பட்ட தாவரப் பொருளாகும். 7 முதல் 13ஆம் நூற்றாண்டு வரை இது வாணிகப் பொருளாக மட்டுமே தமிழகத்தில் கிடைத்தது. பின்புதான் இதனைத் தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் பயிரிட முயன்றனர்; ஆனால் பரவலாகப் பயிரிட முடியவில்லை.

கொக்கிறகு என்பதும் முதன் முதலில் பக்தி இலக்கியக் காலத்தில் சுட்டப்பட்டுள்ள ஒரு தாவரமாகும்[1]. கொக்கின் இறகு வடிவமைப்பில் கொத்தாகப் பூக்கும் இத்தாவரம் ஒரு பெருஞ் செடியாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இதன் தாவரப் பெயரைச்சரியாக அறிந்துகொள்ள முடியவில்லை. கொக்கு மந்தாரை என்று தற்பொழுது அழைக்கப்படும் தாவரமாக இருக்கலாமோ? இதன் பூ சிவனுக்குரியது; சிவன் வழிபாட்டில் பயன்படுத்தப்பட்டது.

செங்கிடை என்ற தாவரம் பக்தி இலக்கியக் காலத்திற்குப்பின் வந்த தமிழிலக்கியத்தில் சுட்டப்பட்டுள்ளது. கம்பர் இதைப் பற்றிப் பாடியுள்ளார். செம்மை நிறப்பூக்களையுடைய இதன் பூக்களில் வாயிதழ் போன்ற நீண்ட இதழ் காணப்படுகிறது. நெடுந்தொலைவு மணம் வீசுவது; அழகிய முகை கொண்டது; கார்காலத்தில் மலர்வது. முல்லை நிலத்தில் காணப்படும் இத்தாவரம் ஒரு முட்செடி என்பதும் இதைக் கந்தூரி என்றும் கூறுவர் என்பதும் பிங்கலநிகண்டு (2912) மூலம் தெரிய வருகிறது. இதன் தாவரப் பெயரைச் சரியாக அறிந்து கொள்ள முடியவில்லை.

---

1) *''கொக்கின் இறகினொடு வன்னிப்புக்கசடையார்'' (ஞான.தே.ஐயாறு 8)*
''கொக்கின் தூவலும் கூவிளங்கண்ணியும்'' (அப்.தே.நாரையூர்:4)

செவ்வந்தி எனப்படும் தாவரத்தைப் பற்றிய முதல் குறிப்பு திருவிளையாடற் புராணத்தில்தான் காணப்படுகிறது. இதுவும் தமிழகத்தில் நுழைந்த/நுழைக்கப்பட்ட ஒரு தாவரமாகும். *Chrysanthemum* என்ற தாவரப் பேரினத்தைச் சேர்ந்த இச்சிற்றினத்தின் பூ அழகு பூவாகவும், இறைவனுக்குப் படைக்கப்படும் பூவாகவும் மாறியது.

கேழ்வரகு (= ராகி) தாவரம் பற்றி எந்த இலக்கிய/கல்வெட்டு குறிப்பும் தமிழகத்திலோ, தென்னிந்தியாவிலோ கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரை காணப்படவில்லை. கி.பி. 10ஆம் நூற்றாண்டில்தான் தென்னிந்தியாவிலும், தமிழகத்திலும் இந்தத் தாவரம் பயிர்த்தாவரமாகத் தீவிர வளர்ப்பின் மூலம் மாற்றப் பட்டிருக்க வேண்டும்; இந்த நிகழ்வு தென்னிந்தியாவின் கர்நாடக - தமிழக எல்லையில் நடைபெற்றிருக்க வேண்டும். இதன் இயல்பு வகை (wild variety) ஒன்று கர்நாடகத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ராகி ஆப்ரிக்காவில் தோன்றியிருக்க வேண்டும் என்று பல தாவரவியல் அறிஞர்களால் கருதப்படுகிறது. எனினும், இத்தாவரம் பயிர்த் தாவரமாகத் தனித்தனியே கர்நாடகாவிலும், ஆப்ரிக்காவிலும் பரிணமித்திருக்க வேண்டும். இதன் கன்னடப் பெயரான 'ராகி' மற்ற தென்னக மொழிகளிலும் மாற்றமின்றியோ அல்லது ஒருசில மாற்றங்களோடோ காணப்படுகிறது: தெலுங்கு - ராகுலு. தமிழ் - ராகி (கேழ்வரகு); சமஸ்கிருதம் - ராகிகா, ராஜிகா.

ஆமணக்குத் தாவரத்தின் இயல்பு ரகங்களும் (wild varieties), உறவுத் தாவரங்களும் (relatives) அபிசீனியாவில் அதிக அளவில் செறிந்து காணப்படுகின்றன. இதன் காரணமாக டி கண்டோல் (De Candolle 1886) ஆமணக்கு ஒரு ஆப்ரிக்கத் தாவரமென்றும், அது அங்கு தான் பயிர்த் தாவரமாகப் பரிணமித்து இருக்க வேண்டுமென்றும் வாதிட்டுள்ளார். அங்கிருந்து உலகின் பலபகுதிகளுக்கு அது பரவியிருக்க வேண்டும் என்றும் அவர் கருதினார். ஆமணக்கிற்கு சமஸ்கிருதப் பெயர் ஒன்று இருப்பதாலும், இது சரகா (Charaka) மற்றும் சுஸ்ருதாவின் (Susruta) நூல்களில் காணப்படுவதாலும் இது ஒரு இந்தியத் தாவரம்தான் என்று வாட் (Watt 1891/1892) கருத்து தெரிவித்துள்ளார். இதன் சமஸ்கிருதப் பெயர் இரந்தா (eranda) ஆகும். தென்னிந்திய மொழிகளில் இதன் பெயர்கள் ஆமணக்கு என்ற தமிழ்ப் பெயரில் இருந்து மருவியவை: அமடம், அம்தி, சிட்டமம்தி, அபுதபு (தெலுங்கு), ஆவணக்கு (மலையாளம்), மற்றும் ஹாரலூ/ஆரலூ (கன்னடம்). பண்டைய கிரேக்க மற்றும் எகிப்து மொழிகளில் இதன் பெயர்கள் கிக்கி (Kikki), கிக்கு (Kikku) மற்றும் ஊணக்கு (Unakku).

எனினும், ஆமணக்கு இந்தியாவில் ஒரு பயிர்த் தாவரமாகவே தற்போது இருந்துவருகிறது; இயல் தாவரமாக எங்கும் காணப்படுவதில்லை. இரந்தா என்ற சொல் பண்டைய சமஸ்கிருத நூல்களில் பயன்படுத்தப்பட்டிருப்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்பதாலும் ஆமணக்கு நிச்சயமாக ஒரு அபிசீனியத் தாவரம் என்பதாலும், இரந்தா என்ற பெயர் (மலமிளக்கி எண்ணையைக் கொடுக்கும்) வேறொரு தாவரத்தின் விதைகளைச் சுட்டியிருக்கலாம் என்றும், ஆமணக்கு இந்தியாவில் நுழைந்து ஒரு மலமிளக்கி எண்ணெய்த் தாவரமாகப் பயன்படுத்தப்பட ஆரம்பித்தவுடன், இந்தப் பெயர் பழைய தாவரத்திலிருந்து விடுபட்டு புதிய ஆமணக்குத் தாவரத்தைச் சுட்டும்படி மாறியிருக்கலாம் என்று சுவாமி (Swamy 1976) கருதுகிறார். *(ஆமணக்கு பற்றிய வேறு விவரங்களுக்கு பார்க்க பக்கம் 199.)*

மத்தியத் தரைக்கடல் நாடுகளுடன் இருந்த வியாபாரத் தொடர்புகளின் காரணமாக ஒருசில புதிய பயிர்த் தாவரங்களும், களைத் தாவரங்களும் தமிழகத்தில் நுழைந்தன. கி.பி. 12ஆம் நூற்றாண்டுக்குப் பின் ஏற்பட்ட மத்திய கிழக்கு நாட்டு இசுலாமியர் படையெடுப்புகளால் அந்த நாடுகளின் தாவரங்களும் தாவரப் பொருட்களும் தமிழகத்திலும் இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் நுழைந்தன. எடுத்துக்காட்டாக, ரோஜா இந்தியாவைச் சேர்ந்ததல்ல; முகலாய மன்னர்கள் காலத்தில் இந்தியாவில் இது நுழைக்கப்பட்டது.

கடலைப் பருப்புத் தாவரம் நம் நாட்டின் இயல்பான தாவரம் அல்ல. நம்முடைய இயற்கைத் தாவரத் தொகுதிகளில் (vegetation) இது காணப்படுவதில்லை. இதன் காரணமாகவே, பண்டிகைகளிலும் சடங்குகளிலும் இதன் பயன்பாடு விக்னேசுவரா *(ஏறத்தாழ கி.பி. 1100)* என்ற ஸ்மிருதி ஆசிரியரால் (Smiriti writer) தடைசெய்யப்பட்டது. இது ஒரு வெளிநாட்டுப் பொருள் என்பதாலேயே இதற்கு சாத்திர அனுமதி (sastric sanction) கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் தாவரத்தின் தாவரப் பெயர் *Cicer arietinum* ஆகும். இதன் இயற்கையான உறைவிடம் தென் ஐரோப்பா (கிரீஸ், இத்தாலி போன்ற நாடுகள்) ஆகும். கி.பி. முதலாம் நூற்றாண்டு வாக்கில் இது எகிப்துக்கு இறக்குமதி செய்யப்பட்டது. இந்தியாவிற்குத் தரைவழியாக இது டோரியஸ் காலத்தில் *(கி.மு. 521-485)* நுழைந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஒரு சிலர் பஞ்சாப் பகுதியை மாவீரன் அலெக்சாண்டர் ஆக்ரமித்தபோது (கி.பி. முதலாம் நூற்றாண்டு) இது இந்தியாவை அடைந்திருக்கலாம் என்று கருதுகின்றனர் (Gode 1961). வடஇந்திய மொழிகளில் இத்தாவரத்தின் பெயர் சனகா (canaka) அல்லது அதன் திரிபுகளாகும். முதலில் இது குதிரைகளின் உணவாகத்

தான் பயன்படுத்தப்பட்டது என்பதால், தமிழகத்திற்குக் குதிரைகள் வந்தபோது இத்தாவரமும் வட இந்தியாவில் இருந்து வந்திருக்க வேண்டும் என்று ஒருசில அறிஞர்கள் கருதுகின்றனர் (Swamy 1973). இந்நிகழ்வு கி.பி. 8 அல்லது 9ஆம் நூற்றாண்டில் அதிக அளவு ஏற்பட்டிருக்க வேண்டும் என்று சுவாமி (Swamy 1973) கருதுகிறார். வேறுசில அறிஞர்கள் இது கிரீஸ் போன்ற நாடுகளில் இருந்து கடல் வாணிகம் மூலமாகத்தான் தமிழகத்தை அடைந்திருக்க வேண்டும் என்றும், 'கடலை' (கடல் என்பதிலிருந்து பெறப்பட்டது) என்ற இதன் பெயர் இக்கருத்தை வலியுறுத்துகிறது என்றும் கருதுகிறார்கள்.

வாஸ்கோடகாமா இந்தியாவிற்கு ஐரோப்பாவிலிருந்து புதிய கடல் வழியைக் கண்டுபிடித்தவுடன், பல புதிய தாவரங்கள், குறிப்பாகப் பயிர்த் தாவரங்கள், ஐரோப்பாவிலிருந்தும் அதன் வழியாக வேறுசில நாடுகளிலிருந்தும் இந்தியாவை அடைந்தன. இவற்றில் முக்கியப் பங்கு ஆற்றியவை தென்னமெரிக்க நாடுகளின் தாவரங்கள்தான். இவ்வாறு இந்தியாவில் நுழைந்த தாவரங்களில் மிக முக்கியமானது மிளகாய் ஆகும். கி.பி. 16-17ஆம் நூற்றாண்டுக்குப் பின் ஆந்திரா வழியாகத் தமிழகத்தில் நுழைந்த தாவரம் என்பதால் பண்டைய தமிழரின் உணவில் மிளகாய் கிடையாது. காரச் சுவைக்கு கருமிளகும் இஞ்சியும்தான் பயன்படுத்தப்பட்டன. ஆனால் நுழைந்த உடனேயே தமிழர் உணவில் மிக முக்கிய இடத்தை மிளகாய் பெற்று விட்டது. போர்ச்சுகீசியர்களால் மெக்சிகோவிலிருந்து மிளகாய் இந்தியாவிற்கு வந்து சேர்ந்தது. மிளகாய் பற்றி முதன்முதலில் புரந்தரதாசர் கிருதியில் வருவதாக அசயா (Achaya 1998) கூறுகிறார் (புரந்தரதாசர் - கி.பி.15-16ஆம் நூற்றாண்டு).

''உன்னை பச்சை வண்ணத்தில் பார்த்தேன்
முதிர முதிரச் செவ்வண்ணம் அடைந்தாய் - பார்ப்பதற்கு
அழகாய், உணவிற்கு உயிர் ஊட்டுவதாய், ஆனால்
அதிகம் சேர்த்தால் உணவுப் பாதையை எரிப்பதாய்
ஏழையின் நாயகனே, உணவுக்குச் சுவை சேர்ப்பவனே
கடித்தால் காரமானவனே, பாண்டு ரங்கா
நீ அணுகுவதற்குக் கடினமானவன், மிளகாய் போல''
(கிருஷ்ணன் 2004).

இந்தியாவின் பல பகுதிகளிலும் (தமிழகம் உட்பட) மிளகாய் தற்பொழுது அதிக அளவில் பயிரிடப்படுகிறது.

பழங்களில் கொய்யாப்பழம் 16ஆம் நூற்றாண்டில் பெரு நாட்டிலிருந்து ஸ்பெயின் வழியாக இந்தியாவை அடைந்தது.

புகையிலை கி.பி. 16ஆம் நூற்றாண்டில்தான் முதன்முதலில் அமெரிக்காவிலிருந்து இந்தியாவை அடைந்தது. இதனை இந்தியா வில் அறிமுகப்படுத்தியவர்கள் போர்ச்சுகீசியர்கள் ஆவர். 1605ஆம் ஆண்டு முதல் இது இந்தியாவில் பயிர்த் தாவரமாகப் பயிரிடப் பட்டது.

போர்ச்சுகீசியர்களால் இந்தியாவில் நுழைந்த மற்றொரு முக்கியப் பயிர்த் தாவரம் உருளைக்கிழங்கு ஆகும். சிலி மற்றும் பெரு நாடுகளை (தென் அமெரிக்கா) உறைவிடமாகக் கொண்ட இத்தாவர மும் 16-17ஆம் நூற்றாண்டுகளில் இந்தியாவில் நுழைக்கப்பட்டது. 17ஆம் நூற்றாண்டில் வந்த உருளைக்கிழங்கு, சர் தாமஸ் ரோ, ஆசப்கான் என்பவருக்கு அளித்த விருந்தில் முதன்முதலாகப் படைக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. இது 18ஆம் நூற்றாண்டிலும் மிகவும் அரிதான உணவுப் பொருளாகத் திகழ்ந்தது என்பதை வாரன் ஹேஸ்டிங் அவர்களுக்கு ஒருகூடை உருளைக்கிழங்குகள் பரிசாக அளிக்கப்பட்டதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். தமிழகத்தின் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் இது பயிரிடத் தொடங்கப் பட்டது. முந்திரித் தாவரமும் 16ஆம் நூற்றாண்டில் இந்தியாவை அடைந்தது. 1578ஆம் ஆண்டு இது கொச்சி சமஸ்தானத்தில் செழிப் பாக வளர்க்கத் தொடங்கப்பட்டது என்று தெரிய வருகிறது.

மத்திய அமெரிக்கப் பகுதியிலிருந்து தமிழகத்தை அடைந்த மற்றொரு பயிர்த் தாவரம் வேர்க்கடலை (= நிலக்கடலை) ஆகும். இது ஏறத்தாழ கி.பி. 1825 முதல் 1850 ஆண்டுகளுக்கு இடையே இந்தியா வில் நுழைந்தது.

தக்காளி கி.பி. 1550இல் ஐரோப்பாவிற்கு அமெரிக்காவில் இருந்து வந்தது. இந்தியாவிற்கு எப்பொழுது வந்தது என்பது சரியாகத் தெரியவில்லை. ஆனால் இருநூறு ஆண்டுகள் வரை இது ஐரோப்பியர் களுக்காக மட்டுமே இந்தியாவில் பயிரிடப்பட்டது. காப்பி, தேயிலை போன்றவை ஆங்கிலேயர்கள் மற்றும் பிரான்ஸ் நாட்டவர்களால் இந்தியாவில் நுழைந்தவை ஆகும். காப்பித் தாவரம் எத்தியோப்பியா வில் இருந்து பெறப்பட்டது.

கி.பி. 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட புதிய தாவர நுழைப்பு மிகப் பெரிய அளவில் அமைந்தது. இவ்வாறு நுழைக்கப் பட்ட பல தாவரங்கள் நம்முடைய மண்ணில் வேரூன்றியது மட்டு மல்லாமல் நம்முடைய சமுதாயத்தையும் பழக்கவழக்கங்களையும் அதிக அளவில் மாற்றின என்றால் அது மிகையாகாது. இதனால் தமிழகத்தின் உணவுப் பொருட்களிலும் உணவுப் பழக்கங்களிலும்,

உணவு முறைகளிலும் தான் அதிகத் தாக்கங்கள் ஏற்பட்டன (பார்க்க இந்நூலின் அத்தியாயம் VIII)

பாதாம்பருப்பும், மரவள்ளிக் கிழங்கும் (மரச்சீனிக்கிழங்கு என்றும் மரிச்சினிக் கிழங்கு என்றும் திருநெல்வேலி பகுதிகளில் அழைக்கப்பட்டது) இந்தியாவில் நுழைக்கப்பட்ட தாவரங்கள்தான். மரவள்ளிக்கிழங்கு விசாகம் திருநாள் மகாராஜாவால் தென் கேரள மக்களின் பசியைப் போக்கத் தென் அமெரிக்காவிருந்து கொண்டு வரப்பட்டதாகக் கருதப்படுகிறது. மரவள்ளிக் கிழங்குக்கு தென் அமெரிக்காவிலிருந்து 19ஆம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தது. தமிழகத்திற்கு உடனே வந்து சேர்ந்த இத்தாவரம் தமிழகத்தின் பல பகுதிகளில் ஏழை மக்களின் உணவாக மாறியது. திருநெல்வேலிப் பகுதியில் மரிச்சீனிக்கிழங்கு எவ்வாறு பசியை விரட்டும் ஒரு உணவாகத் திகழ்ந்து வந்தது என்பதை குமாரசெல்வா (2004) விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்; இதனை நறுக்கி, சுட்டோ அவித்தோ சாப்பிட்டனர். தற்பொழுது இதில் பல ரகங்கள் உள்ளது தெரிய வருகிறது : ஆனமறவன், கரியல பொரியன், சுந்தரி வெள்ள, கோயிலு வெள்ள, கையாலசாடி, கறுத்த கலியன், நூறுமுட்டன், அடுக்கு முட்டன் போன்றவை.

கிராம்புத் தாவரம் (Clove) இந்தியாவின் எந்தப் பகுதியிலும் வரலாற்றின் எந்தக் காலகட்டத்திலும் காணப்பட்டதில்லை. 19ஆம் நூற்றாண்டின் இரண்டாவது பாதியில்தான் கிராம்பு சோதனை அடிப்படையில் இந்தியாவில் (முக்கியமாகக் கேரளாவில்) வளர்க்கப் பட்டது. ஆனால், ஒரு வாணிகப் பொருளாக இது தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதியைப் பசிபிக் தீவுகளிலிருந்து, குறிப்பாக மொலுக்கா தீவிலிருந்து, அடைந்து, பின்பு அங்கிருந்து தமிழகத் திற்குக் கொண்டு வரப்பட்டது. மேலும் தென் இந்தியாவின் துறைமுகங்களிலிருந்து கிராம்பு மத்தியத்தரைக்கடல் நாடுகளுக்குச் சென்று அடைந்தது (Swamy 1973, 1976). சங்க இலக்கியத்திலோ, பெரிபிளஸிலோ, பைபிளிலோ கிராம்பு பற்றிய குறிப்புகள் எதுவு மில்லை. கிரேக்க மருத்துவர் டியாஸ்கோரிடீஸ் கிராம்பு பற்றி குறிப் பிட்டுள்ளார். இதேபோன்று சரகாவும் சுஸ்ருதாவும் கிராம்பு பற்றிக் குறிப்பிட்டள்ளனர். கிராம்பைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லான ‘இலவங்கமும்’, சமஸ்கிருதச் சொல்லான ‘லவங்கா’வும் தொடர் புடையவை. ஆனால் இவற்றில் எது மூலம், எது பெறப்பட்டது என்பது தெளிவாகத் தெரியவில்லை. ‘கிராம்பு’ என்ற சொல் 'Cravo' என்ற போர்ச்சுகீசிய சொல்லின் தழுவல்தான் என்பதில் ஐயமில்லை. தவறுதலாக இந்திய இலக்கிய நூலாசிரியர்கள் சிலர் கிராம்பை

இந்தியாவின் இயல்புத் தாவரமாகக் கருதியுள்ளனர். கல்வெட்டு களிலும் கிராம்பு பற்றிய குறிப்புகள் காணப்பட்டன; ஆனால் கி.பி. 12ஆம் நூற்றாண்டிற்குப் பின்பு தான் (EI.XIV. எண் *15* கி.பி. *1173/1174*).

'தவனம்' என்றும் 'தவனகம்' என்றும் 'மரிக்கொழுந்து' என்றும் தமிழில் அழைக்கப்படும் பொருட்களுக்குத் தாவரப் பெயராகக் குறிப்பிடப்படுவது *Artemesia vulgaris* ஆகும். இவற்றைப் பற்றிய செய்திகள் பின்வரும் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன: BKI.Ii.108, கி.பி. *1069;* 432 of 1904, கி.பி. *1137/1138;* 553 of 1904, கி.பி. *1142* EI.XXII. எண்.*32*, கி.பி. *993/994* SSI.II. எண் *98* (விஜய நந்திவர்ம பல்லவன் காலத்துக் கல்வெட்டு). இமயமலையின் அடிவாரக் குன்றுகளில் *Artemesia vulgaris* இயல்பாக வளருகிறது. மேற்குத்தொடர்ச்சி மலையிலும் தமிழகத்தின் ஒரு சில பகுதிகளிலும் இது (பல ஆண்டுகளாக) வளர்க்கப்படுகிறது. ஆனால் இது தமிழகத்தின் இயல்புத் தாவரமல்ல. தவனத்தோடு தொடர்புடைய மற்றொரு தாவரம் 'மருவு' எனப்படும் *Origanum marjoranum* ஆகும். இத்தாவரம் பற்றிக் குறிப்பிடும் முக்கியக் கல்வெட்டுகள்: BKI.Ii 108, கி.பி. *1069;* EI.XXII. எண். *22*, கி.பி. *993/994*. இது இந்தியாவைச் சேர்ந்த தாவரமல்ல. மத்தியத்தரைக்கடல் நாடுகளிலும், ஆப்ரிக்காவின் வடக்குக் கடற்கரை நாடுகளிலும், ஐரோப்பாவின் தெற்குக் கடற்கரை நாடுகளிலும் இது இயல்பாக வளர்கிறது. 'மருவு' என்ற தமிழ்ப் பெயர் 'மருதுகஸ்' என்ற சொல்லில் (இச்சொல் மத்தியத்தரைக்கடல் பகுதியில் இத் தாவரத்திற்குக் கொடுக்கப்படும் பெயராகும்) இருந்து பெறப்பட்டதாகும். வரலாற்றின் இடைக்காலத்தின் தொடக்கத்தில் தான் மத்தியத்தரைக்கடல் பகுதியிலிருந்து கடல் வாணிகம் மூலம் இது தமிழகத்தை அடைந்திருக்க வேண்டும். *Artemesia pallens* என்ற நறுமணம் மிக்க இன்னொரு தாவரம் (சிறிய செடி, கிளைத்த கருநீலநிற இலைகளைக் கொண்டது) சமீபத்தில் (கடந்த நூற்றாண் டின் ஆரம்பத்தில்) தமிழகத்தில் நுழைந்துள்ளது. இதுவும் தவனம் என்றே அழைக்கப்படுகிறது.

கற்பூரம் (*Cinnamomum camphora*) சீனாவிற்கும் ஜப்பானின் ஒரு சில பகுதிகளுக்கும் இயல்பான ஒரு தாவரமாகும். 20ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் தான் கேரளா மற்றும் நீலகிரியின் ஒருசில பகுதிகளில் இத்தாவரம் நுழைக்கப்பட்டது என்றாலும், இத்தாவரத்திலிருந்து பெறப்படும் கற்பூரம் நம்முடைய முன்னோர் களுக்கு கி.பி. 10ஆம் நூற்றாண்டின் பின்பகுதியிலிருந்து அறிமுகமாகி யிருந்தது. கற்பூரம் பற்றிய முதல் கல்வெட்டு கி.பி. 11/12 நூற்றாண்டு களைச் சார்ந்தது (442 of 1954/1955). இந்தக் கல்வெட்டில் பீமசேனி என்ற

ஒருவகைக் கற்பூரம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. கோவில்களில் கற்பூரம் காட்டப்படுவது இந்தக் காலகட்டத்தில்தான் தோன்றியிருக்க வேண்டும்.

குங்குமப்பூ (saffron) (*தாவரப் பெயர் Crocus sativus*) காஷ்மீர் பகுதியில் பலகாலமாகப் பயிரிடப்பட்டு வரும் தாவரமாகும். இது தமிழ்நாட்டில் எப்பொழுதுமே வளர்க்கப்பட்டதில்லை. கி.பி. 13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்று இந்தப் பொருள் ஒரு நறுமணப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டது பற்றிக் குறிப்பிடுகிறது (160 of 1906). இந்தக் கல்வெட்டு வீரபாண்டியன் என்ற பாண்டிய மன்னனின் கல்வெட்டாகும் (*ஆனால் மூன்று வீரபாண்டியர்களில் எவர் என்பது தெளிவாக இல்லை; ஆனால் மூவருமே கி.பி. 1253 - 1352க்குள் வாழ்ந்தவர்கள் ஆவர்*). காஷ்மீர்ப் பகுதியில் இருந்து பல்வேறு துறைகளில் வல்லுநர்களாக இருந்தவர்கள் தமிழகத்திற்கு கி.பி. 10ஆம் நூற்றாண்டில் வந்தபோது இப்பொருளும் தமிழகத்திற்கு வந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது (Swamy 1973).

வெங்காயம் பெர்சியா மற்றும் ஆப்கானிஸ்தானில் இருந்தும், பூண்டு சுங்காரி பாலைவனத்திலிருந்தும், சேனைக்கிழங்கு ஜப்பானியப் பகுதியிலிருந்தும், முள்ளங்கி மற்றும் ஆரஞ்சு சீனாவிலிருந்தும், முட்டைக்கோஸ், காலிஃபிளவர், டர்னிப், காரட், சிக்கரி போன்றவை ஐரோப்பிய நாடுகளிலிருந்தும், பீட்ரூட் மத்தியத்தரைக்கடல் நாடுகளிலிருந்தும், சர்க்கரைவள்ளிக் கிழங்கு தென்அமெரிக்காவிலிருந்தும் இந்தியாவிற்கும் தமிழகத்திற்கும் கடந்த மூன்று நூற்றாண்டுகளுக்குள்தான் நுழைந்தன என்று தெரிய வருகிறது.

V
தாவரங்களும் தமிழர் சமுதாயமும்

அ) தமிழர் சமுதாயத்தில் அடுக்குகள் தோன்றுதல்

தமிழ் பேசும் சமுதாயம் 35 நூற்றாண்டுகளுக்கு முன்பு தோன்றியதாகக் கருதப்படுகிறது (Subramanian 1996). பண்டையத் தமிழரிடையே குறிப்பாக சமவெளிப் பகுதியில் வாழ்ந்தவர்களுக்கும் மலையில் வாழ்ந்த பழங்குடி மக்களுக்கும் இடையே, அதிக அளவு கலப்பு ஏற்பட்டது என்றும் சுப்ரமணியன் மேலும் கருத்து தெரிவித்துள்ளார். மேலும், வரலாற்றுக்கு முந்தைய காலத்திலேயே (ஏறத்தாழ கி.மு. 6ஆம் நூற்றாண்டில்) இந்தியாவின் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த ஆரியர்களுடனும் இவர்கள் ஓரளவுக்கு இணைவு பெற்றுவிட்டனர். பண்டைய தமிழ் நாடு மிகப் பெரிய நிலப்பகுதியாக இல்லாமல் இருந்தபோதும், அதில் பல்வேறு வகையான இயற்கைச் சூழல்களும், சூழல் தொகுதிகளும், தாவர வளங்களும் காணப்பட்டதால் (பார்க்க இந்நூலின் இரண்டு மற்றும் மூன்றாவது அத்தியாயங்கள்), தமிழ்ச்சமுதாயம் மேற்கூறிய இணைவு களின் காரணமாகப் பல்வேறுபட்ட சமுதாய மாற்றங்களைப் பெற்றன. மலையிலே வாழ்ந்த வேட்டுவ வாழ்க்கையை விடவும், கால்நடை வளர்க்கும் காட்டு வாழ்க்கையை விடவும், நன்செய் (நஞ்சை) வேளாண்மையை மையமாகக் கொண்ட மருதநில வாழ்க்கை வேகமாகத் தழைத்து அங்குதான் செல்வம் குவிந்தது, வளமும் பெருகியது. இதேபோன்று வாணிகத்தின் காரணமாக கொங்கு பகுதியிலும் செல்வம் பெருகியது.

பண்டைய தமிழரின் சமுதாயம் பழங்குடி வகையினதாகவே இருந்தது. இந்தச் சமுதாயத்தின் அடிப்படை இடஅலகு (spatial unit) குடியாகும். தமிழகத்திலிருந்த மாறுபட்ட இயற்கைச் சூழலுக்கேற்ப, தமிழகத்தில் பல்வேறு வகைக் குடிகள் காணப்பட்டன. இவை அனைத்தும் தமிழகம் முழுவதும் பரவிக் காணப்பட்டன. இந்த

வகைச் சமுதாயத்தில் மேல்மட்டம், நடுமட்டம், கீழ்மட்டம் என்ற அடுக்குகள் காணப்படவில்லை. எல்லோரும் எல்லா வகையான தொழில்களிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். ஆனால், ஆரியர்களின் வர்ணப் பண்பாடு இச்சமுதாயத்தின் மேல் பொதிந்த போது, சாதிகள் தோன்ற ஆரம்பித்தன. பண்டைய தமிழகத்தில் இந்து மதத்தின் தொடக்கமே இந்த சாதி [1] வேறுபாடுகளுடன் தான் ஆரம்பித்தது. தமிழகக் குடிகளின் மரபுச் சின்னங்களும், ஆரிய வர்ணங்களின் கோத்ரங்களும் வெகுமளவில் கலந்து இரண்டின் பண்புகளையும் கொண்ட ஒரு புதிய சமுதாய அமைப்பு தமிழகத்தில் தோன்றியது (Subramanian 1996) [2]. இருந்தும்கூட, தொடக்கத்தில் பண்டைய தமிழகத்தில் வர்ண முறை ஓரளவுக்குத்தான் செயல் பட்டது. ஏனெனில் தமிழகத்தில், தமிழகத்திற்கு வெளியில் இருந்து வந்தவர்கள் ஆரியர்கள் (இவர்களில் பெரும்பாலானோர் பிராமணர் கள்) மட்டும்தான். இங்கிருந்த அரசர்கள் சத்திரியர்களாகவோ, வணிகர்கள் வைசியர்களாகவோ இல்லை. பின்பு படிப்படியாக, செய்த தொழில்களின் அடிப்படையில் இதுவரை ஒரே வகையினராக இருந்த தமிழக மக்களிடையே 'சாதிகள்' (சமுதாயத்தின் பல்வேறு அடுக்குகள் அல்லது மட்டங்கள்) தோன்றின. செய்தொழில்களின் வகைகள் அதிகமாக அதிகமாகப் புதுவகைச் சாதிகள் தோன்றின. ஏற்கனவே இருந்த தொழில்களில் ஏற்பட்ட பிரத்யேகத்தனத்தால் (specialization) உபசாதிகள் தோன்றின. ஏற்றுக்கொண்ட தொழில்கள் பரம்பரைத் தொழில்களாக மாறியவுடன், சாதிப் பிரிவுகளும் சாதி அமைப்பும் பரம்பரை பரம்பரையாக மேலும் இறுகலாயின. தமிழக அரசர்களும் இந்த இறுகலுக்கு, தம்முடைய பல்வேறு செயல்கள் மூலம், மேலும் வலிவூட்டினர். கி.பி. 10ஆம் நூற்றாண்டு வாக்கில்

---

1) *கி.மு. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் 'நிருக்த்தத்தம்' என்ற நூலில் தான் முதன்முதலில் 'ஜாதி' (= சாதி) என்ற சொல் பயின்று வருகிறது. அதன்பின் இச்சொல் பரவலாக வடஇந்தியாவில் பயன்படுத்தப்பட்டது. புத்தர் தோன்றிய குடியைச் 'சாக்கிய ஜாதி' என்று குறிப்பிட்டனர். 'ஜாதி' என்பது 'கணம்' என்ற சொல்லாலும் குறிக்கப்பட்டது.*

2) *தொல்காப்பியத்தில் (மரபு.:44) ''நீர் வாழ் சாதி'' (Aquatic creatures) என்ற உயிரின வகையைக் குறிக்கச் சாதி எனும் சொல் கையாளப்பட்டுள்ளது; மக்கட் சாதி பற்றிய குறிப்பு இல்லை. தொல்காப்பியத்தில் ஒரு சில 'சாதிப் பெயர்கள்' குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது. அவையாவன : அரசர், அந்தணர், வாணிகர், வேளாளர், பாணர், கூத்தர், பாகர், சூதர், நோய் மருங்கறிநர், அடியோர், வினைவலர் முதலானோர். இவை உண்மையிலேயே சாதிப் பெயர்களா என்பது விவாதத்திற்குரியதாகும்.*

சாதி அடிப்படையில் அமைந்த சமுதாயம் தமிழகத்தில் மிகவும் வலிமையாக வேரூன்றியது. தமிழகத்தின் நான்கு முக்கிய சாதிகளுக்கும் வருணங்களுக்கும் மலர்களைக் குறிப்பிட்டு ஒதுக்கியது வருத்தத்திற்குரிய செயல் என்றாலும் [1], அது நடைமுறைப்படுத்தப் பட்டது; தவிர்க்க முடியாத ஒன்றாகவும் மாறியது. பூக்களில் மட்டுமன்றிப் பா வகைகளிலும் பிறவற்றிலும் வருணப் பகுப்புகள் காட்டப்பட்டன.

பிற்காலப் பாண்டியர்களின் காலத்தில் பார்ப்பனர், கொடார், கழரி, உழமைச்சூடு, குடிக்கலி, பறையன் என்ற பிரிவுகள் மக்களிடையே இருந்ததை அறிய முடிகிறது. வீரபாண்டியனின் கல்வெட்டில் தொழில் அடிப்படையில் இப்பகுப்பு முறை காணப்பட்டது குறிப்பிடப்பட்டுள்ளது (சையத் ஜாகீர் ஹசன், 2003). பார்ப்பனர்கள் வேதமோதுதலையும், கொடார் களஞ்சியம் காத்தலையும், கழரி நெற்பயிர் காத்தலையும், உழமைக்சூடு சூட்டு நெல் காத்தலையும், பறையன் பறை கொட்டுதலையும், தொழிலாகக் கொண்டிருந்தனர். இதே காலத்தில் வன்னியர், செட்டியர்கள், தேவகன்மிகள் என்ற வகுப்பினரும் இருந்தனர் என்று பெரியகுளம் தென்கரையில் அமைந்துள்ள சீவல்ல பாண்டியரின் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

சமுதாயத்தின் அடிப்படைச் செயல் அலகாகக் (functional unit) குடும்பம் திகழ்ந்தது. ஒவ்வொரு மனிதனும் இந்த அலகின் ஒரு பகுதியாக விளங்கினான். வீட்டின் தலைவராக வயதான ஆணும், வீட்டையும் குழந்தைகளையும் கவனிப்பவராக மனைவியும் திகழ்ந்தனர். தமிழ்ப் பிராமி கல்வெட்டுகளில் குடும்பத்தின் அங்கத்தினர்களுடைய உறவுப் பெயர்கள் பல காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகளில் தந்தை, தாயியரு, மகன், மகள் (குறுமகள்), பின்னன், சாலகன் (= சகலை) என்ற உறவுப் பெயர்ச் சொற்கள் காணப்படுகின்றன. அக்காலத்தில் நிலவிய விரிநிலைக் குடும்ப அமைப்பு (= கூட்டுக்குடும்பம்) இக்கல்வெட்டுகள் மூலம் அறியப் படுகிறது. குடும்ப மட்டத்திற்கு மேல் வருவது ஆட்சி மற்றும் ஆளுகை பற்றியதாகும். அரசியல் பரிணாமத்திற்கான முக்கியத் தரவுகள் இக்கல்வெட்டுகள் மூலம் கிடைக்கின்றன. இத்தரவுகள் சங்க இலக்கியத்தில் பெறப்பட்ட தகவல்களுடன் ஒத்துப் போகின்றன.

---

1) ''முல்லை அந்தணர்; குறிஞ்சி அரசன்;
மல்லல் மருதம் வாணிக னென்ப
நெய்தல் சூத்திரன், நினையுங்காலை
பல்குலம் என்ப பாலையானே'' (யாப்பு.வி.ஃஒழிபியல் நூற்பாஃ2)

அரசனைக் குறிக்கும் ''கோன்'' என்ற சொல்லும் இக்கல்வெட்டுகளில் காணப்படுகின்றது. நிர்வாக ஒழுங்கமைவிற்காக ஏற்பட்டிருந்த ''ஊர்'' என்ற அமைப்பு பற்றியும் இக்கல்வெட்டுகள் குறிப்பிடு கின்றன.

ஆ) சமுதாய நெறிகளும் தாவர நுகர்வும்

பண்டைய தமிழர் காலத்திலிருந்தே சமுதாய நெறிமுறைகள் தமிழகத்தில் வலியுறுத்தப்பட்டன. எனினும் சமண, பௌத்த மதங்கள் தமிழகத்தில் நுழைந்தவுடன் இந்த நெறிமுறைகள் மேலும் தீவிரமாக வலியுறுத்தப்பட்டன. பல நெறி இலக்கிய நூல்கள் தோன்றலாயின. பல்லவர் காலத்திற்கு முன்பே பல நன்னெறி நூல்கள் தமிழகத்தில் வெளி வந்தன. இவற்றில் முக்கியமானவை திருக்குறள், நாலடியார், பழமொழி, நான்மணிக்கடிகை, ஏலாதி போன்றவை களாகும். இவை மக்கள் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள், நீக்க வேண்டிய பழக்கவழக்கங்கள் போன்றவற்றை வலியுறுத்தின. குறிப்பாக, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான ஆசாரக் கோவை, நன்னெறிகள், நற்பழக்க வழக்கங்கள் போன்றவற்றைச் சிறப்பாக வலியுறுத்தியது. இந்த நெறிமுறைகளை வலியுறுத்தும் முயற்சிகளில் தாவரப் பயன்பாடு பெருமளவிற்கு உதவியிருக்கிறது எனலாம்.

இந்தியா போன்ற கீழை நாட்டு மக்கள் தாவரங்களையும் அவற்றின் பூக்களையும் பயன்படுத்திய பாங்கு உணர்ச்சிப் பெருக்கானது; சமுதாய நெறிமுறைகளுக்கு உட்பட்டது. இந்நுகர்வில் அறிவுப் போக்கு குறைவாகக் கருதப்பட்டாலும், தாவரங்களோடு இயைந்த வாழ்வைப் பெற்றிருந்ததால் உணர்ச்சிப்போக்கு கூடுத லாகத் தான் காணப்பட்டது என்பதில் ஐயமில்லை. ஏற்கனவே இந்நூலின் இரண்டாவது அத்தியாயத்தில் குறிப்பிட்டபடி தமிழகத்தின் ஒவ்வொரு நிலவகையும் தாவரங்களின் அடிப்படையில் பெயரிடப்பட்டன; சூழல் வகைகள் தமிழகத்தின் பண்பாட்டு அடிப்படையில் விளக்கப்பட்டன.

தமிழர் தம் வாழ்வின் ஒவ்வொரு நிலையையும் தாவரத்தோடு இணைந்து நினைத்தனர் (சுப்பிரமணியன் 1993). குறிப்பாக, **விதை** நல்ல பண்பு மற்றும் நற்செயல்கள், **முளை** உள்ளத்தில் ஊன்றுதல், தொடக்கம், **தளிர்** மழலைகள், **மலர்** பெண் குழந்தைகள், **மலர்தல்** பெண்மை அடைதல், **காய்** (பிஞ்சு) குழந்தைகள், **கனி** பலன், முதிர்ச்சி, **முள்** குறைகள் மற்றும் வேண்டத்தகாதன, **கொடி** பெண் போன்றவற்றைக் குறிப்பிட்டன; இன்றும் குறிப்பிடுகின்றன என்று

சுப்பிரமணியன் (1993) எடுத்துக் காட்டியுள்ளார். கொள்வினை, கொடுப்பினைகளால் பெருகி வளரும் சுற்றத்தைக் கிளை என்று குறிப்பிட்டனர்; சுற்றத்தார்க்குக் 'கிளைஞர்' என்று பெயர் சூட்டினர். மரத்தின் கொம்புகளில் பூவும் கனியும் தோன்றுவதால் அவற்றைச் சுட்டும் சினை என்ற சொல் பெண் கருவுறுதல் நிகழ்வுக்கும் சுட்டப்பட்டது.

இ) சமுதாயமும் பூக்களும்

தமிழ்ச் சமுதாயம் பண்டைய நாளிலிருந்து இன்று வரை தாவரங்களுடன் பின்னிப் பிணைந்துள்ளது என்பதில் எந்தவித ஐயமுமில்லை. சமுதாயத்தின் பல பழக்கவழக்கங்கள், சடங்குகள் போன்றவற்றில் தாவரங்களின் பங்கு மிக முக்கியமானதாகும். சமுதாய மாற்றங்களிலும் தாவரங்கள் பெரும்பங்கு ஆற்றியுள்ளன. அரசர் முதல் சாதாரண மக்கள் வரை தாவரங்களையும், தாவரப் பொருட்களையும் தம்முடைய அன்றாட சமுதாய வாழ்க்கையில் துய்த்தனர். இவற்றில் மிக முக்கியமானவை பூக்கும் தாவரங்களும், பூக்களும்தான். தமிழர்கள் தாவரங்களின் பூக்களை நுகர்ந்து பயன் கொண்டனர். காலையில் பூத்து மணக்கும் பொய்கை/குளங்களில் நீராடுவர். வளமுடையோர் பாதிரிப்பூ போன்ற பூக்களை நீரில் போட்டு அந்நீரில் நீராடுவர். பெருஞ்செல்வர் 32 வகை ஓமாலிகை என்னும் மணப்பொருட்கள் (பெரும்பாலும் தாவரங்களிலிருந்து பெற்றவை) ஊறிய நீரில் நீராடுவர். பெண்கள் பகலில் அணிந்த அணிகலன்களை நீக்கி மாலையில் மலர்களை மார்பிலும் தலையிலும் சூடுவர்[1]. மலர்ப் படுக்கையில் புணர்ந்து பூரிப்பர் (கோவை இளஞ்சேரன் 1982).

மக்கள் வீட்டு முகப்பில் ''மலரணி வாயில்'' ஆக்குவர். விழாக்காலங்களில் அலரி மாலைகளைத் தோரணமாக்கித் தொங்க விடுவர். அந்தி வேலையில் இல்லத்து முகப்பிலும் அறைகளிலும் மலரைத் தூவுவர்; விளக்குகளிலும் மலரைச் சூடுவர். வீடுகளைத் தாமரைப் பூக்கள் கொண்டு அலங்காரம் செய்வதைப் பற்றிய செய்திகள் பல கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. கோவிலில் பணிபுரிபவர்கள் இந்த வழக்கத்தை (தாமரைப் பூ அலங்காரத்தை) கடைப்பிடிக்கலாம் என்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது (136 of 1905). தமிழக வரலாற்றின் இடைக் காலத்தில் தமிழ்ச் சமுதாயத்தில் இரண்டு முக்கியப் பிரிவுகள் (வலங்கை மற்றும் இடங்கை) காணப்பட்டன. இவர்கள்

---

1) ''நாளணி நீக்கி நகை மாலைப்பூ வேய்ந்து'' (பரி.பா.:10)

எப்பொழுதுமே ஒருவருக்கொருவர் முரண்பட்டுக்கொள்வர். கோவிலின் முதல் மரியாதையைப் பற்றுக்கொள்வது, கோவிலின் வெண்குடையைப் பிடித்துக் கொள்வது, பல்லக்கைப் பயன்படுத்துவது, நகரத்தின் ஒரு சில வீதிகளில் நுழையும் உரிமை போன்றவற்றில் இந்த இரண்டு பிரிவினிடையே எப்பொழுதும் கருத்து வேறுபாடும், சச்சரவுகளும் நிலவி வந்தன. இந்தப் பட்டியலில் வீட்டின் முகப்பையும், அறைகளையும் தாமரைப் பூக்களால் அலங்கரித்துக் கொள்ளும் உரிமையும் அடங்கும். இந்த வழக்கங்களை மேற்கொள்ளும் உரிமையைப் பெறுவதற்காக, இதற்காக விதிக்கப்பட்ட சிறப்பு வரியைச் செலுத்துவதற்கும் இவர்கள் தயங்கவில்லை என்ற விவரங்களை மற்றொரு கல்வெட்டு தருகிறது (216 of 1917). பெரியகுளம் வட்டம் தென்கரையிலுள்ள சீவல்ல பாண்டியரின் கல்வெட்டில் வலங்கை, இடங்கை வகுப்பினர் பின்பற்ற வேண்டிய சில விதிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

புதிதாக வாணிகம் தொடங்கும் போதும், அன்றாடம் வாணிகம் தொடங்கும் போதும் பூக்களை வைத்தே தொடங்கினர்[1]. பயன்படுத்தும் பொறிகட்கும், படைக்கலன்களுக்கும் பூச்சூட்டி வணங்கினர் (இன்றைய ஆயுத பூசை போன்று). பூக்களின் பெயரால் இசையும், இசைக் கருவிகளும் இருந்தன. முல்லை : முல்லையாழ், முல்லைப் பண்; குறிஞ்சி : குறிஞ்சியாழ், குறிஞ்சிப்பண்; இரவில் காவல் புரிவோர் தாம் காவலுக்கு இருப்பதை அறிவிக்கவும், தூக்கத்திற்கு ஆட்படாதிருக்கவும் குறிஞ்சிப்பண் பாடுவர்; மருதம் : மருதப்பண், மருதயாழ்; பாலை : பாலைப்பண், பாலையாழ். ஆம்பல் இசையும் அல்லிக்கூத்தும் உண்டு. காஞ்சி என்ற பெயரைக் கொண்ட இசை செவ்வழிப்பண் ஆகும். போர்ப்புண் நலம் பெறவும், காற்றாவி அணுகாதிருக்கவும் இதனைப் பாடுவர்.

திருமண முடிவில் மணமக்களை வாழ்த்துவதற்கு முல்லை மலரை நெல்லோடு சேர்த்துத் தூவினர்[2]. இதேபோன்று நாள்தோறும் அந்திமாலையில் இல்லத்தை மங்கலமாக்க நெல்லோடு முல்லையைத் தூவினர்[3]. திருமணம் முடிந்ததும் முதலிரவில் (இதனை

1) ''மணநிலை மலர் பெய்து மறுகும் பண்டிகள்'' (சீவ.சி.:61)

2) ''நெல்லோடு நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலரி தூஉய்'' (முல்.பா.:8,9)

3) ''அகனகர் எல்லாம் அரும்பவிழ் முல்லை
நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் பகல் மாய்ந்த
மாலை மணிவிளக்கம் காட்டி'' (சிலம்பு.:9:1-3). (அகனகர் = இல்லம்)

அகநானூறு ''தலை நாள் இரவு'' என்று குறிப்பிடும்) படுக்கை அறை முல்லை மலரால் ஒப்பனைப்படுத்தப்படும் [1].

அரசர்களின் சின்னங்களாகப் பூக்கள் திகழ்ந்தன. சோழன் ஆர் (படம் 22) என்ற ஆத்திப் பூவையும் [2, 3], பாண்டியன் வேப்பம் (படம் 23) பூவையும் [4], சேரன் போந்தை (படம் 24) என்ற பனம் பூவையும் [5] சின்னங்களாகப் பெற்றிருந்தனர். கோவூர்கிழார் சோழ மன்னனைப் பார்த்து நின்னைப் பகைத்தவன் சேரனும் அல்லன், பாண்டியனும் அல்லன், வேறு ஒரு சோழனே என்று எடுத்துரைக்க அவரவர் பூச்சின்னங்களைப் பயன்படுத்தினார் [6]. முடிமன்னர்கள் மூவரையும் ஒன்று கூட்டிச் சொல்லும் போதும் அவர்களுடைய பூச்சின்னங்கள் பயன்படுத்தப்பட்டன [7]. பாண்டியன் நெடுஞ்செழியன் ''வேம்பன்'' என்று பூச்சின்னத்தாலேயே அழைக்கப்பட்டான் [8]. தொண்டை மண்டல அரசர்களுக்கு 'அரசு' (படம் 25) சின்னமாக அமைந்தது [9].

---

1) *''சின்மலர் கொடுதூவி....மங்கல நல்லமளி'' (சிலம்பு.ஃ1ஃ62)*
''முல்லைப் பல்போது உறழப்பூ நிரைத்து
மெல்லிதின் விரிந்த சேர்க்கை'' (நெடு.வா.ஃ130, 131)

2) *''ஆரங்க கண்ணிச் சோழர்'' (சிலம்பு.ஃபதிகம்ஃ12)*

3) *ஆர் என்பது தவறாக அத்தி (Ficus glomerata) என்று பின்னால் வந்தவர்களால் கொள்ளப்பட்டது ஃ ஆர் என்பது ஆத்தி (Bauhinia sp.)*

4) *''மன்ற வேம்பின் ஒண்குழை மலைந்து*
..
வெம்போர்ச் செழியன்'' (புறம்.ஃ79ஃ2-4)

5) *''போந்தைக் கண்ணி பொறைய'' சிலம்பு.ஃ27ஃ126)*

6) *''இரும்பனை வெண்டோடு மலைந்தோனல்லன்*
கருஞ்சினை வேம்பின் தெரிய லோனல்லன்
நின்ன கண்ணியும் ஆர் மிடைத்தன்றே, நின்னோடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைத்தன்றே'' (புறம்.ஃ45ஃ1-4)

7) *''வேம்பும் ஆரும் போந்தையும் மூன்றும்*
மலைந்த சென்னியர்............
கொற்ற வேந்தர்'' (புறம்.ஃ338ஃ6-8)

8) *''சினையலர் வேம்பன் தேரானாகி'' (சிலம்பு.ஃ 16ஃ149)*

9) *''வெற்றிப்புனை தாதகிக்கும்*
வேம்புக்கும் பெண்ணைக்கும்
சுற்றும் பெருநிழலாய்த்
தோன்றுமே கற்றோர்
திறந்தாங்கும் மன்னு
செகந்தாங்கும் எண்ணில்
அறந்தாங்கும் தொண்டை அரசு''

தமிழ் மன்னர்கள் புலவர்களுக்கு அளித்த சிறந்த பரிசுப் பொருட்கள் பூக்கள் வடிவில் வடிவமைக்கப்பட்டன. இவை பெரும்பாலும் தாமரைப் பூ வடிவத்தில் (பொற்றாமரை) இருந்தன. இவை பொன்னால் நெருப்பில் உருக்கிச் செய்யப்பட்டன[1] பொன் நாரால் செய்யப்பட்டன[2]. இவை வண்டு மொய்க்காதவை[3] என்றும், இதழமைப்பில் இல்லாதவை[4] என்றும், வாடாதவை[5] என்றும் இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளன. பாணன் (புலவன்) பொற்றாமரை யையும், பாடினி பொற்பூ மாலையையும் மன்னர்களிடமிருந்து பெற்றனர்[6]. உயர்ந்த பட்டங்கள் பூக்களின் பெயரால் கொடுக்கப் பட்டன. இவற்றில் வாகை, எட்டி, காவிதிப் பட்டங்கள் முக்கிய மானவை[7]. புலவர்களும், போரில் வெற்றி பெற்ற மறவர்களும் இப்பட்டங்களைப் பெற்றனர்[8]. இப்பட்டம் பெண்களுக்கும் வழங்கப்பட்டது என்பதை இலக்கியங்கள் கூறுகின்றன[9].

போர்ச் சின்னமாகப் பூ விளங்கியது. போர் வீரர்களுக்கு அவ்வப் போர்க்குரிய பூ சூட்டப்பட்டது; இதனை மன்னன் போர் வீரர்களுக்கு வழங்கினான். இது ''பூக்கோள் நிலை'' எனப்பட்டது

---

1) ''அழல் புரிந்த தாமரை'' (புறம்.:11)

2) ''அழல் புரிந்த அடர்தாமரை
ஐது அடர்ந்த நூல் பெய்து (நூல் = பொன்னூல்)
புனைவினை பொலிந்தபொலன்
நறுந்தெரியல்'' (புறம்.:24)

3) ''வண்டு இமிராத் தாமரை'' (புறம்.:69)

4) ''ஓடு இல் தாமரை'' (பொருநர்.:158)

5) ''வாடாத் தாமரை'' (புறம்.:126)

6) ''வாடா மாலை பாடினி அணியப்
பாணன் சென்னிக் கேணி பூவா
எரிமருள் தாமரைப் பெருமலர் தயங்க'' (புறம்.:364)

7) ''காவிதி என்ற பட்டத்துடன் அரசர் அளிக்கும் பொற்பூ''
(தொல்.:எழு.:155:நச்சினார்க்கினியர் உரை)

8) ''போர்வாள் மறவரை
வருக தாம் என வகைப்பொலம் தோடு
பெருநாள் அமயம் பிறக்கிடக் கொடுத்து'' (சிலம்பு.:நீர்:42-44)

9) ''எட்டி காவிதிப் பட்டம் தாங்கிய
மயிலியல் மாதர்'' (பெருங்.:2:3:144) ''கணவர்க்கும் தந்தைமார்க்கும் உரிய
பட்டங்கள் உரிமையால் அவர்களுடைய மனைவியர்க்கும் மகளிர்க்கும்
அமைந்தன போலும்'' என்பார் உ.வே.சாமிநாதையர்.

(கோவை இளஞ்சேரன் 1982). போரில் வெற்றி பெற்றவர் வாகைப் பூவைச் சூட்டிக் கொள்வர்; ஏனெனில் வெற்றி துர்க்கையின் அருள் என்று நம்பினர் (வாகை துர்க்கையின் பூவாகும்). எனவேதான் ''வெற்றி வாகை'' என்ற சொற்றொடர் வழக்கத்திற்கு வந்தது எனலாம். போரின்போது மற்ற உயிரினங்கள் ஊறு அடையாமல் தவிர்க்க தமிழர்கள் விரும்பினர். அதே நேரத்தில் போர் அறிவிப்பு செய்ய பகைநாட்டு ஆவினங்களைக் கவர்ந்து வந்து காக்கும் நோக்கில் போர் அறிவிப்பு செய்ய பகைநாட்டு ஆவினங்களைக் கவர்ந்து வந்து காக்கும் நோக்கில் வருகின்றோம் என்பதின் அறிகுறியாக ஒரு குறிப்பிட்ட பூவைத் தேர்ந்தெடுத்தனர். இவ்வாறு தேர்ந்தெடுக்கப் பட்ட வெட்சி (படம் 26) என்ற தாவரத்தின் சிவப்பு நிறப்பூ ''சின்னப் பூ'' என்றும் அறியப்பட்டது [1] (சிலப்பதிகாரம் - வேட்டுவ வரி). சிறிய பூவாக இருப்பதால் ''சின்னப்பூ'' என்று அழைக்கப்பட்டதாகக் கோவை இளஞ்சேரன் (1982) குறிப்பிட்டாலும், போரின் அறிகுறி அல்லது சின்னமாக இருந்ததால் இது ''சின்னப்பூ'' என்று அழைக்கப் பட்டிருக்கலாமோ? வெட்சிப்பூ அணிந்து அரசனின் கட்டளைப்படி வீரர்கள் பகைநாடு சென்று இரவில் தொழுவத்தில் உள்ள ஆநிரை களைக் கவர்ந்து, எதிர்த்தோரை அழித்து, ஆநிரைகளை ஓட்டித் தம் நாட்டிற்குக் கொணர்வர். போரின் முனைப்பு முதல் முடிவு வரை வெட்சிப் பூவைச் சூட்டுவர். இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் போரின் ஒழுக்கமாக இப்பூவின் பெயரால் 'வெட்சித் திணை' எனப்பட்டது. இது போன்றே, கவரப்பட்ட ஆதிரைகளை மீட்க பகைவர் கரந்தை (= கரண்டை) (படம் 27) என்னும் ஒருவகைச் செடியின் பூவைச் சூடிக் கொண்டு சினந்தெழுவர். இந்தப் போர் ஒழுக்கம் 'கரந்தைத் திணை' எனப்பட்டது. இவ்வாறாக, ஆநிரைகளைக் கவர வெட்சிப் பூவும், கவரப்பட்டவற்றை மீட்கக் கரந்தைப் பூவும், பகைவர் மேல் படை யெடுக்க வஞ்சிப்பூவும், பகை ஏற்கும் எதிர்ப்பில் காஞ்சிப்பூவும், கோட்டை முற்றுகையில் உழிஞையின் (படம் 28) பூவோடு கூடிய கொடியையும், முற்றுகை முறியடிப்பில் நொச்சிப் பூவும் (படம் 29), போர்க் களத்தில் கைக் கலப்பில் தும்பைப் பூவும் (படம் 30), வெற்றியில் வாகைப் பூவும் சூட்டப்பட்டன. அரசர்கள் பிற போர்ப் பூக்களையும் குடிப்பூக்களுடன் அணிந்தனர் [2]; இதேபோன்று போர்

---

1) ''சின்னப்பூ அணிந்த குஞ்சித் சீதத்தன்'' (சீவ.சி.:2251)
''சின்னப்பூ - விடு பூ'' (நச்சர்); விடு பூ-தொடுக்கப்படாத பூ

2) ''பொலந்தொட்டுப் பைந்தும்பை
மிசையலங்குழைய பனைச் செரீஇ'' (புறம்.:22)

வீரர்களும் போர்ச் சின்னப் பூக்களுடன் தத்தம் அரசர்க்குரிய பூவையும் சூடினர்[1]. போர்க்களத்தில் எந்நாட்டு மன்னரின் வீரர் என்பதை அறிய இது மிகவும் அவசியமாக இருந்தது. போரிடும் போது தும்பைப் பூவை இருவருமே அணிய வேண்டும். போர்க் கருவிகள் பூவிதழ்கள் மற்றும் இலைகளின் வடிவங்களில் செய்யப்பட்டன. ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் குறிப்பிட்ட தாவரங்கள்/பூக்கள் ஏன் தேர்ந்தெடுக்கப் பட்டன என்பதற்குச் சரியான காரணங்களைக் கண்டறிய முடிய வில்லை. போர் நிகழ்ச்சியின் போது பயன்படுத்தப்பட்ட தாவரங்கள் அனைத்தும் மருத்துவ குணங்கள் வாய்ந்தவையாக இருப்பதினாலா? அல்லது அந்தந்த பகுதிகளிலும்/காலங்களிலும் அதிகமாகக் கிடைக்கப் பெற்றன என்ற காரணத்தினாலா?

போர்ச் சின்னமாக மரங்களும் விளங்கின. தமிழ் மன்னர்களின் கோட்டைகளில் குறிப்பிட்ட காவல் மரங்கள் இருந்தன. இவை கடிமரம் என்றழைக்கப்பட்டன. மாற்றார் அதைக் கைப்பற்றாத வகைகளில் கடிமரங்கள் காவல் காக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, கடம்ப மரம் கடிமரமாகத் திகழ்ந்தது. கடம்ப மரத்தை மாற்றான் வீழ்த்தினால் மன்னன் வீழ்ந்தான் என்பது மரபு. கடிமரம் பற்றிய செய்திகள் புறநானூற்றின் பல பாடல்களில் *(23:8-9 36:8-9 57:10-11 336:4-5)* காணப்படுகின்றன.

பூக்களையும், பூமாலைகளையும் போரில்லாத போதும் அணியும் பழக்கம் பண்டைய தமிழர்களிடையே இருந்து வந்தது. தாவரங்களில் இருந்து பூக்களைப் பறித்தலை 'குற்றல்', 'குறுதல்' என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன[2]. பெண்டிர் மட்டுமன்றி ஆண்களும் இவற்றை அணிந்தனர். பலவகையான இயல்புகளை உடைய மலர் மாலைகளை தமிழர் அணிந்தனர்[3]. ஆனால், தற்பொழுது தமிழக ஆடவர்கள் சடங்குகளிலும் ஒருசில சிறப்பு நிகழ்ச்சிகளில் மட்டுமே பூமாலை அணிவது காணப்படுகிறது. இதே

---

1) ''போர்படு மன்னர் போந்தொடு தொடுத்த
கடவுள் வாகை'' (பதிற்.:66:14, 15)

2) ''கழியக்காவி குற்றும் கடல
வெண்டலைப் புணரி ஆடியும்'' (குறு.:144:1,2)

3) ''புகை வகை தைஇயினார் பூங்கோதை நல்லார்
தகை வகை தைஇயினார் தார்;
வகை வகை தைஇயினார் மாலை, மிகமிகச்
சூட்டும் கண்ணியும் மோட்டு வலையமும்
இயல் அணி, அணி நிற்ப ஏறி'' (பரி.பா.:20:27-31)

போன்று, பெண்டிரும் தலைக்கு மட்டும் பூக்களை அணியும் பழக்கம் தொடர்ந்து காணப்பட்டாலும், மாலைகள் அணிவது சடங்குகளிலும், சிறப்பு நிகழ்ச்சிகளிலும் மட்டுமே காணப்படுகிறது. பண்டைய தமிழ் மக்கள் பல்வேறு வகையான பூக்களைச் சூடினர். இவற்றில் நெய்தல், ஆம்பல், குவளை, காவி ஆகியவையும் அடங்கும். எல்லா மக்களும், பார்ப்பனர் உட்பட, பூக்கள் அணிந்தது பற்றிய விவரங்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன[1]. எல்லா வயது மக்களும் பூக்களை யும், அவற்றின் தொகுப்பையும் அணிந்தனர். பெண்கள் தாயாகினும், முதுமைபெறினும் பூக்களை விடாமல் அணிந்தனர்[2].

கோவை இளஞ்சேரன் (1982) பின்வரும் பூத்தொடுத்தல் வகை களைச் சுட்டிக் காட்டுகிறார் : **கண்ணி** என்பது ஆண்கள் தம்முடைய தலையில் சூடும் பூ அல்லது மாலை; அரசராலும், ஆண் கடவுளராலும் அணியப்பட்டதாகும். கண்ணி பலவகைப் பூக்களால் ஆக்கப்பட்டது[3] அரசர்க்கு மார்பு மாலையாம் தாரைச் சின்னமாக்கியதுடன், தலையில் சூடும் கண்ணியையும் சின்னமாக்கினர்[4]. தொல்காப்பியர் அரசனுக் கான சிறந்த சின்னமான முடியைச் சொல்லி, முடிசூட்டி முடிக்க எண்ணி அதற்கு முன் மலர் மாலையை வைத்தார்[5].

கோதை என்பது பரவலாகச் சூட்டப்படுவது. தலையில் சூடிக் கொள்வது. ஆனால், மகளிர்க்குரியது[6]. இதன் காரணமாகவே பெண்கள் கோதை எனப்பட்டனர். தலையிலிருந்து கன்னக்கதுப்பில்

---

1) *''கான் முல்லைக் கயவாய் அலரி*
பார்ப்பன மகளிர் சாரல் புறத்து அணிய'' (நற்.:321:3,4)
''சிறுவீ முல்லை பெரிது கமழ் அலரி
தானும் சூடினன்; இளைஞரும் மலைந்தனர்'' (நற்.:361:1,2)

2) *''வாள்நுதல் அரிவை முல்லை மலைய*
இனிதிருந்தன்னே நெடுந்தகை
துனிதீர்க் கொள்கைத் தன் புதல்வனோடு பொலிந்தே'' (ஐங்.:408)

3) *''அரிநீர் அவிழ் நீலம் அல்லி அனிச்சம்*
புரிநெகிழ் முல்லை நறவோடமைந்து
*தெரிமலர்க் **கண்ணி**யும் தாரும் நயந்தார்'' (கலி.:91:1-3)*

4) *''கண்ணியும் தாரும் எண்ணினர் ஆண்டே'' (தொல்.:பொருள்:மரபு.:80)*

5) *''படையுங் கொடியும் குடியும் முரசும்*
நடை நவில் புரவியும் களிறும் தேரும்
தாரும் முடியும் நேர்வனப் பிறவும்
தெரிவு கொள் செங்கோல் அரசர்க்குரிய'' (தொல்.:பொருள்:மரபு.:72)

6) *''மைந்தர் கண்ணி மகளிர் சூடவும்*
மகளிர் கோதை மைந்தர் மலையவும்'' (பட்.பா.:110,111)

படுமாறு அணிவது தான் கோதை [1] கோதையும் சூடக்கூடிய எந்தப் பூவினாலும் இருக்கலாம் [2].

சிகழிசை என்பது மகளிரின் கொண்டையுச்சியில் சுற்றி சூடுமாறு அமைக்கப்படுவது. இண்டை என்பது ஆடவர் தலையில் தலைக்கட்டுக் குடுமியில் சும்மாடு போன்று சுற்றிக் கொள்வது [3].

மகளிரும் குழந்தைகளும் தலையிலிருந்து தொங்கி நெற்றியின் நடுவில் படுமாறு (நெற்றிச்சூடு போன்று) சூட்டுவது சூட்டு ஆகும்.

கண்ணி, கோதை, சிகழிசை, இண்டை, சூட்டு ஆகிய ஐந்து வகைகளும் தலையில் சூட்டும் பூமாலை வகைகளாகும்.

நீண்ட நாரின் வழி பூக்களை அடுக்கி நாரால் வளைவாகக் கட்டப்படுவது மாலையாகும் [4]. இது பரவலாக மார்பில் சூட்டப் படும் வகையாகும். திரண்ட தேர் உருளை போலக் கட்டப்பட்டு மார்பில் நிறைந்து புரளும் மாலையின் வகை தார் எனப்படும் [5]. தார், பொதுவாக அரசனுக்குரிய சின்னமானாலும், சாதாரண மனிதனும் சூடுவதுண்டு. தாருக்குத் தனிச் சிறப்பும், தகுதியும் உண்டு; தாரின்றி மன்னன் சிம்மாசனத்தில் அமரான்; காட்சி நல்கான்; போருக்குப் போக மாட்டான். அவனுடைய வீர முரசுக்கும் போர் யானைக்கும், புரவிக்கும் தார் அணிவிக்கப்படும் [6]. அகத்திணையில் தார் புணர்ச் சிக்கு உரிய அணியாகும். தார் தலைவனுக்கு எழிலூட்டியது [7]. புணர்ச்சி முயக்கத்தின் போது தார் குழைந்தால் தான் இன்பம் [8].

---

1) ''நெறியிருங்கதுப்பிற் கோதையும்'' (அகம்.:269:2)
2) ''நறும்பூங் கோதை தொடுத்த நாட்சினை
குறுங்காற் காஞ்சி'' (சிறுபாண்.:178, 179)
''குறுங்காற் காஞ்சி கோதை மெல்லிணர்'' (அகம்.:341)
''கடம்பின் துணை ஆர் கோதை'' (சிறுபாண்.:69)
3) ''இண்டைநிகர் சுமையடை மேற்கூடை கவிழ்த்து'' (திருவிளை.பு:மண்:6)
(சிவபெருமான் இண்டை அணிந்து வந்தது பற்றிக் குறிப்பிடுகிறது)
4) ''திணி நிலைக் கடம்பின் திரள் அரை வளைஇய
துணை அமை மாலை'' (குறி.பா.:176, 177).
''கடம்பு சூடிய கண்ணி மாலை போல்'' (சீவ.சி.:990)
5) ''வண்ண மார்பில் தாரும் கொன்றை'' (புறம்.:கடவுள் வாழ்த்து:2)
''உருள் பூத்தண்டார் புரளும் மார்பினன்'' (திருமுருகு.:11)
6) ''சிலைத்தார் முரசம்'' (புறம்.:36); ''விரிதார்க் கடும் பகட்டு யானை''
(புறம்.:265); ''தார் உடைப் புரவி'' (புறம்.:299).
7) ''தார் அணிந்து எழிலிய'' (பதிற்.:15:22)
8) ''முகை வாய்த்த முலை பாயக்குழைந்த நின்தார்'' (கலி.:68:15)
''பனிபடு நறுந்தார் குழைய நம்மொடு
துனிநீர் முயக்கம் பெற்றோள் போல் உவக்குநள்'' (அகம்.:144:9:10)
''பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைக என்தாரே'' (புறம்.: 73:14)

தொங்கல் என்பது ஒருவகை மாலை; இதில் முனைகள் இணைக்கப்படாது; மார்பில் தொங்கி அசையும்.

மாலை, தார், தொங்கல் ஆகிய மூன்றும் மார்பில் அணியக் கூடிய மாலை வகைகளாகும்.

துக்க காலத்தில் மலர்களை, மாலைகளை, குறிப்பாக முல்லை மலரைச் சூடமாட்டார்கள் [1].

பூக்கள் கட்டப்படும் முறையை வைத்துப் பின்வரும் வகைகளைக் கோவை இளஞ்சேரன் (1982) எடுத்துக் கூறுகிறார் : **ஒலியல், ஆரம், கோவை, வாசிகை, இழை, தொடையல், பிணையல், தெரியல், விரியல், கத்திகை, சுக்கை, சுருக்கை, தாமம், ஒருபுற மாலை, சூழியல் மாலை (= பூப்பிணை [2]), நலங்கல் (= மயிர்ச்சூட்டு மாலை, நெற்றிமாலை), அணியல், படலை** போன்றவை. இவற்றிற்கான விளக்கங்களைக் கோவை இளஞ்சேரன் கொடுத்திருந்தாலும், இவற்றை ஒன்றிலிருந்து மற்றொன்று இனங் கொள்வது சற்றுக் கடினமானது; இவற்றிற்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை.

பல்வகை அணிவகைகளை உருவாக்கப் பூக்களை முதலில் கொய்து வைப்பர்; பின்பு வகை பிரிப்பர். கட்டப்படும் மாலைக்குப் பயன்படும் பூ ''கட்டுப்பூ'' ஆகும். தொடுக்கப்படும் தொடையல் களுக்குப் பயன்படும் பூக்களை ''தொடைப் பூ'' என்பர். கட்டித் தொடுத்து முடிந்ததும் நிறைவேற்றுவதற்கும், செருகுவதற்கும், தூவுவதற்கும் உரிய பூக்கள் ''விடுபூக்கள்'' (தற்கால ''உதிரிப்பூக்கள்'') ஆகும். கோப்பதற்கு உரிய உள்துளையுள்ள பூக்களை ''உளைப் பூக்கள்'' என்பர். மாறுபட்ட வண்ண அமைப்புக்காக ''எதிர்ப்பூக்கள்'' தொகுக்கப்படும் (கோவை இளஞ்சேரன் 1982).

பலவகைப் பூக்களைத் தொடுக்கும் போதோ, கட்டும் போதோ பூக்களின் காம்புகளை நீக்காமலோ, நீக்கியோ கட்டுவர். புற இதழ் களைப் பொதுவாக நீக்கிவிடுவர் [3]. முழுமலராகவோ, தனி இதழ்

---

1) *''இளையோர் சூடார்; வளையோர் கொய்யார்;*
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான்; பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே'' (புறம்.:242)
(ஒல்லையூர் குறுநில மன்னன் பெருஞ்சாத்தன் இறந்தபோது புலவர்
குடவாயில் கீரத்தனார் பாடிய பாட்டு இது)

2) *''பூப்பினை திருத்தடி பொருந்தக்கைத் தொழ'' (அப்.தே.:நம.10)*

3) *''குறையிதழ் பறியா கிளை இதழ் பறியா'' (குறி.பா.:101)*

களாகவோ தொடுக்கப்படுவதும், கட்டப்படுவதும் உண்டு. முழு மலரால் தொடுக்கப்படுவது/கட்டப்படுவது ''முழுநெறி'' எனப்படும்[1]. மலர் மொட்டுகளையும், விரிந்த மலர்களையும் பயன்படுத்தினர். சில நேரங்களில் மொட்டுகளைச் செயற்கையாக விரிய வைத்துப் பயன் படுத்தியதும் உண்டு[2].

மலர்களின் பல்வேறு பயன்கள் கருதி, பண்டைய தமிழர் மலர்த் தாவரங்களை வளர்த்தனர். தாழிகளில் மலர்ச் செடிகள், கொடிகள் வளர்க்கும் பழக்கம் தமிழகத்தில் பரவலாக இருந்தது[3]. இதேபோன்று, பறித்த மொட்டுகள், மலர்கள் ஆகியவற்றைச் சிறப் பாகத் தொடுக்கும் கலையும் தமிழகத்தில் இருந்தது. இக்கலையை ''மலர்தொடுத்தல்'' என்றனர். மகளிர் இக்கலையில் மிகவும் சிறப்பு பெற்றிருந்தனர். மாதவியின் மகள் மணிமேகலை இசைக் கலையும், நாட்டியக் கலையும் தவிர வேறுபல கலைகளையும் பயின்றவள். இக்கலைகளுள் மலர்தொடுத்தலும் ஒன்றாகும்[4]. பூத்தொடுத்தல் ஒரு கல்வியாக இருந்தது என்பதை

''எண்ணல், எழுதுதல், இலைக்கிள்ளல் பூத்தொடுத்தல்''

என்ற பழம்பாடலின் வரிகள் உணர்த்துகின்றன. மேலும் ''பூக்கொய் மகளிரின்'' என்று குறுந்தொகை (குறுந்.:26:3) கூறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. பெண்டிரைத் தவிர ஆண்களும், (எடுத்துக்காட் டாக சீவகன்) வண்ண மலர்களைக் கொண்டு மலர்தொடுத்தல்

---

1) *''பூத்த குவளைக் கூம்பு அவிழ் முழுநெறி'' (புறம்.:116:1, 2)*
''முழுநெறிக் குவளை'' (சிலம்பு.:2:14)

2) *''திறந்து மோந்தன்ன சிறந்து கமழ் நாற்றம்'' (மது.கா.:567)*
''காலமன்றியும் கையின் நெரித்த
கழுநீர்க் குவளை பெரும்பொதி அவிழ்ந்த'' (பெருங்.:1:35:183-184)
''கூர் உகிர் விடுத்ததோர் கோல மாலை'' (சீவ.சி.:1466)
''விரல் உளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறும்கான்'' (திருமுருகு.:198)

3) *''தாழிக்குவளை வாடுமலர் சூட்டி'' (அகம்.:165:11)*
''தாழியும் மலர் பல அணியா'' (அகம்.:369:6)

4) *''வட்டிகைச் செய்தியும், மலராய்ந்து தொடுத்தலும்*
கோலங்கோடலும், கோவையின் கோப்பும்
கற்றுத்துறை போகிய பொற்றொடி நங்கை'' (மணி.:ஊரலர் உரைத்த காதை:33)

(இவ்வரிகளில் ''கற்றுத்துறை போகிய'' என்ற தொடர் மலர் தொடுத்தல் ஒரு கல்வியாகவும், கலையாகவும் இருந்தது என்று உணர்த்துகிறது என்று கோவை இளஞ்சேரன் கூறுவார்).

கலையில் வல்லவர்களாக இருந்தனர்[1]. பூக்களின் வடிவில் பானை, குடம் முதலிய பாத்திரங்கள் செய்யப்பட்டன.

பண்டைய தமிழரின் அகவாழ்வில் தாவரங்களும் அவற்றின் பூக்களும் இன்றியமையாதவைகளாக இருந்திருக்கின்றன. பெண் மங்கைப் பருவம் எய்தும் போதும் அவள் தன்வீட்டு முற்றத்தில் ஒரு முல்லைக் கொடியை நடுவாள். அம்முல்லை பூக்குங்கால் அவள் கன்னிமைத் தன்மை அடைவாள். முல்லை பூப்பது அவள் கன்னித் தன்மை அடைந்ததின் அறிவிப்பாக அமைந்தது[2]. முல்லை பூப்பதை வைத்துத்தான் பெண் ''பூப்பு'' அடைந்தாள் என்ற சொல் வழக்கு தோன்றியதாக கோவை இளஞ்சேரன் (1982) வாதிடுவார். பூப்பு அடையாதவள் ''பூவாதாள்'' எனப்பட்டாள்[3]. கன்னியாக இருந்த பெண் முல்லைப்பூ சூடினாலே கற்பில் அமைந்து மனைவியாகி விட்டாள் என முல்லை கற்பின் அறிகுறியாகப் பேசப்பட்டது[4]. ஒரு காளை தான் அணிந்திருந்த முல்லைப் பூவை ஒரு கன்னியின் கூந்தலில் சூட்டினால், அவள் அவனுக்கு உரியவள் ஆகிவிட்டாள் என்று கருதப் பட்டது. குமரனையும், குமரியையும் பிணைத்து மணமகன் மணமகளாக்கும் வாழ்வியல் சின்னமாக முல்லைப்பூ கருதப்பட்டது. முல்லைப்பூ கற்பின் சின்னம் என்பது அடிப்படை வழக்காயிற்று என்பதைப் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் மீண்டும் மீண்டும் எடுத்துக் காட்டுகின்றன. ''முல்லை சூடுவதற்கு அமைந்த கற்பு'' என்றும் ''கற்பின் மிகுதி தோன்ற முல்லை சூடுதல் இயல்பு'', (சிறுபாண்: நச்சர் உரை) என்றும் கூறப்பட்டது. 'முல்லை' என்ற சொல்லுக்கே 'கற்பு' எனும் பொருள் கொள்ளப்பட்டது[5]. கட்டியங் காரன் அரங்கமாலை என்பவளது கற்பைப் பறித்தான் என்பதைத் திருத்தக்கதேவர் தேவர் ''தரனுடை முல்லை எல்லாம் தாது உகப் பறித்திட்டானே'' என்று குறிப்பிடுகிறார் (சீவ.சி.:686).

---

1) ''நன்மை நூலின் நயந்தோன்ற நன்பொன் விரலின் நுதியினால்
பன்மணியும் முத்தும் பவளமும் பைம்பொன்னும் கோத்தாலொப்ப
என்ன அமரரும் மருளத் தொடுத்தான் இனமாலையே'' (சீவ.சி.:1652)

2) ''புகழ்கொடி நங்கை தன்பேர் பொறித்ததோர் கன்னி முல்லை
அகழ்கடல் தானே வேந்தே அணிஎயிறு ஈந்தது'' (சீவ.சி.:1268)
''அல்லியங்கோதை மாதர் அன்புடன் வளர்த்த முல்லை
மெல்லரும்பு ஈன்றதென்னா விழா'' (நைட.: நாட்டுப்படலம்:18)

3) ''பூவாதாள் பூப்புப் புறங் கொடுத்தாள்'' (சிறு.மூ.:42)

4) ''முல்லை சான்ற கற்பின் மெல்லியல்'' (சிறுபாண்.:30)
''முல்லை சான்ற கற்பின் மெல்லியல் குறுமகள்'' (நற்.:142 அகம்.:274)

5) ''மௌவலும், தளவமும், கற்பும் முல்லை'' (சேந்.தி.:மரப்பெயர் 197)

பண்டைய தமிழகத்தில் திருமணத்தின் மங்கலச் சின்னமாக மங்கல நாண் பூட்டல் - தாலி கட்டுதல் - இருந்ததில்லை (கோவை இளஞ்சேரன் 1982). திருமணச் சின்னமாக நிலைத்த அணிகலனாக ஏதும் இருந்ததில்லை. ''மங்கலவணி'' என்ற சொல் சங்க இலக்கியங் களில் இடம் பெறவில்லை என்றும் முதன்முதலில் சிலப்பதிகாரத்தில் தான் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் அறியப்படுகிறது (பாபுஜி 2001). சமயம் ஏற்றம் பெற்ற ஆண்டாள் காலம் வரையிலும் கூடத் தமிழகத் திருமணங்களில் தாலிகட்டும் வழக்கம் இடம்பெறவில்லை. தமிழகத்தில் மணமக்களுக்கு தாலிகட்டும் வழக்கம் கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்கு முன்பு இருந்ததில்லை என்பதை கி.பி. 958ஆம் ஆண்டுக்குரிய கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது (Pillai 1969). இதே கருத்தை கா.அப்பாத்துரையும், பெரும்புலவர் மதுரை முதலியாரும், மா.இராசமாணிக்கனாரும் வலியுறுத்துகின்றனர் (பரமசிவன் 2001). திருமணத்தில் தாலிகட்டுகின்ற நிகழ்ச்சியைப் பேசுகின்ற முதல் இலக்கியம் கச்சியப்ப முனிவரின் கந்தபுராணமாகும். கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே கோவில்களிலும் பெண் தெய்வங் களுக்குத் தாலி அணிவிக்கப்பட்டது. திருக்கல்யாண விழாக்களும் நடத்தப்பட்டன.

முல்லைச் சூட்டுதான் தாலி கட்டுதலாக மாறியிருக்க வேண் டும் என்று கோவை இளஞ்சேரன் (1982) கருதுகிறார். முல்லையின் முகையை நூலில்கட்டிப் பெண்களுக்குத் திருமணச் சின்னமாக ஆண்கள் சூட்டினர் [1] என்றும், இந்த ''நூல் சூட்டு'' அணிவித்தல் தான் நாளடைவில் வளர்ந்து, மரபாகி, முல்லைச் செண்டு செய்து நெற்றி யில் படுமாறு தலையில் சூட்டப்பட்டது; இது ''முல்லைச் சூட்டு'' எனப்பட்டது. நூல் சூட்டு இன்றும் வரலட்சுமி நோன்பு மற்றும் 'காரடையான்' நோன்பு ஆகிய நாட்களில் சுமங்கலிப் பெண்களால் சூடப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. 'முல்லைச் சூட்டு' என்ற சொற்றொடர் சங்க இலக்கியத்தில் இல்லை; பிற்கால இலக்கிய நூல்களான சீவகசிந்தாமணி, பெருங்கதை போன்றவற்றில் இது பரவலாகக் காணப்படுகிறது [2]. பெருங்கதையில் [3] ''மரபின் அணிந்து''

---

1) *''தண் நறுமுகை யொடு வெண்நூல் சூட்டி'' (அகம்.:236:4)*

2) *''......................மடவாள்*
கரும்பும் இலையும் மயக்கி ஆய்ந்த
முல்லையஞ் சூட்டு மிலைச்சி'' (சீவ.சி.:2438)
''முல்லையஞ் சூட்டு வேயின முரிந்து போம் நுசுப்பு'' (சீவ..சி.:624)
''பன்னிறச் சுரும்பு சூழும் முல்லைச்சூட்டு வேய்ந்தார்'' (சீவ.சி.:3119)
''முல்லை அம்கோதை சில்சூட்டு அணிந்து'' (பெருங்.:1:42:149)

3) *''மங்கல நறுஞ்சூட்டு மரபின் அணிந்து'' (பெருங்.:3:22:211)*

என்று கூறப்படுவதால் இது மரபாயிற்று எனக் கொள்ளலாம். மேலும் ''சூட்டு முல்லையோ, முதற்கற்பு முல்லையோ'' (தக்க: 119) என்று ஒட்டக்கூத்தர் பாடியதிலிருந்து திருமண நிகழ்ச்சியில் முல்லை நீங்காத இடத்தைப் பெற்றது என அறியலாம். ''முல்லை மணத்தல்'' முதலில் காதலன் காதலி கூடுதலுக்கும் பின்பு திருமணத்திற்கும் தொடர்பு படுத்தப்பட்டதால்தான் ''திருமணம்'' என்ற சொல்லே வந்ததாகக் கோவை இளஞ்சேரன் (1982) கருதுகிறார்.

சங்க இலக்கியங்களில் தாலி மட்டுமல்ல, பெண்களுக்குரிய மங்கலப் பொருட்களாக இன்று கருதப்படும் மஞ்சள், குங்குமம் போன்றவையும் கூட குறிப்பிடப்படவில்லை. மஞ்சள் பூசிக் குளிப்பதும், மஞ்சள் கயிறு அணிவதும் காணப்படவில்லை. குழந்தைகளுக்குத் தேய்த்துக் குளிக்க வைக்கும் பொருளாகவே மஞ்சள் பயன்படுத்தப்பட்டது; இதுவும் பக்தி இயக்கக் காலத்தில் தான்! ''நோக்கிய யசோதை நுணுக்கிய மஞ்சளால்'' கண்ணனை நீராட்டுவது பற்றிப் பெரியாழ்வார் பாசுரம் கூறியுள்ளது. பூசு மஞ்சள் வகைகளில் புகழ் பெற்றது 'விறலி மஞ்சள்' ஆகும். 'விறல்' என்றால் 'முக பாவனை' என்று பொருள். 'விறலி' என்றால் முகபாவங்களை மாற்றி நடிக்கின்ற, நடனமாடுகின்ற பெண்ணைக் குறிக்கும். அன்று கூத்தாடிப் பெண்கள் விளக்கொளியில் நடனமாடினர்; அதற்காக முகம் துணிப்பாகத் தெரிய மஞ்சள் தூளைப் பூசினர். விறலியர் மட்டும் பூசிய மஞ்சளைக் காலப்போக்கில் குடும்பப் பெண்களும் பூசத் தொடங்கினர் (பரமசிவன் 2001). எனினும், மஞ்சள் எப்பொழுது மங்கலப் பொருளாகியது என்பது தெளிவாகத் தெரியவில்லை.

தமிழகத்தின் திருமணவிழாவில் தாவரங்களின் பயன்பாடு சிறப்பாக இருந்தது. ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிய பருவம் வந்தவுடன் திருமணம் நடைபெற்றது. சங்கப்பாடல்களும் இக்கருத்தை வலியுறுத்துகின்றன. சிலப்பதிகாரம் கோவலனுக்கு 16 வயதும் கண்ணகிக்கு 12 வயதும் அடைந்தவுடனும் அவர்களின் திருமணம் நடைபெற்றதாக அறிவிக்கிறது. கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்குப் பின்பு திருமணவிழா பல சடங்குகளைக் கொண்டதாக அமைந்தது. ஓலை (நிச்சயதார்த்தம்) எழுதுதல், மணமகன் அழைப்பு, மணப்பந்தல் அமைத்தல், தாலிகட்டுதல் போன்ற சடங்குகள் மரபாயின. பெரிய புராண பாடல்கள் பலவற்றில் இச்சடங்குகள் பற்றிய பல விவரங்கள் உள்ளன. முளைத்த விதைகளைக் கொண்ட பாலிகைகள் (திருமணத்திற்கு ஏழு நாட்களுக்கு முன்பே முளைக்க வைப்பர்) [1], தாவரப்

1) ''விரிந்த பாலிகை முளைக்குடநிரையினர்'' (சிலம்பு.:மங்கலவாழ்த்துப் பாடல்: 58)

பொருட்களான பல வாசனைத் திரவங்கள் மற்றும் தூள்கள் (சந்தனம், பன்னீர்), பொரி, அறுகு, பல்வேறு மலர்கள் போன்றவை பயன் படுத்தப்பட்டன. திருமணச் சடங்கை மன்றல் என்ற சொல்லால் குறிப் பிட்டனர். பூமாலைகளால் அலங்கரிக்கப்பட்ட பந்தல் அமைத்து அதில் திருமணச் சடங்குகள் நடைபெற்றன (அகம்.:86:பெரி.பு.:157: சிலம்பு.:மங்கல வாழ்த்துப்பாடல்:48-51). சீவக சிந்தாமணியில் கோவிந்தையார் இலம்பகம் முல்லையும் இருவாட்சியும் சூழ்ந்த பந்தலில் மணவிழா நடைபெற்றது என்பது விளக்கப்படுகிறது. மணமகன் பிணையல், மாலை, கண்ணி, தாமம் போன்ற பலவகைப் பூமாலைகளை அணிந்ததாகப் பெரியபுராணம் கூறுகிறது.

காப்புநாண் கட்டுதல் ஒரு சிறப்பான திருமணச் சடங்காகும் (பெரி.பு.:158). மணமகன் மற்றும் மணமகள் ஆகிய இருவருக்கும் காப்புநாண் கட்டுவர். அகநானூற்றுப் பாடலில் கூறப்பட்டிருப்பது போலச் சுற்றத்தார் மணமகளுக்கு வாகை இலையும் அறுகின் மொட்டும் விரவித் தொடுத்த காப்பு நூலைச் சூட்டிய தூய திருமண ஆடையை அணிவிப்பர் (அகம்.:136). காப்புநாண் கட்டும்போது அழகான தட்டில் செந்நெல் பரப்பி, அதன் மீது மாலைகளை இரண்டு பக்கங்களிலும் சூழவைத்து அதில் நீர் நிறைந்த பொற்குடம், அரசிலை, தர்ப்பை, அழகான விளக்கு ஆகியவற்றை வைப்பர் (பெரி.பு.:பா.3080). குற்றமற்ற நெல் பொரியைக் கையில் எடுத்து வேள்வித் தீயில் ஆகுதியாகப் பெய்வர் என்றும் பெரியபுராணம் (பாடல் 3136) கூறுகிறது.

தாவரங்களும் அவற்றின் பூக்களும் சமுதாயத்தின் தலை சிறந்த பயன்பொருட்களாகக் கருதப்பட்டதால் அவற்றின் சிறப்பை முறைப் படுத்தும் வகையில் பண்டைய தமிழர் இடங்களுக்கும் ஊர்களுக்கும் தாவரங்கள்/பூக்களின் பெயர்களை இட்டனர். இதேபோன்று புலவர்கள் பூக்களின் பெயர்களால் அழைக்கப்பட்டனர். ஒரு சில இலக்கிய நூல்களும் பூக்களால் பெயரிடப்பட்டன. இவற்றில் ஒருசில 'பேர் வஞ்சி', 'வஞ்சி மாலை', 'தும்பை மாலை' போன்றவை. ஏற்கனவே குறிப்பிட்டபடி இசைக் கருவிகளும், இசைப்பாடல் வகைகளும் பூக்களால் சுட்டப்பட்டன (கோவை இளஞ்சேரன் 1982).

பூக்களால் சுட்டப்படும் ஊர்களில் ஒருசில பின்வருமாறு :

அல்லி : திருவல்லிக்கேணி

மல்லி : பூந்தமல்லி (பூத்தமல்லி)

முல்லை : திருமுல்லைவாயில், முல்லையூர், முல்லைக்காடு, முல்லைப்பாடி

குறிஞ்சி : குறிஞ்சிப்பாடி

மருதம் : மருதூர், மருதவேலி, மருதம்பாக்கம், திருவிடை மருதூர்

நெய்தல் : நெய்தலூர்

நொச்சி : நொச்சிநியமம் (தற்பொழுது நொச்சியம் என்று மருவியுள்ளது)

ஆர் (ஆத்தி) : திரு ஆரூர், ஆர்க்காடு [1], ஆரூர் [1]

பனை : பனையூர், பனங்காடு, திருப்பனந்தாள்

தாழை : தாழையூற்று (தாழையூத்து), தாழைக்காடு, தாழையூர், தாழந்திருவாயில்

பிடவம் : பிடவூர்

காயா : காயாங்குளம், காயாங்காடு

வரகு : வரகூர்

இலுப்பை : இலுப்பூர், இலுப்பைக்காடு

பாதிரி : திருப்பாதிரிப்புலியூர்

எருக்கம் : எருக்கத்தம் புலியூர்

செண்பகம் : சண்பகாடவி

புரசு : புரசைவாக்கம்

புங்கம் : புங்கூர்

விழி : விழிமிழலை

நாவல் : நாவலூர்

நெல் : நெல்லூர்

---

1) சங்க இலக்கியத்தில் ஆரூர் குறிப்பிடப்படவில்லை. 12ஆம் நூற்றாண்டில்தான் இந்தப் பெயர் காணப்படுகிறது. ஆனால், குறுந்தொகையில் (குறுந்.:258) குறிப்பிடப்படும் ஆர்க்காடு என்ற ஊரையே ஆரூர் எனக் கொள்ளலாம் என்று ஜான்பீட்டர் (2001) கூறுகிறார். பாண்டிச்சேரி அருகே இருந்த 'ஆர்காரு' (ஶகிப்நிகிஉ) பற்றி பெரிபிளசின் (தஷ்கிதிமீதூஉவு) ஆசிரியரும், 'ஆர்கடாஸ்' என்ற சோழத் (சோரா) தலைநகர் பற்றி டாலுமீயும் (தலுஊதூஷூபீ) குறிப்பிடுகிறார்கள். இவை ஆர்க்காடாக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. டாலுமீ குறிப்பிடும் ஆர்கடாஸ் தஞ்சையைச் சேர்ந்த ஆர்காடாகும் என்று தில்லை கோவிந்தராஜன் (2001) கருதுகிறார். ஒரு சிலர் ஆர்காரு உறையூரின் கிரேக்க உச்சரிப்பு என்று கருதுகின்றனர். ஆர் சோழனின் சின்னப் பூ என்பதையும் இங்கு மனத்தில் கொள்ள வேண்டும்.

கல் ஆல் : காலாத்தி (=காளஹத்தி, காளஹஸ்தி)

கடம்பு : கடம்பூர்

ஆலம் : ஆலங்குளம், திருவாலங்காடு

தமிழகத்தில் பல ஊர்களின் பெயர்களில் பின்னொட்டாகவோ (suffix) முன்னொட்டாகவோ (prefix) தாவரங்களின் பெயர்களோ, தாவரத் தொகுதிகளைக் குறிக்கும் சொற்களோ (கா, காடு, துறை, பொழில் போன்றவை) அல்லது தாவரப் பகுதிகளின் பெயர்களோ (எடுத்துக்காட்டு, பூ) சேர்க்கப்பட்டன என்பதும் இங்கு குறிப்பிடப் பட வேண்டும். இவற்றில் முக்கியமானவை : நெல்லிக்கா, மாந்துறை, கடம்பன்துறை, வேற்காடு, திரு ஆனைக்கா, திருவெண்காடு, திருமறைக்காடு, சாய்காடு, திருவாவடுதுறை, குரங்காட்டுத்துறை, மயிலாடுதுறை, பாலைத்துறை, பூந்துருத்தி, பூவனம், பூவனூர், பழனம் போன்றவை. இவற்றைப் பற்றிய விவரங்கள் பல கல்வெட்டு களிலும் காணப்படுகின்றன. இக் கல்வெட்டுகளின் விவரங்களை சுவாமி (Swamy 1978) குறிப்பிட்டுள்ளார்.

பல புலவர்களின் பெயர்கள் பூவின்/தாவரத்தின் பெயரால் சுட்டப்பட்டன. இவற்றில் ஒருசில : முள்ளி : முள்ளியார்; ஞாழல்: மதுரை அளக்கர் ஞாழலார், குமிழி ஞாழலார் நப்பசலையார். முசுண்டை என்ற பெயரில் ஒரு குறுநில மன்னனும் இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஈ) தாம்பூல வழக்கம்

தாம்பூலம் (வெற்றிலையும் பாக்கும் ஒன்றாகச் சேர்ந்தது) (Timbel என்ற மலேசிய சொல்லில் இருந்து தோன்றியது) கொடுப்பது, வாங்கிக் கொள்வது என்ற சமுதாயப் பழக்கம் பற்றிய முதல் குறிப்பு கி.பி. 473ஐச் சேர்ந்த குப்தர் காலத்துக் கல்வெட்டு ஒன்றில் காணப்படு கிறது (Fleet, Gupta Inscriptions, No. 18). இந்தக் கல்வெட்டில் பெண்கள் தம்முடைய வழக்கத்திற்கேற்ப மாலையிட்டுக் கொண்டு, பூக்கள் அணிந்து, தாம்பூலம் எடுத்துக் கொண்டு இருந்ததாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. தானிகாவின் நகர் கல்வெட்டு ஒன்று (Dhanika's Nagar Inscriptions) (கி.பி. 685) தாம்பூலம் பற்றி ஒரு பாட்டின் மூலம் குறிப்பிடு கிறது. இந்தப் பாட்டில், ஒரு அரசன் மக்களுக்குச் செய்த கொடுமை களால் தாம்பூலம் மூலம் சிவப்பான அவர்களுடைய உதடுகள் தம்முடைய சிவப்புத் தன்மையை இழந்தன என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இராஜராஜ சோழ கங்கன் காலத்திய கல்வெட்டு ஒன்று (EI.VI.No.35-கி.பி. 1088/89) ''பழைய வழக்கமான'' தாம்பூலம்

பரிமாற்றம் செய்யப்பட்டதாகக் குறிப்பிடுகிறது (Swamy 1973). எனினும் கி.பி. 10ஆம் நூற்றாண்டிற்கு முன்பு தமிழகத்தில் தாம்பூலம் சுவைப்பது (போட்டுக் கொள்வது) இருந்தது பற்றிய இலக்கிய ஆதாரங்கள் ஒருசில இருந்தபோதும்[1], கல்வெட்டுச் செய்திகள் இல்லை. எனவே தாம்பூல வழக்கம் மக்களிடம் பிரபலமாக இல்லை என்றும், 10ஆம் நூற்றாண்டுக்குப் பின் 13ஆம் நூற்றாண்டுக்குள் பல கல்வெட்டுகளில் இது பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பதால் 10ஆம் நூற்றாண்டுக்குப் பின்தான் தாம்பூலப் பழக்கம் பிரபலமாகியிருக்க வேண்டும் என்றும் சுவாமி (Swamy 1973) கருதுகிறார்; 10ஆம் நூற்றாண்டு வரை ஒரு சிலரே இந்த வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள் என்று அனுமானிக்கலாம். பின்பு தாம்பூலம் போடுவது ஒரு கால கட்டத்தில் தினசரிப் பழக்கமாக மாறிவிட்டது. தாம்பூலம் போடுவது போன்று விருந்தினர்களுக்கு தாம்பூலம் கொடுப்பதும், விருந்தினர் களிடமிருந்து தாம்பூலம் பெற்றுக்கொள்வதும் மிக முக்கியமான சமுதாய/ஆன்மீகப் பழக்கமாக மாறிவிட்டது. இதை மதச் சடங்கு களிலும், திருமணச் சடங்குகளிலும் பயன்படுத்துவதற்கு சாத்திர / ஆகம அனுமதியும் அளிக்கப்பட்டது. தற்பொழுது வெற்றிலைப் பாக்கு வைக்காமல்/பயன்படுத்தாமல் எந்த ஒரு இந்துமத/சமுதாயச் சடங்கும் நடைபெறுவதில்லை என்பதை யாவரும் அறிவர். சடங்கு களைச் செய்யும் சாஸ்திரி/குருமார்களுக்குத் தட்சிணையாகக் கொடுப்பதிலும் தாம்பூலம் முக்கியப் பங்கினைப் பெற்றது. ஒரு கட்டத்தில் இறைவனுக்குப் படைக்கப்படும் பொருட்களில் இது தலையாய நிலையைப் பெற்றது. வெற்றிலைப் பற்றி ஜாதகக் கதை களில் குறிப்பிடப்பட்டாலும், வெற்றிலை போடுவது தென்னாட்டுப் பழக்கமாகவே பலகாலம் நீடித்தது என்பது காளிதாசனின் இரகு வம்சத்திலிருந்து தெரிகிறது. ஆனால், தற்பொழுது பல வட இந்தியர் கள் தாம்பூலம் போடுவதைத் தவிர்க்க முடியாத பழக்கமாகக் கொண் டுள்ளனர்.

உ) சமுதாயமும் புகையிலைப் பொருட்களும்

புகையிலை மெல்லுவது, மூக்குப்பொடி போடுவது, புகை பிடிப்பது போன்ற பழக்கங்கள் 16ஆம் நூற்றாண்டுக்குப் பின்புதான்

---

1) ''உண்டு இனிது இருந்த உயர் பேராளற்கு அம்மென் திரையலொடு அடைக்காய் ஈத்த தமை ஈர் ஓதி.......'' (சிலம்பு.ஃ16.ஃ54-56) (கண்ணகி கோவலனுக்கு வெற்றிலையும் பாக்கும் அளித்ததைச் சிலப்பதிகாரத்தின் இவ்வரிகள் கூறுகின்றன).

தமிழகத்திலும் இந்தியாவிலும் ஏற்பட்டிருக்க வேண்டும். புகைப் பழக்கங்கள் (ஹுக்கா பிடிப்பது) அக்பர் காலத்தில்தான் தொடங்கியதாக ஒருசிலரால் கருதப்படுகின்றன. புகையிலைத் தாவரம் இந்தியாவில் போர்ச்சுகீசியர்களால் புகுத்தப்பட்டு முதன்முதலில் கி.பி. 1605ஆம் ஆண்டு பயிரிடப்படத் தொடங்கியதாக வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன (Swamy 1973). இந்திய இலக்கியத்திலும் புகையிலை பற்றிய செய்திகள் 16ஆம் நூற்றாண்டுக்குப் பின்புதான் காணப்படுகின்றன (Gode 1961). கல்வெட்டுகளில் இத்தாவரம் பற்றிய செய்திகள் 17ஆம் நூற்றாண்டுக்குப் பின்புதான் காணப்படுகின்றன.

ஊ) சமுதாயமும் வாசனைப் பொருட்களும்

பன்னீர் பற்றியும் சமுதாயத்திலும் சடங்குகளிலும் இது பயன்படுத்தப்படுவது பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டும். பன்னீர் பயன்பாடு பற்றிய முதல் கல்வெட்டுக் குறிப்பு வீரபாண்டியன் காலத்து (கி.பி.13ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று அனுமானிக்கப்படுகிறது) கல்வெட்டில் காணப்படுகிறது (160 of 1906). இதே சொல் (பன்னீர்) கணபதி தேவா என்பவரின் மோட்டுப்பள்ளித் தூண் காணிக்கை பற்றிய கல்வெட்டிலும் (கி.பி. 1224/45 வருடத்தியது) பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், தற்காலத்தில் பயன்படுத்தப்படும் பன்னீர் ரோஜா இதழ்கள் அல்லது ஜெரானியம் என்ற தாவரத்தின் இலைகளிலிருந்து பெறப்படுகிறது. இந்த இரண்டு தாவரங்களுமே இந்தியத் தாவரங்கள் அல்ல. ரோஜா முகலாயர்களால் 16ஆம் நூற்றாண்டிலும், ஜெரானியம் ஆங்கிலேயர்களால் 19ஆம் நூற்றாண்டிலும்தான் இந்தியாவில் நுழைந்தன. எனவே இக்காலங்களுக்கு முன்னால் பயன்படுத்தப்பட்ட பன்னீர் இந்த இரண்டு தாவரங்களிலிருந்தும் பெறப்பட்டிருக்க முடியாது. பன்னீர் என்ற சொல் கல்வெட்டுகளில் சந்தனம், கற்பூரம், வாசனைத் திரவியங்கள் மற்றும் பொடிகள் (பூக்களிலிருந்து பெறப்பட்டவை) போன்றவற்றோடுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே தமிழர்கள் முன்னால் பயன்படுத்திய பன்னீர் எதிலிருந்து பெறப்பட்டது என்பது இன்றும் கேள்விக்குறியாக உள்ளது (Swamy 1973). இச்சொல் பரிமளநீர் என்பதின் சுருக்கமாக இருக்குமா?

தமிழர்கள் அகில் கட்டைகளைக் கொண்டு புகை போட்டுக் கூந்தலை உலர்த்தினர்[1]. அகில் எந்த தாவரத்தின் கட்டை என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன (பார்க்க, இந்நூலின் நான்காவது

1) ''தண்ணறுந் தகரமுளரி நெருப்பமைத்
திருங்கா ழகிலொடு வெள்ளயிர் புகைப்ப'' (நெடு.வா.:55-56)

அத்தியாயம்). இதேபோன்று நரந்தம் புல்லின் நறுமணம் மகளிரின் கூந்தலுக்கு ஏற்றப்பட்டது [1]. மலர் மாலைக்கு நரந்த நறுமணத்தை ஊட்டும் வழக்கமும் [2], மன்னர்கள் தம்முடைய உடலின் உறுப்புகளின் மேல் (குறிப்பாக, கைகளில்) நரந்த நறுமணத்தை ஊட்டும் வழக்கமும் இருந்தன என்பது அதியமானை ஔவையார் பாடும் பின்வரும் பாடலால் அறியப்படுகிறது.

''நரந்த நாறுந் தன்கையாற்
புலவு நாறு மென்றலை தைவரு மன்னே''

எ) சமுதாயமும் உணவிடுதலும்

பண்டைய தமிழர் சமுதாயத்திலும், பண்பாட்டிலும் ''சோறும் நீரும் விற்பனைக்கு உரியவையல்ல'' என்ற கருத்து இலக்கியங்களை உற்று நோக்கும்போது அறியப்படுகிறது (பரமசிவன் 2001). வறியார்க்குச் சோறிடுதல் அறம் என்பது நீதிநூல்கள் பலவற்றில் வலியுறுத்தப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் உள்ள ஊர் மடத்தில் (= சுவடி) வழிப்போக்கர் யாரும் உண்ணாமல் இரவில் படுத்திருந்தால் ஊர்க்காரர்கள் 'இரவுச்சோறு' கொடுக்கும் வழக்கம் அண்மைக்காலம் வரை இருந்துள்ளது. ஏழையருக்கு சிறுகுடிக்கிழான் பண்ணன் சோறு கொடுத்த செய்தி சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. மணி மேகலை வறியவர்க்கும், நோயுற்றவர்க்கும், ஊனமடைந்தோர்க்கும், கைவிடப்பட்டோர்க்கும் ''உயிர் மருந்து'' எனப்படும் சோறினை உணவாக அளிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. சமண மதமும் நால்வகைக் கொடைகளில் (சோறு, மருந்து, கல்வி, அடைக்கலம்) உணவையே முதலாவதாக வைக்கிறது. 'அன்னதானம்' செய்யும் வழக்கம் சமணர்களால்தான் தமிழகத்தில் முதன்முதலில் அறிமுகப் படுத்தப்பட்டது (பரமசிவன் 2001).

கி.பி. 9ஆம் நூற்றாண்டு முதல் நெடுஞ்சாலைகளில் அமைக்கப் பட்டிருந்த தாவளங்களையும் (= சத்திரங்கள்), மடங்களையும் பற்றிய இலக்கிய மற்றும் கல்வெட்டுக் குறிப்புகள் உள்ளன. கி.பி. 15ஆம் நூற்றாண்டு வரை இங்கு பணம் பெறாமல் உணவு கொடுக்கப்பட்ட தாகத் தகவல்கள் உள்ளன. கி.பி. 15ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு, விஜயநகர மன்னர்களின் காலம் தொடங்கி, இந்தத் தாவளங்களில் சோறு விற்கப்பட்ட குறிப்புகள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

---

1) ''நரந்த நாறிருங் கூந்தல் எஞ்சாது நனி பற்றி'' (கலி.:54)

2) ''நரந்தப் பல்காழ்க் கோதை சுற்றிய
வைத்மை பாணி வணர் கோட்டுச்சீறியாழ்'' (புறம்.:302)

இவையே, பின்னர் உணவு விடுதிகள் தோன்றக் காரணமாயின. பிற்காலச் சோழர் கல்வெட்டுகளிலும் கோவில் மடங்களில் ''சட்டிச் சோறு'' விற்கப்படாமல் இருந்தது என்பது பற்றிய செய்திகள் உள்ளன.

அரசன் போருக்குச் செல்லு முன் வீரர்கள் அனைவரோடும் கூடி உண்ணும் ''பெருஞ் சோறு'' பற்றி இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இது ஓர் போர்ச் சடங்கு நிகழ்ச்சியாகக் கருதப்பட்டது. இந்த உணவு ஊனும் சோறும் கலந்தது என்பதை ''ஊன்துவை அடிசில்'' என்ற பதிற்றுப்பத்து வரிகள் சுட்டுகின்றன.

ஏ) சமுதாயமும் விழாக்களும்

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில், குறிப்பாக இறைவன் உறைகின்ற திருத்தலங்கள் தோறும், திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றன என்பதைத் தமிழ் இலக்கியத்தின் வாயிலாக அறிய லாம். திருவிழாக்களின் போது திருவீதிகளும் தெரு வீதிக்ளும் அணி செய்யப்பட்டன; அழகு படுத்தப்பட்டன. தாவரப் பொருட்களாலான பந்தல்களும், வாழையும், கமுகும், பூமாலைகளும், கொடிகளும் அணிபெற நாட்டப்பெற்றன [1].

ஐ) பஞ்சும் நூலும்

பஞ்சும் நூலும் தாவரப் பொருட்களாகும். பருத்தியிலிருந்து பஞ்சு பெறப்படுகிறது; பஞ்சிலிருந்து நூல் எடுக்கப்படுகிறது; நூல் ஆடையாகிறது. புத்தகங்களுக்கும் நூல் என்று பெயர். ஆடையின் மூலத்திற்கும் புத்தகத்திற்கும் ஒரே சொல்லான நூல் எவ்வாறு ஏற்பட்டது? நன்னூல் ஆசிரியர் இரண்டிற்கும் உள்ள ஒற்றுமையை விளக்கியுள்ளார். நூல்களைச் சேர்த்து ஆடைகள் நெய்வது போன்று வார்த்தைகளை வைத்து நூல்கள் உருவாக்கப்படுகின்றன :

பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா - எஞ்சாக்
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூல் முடியும் ஆறு

---

1) ''காவணம் எங்கும் இட்டுக் கமுகொடு கதலி நாட்டிப்
பூவணை தாமம் தூக்கிப் பூரண கும்பம் ஏந்தி
ஆவண வீதியெல்லாம் அலங்கரித்து அண்ணலாரை
மாவணை மலர் மென் சோலை வளம்பதி கொண்டு புக்கார்''
(பெரி.பு.திருஞா.118)

பருத்தி நூலாலான ஆடைக்கும் புலவர் இயற்றும் நூலுக்கும் உள்ள வேறுபாடுகளை ஔவையார் சுட்டிக் காட்டுகிறார். ஆடை கிழிந்துவிடும்; நூல் அழியாது.

''நூற்றம்பத் தாயிரம்
பொன்பெறினும் நூற்சேலை
நாற்றிங்கள் நாளினில்
நைந்துவிடும் - மாற்றலரைப்
பொன்றப் பொருத டக்கைப்
போர்வேல் அகளங் கா
என்றும் கிழியாதென்
பாட்டு''

VI
தாவரங்களும் தமிழரின் ஆன்மவியலும்

அ) தமிழகத்தில் இறைவழிபாட்டின் வரலாறு

ஆன்மவியல் இறைவனை நோக்கமாகக் கொண்டது; மனித உயிருக்கும் இறைவனுக்கும் இடையே உள்ள தொடர்பைக் காட்டுவது. இந்தத் தொடர்பை வெளிப்படுத்தும் முக்கியக் கூறுகளில் ஒன்று இறைவழிபாடாகும். தமிழரின் பண்பாட்டுக் கூறுகளில் இன்றியமையாத ஒன்று இறைவழிபாடாகும். தொல்காப்பியம்தான் தமிழில் இறைமைக்குக் கடவுள் என்ற மெய்யியல் கருத்துருவை முதன் முதலில் அளித்தது (தொல்.ஃபொருள்.:87, 88). ஆன்மவியலின் இயக்கமே மதம் எனப்பட்டது என்பார் கோவை இளஞ்சேரன் (1982).

தாவரங்களுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பை முற்றிலும் உணர முதலில் இறைவழிபாட்டு வழிபாட்டு வரலாற்றை அறிதல் முக்கியம். இறை வழிபாடு தொன்மையும் மரபும் கொண்டது. அச்சம், குற்றம், எதிர்பார்ப்பு போன்ற மனித உணர்வுகளின் வெளிப்பாடே இறைவழிபாடு ஆகும். வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் தமிழரின் இறைவழிபாடு மிகவும் பிற்பட்டதாகவும் (primitive), இயற்கை நிகழ்வுகளிலும், உயிரிலாப் பொருட்களிலும் உயிரியக்கம் காண்கின்றதாகவும் மற்றும் ஆவியுலகத்தில் நம்பிக்கை கொண்டதாகவும் அமைந்திருந்தது. தமிழகத்தில் மட்டுமன்றி உலகின் பல்வேறு இடங்களிலும் மதம் இதேபோன்று குலச் சின்னங்களை வழிபாட்டுப் பொருட்களாகக் கொண்ட மன நிலையைத் (totemic) தான் பெற்றிருந்தது (Subramanian 1996). கொடிய, முரட்டுக் குணமுள்ள தெய்வங்களில் நம்பிக்கைக் கொண்டு அவற்றைக் கவருவதற்காகப் பிராணிகளைப் பலி கொடுத்தனர். இயற்கை நிகழ்வுகளும், பொருட்களுமான நட்சத்திரங்கள், சூரியன், சந்திரன், மலைகள், அருவிகள், நதிகள், மழை, கற்கள் போன்றவை வழிபடு பொருட்களாகின. இவற்றில் பல வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே கிராமத்து

ஆண், பெண் கடவுளர்களாகக் கருதப்பட்டு வழக்கிலிருந்தன (Whitehead 1921). தமிழகக் கிராமியக் கடவுளர்களில் அய்யனார், சாத்தன், கடம்பன் (முருகனின் மாற்றுரு), காளி, அணங்கு, இசக்கி, பிடாரி, மாரி, சுடலைமாடன், கருப்பன், முகடி, கங்கையம்மன், சதுக்க பூதம் போன்றவை முக்கியமானவர்கள். இவற்றிலும் பல ஆரிய இறையகங்களின் புதிய பண்புகளையும், பெயர்களையும் பெற்றன. மதம் மேன்மேலும் பரிணாமம் அடையப் புதிய கடவுளர்கள் சேர்க்கப்பட்டனர். இவற்றில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆரியக் கடவுளர் கள். இவர்கள் நேரடியாகவோ, மாறுபட்ட உருவப்பெயர்களிலோ (transmutated form) தமிழகத்தில் சேர்க்கப்பட்டனர். பின்பு இக்கடவுளர்கள் மேன்மேலும் பிரபலமடைந்தனர் (Subramanian 1996). இவற்றில் முக்கியமானவர்கள் இந்திரன், வருணன், விஷ்ணு (கிருஷ்ணன், பலராமன் மற்றும் பொதுவாகப் பெருமாள்).

ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சிகள் மூலம் கிடைக்கப்பெற்ற ஆதாரங்களின் மூலம் முருக வழிபாடு மட்டும் அச்சமயம் இருந்த தாகத் தெரிய வந்துள்ளது. ஆதிச்சநல்லூரில் கிடைத்த தொல்லியல் எச்சங்களில் முக்கியமானவை ஈட்டிகள், வேல்கள், வெங்கலத்தினா லான சாதார்ண கோழி உருவ பொம்மைகள் போன்றவையாகும். இவையனைத்தும் அங்கு முருக வழிபாடு இருந்ததற்கான முக்கிய மான ஆதாரங்களாகும் (Subramanian 1996). முருகன்தான் மிகத் தொன்மைக் காலத்திலிருந்தே தமிழரிடம் பிரபலமாக இருந்த கடவுளாகும் (Nilakanta Sastri 1939a)[1]. முருகனும், சந்திரக் கடவுளும் மெசோபடோமியாவிலிருந்து (பாபிலோனியர் காலத்திற்கு முன்பே) திராவிட நாட்டிற்கு இடம் பெயர்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள் (Subramanian 1996). இது புரட்சிகரமான மற்றும் சர்ச்சைக்குரிய கருத்தாக இருந்தாலும், முருக வழிபாடு மெசோபடோமியாவிலிருந்து தமிழ் நாடு பெற்ற ஒரு கொடை (gift) என்பதை எவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சுப்பிரமணியன் மேலும் கருதுகிறார். இதேபோன்ற

---

1) தமிழ்நாட்டின் செம்பியகண்டியூர் என்ற இடத்தில் 2006ஆம் ஆண்டு பெப்ருவரி மாதத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கற்கால (கி.மு. 2000-1500) கைக்கோடாலி (கல்லால் ஆனது) ஒன்றில் சிந்து சமவெளி எழுத்துருவில் (indus script) பொறிக்கப்பட்ட இரண்டுவரி குறியீட்டை ஐராவதம் மகாதேவன் ''முருகு'' மற்றும் ''அன்'' (அதாவது ''முருகன்'') என்று கண்டுபிடித்திருப்பது முருக வழிபாட்டின் தொன்மையை மேலும் பறைசாற்றுகிறது. இதற்கு முன் முருகு குறியீட்டைக் கொண்ட பழங்காலப் பானை ஓடுகள் திண்டிவனத்திற்கு அருகாமையில் அமைந்த சானூரிலும், திருநெல்வேலி மாவட்டத்தின் மாங்குடியிலும், கேரளாவின் முசிரியிலும் அறியப்பட்டுள்ளன.

வழிபாடு தென்மேற்கு பெர்சியாவில் (Persia) பெரிசிபோலிஸ் என்ற இடத்தில் உள்ளதாகவும் அவர் கருத்து தெரிவித்துள்ளார். மிக உயர்ந்த இடக்கோவில்களான ஜிக்குரட் (Ziggurat) சுமேரிய ஊர்களில் (Sumerian Urs) இருந்தமை தமிழ் நாட்டுக் குன்றுகளில் உள்ள முருகன் கோவில்களுக்கு அவரால் ஒப்பிடப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத் தக்கது. மேலும், தமிழ்நாட்டுக் கோவில்களில் காணப்பட்ட தேவதாசி வழக்கமும் பெண்ணடிமையும் சுமேரியக் கோவில்களில் நடைமுறை யில் இருந்ததும் இங்கு ஒப்பிடத்தக்கது என்கிறார் (Subramanian 1996).

வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் தமிழகத்தில் மதங்கள் இல்லை. வேதியருடைய பிராமண இந்து மதம்தான் தமிழ்நாட்டை அடைந்த முதல், ஆனால் தமிழகத் தொடர்பில்லாத, மத முறை யாகும். இது நிச்சயமாக புத்தருடைய காலத்திற்கு முன்பே ஏற்பட்டிருக்க வேண்டும் (Subramanian 1996). வேத இந்துமதம் தன்னுடைய சமஸ்கிருத புராணங்கள், கதைகள், மதமரபுகள், வேத பலிச் சடங்குகள் போன்றவற்றைத் தன்னுடன் எடுத்து வந்தது. தமிழகத்திற்கு வந்தவுடனேயே இம்மதம் இரண்டறக் கலந்தது மட்டுமன்றி, தமிழகத்தின் ஆன்மீகவாதிகள் பலரைப் பிராமணர் களாக மாற்றியது (Subramanian 1988, 1996). மேலும், இது மன்னர்களை வேத பலிச்சடங்குகளுக்கு ஏற்பாடு செய்யுமாறு தூண்டியது. வேதத் தில் தேர்ச்சி பெற்ற பிராமணர்களைத் தமிழக மன்னர்கள் வரவேற்ற தோடு அல்லாமல், அவர்களுக்கு வரியில்லா நிலங்களையும் தானமாகக் கொடுத்தனர். இந்நிகழ்வு 'பிரம்மதேயம்' எனப்பட்டது. புறநானூற்றிலும் பிராமணர்கள் (= அந்தணர்கள்) வேதப் பலிகள் செய்வதைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன (புறம்.:166). தாவரங்கள் பரிசுத்தமானவை, கடவுள் தன்மை பெற்றவை என்பது போன்ற தங்களுடையக் கருத்துக்களை ஆரிய இந்துக்கள் தமிழக ஆன்மீகக் கருத்துக்களில் கலந்தனர் (Macdonell 1891). இது 'பெரு மரபு சார்ந்த வழிபாடாக' மாறியது; ஆகம விதிகளுக்கும் வேதக்கூறு களுக்கும் உட்படுத்தப்பட்டது; வழிபாடுகள் முறைப்படுத்தப் பட்டன.

ஆரிய இந்து மதத்தைத் தொடர்ந்து சமணமும் (சந்திரகுப்த மௌரியன் காலத்தில்; கி.மு. 3-4ஆம் நூற்றாண்டில்), அதன் பின்பு பௌத்தமும் (அசோகர் கால்த்தில்; கி.மு.2-3ஆம் நூற்றாண்டில்) தமிழகத்தில் நுழைந்தன. எனவே பண்டைய தமிழகத்தைப் பொருத்தவரையில் ஆரிய இந்துமதம், சமணம், பௌத்தம் ஆகிய மூன்றுமே வெளியிலிருந்து வந்த மதங்களாகும். இவை பெரும் பாலும் நகரப் பகுதிகளிலும், மன்னர்களிடையும் ஆதரவு பெற்றுத்

தழைத்தனவே ஒழிய, கிராமப் புறங்களில் தம்முடைய தாக்கத்தைப் பெருமளவில் காட்டவில்லை. கிராம மக்கள் தங்களுடைய பழமையான முருக வழிபாட்டில் ஊறிப் போயிருந்தனர். இது 'சிறு மரபு சார்ந்த வழிபாடு அல்லது மதம்' எனப்பட்டது. எனினும் இந்த நான்கு மதங்களும் தமிழகத்தில் ஒன்றாக இருந்து வந்தன. எவரும் மற்ற மதத்தை எதிர்க்கவில்லை. மதங்களுக்கிடையே சண்டை சச்சரவுகள் ஏற்படவில்லை. பல்லவர் காலம் வரை இந்தப் பொறுமை யும், சகிப்புத் தன்மையும் தமிழர்களிடையே காணப்பட்டன. மதங்களுக்கு அப்பாற்பட்டு எல்லாக் கடவுளர்களைப் பற்றியும் தமிழ் இலக்கியம் பாடியது.

சிவபெருமான் கடவுளாகத் தமிழ்நாட்டிற்கு ஹரப்பா மற்றும் மொகஞ்சோதாராவிலிருந்து வந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது (Subramanian 1996). சங்க காலத்தில் கடவுள் முதுமரமாக ஆலமரம்[1, 2] இலங்கி, ஆலமர் செல்வனாகச் சிவன் உருப்பெற, ஈண்டுச் சிவபெருமான் முழுமுதற் கடவுளாக எழுச்சியுற்றான். அவ்வாறே, கடம்பமரம் முருகன் உறையும் மரமாக விளங்கிய சங்க காலப் பார்வை மறைந்து முருகன் சிவனின் மகனாக உருப்பெற்றான். திணை மரபில் திருமாலின் உருவமாகக் கருதப் பெற்ற காயாம்பூ திணை மரபோடு சேர்ந்து வழக்கொழிய திருமால் தனிப் பெருங்கடவுளாக எழுச்சி பெற்றான் (நெடுஞ்செழியன் 2005). இந்தச் சூழ்நிலைகளில் தான் தொல்காப்பியம் நான்கு கடவுளர்களைக் குறிப்பிடுகிறது: சேயோன் (முருகன்), மாயோன் (மால்), வேந்தன் (இந்திரன்?), வருணன் (பார்க்க இந்நூலின் இரண்டாவது அத்தியாயம்). பின்னால், முருகன் ஆரியக் கடவுளான சுப்பிரமணியனுக்கும், மால் விஷ்ணு விற்கும், வேந்தன் இந்திரனுக்கும் ஈடு செய்யப்பட்டனர். சிவன் (= ருத்ரன்) முருகனோடும் (முருகனின் தந்தையாகவும்), வாலியோன்

---

1) ஆலமரமே வட இந்தியாவில் இருந்து (இமாலயப்பகுதி) அசோகர் காலத்தில்தான் தமிழகத்தை வந்தடைந்தது.

2) ஆலமரத்திற்கான ஆங்கிலப் பெயர் (பனியன்). இப்பெயர் வழக்கத்திற்கு எவ்வாறு வந்தது என்பதை சண்முகசுந்தரம் (1970) பின்வருமாறு விளக்குகிறார் : பாரசீக வளைகுடாவில் பந்தர் அப்பாஸ் என்னும் பண்டைய துறைமுகத்தில் வாணிகம் செய்து வந்த இந்திய வியாபாரிகள் 'பனியன்' என்ற பெயரால் அழைக்கப்பெற்றனர். இவர்கள் ஆலமரத்து அடியில் கோவில்கட்டி வெறுங்கல்லில் சிவபெருமானை எழுந்தருளச் செய்து ஒவ்வொரு நாளும் இறைவழிபாடு செய்து வந்தனர். பனியர்கள் இருந்து வழிபாடு செய்யப்பட்ட ஆலமரம், பனியன் என்ற ஆங்கிலப் பெயரைப் பெற்றது.

என்ற பலராமன் திருமாலோடும் (மாலின் சகோதரனாகவும்) தொடர்பு படுத்தப்பட்டனர்.

சிவன் என்ற சொல் ஆரிய வேதங்களில் இல்லை; ருத்ரன் என்ற சொல்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. சிவன் சாதுவாகவும், ருத்ரன் வீறு கொண்டவனாகவும் ஆக்கப்பட்டனர். எனவே, சிவன் ஆரியக் கடவுள் அல்ல தமிழ்க் கடவுள்தான் என்று பலர் கருதுகின்றனர். புறநானூறு சிவனை ஆலமரத்தின் அடியில் அமர்ந்திருக்கும் முனிவர் போன்று சித்தரிக்கிறது (புறம்.:198-199). புறநானூற்றில் சிவ பெருமான் பற்றிய குறிப்பு மேற்கூறியதையும் சேர்த்து ஆறு வெவ்வேறு புலவர்களால் பாடப்பட்ட ஆறு பாக்களில் (6, 55, 56,91, 166, 198) காணப்படுகிறது. இக் குறிப்புகளைக் கருத்திற்கொண்டே, பாரதம் பாடிய பெருந்தேவனார் நூலின் முதற்கண் சிவபெருமானைப் போற்றிக் கடவுள் வாழ்த்துப் பாடினார். ஆல்அமர் செல்வன்தான் பின்னால் தோன்றிய தட்சிணாமூர்த்தியின் அடிப்படையாக இருக்க லாம் என்று சுப்பிரமணியன் (Subramanian 1996) கருதுகிறார். முதன்முதலில் ஆலமர வழிபாடும்[1], பின்பு அதன் அடியில் அமைந் துள்ள ஆல்அமர் செல்வன் வழிபாடும் தட்சிணாமூர்த்தியின் முன்னோடியாகக் கருதப்பட்டது (Swamy 1978). ஆல்அமர் செல்வனைப் பற்றிய குறிப்புகள் சிறுபாணாற்றுப்படை[2], கலித் தொகை, சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலையில் காணப்படு கின்றன. இவை மற்ற சங்க இலக்கியங்களை விட காலத்தால் சற்றுப் பின்னர் தோன்றியவையாகும் (Nilakanta Sastri 1972; Jesudasan and Jesudasan 1961). தட்சிணாமூர்த்தியைப் பற்றிய கருத்துரு தோன்ற முக்கியக் காரணியாக விளங்கியது பாசுபத சூத்திரமாகும் (சூத்திரம் 9இல் 'மகாதேவஸ்ய தட்சிணாமூர்த்தே'' என்று கூறப்பட்டுள்ளது). தட்சிணாமூர்த்தியின் முதல் உருவச்சிலையை 7ஆம் நூற்றாண்டு தொண்டை மண்டலப் பல்லவக் கட்டடங்களில் காண முடிகிறது. இக்கருத்துருவும் உருவமும் முதலாம் ஆதித்ய சோழன் 9ஆம் நூற்றாண்டின் பின்பகுதியில் கட்டிய கோவில்களில் நிலைப்பாடு (stabilization) பெற்றது (Balasubramanyan 1966). எனினும், தட்சிணா மூர்த்தியை ஆலமரத்துடன் தொடர்பு படுத்துவது மிகக் கடினமான செயலாகும் என்று சுவாமி (Swamy 1978) கருதுகிறார். தட்சிணா மூர்த்தியை ஒரு சிலர் குறிப்பிடுவது போன்று குப்தர் காலத்து

---

1) ''......................கடவுளாலத்து............'' (புறம்.: 199:1; நற்.:343:4)

2) ''நாகம் நல்கிய கலிங்கம் ஆலமர் செல்வற்கு
அமர்ந்தனன் கொடுத்த ஆய் அண்டிரன்'' (சிறுபாண்.)

நாராயணாவின் உருவச் சிலைகளிலிருந்தோ (Sivaramamurti 1950), வேறுசிலர் குறிப்பிடுவது போன்று சிவ நடராஜாவின் ஆனந்த தாண்டவத்தின் முன்னோடியிலிருந்தோ (Subramanian 1966) பெற முடியாது என்பது சுவாமியின் (Swamy 1978) கருத்தாகும். ஒரு சிலர் தமிழகத்துச் சிவனை சிந்துசமவெளி நாகரிகத்தின் பசுபதியோடும் ஆரியர்களின் ருத்ரனுடனும் தொடர்பு படுத்துகின்றனர். கணபதி, விநாயகர், கணேசர், பிள்ளையார் என்று பல பெயர்களில் அழைக்கப் படும் கடவுள் முதன்முதலில் கி.பி. ஏழாம் நூற்றாண்டை (?) சேர்ந்த தேவாரப் பாடல்களில்தான் காணப்படுகிறார். மகாராஷ்டிராவில் இருந்து சாளுக்கிய / பல்லவர் காலத்தில் கணபதி வழிபாடு தமிழ் நாட்டிற்கு இறக்குமதி ஆகியிருக்கலாம் என்று கருத்து தெரிவிக்கப் பட்டுள்ளது (வாதாபி கணபதி என்ற பிள்ளையாரின் மற்றொரு பெயரை இங்கு கவனத்தில் கொள்க!). கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்குப் பின்பு தான் பிள்ளையாரின் உருவச்சிலைகள் தமிழகக் கோவில்களில் எழுப்பப்பட்டன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழகப் பெருமன்னர்கள், குறிப்பாகச் சோழ மன்னர்களும், அவர்களைத் தொடர்ந்து வந்தவர்களும் (விஜயநகர மன்னர்கள் வரை) பல கோவில்களைக் கட்டினர்; சமுதாய - ஆன்மீக நிறுவனங்கள் பலவற்றை நிறுவினர். இவற்றின் காரணமாகவும், 7ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் தொடங்கிய பக்தி இயக்கத்தின் காரணமாகவும் ஆன்மீக மதிப்புகளும், மெய்யியலும் தமிழகத்தில் விரிவடைந்தது மட்டு மல்லாமல், தமிழ் மக்களின் மனத்தில் மிக ஆழமாகப் பதிந்து விட்டன. மதம் தன்னுள் கடவுள் பற்று, புனிதச் சடங்குகள் மற்றும் மூடநம்பிக்கைகள் போன்றவற்றை அடக்கிக் கொண்டது. சாதாரண மனிதனின் மொத்த நேரத்தில் மதச்சார்புடைய செயல்கள் குறிப்பிடத் தக்க விழுக்காட்டை ஆக்ரமித்தன. பகுத்தறிவுக்குப் பதிலாக நம்பிக்கைகள் மற்றும் பற்றுகள் (beliefs and faiths) பல ஏற்றுக் கொள்ளப்பட்டன. மதச்சடங்குகள் கோவில்கள் மற்றும் மடங்கள் மூலம் அமைப்பு முறைக்கு (organized setup) உட்படுத்தப்பட்டன.

மூவேந்தர் காலத்தில் தமிழகத்தில் மதமும் ஆன்மவியலும் மூன்று மட்டங்களில் கண்டுணரப்பட்டு நடைமுறை வழக்கத்தில் இருந்தன எனலாம்: கிராமப்புற மக்கள் மட்டத்தில், நகர்ப்புற மக்கள் மட்டத்தில், படித்த மதகுருமார்கள் மட்டத்தில். கிராமப்புற மக்கள், ஏற்கனவே கூறப்பட்ட பண்டையத் தமிழர்களிடம் இருந்த அதே பழமையான மதச்சடங்குகள், கடவுள்கள், ஆன்மவியல் கருத்துகள் போன்றவற்றைக் கடைப்பிடித்து வந்தனர். அவர்கள் புனிதமான மரங்களான கடம்பு, ஆல், வேம்பு போன்றவற்றைத் தொடர்ந்து

போற்றி வந்தனர்; வேல்பிடித்த முருகனையும் அவனுடைய மாற்றுருக்களையும் (எடுத்துக்காட்டு : கடம்பன்) வழிபட்டு வந்தனர்; கல்வழிபாடு, கிராமக் கடவுளர் வழிபாடு போன்றவற்றையும் தொடர்ந்து வந்தனர்; பல்வேறு இறைகளுக்கு உயிர்ப் பலிகள் கொடுத்து வந்தனர். நகர்ப்புற மக்கள் தொடர்ந்து மத அமைப்புகளின் தாக்கங்களுக்கு உட்படுத்தப்பட்டு வந்தனர். நகரங்களில் மதம் உயர் இறையியல் (theology) தத்துவங்களோடு தொடர்புபடுத்தப்பட்டது; பெரிய கோவில்கள் ஏற்படுத்தப்பட்டு இறைவழிபாட்டில் பல புதிய முறைகள் கடைப்பிடிக்கப்பட ஆரம்பித்தன. இங்கு ஆரியர்களின் தாக்கம் மிக அதிகமாக இருந்தது. படித்த மதகுருமார்களும், அவர்களின் மடங்களும் இந்தத் தாக்கங்களை ஏற்படுத்துவதில் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர். மும்மன்னர்கள் காலத்தில் இருந்த இந்த மூன்று மட்டங்களும் ஒருசில சிறிய மாற்றங்களை மட்டும் பெற்று இன்றும் திகழ்கின்றன.

ஆ) மரவழிபாடு

தமிழர்களிடையே 'கடவுள்' என்ற கருத்துரு தோன்றுவதற்குத் தொல்காப்பியம் எடுத்துக்காட்டும் முக்கியமான காரணி மரவழிபாடு (tree worship) தான். சாதாரண மக்களிடையே, குறிப்பாகக் கிராமப்புற மக்களிடையே, காணப்பட்ட இறைவழிபாட்டைக் குறிக்கும் சொல்லாக 'கந்து' என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கந்து என்பது ஒரு குட்டையான, ஆனால் தடித்த, மரக்கம்பத்தை (pillar) அல்லது தூணைக் குறிக்கும் சொல்லாகும். ஒரு நன்கு வளர்ந்த மரத்தின் அடிமரத்தை விட்டுவிட்டு மீதப்பகுதியை வெட்டி நீக்கிவிட்டால் எஞ்சியிருக்கும் தூண் போன்ற அடிமரம் தான் கந்து எனப்பட்டது. இந்தக் கந்து பண்டைய தமிழகக் கிராமப்புற மக்களால் வழிபாடு செய்யப்பட்டது. ''தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான்'' என்ற பழமொழியை இங்கு நினைவு கூர்க! முருகனைக் குறிக்கும் மற்றொரு சொல்லான 'கந்தன்' என்பது கந்தினில் உறையும் இறைவன் வழி தோன்றியிருக்க வேண்டும் என்று கருதுவோரும் உண்டு. பண்டைய தமிழ் மக்களிடையே பரவலாக இருந்த எண்ணம் என்னவெனில், கடவுள் மரங்களில் உறைந்துள்ளார் என்பது தான்[1]; முழு மரத்திலும் உறைந்துள்ள இறைவன் அதன் ஒரு பகுதியான (அடிமரம்) 'கந்து'விலும் உள்ளான் என்பதும் அவர்களுடைய நம்பிக்கை

1) ''........ கடவுள் மரத்த ....'' (அகம்.:270:12)
''எம்மூர் வாயில் உண்டுறைத் தடைஇய
கடவுள் முதுமரத்து...'' (நற்.:83:1-2)

யாகும்[1]. மதுரை சுந்தரேசுவரர் கோவிலில் பழைய கடம்ப மரத்தின் அடிப்பகுதி வெள்ளித் தகட்டால் அணி செய்யப்பட்டு இன்றும் வழிபடப்படுவதைக் காணலாம்.

மரவழிபாடு மிகப் பழமையான வழக்கங்களில் ஒன்றாகும். மரவழிபாடு ஆரியர்களுக்கு முற்பட்டதாகவும், ஆரியர்களுடன் தொடர்பற்றதாகவும், உலகத்தில் பரவலாகக் காணப்பட்டதாகவும் கருதப்படுகிறது (Zimmer 1935). டெம்பிள் (Temple 1937) என்பவரின் கருத்துப்படி மரவழிபாடும், கல்வழிபாடும் (stone worship) ஒரு வகையான காட்டுமிராண்டித் தனமான மற்றும் அறிவுக்கொவ்வாத வழிபாட்டு முறையாகும் (Fetishism). உலகின் பழங்குடி மக்களினங்கள் பலவற்றில் இப்பழக்கம் இன்றும் காணப்படுகிறது (Schrader 1930: Swamy 1978). இதனைப் பல வரலாற்று அறிஞர்கள் சிவலிங்க வழிபாட்டுடன் தொடர்புபடுத்தி உள்ளனர்; சிவலிங்கம் மேலே கூறப்பட்ட கந்து என்ற மரத்தூணிலிருந்து பெறப்பட்டதாக இவர் களில் பலர் கருதுகின்றனர். இந்தக் கந்து பண்டைய தமிழகத்தில் ஆலமரத்தூணில் இருந்து பெறப்படுவதாகக் கருதப்பட்டது. எனவே தான், சிவன் ஆலமர் செல்வன் எனப்பட்டான் என்று இவர்கள் கருது கிறார்கள் (பார்க்க, Schrader 1930; Fraser 1929; Subramania Pillai 1948; Subramanian (= 1966, 1996)[2]. எனவே, ஆலமர் செல்வன் வழிபாடு கந்து, கந்தழி அல்லது கந்தளி (= மரத்தூண்) வழிப்பாட்டிற்கும் சிவலிங்க வழிபாட்டிற்கும் இடைப்பட்ட நிலையைக் குறிப்பதாகவும் ஒரு சிலர் கருதுகின்றனர்.

கந்து/கந்தழி வழிபாட்டைப் பற்றித் தொல்காப்பியத்திலும் (தொல்.ஃபொ.ஃ88) சங்கப் பாடல்களில் ஆறு இடங்களிலும் குறிப்புகள் காணப்படுகின்றன. இவற்றைப் பற்றிய விளக்கங்களை ஏற்கனவே சுப்ரமணிய பிள்ளையும் (Subramania Pillai 1948), சுப்ரமணிய னும் (Subramanian 1996) கொடுத்துள்ளனர். இந்தக் குறிப்புகளிலிருந்து கந்து வழிபாட்டுமுறை பண்டைய தமிழகத்தில் இருந்துள்ளது என்பது தெரிய வருகிறது. எனினும், இந்த அடிப்படையில் மட்டுமே இந்த

1) ''கொண்டி மகளிர் உண்டுறை மூழ்கி
அந்தி மாட்டிய நந்தா விளக்கின்
மலரணி மெழுக்க மேறிப் பலர் தொழ
வம்பலர் சேர்க்கும் கந்துடைப் பொதியில்'' (பட்.பா.ஃ246-249).

2) ''சுரையிவர் பொதியிலங் குடிச்சீறூர்
நாட்பலி மறந்த நரைக்க ணிட்டிகைப்
புரிசை மூழ்கிய பொரியரை யாலத்து'' (அகம்.ஃ287)

வழிபாடு பண்டைய தமிழகத்தில் மிகப் பரவலாக இருந்தது என்று எடுத்துக்கொள்ள முடியாது என்று சுவாமி (Swamy 1978) கருத்து தெரிவிக்கிறார். ஒருசில பழங்குடியினரால் இம்மரபு கடைபிடிக்கப் பட்டதற்கான வாய்ப்புகள் இருப்பினும், இதிலிருந்து ஒரு பொது வான முடிவிற்கு வரஇயலாது என்று சுவாமி மேலும் வலியுறுத்து கிறார். மேலும், இது சிவலிங்க வழிபாட்டுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தது என்பதற்கான அடிப்படை ஆதாரங்கள் இல்லை என்றும் சுவாமி வாதிடுகிறார். கந்தினில் ஒரு வகை இறைவன் உறைந்திருப்ப தாகக் கூறப்பட்டாலும், அது சிவன்தான் என்று எவ்வாறு ஊகிக்க முடியும் என்றும் அவர் வினா எழுப்பியுள்ளார். கந்தினில் உள்ள இறைவன் முருகன்தான் என்றும், அதனாலேயே அவனுக்குக் கந்தன் என்ற வேறொரு பெயரும் எற்பட்டது என்று முன்னே மொழிந்த கருத்தும் இங்கு ஆய்வுக்கு உட்படுத்தவேண்டிய ஒன்றாகும். கந்து என்ற சொல்லுக்கு 'பற்றுக்கோடு' (''காதாண்மைக் கந்தா'' - குறள் ஃ 567), 'தெய்வம் உறையும் தறி' (''வம்பலர் சேர்க்கும் கந்துடைப் பொதியில்'' - பட்.பா.ஃ246), 'தூண், (''கந்துமா மணித்திரள் கடைந்து'' - சீவ.சி.ஃ) என்ற பொருள்களும் உண்டு என்பதும் ஈண்டு குறிப்பிடத் தக்கது.

தமிழகத்தில் மரவழிபாடு தோன்றியது மற்றும் பரவலாக இருந்தது என்பது பற்றிய கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், வரலாற்றின் தொடக்கத்திலிருந்தே இரண்டு வெவ்வேறு வகையான ஆன்மீகச் சடங்குகளும், சம்பிரதாயங்களும் சமுதாயத்தின் இரண்டு மட்டங்களில் நிலவி வந்தன என்பதில் கருத்து வேறுபாடுகள் இல்லை. ஒன்று, கிராமப்புறத்திலும், கிராம மக்களிடமும் வேரூன்றிக் காணப்பட்டது. மற்றொன்று நகர மக்களிடையேயும் மன்னர்களிடமும் காணப்பட்டது. நகரங்களில்தான் ஆரியர்களின் தாக்கமும், சமஸ்கிருதத்தின் பாதிப்பும் அதிகமாகக் காணப்பட்டன. ஏற்கனவே இருந்த சடங்குகள், சம்பிரதாயங்களில் ஆரியச் சடங்கு களும் சம்பிரதாயங்களும் இரண்டறக் கலந்து விட்டன. இதன் காரணமாக, முற்றிலும் மாறுபட்ட சடங்குமுறைகள், மந்திரங்கள், சம்பிரதாயங்கள் எழுந்தன. ஏற்கனவே, ஆல், வில்வம், வன்னி போன்ற மரங்கள் இறைத்தன்மை வாய்ந்தவை என்று வேத சாத்திரங் கள் கூறி வந்திருந்தன. இம்மரங்களின் உறுப்புகளான மரக்கட்டை, குச்சிகள், இலைகள் போன்றவை ஆரியர்களால் வேதச் சடங்கு களிலும், யாகங்களிலும் பயன்படுத்தப்பட்டு வந்தன. குறிப்பாக, யுகஸ்தம்பங்கள் எனப்படும் இறைக்கொடிக் கம்பங்கள் இந்த மரங்களால் ஆக்கப்பட்டிருந்தன. இத்தகைய காரணங்களால் இதே

மூன்று மரங்களின் கட்டைகளிலிருந்து சிவலிங்கங்களைத் தயாரிப்ப தில் மக்கள் தீவிரமாக ஈடுபட்டனர். சிவலிங்கங்களைத் தயாரிப்பதில் ஈடுபடுத்தப்பட்ட காரணத்தினாலேயே இம்மூன்று மரங்களும் தமிழகச் சிவன் கோவில்கள் பலவற்றில் தலமரங்களாகப் போற்றப் பட்டனவா என்ற வினாவை சுவாமி (Swamy 1978) எழுப்புகிறார் (தலமரங்கள் பற்றிய விவரங்கள் இந்நூலின் அடுத்துவரும் பக்கங் களில் கொடுக்கப்பட்டுள்ளன).

ஒருசில அறிஞர்களின் வாதப்படி, சிவலிங்க வழிபாடே மர வழிபாட்டிற்குப் பதிலாக அதனுடைய இடத்தில் ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும். இக்கருத்துருவை சுப்ரமணியப் பிள்ளை (Subramania Pillai 1948; உடன் பார்க்க சத்தியமூர்த்தி 1969) பின்வருமாறு முன்மொழி கிறார்:

''.........மரமே ஒரு மிகப் பெரிய, இயற்கையான கோவி லாகும். இறைவன் இதில் தான் நிறைந்து, இயைந்து வாழ்கிறார். இந்தக் கருத்து முதலில் மக்களிடம் இருந்ததால் மரம் ஒரு வழிபாட்டுப் பொருளாக இருந்தது. சற்று காலம் கடந்தபின், அந்த வழிபாட்டு மரத்தைப் பற்றி அறியாத புதியவர்களும், அதன்வழி கடந்து செல்வோரும் அம் மரத்தின் மேல் இறைவழிபாடு செய்வ தற்கு ஏதுவாக, அம்மரத்தின் அடியில் ஒரு கடவுள் உருவத்தை / சிலையை வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதன் காரண மாக இதுகாறும் மரத்தினுள் உறைந்திருந்த இறை, மரத்திலிருந்து விடுபட்டு அதனடியில் வைக்கப்பட்ட உருவத்திற்கு/சிலைக்கு இடமாற்றம் அடைந்தது. இறையாகவே முதலில் கருதப்பட்ட மரம் தற்பொழுது இறைக்கு உறைவிடம் நிழல் அளிக்கும் பொருளாகக் கருதப்பட ஆரம்பித்தது. பின்பு, மரத்திற்குப் பதிலாக கோவில் கட்டடங்கள் இறையின் சிலைகளுக்கு உறைவிடமாகவும், நிழல் கொடுக்கும் அமைப்புகளாகவும் மாற்றப்பட்டன. மரம் மெதுவாகத் தன்னுடைய இறைத்தன்மையை இழந்தது'' (சுப்ரமணிய பிள்ளையின் ஆங்கில மூலம் இங்குத் தமிழில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது). இந்த இடங்களில் ஊர்ப் பொது மன்றங்கள் கூட்டப் பட்டன [1]. ஊர்ப் பொது மன்றத்தின் மரத்தில் உறையும் இறைவன் தீயவரை அழிப்பதாகவும் மக்கள் நம்பினர் [2]. தேவாரத்திலும், திருவாசகத்திலும், திவ்யப்பிரபந்தத்திலும் இறைவன் மரத்தின் கீழ்

1) ''தொன்றுறை கடவுள் சேர்ந்த பராரை
மன்றப் பெண்ணை.........'' (நற்.:303)

2) ''மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்
கொடி யோர்த் தெறூஉ மென்ப'' (குறு.:87)

உறைந்ததாகக் குறிப்புகள் காணப்படுகின்றன [1]. இதேபோன்று ஒருசில பாடல் பெற்ற தலங்களில் தூண்களிலும், சுவர்களிலும் மரத்தின்கீழ் லிங்கம் போன்ற சிற்பங்கள் உள்ளன. இத்தகைய சிற்பங்கள் தமிழகத்தின் 23 கோவில்களில் காணப்படுவதாக சுந்தர சோபிதராஜ் (1994) பட்டியலிட்டுள்ளார்.

இ) தலமரங்கள்

தமிழ்நாட்டில் மரவழிபாட்டு மரபு ஓரளவு தொய்ந்தாலும் இறைவன் மரங்களோடு தொடர்பு கொண்டுள்ளான் என்ற நம்பிக்கை முற்றிலுமாக அழியவில்லை. தமிழகத்தின் மிகப் பழமையான பல கோவில்களின் மூல இறையின் (presiding deity) பெயர் ஒரு குறிப்பிட்ட மரத்தின்/தாவரத்தின் பெயரோடு தொடர்புபடுத்தியே அழைக்கப் படுவது குறிப்பிடத்தக்கது (Varadarajan 1965; கலியாணம் 1970). இந்த மரம்/தாவரம் அதன் கோவிலோடு தொடர்ந்து தொடர்புப் படுத்தப் பட்டு வந்துள்ளது [2].

தேவாரம் பாடிய அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர் போன்ற வர்களால் போற்றிப் பாடப்பட்ட 270 (சுந்தர சோபிதராஜ் கூற்றுப்படி 275) [3] தமிழகக் கோவில்களில், ஏறத்தாழப் பாதிக் கோவில்கள் 80

---

1) *''ஆலிடை நீழலிலிருந்து சந்தினி தருள் பெருமானார்'' (ஞா.தே.:545, 4:2)*
''கல்லாலின் கீழறங்கள் சொல்லினான் காண்'' (ஞா.தே.:905, 3:3)
''குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்'' (திருவா.:26:61)
''.......... வியன்கான மரத்தின் நீழல்
கல்லணைமேல் கண்டுயிலக் கற்றனையோ....'' (திவ்.:1131, 3:3-4)

2) *எனினும், ஒரு சில கோவில்களின்/மூல இறையின் பெயர்கள் அவை அமைந்துள்ள ஊரின்/இடத்தின் பெயர்களைக் கொண்டு அழைக்கப்படு கின்றன; சில கோவில்கள் அவற்றை நிர்மாணித்தவர்கள் அல்லது கட்ட உதவியவர்களின் பெயர்களால் அழைக்கப்படுகின்றன (Swamy 1978).*

3) *''துங்கவட கயிலாய முதலா ஐந்துதுளு ஒன்று தொண்டை வடநாட்டு எண்ணான்கு தங்கு நடுநாட்டு இருபத்திரண்டுபொன் னித்தலம் நூற்றுத் தொண்ணூறு மலைநாட்டு ஒன்று கொள்கேழு சிங்களத்தில் இரண்டு வைகைகொழி தமிழ்நாட்டு ஈரேழு முதலாஞ் சூலச் செங்கையார் தலம் இருநூற்று எழுபா னான்கு'' (சுப்பிரமணிய பிள்ளை 1953).*

(வடநாட்டில் 5, துளு நாட்டில் 1; தொண்டை நாட்டில் 32; நடு நாட்டில் 22; சோழ நாட்டில் 190; மலை நாட்டில் 1; கொங்கு நாட்டில் 7; சிங்களத்தில் 2; பாண்டி நாட்டில் 14; மொத்தம் 274 சிவத் தலங்கள்; இவற்றுடன் திருவிடைவாய் என்ற தலத்தையும் சேர்த்தால் மொத்தம் 275 திருத்தலங்கள். சம்பந்தர் 230 கோவில்களுக்கும், நாவுக்கரசர் 130 கோவில்களுக்கும், சுந்தரர் 110 கோவில்களுக்கும் சென்று இறைவனைத் தொழுது பாடினர்).

தலமரங்களில் ஏதாவது ஒரு தலமரத்துடன் தொடர்பு கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. தலமரங்கள்[1] என்று இங்கு குறிப்பிடப் பட்டாலும், 80 தலத்தாவரச் சிற்றினங்களில் மரங்களைத் தவிரக் குற்று மரங்களும் (shrubs), பெருஞ்செடிகளும், சிறு செடிகளும், கொடிகளும், புற்களும் அடங்கும் (Swamy 1978). சுந்தர சோபிதராஜ் *(1994)* இது தொடர்பாகக் கூறிய பின்வரும் கூற்றுகள் மனத்தில் கொள்ளப்பட வேண்டும் : ''தலமரங்கள் என்ற பெயரால் வழங்கி வருவனவற்றுள் அலரி (அரளி), எருக்கு, காரை, கொட்டைச் செடி, நந்தியாவட்டம், நொச்சி முதலியன பெரிய புதர்ச் செடிகளாகவும், துளசி, பூளை, ஊமத்தை, பிஞ்சிலம், விழுதி போன்றவை சிறு செடிகளாகவும் வளர்வன. பிரம்பு, மூங்கில் என்பன புல் வகையினவாம். பனை, தெங்கு, வாழை என்பன தமிழ் இலக்கண நூலார் மரபுப்படி அகக்காழ் இல்லாத புல்லினத்தனவாகும். பிற அனைத்தும் சிறிய அல்லது பெரிய மரங்களாக வளர்வன. இங்ஙனம் செடி, கொடி, புல், மரவகைகள் காணப்பட்டாலும் தெய்வத்தரு என்னும் சிறப்பாலும், மரங்களே மிகுதியாக உள்ளமையாலும் அனைத்தும் தலமரங்கள் என்ற பொதுச் சொல்லாலேயே சுட்டப்படுகின்றன''. தலமரங்களின் மருத்துவத் தன்மையும் அவற்றைத் தெய்வவடிவினதாகக் கொள்ளக் காரணமாகும் என்றும் சுந்தரசோபிதராஜ் கூறியுள்ளார்.

தலமரங்கள் பற்றிய கருத்துரு தேவாரங்களின் காலத்திலேயே ஏற்பட்டதா அல்லது காலத்தால் சற்றுப் பின்னால் தோன்றியதா என்பது சர்ச்சைக்குரிய வினாவாக இருந்தாலும், முதல் கருத்துக்கு அதிக ஆதரவும், ஆதாரங்களும் உள்ளன. எனினும், ஒருசில தமிழகக் கோவில்களில் உள்ள தலமரங்கள் காலத்தால் பின்னால் நுழைக்கப் பட்டவை என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை (Swamy 1978). கி.பி. 16ஆம் நூற்றாண்டு வாக்கில்தான் ஒவ்வொரு கோவிலுக்கும் ஒரு தலமரம் அவசியமாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றி யிருக்க வேண்டும். கோவிலுக்குப் பெருமை சேர்க்கும் முயற்சியாக இக்கருத்து தோன்றியதாகத் தெரிய வருகிறது. எந்தெந்த இடங்களில் கோவில் அமைந்திருந்தனவோ அல்லது புதிதாக அமைக்கப் பட்டனவோ, அந்தந்த இடங்களில் மிகப் பரவலாகக் காணப்பட்ட தாவரங்கள் தலமரங்களாக அங்கீகரிக்கப்பட்டு, கோவில்களில் நுழைக்கப்பட்டன. இவ்வாறு புதிதாக நுழைக்கப்பட்ட தலமரங்

---

1) தலமரங்களைத் திருஞானசம்பந்தர் முதன்முதலில் 'தெய்வத்தரு' என்று அழைத்தார் (''.......... தெய்வத்தரு வளரும் பொழிற் புறவஞ்சிலம்பனூர்'' : ஞா.தே.:191, 2:1-2)

களில் ஒருசில தமிழ் நாட்டு இயல்தாவரங்கள் அல்ல என்பதும், அவை பிற நாடுகளிலிருந்து தமிழகத்தை அடைந்தவை என்பதும் குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக ஆமணக்கைக் குறிப்பிடலாம். இது ஒரு வெளிநாட்டுத் தாவரமாகும். 200 ஆண்டுகளுக்கு முன்புதான் இந்தத் தாவரம் இந்தியாவில் நுழைக்கப்பட்டதாக ஒரு சிலர் கருதினாலும், 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விஜயநகர அரசு கல்வெட்டுகள் சில இந்தத் தாவரம் ஒரு வியாபாரப் பொருளாக இந்தியாவில் கிடைத்ததாகக் கூறுகின்றன.

தமிழக கோவில்களில் தலமரங்களாகக் காணப்படும் / குறிப்பிடப்படும் தாவரங்களின் பட்டியல் பின்னிணைப்பு - 2-இல் தரப்பட்டுள்ளது. இந்தப் பட்டியல் தயாரிக்கப் பயன்பட்ட நூல்கள் / கட்டுரைகள் பின்வருமாறு : சுப்ரமணியப் பிள்ளை (Subramania Pillai 1948), சீனிவாச ஐயர் (Srinivasa Aiyer 1958), சுப்ரமணிய முதலியார் (Subramania Mudaliyar 1968), சுவாமி (Swamy 1978), சுந்தர சோபிதராஜ் (1994), அமிர்தலிங்கம் (Amirthalingam 1998 a, b, c மற்றும் ரவிச்சந்திரன் 2003); பல தலபுராணங்கள், பல கோவில்களில் நேரில் கண்டறிந்த விவரங்களும் இதில் அடங்கும்.

இந்தப் பட்டியலில் இருந்து பின்வரும் முக்கியத் தரவுகளைப் பெறலாம் : i) சிவ தலங்கள் மட்டுமன்றி திருமால் (வைணவ) தலங்களிலும், தலமரங்கள் உள்ளன. சிவன் கோவில் தலமரங்கள் 74; திருமால் கோவில் தலமரங்கள் 18; இரண்டிலும் தலமரங்களாக இருப்பவை 12. (ii) ஒரே தலமரம் பல கோவில்களின் தலமரமாகத் திகழ்ந்துள்ளது. (iii) பொதுவாக ஒரு கோவிலுக்கு ஒரு குறிப்பிட்ட தலமரம் இருந்தாலும், ஒரே கோவிலுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தலமரங்கள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய கோவில்களில் ஒரு சிலவற்றில் மூலவர்/மூலஇறை ஒன்றாக இருந்தும் தலமரங்கள் ஒன்றுக்கு மேல் இருப்பதும், வேறு சிலவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட மூலவர்கள் இருப்பதால் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியான தலமரம் இருப்பதும் அறியப்பட்டுள்ளது. 67 வகையான தலமரங்கள் ஒரு தலத்துக்கு ஒரு மரம் வீதம் இன்று காணப்படுகின்றன (சுந்தர சோபிதராஜ் 1994).

ஒரே தாவரத்தை (எடுத்துக்காட்டுகளாக வன்னி, வில்வம், கொன்றை போன்ற தாவரங்கள்) தலமரமாகக் கொண்ட கோவில்கள் அனைத்தும் ஒருமித்த பண்புகளையும் அமைவுகளையும் பெற்றிருக்கின்றனவா என்பதை ஆய்ந்தறிவது மிகவும் முக்கியம். ஆனால் அத்தகைய ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பது தான் உண்மை. வில்வம் 48 கோவில்களிலும், வன்னி 26 கோவில்

களிலும், கொன்றை 22 கோவில்களிலும், புன்னை 18 கோவில்களிலும் பலா 17 கோவில்களிலும், மா 12 கோவில்களிலும், பனை 9 கோவில் களிலும், தலமரங்களாகக் காட்டப்பட்டுள்ளன. ஒரே கோவிலுக்கு / கோவில் உள்ள ஊருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தலமரங்கள் காட்டப் பட்டுள்ளதும் ஆய்வுக்குரியது. ஒரே ஊரில் உள்ள ஒன்றுக்கு மேற் பட்ட கோவில்களுக்கு (எடுத்துக்காட்டுகளாக, ஈங்கோய்மலை, கருவூர்) இவை தலமரங்களாக உள்ளனவா அல்லது ஒரே கோவிலில் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு தலமரங்கள் சுட்டப் பட்டனவா அல்லது ஊரின் பெயர் நாளடைவில் மருவியுள்ளதா என்பது பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஈ) தாவரங்களும் நட்சத்திரங்களும்

தமிழகக் கோவில்களில் குறிப்பிட்ட தலமரங்கள் உள்ளன என்பது பற்றிய விவரங்களை மேலே கண்டோம். ஆனால், கோவில் கள் கட்டத் தொடங்கும் முன்பே குறிப்பிட்ட தாவரங்கள் முக்கியத் துவம் வாய்ந்தவையாகின்றன. ஒரு கோவில் கட்டப்படுமுன், கோவில் கட்டிடக்கலையில் வல்லுநர் - சிற்பி ஒருவர் தேர்ந்தெடுக்கப் படுவார். ஒரு சிறந்த பூசாரியும் (= அர்ச்சகர்) தேர்ந்தெடுக்கப்படுவார் (Kramrisch 1976). பின்பு கோவில் கட்டுபவர் தன்னுடைய பெயரையும், கோவில் அமையும் இடத்தின் பெயரையும், அங்கு அமையப்போகும் முக்கியக் கடவுளின் (presiding deity) பெயரையும் கொடுக்க வேண்டும். இதனைத் தொடர்ந்து, சிற்பி அந்தக் கடவுளோடு தொடர்புடைய நட்சத்திரத்தை அறிந்து அதன் பின்புதான் மூலவரின் சிலையைத் தகுந்த முறையில் வடிவமைப்பார். 27 நட்சத்திரங்களில் ஒன்றின் அடிப்படையில் மூலவரின் சிலை அளவுகள் நிர்ணயம் செய்யப் பட்டதும், மூலவரின் அளவிற்கேற்பக் கோவிலின் அளவுகளும் நிர்ணயம் செய்யப்படும். இந்த 27 நட்சத்திரங்களும் 27 வெவ்வேறு தாவரங்களோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளன (அட்டவணை V.1.) (Kumaraswamy Desikar). இந்த அடிப்படையில் ஒவ்வொரு கோவிலும் ஒரு குறிப்பிட்ட தாவரத்துடன் தொடர்புடையதாகிறது. இந்தத் தொடர்பு தற்போது உள்ள பல பழைய கோவில்களில் நிரூபிக்கப் பட்டுள்ளது. மேலும், குறிப்பிட்ட நட்சத்திரங்களில் அந்தந்தக் கோவில்களில் திருவிழாக்களும் நடத்தப்படுவது இக்கருத்தை வலியுறுத்துகிறது.

அட்டவணை V.1.: நட்சத்திரங்களும் அவற்றோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ள தாவரங்களும்

எண்	நட்சத்திரம்	தாவரம்
1.	அஸ்வினி	எட்டி
2.	பரணி	நெல்லி
3)	கார்த்திகை	அத்தி
4)	ரோகினி	நாவல்
5)	மிருகசீரிஷம்	கருங்காலி
6)	திருவாதிரை [1]	செங்கருங்காலி
7)	புனர்பூசம்	மூங்கில்
8)	பூசம்	அரசு
9)	ஆயில்யம் [2]	புன்னை
10)	மகம்	ஆல்
11)	பூரம்	பலாசு
12)	உத்திரம் [3]	அலரி
13)	அஸ்தம்	அத்தி
14)	சித்திரை	வில்வம்
15)	சுவாதி	மருதம்
16)	விசாகம் [4]	விளா
17)	அனுஷம்	வகுளம்
18)	கேட்டை [5]	பராய்

1) குமிழ் என்று ராஜசேகரனும் மற்றவரும் (Rajasekharan et. al. 2005) கருதுகின்றனர்.

2) நாங்கு என்று ராஜசேகரனும் மற்றவரும் (Rajasekharan et.al.2005) கருதுகின்றனர்.

3) *Ficus microcalpa* என்று தவறாக ராஜசேகரனும் மற்றவரும் (Rajasekharan et.al.2005) கருதுகின்றனர்.

4) *Flacourtia montana* என்று ராஜசேகரனும் மற்றவரும் (Rajasekharan et.al.2005) கருதுகின்றனர்.

5) *Symplocos cochinchinensis* என்று தவறாக ராஜசேகரனும் மற்றவரும் (Rajasekharan et.al.2005) கருதுகின்றனர்.

19)	மூலம்	மரா
20)	பூராடம்	வஞ்சி
21)	உத்திராடம்	பலா
22)	திருவோணம்	எருக்கு
23)	அவிட்டம்	வன்னி
24)	சதயம்	கடம்பு
25)	பூரட்டாதி	மா
26)	உத்திரட்டாதி	வேம்பு
27)	ரேவதி	இலுப்பை

உ) கோவில்காடுகளும் நந்தவனங்களும்

தமிழகத்தின் இறைவழிபாட்டிலும் ஆன்மவியலிலும் மற்றொரு குறிப்பிடத்தக்க செய்தி கோவில்களோடு தொடர்பு படுத்தப்பட்ட கோவில்காடுகள், நந்தவனங்கள் மற்றும் கோவில் குளங்கள் ஆகும். பொதுவாக, கோவில்காடுகள் (sacred groves) சிறுமரபு இறைவழிபாட்டோடு கிராமப்புறங்களில் இணைக்கப்பட்ட அமைப்புகளாகும். இவற்றோடு தொடர்புடைய கோவில்கள் கிராமப் புறக் கோவில்களாகும்; தொடர்புபடுத்தப்பட்ட கடவுளர் / தேவதை கள் கிராமக் கடவுளர்கள் ஆவர். மேலும், எந்த ஒரு கோவில்காடும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது அல்ல. தமிழகத்தின் (கர்நாடகா, கேரளாவிலும் கூட) பல்வேறு பகுதிகளில் இயற்கையான காடு களுக்கு நடுவில் கிராமக் கோவில்கள் இன்றும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இவை பன்னெடுங்காலமாகவே இருந்து வருபவை. இந்தியாவில் கோவில்காடுகள் பற்றிய கருத்துரு வேளாண் காலத்திற்கு முன்பே, மனிதன் அலைந்து திரிந்த நாட்களிலேயே, தோன்றிவிட்டது (Kosambi 1962). ஒருசில கோவில்கள் தான் இக்காடுகள் உள்ள இடங்களில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டவை. ஏற்கனவே, அந்தந்தப் பகுதிகளில் அமைந்திருந்த இயற்கையான தாவர சமூகமே (community) கோவில் காடாக்கப்பட்டது. இந்தியா முழுவதும் ஏறத்தாழ 50,000 கோவில் காடுகள் இருப்பதாக இதுவரை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது (Malhotra et al 2001). தமிழ் நாட்டில் மட்டும் 448 கோவில்காடுகள் 28 மாவட்டங்களில் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது (Amirthalingam 1998 a, b, c). (கோவில்காடுகள் பற்றி மேலும் விவரங்களுக்கு இந்நூலின் இன்னொரு அத்தியாயத்தைப் பார்க்க). நந்தவனங்கள் பெருமரபு இறைவழிபாட்டோடு தொடர் புடையவை. இவை பெரும்பாலும் நகர்ப்புறங்களில் நிறுவப்பட்ட

பெரிய கோவில்களோடு தொடர்புடையவை. கோவில்களுக்கு அருகிலோ அல்லது உள்ளேயோ, பெரும்பாலும் புதிதாக, நிர்மாணிக்கப்பட்டவை. இங்கு தாவரங்கள் வேறு இடங்களில் இருந்து எடுத்து வரப்பட்டு வளர்க்கப்பட்டன.

தமிழகத்தில் பன்னெடுங்காலமாகவே மக்களின் அன்றாட வாழ்க்கையில் கோவில்கள் இன்றியமையாத பிணைப்பை ஏற்படுத்தி யுள்ளன. குறிப்பாக, தமிழக வரலாற்றின் இடைக்காலத்தில் ஏற்பட்ட இந்த வலிமையான பிணைப்பு இன்றும் நிலைத்து (மேலும் வளர்ந்து) நிற்கிறது. இதன் காரணமாக, கோவில் ஒரு பிரம்மாண்டமான நிறுவனமாகவே வளர்ந்து, பல்வேறு வகையான கலை மற்றும் பண்பாட்டுச் செயல்களுக்குப் பெருமளவு ஊக்கமளித்துள்ளது. தினசரி வழிபாடு, சடங்குகள், பண்டிகைகள், கேளிக்கைகள், பக்திப் பாடல்கள் பாடப்படுதல், வேதங்கள் ஓதுதல், இலக்கியம், நடனம், இசை, சிற்பக்கலை, கல்வி போன்றவற்றை வளர்த்தல் போன்ற செயல்களுக்காக ஏற்படும் செலவுகளை ஈடுகட்ட வேண்டிய கட்டாயத்திற்கு ஒவ்வொரு கோவிலும் தள்ளப்பட்டது. இதற்கான செலவுகளுக்காக அரசும், பொதுமக்களும் பயிரிடப்பட்ட / பயிரிடப் படக் கூடிய நிலங்கள், தோட்டங்கள், பூங்காக்கள் போன்றவற்றை மட்டுமல்லாமல், பணமாகவோ, தங்கமாகவோ, காணிக்கைகளைக் கோவிலுக்கு அளித்தனர். கி.பி. 10-ஆம் நூற்றாண்டு சோழ மாமன்னர் கள் ஆட்சியிலிருந்து தொடங்கி விஜயநகர் துளுவ மன்னர் ஆட்சி வரை 200-க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் கோவில்களுக்காகக் கொடுக்கப் பட்ட நில, தோட்ட மற்றும் நந்தவன மானியங்கள் பற்றிக் குறிப்பிடு கின்றன. இந்த வகையான காணிக்கைகளால் கோவில்கள் இரண்டு வகைகளில் பயனடைந்தன : (i) இந்தத் தோட்டங்களின் விளை பொருட்கள் கோவிலின் ஒருசில தினசரி சடங்குகளுக்குப் பயன் பட்டன. (ii) பயிரிடப்பட்ட கூடுதலான விளைபொருட்கள் விற்கப் பட்டோ அல்லது இத்தோட்டங்கள் குத்தகைக்கு விடப்பட்டோ பெறப்படும் பணம்/தங்கம் கோவில்களின் மற்ற செலவுகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. தமிழகத்தின் பெரும்பாலான கோவில் நந்தவனங்கள் பக்தி இயக்கத்திற்குப் பின்புதான் நிறுவப்பட்டன என்பதற்கு இலக்கிய, கல்வெட்டு ஆதாரங்கள் பல சான்று பகர் கின்றன. பெருங்கோவில்கள் கட்டப்பட்ட பின்புதான் அவற்றிற்கான நந்தவனங்களும் உருவாக்கப்பட்டன. கோவில் வளாகத்திற் குள்ளேயே கோவிலின் குளங்களும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டன. பக்தி இயக்கக் காலத்தின் தொடக்கத்திலிருந்து நந்தவனங்களும், குளங்களும் கோவில்களின் இன்றியமையாத உறுப்புகளாக மாறி

விட்டன என்றால் மிகையாகாது (Krishnamurthy 1999, 2002). இந்த நந்தவனங்களில் பயிரிடப்பட்ட தாவரங்களோ, அவற்றின் பூக்கள் மற்றும் இலைகளோ அந்தக் கோவிலில் உறைந்துள்ள இறைக்குத் தினசரி வழிபாட்டுப் பொருள்களாக இருக்கும் வகையில் தேர்ந் தெடுக்கப்பட்டன.

ஒரு நிலத்தின் வரியை நீக்கி, அங்கு பூ/கனித் தோட்டத்தை நிறுவுமாறும், அதிலிருந்து கிடைக்கும் விளைபொருட்களைத் திருவெண்ணை நல்லூர் மகாதேவருக்கு அர்ப்பணிக்குமாறும் கோப்பெருஞ் சிங்கன் கட்டளையிட்டான் என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது (432 of 1921). முதலாம் இராஜராஜ சோழன் ஒரு நந்தவனத்தை நிர்மாணித்து அதிலிருந்து பெறப்படும் பூக்களைத் தினசரி இறைவழிபாட்டிற்காகத் திருக்கோவிலூர் திருவிடைக்கலியில் அமைந்த வீரசேகரர் கோவிலுக்குக் கொடுக்குமாறு பணித்ததாக ஒரு கல்வெட்டு கூறுகிறது (310 of 1921, கி.பி. 987). விக்ரமசோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்றில், நந்தவனம் அமைப்பதற்காக விஷ்ணு கோவிலைச் சேர்ந்த வைக்கனக பூசாரிகள் 1000 குழி நிலத்தை வாங்கியதாகவும், அது பற்றாமையால், மேலும் சிறிது அளவு நிலத்தைக் கூடுதலாக வாங்கி, தினசரி மூன்றுவேளை இறைவழி பாட்டிற்குத் தேவையான பூக்களையும், பூமாலைகளையும் கொடுத்த தாகவும் விவரங்கள் காணப்படுகின்றன (348 of 1921, கி.பி. 1130). முனையரதத்ய சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த ஒரு பிராமணர் வேதபுரீசுவரருக்குத் தேவைப்படும் பூக்களைக் கொடுப்பதற்காக நந்தவனம் நிறுவ ஒரு நிலத்தைக் காணிக்கையாகக் கொடுத்தார் என்றும், இந்த பூக்கள் தினமும் 30 அடி நீள மாலை ஒன்றை இறை வனுக்கு அணிவிக்கத் தேவைப்பட்டன என்றும் ஒரு கல்வெட்டு கூறுகிறது (527 of 1921, கி.பி. 942). கோவில்களில் மேற்கொள்ளப்படும் மற்ற சடங்குகளுக்குத் தேவையான தாவரங்களும் அவற்றின் நந்தவனங்களில் பயிரிடப்பட்டன. கோவில் நந்தவனங்கள் அமைப்பது சோழ, பாண்டிய மன்னர்களின் காலத்தில் சிறப்பாகத் தொடங்கப்பட்டு, பல்லவ மன்னர்களால் சீராக்கப்பட்டு விஜய நகர மன்னர்கள் காலம் வரை தொடர்ந்து வந்தது குறிப்பிடத்தக்கது. சிவன் வழிபாட்டிற்கான சிறப்பான மற்றும் புனிதமான தாவரங்களாக சுந்தரர் எட்டு தாவரங்களைப் பட்டியலிட்டுள்ளார். அவையாவன : புன்னை, வெள்ளெருக்கு, செண்பகம், நந்தியாவட்டை, நீலோற் பலம், பாதிரி, அலரி மற்றும் செந்தாமரை. இவை சிவன் கோவில் களின் நந்தவனங்களில் பயிரிடப்பட்ட தாவரங்களில் மிக முக்கிய மானவைகளாகும்.

நந்தவனங்கள் மற்றும் கோவில் தோட்டங்கள் அமைப்பதற்குத் தேவைப்பட்ட நிலம் மன்னர்களால் கோவில்களுக்குக் காணிக்கை யாக அளிக்கப்பட்டது. மதுரையில் வங்கிய சூடாமணி மாறன் என்ற மன்னன் சிவபெருமான் வழிபாட்டிற்காக ஒரு பூஞ்சோலையை அமைத்தான். அதில் சண்பக மரங்களை அதிகமாக வளர்த்து, அப்பூக்களைச் சார்த்தி சிவபெருமானுக்கு சண்பகச் சுந்தரர் என்ற பெயர் வைத்தமையால் அவனுக்கு சண்பகமாறன் என்ற பெயர் வந்தது (கோவை இளஞ்சேரன் *1982*). மன்னர்களைத் தவிர செல்வர் களும், பொதுமக்களும் இதற்கான நிலங்களைக் கோவிலுக்குக் காணிக்கையாகக் கொடுத்துள்ளனர். ஏற்கனவே பயிரிடப்பட்டு, வளர்ந்த தாவரங்களைக் கொண்ட நிலங்களும் இதில் அடங்கும். தமிழக வரலாற்றின் இடைக்காலத்தில் (medieval period) கோவில் களுக்குத் தென்னை மரத்தோப்புகள் காணிக்கைகளாகக் கொடுக்கப் பட்டது பற்றிக் கணக்கற்ற கல்வெட்டுத் தகவல்கள் கூறுகின்றன (சுவாமி மற்றும் கிருட்டிணமூர்த்தி *1994*). குலோத்துங்க இராஜேந்திர சோழனின் கஜானாவின் பொறுப்பாளராக இருந்த எர்ரமநாயகன், பவநாராயணசுவாமி கோவிலுக்கு ஒரு தென்னந்தோப்பைக் கொடுத்த தாக ஒரு கல்வெட்டு கூறுகிறது (229 of 1897, கி.பி. *1163-1680*). இதேபோலத் தென்னந்தோப்புகள் கோவிலுக்குக் காணிக்கையாக்கப் பட்டது பற்றி மேலும் பல கல்வெட்டுகள் கூறுகின்றன (220 of 1909; 484 of 1912). *1959/60*ஆம் வருடத்தில் பட்டியலிடப்பட்ட கல்வெட்டு எண் *81*ல் (கி.பி. *3* அல்லது *4*ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது) அஷ்டபுஜசுவாமி கோவிலுக்கு அருகில் பனைமரத் தோட்டம் ஒன்று நிறுவப்பட்டது பற்றித் தகவல் கொடுக்கிறது. கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவ விஜய நந்திவர்மன் காலத்திய ஒரு கல்வெட்டில் திருக்காட்டுப்பள்ளிக் கோவிலிலுள்ள இறைவன் மகாதேவருக்குப் பனை மரங்களால் சூழப்பட்ட ஒரு மொத்த கிராமமே காணிக்கையாக்கப்பட்டது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது (SII-II. எண் *98*). நீலங்கராயர் என்பவரால் ஒரு பனந்தோப்பு தர்மசேசுவரர் கோவிலுக்கு அவருடைய தந்தை பெயரால் காணிக்கை யாகக் கொடுக்கப்பட்டது (285 of 1897, கி.பி.*1303*). இதேபோன்று, பனந்தோப்பு ஒன்று இரண்டாம் குலோத்துங்க சோழனால் கோவி லுக்குக் கொடுக்கப்பட்டது (49 of 1909, கி.பி. *1175*). விக்ரமபாண்டிய புரத்தைச் சேர்ந்த தலைவர்களும் வணிகர்களும் ஒன்று சேர்ந்து பாக்கு மற்றும் வெற்றிலை வளர்க்கப்பட்ட தோட்டத்திலிருந்து வரும் வருமானத்தைக் கைலாசமுடைய நாயனார் கோவில் காரியங்களுக் காகக் கொடுத்தனர் என்ற விவரம் *1918-1919*ஆம் ஆண்டுகளில்

கண்டுபிடிக்கப்பட்ட *316*ஆம் எண் கொண்ட கல்வெட்டில் காணப் படுகிறது. கந்தகோபாலன் என்பவரின் கல்வெட்டுகளுள் ஒன்று (கி.பி. *1295*-ம் ஆண்டைச் சேர்ந்தது) வட ஆற்காடு மாவட்டம் கரிவேட்டில் உள்ள அரிக்கண்டீசுவரம் கோவிலின் இறைக்குக் காணிக்கையாக அளிக்கப்பட்ட பாக்குத் தோட்டம் பற்றிக் கூறுகிறது (58 of 1945-1946). கண்ணப்ப தேவருக்காகப் பாக்குத் தோட்டம் ஒன்று அமைப்பதற்காக வேறு ஒரு நிலம் விற்கப்பட்டதாக கி.பி. *1023* ஆம் ஆண்டுக் கல்வெட்டு (125 of 1922) எடுத்துக் கூறுகிறது. சோழ மன்னன் முதலாம் குலோத்துங்கனால் பொறிக்கப்பட்ட குடுமியான் மலைக் கல்வெட்டு ஒன்று (353 of 1904, கி.பி. *1086*) தினமும் வெற்றிலையும், பாக்கும் தோட்டத்திலிருந்து திருக்குன்றமுடைய நாயனாருக்குப் படைக்கப்பட்ட செய்தியை விளக்குகிறது. ஆடுதுறையில் அமர்ந் துள்ள தேவி கோவிலுக்கு அர்பணிப்பதற்கான வெற்றிலையும் பாக்கும் வாங்குவதற்கான பணத்தை அரச்சலூரைச் சேர்ந்த காமதேவ வேல் என்பவர் கொடுத்தது பற்றிய தகவலைத் தருகிறது மற்றொரு கல்வெட்டு (20 of 1913, கி.பி. *1169*). விஜய நகரத்தைச் சேர்ந்த சதாசிவராயன் என்பவர் சாந்திநாத சுவாமி என்ற சமணக் கோவிலுக்குப் பாக்குத் தோட்டம் ஒன்றைக் காணிக்கையாகக் கொடுத்தார் (SII.IV. எண். *247*) கி.பி. *16*ஆம் நூற்றாண்டுப் பாறைக் கல்வெட்டு ஒன்றில் கோடச்செட்டி என்பவரின் தந்தை பெயரில் கோவிலுக்காக வளர்க்கப்பட்டு வந்த ஒரு பனைமரத் தோட்டம் பற்றிய விவரம் கொடுக்கப்பட்டுள்ளது (394 of 1926).

நந்தவனங்கள் இறைவழிபாட்டுக்குத் தேவையான பூக்களை மட்டுமல்லாது முழுத் தாவரங்கள், இலைகள், கனிகள், காய்கள் போன்றவற்றையும் கொடுக்க வழி செய்தன. கோவில்களுக்குச் சொந்தமான தென்னந்தோப்புகளிலிருந்து தேங்காயும் இளநீரும் வழிபாட்டிற்குப் பயன்படுத்தப்பட்டன. வரலாற்றின் இடைக் காலத்தில்தான் இளநீர் கடவுளின் புனித நீராட்டலுக்கு (= அபிஷேகம்) பயன்படுத்தப்பட ஆரம்பித்தது. இதற்கான ஆகம அனுமதியும் அங்கீகாரமும் அப்பொழுதுதான் பெறப்பட்டன. தேங்காயும், இறைவனுக்குப் படைக்கப்படும் முக்கியப் பொருட்களில் ஒன்றாக வழக்கத்தில் வந்தது. இதைத் தொடர்ந்து வீட்டுச் சடங்குகளிலும், பூசைகளிலும் தேங்காய் ஒரு தவிர்க்க முடியாத பொருளாக மாறியது. தென்னை நம் நாட்டுத் தாவரமாக இல்லாத போதிலும் (பார்க்க, இந்நூலின் நான்காவது அத்தியாயத்தை) அதற்கான மத அங்கீகாரத் தில் பிரச்சனை எதுவும் ஏற்படவில்லை. தேங்காய் கோவில்களில் உடைக்கப்படுகிறது. நாட்டுப்புறக்கோவில் வழிபாடுகளில் தென்னம்

பாளை தவறாமல் இடம் பெறுகிறது. அதே நேரத்தில், பனை நம் நாட்டுத் தாவரமாக இருந்தபோதும், அதற்கான புனித இறை அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது; இன்னும் கூறப்போனால், இறைச் சடங்குகளில், பெரிய கோவில் களில், பனை தடை செய்யப்பட்டது; தவிர்க்கப்பட்டது.

சிவன் கோவில் நந்தவனங்களில் மிகச் சிறப்பாக வளர்க்கப் பட்ட தாவரங்களில் வில்வமும் ஒன்று. ஆனால் சுந்தரர் குறிப்பிட்ட, சிவனுக்கு உரிய, எட்டு தாவரங்களில் வில்வம் அடங்கவில்லை. வில்வ மரத்திலிருந்து தயாரிக்கப்படும் சிவலிங்கங்கள் பற்றி ஏற்கனவே இந்நூலில் குறிப்பிடப்பட்டது. வில்வ இலை தற்பொழுது சிவனுக்கு அர்ச்சனை செய்யப்படும் பொருட்களில் மிக முக்கிய மானது. எனினும், வில்வம் தமிழக வரலாற்றின் எந்தக் கால கட்டத்தில் சிவனோடு தொடர்புபடுத்தப்பட்டது என்பது சர்ச்சைக் குரிய வினாவாகும். வில்வத்தைப் பற்றிய பல செய்திகள் தமிழிலக்கி யத்தில் காணப்பட்டாலும், கி.பி. 10 அல்லது 11ஆம் நூற்றாண்டில் தான் வில்வம் சிவனுடன் நெருக்கமான தொடர்பைப் பெற்றிருக்க வேண்டும் என்று சுவாமி (Swamy 1978) கருதுகிறார். இதனுடைய இலைகள் மூன்று மடல்கள் (lobes) கொண்டதால் சிவனின் திரிசூலத் துடனும், மூன்று கண்களுடனும் ஒப்பிடப்பட்டு சிவனுக்கு உரித்தாயின. கி.பி. 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சாளுக்கிய கல்வெட்டு ஒன்று பத்மசிவா என்ற அர்ச்சகர் (priest) நாகேசுவரருக்குக் கோவில் கட்டியது பற்றியும், செவந்த இராமையா என்பவர் பூசைக்குத் தேவைப்படும் வில்வ இலைகள் கொடுப்பதற்காக நிலமொன்றைக் காணிக்கையாகக் கொடுத்தது பற்றியும் விவரங் களைக் கூறுகிறது (EC VII. Hn. 14, கி.பி. 1076). கி.பி. 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று தினமும் 1000 வில்வ இலைகள் திருச்சி மாவட்டம் நெரூரில் உள்ள புஷ்பநாத சுவாமிக்குப் படைப்பதற்கான செயல்கள் பற்றி விவரிக்கிறது (21-I of Rangacharya 1919).

சிவனுக்குப் பிடித்தமான மற்றொரு தாவரம் தும்பை. சிவனுக்கும் தும்பைக்கும் இடையேயான தொடர்பு 1000 வருடங் களுக்கும் மேற்பட்டதாகும். அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய மூவருமே சிவனுக்குப் பிடித்த மலராகத் தும்பையைக் கருதுகிறார்கள். ஒரு நாழி அளவு தும்பைப் பூக்கள் தினமும் சிரநாத சுவாமி கோவி லுக்கு வழங்கப்பட்டதாக ஒரு கல்வெட்டு கூறுகிறது (508 of 1926). ஒரு காசுக்கு ஒரு கைப்பிடி அளவு தும்பைப் பூ கிடைத்ததாக மற்றொரு கல்வெட்டு கூறுகிறது (336 of 1927). ஒரு வருடத்தின் 12 சங்கிராந்தி

நாட்கள் ஒவ்வொன்றிலும் திருக்கழி வல்லத்தின் மகாதேவருக்கு ஒரு குறிப்பிட்ட அளவு தும்பைப் பூ வழங்குவதற்குத் தங்கத்தினாலான ஒரு நன்கொடை நிறுவப்பட்டதாக மற்றொரு கல்வெட்டு கூறுகிறது (226 of 1921).

இறைவழிபாட்டில் பயன்படுத்தப்பட்ட மற்றுமொரு முக்கியத் தாவரம் தாமரையாகும். இதை மட்டும் பயிரிடுவதற்காக நிலம் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டது (506 of 1906). இதன் சாகுபடிக்கெனத் தனியாகக் கால்வாய் வெட்டப்பட்டு நீர் கொடுக்கப் பட்டது (304 of 1960/61; 39 of 1927). தாமரைப் பூக்களாலான மாலைகள் தயாரிப்பதும் அவற்றைக் கோவில்களுக்குக் கொடுப்பதும் ஒரு தொழிலாக மேற்கொள்ளப்பட்டது (387 of 1905; 65 of 1913). பொது மக்களும் தாமரை மாலைகளைத் தவறாமல் கோவிலுக்குக் கொடுக்கப்படுவதில் உதவி செய்தனர் (140 of 1926). கோனேரிராயன் என்பவன் தாமரை வளர்ப்பதற்கெனவே ஒரு குளத்தை அமைத்தான் என்று மற்றொரு கல்வெட்டு கூறுகிறது (201 of 1940/41). பல்வேறு கோவில்களுக்கு எந்த அளவு தாமரைப் பூக்கள் தேவைப்பட்டன என்பதைப் பின்வரும் அட்டவணையில் (அட்டவணை V.2) உள்ள விவரங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம் (Swamy 1973; Krishnamurthy 2002).

அட்டவணை V.2 : தமிழகத்தின் பல்வேறு கோவில்களுக்குத் தேவைப்பட்ட தாமரைப் பூக்களின் எண்ணிக்கை

வரி. எண்.	கோவிலின் பெயர்	கொடுக்கப்பட்ட பூக்களின் எண்ணிக்கை	கல்வெட்டு ஆதாரம் வருடம்
1.	ஆபத்சகாயேசுவரர் கோவில், திருப்பழனம்	*100*	175 of 1927/28; கி.பி. *1227*
2.	நடராஜர் கோவில், சிதம்பரம்	*200*	284 of 1913; கி.பி. *1217*
3.	அருணாசலேசுவரர் கோவில், திருவண்ணாமலை	*600*	100 SII., கி.பி. *1361*
4.	அனதீசுவரர் கோவில், உடையார்குடி	*1000*	625 of 1920; கி.பி. *1020*
5.	நாகநாதர் கோவில், மானர்ம்பாடி	*2000*	95 of 1931/32; காலம் தெரியவில்லை

அல்லியும் இறைவழிபாட்டிற்குப் பயன்படுத்தப்பட்டது. ஒரு குறிப்பிட்ட குளத்தில் தான் அல்லி பயிரிடப்பட வேண்டும் என்றும், அதன் பூக்கள் வீதிவிடங்க சதுர்வேதிமங்கலம் என்ற ஊரில் அமைந்த விசுவேசுவரரின் இறைவழிபாட்டிற்குக் கொடுக்கப்படவேண்டும் என்றும் அரசாணை ஒன்று பிறப்பிக்கப்பட்டது; இதனால் மற்ற பயிர்களின் வேளாண்மை பாதிக்கப்படும் என்று இதற்குப் பொது மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் அந்தக் குளத்தின் நீர் மற்ற பயிர்களுக்கும் குறிப்பிட்ட சில நாட்களில் மட்டும் தரப்படும் என்று அரசாணை மாற்றப்பட்டது என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது (179 - 1925).

ஊ) பூக்களும் இறைவழிபாடும்

இறைவழிபாட்டில், குறிப்பாகப் பக்தி இயக்கக் (கி.பி. 6-7 நூற்றாண்டு) காலத்திலிருந்து, தாவரங்கள் முக்கியப் பங்கு வகித்துள்ளன; இன்றும் வகித்து வருகின்றன. தாவரப் பொருட்களில் பூக்கள் இறைவழிபாட்டில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை; ''மலர்மிசை ஏகினான்'' என்கிறது குறள். இறைவனைப் பூக்களால் வழிபடுவது 'புட்யக்னம்' என்ற சொல்லால் குறிப்பிடப்படுகிறது; இந்தச் சொல்லை நந்தவனத்தோடு தொடர்புபடுத்திப் பல கல்வெட்டுகள் சுட்டுகின்றன (எடுத்துக்காட்டு : 427 of 1958/59; கி.பி. 13ஆம் நூற்றாண்டு). இந்தியா போன்ற கீழைநாட்டு இறைவழிபாட்டில் பூ முழுமைப் பொருளாகவும் முதன்மைப் பொருளாகவும் திகழ்ந்து வந்துள்ளது என்பார் கோவை இளஞ்சேரன் (1982). தாவரங்கள் / பூக்களின் பெயர்களால் இறைவன் பெயர்கள் தமிழகத்தில் சூட்டப்பட்டன: 'கொன்றையாண்டி', 'கொன்றையவன்' போன்ற பெயர்கள் சிவனையும் [1] 'மலரவன்', 'கடம்பன்' [2] என்ற பெயர்கள் முருகனையும் குறித்தன. ஒவ்வொரு கடவுளுக்கும் ஒரு பூவை விருப்பப்பூவாக ஆக்கினர். சிவனுக்குக் கொன்றையும், முருகனுக்குக் கடம்பும், திருமகளுக்கு ஆம்பலும், கலைமகளுக்கு வெண்டாமரையும், அருகனுக்குப் பிண்டி என்ற அசோகும், புத்தனுக்குத் தாமரையும், திருமாலுக்கு வகுளம் மற்றும் துளசியும், உமைக்குக் குவளையும், காளிக்குச் செவ்வலரியும், இந்திரனுக்கு மந்தாரமும் விருப்பப் பூக்களாகின. பக்தி இயக்கத்தின் பின் பகுதியில், விருப்பப் பூக்களுக்குப்

---

1) ''கண்ணி கார்நறுங் கொன்றை, காமர்
வண்ண மார்பில் தாரும் கொன்றை'' (புறம்.:1)

2) ''காரலர் கடம்பன் அல்லன் என்பது
ஆரங்கண்ணியிற் சாற்றினன் வருவோன்'' (மணி.: பளிக்கறை புக்க காதை: 49, 50)

பதிலாக பெரும்பாலான பூக்கள் எல்லாக் கடவுளர்களுக்கும் படைக்கப்பட்டன[1]. இதே நிலை இன்றும் காணப்படுகிறது.

இறைவழிபாட்டைக் குறிக்கும் 'பூஜை' என்ற சொல்லே பூ+செய் என்ற தமிழ்ச் சொற்களின் இணைவால் தோன்றியது என்று கோவை இளஞ்சேரன் (1982) வலியுறுத்துவார். சட்டர்ஜி (Chatterji, cited from கோவை இளஞ்சேரன் 1982) தன்னுடைய நூலின் 160ஆம் பக்கத்தில் 'பூஜ்' என்ற வேர்ச் சொல் கொண்டதாகக் கருதப்படும் 'பூஜை' என்னும் சொல் திராவிட மொழி வழி வந்தது என்றும், இச்சொல்லோ இதன் வேரோ ஆரிய மொழியிலோ, அயல் மொழிகளிலோ காணப்படவில்லை என்றும் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

தமிழர்கள், வழிபாட்டுச் சின்னமான பூவை, அதுவும் கடவுளுக்குப் படைக்கப்பட இருக்கும் பூவை, மற்றவர் பயன்படுத்தக் கூடாது என்ற கருத்தில் மிகவும் உறுதியாக இருந்தனர்[2]. விடியற் காலையில் எறிபத்தர் எனும் அடியார், வாய்க்காற்று பட்டால் வழிபாட்டு மலரின் தூய்மை கெட்டுவிடும் என்று கருதித் தன் வாயைத் துணியாலே மூடி இருந்தார்[3] என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

இறை வழிபாட்டில் மட்டுமன்றிப் பல்வேறு சமயக் கோட்பாடுகளிலும் பூக்கள் முழுப் பொருட்களாக இருந்து வந்துள்ளன. எடுத்துக்காட்டாக, பூக்களால் ஆன்மவியலின் முழுப்பயனாம் வீடு பேற்றையும் பெறலாம் என்று திருஞானசம்பந்தர் கூறுகிறார்[4]. சுந்தரரோ பூமாலையாம் வலையில் சிவனையே சிக்க வைக்கலாம்

---

1) ''துறையிளம் பன்மலர் தூவித் தோளைக் குளிரத் தொழுவேன்'' (திருமுறை 4:3:4:2)

2) ''.......... ஆரூர் மணிக்கு வைத்த
போதினைத்தான் மோந்த, தேவிதன் மூக்கை அறியப் பொற்கை
காதி வைத்தன்றோ அரிவதென்றாங்கவன் கைதடிந்தான்
நாத மொய்த்தார் வண்டு கிண்டு பைங்கோதைக் கழற் சிங்கனே'' (திருத். திரு.:64)
(ஒரு பட்டத்தரசியின் மூக்கைச் செருந்துணையார் என்ற தொண்டரும், அவளது கையைக் கணவன் கழற்சிங்க மன்னனும் அரிந்தும் வெட்டியும், வழிபாட்டுற்குரிய பூவை எடுத்தும் மோந்தும் அதன் தூய்மை போக்கிய குற்றத்திற்காக அன்றோ)

3) ''வைகறை உணர்ந்து போந்து
புனல் மூழ்கி வாயும் கட்டி'' (பெரி.புரா.:4 : எறிபத்தர் : 9)

4) ''சித்தந்தெளிவீர்காள்! அத்தன் ஆரூரைப்
பத்தி மலர் தூவ முத்தியாகுமே'' (ஞா.தே.:ஆரூர் பதிகம்:1)

என்று கூறியுள்ளார்[1]. அப்பர் சிவனைப் பூவாகவே (அதன் நிறமாக வும், மணமாகவும்) கருதுகிறார்[2]. திருமூலர் சிவனை மணமாகவும், பூத்ததாகவும் கருதுகிறார்[3]. வைணவமும் பூவிற்கு முக்கிய இடத்தைக் கொடுத்துள்ளது. நம்மாழ்வார் பூவை வீடு பேற்றிற்கான வித்தாக நினைக்கிறார்[4]. சமணர்கள் தம்முடைய கடவுளாகிய அருகனைப் ''பூவன்'' என்றே போற்றினர். பிண்டி எனும் அசோக மலரே அருக னுக்கு ஏற்ற மலராகும்; பிண்டிப் பூ அருகனுக்குப் படைக்கப் பட்டதைக் குறிக்க ''பூப்பலி'' என்றனர்[5]. பூப்பலியைச் சமணர்கள் மரபாகவே ஆக்கினர். பௌத்தர்களும் பூக்களை இறைவழிபாட டிற்குப் பயன்படுத்தினர். பூ மேல் பொலிபவர் புத்தர் என்றும், மலர் எண்ணிய இறைவழிப் பலனைத் தரும் என்றும் புத்தமதம் வலியுறுத்துகிறது[6].

'புட்பவிதி' என்ற சிறுநூல் (ஞானப்பிரகாச பட்டாரகர் 1972) பூவை எவ்வாறு இறைவழிபாட்டிற்குப் பயன்படுத்துவது என்பது பற்றிய விவரங்களைக் கொடுத்துள்ளது. வழிபாட்டு நூல்களில் கோட்டுப்பூ 26உம், கொடிப்பூ 12உம், நிலப்பூ 15உம், நீர்ப்பூ 7உம் காணப்படுவதாக புட்பவிதி நூல் குறிப்பிடுகிறது (பு.வி.:2-5).

தனிப்பூக்கள் தவிர தொடுத்த மலர்த் தொகுப்புகளும் இறை வழிபாட்டில் பயன்படுத்தப்பட்டன. கடவுளர்க்குத் தார் சிறப்பாக அணிவிக்கப்பட்டது[7]. தார்கள் பற்றிய ஏனைய விவரங்கள் இந்நூலின் ஐந்தாவது அத்தியாயத்தில் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளன.

---

1) ''தார் மலர்ப் பூசையில் சிக்கும் இறைவன்'' (சுந்.தே.:நின்றியூர்ப் பதிகம்:8)

2) ''பூத்தானுமாய் பூவின் நிறத்தானுமாய்
பூக்குளால் வாசமாய் மன்னி நின்றகோ'' (அப்.தே.:கருகாவூர்ப் பதிகம்:3)

3) ''பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்
சீவனக்குள்ளே சிவமணம் பூத்தது'' (திருமந்.:1459)

4) ''நாடீர் நாடோறும் வாடாமலர் கொண்டு
பாடீர் அவன் நாமம் வீடே பெறலாமே'' (திருவாய்.:கண்ணன் கழலிணை)

5) ''வண்டு சூழ் பூப்பலி சுமந்து தாள் வலம்
கொண்டு சூழ்ந்தெழு முறை இறைஞ்சி'' (சீவ.சி.:3052)

6) ''பயங் கெழு மாமலர் இட்டுக்காட்ட'' (மணி.:மலர்வனம்:78)

7) ''கொன்றைத் தார் சுவல் புரளும்'' (கலி.:1) (சிவபெருமான்)
''கார் கடம்பத் தாரான்'' (சிலம்பு.:14:4) (முருகன்)
''உருள் பூந் தண்தார் புரளும் மார்பினன்'' (திருமுருகு.:11) (முருகன்)
''பொலந்தார் மார்பின் நெடியோன்'' (மது.கா.69) (திருமால்)

எ) மற்ற தாவரப் பொருட்களும் இறைவழிபாடும்

இறைவழிபாட்டில் பயன்படுத்தப்பட்ட மற்றொரு தாவரப் பொருள் சந்தனமாகும். ஆனால், கோவில்களில் இதன் பயன்பாடு கி.பி. 9-10ஆம் நூற்றாண்டுகளுக்குப் பின்புதான் வழக்கமாயிற்று என்பதற்கான கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன. சந்தனத்தின் மற்ற பயன்பாடுகளைத் தவிர, கோவில் சடங்குகளில் இது அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. திருச்சாந்து (384 of 1921) என்றும், மேற்பூச்சு (160 of 1906) என்றும் அழைக்கப்பட்ட சந்தனம், இறையின் சிலைக்கு அலங்காரம் செய்யும்போது அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. நீருடன் கலந்து சந்தனநீர் இறையின் புனித நீராடலுக்குப் பயன் படுத்தப்பட்டது (160 of 1906; 300 of 1919). கோவிலுக்குத் தேவைப்பட்ட அளவு சந்தனத்தை வாங்க நிலமோ (682 of 1916), பணமோ (134 of 1915) கோவிலுக்குக் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டது. சிரிசைலம் கோவிலிலுள்ள ஒரு கல்வெட்டு சந்தனம் தேய்க்கும் அரைவைக் கல்லைப் பற்றிக் கூறுவதோடு, அது சந்தனச்சாந்து தயாரிக்கப்படுவ தற்குக் காணிக்கையாக அளிக்கப்பட்ட விவரத்தையும் எடுத்துக் கூறுகிறது. பெரியபுராணத்தில், மூர்த்தி நாயனார் திருவாலவாயில் சொக்கலிங்கப் பெருமானுக்குத் தினமும் மெய்ப்பூச்சுக்குச் சந்தனக் காப்பு அரைத்துக் கொடுக்கும் தம்முடைய திருப்பணிக்குச் சமணர் களால், இடையூறு நேர்ந்தபோது ''நட்டம் புரிவாரணி நற்றிரு மெய்ப் பூச்சின்று, முட்டுப் பரிசாயினுந் தேய்க்குங்கை முட்டாது'' என்று கூறி சந்தனப் பாறையில் தமது முழங்கையை வைத்துப் புறத்தோலும், எலும்பும், நரம்பும் கரைந்து தேயும்படி தேய்த்தார் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

சந்தனத்தோடு கலந்து கற்பூரத்தையும் இறையின் விக்ரகத் துக்குத் திருமுழுக்காட்டுதலுக்குப் பயன்படுத்திய விவரம் பற்றி ஒருசில கல்வெட்டுகள் கூறுகின்றன (442 of 1954/55). தினசரித் தெய்வீகச் சடங்குகளுக்கும் வழிபாட்டிற்கும் கற்பூரம் தேவைப் பட்டது (160 of 1906; 112 of 1939/40). கர்ப்பக்கிரகத்தில் உறைந்துள்ள இறையின் விக்ரகத்திற்கு முன் எரியும் கற்பூரத்தைக் காட்டுவது என்பதற்கு ஆகம ஒப்புதல் பெறப்பட்டுப் பல பெரிய கோவில்களில் நடைமுறையில் இருந்தது; இன்றும் இருந்து வருகிறது. இந்த வழக்கம் தமிழகக் கோவில்களில் எந்தக் காலகட்டத்தில் ஏற்பட்டது என்பது தெளிவாகத் தெரியவில்லை. இறையின் முன்னால் கற்பூர தீபத்தைக் காட்டுவதன்மூலம் தன்னையே இறையிடம் முழு அடிபணிதலுக்கு ஆட்படுத்தி விட்டோம் என்றும், அப்பொழுது 'தான்' என்ற உணர்வு மறைந்து விடுகிறது என்றும் பரவலாகக் கருதப்படுகிறது. ஆனால்

இதற்கான உண்மையான விளக்கம் பின்வருமாறு இருக்கலாம் என்று நான் கருதுகிறேன்: சிறுதெய்வ வழிபாடுகள் கிராமக் கோவில்களில் பொதுவாக இரவில்தான் நடைபெறும். இறைவழிபாட்டு நிகழ்வின் போது இறைவனைக் காட்ட தீவட்டிகள் / பந்தங்கள் பொருத்தப் படும். பல பெரிய கோவில்களில் இறைவன் உறைந்துள்ள கர்ப்பக் கிரகம் மிகுந்த இருட்டில் இருப்பதால், விக்ரகம், வழிபாடு செய்ய வருபவர்களுக்குச் சரியாகத் தெரிவதில்லை. விக்ரகம் சரியாகத் தெரியும் பொருட்டுதான் கற்பூரம் ஏற்றப்படுகிறது. மேலும் கற்பூரம் கொடுக்கும் தாவரம் தமிழகத் தாவரமல்ல. இந்த வழக்கம் இந்தியா வின் வடபகுதிகளில் (அங்கு கற்பூர மரம் வளர்கிறது) தோன்றி, ஆரியர்கள் மூலம் தமிழகக் கோவில்களையும் அடைந்திருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. நம்முடைய பண்பாட்டிற்கு வெளியில் இருந்து வந்து நம்முடன் ஒன்றிக் கலந்துவிட்ட தாவரப் பொருட்கள் பலவற்றில் கற்பூரமும் ஒன்றாகும்.

கோவில்களில் எரியும் விளக்குகளுக்கு எண்ணெயாக இடைக் காலத் தமிழகத்தில் பயன்படுத்தப்பட்ட முக்கியமான தாவர எண்ணெய் இலுப்பை விதை எண்ணெயாகும். இதற்கான சான்று களைப் பல்வேறு கல்வெட்டுகள் கூறுகின்றன. கோவிலின் எண்ணெய்த் தேவைகளுக்காக இலுப்பை மரங்களும், இலுப்பைத் தோப்புகளும் கோவில்களுக்குக் காணிக்கையாக அளிக்கப்பட்டதைப் பல கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. நல்லெண்ணெய் கோவில் விளக்குகளுக்குப் பயன்படுத்தப்படுவது கடந்த இரண்டு மூன்று நூற்றாண்டுகளாகத்தான் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இறைவழிபாட்டிற்காகக் கோவில்களுக்கு வருபவர்களுக்கு இறைவனுக்குப் படைக்கப்பட்ட பொருளைப் பிரசாதமாகக் கொடுப்பது பக்தி இயக்கத்திற்குப் பின்பு தமிழகத்தில் தோன்றிய வழக்கமாகும். பிரசாதமாக முதலில் பூக்களும், மற்ற தாவர உறுப்பு களும் (இலை, கனி, காய், விதை) கொடுக்கப்பட்டன. இறைவனுக்கு ஏற்ப கொடுக்கப்பட்ட தாவரங்கள் மாறின. சிவன் கோவில்களில் வில்வ இலையும், திருமால் கோவில்களில் துளசியும், விநாயகர் கோவில்களில் அருகம்புல்லும் பிரசாதப் பொருட்களாக விளங்கின. உணவுப் பொருட்கள் பிரசாதமாக வழங்கப்பட்டது எப்பொழுது தொடங்கியது என்பதற்கான சரியான ஆதாரங்கள் இல்லை. கிராமக் கோவில்களில் ஆடு, கோழி போன்ற பிராணிகள் பலி கொடுக்கப் பட்டுப் பின்னர் பிரசாதமாக எடுத்துச் செல்லப்பட்டன. இவ்வழக்கம் மிகத் தொன்மையானது. ஆனால், தாவர உணவுப் பொருட்கள், குறிப்பாக, தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்கள் கி.பி. 8-ஆம்

நூற்றாண்டுக்குப் பின்புதான் பிரசாதமாக வழங்கப்பட்டிருக்க வேண்டும். 1927ஆம் வருடம் கண்டறியப்பட்ட மிக அழிந்த நிலையி லிருந்த ஒரு கல்வெட்டில் (கல்வெட்டு எண் 127) சிவபெருமானுக்குப் பிடித்தமான 10 வகை உணவுகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது; ஆனால், விவரங்கள் முழுதும் சிதைந்து விட்டன. கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வரகுணபாண்டியனின் அம்பாசமுத்திரம் கல்வெட்டு ஒன்று, இறைவனுக்குப் படைக்கப்பட்ட உணவுப் பட்டியல் ஒன்றைக் குறிப்பிடுகிறது. இப்பட்டியலில் புளிக்கறி, புளுகுக்கறி, பொறிக்கறி, கும்மாயம் போன்ற உணவு வகைகள் காணப்படுகின்றன (EI.IX. எண். 10). கி.பி. 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வீரராஜேந்திர சோழனின் திருமுக்கூடல் கல்வெட்டு ஒன்று (EI.XXI. எண். 38) மேலே குறிப்பிட்ட உணவு வகைகளோடு மிளகுக்கறி என்ற மற்றொரு உணவு வகையையும் சேர்த்துக் கூறுகிறது. 16-ஆம் நூற்றாண்டு விஜய நகரப் பேரரசர்களின் கல்வெட்டுகளி லிருந்து பல்வேறு வகையான உணவு வகைகள் இறைவனுக்குப் படைக்கப்பட்டதை அறிகிறோம். இவற்றில் காய்கறிகள், கறியமுது, வாய்க்கமுது, நெய்யமுது, கூட்டு, மோர்க்குழம்பு, பச்சடி, புளியோ தரை, கடுகோரை (கடுகு சாதம்?), பொங்கல், அப்பம், வெது பொரி யப்பம், வடை, இட்டிலி, சுகியன், தத்தியோன்னம் (= தயிர்சாதம்) போன்றவை அடங்கும். இவற்றில் பல இன்று மறைந்து விட்டன; ஒரு சிலவற்றில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன; பல புதிய உணவு வகைகள் இன்றைய கோவில்களில் இறைவனுக்குப் படைக்கப்படுவதை யாவரும் அறிவர்.

கிராமங்களில் உள்ள சிறு தெய்வங்களுக்குப் படைக்கப்படும் உணவுகள் பற்றிய விவரங்களைப் பரமசிவன் (2001) தொகுத்து வழங்கியுள்ளார். பெரும்பாலும் மாமிச உணவுகள் படைக்கப்பட்டா லும், கூட்டமாகப் பொங்கலிட்டுப் படைப்பது மிகச் சாதாரணமான செயலாகும். சமைப்பதற்கான எரிபொருளாகப் பனை ஓலைகள் பயன்படுத்தப்பட்டன. குமரிமாவட்டச் சிறுதெய்வக் கோவில் திருவிழாக்களையே ''ஊட்டுக் கொடுத்தல்'' (= உணவு கொடுத்தல்) என்று அழைக்கின்றனர். திருவேட்டை (மேலும் விவரங்களுக்குப் பார்க்க, அடுத்த அத்தியாயம்) நடைபெற்ற பின் 'போரிட்ட'களைப்பு தீரத் தாய்த் தெய்வத்திற்கு உழுந்தஞ் சுண்டலும், பானகமும் (= பானைக் காரம்) படைக்கப்படும் (பானைக்காரம் = புளி + கருப்புக்கட்டி + நீர்).

VII

வேளாண் மற்றும் தோட்டத் தாவரங்களும் தமிழரும்

அ) வேளாண்மையின் பரிணாமம்

வரலாற்று அடிப்படையில் வேளாண் வாழ்வுமுறை தோன்றிய பரிணாமம் இங்கு முதலில் விளக்கப்பட வேண்டும். இதுவரை மேற் கொள்ளப்பட்ட கள ஆய்வுகள் மனிதன் அலைந்து திரிந்து வேட்டை யாடி வாழ்ந்த நாளிலிருந்து விவசாயத்திற்கு மாறிய பண்பாட்டு வளர்ச்சி நிலையைத் தெளிவுபடுத்துகின்றன. மனிதன் வேட்டையாடி உணவு சேகரித்து வந்த காலத்திற்கும், ஒரு குறிப்பிட்ட இடத்தில் குடியேறி நிலையாக மனித சமுதாயமாக வாழத் தொடங்கிய காலத்திற்கும் இடையேதான் வேளாண்மையும், பிராணி வளர்ப்பும் தோன்றின. இந்த இடைநிலை மாற்றம் படிப்படியாக நிகழ்ந்தது. மனிதர்கள் அதிக அளவில் படிப்படியாக வளர் தாவரங்களையும் (= பயிர்கள்) பிராணிகளையும் நம்பியிருக்க ஆரம்பித்தனர். இந்த மாற்றம் மெதுவாக நடைபெற்றதற்கு முக்கியக் காரணம் இயல்புத் தாவரங் களையும், பிராணிகளையும், பயிர்களாகவும், வளர்ப்புப் பிராணி களாகவும் மாற்றுவது அவ்வளவு எளிதான செயலாக அமையவில்லை என்பதுதான்; மேலும், இயல் தாவரங்களிலும் பிராணிகளிலும் எந்த ஒரு பண்பிலும் தேவைப்பட்ட மாற்றம் மற்ற பண்புகளின் மாற்றங் களோடு தொடர்புடையதாக அமைந்துவிட்டதும் இந்த மாற்றங்கள் மெதுவாக நடைபெற்றதற்கு முக்கியக் காரணமாகும். மேலும், பல வகையான இயல் தாவரங்களைத் தாங்கி நின்ற நிலமும் ஒரே வகையான பயிர்த் தாவரம் வளர்வதற்கு ஏற்ற மாற்றங்களைப் பெற வேண்டியிருந்தது.

ஏறத்தாழ 6,000 முதல் 10,000 ஆண்டுகளுக்கு முன்பு இயல் தாவரங்களைப் பயிர்த் தாவரமாக்கும் முயற்சிகள் உலகின் பல்வேறு பகுதிகளில் தனித்தனியாகச் சீரிய முறையில் தொடங்கப்பட்டன. எனினும், மனிதனின் மொத்த வரலாற்றுக் காலத்தை (அவன்

தோன்றியது முதல்) கணக்கில் எடுத்துக்கொண்டால், வேளாண்மை மிகவும் வேகமாக வளர்ந்த ஒரு செயல் என்பது தெளிவாகும். குழி தோண்டும் கழியும், மண்கிளரியும் (= களைக்கொத்தி) தான் உழுவதற் காகப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களாக (ஏர் பயன்பாட்டுக்கு முன்) கி.மு. 8000 முதல் கி.மு. 7000 ஆண்டு வரை திகழ்ந்தன என்று தெரிய வருகிறது. தமிழகத்தில் வேளாண்மை தொடங்கியபோது கூர்மை யான வேலை வைத்தே நிலத்தைக் கிண்டி உழுதார்கள் என்று தெரிய வருகிறது. வேலைப் பயன்படுத்தி விவசாயத்தை முதன்முதலில் நடத்தியவர்களுக்கு 'வேலாளர்' என்ற பெயர் கொடுக்கப்பட்ட தாகவும் இச்சொல் பின்னால் 'வேளாளர்' என்று திரிபடைந்ததாகவும் கருதப்படுகிறது (சண்முகசுந்தரம் 1970). கி.மு. 4,000 ஆண்டின்போது தான் அதிக அளவு வேளாண்மைச் செயல்கள் மிகத் தீவிரமாக மேற்கொள்ளத் தொடங்கப்பட்டன. அப்பொழுதுதான் சுமேரிய மக்கள் யூப்ரடிஸ்-டைக்ரிஸ் நதிப் பள்ளத்தாக்கில் விலங்குகுளைப் பயன்படுத்தி 'ஏர்' மூலம் உழ ஆரம்பித்தனர்.

சோவியத் நாட்டுத் தாவரவியல் நிபுணர் வாவிலாவ் (Vavilov 1949-50) 1922 ஆம் ஆண்டு முதல் 1950 ஆம் ஆண்டு வரை மேற்கொண்ட ஆய்வுகளின்படி தற்பொழுது உலகத்தின் பல்வேறு பகுதிகளில் பயிரிடப்பட்டு வரும் ஏறத்தாழ 350 பயிர்த் தாவரங்கள் உலகின் எட்டு மையங்களில்தான் பெருமளவு வளர்ப்புத் தாவரங்களாக மாற்றப் பட்டன என்று தெரிய வருகிறது. இவற்றில் ஒரு முக்கிய மையமாகக் கருதப்படுவது இந்திய மையமாகும். இங்கு 117 பயிர்த் தாவரங்கள் இயல்புத் தாவரங்களிலிருந்து தோற்றுவிக்கப்பட்டன என்று அவர் கருதுகிறார். இவற்றில் முக்கியமானவை அரிசி, உளுந்து, பாசிப் பயறு, கொள்ளு, இறக்கை அவரை, கொத்தவரை, கத்திரிக்காய், பாகல், சுரை, புடலை, ஏலக்காய், பீர்க்கம், வாழை, பருத்தி, இலவங்கப்பட்டை, இலந்தை, நாவல், மா, எலுமிச்சை, கடுகு, கரும்பு, சேம்பு, பலா போன்றவை. இவற்றில் ஒரு பாதியாவது (ஏறத்தாழ 50 பயிர்த் தாவரங்கள்) பண்டைய தமிழ் நாட்டில் தோன்றிய தற்கான ஆதாரங்கள் உள்ளன.

ஆ) தமிழகத்தில் வேளாண்மை

வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே தமிழகத்தின் பொருளாதாரம் பெருமளவு வேளாண்மையையே சார்ந்திருந்தது (Swamy 1973). ஒரு நாட்டின் பொருளாதாரத்தை நிர்ணயிப்பதில் அந் நாட்டின் விளைபொருட்கள் இன்றியமையாதன என்பதைக் கம்பர் பின்வருமாறு ஏற்கனவே சுட்டியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

''எள்ளும் ஏனலும் இறுங்கும் சாமையும்
கொள்ளும் கொள்ளையில் கொணரும் பண்டியும்
அள்ளல் ஓங்கு அளத்து அமுதின் பண்டியும்
தள்ளும் நீர்மையின் தலை மயங்குமே''

பண்டைய தமிழகத்தில் தற்போதைய தமிழ் நாட்டை விட இந்தச் சார்பு (அதாவது பொருளாதாரம் வேளாண்மையைச் சார்ந்திருந்தது) மிகவும் அதிகமாக இருந்தது. வேளாண்மைக்கு முதன்மையும் முக்கியத்துவமும் அளிக்கப்பட்டது [1]. வேளாண்மை ஒரு தூய்மை யான தொழிலாகவும் கருதப்பட்டது. பெரும்பான்மையான தமிழர் வேளாண் தொழிலைத் தம்முடைய தொழிலாகக் கொண்டிருந்தனர். நிலத்தை உழுபவர்கள் 'வேளாண் மைந்தர்கள்' என்றும் (BKI.ii, 138, கி.பி. *1093*), 'நிலத்தின் மைந்தர்கள்' (EC.VI.kd.28, கி.பி. *1153*) என்றும் குறிப்பிடப்பட்டனர் என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. வேளாண் நிலத்தைத்.தவறாகப் பயன்படுத்தியவர்கள் ''உங்களுடைய நிலம் தரிசு நிலமாக மாறட்டும்'' என்ற சாபத்தைப் பெற்றனர்.

பண்டைய தமிழகத்தில் அனைத்து நிலங்களும் அரசனுக்கே உரிமையானதாக இருந்தது. மூவேந்தர் காலத்திலும் இது தொடர்ந்தது. அரசன் பிராமணர்களுக்கும், கோவில்களுக்கும் வரியில்லா நிலங் களைக் கொடுத்ததாக (= பிரம்மதேயம்) வரலாறு கூறுகிறது. அப்படிக் கொடுக்கப்பட்ட நிலங்கள் தொடர்ந்து அரசனுடைய உண்மையான உரிமையாக இருந்ததா அல்லது அது கொடுக்கப்பட்டவர்களுக்கு முழுதும் சொந்தமாக்கப்பட்டதா என்ற விவரங்களை அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால், தமிழக வரலாற்றின் ஒரு காலக் கட்டத்தில் நிலங்கள் மக்களின் உரிமைகளாக மாறி அரசனுக்கு வரி மட்டும் கட்டும் நிலைமை தோன்றியது. ஏனெனில், வேளாண்மைக் காக நிலங்கள் கொடையாளிகளால், குறிப்பாக மன்னர்களால், நன்கொடையாக மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்ட செயல் பண்டைய மற்றும் இடைக்காலத் தமிழகத்தில் மிகவும் சாதாரண மாகக் காணப்பட்டது. நிலத்தைக் கொடையாகக் கொடுப்பதைவிட மிகச் சிறந்த கொடை எதுவுமில்லை, நிலம் மட்டுமே புவியின் வளத்தை வெளிப்படுத்தும் என்ற சொற்கள் கி.பி. 7ஆம் நூற்றாண்

---

1) *''சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்*
உழந்தும் உழவே தலை'' (குறள் 1031)
''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்'' (குறள் 1033)
''வேளாண் மாந்தர்க் குழுதூண் அல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி'' (தொல்.ஃபொருள்.மரபு.:81)

டைச் சேர்ந்த பல்லவர் கல்வெட்டு ஒன்றில் காணப்படுகின்றன. நிலத்தைத் தானமாகக் கொடுக்கும் நிகழ்ச்சி மிகவும் உற்சாகத் துடனும், ஆடம்பரத்துடனும், விளம்பரங்களுடனும் நடைபெறும்; குறிப்பாக, தானம் கொடுப்பவர்கள் அரசனாகவோ, செல்வந்தர் களாகவோ இருக்கும்போது.

தமிழகத்தின் ஒருசில பகுதி நிலங்கள் மிகவும் வளமானதாக வும், மற்ற பகுதி நிலங்கள் வரண்டும், வளமற்றதாகவும் தொடர்ந்து இருந்து வந்திருக்கின்றன. மருத நிலங்கள் மிகவும் வளமாகத் திகழ்ந் திருக்கின்றன என்பதைப் பல்வேறு தமிழ் நூல்கள் மூலம் அறிய லாம்[1]. மருதப் பகுதிக்கான செயல்பாடுகளாக உழுதல், களை எடுத்தல், அறுவடை செய்தல் மற்றும் கால்நடை கொண்டு போரடித்

---

1) ''நுரைத்தலைக் குரைபுனல் வரைப்பு அகம் புகு தொறும்
புனல் ஆடு மகளிர் கதுமெனக் குடைய
கூனிக் குயத்தின் வாய் நெல் அரிந்து
சூடு கோடாகப் பிறக்கி நாள்தொறும்
குன்று எனக் குவைஇய குன்றாங்குப்பை
கடுந் தெற்ற மூடையின் இடம் கெடக்கிடக்கும்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட்டு ஆக'' (பொருநர்.:240-248)
(கரிகாலன் நாட்டு மருதநில வளம் பற்றி இவ்வரிகள் குறிப்பிடுகின்றன)
''எருது எறி களமர் ஓதையொடு நல்யாழ்
மருதம் பண்ணி அசையினிர் கழிமின்
வெண்ணெல் அரிநர் தன்னுமை வெரிஇ
செங்கண் எருமை இனம்பிரி ஒருத்தல்
கனை செலல் முன்பொரு கதழ்ந்து வரல் போற்றி'' (மலை.:469-473)
(நன்னனின் தண்பணை நாட்டினைப் பற்றி முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் குறிப்பிடும் பாடல்)

''கருங்கதலிப் பெருங்குவளை களிற்றுக்கைம் முகங்காட்ட
மருங்கு வளர்கதிர்ச் செந்நெல் வயப்புரவி முகங்காட்ட
பெருஞ்சகடு தேர்காட்ட வினைஞர் ஆர்ப்பொலி பிறங்க
நெருங்கிய சாதுரங்கம் நிகர்ப்பனவாம் நிறை மருதம்''
(பெரி.பு.திருநாவுக்கரசு.:6)

(பெரியபுராணத்தில் திருநாவுக்கரசர் பிறந்த தொண்டைநாட்டின் மருத நிலப்பகுதியை சேக்கிழார் வருணனை செய்யும் பாடல்; வாழை மரங்கள் தூறுகளுடன்இருப்பது யானைப் படை போலவும், வயலிலுள்ள நெற்பயிர்கள் குதிரைப்படை போலவும், விளைந்த பொருட்களை ஏற்றிச் செல்லும் வண்டிகள் தேர்ப்படை போலவும், ஆரவாரத்துடன் குரல் எழுப்பி வயலில் பணிபுரிவோர் காலாட்படைப் போலவும் காட்சியளித்தன)

தல் போன்ற செயல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. தேன் சேகரித்தல், கிழங்குகளுக்காக நிலத்தைத் தோண்டுதல் மற்றும் வெட்டி எரித்துப் பயிரிடும் வேளாண் முறை (slash and burn method) ஆகியன மலைசார் (குறிஞ்சி) பகுதிக்கு உரிய வேளாண் செயல்களாகக் குறிப்பிடப் பட்டுள்ளன. முல்லைப் பகுதிகளில் வேளாண்மை, மேய்ச்சலோடு சேர்ந்தே பேசப்படுகிறது. மேய்ச்சல்காரர்களே உழவர்களாக விளங்கினர். இவர்கள் 'கொல்லை கோவலர்' எனப்பட்டனர் (நற்.ஃ266, 289). இங்கு தினையும் வரகும்தான் அதிகம் பயிரிடப்பட்டன[1].

பண்டைய தமிழகத்தில் நன்செய் (நஞ்சை) நிலம், புன்செய் (புஞ்சை) நிலம் என்ற பாகுபாடு இருந்தது. நன்செய் பகுதிகளில் நீர்வளம் சிறப்பாக இருந்தது. நதி நீர்ப்பாசனம் பல இடங்களில் சிறப்பாக இருந்தது; இங்கெல்லாம் நதியில் இருந்து கால்வாய்கள் மூலம் நீர் பெறப்பட்டு வேளாண்மை தழைத்தது. நீர்ப்பாசன வசதிகள் பண்டைய தமிழகத்தில் மிகச் சிறப்பாக இருந்தது பற்றிப் பரிபாடலின் 1, 2, 6, 7, 9, 10, 11 மற்றும் 16-ஆம் பாடல்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். நீர்ச் சேமிப்பு அமைப்புகளுக்குப் பல்வேறு பெயர்கள் வழக்கிலிருந்தன ஃ கயம், குளம், தடாகம், வாவி, பொய்கை, ஈரி, இடங்கு போன்றவை. கண்மாய் (கிணறுகள்), கேணி போன்றவையும் இருந்தன. நீர்ச் சேமிப்பு அமைப்புகளிலிருந்து நீரைப் பெறக் குருங்கை, மதகு போன்ற அமைப்புகள் கட்டப்பட்டன. நீர்ப்பாசன வசதிகளைப் பராமரிக்கக் குடிமராமத்து முறை வழக்கத்திலிருந்தது. எருதுகளைக் கொண்டு 'பன்றிப்பத்தர்' எனப்படும் ஆம்பி மூலமாகவும், சால், தொப்பரை மூலமாகவும், துலா அமைத்தும், பூட்டைப் பொறியின் மூலமாகவும், பயிர்களுக்கு நீர்பாய்ச்சும் முறை இருந்ததை மதுரைக்காஞ்சிப் பாடல் வரிகள் (90-93) தெளிவுபடுத்துகின்றன. புன்செய் அல்லது வறண்ட பகுதிகளில் வேளாண்மை மழையை நம்பிக் காணப்பட்டது. கல்வெட்டுகளில் இவை 'புன்புலம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளன.

புன்செய் நிலத்திற்கு வாங்கப்பட்ட வரியானது 'புன்கடமை', 'புன்பயிர் கடமை' என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. 'புன்' என்றால் 'இழிவான', 'மோசமான' என்ற பொருள். நிலம் நீர் வளமற்றது என்பதை இச்சொல் குறிக்கிறது. இங்கு பெரும்பாலும் சிறு தானிய வகைகள் பயிரிடப்பட்டன; இன்றும் பயிரிடப்படுகின்றன. புன்செய் (அல்லது புன்) பயிர்கள் தினை, வரகு, எள்,

1) ''விதையர் கொன்ற முதையல் பூழி
இடுமுறை நிரப்பிய ஈர் இலை வரகின்'' (நற்.ஃ121)

கேழ்வரகு, வழுதலை, சோளம், புல்லு (கம்பு), சாமை, இருங்கு, கொள்ளு, மொச்சைப் பயறு, அவரை, துவரை, தட்டாம் பயிறு, உழுந்து போன்றவை [1].

புன்செய் நிலங்கள் மழையை நம்பி இருந்ததால் வேளாண்மையின் முக்கியச் சடங்காக மழைக் கடவுள் வழிபடப்பட்டது. மழை பெய்யாததால் ஏற்பட்ட பஞ்சங்கள் பற்றிச் சங்க இலக்கியமும் பின்வந்த இலக்கியமும் கூறுகின்றன. எடுத்துக்காட்டாக, இறையனார் களவியலின் உரையில் உள்ள தகவல்களைக் குறிப்பிடலாம். கி.பி. 6ஆவது நூற்றாண்டு முதல் 13ஆம் நூற்றாண்டு வரை மழை சரியாகப் பெய்யாததால் பல பஞ்சங்கள் ஏற்பட்டன என்று தகவல்கள் உள்ளன. பெரியபுராணத்தில் பஞ்சம் பற்றிக் கூறப்படும் கதையில், மக்கள் மதச்சடங்குகளுக்காகச் சேமித்து வைத்திருந்த தானியங்களையும் உணவிற்காகப் பயன்படுத்திய செய்திகள் கூறப்பட்டுள்ளன. சோழர் காலத்தில் கி.பி. 1189, 1200 மற்றும் 1289 ஆண்டுகளில் பஞ்சங்கள் ஏற்பட்டன (Subramanian 1996).

இ) தமிழக வேளாண் முறைகள், நிகழ்வுகள், பழக்கங்கள்

வேளாண்மைக்குப் பயன்படுத்தப்பட்ட முக்கிய கருவி ஏர் அல்லது கலப்பை ஆகும். தற்போதைய ஏர் எவ்வாறு பரிணாமம் அடைந்தது என்பது பற்றிய விவரங்கள் சரியாகத் தெரியவில்லை. வேளாண்மையில் ஏரின் முக்கியத்துவத்தைத் தமிழர்கள் அறிந்திருந்த காரணத்தினாலேயே அது பலராமனின் சின்னமாகக் கருதப்பட்டது; அரசாங்கத்தின் சின்னமாகவும் கருதப்பட்டது. எடுத்துக்காட்டாக, கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அமோக வர்சாவின் சின்னமாக ஏர் திகழ்ந்தது என்பது கல்வெட்டுகள் மூலம் (530 of 1958/1959) அறியப்படுகிறது. உழவர்க்குரிய இலக்கணம் வகுக்கப்பட்ட 'கலப்பைநூல்' பற்றிய குறிப்பைச் சிறுபஞ்சமூலம் தருகிறது [2]. கலப்பை (கலம் + பை) 'இசைக் கலங்கள் இட்டபை' என்ற பொருளில் புறநானூற்றிலும் (205:10) உழுதலுக்குரிய கருவி என்ற பொருளில் பெரும்பாணாற்றுப் படையிலும் (188) பயின்று வந்துள்ளது. இக்கலப்பையின் அடிப்பகுதி

---

1) ''கருங்கால் வரகே இருங்கதிர்த்தினையே
சிறு கொடிக்கொள்ளே, பொறிகிளர் அவரையோடு
இன்னான் கல்லது உணாவும் இல்லை'' *(புறம்.:335:4-6)*

2) ''நன் புலத்து வையடக்கி, நாளும்மாடோபோற்றிப்
புன் புலத்தைச் செய்து எருப் போற்றியப்பின் - இன்புலத்தின்
பண்கலப்பை, என்றிவை பாறப்படுப்பான் உழவோன்
நுண்கலப்பை நூலோதுவார்'' *(சிறு.மூ.:60).*

(நிலத்தைக் கிளரும் பகுதி) 'கெழு' அல்லது 'கொழு' எனப்பட்டது. கெழு கூர்மையான இரும்புத் தகடு அல்லது இரும்புத் தண்டினாலானது. மருத நிலத்தை உழ கெழு பயன்படுத்தப்பட்டது பற்றி இலக்கியக் குறிப்புகள் உள்ளன[1]. ஒரு முழு ஏரின் உருவம் நாவலி கல்வெட்டு ஒன்றில் முதன்முதலில் பொறிக்கப்பட்டது (E.C.VII.ii). நிலத்தை உழும்போது ஏற்படும் கட்டிகளைக் களைய, உடைக்க, தளம்பு என்ற கருவியைப் பயன்படுத்தினர்[2]. உழுவதில் நான்கு படிகள் இருந்தன[3]. முதலில் உழுவது 'தரிசு உழவு', இரண்டாம் மற்றும் மூன்றாம் முறை உழுவது 'மறித்துழவு'; நைந்து சேறாக வேண்டுமென்றால் நான்காவது உழவு. உழவர்கள் நன்செய் நிலங்களில் சேற்று உழவும், புன்செய் நிலங்களில் புழுதி உழவும் செய்தனர். புழுதி விதை, சேற்றுவிதை என்ற இருவகை விதைப்பு முறைகளைக் கையாண்டனர். நிலத்தை நன்கு உழுது, உலரவிட்டு அதன் பிறகு நீர்பாய்ச்சி விதைகளைத் தெளிப்பர்; இது புழுதி விதை[4]. இது கோடை காலத்தில் அல்லது நீர் பற்றாக்குறைக் காலத்தில் நடைபெறும். சேற்று விதையில்[5] நிலத்தில் நீர் பாய்ச்சி, நன்கு உழுது சேறாக்கி, நீர் நிரம்பிய பிறகு விதைகளைத் தெளிப்பர் (துரையரசன் 2005). அகல உழுதலை விட ஆழ உழுதல் நல்லது என்று பண்டைய தமிழர் உணர்ந்திருந்தனர்[6].

---

1) *''கொல்லை உழுகெழு ஏய்ப்ப பல்லே'' (பொருநர்.:117)*
''...............நாஞ்சில்
உடுப்பு முக முழுக்கொழு மூழ்க ஊன்றி'' (பெரும்பாண்.:199-200)
''கொழுவல்சி'' (மது.கா.:14)
''நாஞ்சில் ஆடிய கொழுவரி மருங்கின்'' (பதிற்.:58:17)

2) *''மலங்கு மிளிர் செறுவிற் றளம்பு தடிந்திட்ட*
பழனவாளை'' (புறம்.:61:3-4)

3) *''முந்தித்தரிசடித்து முச்சாரியாய் மறித்து*
நைந்திடவே வேறு கலக்கி நயமாக நாலுழவு'' (செங்.ப.)

4) *''............கான் உழுகுறவர்*
சிலவித்து அகல இட்டென பல விளைந்து'' (நற்.:209)
(மலைக்காட்டில் குறவர் புழுதி விதை விதைத்ததை இவ்வரிகள் விவரிக்கின்றன)
''ஊன் கிழித்தன்ன செஞ்சுவல் நெடுஞ்சால்
வித்திய மருங்கின் விதை பல நாறி'' (அகம்.:194)

5) *''கயத்து இட்ட வித்து வறத்தின் சாவாது*
கழைக் கரும்பின் ஒலிக்குந்து'' (புறம்.:137)

6) *''உழுபகடு உரப்புவாரும்'' (கம்ப.:பால.நாட்.:18)*

உழுதல் தொடங்குவதற்கு நல்ல நாள் பார்த்து நற்சகுணம் பார்த்து ஏறு பூட்டுவர். இதனை 'நாளேரிடல்' அல்லது 'பொன்னேர் பூட்டுதல்' என்பர்[1]. தினை விதைக்கக் கொல்லையை உழத் தொடங்கு வோர் பொன்னேர் பூட்டும் முதல் உழவின் போது நொச்சித்தழை மாலையைச் சூடிக் கொள்வர் (கோவை இளஞ்சேரன் 1982). உழுதபின் விதைப்பர் அல்லது நாற்று நடுவர்; வயலில் மழைக் கடவுளை வணங்கி நாற்று நடுவர் என்பதைச் சேக்கிழார் விளக்குகிறார்[2]. நாற்று நடுபவரை 'நடுநர்' என்று நற்றிணை குறிப்பிடுகிறது. உழுத நிலத்தில் விதைப்பு செய்வதற்கும் ஒரு சடங்கினை மேற்கொண்டிருந்தனர். இச்சடங்கிற்கு 'வேலன் வெறியாடல்' என்று பெயர். திருமுருகாற்றுப் படை இச்சடங்கு பற்றி விவரிக்கிறது. பலியிடப்பட்ட மறியின் குருதி யில் விதைப்புக்குரிய விதைகளைத் தோய்த்தெடுத்து விதைப்பர். குருதியில் விதையினைத் தோய்த்தெடுத்தால் சத்தும் சாரமும் உள்ள தாக விளைச்சல் பெருகும் என்ற நம்பிக்கை நிலவி வந்தது (திரு முருகு.:70). உழுதபின் விதைத்த பயிரை ஒழுங்கு செய்வதற்கும், களை எடுப்பதற்கும் பல கிளைகளையுடைய ஒருவிதக் கலப்பை யைப் பயன்படுத்தினர்[3]. களைகளைப் பற்றியும் களை நீக்கும் முறை களைப் பற்றியும் பண்டைய தமிழர் அறிந்திருந்தனர். பயிர் நிலத்தில் நெய்தல், ஆம்பல் ஆகியவை களைகளாக வளரும். நன்செய் நிலத்தில் கோரை, நெய்தல் ஆகியவை களைகளாக வளரும். களை நீக்குவதை

---

1) ''..............கண்ணுள்ள
நாயகி வயல் நாளேரிடவே
மேவும் வெள்ளிறே பஞ்சமி மூலம்
மிதுனலக்கின வேளை நல்வேளை'' (கண்.ப.:81)
''இந்நேரம் பூசமென்றார் பஞ்சமியென்றார்
ஏற்ற சோமவாரம் என்றார், சோபன மென்றார்
நன்னேர மாகுமிந்த முகிழ்த்தந் தன்னில்
நரையானும் வலமாக விரையச் சென்று
பொன்னேறு பூட்டிவயல்............'' (திரு.ப.)

2) ''உழுத சால்மிக ஊறித்தெளிந்த சேறு
இழுது செய்யினுள் இந்திரத் தெய்வதம்
தொழுது நாற்று நடுவார் தொகுதியே
பழுதில் காவிரி நாட்டின் பரப்பெலாம்'' (பெரி.பு.திருநாட்டு.:12)

3) ''பூமி மயங்கப் பலவுழுது வித்திப்
பல்லியாடிய பல்கிளைச் செவ்விக்
களை கால் கழாலிற்றோடொலிபு நந்தி'' (புறம்.:120)

'கட்டல்' அல்லது 'கட்குதல்' என்று இலக்கியம் கூறும்[1]. உழுதல், பரம்படித்தல், உரமேற்றுதல், விதை விதைத்தல், நீர் பாய்ச்சுதல், பயிர்ப் பாதுகாப்பு, களையெடுத்தல், நாற்றுநடல், அறுவடை செய்தல் போன்ற வேளாண் செயல்கள் பற்றிய பல விவரங்களைப் பள்ளு இலக்கியங்கள் சிறப்பாகக் கூறுகின்றன (ஞானசேகரன் 2005).

தீவிர சாகுபடி பற்றிய முயற்சி, அதாவது பொதுவாக ஒரு அளவு மகசூல் பெறக்கூடிய நிலத்தில் ஏழு அளவு மகசூல் பெறக்கூடிய அளவுக்கு முயற்சிகள் மேற்கொண்டது பற்றி புறநானூற்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. சோழ மன்னன் கிள்ளி வளவனைப் பற்றிக் கூறும் ஆவூர் மூலங்கிழார் தீவிர சாகுபடி பற்றி மறைமுகமாகக் கூறுகிறார்[2].

பயிர்வளர்த்தலில் எருவிடுதல் மிக முக்கியமானது. 'ஏரினும் நன்றால் எருவிடுதல்' என்கிறது குறள் (1038). தொழு உரமும், தழை யுரமும் இடப்பட்டன[3]. குப்பை கூளங்கள் எருவாகப் பயன்படுத்தப் பட்டன[4]. சமையற்கட்டிலிருந்து வடித்து விடப்பட்டக் கழுநீரும் பயிர் வளர்ச்சிக்கு ஏற்ற எருநீராகப் பயன்படுத்தப்பட்டது பற்றிக் கம்பர் எடுத்துக் கூறுகிறார்[5]. மாற்றுப் பயிர் அல்லது சுழல்பயிர் (crop rotation) முறை கடைப்பிடிக்கப்பட்டதைத் தமிழ் இலக்கியங்கள் சுட்டுகின்றன. தினை அரிந்த தாள் நிலத்தின் மேல் மாற்றுப் பயிரான அவரையைப் பயிரிட்டனர்[6]. ''தொடர் பயிர்'' முறையும் இருந்தது.

---

1) ''சிறுமாண் நெய்தல் ஆம்ப லொடு கட்கும்''
''குவளை கட்கும்'' (புறம்.ஃ61)
''களைகால் கழீஇய பெரும்புனவரகின்'' (அகம்.ஃ194)

2) ''ஒரு பிடி படியும் சீறிடம்
எழுகளிறு புரக்கும் நாடு கிழவோயே'' (புறம்.ஃ40)
(ஒரு பெண் யானை படுத்திருக்கும் சிறிய இடத்தில் ஏழு ஆண் யானை களைப் பாதுகாக்கும் மகசூல் வளமுடைய நாட்டை உடையவனே என்பது இதன் பொருள் - வெள்ளைச்சாமி 2005).

3) ''தொறுத்த வயல் ஆரல் பிறழ்நவும்'' (பதிற்.ஃ13ஃ1) (இங்கு ''தொறுத்த வயல்'' என்பது ஆட்டுகிடை கட்டப்பட்ட வயல் என்று பொருள்)

4) ''தாது எரு மறுகின்'' (நற்.ஃ34ஃ53ஃ3; புறம்.ஃ31ஃ11, 215ஃ2, 311ஃ3, அகம்.ஃ165ஃ4; பதிற்.ஃ13ஃ17; மலை.ஃ531) (தாது எரு = பூ எரு)

5) ''முட்டில் அட்டில் முழங்குற ஆக்கிய
நெட்டுலைக் கழுநீர் நெடு நீத்தத்தால்
பட்டமென் கமுகோங்கு படப்பை போய்
நட்ட செந்நெலின் நாறு வளர்க்குமே'' (கம்ப.ஃபால.நாட்.26)

6) ''சிறுதினை கொய்த இருவி வெண்காற் காய்த்த அவரை'' (ஐங்.ஃ286)

இத்தகைய பயிர்கள் 'மறுகால்' அல்லது 'மறுதாப்புப்பயிர்' என்று அழைக்கப்பட்டன. தினையின் அடிக்கட்டையையும், கரும்பின் அடிக்கட்டையையும் அப்படியே விட்டு, அதிலிருந்து அடுத்த தலை முறைத் தினையையும், கரும்பையும் வளர்ப்பது மறுகால் பயிர்முறை எனப்படும். இதனைக் குறுந்தொகைப் பாடல் ஒன்றும் எடுத்துக் காட்டுகிறது. அறுவடை செய்தபின் விடப்படும் தினை மற்றும் வரகின் அடிக்கட்டை 'இருவி' எனப்பட்டது (''குரைத்தலைப்பாவை இருவி'' - குறு: 220:நற்.306). நெல்லின் அடிக்கட்டை 'பைங்கால்' மற்றும் 'அரிகால்' எனப்பட்டது. ஊடு பயிர் (inter-cropping) அல்லது கலப்புப் பயிர் முறையும் பண்டைய தமிழகத்தில் இருந்தது. தினைப் புனத்தில் தினையோடு கலந்து பருத்தியையும் விதைப்பர். தினை முதிர்ந்து கொய்யப்பட்ட பின்னர் பருத்தியை அறுவடை செய்வர் என்று மலைபடுகடாம் பாடல் வரிகள் (மலை.:122-123) கூறுகின்றன.

அறுவடை நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகள் தமிழ் இலக்கியப் பாடல்களில் காணப்படுகின்றன. நெல் அறுவடை பற்றிப் பெரும் பாணாற்றுப் படையில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. நெல் போரைக் களத்தில் குவித்து கடாக்களைவிட்டு நெல்லைப் பிரித் தெடுத்தனர்[1]. கடா விடுதல் விடியற்காலையில் நடைபெறும் (அகம்.:37:5). அறுவடைக் காலத்தில் களத்தில் போட்டிருந்த நெற் கதிர்களிலிருந்து வைக்கோலை ஒதுக்கிவிட்டு நெல்லை அம்பார மாகக் குவிப்பார்கள். பிறகு குவித்த நெல்லின் உச்சியில் நின்று உழவர்களின் காவலன், ''நாவலோ, நாவலோ'' என்று ஆரவாரத் துடன் முழங்குவான். இதற்கு 'நாளோதை' என்று பெயர் (சண்முக சுந்தரம் 1970).

வேளாண் நிலங்களின் எல்லைகளைக் குறிக்க நல்ல முறை களைத் தமிழர்கள் பயன்படுத்தியுள்ளனர். நிலங்களின் முனைகளில் எல்லைக் கற்கள் (bare stones) பொருத்தப்பட்டன. நிலத்தைச் சுற்றிக் கள்ளிப் பால் செடிகள் நடப்பட்டு உயிர்வேலி எழுப்பப்பட்டது. இதைப் பற்றிய செய்திகள் கி.பி. 8ஆம் நூற்றாண்டிலிருந்து பல கல்வெட்டுகளிலும் செப்புத் தகடுகளிலும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பல்லவ மன்னன் ஸ்கந்த சிஷ்யாவின் ராயக் கோட்டை செப்புத் தகடுகளைக் கூறலாம். முதலாம் ராஜராஜ சோழன் கல்வெட்டொன்றிலும் (SII.II. எண்.10, கி.பி. 1020) கள்ளிப் பால் செடிகள் வேளாண் நில வேலியாக நடப்பட்டது பற்றிய தகவல்

---

1) ''பைதுஅற விளைந்த பெருஞ்செந் நெல்லின்
தூம்புடைத் திரள் தாள் துமித்த வினைஞர்'' (பெரும்பாண்.:230-231)
(மேலும் பார்க்க : பெரும்பாண்.:237-238; அகம்.:266:2-3)

காணப்படுகிறது; இந்த நிலம் இருந்த கொல்லிப் பாக்கை என்ற மொத்த கிராமமே சுள்ளி மரங்களாலான வேலியால் சூழப்பட்டிருந்தது. தானமாகவோ, மானியமாகவோ கொடுக்கப்பட்ட வேளாண் நிலங்களின் நான்கு எல்லைகளும் அங்கு இயற்கையாக வாழ்ந்த தாவரங்களால் சுட்டப்பட்டன. எடுத்துக்காட்டாக, அஸ்திமல்லன் என்ற கங்க அரசனுடைய உதயேந்திரம் செப்புத் தகடுகளைக் கூறலாம் (பிரதிவிபதி II, கி.பி. 9-ஆம் நூற்றாண்டு). கடைக்கோட்டூர் மற்றும் உதயசந்திர மங்கலம் ஆகிய இரண்டு தனித்தனி கிராமங்களும் ஒன்றாக்கப்பட்டு, வீரநாராயணச்சேரி என்ற புதிய பெயர் கொடுக்கப்பட்டது என்றும், இந்தப் புதிய கிராமம் வேளாண்மைக்காக 'பிரம்ம தேய' மானியமாக வழங்கப்பட்டது என்றும் மேற்கூறிய செப்புத் தகடு தகவல் அளிக்கிறது. மேலும் இந்தப்புதிய கிராமப்பகுதியின் எல்லைகளாக பின்வரும் விவரங்கள் அளிக்கப்படுகின்றன (Swamy 1973): கிழக்கு எல்லைஃ பாலாற்றங்கரையில் இடையாற்றுக் கொல்லைக்குக் கிழக்கில் அமைந்த ஆலமரம் மற்றும் அதற்குச் சற்றுத் தெற்கில் அமைந்த கடுக்காய் மரம். தெற்கு எல்லைஃ எட்டி மரம்; இதற்குச் சற்று மேற்கே அமைந்த ஆலமரம்; மேலும் சற்று மேற்கே அமைந்த வேப்பமரம்; இதற்கும் சற்று மேற்கே அமைந்த இந்து என்ற படர் கொடி. வடக்கு எல்லை ஃ குராமரம், கல் அத்தி; இவற்றிற்குச் சற்றுக் கிழக்கே அமைந்த வாகை, நுணா மற்றும் காரை. வீரசோழனின் பிதாபுரம் செப்புத் தகடுகளும் இது போன்ற விவரங்களைக் கொடுக்கின்றன (EI.V. எண் 10). மோள வெள்ளி, பொன்னத் தேற்றம் மற்றும் ஆலமி ஆகிய மூன்று கிராமங்களும் ஒன்றாக்கப்பட்டு வீரசோழ சதுர்வேதி மங்கலம் என்ற ஒரே கிராமமாக மாற்றப்பட்டது. இக்கிராமம் 500 பட்டர்களுக்கும், வேறுசில குறிப்பிட்ட தொழில் செய்யும் மக்களுக்கும் வேளாண்மைக்காக நன்கொடையாக வழங்கப்பட்டது. இந்த நிலத்தின் எல்லைகளாகப் பின்வரும் தாவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன ஃ அரி, கோரை, குடைவேலம், இலவு, கருவேலம், திருக்கள்ளி (திருகுகள்ளி), புளியமரம்?, அத்தி, ஈச்சமரம், இலந்தை, வன்னி, கல் அத்தி, காரை, எட்டி, நெல்லி, ஒதியன், புங்கன், அரசமரம், கரும்பு, பனை, ஆவாரை, பாலை, விளாமரம், கடுக்காய், வேப்பமரம், வேங்கை, குமிழ், கருங்காலி, பூவங்கொட்டை, செங்கருங்காலி, ஆதொண்டை, வெட்டாரு?, சிகுரெங்கு?, சிங்கனிகா?, ட்ங்கு?, டுரோன்சி?, கொட்டு?, மோவாலி?, மோவி? போன்றவை[1].

---

1) கேள்விக்குறி சுட்டியுள்ள தாவரங்களின் தற்காலத் தாவரப் பெயர்களைச் சரியாக அறிய முடியவில்லை.

ஈ) வேளாண்பயிர்கள்

பயிர் என்ற சொல் சங்க காலத்தில் இருந்தது. இது எத்தகைய தாவரங்களைக் குறித்தது என்பது பற்றி ஏற்கனவே இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்பொழுது உணவுக்காகவோ வேறு மனிதத் தேவைக்காகவோ மனிதனால் வளர்க்கப்படும் தாவரங் களுக்குத்தான் பயிர் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. சங்க காலத்திற்குப் பின் இச் சொல்லுக்கு மாற்றாகப் 'பைங்கூழ்' என்ற சொல் கையாளப்பட்டதாக நெடுஞ்செழியன் (2005) கூறுகிறார்.

சங்க இலக்கியத்திலிருந்தும், சங்கம் மருவிய கால இலக்கியத்தி லிருந்தும், கல்வெட்டுகளிலிருந்தும் கி.பி. 17ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் பயிரிடப்பட்டு வந்த பல்வேறு பயிர்த் தாவரங்கள் பற்றிய செய்திகளை நாம் அறிய முடிகிறது; இந்தப் பயிர்த் தாவரங்கள் பயிரிடப்பட்ட நிலங்களின் அளவு காலத்திற்கேற்ப எவ்வாறு மாறு தல் அடைந்தது என்ற விவரங்கள் பற்றியும் ஓரளவு அறிய முடிகிறது. இவற்றில் முக்கியப் பயிர்த் தாவரங்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

i) **நெல் :** நெல் என்ற சொல் முழுதானியத்தையும், அரிசி என்ற சொல் அதிலிருந்து உமிநீக்கிப் பெறப்படும் உணவுப் பொருளையும் குறித்தன. *Oryza sativa* என்ற தாவரப்பெயர் கொண்ட நெல், தற்போது காணப்படுவது போலவே தமிழகத்தின் பல்வேறு வரலாற்றுக் காலங்களில் மிகமிக முக்கியமான பயிராகத் திகழ்ந்து வந்திருக்கிறது (Allchin 1969). தென்கிழக்கு ஆசியாவின் மிகப் பழமையான பயிரும் இதுதான் (Swamy 1973). இந்தியாவிலும், சீனாவிலும் சேர்ந்து ஏறத்தாழ 5000 முதல் 6500 நெல் வகைகள் பன்னெடுங்காலமாகவே பயிரிடப் பட்டு வந்ததால், இப்பகுதியில்தான் நெற்பயிர் தோன்றியிருக்க வேண்டும் என்பதைப் பல வேளாண் மற்றும் தாவர ஆராய்ச்சியாளர் கள் வலியுறுத்துகிறார்கள். வாட் (Watt 1891/1892) என்பவரின் கூற்றுப்படி நெல் சாகுபடி கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன்பேயே இந்தியாவில் (தமிழகம் உட்பட) வளர்ச்சி அடைந்திருக்க வேண்டும். அந்தக் காலகட்டத்தில் இந்தியாவில் நெல் இருந்ததற்கான சான்றுகள் பல கிடைக்கப் பெற்றுள்ளன. கோஷ் (Ghosh 1961) என்பவரின் ஆய்வுக் கட்டுரையில் இருந்து எடுக்கப்பட்ட விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ள அட்டவணையில் (அட்டவணை VII.1) சுட்டப்பட்டுள்ளன (மேலும் பார்க்க, Swamy, 1973).

அட்டவணை VII.1. அகழ்வாராய்ச்சி மூலம் நெல்லின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இந்தியப் பகுதிகள், அந்த எச்சங்களின் ஏறத்தாழ வயது

காலிபங்கன், இராஜஸ்தான்	கி.மு.3000?
இலோதல், குஜராத்	கி.மு. 2300
ஆதிச்சநல்லூர், தமிழ்நாடு	கி.மு.2000?-200
இரங்பூர், குஜராத்	கி.மு. 2000-1500
நவ்தாதோலி, மத்தியப்பிரதேசம்	கி.மு. 1500-1000
அஸ்தினாபூர், உத்திரப்பிரதேசம்	கி.மு. 1000-800
இருபார், பஞ்சாப்	கி.மு. 600-200
சிப்ரா ஆற்றுப்படுகை, மத்தியபிரதேசம்	கி.மு. 500
நக்டா, மத்தியபிரதேசம்	கி.மு. 500-200
பாடலிபுரம், பீகார்	கி.மு. 405-115
குன்னத்தூர், தமிழ்நாடு	கி.மு.300
கோரகோட், பஞ்சாப்	கி.மு. 100
கோலாப்பூர், மகாராஷ்டிரா	கி.பி. 100
இரங்கமகால், இராஜஸ்தான்	கி.பி. 100-400
பெரியபுரம், கேரளா	கி.பி. முதல் சில நூற்றாண்டுகள்
நிவாசா, மகாராஷ்டிரா	கி.பி. 1318-1759

அகழ்வாராய்ச்சித் தகவல்களைத் தவிர நெல்லின் பழமை குறித்து கணக்கற்ற இலக்கிய மற்றும் கல்வெட்டு ஆதாரங்களும் உள்ளன. பல்வேறு நெல் ரகங்களில் மகாசாலி என்ற ரகம் மகத நாட்டில் மட்டும் பயிரிடப்பட்டதாக கி.பி. 6ஆம் நூற்றாண்டில் இந்தியப் பயணம் மேற்கொண்ட யுவான் சுவாங் கூறியுள்ளார். ஆனால், இதே ரகம் கி.பி. 1200ல் மணகோலி மற்றும் அப்பலூரில் பயிரிடப்பட்டிருப்பதற்கான கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன (முறையே EI.V. எண்கள் 3 மற்றும் 25). எனவே, 13ஆம் நூற்றாண்டு வாக்கில் மகாசாலி ரக நெல் சாகுபடி வடஇந்தியாவிலிருந்து தென்னிந்தியாவை அடைந்து விட்டதாகக் கொள்ளலாம். ஆனால் மகாசாலிக்கு இணையான 'சாலி' என்ற ரகம் சங்க காலத்தில் பயிரிடப் பட்டதற்கான இலக்கியச் சான்றுகள் உள்ளன [1].

1) ''சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட்டாக
காவிரி புரக்கும் நாடு கிழவோயே'' (பொருநர்.ஃ246-248)

கி.பி. 13ஆம் நூற்றாண்டு சோழர் காலத்துக் கல்வெட்டு ஒன்று 'கார்' என்ற நெல் ரகம் தமிழகத்தில் பயிரிடப்பட்டதாகத் தெரிவிக்கிறது (SII., II. எண் 22) கி.பி. 1130 ஆம் வருடத்தைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று 'காடாக்கி' என்ற நெல் வகையைப் பற்றிக் குறிப்பிடுகிறது (EC.IV.kp.18). இதன் பொருள் 'காடு' ஆகும். எனவே, இந்த வகை நெல் ஒரு காட்டு வகை அல்லது இயல்வகை (wild variety) நெல்லாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது (Swamy 1973).

பள்ளு நூல்களில் 150க்கும் மேற்பட்ட நெல் ரகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த நெல் ரகங்களுக்கேற்றவாறான தொழில் நுட்பங்களை ஆய்ந்தறிந்து, பயன்படுத்தி அதிக மகசூலைப் பெற்றனர் தமிழர். இவற்றிற்கு சிறப்பான பெயர்களையும் கொடுத்தனர்ஃ நெடுமூக்கன், மூக்கன்சம்பா, மூக்கன்நெல், ஆனைக்கொம்பு சம்பா, கோதுமைச் சம்பா, கார் நெல், கார்த்திகைச் சம்பா, சித்திரைக் காலி, சித்திரை வண்ணன், செம்பவளச் சம்பா, மாணிக்கச் சம்பா, மாணிக்க மாலை, முத்துச் சம்பா, முத்து வெள்ளை, முத்து மாலை, முத்து விளங்கி, பொற்காலி, பொற்பானை, பொன்னாயகன், கருங்குவை, கருப்பன், குங்குமச் சம்பா, குங்குமப் பாளை, பாற்கடுக்கன் (அல்லது) பாரக் கடுக்கன், வெள்ளை முடங்கன், பெருவெள்ளை, முழுவெள்ளை, தும்பைப் பாசி, பச்சைப் பெருமாள், செஞ்சம்பா, செந்தாழை, செம்மிளகி, தில்லைக் கூத்தன், வீதிவிடங்கன், திருவரங்கன், அரிநாயகம், அழகிய வாணன், தில்லை நாயகன், வங்கி நாராயணன், அழகிய மணவாளன், குற்றாலன், அரியநாயகன், சிறை மீட்டான், காஞ்சனங் கொண்டான், மதுரைவாணன், கத்தூரி வாணன், செண்டலங்காரன், திரைகொண்டான், ராஜராஜ வாணன், கொங்காரு, பாண்டிச் சம்பா, மதுரை, மதுரை வேலை, திருநெல்வேலி, திருநெல் வேலி நாதன், தில்லை, தில்லைக் கூத்தன், கற்பூரப்பாளை (தென்னம் பாளை வடிவமுள்ள நெல்), புனுகுச்சம்பா (= புழுகுச்சம்பா), அமிர்தஞ்சம்பா, அழகுச்சம்பா, அன்னதானி, எதிர்ச்சம்பா, புத்தன் வாரி, இராமபாணம், சீதாபோகம், அர்சுனம், குறுவை, குறுவைக் கிளை, குறுவைக் கிளையான் என்ற பெயர்களால் நெல் இரகங்கள் விளங்கின.

பள்ளு இலக்கியங்களில் பெரும்பான்மையாக இருபோக நெல் சாகுபடி செய்யப்பட்டது குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பா வகை நெல் ரகங்கள் ஒரு போகத்திலும், குறுவை நெல் ரகங்கள் மற்றொரு போகத்திலும் பயிரிடப்பட்டன.

தொண்டை நாட்டில் (காஞ்சி தலைநகரம்) பாலாற்றின் நீரால் செந்நெல்லும், கரும்பும், கமுகும், தென்னையும், வாழையும்

பயிராகியது [1]. தமிழில் மலை நெல் 'ஐவனம்' என்று அழைக்கப் பட்டது. ஐவனநெல் மலைவாழ் மக்களால் பயிரிடப்பட்ட முக்கிய மான நெல் ரகமாகும் [2]. தொண்டை மண்டலத்திலிருந்த காடுகளை யெல்லாம் அழித்து, அழகிய நெல்வயல்களாக மாற்றியவர்கள் பல்லவர்கள் என்று வரலாறு குறிப்பிடுகிறது. இச்செயலில் ஈடுபட்ட வர்களை 'காடுவெட்டிகள்' என்ற பட்டப் பெயரால் அழைத்தனர்.

வீரமாமுனிவரின் (கி.பி. 18ஆம் நூற்றாண்டு) சதுரகராதியில் நெல்லைப் பற்றிக் கூறப்பட்டுள்ள பின்வரும் தகவல்கள் குறிப்பிடத் தக்கவை : மூவருட நெல் அசம் என்றும், தூற்றாநெல் பொலி மற்றும் பொங்கழி என்றும், மலைநெல் ஐவனம் என்றும், தோரை நெல் இயவை என்றும், நன்னெல்கள் செஞ்சாலி, செந்நெல், சொல், தோரை, சாலி, வலி, விரிஇ என்ற பெயர்களாலும் அழைக்கப்படும்.

பல தமிழ் அறிஞர்கள் நெல்லின் தாவரப் பெயரான *Oryza sativa* என்பதில் உள்ள *Oryza* என்ற பேரினப் பெயர் (generic name) 'அரிசி' என்ற தமிழ்ச் சொல்லின் வழி வந்தது என்று கருதுகிறார்கள். பண்டைய கிரேக்கர்களுக்கு நெல் தாவரம் 'ஒருசா' அல்லது 'ஒருசோன்' (oruza/oruzon) என்ற பெயரால் அறியப்பட்டது. பண்டைய அராபியர்கள் நெல் தாவரத்தை அரௌஸ் அல்லது ரெய்ஸ் (arous/raiz) என்றழைத்தனர். கி.மு. 400ஆம் ஆண்டில் மாவீரன் அலெக்சாண்டர் மேற்கொண்ட இந்தியப் படையெடுப்பின் பின்புதான் நெல்/அரிசி பற்றி கிரேக்கர்களுக்கும் மற்ற மத்தியத்தரைக்கடல் நாட்டு மக்களுக்கும் தெரியவந்தது. இதன் பின்தான் பாக்டிரியா (Bactria),

---

1) ''ஓங்குசெந் நெல்லின் புடையன உயர்கழைக் கரும்பு
பூங்கரும்பு அயல் மிடைவன பூகம் அப்பூகம்
பாங்குநீள் குலைத் தெங்கு பைங்கதலி வண்பலவு
தூங்கு தீங்கனிச் சூதநீர் வேலிய சோலை'' (பெரி.பு.ஃதிருக்குறிப்பு.27)

2) ''ஐவனம் காவலர் பெய்தீ நந்தின்
ஒளிதிகழ் திருந்துமணி நளியிரு ளகற்றும்
வன்புல நாடன் வயமான்பிட்டன்'' (புறம்.ஃ18)
(வடமவண்ணக்கன் தாமோதரனார் பிட்டங் கொற்றனைப் பாடியது)

''மான்நின்று விளிக்கும்
கானமும் எயினர் கடமும் கடந்தால்
ஐவன வெண்ணெலும் அறைக்கட் கரும்பும்
கொய்பூந் தினையும் கொழும்புன வரகும்''
(சிலம்பு.ஃகாடுகாண்காதை.78-81)
''பால்வார்பு கெழீஇப் பல்கவர் வழிபோழ்வு
வாலிதின் விளைந்தன ஐவன வெண்ணெல்'' (மலை.ஃ114-115)

பாபிலோனியா, சுசீடா போன்ற இடங்களில் நெல் பயிரிடப்பட்டது. கி.மு. 400-க்குப் பின் நெல் யூப்ரடிஸ் பள்ளத்தாக்கிலும், சிரியாவிலும் பயிரிடப்பட்டதற்கான ஆதாரங்கள் உள்ளன. இந்த இரண்டு இடங்களிலிருந்தும் நெல் பயிரிடுதல் இத்தாலி, ஸ்பெயின் மற்றும் ஒருசில கடலோர மத்தியத்தரைக்கடல் நாடுகளுக்கும் பரவியது. *Oryza sativa* என்று நெல்லுக்குப் பெயர் கொடுத்த இலின்னேயஸ் (Linnaeus), தான் கொடுத்த பெயரை ஆப்ரிக்க மற்றும் கிரேக்க நாடுகளில் நிலவிய நெல்லின் பெயரின் அடிப்படையில்தான் வழங்கி இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. இந்தப் பெயர் 'அரிசி' என்ற தமிழ்ப் பெயரின் அடிப்படையில் வைக்கப்படவில்லை என்பதும் தெளிவாகிறது. ஆனால், நெல்லை குறிக்கும் ஆப்ரிக்க/கிரேக்கப் பெயர்களே 'அரிசி' என்ற தமிழ்ச் சொல்லின் அடிப்படையில் வந்திருக்க அதிக வாய்ப்புகள் உள்ளன.

செய்த வேலைக்கு ஈடாகச் சம்பா நெல்லும், அளத்தில் விளைந்த உப்பும் கொடுத்த வழக்கத்தினால் தான் 'சம்பளம்' (சம்பா + அளம்) என்ற சொல் பிறந்தது என்பர் (பரமசிவன் 2001).

ii) **வாழை :** தமிழகத்தில் தொன்றுதொட்டுப் பயிரிடப் பட்டுவரும் வேளாண் தாவரம் வாழையாகும். நெல், கரும்போடு முதலிடம் வகிக்கும் பயிர்த் தாவரமாகும் வாழை. முக்கனிகளில் ஒன்றாகக் கருதப்படுவது இதன் கனியாகும். தமிழகச் சமுதாயத்துடன் பின்னிப் பிணைந்துவிட்ட வேளாண் தாவரங்களில் இதுவும் ஒன்று. வாழையின் அனைத்து உறுப்புகளும் பயன்படக் கூடியவை. வாழையைக் கிழங்கு மூலம் பயிரிடுவார்கள். வாழையில் பல ரகங்கள் தமிழகத்தில் காணப்படுகின்றன.

iii) **தென்னை :** *Cocos nucifera* என்ற தாவரப் பெயர் கொண்ட தென்னை தமிழகத்தில் பன்னெடுங்காலமாகவே பயிரிடப்படும் தாவரமாகும். சங்கம் மற்றும் சங்கம் மருவிய காலத்தில் தென்னை தெங்கு என்றே அழைக்கப்பட்டது. தென்னை பற்றிய எந்த விவரமும் வேதகால மக்களுக்குத் தெரியவில்லை என்பது தெளிவு. ஏறத்தாழ கி.பி. 9/10 ஆம் நூற்றாண்டுகளுக்குப் பின்புதான் தென்னை அதிக அளவு பயிரிடப்பட ஆரம்பித்தது.

iv) **கரும்பு :** கரும்பு தொன்றுதொட்டுத் தமிழரால் பேணி வளர்க்கப்படும் பயிர்த் தாவரமாகும். கரும்பிலிருந்து வெல்லமும் / சர்க்கரையும் (நாட்டுச் சர்க்கரையும்) பண்டைய தமிழகத்தில் எடுக்கப் பட்டன. கருப்பஞ்சாறு அருந்துவதற்கு இனிமையாக இருப்பதால் ''தீங்கரும்பினும் தித்திக்கும் இன்சொலார்'' என்று கம்பர் குறிப் பிட்டார். மிகவும் பெறற்கரிய பயிர்களில் கரும்பும் ஒன்று என்பதைப்

பின்வரும் புறநானூற்று அடிகள் சுட்டுகின்றன: ''அமரர்ப் பேணியும், ஆவுதி அருத்தியும், அரும்பெறல் மரபில் கரும்பிவண் தந்தும்''. மேலும் நான்மணிக்கடிகை ஆசிரியர் ''நிலத்திற்கணி என்ப நெல்லும் கரும்பும்'' என்று குறிப்பிடுவதற்கிணங்க, பயிர் நிலத்திற்கு நெல்லும், கரும்பும் அணி செய்கின்றன.

v) **பனை :** இதன் தாவரப் பெயர் *Borassus flabellifer*. தமிழகத்திற்குப் பன்னெடுங்காலமாகப் பழக்கமான இந்தத் தாவரம், தமிழகத்திற்கே உரிய இயல் தாவரமாகும். திராவிட மொழிகளின், குறிப்பாகத் தமிழின், எழுத்துக்கள் தோன்றிய காலத்திலிருந்தே பனை ஓலையில்தான் அவை எழுதப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. தமிழர் பனை மரங்களை விரும்பி வளர்த்தனர் என்பது புறநானூற்றின் *(85)* பின்வரும் வரிகளால் தெளிவாகும் :

''அஞ்சிலம் பொலிப்ப வோடி யெம்மில்
முழாவரைப் போந்தை பொருந்தி நின்று
யான் கண்டன வனாடா குதலே''.

அபிர வாசுசேனாவின் கல்வெட்டு ஒன்றில் *(கி.பி. 3/4ம் நூற்றாண்டு)* அஷ்டபுஜசுவாமியின் விக்ரகத்தைக் கோவிலில் நிர்மாணிக்கும் போது அக்கோவிலில் பனைமரங்கள் அடங்கிய தோட்டம் அமைப்பது பற்றிய விவரம் காணப்படுகிறது (81 of 1959/1960).

vi) **கேழ்வரகு அல்லது ராகி :** தமிழகத்தில் மட்டுமல்லாமல் இந்தியாவின் பல வரண்ட பகுதிகளில் இருந்த (தற்பொழுதும் உள்ள) மக்களுக்கு முக்கியமான உணவாகத் திகழ்ந்தது கேழ்வரகு ஆகும். இதன் தாவரப் பெயர் *Eleusine coracana* ஆகும். இந்தத் தாவரத்தைப் பற்றிய முதல் செய்தி கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆகவ மல்லன் என்ற சாளுக்கிய நாட்டு மன்னனின் கல்வெட்டு ஒன்றில்தான் காணப்படுகிறது. கேழ்வரகில் இருந்து தயாரிக்கப்பட்ட கஞ்சியைத் தவறாகப் பயன்படுத்துபவர்கள் நல்ல கவுண்டர்கள் என்ற குறுநிலத் தலைவர்களால் தண்டனைக்குள்ளாவார்கள் என்கிறது இந்தக் கல்வெட்டு (EC.II.sb.477). கி.பி. *13*-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டிய நாட்டுக் கல்வெட்டுகள் பல, கேழ்வரகு ஒரு வேளாண் பயிராகப் பயிரிடப்பட்டதைப் பற்றிய தகவல்களை அளிக்கின்றன (EI.XXIV. எண். 22 66 of 1916; 109 of 1904 போன்றவை).

vii) **ஆமணக்கு :** இதன் தாவரப் பெயர் *Ricinus communis*. இது கி.பி. *16*ஆம் நூற்றாண்டுக்குப் பின்புதான் தமிழகத்தில் பயிரிடப்பட்டது. *16*ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விஜயநகர அரசர்களின் கல்வெட்டுகள் ஆமணக்கு ஒரு முக்கிய வாணிபப் பொருள் என்று தெரிவிக்கின்றன.

viii) **துவரம்பருப்பு :** *Cajanus cajan* என்ற இந்தப் பயிர் தமிழகத்தில் கி.பி. 8 அல்லது 9-ஆம் நூற்றாண்டுக்குப் பின்பு பயிரிடப் பட்ட ஒரு பருப்பு வகைத் தாவரமாகும். அதற்கு முன் இது தமிழகத் தில் பயன்பாட்டில் இல்லை. எனினும் துவரை என்ற இதன் தமிழ்ப் பெயர் மற்ற இந்தியப் பெயர்களைவிட பழமையானதாகக் கருதப் படுகிறது. இந்தியாவில் தோன்றிய இப்பயிரின் (De 1974) தொல்லுயிர் எச்சங்கள் (கி.மு. 200 - கி.பி. 300) (Kajale 1974) இந்தியாவின் ஒருசில பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன (Saraswat 1980).

ix) **வெற்றிலை மற்றும் பாக்கு :** *Piper betle* எனப்படும் வெற்றிலைக் கொடியும், *Areca catechu* எனப்படும் பாக்கு (கமுகு) மரமும் பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் பயிரிடப்பட்ட தாவரங் களாகும். சங்க இலக்கியத்தில் கமுகு மரங்கள் பற்றிய பல செய்திகள் காணப்படுகின்றன என்றாலும் கி.பி. 8 முதல் 10 ஆம் நூற்றாண்டுகள் வரையிலான கல்வெட்டுகளிலிருந்து வெற்றிலைக் கொடியும், பாக்கு மரமும் அதிகமாகத் தென்கன்னடப் பகுதியிலும் பெல்லாரியிலும் பயிரிடப்பட்டதாகவும், அதன் பின்பு வந்த மூன்று நூற்றாண்டுகளில் தான் மற்ற இடங்களுக்கும், குறிப்பாகத் தமிழகத்திற்கும், அதிக அளவில் பரவியது என்றும் தெரிய வருகிறது. இதன் பின் வந்த கல் வெட்டுகள் பலவற்றில் இந்த இரண்டு பயிர்கள் பற்றிய பல விவரங் கள் கூறப்பட்டுள்ளன. கி.பி. 1050-ஆம் வருடத்திய கல்வெட்டு (SII.II.(i) எண் 107) ஒன்று கடவுளின் சேவைக்காகக் கொடுக்கப்பட்ட பாக்கு மரவரிசைகள் பற்றிக் குறிப்பிடுகிறது. ஒவ்வொரு கட்டு வெற்றிலைக்கும் ஒரு காணி விலை பெற்றுக் கொண்டு அவற்றை 500 வியாபாரிகள் விற்றதாக மற்றுமொரு கல்வெட்டு கூறுகிறது (SII.XI.(i) எண் 141, கி.பி. 1079). தென் ஆர்க்காட்டில் கிடைத்த கோப்பெருஞ் சிங்கனுடைய கல்வெட்டில், அவன் அரசாட்சி ஏற்ற 26வது வருடத் தில் கோவிலில் இருந்து நீர்ப்பாசன வசதி பாக்குத் தாவரங்கள் வளர்க்க சேனாட்டரையர் என்பவருக்குக் கொடுக்கப்பட்டதாகக் கூறுகிறது (433 of 1921, ஏறக்குறைய கி.பி. 1245).

x) **உளுந்து :** பண்டைய இலக்கியத்தில் இப்பயிர் 'உழுந்து' என்று அழைக்கப்பட்டது. இது தமிழகத்தில் பரவலாகப் பயிரிடப் பட்ட ஒரு பயிராகும்[1] என்பதற்குச் சங்க இலக்கியப் பாடல்கள் சான்று

---

1) ''............உழுந்தின்
அகல இலை அகல வீசி'' (நற்.:89:5-6)
''பூழ்க்கால் அன்ன செங்கால் உழுந்தின்'' (குறு.:68:1)
''உழுந்துடைக் கழுந்தின்'' (குறு.:384:1)
''உழுந்து தலைப் பெய்த கொழுங்களி மிதவை'' (அகம்.:86:1)

பகர்கின்றன. இதேபோன்று பண்டைய வடமொழி மருத்துவ நூல்களிலும் இத்தாவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. உளுந்தைப் பற்றிச் சங்க இலக்கியங்களில் ஒரு குறிப்பும் இல்லை என்று அச்சையா தவறாகக் கூறுகிறார் (Achaya 1998). கி.மு. 1500-1000 காலத்தைச் சேர்ந்த இதன் தொல் எச்சங்கள் இந்தியாவின் நவ்தாதோலி (Navdatoli) (மத்திய இந்தியா) பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன (Jain and Mehra 1980) என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

xi) **புகையிலை :** இதன் தாவரப் பெயர் *Nicotiana tabacum* 16-ஆம் நூற்றாண்டின் பின் பகுதியிலிருந்து தான் புகையிலை இந்தியாவில் பயிரிடப்படுகிறது (Gode 1961).

xii) **பயறு :** இது தமிழ் நாட்டில் பன்னெடுங்காலமாகவே பயிரிடப்பட்டு வருகிறது [1]. இதன் தொல்லுயிர் எச்சங்கள் (கி.மு. 1500-1000) மத்திய இந்தியாவின் நவ்தாதோலி பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன (Jain and Mehra, 1980).

xiii) **கம்பு :** கம்பம் புல், கம்பரிசி, புல், புல்லு என்ற பெயர்களும் கம்பிற்கு உண்டு. 'தவசம்' என்ற சொல் கம்பு தானியத்தை மட்டும் குறிக்கும். கல்வெட்டுகளில் கம்புத் தானியம் தவசம் மற்றும் தவசப்பொதி என்று குறிப்பிடப்படுகிறது.

xiv) **கொத்துக்கடலை :** *Cicer arietinum* என்ற தாவரப் பெயர் கொண்ட இந்தப் பருப்புவகை கி.மு. 150 முதல் கி.பி. 200 வரை தென்னிந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் இருந்ததற்கான அகழ்வாராய்ச்சி சான்றுகள் கிடைத்துள்ளன (Chowdhury et al 1971).

இவற்றைத் தவிர அவரை (மொச்சை), மா, நெல்லி, கொள்ளு, இலந்தை, பாகல், சுரை, பீர்க்கு, நாவல், புடலை போன்ற பயிர்களும் பரவலாக பலகாலம் பயிரிடப்பட்டு வந்துள்ளன. மா 4000 வருடங்களுக்கு முன்பிலிருந்தாவது தமிழகம் உட்பட்ட இந்தியாவில் பயிரிடப்பட்டு வந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது (De Candolle, 1886).

2) பூங்காக்கள், தோட்டங்கள், நந்தவனங்கள்

பண்டைய தமிழர் மலர்ச் செடிகள் வளர்ப்பதில் மிகவும் நாட்டங் கொண்டனர். பண்டைய காலத்திலிருந்தே தமிழகத்தில் மிகச்சிறப்பாக அமைக்கப்பட்டு பராமரித்து வரப்பட்டன என்பதற்கு இலக்கிய மற்றும் கல்வெட்டு ஆதாரங்கள் பல உள்ளன. பொது

1) ''பைம்பயிறு உதிர்த்த கோதின்'' (புறம்.:297:3)

மக்களுக்கான பொதுப் பூங்காக்களும் (Public gardens), தனிப் பூங்காக்களும் (private gardens) இருந்தன *(சித்தானந்த மூர்த்தி 1966)*. பூங்காக்களும், தோட்டங்களும் மூன்று விதமான பயன்களை நல்கின : (i) மக்களின் பொழுதுபோக்கு இடங்களாகத் திகழ்ந்தன (ii) மக்களுக்குத் தேவையான தாவரங்களை வளர்க்கும் இடங்களாகச் செயல்பட்டு, அவர்களின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றின. மக்களின் சமுதாயச் சடங்குகளுக்கும், இறைவழிபாட்டிற்கும், உணவுக்கும், மருந்திற்கும் தேவையான தாவரங்கள்/பூக்கள்/மற்ற உறுப்புகள் (இலைகள்) ஆகியவற்றை நல்கின. iii) பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள் மூலம் தாவரங்களை அழிவிலிருந்து பாதுகாக்க (Conservation) முடிந்தது.

ஊர்களில் பூங்காக்களை அமைத்தமை மட்டுமன்றி வீடுகளிலும் பூங்காக்களை வளர்க்கும் பழக்கம் தமிழகத்தில் இருந்தது. இல்லத்து முகப்பில் இவ்வகைப் பூங்காக்கள் சிறிய அளவில் அமைக்கப்பட்டிருந்த விவரங்களைத் தமிழ் இலக்கியத்தில் காண்கிறோம் [1]. வீட்டு முகப்பில் நொச்சி மரம் வளர்க்கப்படுவதும், அதில் மாதவிக் கொடி படருமாறு வளர்க்கப்படுவதும் உண்டு. வீட்டு முற்றத்தில் முல்லைக் கொடி வளர்க்கப்படும். துளசி மாடம் என்ற அமைப்பில் துளசி வளர்க்கப்பட்டது.

உத்தியானம் எனப்படும் 'உய்யானம்' என்ற சொல் பூங்காக்களைக் குறிக்கும் *(கோவை இளஞ்சேரன் 1982)*. அரசர், அரசியர் பொழுதுபோக்குக்காகச் சென்று விளையாடும் இடங்களாக உய்யானங்கள் கருதப்பட்டன (Swamy 1978). இவை 'பூம்பொழில்' என்றும் 'மலர்வனம்' என்றும் அழைக்கப்பட்டன. நெடுமுடிக்கிள்ளி மகிழ்ச்சியாகப் பொழுது போக்குவதற்குப் பூம்பொழில் புகுந்ததாக மணிமேகலை குறிப்பிடுகிறது [2]. காப்பியங்களில் 'பூம்பொழில் விளையாட்டு' ஒரு முக்கிய நிகழ்வாகக் கருதப்பட்டது. பாண்டிய மன்னனான சுந்தர பாண்டியன் புட்டம் என்று அழைக்கப்பட்ட தன்னுடைய அரண்மனைப் பூங்காவில் உட்கார்ந்து உணவு அருந்தியதாக ஒரு கல்வெட்டு (332 of 1916 கி.பி. 13ஆம் நூற்றாண்டு) கூறுகிறது. மணிமேகலையில் உவவனம் பற்றிச் சுதமதி மாதவியிடம் கூறுகிறார்

---

1) *''கோட்டு மலரும், நில மலரும் குளிர் நீர் மலரும் கொழுங்கொடியின் தோட்டு மலரும், மாமலரும், சுருதி மலரும் திருவாயில்'' (பெரி.பு.:முருகநாயனார்:8)*

2) *''சீர்த்தி என்னும் திருத்தகு தேவியொடு*
போதவிழ் பூம்பொழில் புகுந்தனன்'' (மணி.: சிறைக் கோட்டம்:55-56)

அவ்வுவவனத்தில் பூக்கும் தாவரங்கள் பல உண்டு [1]. மலர்வனம் பற்றியும் மணிமேகலை குறிப்பிடுகிறது [2].

ஊர்களில் காணப்பட்ட பொதுத் தோட்டங்களைப் பராமரிப்பதில் அந்தந்த ஊர்களின் முக்கிய மனிதர்கள் ஈடுபட்டனர். இவர்கள் 'மகா ஜனங்கள்' என்று அழைக்கப்பட்டனர் (Swamy 1973).

கோவில் நந்தவனங்கள் பற்றிய விரிவான செய்திகள் இந்த நூலின் ஆறாவது அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. கோவில் நந்தவனங்களில் இறைவனுக்காக அர்ப்பணிக்கப்பட்ட தாவரங்களும், கோவில் சடங்குகளுக்காகத் தேவைப்பட்ட தாவரங்களும் வளர்க்கப்பட்டன. இலக்கிய மற்றும் கல்வெட்டுச் செய்திகளின் ஆதாரப்படி பண்டைய தமிழகக் கோவில் நந்தவனங்களில் வளர்க்கப்பட்ட தாவரங்கள் பின்வருமாறு :

மா, பலா, எலுமிச்சை வகைப் பழமரங்கள், பாதிரி, செவ்வந்தி (BKI.I.ii.152, கி.பி. *1103*).

தென்னை, தவனம், மரிக்கொழுந்து, சண்பகம், குவளை, மா, பலா, பாக்கு, தாழை (EI.XXII. லெய்டன் செப்புத் தகடுகள்).

தென்னை, பாக்கு, மா, எலுமிச்சை வகை மரங்கள், அத்தி, லவங்கப்பட்டை மரம், நெல்லி, வாழை (38 of 1889).

செவ்வந்தி, வெட்சி, மல்லிகை, சண்பகம், மகிழம், மா, பலா, தென்னை, எலுமிச்சை வகை மரங்கள் (EI.VII. எண் *18*, கி.பி. *1316/1317*).

தவனம் (இது மரிக்கொழுந்து என்ற பெயரிலும் அழைக்கப்பட்டது) (BKI.I (i) 108, கி.பி. *1069;* 432 of 1904, கி.பி. *1137/38;* 553 of 1904, கி.பி. *1142;* EI.XXII. எண் *32*, கி.பி. *993;* SII.II. எண் *98*-பல்லவ விஜய நந்திவர்மன் காலத்து கல்வெட்டு).

மருவு (மருகு என்றும் அழைக்கப்பட்டது) (BKI.I (i) *108*, கி.பி. *1069* EI.XXII. எண். *32*, கி.பி. *993*).

---

1) ''குரவமும் மரவமும் குருந்தும் கொன்றையும்
திலகமும் வகுளமும் செங்கால் வெட்சியும்
நரந்தமும் நாகமும் பரந்து அலர் புன்னையும்
பிடவமும் தளவமும் முடமுள் தாழையும்
குடசமும் வெதிரமும் கொழுங்கால் அசோகமும்
செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண்பகமும்
எரிமலர் இலவமும் விரிமலர் பரப்பி'' (மணி.:மலர்வனம் 160-166)

2) ''மாமலர் கொய்ய மலர்வனந் தான்புகின்'' (மணி.:ம.பு.காதை.151)

பொதுவாகக் கோவில் நந்தவனங்களில் பல்வேறு வகையான தாவரங்கள் ஒன்றாக வளர்க்கப்பட்டன. எனினும், ஒருசில கோவில் நந்தவனங்கள் ஒரு குறிப்பிட்ட தாவரத்தை மட்டும் கொண்டிருந்தன என்று கல்வெட்டுச் சான்றுகள் கூறுகின்றன. திருவிடை மருதூரைச் சேர்ந்த கிராமசபை, வியாபாரிகள் மற்றும் பூசாரிகள் ஒன்று சேர்ந்து மாலைக்காரர் (= பூக்கள் விற்பவர்) ஒருவரிடமிருந்து நிலத்தை வாங்கி மல்லிகை மட்டும் வளர்க்க நந்தவனம் ஒன்றை நிறுவினர் (SII.XIII. எண் *270*, கி.பி. *973*). சோழர்களின் ஒருசில கல்வெட்டுகள் சண்பகம் மட்டும் வளர்க்கப்பட்ட கோவில் நந்தவனங்கள் பற்றிக் கூறுகின்றன (எடுத்துக்காட்டுகள் : 249 of 1907; 18 of 1922). ஒரு குறிப்பிட்ட நந்தவனத்தில் மல்லிகையும், நந்தியாவட்டையும் மட்டும் வளர்க்க வேண்டும் என்ற அரசு ஆணை ஒரு கல்வெட்டில் குறிப்பிடப் பட்டுள்ளது (313 of 1919, கி.பி. *1212*). ஏற்கனவே இருந்த பலா மரங் களை அழித்துவிட்டு, அந்நிலத்தில் குறிப்பிட்ட மலர் நந்தவனத்தை அமைக்குமாறு கூறிய பாண்டிய மன்னன் ஒருவனின் அரசாணை இன்னொரு கல்வெட்டில் காணப்படுகிறது (369 of 1916).

கோவில் நந்தவனங்களின் பெயர்கள் பெரும்பாலும் அவை அமைந்துள்ள கோவில்களின் பெயராலோ, கோவிலின் மூலவர் (இறை) பெயராலோ அழைக்கப்பட்டாலும், பல நந்தவனங்கள் அவற்றை அமைத்த மன்னர்களின் பெயராலோ, மானியம் கொடுத்த வரின் பெயராலோ, மன்னர்களின் பட்டப் பெயர்களாலோ அழைக்கப்பட்டன (Swamy 1973). இவற்றில் ஒருசிலவற்றின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இதற்கான கல்வெட்டுச் சான்றுகள் அடைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன :

வீரபாண்டியன் திருநந்தவனம் (520 of 1911, முதலாம் சுந்தர பாண்டியன், கி.பி. *1216-1235*).

வீரசேகரன் திருநந்தவனம் (524 of 1911, இரண்டாம் சுந்தர பாண்டியன், கி.பி. *1239-1251*).

இராஜேந்திர சோழன் திருநந்தவனம் (172 of 1915, கி.பி. *1059*)

விக்ரமபாண்டியன் திருநந்தவனம் (79 of 1918)

சத்ருகந்தன் திருநந்தவனம் (342 of 1921)

இராஜாதிராஜன் திருநந்தவனம் (*45* மற்றும் *48* of 1925)

சாதாரண மக்களின் பெயரால் அழைக்கப்பட்ட நந்தவனங்கள் பின்வருமாறு :

வீராட்டராயன் திருநந்தவனம் (433 of 1915, கி.பி. *1322)*

இளடராயன் திருநந்தவனம் (434 of 1915)

தம்பிக்கு நல்லான் திருநந்தவனம் (430 of 1916)

விஜய நாராயணன் திருநந்தவனம் (693 of 1916, கி.பி. *1257)*

வேநாடுடையான் திருநந்தவனம் (697 of 1916)

தடக்காட்டு கந்தன் திருநந்தவனம் (315 of 1921, கி.பி. *1073)*

சிற்றுக்குடாடான் திருநந்தவனம் (338 of 1921, கி.பி. *1004)*

பெருந்தி மாணிக்கம் திருநந்தவனம் (380 of 1921, கி.பி. *1115)*

ஊ) தாவரங்களைப் பாதுகாத்தல் (Conservation of Plants)

எத்தகைய தாவரங்கள் (பிராணிகள்) ஆயினும், அவற்றிற்குப் பயன் உண்டோ, இல்லையோ, அவையனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டியவை என்ற கருத்து நம் முன்னோர்களிடம் இருந்து வந்தது. எடுத்துக்காட்டாக, எம்மலராயினும், எந்நீர்நிலை நீராயினும் அவற்றை இறைவன் ஏற்றருள்வான் என்றும், தாவரங்கள் இன்னின்னவை, நீர் இப்படி இருக்கவேண்டும் என்ற கட்டாயம் வலியுறுத்தப்படவில்லை. புறநானூற்றில் கபிலர் பாடல் ஒன்று இக்கருத்தைச் சுட்டுகின்றது [1]. இக்கருத்தையொட்டியே ''யாவர்க்கு மாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை'' என்றும் ''புண்ணியம் செய் வார்க்குப் பூவுண்டு நீருண்டு'' என்றும் திருமுறைகள் காட்டுகின்றன.

தாவரங்களைப் பாதுகாக்கும் முக்கிய அமைப்புகளாகக் கோவில் காடுகளும், நந்தவனங்களும், உவவனங்களும் செயல் பட்டன. தாவர பாதுகாப்பு முறைகளில் (conservation) இவை மூன்றும் சிறப்பான இடங்களை வகிக்கின்றன (Krishnamurthy 2004). நம் முன்னோர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையைக் கடைப் பிடித்ததால் இயற்கையின் செல்வங்களில் ஒன்றான தாவரங்களைப் பாதுகாத்தலின் அவசியத்தையும், நன்மைகளையும் நன்கு உணர்ந் திருந்தனர். பயம், பக்தி, நம்பிக்கை ஆகிய மூன்றின் மூலம்தான் இயற்கைப் பாதுகாப்பை (தாவரப் பாதுகாப்பையும் சேர்த்து)

---

1) ''நல்லவும் தீயவும் அல்ல குவிஇணர்ப்
புல்லிலை எருக்கம் ஆயினும் உடையவை
கடவுள் பேணேம் என்னா'' *(புறம்.:106)*

வலியுறுத்தவும் நடைமுறைப்படுத்தவும் முடியும் என்ற கருத்தில் பண்டைய தமிழர் மிகத் தெளிவாக இருந்தனர். இந்த மூன்றின் மூலம் தாவரங்களை இறைவனோடு தொடர்பு படுத்தும்போது, தாவரங்கள் பாதுகாக்கப்படுவது மிகவும் எளிதாகி விடுகிறது.

இதன் காரணமாகவே கோவில் நந்தவனங்களும் அவற்றில் வளர்க்கப்படும் தாவரங்களும் ஒரு புனிதத் தன்மையை அடைகின்றன. நந்தவனத் தாவரங்களை மக்கள் சேதப்படுத்துவதில்லை; பறிப்பதில்லை. பெரும்பாலான கோவில் நந்தவனங்கள், இடைக் காலத்தில் மகேசுவரர் என்று அழைக்கப்பட்ட கோவில் மேலாளரால் பராமரிக்கப்பட்டு வந்தன; கோவில் பூசாரிகளும் இதற்குத் துணை நின்றனர். எனினும், இப் பாதுகாப்பில் அரசின் கண்காணிப்பும் இருந்ததற்கான கல்வெட்டு ஆதாரங்கள் பல உள்ளன. பெரிய கோவில்களின் நந்தவனங்கள் ஒரு குழுவால் பராமரிக்கப்பட்டு வந்தன. மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்துக் கல்வெட்டுகள் சில இந்தக் குழுவின் அமைப்பு பற்றிய விவரங்களைக் கொடுக்கின்றன. சிதம்பரம் நடராசர் கோவிலின் நந்தவனத்தைப் பராமரித்த குழுவில் இடம் பெற்றவர்களின் பட்டியல் பின்வருமாறு : அரசின் பிரதிநிதிகளாக, தென்னவன் பிரம்மராயன், ஜெயத்துங்க பல்லவ ராயன், தில்லையம்பல பல்லவராயன் ஆகியோர்; கோவிலின் பிரதிநிதிகளாக, மகேசுவர கண்காணி செய்வார், ஸ்ரீகார்யம் செய்வார் (= பூசை செய்யும் பூசாரிகள்), சமுதாயம் செய்வார் (= கோவில் விழா பொறுப்பாளர்), கோவில் நாயகம் செய்வார் (= கோவிலின் மேலாளர்), திருமாளிகைக் கூற்று செய்வார் (= கோவில் மராமத்து வேலைப் பொறுப்பாளர்?), மற்றும் கணக்கர் (= கோவில் வரவு, செலவுக் கணக்குகளை மேற்கொள்பவர்) ஆகியோர். மகேசுவரர் அல்லது நந்தவனக் குழுவின் பணிகளில் நந்தவனத்தைப் பராமரிப்பது மட்டுமன்றி, நந்தவனத்திற்கான நிலத்தை வாங்குவதும் விற்பதும், நந்தவனத்துத் தோட்டக்காரர்களை வேலையில் அமர்த்துவதும், அவர்களின் ஊதியத்தை நிர்ணயம் செய்வதும் அடங்கும். நந்தவனத்தில் வளரும் தாவரங்களைப் பாதுகாப்பதும் இப்பணிகளில் முக்கியமானதாகும்.

கோவில் நந்தவனப் பராமரிப்பிற்காகச் செய்யப்பட்ட செயல்கள் பல குறித்தும் கல்வெட்டுகள் தகவல்கள் அளிக்கின்றன. இறைவன் நற்றுணை நாதனுக்குச் சொந்தமான பொற்பொற்றவைக் குளத்திலிருந்து பெறப்படும் நீரை நந்தவனத் தாவரங்கள் வளர்ப்பதைத் தவிர வேறு செயல்களுக்குப் பயன்படுத்தக் கூடாது என்று அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டதாக ஒரு கல்வெட்டு கூறுகிறது

(197 of 1925). திறம்பட வேலை செய்யாத நந்தவனத் தோட்டக்காரர் களை நீக்கிவிட்டுப் புதிய வேலைக்காரர்கள் நியமனம் செய்யப் பட்டதுபற்றிப் பல கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன (461 of 1916; 422 of 1919; 111 of 1915; EI.III. எண் 12C போன்றவை). தோட்டக்காரர் களுக்குப் பொருள்களாகவோ, பணமாகவோ, இரண்டையுங் கலந்தோ ஊதியமாக வழங்கப்பட்டது. இவற்றைத் தவிர கடவு ளுக்குப் படைக்கப்படும் உணவும் (= நைய்வேத்யம்) தோட்டக் காரர்கள் செய்த வேலைக்கு ஊதியமாகக் கொடுக்கப்பட்டது (440, மற்றும் 691 of 1916). இவர்களுக்குச் சிலசமயம் பிரசாதவரி (நைய்வேத்ய வரி) போன்ற வரிகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது (432 of 1916). அரிதாக, உடையாகவோ, தோட்டக் கருவிகளாகவோ ஊதியம் கொடுக்கப்பட்டது (430 of 1921).

தாவரங்களுக்கு ஊறுவிளைவிப்பவர்களுக்கு அரசு தண்டனை கொடுத்த செய்திகள் தாவரப் பாதுகாப்பில் அரசர்கள் எவ்வளவு முனைப்போடு இருந்தார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. காலம் குறிப்பிடப்படாத ஒரு கல்வெட்டில், ஒரு உயிருள்ள பனை மரத்தை வெட்டுபவனுக்கு அரசின் ஆணைப்படி தகுந்த தண்டனை வழங்கப்படும் என்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது (246 of 1906).

கிராமப்புறக் கோவில்களோடுதான் கோவில் காடுகள் அதிக அளவு அமைந்து, அவற்றின் மூலம் இயற்கையும் தாவரங்களும் பாதுகாக்கப்பட்டன. இவை ஒருசில இடங்களில் 'சாமிச் சோலைகள்' எனப்பட்டன. இந்த காடுகளிலும், சோலைகளிலும் கிராமத் தெய்வங் கள் உறைந்துள்ளன என்றும் எனவே இக்காடுகளையும், சோலைகளை யும் அழிப்பவர்கள் அந்தந்த தெய்வங்களின் சினத்திற்கு ஆளாக நேரிடும் என்றும் மக்கள் நம்பினர். இதனால் இங்கு உள்ள தாவரங் களும் பிராணிகளும் பாதுகாக்கப்பட்டன. இவற்றைப் பற்றிய சமுதாய நம்பிக்கைகள், கருத்துக்கள் மற்றும் கட்டுத் திட்டங்கள் எல்லாமே ஓரளவிற்குக் காடுகள்/சோலைகளின் அழிவைத் தடுத்துப் பராமரிப்பிற்கு உதவும் வகையிலேயே அமைந்துள்ளன. பல கோவில் காடுகளில், அப்பகுதிகளில் முன்னால் காணப்பட்டு அழிந்து போய் தற்பொழுது அறவே காணப்படாத, பல தாவரங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதன் மூலம் தாவரப் பாதுகாப்பில் இக்காடுகள் எந்த அளவு பங்கு பெறுகின்றன என்பது மிகத் தெளிவாகிறது.

கோவில்களில் கொண்டாடப்பட்ட பல விழாக்களுக்கான நோக்கங்களில் இயற்கைப் பாதுகாப்பு (Conservation of Nature) ஒரு முக்கியமான நோக்கமாகத் திகழ்ந்தது (Swamy 1978; சுவாமி மற்றும்

கிருஷ்ணமூர்த்தி *1994;* Krishnamurthy 2004). வசந்தவிழா இவற்றில் மிக முக்கியமான ஒன்றாகும். இந்த விழா பொதுவாக வசந்த காலத்தில் பௌர்ணமி நாள் ஒன்றில் நடைபெறும். வனதேவதையைப் போற்றி நடைபெறும் இவ்விழா பற்றிய தகவல்கள் கல்வெட்டுகளிலும் (எடுத்துக்காட்டாக, EI.V. எண் 3A, கி.பி. *1161*), இலக்கியத்திலும் காணப்படுகின்றன. இவ்விழாவன்று நன்கு அலங்கரிக்கப்பட்ட வனதேவதை / வனசங்கரியின் விக்ரகம் அல்லது திருஉருவம் அதற்கே உரித்தான அனைத்து அலங்கார அமைப்புகளுடன் ஊர் மக்கள் சூழ ஊர்வலமாக அருகில் உள்ள வனப்பகுதிக்கு (இது பொதுவாக அந்த ஊரில் உள்ள கோவில்காடு ஆகும்) அல்லது நந்தவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அங்கு விக்ரகம்/திருஉருவம் அமர்த்தப்பட்டு அதற்கான வழிபாடுகள் செய்யப்படும். அன்று நடுஇரவு விக்ரகம் மீண்டும் கோவிலுக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். இந்த விழா இன்றும் தமிழ் நாடு மற்றும் கர்நாடக மாநிலங்களின் பல கிராமப் பகுதிகளில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. காட்டுப் பகுதியில் அல்லது கோவில் காட்டில் விக்ரகம் வைக்கப்படுவதற்கு முக்கியக் காரணம், காடுகளும் அதில் உள்ள தாவரங்களும் வனதேவதையின் வரவால் புனிதம் அடைகின்றன என்பதும், அவை இறைத்தன்மை பெறுவதால் அவற்றை மக்கள் ஊறு விளைவிக்காமல் பாதுகாக்க வேண்டும் என்பதும் தான். இதை மீறினால் இறையின் கோபத்திற்கு ஆளாக வேண்டும் என்ற பயத்தினாலும், நம்பிக்கையாலும் காடுகளும் அவற்றில் உள்ள தாவரங்களும், பிராணிகளும் பாதுகாக்கப்பட்டன.

வசந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு விழாவாக 'வசந்தத் தோப்பு' என்ற விழா கருதப்பட்டாலும் (Swamy 1973), இது வசந்த விழாவின் இன்னொரு பெயரே.

மற்றுமொரு முக்கியமான கோவில் விழா 'திருவேட்டை' ஆகும். இரண்டாம் இராஜராஜ சோழனின் கல்வெட்டு ஒன்று இந்த விழா பற்றிய தகவல்களை அளிக்கிறது (11 of 1925, கி.பி. *1178*). இந்தக் கல்வெட்டுத் தகவல்களின்படி, நாங்கூரைச் சேர்ந்த கிராம சபையால் சுந்தரேசுவரருக்குத் திருவேட்டை விழா எடுப்பதற்காக நிலம் கொடுக்கப்பட்டது. இவ்விழாவின்போது, சிவனின் விக்ரகம் / திருவுருவம் ஒரு வேட்டைக்காரர் போன்று அலங்கரிக்கப்பட்டு, அருகில் உள்ள காட்டுப் பகுதிக்கு (பெரும்பாலும் கோவில் காட்டுக்கு) ஊர் மக்கள் சூழ ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். அங்கு ஒரு பொய்வேட்டை நிகழ்வு நடைபெறும். அதில் சிவபெருமான் ஒரு மிருகத்தையோ, பேயினையோ, இராட்சசனையோ

கொன்று வெற்றி கொள்வார். இந்த விழாவின் முக்கிய நோக்கமும் காட்டினையும், இயற்கையும் பாதுகாத்தல்தான். திருச்சியில் அமைந் துள்ள முனைவர் மா.இராசமாணிக்கனார் வரலாற்று ஆய்வு மைய இயக்குநர் இரா.கலைக்கோவன் தலைமையில் புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான் மலையில் உள்ள குடுமிநாதர் கோவிலில் உள்ள அம்மன் கோவிலில் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவற்றில் உள்ள தகவலின்படி, வெள்ளாற்றின் கீழ்க் கரையில் இக்கோவிலின் இறைவருக்கு 'தியானஞ் சிறியான் திருவேட்டைத் திருத்தோப்பு' அமைக்கப்பட்டது.

கோவில்களுக்கு அருகாமையில் இயற்கையான காடுகளோ, காட்டுப் பகுதிகளோ இல்லையெனில் இதற்கென ஒரு காட்டையோ, ஒரு அடர்ந்த தோட்டத்தையோ அமைப்பதற்கும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன என்ற தகவல்கள் கல்வெட்டுகளில் காணப்படு கின்றன. மேலும், அத்தகைய காட்டுப் பகுதியைப் பாதுகாக்கப் பாது காவலர்கள் நியமனம் செய்யப்பட்டனர் என்றும் தெரிய வருகிறது. இந்தப் பாதுகாவலர்களுக்கு இரண்டு மா நிலம் ஊதியமாகக் கொடுக்கப்பட்டதைப் பாண்டிய மன்னனின் கல்வெட்டு ஒன்று குறிப் பிடுகிறது (461 of 1916). சூரியநாராயணன் கோவில் காட்டில் இத்தகைய கோவில் விழா நடைபெறுவதற்குத் தேவையான செலவை ஈடுகட்டும் வகையில் வீரய்யா தன்னாயகா என்பவர் மானியம் அளித்ததைப் பற்றி ஒரு கல்வெட்டு கூறுகிறது (213 of 1926; கி.பி.*1511*). இதனைப் போன்ற, விழாக் காணிக்கைகள் கொடுக்கப்பட்டதைப் பற்றிப் பல கல்வெட்டுகள் சான்று பகர்கின்றன (Swamy 1973).

VIII
தாவரங்களும் தமிழர் உணவும்

அ) முன்னுரை

கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாற்றுக் காலம் முழுவதும் தமிழரின் உணவிலும், உணவு முறைகளிலும் தாவரங்கள் மிக முக்கியமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. தொன்மையான தமிழ்ப் பண்பாடு, உணவு சார்ந்த எல்லா வகையான அசைவுகளையும் தன்னுள் பொதிந்து வைத்துள்ளது (நமச்சிவாயம் 2003). பண்டைய தமிழரின் உணவுப்பழக்கங்கள் அவர்கள் வாழ்ந்த பருவச் சூழ்நிலைகள், வாழ்நிலத்தின் விளைபொருட்கள், சமூகப் படிநிலைகள், உற்பத்தி முறை, மக்களின் பொருளாதாரநிலை போன்ற பல காரணிகளைப் பொறுத்து அமைந்தன. உடல்நலம் குறித்த அக்கரையோடு, சுவை குறித்த பார்வையும் பண்டைய தமிழ் உணவில் இருந்தது. உணவே மருந்து, மருந்தே உணவு என்ற கொள்கையையும் தீவிரமாகக் கடைபிடித்தனர். பண்டைய தமிழர் தாவரங்களின் பூ, காய், பழம், விதை, குருத்து, கிழங்கு, தழை (கீரை), பட்டை போன்றவற்றையும் பானத்தில் இளநீர், நுங்கு, தேன், தயிர், மோர், கள், கரும்புச்சாறு, பானகம் போன்றவற்றையும், தானியங் களில் நெல், வரகு, தினை, சாமை, மூங்கிலரிசி போன்றவற்றையும் உணவாகக் கொண்டனர். யவன அரிசியான பார்லியும் பயன்படுத்தப் பட்டதற்கான வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

ஆ) உணவுப் பொருட்களிலும் உணவு முறைகளிலும் மாற்றங்கள்

சங்க காலத்தில் தமிழர் உண்ட உணவுப் பொருட்களும் உணவுத் தயாரிப்பு முறைகளும் வரலாற்றின் பின்கட்டங்களில் பல்வேறு மாற்றங்களைப் பெற்றன. வாழ்க்கை முறைகளும், அனுபவங்களும் விரிவடைய விரிவடைய, குழந்தை உணவு, நோயாளி உணவு, கருவுற்ற பெண் உணவு, முதியோர் உணவு, காலமும் பொழுதும் சார்ந்த உணவு, சடங்கு சார்ந்த உணவு, இடஞ்சார்ந்த உணவு, பொருள் சார்ந்த உணவு என உணவு வகைகளும், பழக்கங்களும் மென்மேலும்

மாற்றங்களும் விரிவும் அடைந்தன (பரமசிவன் 2004, பெருமாள் முருகன் 2004). எந்தெந்தப் பகுதிக்குச் சென்றால் என்னென்ன உணவு கிடைக்கும் என்று சிறுபாணாற்றுப்படை கூறுகிறது. எயினர் எனப்படும் வேட்டுவர் இல்லம் சென்றால் புளிச்சோற்றுடன் மான் இறைச்சியைச் சுட்டுத் தருவார்கள். மருத நிலம் சென்றால் உலக்கை யால் நன்றாகக் குத்தி மினுக்கப்பட்ட அரிசிச் சோற்றுடன் நண்டுக் குழம்பும் கிடைக்கும். மேலும், தமிழர் உணவுப் பழக்கங்களும், வகைகளும் பல்வேறு நம்பிக்கைகளுக்கும் களனாக அமைந்திருந்தன. பிறந்த குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுப்பதற்கு முன்பாகவே தந்தையின் உடன் பிறந்தாள் குழந்தையின் நாக்கில் இனிப்புத் திரவத்தைத் தொட்டு வைக்கும் 'சேனை' என்ற பழக்கமும் (பரமசிவன் 2004), பால்குடி மறந்த குழந்தைக்குச் சோறூட்டல் ஒரு சடங்காகவே பலரால் இன்றும் நிகழ்த்தப்படுகிறது என்ற செய்தியும் மேற்கூறிய கருத்துக்கு அரண் செய்யும். சங்க கால, சங்கம் மருவிய கால, பக்தி இயக்க கால, சோழர், விஜயநகர மற்றும் ஐரோப்பியர் காலத் தமிழகத்தின் உணவுகளையும், உணவு முறைகளையும் ஒப்பிட்டால் இந்த உண்மைகள் எளிதாகப் புரியும். கடந்த 2000 ஆண்டு களாகத் தமிழகத்திலும், இந்தியாவிலும் வெளிநாடுகளில் இருந்து நுழைந்த, நுழைக்கப்பட்ட தாவரங்களின் தாக்கத்தால் இந்த மாற்றங் களில் பெரும்பான்மையானவை ஏற்பட்டன என்றால் அது மிகை யாகாது. தற்பொழுது தமிழ் நாட்டில் உண்ணப்படும் அல்லது உணவில் பயன்படுத்தப்படும் தாவரப் பொருட்களில், குறிப்பாகக் காய்கறிகள், பழங்கள் போன்றவற்றில், ஏறத்தாழ 80 விழுக்காடு தாவரங்கள் வெளிநாடுகளிலிருந்து பெறப்பட்டவையாகும் (Swamy 1973; பார்க்க இந்நூலின் நான்காவது அத்தியாயம்) மேற்கூறப்பட்ட உண்மைகள் பின்வரும் அடிப்படை வினாக்களை எழுப்புகின்றன:

i) பண்டைய தமிழகத்தில் வழக்கத்திலிருந்த, தமிழகத்திற்கே உரித்தான காய்கறிகள்/பழவகைகள் யாவை? இவற்றிலிருந்து பெறப் பட்ட உணவு வகைகள் யாவை?

ii) இவ்வாறு தமிழகத்திலேயே கிடைக்கப் பெற்ற காய்கறி களும் / பழவகைகளும், மற்ற உணவுப் பொருட்களும் அக்காலத் தியத் தமிழரின் தேவைகளை ஈடுகட்ட முடியவில்லையா? அவர் களுக்கு இந்த உணவுப் பொருட்கள் கிடைப்பது தொடர்பான பணிகள் / வேலைகள் (வேளாண்மை, விற்றல் போன்ற) கிட்டவில்லையா?

iii) தங்களுடைய அன்றாடத் தேவைகளை ஈடுகட்டத் தமிழகத்தில் அப்பொழுது இருந்த தாவர மூலப் பொருட்களை முற்றிலுமாக உணர்ந்து பயன்படுத்தினார்களா?

முதல் மனிதன் தாவர உணவைத்தான் பெரிதும் சார்ந்திருந்தான் என்றும், பின்புதான் அவன் மாமிச உணவை உண்ண ஆரம்பித்தான் என்றும் அறிஞர்கள் பலர் கருதுகின்றனர். ஏனெனில் தாவர உணவை அவன் வேட்டையாடிப் பெற வேண்டிய அவசியம் இல்லை. இறைச்சியே ஆதிமனிதன் அதிகம் உண்ட உணவாகக் கருதப்பட்டாலும், மனிதன் ஓடித்திரிந்த காலத்திலிருந்தே காய், பழம், விதை, கிழங்கு, இலை போன்றவற்றை இயற்கையாக வளரும் தாவரங்களில் இருந்து பறித்து, சேகரித்து உண்டான். ஆனால், வேளாண்மையும் பிராணி வளர்ப்பும் தோன்றியவுடன், மனிதன் தனக்குத் தேவையான பயிர்த் தாவரங்களையும், இறைச்சி, பால் போன்றவற்றைத் தரும் பிராணிகளையும் வளர்த்துத் தன் உணவுத் தேவையை நிறைவேற்றிக் கொண்டான். உணவைப் பச்சையாக உண்ட காலம் மாறி, உணவு பல்வேறு வகைகளில் சமைக்கப்பட்டன. ‘சமைத்தல்’ என்றால் பக்குவப்படுத்துதல் என்று பொருள் (பரமசிவன் 2001). நெருப்பின் பயன் நன்கு அறியப்பட்டபின் சமையல் மேலும் பக்குவமடைந்தது. அடுப்பில் ஏற்றிச் சமைப்பது ‘அடுதல்’ என்றும், சமையல் செய்யப் படும் இடம் ‘அட்டில்’ அல்லது ‘அடுக்களை’ என்றும் பெயரிடப் பட்டன. பொதுவாகத் தமிழரின் உணவுகள் அவை சமைக்கப்படும் முறைகளைக் கொண்டு பெயர் பெற்றன. சமையல் முறைகளில் பல்வேறு வகைகள் உள்ளன : கொதிக்க வைத்தல், வேவை அல்லது வேகவைத்தல், வறுத்தல் (வறை), வதக்குதல் (துவட்டுதல்), வாட்டு தல் (வாட்டு), பொரித்தல் (பொரியல்), அவித்தல், ஊற வைத்தல், கடைதல், துவையல் அரைத்தல், வற்றல், சுட்டு எடுத்தல் (சுடு, சுடுதல்) போன்றவை இவற்றில் அடங்கும் (தங்கப்பா 2004). இதனைச் சிவஞான முனிவரும் [1], காளமேகப் புலவரும் [2] சிறப்பாகக் கூறுவர். ஊறுகாய்ப் பயன்படுத்துதல் எப்பொழுது தோன்றியது என்பது

---

1) ‘‘சற்றே துவையல் அரை, தம்பி ஒரு பச்சடி வை
வற்றல் ஏதேனும் வறுத்துவை, காயமிட்டுக் கீரை கடை,
கம்மெனவே மிளகு காயவைத்து வைப்பாய் குழம்பு’’ (சிவஞான முனிவர் பாடல்)

2) ‘‘கரிக்காய் பொரித்தாள் கன்னிக் காயைத் தீய்த்தாள்
பரிக்காயைப் பச்சடியாப் பண்ணாள் - உருக்கமுள்ள
அப்பைக்காய் நெய்துவட்டல் ஆக்கினாள் அத்தை மகள்
உப்பக்காண் சீச்சீ உமி!’’ (காளமேகப்புலவர் பாட்டு).
(கரிக்காய் = யானைக்காய் = அத்திக்காய்; கன்னி = தெய்வக் கன்னியான அரம்பை, அரம்பைக்காய் = வாழைக்காய்; பரிக்காய் = மாங்காய்; அப்‘பை’க்காய் = கத்திரிக்காய்; பொரியல், தீயல், பச்சடி, நெய்துவட்டல் ஆகிய சமையல் முறைகள் இதில் குறிக்கப்பட்டு உள்ளன)

தெரியவில்லை. பெரியபுராணத்தில் (கி.பி. 9ஆம் நூற்றாண்டு) மாவடு ஊறுகாய் பற்றிய செய்தி அரிவாட்டாய நாயனார் புராணத்தில் காணப்படுகிறது [1].

சங்க இலக்கியத்தில் மிளகு, நெய், புளி, கீரை [2], இறைச்சி, கும்மாயம் போன்ற உணவுப் பொருட்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. உணவில் காரத் தன்மையை உண்டாக்கக் கருமிளகும், இஞ்சியும் பயன்படுத்தப்பட்டன. மிளகாய் (மிளகு போன்று காரத்தன்மை கொண்ட காய் என்பதால் மிளகாய் எனப்பட்டது) அப்பொழுது இந்தியாவிலும், தமிழகத்திலும் கிடையாது. உணவில் இனிப்புத் தன்மையை உண்டாக்கக் கருப்பட்டியும், வெல்லமும், நாட்டுச் சர்க்கரையும் இலுப்பைப்பூ சர்க்கரையும்தான் பயன்படுத்தப்பட்டன; தற்போது பயன்படுத்தப்படும் சர்க்கரை அல்ல. பண்டைய தமிழகத்தின் பல பகுதிகளில் பனை வெல்லமும், பனை வெல்லச் சர்க்கரையும் தான் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன. பனை வெல்லம்

---

1) ''நல்ல செங் கீரை தூய மாவடு அரிசி சிந்த
அல்லல் தீர்த் தாள வல்லார் அமுதுசெய் தருளும் அப்பேறு''
(பெரி.பு.:அரிவாட்டாய நாயனார் பு.:16)

2) கீரையை ருசித்துப் புசித்த ஔவையார், அதனை தேவ அமிர்தத்திற்குப் பின்வருமாறு ஒப்பிடுகிறார் :

''வெய்தாய் நறுவியதாய் -
வேணளவும் தின்பதாய்
நெய்தான் அளாவி
நிறம்பசந்து - பொய்தான்
அடகென்று சொல்லி
அமிர்தத்தை இட்டார்
கடகம் செறிந்தகை
யார்''

இதேபோன்று அவரே கீரையைப் பற்றி இன்னொரு பாடலில் பின்வருமாறு கூறுகிறார் :

''சிறுக்கீரை வெவ்வடகும்
சேதாவின் பாலும்
மறுப்படாத் தண்டயிரும்
மாந்தி - வெறுத்தேனை
வஞ்சிக்கும் கொற்கைக்கும்
மன்னவர்ஏற் பித்தாரே
கஞ்சிக்கும் புற்கைக்கும்
கை''

என்பதைக் குறிக்கும் கருப்பட்டி என்ற சொல் 'கருப்புக்கட்டி' என்ற பெயரிலிருந்து பெறப்பட்டது. ஒருசில இடங்களில் இலுப்பைப் பூவிலிருந்து பெற்ற 'சர்க்கரை'யும் இனிப்பு ஊட்டப் பயன்படுத்தப் பட்டது. மிகவும் சாதாரணமாகப் பயன்படுத்தப்பட்ட காய்கறிகள், வாழைக்காய், வெள்ளரிக்காய், கொத்தவரங்காய், அவரைக்காய், பாகற்காய், பீர்க்கங்காய், கத்தரிக்காய், மாதுளங்காய் [1,2], சுரைக்காய் போன்றவை. கொத்துமல்லி அறவே பயன்படுத்தப்படவில்லை. கனிகளில் 'மா [1], பலா, வாழை [1], நாவல், இலந்தை போன்றவை உணவாகக் கொள்ளப்பட்டன. பண்டைய தமிழர்களின் பாயசம் உழுந்து முதலான தானியங்களைத் திரித்து (அரைத்து அல்ல), கருப்பட்டி, வெல்லம் அல்லது இலுப்பைப்பூ சர்க்கரையுடன் கூட்டிச் செய்யப்பட்டது. இதனையே ''உழுந்து தலைப் பெய்த கொழுங்களி மிதவை'' என்று அகநானூறு குறிப்பிடுகிறது. தங்கப்பா (2004) இதனை இக்காலத்துப் பாயசம் என்பார். உரையாசிரியர்கள் இதனைக் 'கும்மாயம்' என்பர். கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வரகுண பாண்டியனின் கல்வெட்டொன்றில் கும்மாயம் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இன்றளவும் ஆடி 18ஆம் பெருக்கன்று தென் மாவட்டங்களில் 'கும்மாணம்' என்ற பெயரில், குறிப்பாக வேளாளர் வீடுகளில், இது செய்யப்படுகிறது. இராமநாதபுரம் மற்றும் காரைக்குடிப் பகுதியிலும் கும்மாயம் இன்றும் செய்யப்படுவதாகத் தெரிகிறது. ஆனால் இதில் உளுந்துக்கு பதிலாக ரவையாக மாற்றப் பட்ட பச்சைப் பயிறு சேர்க்கிறார்கள்.

---

1) ''கோளிப்பாகற் கொழுங்கனித் திரள்காய்
வாள்வரிக் கொடுங்காய் மாதுளம் பசுங்காய்
மாவின் கனியொடு வாழைத் தீங்கனி
சாலியரிசி தம்பாற் பயனொடு'' *(சிலப்பதிகாரத்தில் கண்ணகி சமைத்த பாங்கை விவரிக்கும் அடி 16:24-27)*

(கோளிப்பாகல் கொழுங்கனி = பூவாமல் காய்க்கும் பலாமரக் கனி எனவும் கூறுவர்)

2) ''சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்து
உருப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து
கஞ்சக நறுமுறி அளைஇ, பைந்துணர்
நெடுமரக் கொக்கின் நறுவடி விதிர்த்த
தகைமாண் காடியின் வகைப்படப் பெறுகுவிர்''

(பிராமணர்கள் வீட்டில் வெள்ளரிசிச் சோற்றோடு சேதா என்ற சிவப்புநிறப் பசுவின் வெண்ணெயில் வதக்கிய மாதுளங்காய்க் கறி பெறலாம் என்ற பெரும்பாணாற்றுப்படை அடிகள் : 306-310)

பானகம் பழந்தமிழர்களின் போர்களத்து உணவாக இருந்தது என்று ஒரு சிலர் கருதுகின்றனர். போரில் களைத்த வீரர்களுக்கு (அக்காலத்தில் போர்கள் மழைக் காலத்தில் நடக்காமல் கோடைக் காலத்தில் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது) பானகம் கொடுக்கப்பட்டது. 'பானகம்' என்ற சொல் 'போனகம்' என்ற சொல்லின் திரிபாக இருக்கவேண்டும். போனகம் என்பது நீரில் கரைத்த புளியும், கருப்பட்டியும் ஆகும். சூரசம்காரம் நடந்தபின் போரிட்ட களைப்பு நீங்க இறைக்கு உளுந்தினாலான சுண்டலும், பானகமும் படைக்கப்பட்டதாக கதைகள் கூறுகின்றன என்பது இங்கு நோக்கத்தக்கது. வரலாற்றின் இடைக்காலத்தில் வெல்லம், ஏலக்காய், இளநீர் மற்றும் நீரில் ஊறவைத்த அரிசி ஆகியவற்றின் கலவை களாலான ஒரு இனிப்புத் திரவமாகப் பானகத்தைக் கல்வெட்டுகள் கூறுகின்றன (Swamy 1973). பதநீர் என்று கூறப்படும் 'அக்கானி'யில் இருந்து பெறப்பட்டதாகும் கருப்பட்டி. அக்கானியை 'மாயப்பால்' என்றும் அழைத்தனர் (குமார செல்வா 2004). இதனைக் காய்ச்சினால் பெறப்படுவது கருப்பட்டி. நாட்பட நாட்பட கருப்பட்டியின் குணம் மேலும் அதிகரிக்கும். அக்கானியைக் காய்ச்சும்போது தேன் போன்று அடையும் நிலையை 'பைனி' என்பர். இதனுடன் புளியையும் சேர்த்து ஒரு பானையில் போட்டு அதன் வாய்ப் பகுதியை துணியால் இறுகக் கட்டி மூடி வைப்பர். பங்குனி மாதம் இவ்வாறு வைத்தால் ஆணி மாதம் மழைக் காலத்தில் எடுத்துப் பயன்படுத்துவார்கள். இதற்குப் ''புளிப்பைனி'' என்று பெயர். புளிப்பும் இனிப்பும் கலந்த சுவை யுடைய இது மருத்துவக் குணம் வாய்ந்தது.

பண்டைய தமிழகத்தில் அல்லிவிதையும் (= அல்லி அரிசி) மூங்கிலரிசியும் உணவாகப் பயன்படுத்தப்பட்டன; அல்லி அரிசி நெய்ப்போ, கொழுப்போ இல்லாதது. மூங்கில் அரிசியை மலை நாட்டுக் குறவர் உணவாக உண்டனர். 'வேரல்' என்ற சிறு மூங்கிலரிசி மிகுதியும் விரும்பி உட்கொள்ளப்பட்டது. மூங்கில் அரிசி நேரடி யாகவும், அவலாக மாற்றப்பட்டும் உண்ணப்பட்டது. இதன் அரிசி, புளி, உழுந்து (அல்லது பயிறு) ஆகியவை ஒன்றாகச் சேர்க்கப்பட்டு கூழாக்கப்பட்டு பின்பு உண்ணப்பட்டன. மருத நிலத்தில் நெல் அரிசி முக்கிய உணவாகத் திகழ்ந்திருக்கிறது. மருத நிலத்தில் அரிசி நன்றாக விளைவிக்கப்பட்டதுதான் இதற்குக் காரணம். முல்லை நிலத்து ஆயர்கள், தங்களுடைய பால், தயிர், மோர், வெண்ணெய் போன்ற வற்றை மருத நிலவாழ் உழவர்களிடம் கொடுத்துவிட்டு நெல்லைப்

பண்டமாற்று முறையில் பெற்று அவற்றை உண்பர்[1]. குற்றாத கொழியல் அரிசியைக் களியாகச் செய்து உண்டிருக்கிறார்கள். 'சோறு', 'அவிழ்பதம்' ஆகிய இரண்டு சொற்களும் பழைய இலக்கியத்தில் காணப்படுகின்றன. இன்று நெல்லரிசிச் சோறு மட்டுமே சோறு என்ற பொருளில் வழங்கப்படுகிறது. ஆனால் கம்பு, சோளம், குதிரைவாலி போன்றவற்றின் சோறும் இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நெல்லஞ்சோறை விட கம்பஞ்சோறு சிறந்தது என்பார் கம்பர் ‘‘நெல்லஞ்சோறே நீ கம்பஞ் சோற்றைச் சுமந்து திரிவாயே''. இதே போன்று அரிசி என்ற சொல்லும் நெல்லரிசியை மட்டுமல்லாது மற்ற தானியங்களையும் குறித்தது. அரிசியின் வேர்ச் சொல் 'அரி' ஆகும்; இதன் பொருள் 'சிறிய' என்பதாகும். கம்பரிசிச் சோறு 'தவசம்' எனப்படும் கம்பின் தானியத்தில் இருந்து தயாரிக்கப்பட்டது. கல்வெட்டுகளில் கம்பரிசி, தவசம், தவசப்பொதி என்று குறிப்பிடப் பட்டுள்ளது. கம்பஞ் சோற்றுடன் பருப்புக் குழம்பு, கருப்பட்டி, தயிர்/மோர் போன்றவை துணைப் பொருட்களாக உண்ணப்பட்டன (சிவசுப்பிரமணியன் 2004). பல்வேறு தானியங்களின் கஞ்சியும் பழந்தமிழகத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட உணவாகும். கம்மங்கூழ் அல்லது கஞ்சி தாகத்தையும் பசியையும் ஒருசேர அடக்கும். எளிய மக்கள் நீரில் தானியங்களை (நெல்லரிசி, குறுநெய் அரிசி, சோளம், கம்பு, கேழ்வரகு, கொள்ளு, வரகு) வேக வைத்து உண்பது கஞ்சி எனப் பட்டது. கஞ்சியை ‘‘நீரடுபுற்கை'' (நீர் + அடு + புல் + கை) என்கிறார் திருவள்ளுவர் (பரமசிவன் 2001). கஞ்சி வகைகளில் 'காணக்கஞ்சி' குறிப்பிடத்தக்கது. தமிழ் நாட்டில் கொள்ளு என்னும் பெயரில் அழைக்கப்படும் காணத்தை வறுத்து தொலிபுடைத்து வறுத்தமல்லி (பண்டைய காணக்கஞ்சியில் இது சேர்க்கப்படவில்லை), மிளகுடன் இதனைச் செய்வர். கஞ்சியில் சேர்க்கப்படும் மற்றொரு பொருள் மோர் ஆகும். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு கூட நெல்லரிசியோடு கம்பு, வரகு, கேழ்வரகு, சோளம், தினை (காடைக்கண்ணி, குதிரை வாலி ரகங்கள்) உண்ணப்பட்டன. ஆனால் இவை பெரும்பாலும் மறைந்துவிட்டன. அரிசியோடு ஊன் கலந்து சமைத்துச் சாப்பிடுவது 'ஊன்சோறு' எனப்பட்டது. இதனை ‘‘ஊன் சோற்றமலை'' என்றது புறநானூறு. இதுவே தற்பொழுது புலாலை மையமாகக் கொண்ட

---

1) ‘‘..................ஆய்மகள்
தயிர்கொடு வந்த தசும்பு நிறைய
ஏரின் வாழ்நர் பேரில் அரிவையர்
குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்
முகந்தனர் கொடுப்ப வுகந்தனர் பெயரும்'' (புறம்.:33)

குஸ்கா, கைமா, பாயா, பிரியாணி[1] போன்ற முஸ்லீம் உணவு வகைகளுக்கெல்லாம் முந்தியது, அடிப்படையானது என்று ஒரு சிலர் கருதுவர் (தங்கப்பா 2004; பரமசிவன் 2004). இதே போன்று அரிசியோடு உளுந்தும் கலந்து பொங்கும் சோறு பண்டைய தமிழகத்தில் இருந்ததாக அறியப்படுகிறது. இன்றும் கூட முதற் பூப்பெய்திய பெண்ணுக்குத் தொடர்ச்சியாக சில நாட்கள் இச்சோற்றை உணவாகக் கொடுப்பர்; கொதித்த கருப்பட்டி நீரில் பச்சரிசி மாவைக் கிண்டி உளுந்தும் நல்லெண்ணையும் சேர்த்துத் தயாரித்த உளுந்தக் களியை பூப்பெய்திய பெண்ணுக்குக் கொடுப்பது வழக்கம்; அந்த ஊர் மக்களுக்கும் இது கொடுக்கப்படும். இதனை 'ஊர்க்களி போடுதல்' என்பர்.

எள் ஒரு பண்டையத் தமிழர் உணவுப் பொருளாகும்[2]. இதிலிருந்து பிழிந்தெடுக்கப்பட்ட நல்லெண்ணெய்யும் உணவு தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்டது. அகழ்வாராய்ச்சித் தடையங்கள் மூலமாகவும், சங்கத் தமிழ் இலக்கியம் மூலமாகவும் சிந்து சமவெளியிலும் திராவிட நாட்டிலும் எள் பயன்படுத்தப்பட்டு வந்தது தெளிவாகிறது. சங்கப்பாடல்களில் எள் பற்றிய செய்திகள் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. எள்ளுருண்டை ஒரு உணவாகத் தமிழர்களிடம் திகழ்ந்திருக்கிறது; உளுந்தம்மாவை எள்ளோடு கலந்து உருட்டி உண்ணுவர் என்று தெரியவருகிறது. ஏலமும் சுக்கும் கலந்த சில்லுக் கருப்பட்டியோடு இலட்டுவத்தையும், எள்ளுருண்டையையும் குழந்தை உணவாகப் பெரியாழ்வார் பதிவு செய்கிறார்[3]. கைம்பெண்கள் கையால் பிழிந்தெடுத்த நீர்ச்சோற்றுடன் எள்ளுத் துவையலை உண்டதாகப் புறநானூறு கூறுகிறது[4]. ஆரியர்களின்

---

1) பிரியாணி என்பது பெர்சியா நாட்டில் முதன்முதலில் தோன்றியது என்பர்; இதன் பெர்சிய வேர்ச்சொல் 'பிரியண்' ஆகும். இந்த வேர்ச் சொல்லின் பொருள் 'சமைப்பதற்கு முன்பு வறுத்தல்' என்பதாகும். இது இந்தியாவிற்கு ஏறத்தாழக் கி.பி. 1398ஆம் ஆண்டு தைமூர் என்பவரால், டெல்லியைக் கைப்பற்றியபோது கொணரப்பட்டது என்று பலராலும் நம்பப்படுகிறது. எனினும் 'ஊன்சோறு' வடிவில் இது தமிழகத்தில் முதன்முதலில் தோன்றியதாகக் கருதலாம்.

2) ''எண் எள் உணவுப் பெயர்'' (தொல்.ஃநூ.ஃ308) என்று தொல்காப்பியமே எள்ளை ஒரு உணவுப் பெயராகச் சுட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

3) ''கன்னலின் இலட்டுவத் தொடு காரெள்ளின் உண்டை'' (இலட்டுவம் = லட்டு)

4) ''நல்விளர் நறுநெய் தீண்டாது
அடை இடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்எள் சாந்தொடு புளிப்பெய்து அட்ட'' (புறம்.ஃ246)

தாக்கம் அதிகமாக அதிகமாக, தமிழகத்தில் சாதாரண உணவாகத் திகழ்ந்த எள் துக்ககரமான சடங்குகளுடன் அதிகமாகத் தொடர்பு படுத்தப்பட்டது. இனிப்பான எள்ளுருண்டை தெவசம், திதி போன்ற சடங்குகளிலும் இறப்பு ஏற்பட்ட வீடுகளிலும் மட்டும் உணவாக எடுத்துக்கொள்ளப்பட்டது. தற்பொழுது எள் (காரெள்) இறப்பினைச் சுட்டும் ஒரு பொருளாகவே மாறிவிட்டது. பழந்தமிழர் பயன் படுத்திய முக்கிய எண்ணெய் வித்து எள் தான். எண்ணெய் என்ற சொல்லே எள்ளிலிருந்து பெறப்படும் நெய்யை மட்டும் குறித்தது (எள் + நெய் = எண்ணெய்). 12-ஆம் நூற்றாண்டுக்குப் பின்பு தேங்கா யும், 15-ஆம் நூற்றாண்டுக்குப் பின்பு நிலக்கடலையும், 19-20-ஆம் நூற்றாண்டுகளில் சூரியகாந்தி, எண்ணெய்ப்பனை, மக்காச்சோளம், சோயாபீன்ஸ் போன்றவைகளும் தமிழகத்தில் எண்ணெய் வித்துக் களாகச் செயல்பட்டன. கடுகு எண்ணெய் பண்டைய வடஇந்தியா வில் மிகவும் சாதாரணமாகப் பயன்படுத்தப்பட்ட போதும், ஆரியர் களின் தாக்கத்தையும் மீறி அது தமிழகத்தில் பயன்படுத்தப்பட வில்லை என்பது இங்கு குறிப்பிடத்தகக்து.

இ) புளித்த உணவு

பண்டைய தமிழர்கள் புளித்த உணவைப் பெரிதும் விரும்பினர் (முத்துலிங்கம் 2004). புளித்த உணவின் மகிமையைப் போற்றினர்[1]. இதன் காரணமாகவே மாங்காய், புளித்த தயிர், மோர், புளி, நாள்பட்ட தேன் (தேறல்) போன்றவற்றை அதிகமாகப் பயன்படுத்தினர். தேன் தேறலாக மாற்றப்படுவதற்கு அது மூங்கிலின் உள்ளறையில் நாட்பட வைக்கப்பட்டதாகத் திருமுருகாற்றுப்படை கூறுகிறது. புறநானூறு போன்ற சங்கப் பாடல்களில் புளித்த உணவு பற்றிப் பல பாடல்கள் இருக்கின்றன. ஔவையாரைக் 'கூழுக்குப் பாடி' என்பர்; மற்றவர்கள் எல்லாம் பொன்னுக்கும், பொருளுக்கும் பாடிய காலத்தில், இவர் புளித்த கீரைக்கும், மோருக்கும் பாடினார். ''வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் (= கத்தரிக்காய்) வாட்டும் மொரமொரெனவே புளித்த மோரும்'' புள்வேர்ப்பூதனிடமிருந்து அவருக்குக் கிடைத்தபோது இவ்வுலகத்தையே அவற்றிற்கு ஈடாகக் கொடுக்கலாம் என்றார் (முத்துலிங்கம் 2004). ஆயர் மகளிர் வேளைப் பூவைக் கொய்து தயிரில் இட்டுப் பிசைந்து துணைக்கறி சமைப்பர். இதற்குப் பெயர் புளி

---

1) ''முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ
குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்
தான்துழந்து அட்ட தீம்புளிப்பாகர்'' (குறு.:167)

மிதவை (= புளிக்கூழ்)[1]. சில சமயம் இதனைச் தயிரோ உப்போ இல்லாமல் வேகவைத்து உண்பர்[2]. புளித்த மோர் மட்டுமன்றி, புளித்த கள்ளையும் தமிழர்கள் ரசித்து உண்டனர். ஆலூர் மூலங் கிழாரின் பாடலில் உள்ள ஒரு செய்தி இதனை விவரிக்கிறது: ''சிவந்த கண்கள் உடைய வீரர்கள் ஒருவர்க்கொருவர் கள் பரிமாறிக் கொள் கிறார்கள். வயிறு நிறைந்து போக, மேலும் புளிப்புக்காக ஏங்கி களாப் பழமும், துடரிப்பழமும் தின்பர். அதுவும் போதாமல் நாவல் பழங்களையும் தின்பர்''. இதற்கான இன்னொரு எடுத்துக்காட்டும் புறநானூற்றில் உள்ளது: ''தினை முற்ற, அதைக் கொய்து காட் டெருமைப் பாலில் முன்பு மானிறைச்சி சமைத்த, பழைய வெள்ளைக் கொழுப்பு கரையெல்லாம் ஒட்டியிருக்கும் பானையில் இட்டு சமைத்துச் சாப்பிடுவார்கள்''. அவர்கள் பானைகளைக் கழுவுவதே இல்லை; புளித்த பானையிலேயே திருப்பித் திருப்பி சமைத்து புளிருசியை அதிகப்படுத்துவார்களாம் (முத்துலிங்கம் 2004). புளிப்பான உணவில் அன்று இருந்த நாட்டமே இன்றும் தோசை யிலும், இட்டிலியிலும் தமிழர்களின் ஈடுபாடு தொடர்ந்து இருப்ப தற்குக் காரணம் (பார்க்க, பின்னால்). புட்டும், தொடக்கத்தில் தமிழர் உணவு தான். சேர நாட்டில் தோன்றியதாகக் கருதப்படும் இவ்வுணவு புளிப்பு இல்லாத உணவு என்பதால் தமிழகத்தில் பிரபலம் அடைய வில்லை போலும்! ஆனால் உதிர்ந்த புட்டுக்காகச் சிவபெருமான் வைகை நதிக்கரையில் பாண்டியனின் பிரம்பால் முதுகில் அடிவாங்கி ''பிட்டுக்கு மண் சுமந்தது'' திருவிளையாடல் புராணத்தில் காணப் படும் செய்தியாகும். பண்டைய புட்டு நீராவியில் வேகவைத்து (steamed) செய்யப்பட்டதா என்பது விவாதத்திற்குரிய தலைப்பாகும்.

ஈ) குழைத்த உணவு

குழைத்து உண்பதும் பண்டைய தமிழர்களின் முக்கிய உணவு வழக்கமாகும். மேலைநாட்டவர் போல் உணவுப் பொருட்களைத் தனித்தனியாக ருசிப்பதில் இவர்களுக்கு நாட்டமில்லை. ஆறுசுவை களும் கலந்த உணவுதான் பிடித்தது[3]. வள்ளுவர் 'பல்சுவை உணவு'

---

1) ''தாதெரு மறுகிற் போதொடு பொதுளிய
வேளை வெண்பூ வெண்டயிர்க் கொளீஇ
ஆய்மகள் அட்ட அம்புளி மிதவை'' (புறம்.:215:2-4)

2) ''குப்பை வேளை உப்பிலி வெந்ததை'' (சிறுபாண்.:137)

3) ''உண்டி நாலுவி தத்திலாறு சுவைத்திறத்தினில்...
அமுது செய்ய அளித்துள்ளார்'' (பெரி.பு.:இளையான்குடி.:4)
(மாறனார் என்ற நாயன்மார் நான்கு விதத்திலமைந்த அறுசுவை உணவை சிவனடியார்களுக்கு வழங்கியதைக் கூறும் பாடல் அடிகள்)

என்ற சொற்றொடரைப் பயன்படுத்தி, அதனை விருந்து என்ற பொருளில் ஆளுகின்றார். எனவே தமிழர்களின் விருந்தில் அறுசுவை உணவு வகைகள் இருந்தன என்பது தெளிவு. இதனைப் புறநானூற்றில் வரும் கபிலர் பாடல் ஒன்று சித்தரிக்கிறது : ''வரகு அறுத்து, தினை அறுத்து, வெள்ளை அவரை அறுத்து, நிலத்திலே புதைத்து மூப்படையச் செய்த கள்ளைப் பகிர்ந்து, வெண்ணெயில் கடலை பொரித்து சமைத்த அரிசி உணவை வீட்டுப் பெண்கள் நீண்ட கைகளால் பரிமாற, குழைத்து உண்பர்'' (முத்துலிங்கம் 2004). இதே கருத்தை சஞ்சய் சுப்பிரமணியமும் (2004) பின்வருமாறு வலியுறுத்துகிறார்: ''நமது உணவுகளில் சிறப்பானவை எல்லாம் கலப்பின் மூலமே உருவாகியிருக்கின்றன''. ஆனால், தற்பொழுது, உணவுகளையும் உணவு முறைகளையும் கலப்பதற்கு எதிரான மனப்பாங்கு அதிக அளவில் தோன்றியுள்ளது குறித்தும் அவர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

உ) மற்ற உணவுத் தயாரிப்பு வகைகள்

பண்டைய தமிழர் எண்ணெய், நெய் போன்றவற்றில் பொரித்த உணவுப் பண்டங்களை விரும்பி உண்டதில்லை என்று பரமசிவன் (2001) கூறுவது சரியென்று தோன்றுகிறது. ஆனால், பொரித்தல் தமிழகத்தில் 10ஆம் நூற்றாண்டுக்குப் பின்பு தான் நடைமுறைக்கு வந்திருக்க வேண்டும். கன்னடப் பகுதியில் பொரித்து உண்பது கி.பி. 10-ஆம் நூற்றாண்டிலேயே பரவலாகி விட்டது (கிருஷ்ணன் 2004). பூரி அப்போதே இருந்தது; ஹப்பலா என்ற பெயரில் அப்பளம் இருந்தது (கி.பி. 12-ஆம் நூற்றாண்டு); பொரித்தல் மூலம் தயாரிக்கப்பட்ட சாம்பார் 14-ஆம் நூற்றாண்டிலும், சக்கிலி என்ற பெயரில் முறுக்கு 16-ஆம் நூற்றாண்டிலும், அதிரசம் 17-ஆம் நூற்றாண்டிலும் கன்னட நாட்டில் இருந்ததாகத் தகவல் கிடைத்துள்ளது. அங்கிருந்து இவ்வுணவு வகைகள் தமிழ் நாட்டிற்கு வந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. சாம்பார் என்ற சொல் கன்னடத்திலிருந்து தமிழகத்திற்கு வந்திருக்கலாம் என்றாலும் இதனைக் குறிக்கும் 'குழம்பு' என்ற கலவை உணவுப் பொருள் முன்னரே தமிழகத்தில் வழக்கத்திலிருந்தது. நண்டும் பீர்க்கங்காயும் கலந்து செய்த குழம்பு (= சாம்பார்) இன்றும் காரைக்கால் பகுதியில் செய்யப்படுகிறது என்றும், இச்செய்தி ஏற்கனவே சிறுபாணாற்றுப்படைப் பாடல், (சிவனடியார்களுக்கு வழங்கியதைக் கூறும் பாடல் அடிகள்) ஒன்றில் கூறப்

பட்டுள்ளது என்றும் தங்கப்பா (2004) எடுத்துக் காட்டியுள்ளார்[1] இதே போன்ற செய்தியைப் புறநானூறும் கூறுகிறது[2]. புளிக்குழம்பும், விரால் இறைச்சியும், மீனும், அரிசியும், வள்ளைக் கீரையும், பீர்க்கங் காயும் கலந்த உணவு விருந்தாகக் கொடுக்கப்பட்டது என்று இப் பாடல் கூறுகிறது.

கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் நீராவியால் வேகவைத்து உணவு தயாரிக்கும் முறை (steam cooking), அதாவது அவித்தல் முறை, இருந்ததில்லை என்று கருதப்படுகிறது. கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் யுவான்சுவாங் என்ற சீனத் துறவி 17 ஆண்டுகளை இந்தியாவில் கழித்துவிட்டுத் திரும்பியபோது தன்னுடைய பயண நூலில் இந்தியாவில் ''அவிக்கும் பாத்திரம்'' (steaming vessel) இருந்த தில்லை என்று கூறியுள்ளார். இட்லி அவித்துத் தயாரிக்கப்படும் முக்கியமான தமிழர் உணவாக இப்பொழுது திகழ்கிறது. இட்லி எவ்வாறு தோன்றியது? இட்லி தமிழகத்தில் காலத்தால் பின்பு வந்த ஒரு உணவுப் பொருளாகும் என்று முத்துலிங்கம் (2004) கருதுகிறார். ஆராய்ச்சியாளர்களின் முடிவுப்படி இராஜேந்திர சோழன் காலத் திற்குப் பின்பு தான் இந்தோனேசியாவில் இருந்து அவிக்கும் பாத்திர மும் அதைப் பயன்படுத்தும் முறையும் தமிழகத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டன. 17-18-ஆம் நூற்றாண்டுக்கு முன்பு இட்லியைப் பற்றிய பேச்சே இல்லை என்று ஒரு சிலர் கூறினாலும், திருப்பதி கோவிலில் 15-ஆம் நூற்றாண்டிலேயே இட்லி (தோசையும் கூட) கடவுளுக்குப் படைக்கப்பட்டதாகக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன (கிருஷ்ணன் 2004). இட்லியைப் பற்றி அச்சையா (Achaya 1998) தன்னுடைய நூலில் வியப்பு தரும் செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார்.

---

1) ''அவைப்பு மாண் அரிசி அமலை வெண்சோறு
கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவிர்'' (சிறுபாண்.:194-195)
(நத்தத்தனார் என்ற புலவர் மருத நிலப்பகுதியில் பாடிய பாடல் இது. இதில் ''கவைத்தாள் அலவன் கலவை'' என்ற தொடருக்கு நச்சினார்க்கினியர் நண்டும் பீர்க்கங்காயும் கலந்த கலவை (குழம்பு) என விளக்கம் தருகிறார்.)

2) ''அடு மகள் முகந்த வளவா வெண்ணெல்
தொடிமாண் உலக்கைப் பரூஉக்குற் றரிசி
காடி வெள்ளுலைக் கொளீஇ நீழல்
ஓங்கு சினை மாவின் தீங்கனி நறும்புளி
மோட்டிரு வராஅல் கோட்டுமீன் கொழுங்குறை
செறுவின் வள்ளை சிறுகொடிப் பாகல்
பாதிரி யூழ்முகை அவிழ்விடுத்தன்ன
மெய் களைந்து இன்னொடு விரைஇ'' (புறம்.:399)

சிவகோத்யாசார்யா என்பவர் எழுதிய 'வட்டாராதனே' என்ற கன்னட நூலில் (கி.பி. 920) இட்லி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளதாக அச்சையா கூறுகிறார். வீடு திரும்பும் பிரம்மச்சாரிக்குப் படைக்கப்படும் 18 உணவுகளில் இட்லியும் ஒன்றாக இருந்தது என்று அவர் குறிப்பிடு கிறார். அவருடைய நூலில் இட்லி செய்யப்படும் முறை இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது: முதலில் உளுத்தம் பருப்பு மோரில் ஊற வைக்கப்பட வேண்டும். நன்றாக ஊறியபின் பருப்பு மாவாக அரைக்கப்பட வேண்டும். அரைத்த மாவைத் தயிர், சீரகம், கொத்து மல்லி, மிளகு, பெருங்காயத்துடன் சேர்த்துக் கலக்கி வட்டவடிவமாக ஆக்க வேண்டும். இதற்குப் பின் என்ன செய்ய வேண்டும் என்ற விவரங்கள் இந்நூலில் காணப்படவில்லை. கி.பி. 1130-இல் எழுதப் பட்ட 'மனசோல்லாஸா' என்ற வடமொழி நூலில் 'இட்டரிக்கா' என்னும் இட்லி (மேற்கூறிய கலவையாக இருக்கலாம் என்று கிருஷ்ணன், 2004 நம்புகிறார்) நெய்யில் பொரிக்கப்படுகிறது என்று கூறுகிறது. 13-ஆம் நூற்றாண்டுக் கன்னடநூல் ஒன்று ''இட்லி மதிப்பு அதிகம் உள்ள காசுகளைப் போல மிக லேசானது'' என்கிறது (கிருஷ்ணன் 2004). எனினும் தமிழில் இட்லியைப் பற்றிய முதல் குறிப்பு கி.பி. 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 'மச்சபுராண'த்தில் தான் வருகிறது என்று அச்சையா தன்னுடைய நூலில் குறிப்பிடுகிறார். பண்டைய இட்லியில் அரிசி சேர்க்கப்படுவதில்லை; அரைத்த மாவு அடுத்த நாள் வரை வைத்துப் புளிக்க வைக்கப்படுவதில்லை; நீராவி யில் வேகவைக்கப் படுவதில்லை. புளிக்க வைத்து வேகவைக்கும் உத்திகள் இந்தோனேசியாவிலிருந்து வந்திருக்கலாம் (அவிக்கும் பாத்திரத்துடன்) என்று கூறும் அச்சையா, இந்தோனேசிய உணவில் இதே போன்று புளிக்க வைத்து வேகவைக்கப்படும் உணவுப் பண்டத்தை 'கெட்லி' என்று அழைக்கிறார்கள் என்கிறார். 'கெட்லி' என்ற இந்தோனேசிய சொல் தமிழில் 'இட்லி'யாக மருவியதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. இராஜேந்திர சோழன் காலத்திற்குப் பின்பு இந்தோனேசிய அரசர்கள் இந்தியாவிற்குப் பெண் எடுக்க வந்தபோது அவர்களுடன் வந்த சமையல்காரர்கள் இந்த உத்திகளை அறிமுகம் செய்திருக்கலாம் என்றும் அச்சையா மேலும் கூறுகிறார். இட்லி செய்யும் முறை தமிழகத்தில் சற்று மாறியிருந்தாலும் பெயரில் அதிக மாற்றம் ஏற்படவில்லை என்பது தெளிவாகிறது (கிருஷ்ணன் 2004). வேறு நாட்டிலிருந்து வந்த இட்லியும் புளிக்க வைத்த மாவை அவித்துத் தயாரித்ததால் தான் இன்று வரை தமிழர்களுக்கு மிகவும் பிடித்தமான முக்கிய உணவாக மாறிவிட்டது என்பது குறிப்பிடத் தக்கது. பரமசிவன் (2001) கூற்றுப்படி இட்லி (மற்றும் தோசை)

விஜயநகர ஆட்சிக்காலக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன; 'இட்டளி' என்று அவை குறிப்பிடப்பட்டு உள்ளதாக அவர் கூறுகிறார். இச்சொல் (இட்டளி = இட்டு + அளி) மருவி 'இட்லி' ஆகியிருக்க லாமா?.

இட்லியைப் போன்று தோசையும் இன்றைய தமிழர்களின் முக்கிய உணவுச் சின்னமாக விளங்குகிறது (முத்துலிங்கம் 2004). தோசையைப் பற்றிய குறிப்புகள் திவாகரம், பிங்கலம், சூடாமணி போன்ற நிகண்டுகளில் வருகின்றன என்று கூறப்பட்டாலும், முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு வெளியான கூளப்பநாயகனின் 'விறலி விடு தூது' நூலில்தான் 'தோசை' என்ற சொல் முதன்முதலில் உணவுப் பொருளாகக் கையாளப்பட்டுள்ளது. அவதானி என்ற பார்ப்பனனுக்கு தாய்க்கிழவி எதற்காகக் கடன் கொடுத்தாள் என்ற வினாவிற்கு அவள் கூறிய பதில் இதோ : ''பொங்கலுக்குப் பாசிப்பயறென்றும், பாலென்றும், நெய்யென்றும், தோசைக்கு உளுந்தென்றும், படுக்கைக்கு வாழைப் பழமென்றும் கேட்டான்''. அச்சையா (Achaya 1998) கனகசபையின் நூலை மேற்கோள்காட்டி சங்கத் தமிழர்கள் தோசையை உண்டார்கள் என்று கூறுகிறார்; ஆனால் இதற்கான சரியான ஆதாரங்கள் இல்லை.

பஜ்ஜி தென்னிந்திய உணவுதான் என்று கூறும் அச்சையா இங்கிருந்துதான் அது ஜப்பானுக்குப் போர்ச்சுகீசியர்களால் கொண்டு செல்லப்பட்டது என்றும், அங்கு அதற்கு 'டெம்புரா' என்ற பெயர் வைக்கப் பெற்றதாகவும் கூறுகிறார்; ஆனால் அங்கு பஜ்ஜிக்குள் மீன் வைக்கப்படுகிறது; வாழைக்காயோ, கத்தரிக்காயோ அல்ல. தமிழகத் திலும் மிகவும் சமீபத்தில்தான் பஜ்ஜியில் வெங்காயம், உருளைக் கிழங்கு, மிளகாய், காரட் போன்றவை வைக்கப்பட ஆரம்பித்தன.

வடை அல்லது 'வடகா' 2500 ஆண்டுகளுக்கு முன்பே புத்தமதம் சார்ந்த இலக்கியத்தில் சொல்லப்பட்டுள்ளது. தமிழில் வடையைப் பற்றிய குறிப்பு முதலில் எப்போது, எதில் வந்தது என்று தெரிய வில்லை. எனினும், அச்சையா தமிழ் வடை தான் வடநாட்டு வடகாவாக மாறியது என்கிறார்.

தெலுங்கு ஆட்சியாளர்களுடன் தமிழகம் வந்த 'லாலா' ('லாலா மிட்டாய்க்கடை') வகுப்பினர் கடலை மாவினைக் கொண்டு தயாரித்த கார, இனிப்பு வகைகள் நம் உணவோடு இரண்டறக் கலந்துவிட்டன. இதேபோன்றுதான் ஆங்கிலேயர் கொண்டுவந்த கோதுமை, மக்காச் சோளம் போன்றவற்றின் மாவினால் செய்யப்பட்ட ரொட்டி, பிஸ்கட், கேக் போன்றவையும்.

கலசூர்யா மன்னனான பிஜ்ஜாலாவின் (கி.பி. 1116) கல்வெட்டு ஒன்று கடலைப் பருப்பில் இருந்து சுடுதல் மூலம் பெறப்பட்ட கடலை அப்பம் (= கடலைக்கதுப்பு) பற்றிக் குறிப்பிடுகிறது (EI. ஏ.எண். 3A). அப்பம் பற்றிப் பெரியாழ்வாரும் தன்னுடைய பாடலில் குறிப்பிடுகிறார். 16-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் இந்தப் பருப்பிலிருந்து கடவுளுக்குப் படைக்கப்படும் நைய்வேத்ய உணவுப் பொருட்கள் தயாரிக்கப்பட்டன என்று கூறுகின்றன (எடுத்துக் காட்டாக, SII.IV. எண்.250 EI.VIII. எண். 10). ஆனால் இதற்கு முந்தைய காலங்களில் இந்தியாவின் பல பகுதிகளில் இப்பருப்பு குதிரைகளின் உணவாகத் தான் பயன்படுத்தப்பட்டது என்று அறிகிறோம் (Gode 1961).

வீரராஜேந்திரன் மற்றும் விஜயநகர அரசர்களின் கல்வெட்டு களிலும், வேறுசில கல்வெட்டுகளிலும், பல உணவுப் பொருட்கள் பற்றியும் அவற்றில் சேர்க்கப்பட்ட தாவரப் பொருட்கள் பற்றியும் விரிவான செய்திகள் காணப்படுகின்றன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

i) **காய்கறி :** இது தற்போதைய வழக்கிலுள்ள 'காய்கறி'களைக் குறிக்கவில்லை. முதலாம் இராஜராஜ சோழனின் கல்வெட்டு ஒன்றிலிருந்து (SII.II. எண். 26) இந்த வகை உணவுத் தயாரிப்பில் கருமிளகு, கடுகு, உப்பு, காய்கறிகள் போன்றவை பயன்படுத்தப் பட்டதாகத் தெரிகிறது. இந்தச் சொல்லே காய்களும் கறிமிளகும் சேர்ந்த கலப்பிலிருந்து (காய்+கறி (மிளகு)) பெறப்பட்டதாகும். காய்கறியின் உபவகை உணவில் ஒன்றான 'அப்பக்காய்கறி'யில் பழையசாதம், பருப்பு, கருமிளகு, கடுகு, சீரகம், நாட்டுச் சர்க்கரை (வெல்லச் சர்க்கரை), நெய் முதலியன சேர்க்கப்பட்டன.

ii) **புளிக்கறி :** இதில் சேர்க்கப்பட்ட பொருட்கள் கருமிளகு, கடுகு, நாட்டுச் சர்க்கரை?, புளி, தயிர், கொள்ளு, வாழைக்காய் (SII.II. எண். 26).

iii) **புளுக்குக்கறி :** இதில் சேர்க்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் ஒன்றாகக் கொதிக்க வைக்கப்படும். இதில் சேர்க்கப்பட்ட பொருட்களில் முக்கியமானது பச்சைப்பயிறு ஆகும். பிற்காலத்தில் பச்சைப்பயிறுக்குப் பதிலாகத் துவரம்பருப்பு சேர்க்கப்பட்டது.

iv) **பொரிக்கறி :** இது நெய்யில் வறுக்கப்பட்ட ஒரு உணவு வகையாகும். இதில் சேர்க்கப்பட்ட பொருட்கள் கருமிளகு, கடுகு, உளுந்து, சீரகம், மஞ்சள்தூள், இஞ்சி, உப்பு, புளி?, புதினா? மற்றும் காய்கறிகள்.

v) **வாய்க்கமுது :** இது ஒரு வேகவைத்த உணவாகும். இதில் அரிசி, பச்சைப் பயிறு மற்றும் வெல்லம் சேர்க்கப்பட்டது.

vi) **அப்பம் :** இதில் சேர்க்கப்பட்ட பொருட்கள் அரிசி, நெய், வெல்லம், கருமிளகு, சீரகம், பெருங்காயம் போன்றவையாகும் : இதில் ஒருவகை மெதுபொரி அப்பம் எனப்பட்டது.

vii) **தயிர்சாதம் :** 'தத்தியோதனா' எனப்பட்ட இதில் அரிசிச் சாதம், தயிர், நெய், இஞ்சி மற்றும் ஏலக்காய் போன்றவை சேர்க்கப் பட்டன.

viii) **கறியமுது :** இதன் முக்கிய சேர்க்கைப் பொருட்கள் காய் கறிகள், கருமிளகு, நெய் மற்றும் சீரகம். காய்கறிகளில் கத்தரிக்காய், வாழைக்காய், பாகற்காய், வெள்ளரிக்காய் போன்றவை அடங்கும்.

ix) **சுகியன் :** ''சூயம்'' என்று அழைக்கப்பட்ட இதில் அரிசி, பச்சைப்பயிறு, வெல்லம், நெய் மற்றும் கருமிளகு அடங்கும். தற்போது பச்சைப் பயிறுக்குப் பதிலாகத் துவரம்பருப்பு சேர்க்கப் பட்டும், மிளகு நீக்கப்பட்டும் சுகியன் தயாரிக்கப்படுகிறது. இது பிராமணர்களால் திதி (தெவசம்) தினங்களில் மட்டும் தயாரிக்கப் பட்டது. இன்றும் இந்த வழக்கம் தொடர்கிறது.

x) **பானகம் :** கருப்பட்டியும், ஏலமும், நீரும் சேர்ந்த கலவை.

xi) **கும்மாயம் :** ஏற்கனவே இதைப் பற்றிய விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

xii) **சர்க்கரைப் பொங்கல் அல்லது அக்காரவடிசல்:** அரிசி, உளுந்து (அல்லது பயிறு) மற்றும் கருப்பட்டி அல்லது நாட்டுச்சக்கரை ஆகியவற்றின் வேகவைத்த கலவை.

இதுபோன்ற உணவுகள் சோழர்காலக் கல்வெட்டுகளிலும் பேசப்படுகின்றன (பரமசிவன் 2001).

இன்றைய இந்தியாவில், நம்முடைய உணவில் பயன்படுத்தப் படும் அடிப்படையான தாவரப் பொருட்கள் பல 15-ஆம் நூற்றாண்டுக்குப்பின் நுழைந்தவை என்று ஏற்கனவே இந்த அத்தியாயத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. எந்தெந்தத் தாவர உணவுப் பொருட்கள் எப்பொழுது, எங்கிருந்து இந்தியாவிற்குக் கொணரப் பட்டன என்பது பற்றிய விவரங்கள் இந்த நூலின் நான்காவது அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த அடிப்படையில், தமிழகத்தின் பல்வேறு மக்களிடம் காணப்பட்ட உணவுப் பழக்கங் களை நாம் பகுத்தறிய வேண்டும். இன அடிப்படையிலோ, சாதி

அடிப்படையிலோ இவற்றிற்கு விளக்கம் கொடுக்க முயல்வது மக்களைத் தவறாகப் புரிந்துகொள்ள வழிகோலும். இதற்கு எடுத்துக் காட்டாக, உணவு வகைகளில் பெருங்கோவில் உணவு வகைகள் வித்தியாசமானவை என்று ஒருசிலர் கருத்து கொண்டிருப்பதைக் கூறலாம் (பார்க்க, பரமசிவன் 2004). பூமிக்குக் கீழ் விளைந்த கிழங்கு வகைகளை மிகுந்த ஆசாரம் கொண்ட பிராமணர்கள் உண்ணுவ தில்லை என்பதால் இவை பெருங்கோவில்களிலும் தவிர்க்கப் பட்டதாக ஒரு சிலர் கருதுகிறார்கள். இதேபோன்று வெங்காயம், பூண்டு, மிளகாய், மசாலா சாமான்கள் போன்றவையும் ஒருசில பிராமணர்களால் (ஒருசில ரெட்டியர் மற்றும் பிள்ளைமார் சாதி மக்களாலும்) உணவில் தவிர்க்கப்படுகின்றன என்பதும் உண்மை. ஆனால் அடிப்படை என்னவெனில், இவை அனைத்துமே வெளிநாடு களிலிருந்து இந்தியாவிற்குள் கடந்தசில நூறு ஆண்டுகளுக்குள்தான் நுழைந்துள்ளன. இவற்றை ஒருசில பிராமணர்கள் மற்றும் வேறு சிலர் இதுவரை தம்முடைய உணவில் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது தான் உண்மை. எனவே கோவில்களில் இவை இன்னும் பயன் படுத்தப்படவில்லை என்பதற்கும், இவ்வுணவுத் தாவரங்கள் வெளி நாட்டிலிருந்து வந்தவை என்பதுதான் உண்மையான காரணமாகும் (சஞ்சய் சுப்பிரமணியம் 2004). பாஹியான் தன்னுடைய பயணக் கட்டுரையில் இந்தியர்கள் வெங்காயம், பூண்டு ஆகியவற்றை உண்ப தில்லை என்று குறிப்பிட்டுள்ளார். அவருக்குப் பின்வந்த யுவான் சுவாங், இவை அரசர்களால் தடை செய்யப்பட்டிருந்தன என்று கூறுகிறார். எவராவது வெங்காயம், பூண்டு சாப்பிட்டால் அவர்கள் நகர மதிலுக்கு அப்பால் வெளியேற்றப்பட்டார்கள் என்றும் அவர் கூறுகிறார். கி.பி. 15ஆம் நூற்றாண்டு வரை இவை (முக்கியமாக கிழங்கு வகைகள்) தமிழர்களின் உணவுகளிலும் இல்லை என்பதை அனைவரும் உணர வேண்டும். எந்த சிறுகோவில் உணவு வகைகளி லாவது வெளிநாட்டுக் கிழங்குப் பொருட்கள் (உருளைக் கிழங்கு போன்றவை) உள்ளனவா?

தஞ்சை நாயக்க மன்னரான விஜயராகவ நாயக்கர் எழுதிய 'இரகுநாதாப்யுதயம்' என்ற தெலுங்கு நூலின் மூன்றாம் ஆச்வாசத்தின் 115-இல் இருந்து 250 வரை உள்ள செய்யுட்கள் இரகுநாதநாயக்கர் தன் தேவியருடன் அரண்மனை உணவுக்கூடம் (= 'சாருவிலாச போஜன சாலை') சென்று உணவு அருந்தித் திரும்பும் காட்சியினை விவரிக் கின்றன (வேல்சாமி, 2004). மன்னர்முன் வைக்கப்பட்ட பெரிய தங்கத் தட்டில் வாழை இலை விரிக்கப் பெற்று அதில் பரிமாறப்பட்ட அன்னமும் பிற உணவு வகைகளும் கூறப்பட்டுள்ளன : பொடிகளில்

எள்ளுப்பொடி, தேங்காய்ப் பொடி, கருவேப்பிலைப் பொடி, மசாலா பொடி (வெங்காயம், பூண்டு பொடிகள், ஜாதிக்காய், ஜாலபத்ரி); பொரிக்கப்பட்டவைகளில் அப்பளம், வடாம் (வடவம்); இனிப்பு வகைகளில் பேணி, மாண்டே, லட்டு, பூர்ணகலச மோதகம், கஜ்ஜாயம், அதிரசம், பருப்பு வைத்த மோதகம், சாரத்தலு, மிகட சட்லு (= பாசந்தி), பன்னீர்ப் பாயசம், ஜீரகப் பாயசம், குளிர்ந்த பாயசம், சொஜ்ஜிப் பாயசம், திரட்டுப் பால், சீகரணி என்ற சர்க்கரைச் சாதம், தேங்காய்ப் பால், தேன்; பலவித அன்னங்கள்; கறிவடை, தயிர் வடை, ஆமவடை; வறுவல் ரொட்டி, தேங்காய் ரொட்டி, சாம்பார் ரொட்டி; கொத்தவரங்காய் பொரியல், பொடிமாஸ்கறி; உளுந்து, கடலைப் பருப்புப் பண்டங்கள்; மணுகுபூல (முள்முருக்கு); எலுமிச்சை ரசம்; வெண்ணெய்; சர்க்கரை; பழங்களில் பேரீச்சம்பழம், விளாம்பழம், வெள்ளரிப்பழம், மாதுளம்பழம், ரசதாழப்பழம் (=ரஸ்தாளி), தேன் கலந்த பலாப்பழம், தேன் கலந்த மாம்பழம், தேன் கலந்த திராட்சைப் பழம்; நீர்மோர்; ஏலம், சுக்கு எலுமிச்சை மற்றும் வெட்டிவேர் கலந்த நீர்.

ஊ) உணவு வழங்கப்படும் முறைகள்

உணவு பரிமாறப்படும் மற்றும் உண்ணப்படும் முறைகள் பற்றிய செய்திகளையும் இங்கு குறிப்பிட வேண்டும். வாழை இலை பன்னெடுங்காலமாக உணவு பரிமாறப்படும் 'தட்டு' போன்று பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. வாழைக் குருத்தை (இலையை), கூர்த்தபக்கம் இடப்பக்கம் வரும்படியாக விரிக்க வேண்டும் என்று சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார்; இறந்தவர்களுக்கு உணவுப் படையல் இடும்போது தான் கூர்த்தபக்கம் வலப்பக்கமாக இருக்கும்படி விரிக்க வேண்டும்; நின்று கொண்டுதான் உண்ண வேண்டும், உண்ணும் போது பேசக் கூடாது என்பன சமணத் துறவிகளின் வழக்கம்; இக் கருத்தை அப்பர் தன் தேவாரத்தில் கண்டிக்கிறார்.

IX
தாவரமும் தமிழர் மருந்தும்

அ) முன்னுரை

இந்தியா - குறிப்பாகத் தமிழகம் - பல்வேறுபட்ட வளமான நல்வாழ்வு மற்றும் மருத்துவ மரபுகளைக் கொண்டுள்ளது என்பதில் எந்தவிதக் கருத்து வேறுபாடும் இல்லை. இந்த மரபுகள் மிகவும் நீண்ட காலமாக, எவ்வித இடைவெளியுமின்றி தொடர்ந்து பாதுகாக்கப்பட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டும் வந்துள்ளன என்பதிலும் எந்தவித ஐயமுமில்லை. கி.பி. முதல் நூற்றாண்டு நூல்கள் முதல் தற்போதைய தமிழ் இலக்கியம் வரை எல்லாவற்றிலும் 'மருந்து' என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருப்பது இக்கருத்தை வலியுறுத்துகிறது. எடுத்துக்காட்டாக, பெரியபுராணத்தில் கூறப்படும் ''மின் செய்வார் பகழிப் புண்கள் தீர்க்கும் மெய்மருந்து'' என்ற வரிகளைச் சுட்டலாம். இம் மரபுகளை வரலாற்றுக் காலம் முழுவதும் தொடர்ந்து பல மருத்துவ வல்லுநர்கள் கட்டிக்காத்து வந்துள்ளார்கள் என்பதும், இந்த மரபுகளின் அடிப்படைகளாகப் பலநூல்களும் இயற்றப்பட்டு வந்துள்ளன (குறிப்பாக சித்த, ஆயுர்வேத மற்றும் யுனானி மருத்துவ முறைகளில்) என்பதும் மிகவும் தெளிவாகப் புலப்படுகின்றன. தமிழக மற்றும் இந்திய மருத்துவ முறைகளின் தாக்கம் ஆசியா, அரேபியா மற்றும் கிரேக்க நாடுகளிலும் இருந்தது என்பதற்கான ஆதாரங்களும் பல உள்ளன. பல மருத்துவப் பொருட்கள் இந்தியாவிலிருந்து குறிப்பாகப் பண்டைய தமிழகத்தின் மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களிலிருந்து பெறப்பட்டன என்று டியாஸ்கோரிடீஸ் (Dioscorides) என்பவரின் மிகப் பண்டைய கிரேக்க மருத்துவ நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆ) தாவரமும் மருந்தும்

பன்னெடுங்காலமாகவே, தாவரங்கள் மருந்துப் பொருட்களின் ஆதாரங்களாகத் திகழ்ந்து வந்துள்ளன. திருக்குறளில் மருந்து மற்றும்

மருத்துவம் ஆகிய இரண்டையுமே குறிக்கும் சொல்லாக மருந்து என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது [1]. ''திருத்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய மருந்து போல'' என்று பாலைக்கலி கூறுவதிலிருந்து மருந்துப் பொருள் என்பதை மட்டும் குறிக்கும் சொல்லாகவும், மருந்து என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது (கலி.:17) புல், பூடு, செடி, புதல், மரம், கொடி என வளரியல்பு நோக்கில் அமைந்த தமிழர்தம் தாவர வகைப்பாடு 'மருந்து' என்ற .பெயரிலேயே நிகண்டுகளில் பதிவாகியுள்ளது [2]. இவற்றை நோக்க, மருந்து என்ற சொல்லே தாவரங்களைக் குறிக்கப் பயன்படுத்தப் பெற்றமை புலனாகிறது (நெடுஞ்செழியன் 2005). இதேபோன்று ''மரம்சா மருந்தும் கொள்ளார்'' (நற்.:226) என்றவிடத்து இடம் பெறும் மரம் என்ற பெயரும் மூலிகைகளாக விளங்கும் அனைத்துத் தாவர வகைகளையும் ஒருங்கே சுட்டி நிற்கிறது எனலாம் [3]. கம்பரும் அசோக வனத்தில் சிறைப்பட்ட சீதையை வாடிய செடியோடு உவமிக்கும் போது செடிக்கு இணையாக மருந்து என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார் [4]. இவற்றின் அடிப்படையில் 'மரம்' என்ற பெயரினின்றே 'மருந்து' என்ற பெயர்ச்சொல்லும் உடன் காரணப் பெயராகத் தோன்றியிருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார் நெடுஞ்செழியன் (2005). இந்த கருத்துக்கு, மருந்தாகச் செயல்படும் பொருட்களில் 90 விழுக்காட்டுக்கும் மேல் தாவரங்கள் திகழ்கின்றன என்ற உண்மை மேலும் வலிவுகொடுக்கிறது. மருத்துவத் தன்மை கொண்டதாக உணரப்பட்ட தாவரங்களில் பெரும்பாலானவை தமிழகத்தின் பக்தி இயக்கக் காலத்தில் தெய்வ வடிவினதாகவே கொள்ளப்பட்டன.

---

1) ''உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச் செல்வான் என்று
அப்பால் நாற்கூற்றே மருந்து'' (குறள்:950)

2) ''புல்லும் மரனும் புதலும் பூடும்
வல்லியும் பெயர்பெறு மருந்துச் சஞ்சீவி'' (பிங்.நி.:2781)
''புல்லும், மரனும், புதலும், பூடும்
வல்லியும் பெயர்க் கொடை மருந்தெனப்படுமே'' (சே.தி.:84)

3) இதே கருத்தை கி.பி.600-ஐச் சார்ந்த அஷ்டாங்க இருதயா என்ற வடமொழி நூலும் பின்வருமாறு வலியுறுத்துகிறது (சூத்ரஸ்தானா Ch.9 பாடல் 10) : *"Jagatyevam anoushadham na kinchit vidyate dravyam vashaannarthayagayoh"* (இந்த பிரபஞ்சத்தில் மருத்துவ குணமற்றது என்று எந்த பொருளும் (தாவரங்கள் உட்பட) இல்லை; பிரபஞ்சத்தின் பொருட்களை பல்வேறு வகைகளில்பல்வேறு செயல்களுக்காகப் பயன்படுத்தலாம்)

4) ''கல் மருங்கு எழுந்து என்றும் ஓர்துளி வரக்காணா
நல் மருந்து என நலன்ற உணங்கிய நங்கை (கம்ப.:சுந்.காட்சி.பா.3)

இவற்றில் பெரும்பான்மையானவை கோவிலின் தலமரங்களாக வோ, கோவில் காடுகள் அல்லது நந்தவனங்களில் வளர்க்கப்பட்ட தாவரங்களாகவோ திகழ்ந்தன. மருத்துவத் தன்மை கொண்ட தாவரங்கள் அனைத்தும் ஊரின் நடுவே அமைந்த கோவிலில், மக்கள் தேடி அலைந்து கொள்ள வேண்டிய கட்டாயம் இன்றி - அனை வருக்கும் எளிதாகக் கிடைக்கும் வகையில் - காணப்பட்டதும் அவை வழிபாட்டுக்குரிய சிறப்பைப் பெறக் காரணமாகும் (சுந்தர சோபிதராஜ், *1994* : திருஞானம் *1998*). ''மரம்சா மருந்தும் கொள்ளார்'' (நற்.*:226*) என்று ஏற்கனவே குறிப்பிட்ட சங்க இலக்கிய வரியும் ''மருந்தாகித்தப்பா மரத்தற்றால்'' என்ற திருக்குறளின் வரியும் மரங்களை மருத்துவத் தன்மை வாய்ந்த இயற்கைப் பொருட் களாகவே காண, பக்தி காலத்தில் இவை மருத்துவ ஆற்றலாலேயே வழிபாட்டுப் பொருட்களாகின என்றும் கொள்ளலாம்.

இ) நோயும், உணவும்

நோய்க்கான காரணம் தாவரப் பொருட்களை உள்ளடக்கிய உணவில்தான் அமைந்துள்ளது என்பதைப் பண்டைய தமிழர் நன்கு உணர்ந்திருந்தனர். ''உணவே மருந்து, மருந்தே உணவு'' என்ற வாக்கின் உண்மையையும் நன்கு உணர்ந்திருந்தனர். ஏற்கனவே உண்ட உணவு நன்கு செரித்து விட்டது என அறிந்து அதன் பின் உண்டால் நோய் அணுகாது [1] என்பதும், அளவோடு உணவு உண்டால் நோய் வராது [2] என்பதும் வள்ளுவர் எடுத்துக் காட்டியுள்ள சிறப்பான உண்மைகளாகும். நோயும் உணவும் நெருங்கிய தொடர்பு கொண் டிருப்பதால், வயதுக்கேற்ற உணவு என்பதை ஒரு சமுதாயப் பழக்க மாகவே பண்டைய தமிழர்கள் கடைப்பிடித்தனர். அரிசி, அவல், கம்பு போன்ற தானியங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட கஞ்சி வயது முதிர்ந்தோர்க்குச் சிறந்த உணவாகும். மகப்பேறு கண்ட பெண்ணுக்கு உரிய உணவு மருத்துவப் பயன் சார்புடையதாகும். ''பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென நோயுண் மருந்து தாயுண்டாங்கு'' என குழந்தைக்காகத் தாய் மருந்துண்டதனைச் சங்க இலக்கியம் கூறுகிறது.

---

1) ''மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி யுணின்'' (குறள்:*942*)

2) ''அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு'' (குறள்:*943*)
''இழிவறி துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்'' (குறள்:*946*)

ஈ) தமிழக மருத்துவ முறையின் பல்வேறு மட்டங்கள்

மருத்துவம் என்ற சொல் மனித மருத்துவத்திற்கும் விலங்கின மருத்துவத்திற்கும் பொதுவாக அமைந்த சொல் என்று கொள்ளலாம். இதனையே அக்காலத்தில் 'வாகடம்' என்ற சொல்லாலும் அழைத்தனர். தமிழக மருத்துவ மரபின் மிகச்சிறந்த தனித்தன்மை என்னவெனில் அது மூன்று வேறுபட்ட மட்டங்களில் திறம்படச் செயல்பட்டு வந்துள்ளது என்பதுதான். இந்த மூன்று மட்டங்களும் வரலாற்றின் ஆரம்பகாலம் முதல் இன்றுவரை தொடர்ந்து நன்கு இயங்கி வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மூன்று மட்டங்கள் முறையே (i) நாட்டு மருத்துவம் (= நாட்டு வைத்தியம்) (folk medicine) (ii) பழங்குடியினர் மருத்துவம் (tribal medicine) மற்றும் (iii) சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவம் (Siddha and Ayurveda medicine). இந்த வகைப்பாடு ஓரளவுக்குச் செயற்கையானது; ஏனெனில் இம் மூன்றிற்கும் பொதுவான மருத்துவத் தாவரங்கள் உள்ளன. ஒரே தாவரம் ஒரு குறிப்பிட்ட நோய்க்கு மூன்று மட்ட மருத்துவமுறைகளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதும் மேற்கூறிய கருத்தை வலியுறுத்தும். எடுத்துக்காட்டாக, ஆயுர்வேத மருத்துவ முறையில் பயன்படுத்தப்படும் ஏறத்தாழ 1770 தாவரங்களில் 745 சித்த மருத்துவத்திலும், 730 நாட்டு மருத்துவத்திலும், 650 யுனானி மருத்துவத்திலும் பயன்படுத்தப்படுகின்றன. இதேபோன்று சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் ஏறத்தாழ 1120 தாவரங்களில் 745 ஆயுர்வேதத்திலும், 635 நாட்டு மருத்துவத்திலும், 485 யுனானி மருத்துவத்திலும் பயன்படுத்தப்படுகின்றன (Shankar et al 2000). எனினும், தெளிவான முறையில் செய்திகளை எடுத்துக் கூறுவதற்கு மேற்கூறிய வகைப்பாடு பெருமளவு உதவும். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் இந்தியாவிலிருந்தும் உலகின் வேறுசில பகுதிகளிலிருந்தும் ஏறத்தாழ 24,000 ஓலைச்சுவடிகளைச் சேகரித்துள்ளது. இவற்றில் 4000 சுவடிகள் மருத்துவம் சார்ந்த செய்திகளை அளிக்கின்றன. இந்த ஓலைச் சுவடிகளில் பல இன்னும் அச்சேற்றப்படவில்லை. இன்னும் சேகரிக்கப்பட வேண்டிய ஓலைச் சுவடிகளின் எண்ணிக்கை கணக்கற்றது (Balasubramanian 2000; Shankar 2002). பிரேமா மற்றும் ரங்கராசன் (2000) கூற்றுப்படி தமிழகத்தில் ஏறத்தாழ 25,000 மருத்துவச் சுவடிகள் இருப்பதாகத் தெரியவருகிறது. இவற்றில் காகிதத்தில் எழுதிய சுவடிகளும் அடங்கும். சித்த நூல்கள் பல மூலஓலைச் சுவடிகளிலிருந்து காகிதத்தில் நகல் எடுக்கப்பட்டன. பல மருத்துவச் சுவடிகள் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் இருக்கின்றன. பாண்டிச்சேரியின் ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்புகள்

மூலமும் மருத்துவம் பற்றிய பல செய்திகளை அறியமுடிகிறது. எடுத்துக்காட்டாக கி.பி. 16ஆம் நூற்றாண்டில் பிரான்சுலா பெர்னியோ என்ற ஐரோப்பியப் பயணி முகலாய மன்னரின் மருத்துவராகப் பணியாற்றினார் எனத் தெரிய வருகிறது. மருத்துவப் பொருட்களான கற்பூரம், நாகம், பரங்கிச் சக்கை போன்றவை சீனாவில் இருந்தும், கற்பூரம், சாம்பிராணி, குந்திரிகம், குங்கிலியம் போன்றவை சுமத்ராவி லிருந்தும் இறக்குமதி ஆயின. தமிழகத்தில் உள்ள ஓலைச் சுவடிகளி லிருந்து பெறப்படப்போகும் செய்திகள் நிச்சயமாகக் கீழே கூறப் பட்டுள்ள செய்திகளுக்கு மேலும் வலிவூட்டும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

i) நாட்டு மருத்துவம்

வழிவழியாகக் குடும்பங்களிலும், கிராமங்களிலும் பயன் படுத்தப்பட்ட மருத்துவமுறை தான் நாட்டு வைத்தியம் எனப்படும் நாட்டு மருத்துவம். இது முற்றிலும் அனுபவங்களால் வளர்ந்த மரபுவழி மருத்துவ முறையாகும். எனவே இது அனுபவ வைத்தியம் என்றும் அழைக்கப்படும். பண்டைய தமிழ் மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்ததால் இயற்கையாகப் பெற்ற அனுபவங்கள் இந்தவகை மருத்துவம் மேன்மேலும் வளரத் தூண்டுகோல்களாக விளங்கின. நாட்டு வைத்தியம், கைமருந்து வைத்தியம், வீட்டு வைத்தியம், பாட்டி வைத்தியம் என்று பல்வேறு பெயர்களில் இம்மருத்துவமுறை இன்று அழைக்கப்படுகிறது. நோய்கள் இருக்கும் போது பத்தியம் அல்லது பத்தியமின்மை (அதாவது குறிப்பிட்ட உணவுப் பொருட்களை மட்டும் தேர்ந்தெடுத்து அல்லது விலக்கி உண்ணுதல்) இம்மருத்துவ முறையில் சிறப்பாகக் கடைப்பிடிக்கப் பட்டது. பிணியுற்றவர்களுக்கு அவர்கள் விரும்புவது கொடாது நோய் தீர்க்கும் மருந்து கொடுத்தனர் என்ற மேற்கூறிய கருத்தை நற்றிணைப் பாடல் ஒன்று [1] வலியுறுத்துகிறது.

நாட்டு வைத்திய முறைகள் பல நாட்டுப்புற பாடல்களின் வடிவிலோ மருத்துவப் பழமொழிகளின் வடிவிலோ காணப் படுகின்றன. பன்னெடுங்காலமாக, இவ்வடிவங்களில் பாதுகாக்கப் பட்டும் வந்திருக்கின்றன. நாட்டுப்புறப் பாடல்கள் சாதாரணமாக வோ, கும்மி வடிவிலோ அமைந்துள்ளன. இவற்றில் எடுத்துக்காட்டு களாக ஒருசில மட்டும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

---

1) ''அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாது
மருந்தாய்ந்து கொடுத்த அறவோன்'' (நற்.:136)

தாய் குழந்தையைப் பெற்றெடுக்குமுன் மிளகு சாப்பிட வேண்டும் என்பதைப் பின்வரும் பாடல் சுட்டுகிறது :

''அள்ளி மொளகு தின்னு - என் கண்ணே
அடி மொளகு தானும் தின்னு
படி மொளகு தானும் தின்னு - என் கண்ணே
புத்திரனா பெத்தெடுத்தேன்'' (தென்பாங்குப் பூந்தமிழ்.ப.17)

உடல் நோகலுக்கும், கை, கால் வீக்கத்திற்கும், வயிற்று வலிக்கும் உள்ள மருத்துவ முறைகள் பின்வரும் பாடல் வரிகளில் சுட்டப்பட்டுள்ளன :

''உடம்பெல்லாம் நோகுதம்மா - கண்ணே உனக்கு
ஒத்தடம் நான் கொடுக்கட்டுமா
ஏலமும் இஞ்சிச்சாறும் - கண்ணே உனக்கு
ஏட்டுச் சொட்டு கொடுக்கட்டுமா
....
....
கைகாலு வீக்கத்துக்கு மிஞ்சிப் போய்க் - கண்ணே உனக்கு
கணை எண்ணெய் வாங்கித் தாரேன்
....
....
வயிற்றுளைச்சல் மிஞ்சிப்போய்க் - கண்ணே உனக்கு
வயிற்றுவலி வந்திருச்சா?
வெற்றிலையும் உப்பும் வச்சுக் - கண்மணியே
வெறும் வயிற்றில் தின்னுடமமா'' (மலையருவி:ப. 233).

பக்கவலி மற்றும் வாய்வு தீர,

''சுக்குடன் முக்கா
வேளை இரண்டையும்
சுகமாய்க் காய்ச்சி அருந்திடவே
பக்கவலி வாங்கும்
வாய்வுகள் போமென்று
பகர்ந்து கும்மியடியுங்கடி'' (தங்கதுரை, 2005).

(முக்காவேளை = ஒரு மூலிகை; இதன் வேரைச் சுக்குடன் இடித்து காய்ச்சிக் குடிக்க வேண்டும்).

கண்வலி தீர,

''தென்னங்காயைத்
திருகி இட்டுச்

சிறுபயிற்றைப் பருப்பாக்கி
சேர்ந்துண்ண கண்வலி
தீருமென்று சொல்லி கும்மி
சித்திரப் பெண்கள் அடியுங்கடி'' (தங்கதுரை, 2005).

மேலும் பல மருத்துவக் கும்மிப் பாடல்களைத் திருச்சி அந்தியோதயா சங்கம் (சாஹுல் ஹமீது 2000) தொகுத்துள்ளது.

நாட்டுப்புற மற்றும் கும்மிப்பாடல்கள் போன்றே பழமொழி கள் பலவும் நாட்டுவைத்தியச் செய்திகளைத் தாங்கி நிற்கின்றன. இதோ ஒருசில எடுத்துக்காட்டுகள் :

''ஆற்றுநீர் வாதம் போக்கும், அருவிநீர் பித்தம் போக்கும், சோற்றுநீர் (பழைய சாதம்) இரண்டும் போக்கும்''

''வேலம்பட்டை பித்தத்தைப் போக்கும் : ஆலம்பட்டை மேகத்தைப் போக்கும்''

''மாதா ஊட்டாத அன்னம் மாங்காய் ஊட்டும்''

''இளைத்தவனுக்கு எள்ளைக்கொடு, கொழுத்தவனுக்குக் கொள்ளைக் கொடு''

''வாழை வாழ வைக்கும்''

''கண்ணுக்குத் தெளிவு பொன்னாங்கண்ணி''

''நன்னாரி விரும்பப் பொன்னாகும் மேனி''

''பொன்னாங்கண்ணிக்கு புளியிட்டு ஆக்கினால் உண்ணாப் பெண்ணும் உழக்கு உண்பர்''

''எட்டு மிளகு இருந்தால் எதிரி வீட்டிலும் சாப்பிடலாம்''

மேலும் பல மருத்துவப் பழமொழிகளுக்கு செயக்குமார் எழுதி திருச்சி அந்தியோதயா சங்கம் வெளியிட்டுள்ள ''மருத்துவக் குறளும் பழமொழியும்'' என்ற நூலைப் பார்க்கலாம்.

பண்டைய தமிழர் கடைப்பிடித்த ஒருசில வீட்டு வைத்திய முறைகள் (இன்றும் கிராமங்களில் பின்பற்றப்படுகின்றன) பின்வரு மாறு:

★ அல்லி அரிசியைக் கைம்பெண்கள் சாப்பிடுவர்; இது புலன் உணர்ச்சிகளைத் தூண்டாது.

★ போர்ப்புண் பெற்ற வீரன் வீட்டிற்குக் கொணரப்பட்டால் அவனைச் சுற்றி வேப்பிலையை வைப்பர் (நோய்க் கிருமிகள் அண்டாமல் இருக்க)

★ இலவம்பூ கறுக்குநீர் குடித்தால் குருதிப்பெருக்கு அடங்கும், மலம் இளகும், சிறுநீர் பெருகும்.

★ தாழம்பூ அம்மை நோயை அடக்கும்.

★ தூதுவளை இலை நுரையீரல் சளியைப் போக்கும்

★ மாதுளம்பூ மொட்டு இருமலுக்கு நல்லது

★ துளசி இலை சுரப்பிணி நீக்கும்

★ மயிலை மலர் குருதிப் பித்தத்தைப் போக்கும்

★ ஊமத்தை விந்து வெளியேற்றும் குணம் கொண்டது.

நாட்டு மருத்துவ முறையில் பண்டைய தமிழர்கள் பயன் படுத்திய (இன்றும் பயன்படுத்தி வரும்) முக்கியமான மருத்துவத் தாவரங்கள் பின்னிணைப்பு-3-இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

ii) பழங்குடியினர் மருத்துவம்

1991-ஆம் ஆண்டு இந்திய மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் படி தமிழகத்தில் 36 முக்கியப் பழங்குடி இனத்தவர் (tribal groups) வசித்து வருகின்றனர் (இராசேந்திரன், 2003). இவர்களின் மொத்த எண்ணிக்கை 5,74,194 ஆகும். இவர்களில் முக்கியமானவர்கள் இருளர், காடர், குறும்பர், வேடர், பனியர், தோடர் போன்றவர்கள். இந்நூலின் முதல் அத்தியாயத்தில் குறிப்பிட்டது போன்று, இவர் களில் பெரும்பாலானோர் ஆஸ்திரலாய்டு மனித மூதாதையர் வழி வந்தவர்களாவர். இயற்கையோடு இயைந்து திரிந்து வாழ்ந்த (இன்றும் வாழும்) இவர்கள் பெரும்பாலும் தமிழகத்தின் கிழக்கு அல்லது மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளோடு தொடர்புடைய வர்கள். எனவே இவர்களுடைய மருத்துவ முறையில், இயற்கையாக வளரும் இயல் தாவரங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. பொது வாகவே, பழங்குடியினர் எழுத்தறிவு அற்றவர்களாக இருந்ததினால் இவர்கள் பயன்படுத்திய மருத்துவத் தாவரங்கள், மருந்து தயாரிப்பு முறை, மருந்து கொடுக்கும் மற்றும் எடுத்துக் கொள்ளும் முறைகள், நோயறிதல் முறைகள் போன்றவை பற்றிய விவரங்கள் பல காலமாகவே பதிவு செய்யப்படவில்லை. மற்றவர்களுக்கும் இந்த விவரங்கள் கிடைக்கப் பெறவில்லை. எனினும், மத்திய அரசின் சுற்றுச்சூழல் துறையால் மேற்கொள்ளப்பட்ட பழங்குடியினர் பற்றிய அனைத்திந்திய ஆய்வுத் திட்டத்தின் (1985 - 1990) முடிவுகளின்படி இந்திய நாட்டுப் பழங்குடியினர்கள் மட்டும் 9000 தாவரச் சிற்றினங் களைத் தம்முடைய பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்து

கின்றனர் என்றும் இவற்றில் 7500 சிற்றினங்களை மருந்தாகப் பயன்படுத்துகின்றனர் என்றும் தெரிய வருகிறது. பழங்குடியின மக்களின் மருத்துவ முறைகளில் தீயமந்திரங்கள் (black magic) மற்றும் தூயமந்திரங்கள் (white magic) ஆகிய இரண்டும் கலந்து காணப்படு கின்றன (விஜயலட்சுமி 2001).

பெரும்பாலான பழங்குடிகளில் மருத்துவ அறிவு ஒருசில நபர்களிடம் மட்டுமே காணப்படுகிறது. பழங்குடி (கூட்டத்தின்) சமூகத்தின் தலைவனிடமோ (chief), அல்லது அந்தச் சமுதாயத்தின் வைத்தியரிடமோ தான் இந்தத் தகவல்கள் புதைந்திருக்கின்றன. பெரும்பான்மையான மருத்துவத் தாவரங்கள் தேவைப்படும்போது இயற்கையிலிருந்து பெறப்பட்டன; அரிதாகவே இவர்கள் மருத்துவத் தாவரங்களை வளர்த்தனர். வைத்தியர்களே தமக்குத் தேவையான தாவரங்களை, தேவையான அளவுக்கு, சரியான இயற்கைச் சூழலி லிருந்து, சரியான நேரத்தில் பறித்து மருந்துகளாகப் பயன்படுத்தினர்.

இ) சித்த மருத்துவமுறை

இந்த மருத்துவமுறை முறைப்படுத்தப்பட்ட (codified) மருத்துவ முறையாகும். பொதுவாக இந்த மருத்துவமுறையை நடைமுறைப் படுத்திய மருத்துவர்கள் தக்க கல்வி கற்று மருத்துவ நிலையங்கள் மூலம் பயிற்சி பெற்றவர்கள் ஆவர்; தகுந்த நூல்களைப் படித்துத் தேர்ச்சி பெற்றவர்கள்; கொள்கை ரீதியாகவும் பயிற்சி ரீதியாகவும் மருத்துவ அறிவு பெற்றவர்கள்.

சித்தமருத்துவம் பண்டைய திராவிட நாகரிகத்துடன் இணைந்து வளர்ந்த மருத்துவ முறையாகும். 'சித்தர்' என்ற சொல் 'சித்தி' என்ற சொல்லில் இருந்து தோன்றியது. இதன் பொருள் அனைத்து அறிவையும் கற்று ஞானம் அடைந்து முக்தியைப் பெறுதல் ஆகும். அடைய முடியாத எட்டு சக்திகளைச் சித்தர்கள் அடைந்ததாகக் கருதப்படுவர். சித்தர்கள் மேலைநாடுகளில் அதே காலகட்டத்தில் இருந்த இரசவாதிகளுக்கு (alchemists) ஒப்பானவர்கள் என்று பலர் கருதுகின்றனர் (கிருஷ்ணமூர்த்தி 2005). இரசவாதிகளைப் போன்றே ஒருசில சித்தர்கள் மற்ற உலோகங்களைத் தங்கமாக மாற்றும் முயற்சி யிலும், சாகாத நிலைபெற 'உதவும்' காயகல்பத்தைத் தயாரிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டனர் என்று தெரியவருகிறது. எனினும் ஒருசில சித்தர்கள் மருத்துவத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு சித்தமருத்துவ முறையை வளர்த்தனர். சித்தமருத்துவம் கபிலர் என்ற சித்தரால் உருவாக்கப்பட்ட சம்க்யா (samkya) முறையின் அடிப்படைகளில் வேரூன்றியது என்று ஒரு சிலர் கருதுகின்றனர். அதாவது வேதத்தோடு

தொடர்பில்லாத சிந்துசமவெளி நாகரிகத்தின் தந்திரிகத் தத்துவ மருத்துவ முறையாகச் சித்தமருத்துவம் கருதப்படுகிறது. சம்க்யா முறைப்படி உலகத்தின் அனைத்தும் தொன்மைப் பருப்பொருளால் (Primordial matter) அல்லது பிராக்ரித்தால் (Prakrit) ஆனவை என்றும், இப்பருப்பொருள் ரஜாசம் (rajas), தமாசம் (thamas) மற்றும் சத்வதுவம் (sathwa) என்ற மூன்று குணங்களைக் (gunas) கொண்டது என்றும் அறியப்படுகிறது. சித்த மருத்துவம் தமிழ் மருத்துவம் என்றும் அழைக்கப்படுகிறது. அனைத்து அடிப்படை சித்த மருத்துவச் செய்தி களும் நூல்களும் தமிழ்மொழியிலேதான் காணப்படுகின்றன.

சித்தர்கள் மிகச் சிறந்த அறிவாளிகள். பல சித்தர்கள் இருந்தார் கள் என்று நம்பப்பட்டாலும், 18 சித்தர்கள் மிகவும் முக்கியமான வர்கள் என்று கருதப்படுகிறார்கள். (ஆனால் இந்த 18 சித்தர்களின் பெயர்களும் ஆய்வாளர்களுக்கு ஆய்வாளர் வேறுபட்டுக் காணப் படுகிறது) : திருமூலர், அகத்தியர், போகர், கோரக்கர், சட்டை - முனி, நந்தீசர், கொங்கணவர், கமல-முனி, இடைக்காடர், சுந்தர நந்தர், ரோம-முனி, பிரம-முனி, மச்ச-முனி, வராக-முனி, கர்ம-முனி, புன்னக்கீசர், கைலாசநாதர் மற்றும் குங்கண்ணர். உரோமரிஷி, காகபுசுண்டர், போகர், புலிப்பாணி, இராமதேசர், கொங்கணர், சுத்தானந்தர், தேரையர், நந்திதேவர், பிரமமுனி, மச்சமுனி, வான்மீகர் போன்றவர்கள்தான் மருத்துவச் சித்தர்களாகப் பன்னெடுங்காலமாக வழிவழியாகச் சொல்லப்பட்டு வரும் சித்தர்களாவர். திருமூலர் (கி.மு.3000?) தமிழ்ச் சித்த முறையை நிறுவியவராகக் கருதப்படு கிறார். சித்தர்களில் நால்வர் தான் தமிழ்ச் சித்தப் பாரம்பரியத்தில் மிக முக்கியமானவர்கள் : அகத்தியர், திருமூலர், போகர் மற்றும் புலிப்பாணி. திருமூலர் வழிவந்த சித்த மருத்துவர்கள் 'மூலன் மரபினர்' ஆவர். இவருடைய வரலாற்றை பெரியபுராணம் எடுத் துரைக்கிறது. போகர் சீனரென்று கருதப்படுகிறார்; இவர் பழனி மலையில் குடியேறிச் சித்த மார்க்கத்தைப் பிரபலப் படுத்தியவராகக் கருதப்படுகிறார்; புலிப்பாணி மூன்றாமவர்; போகரைத் தொடர்ந்து வந்தவர்.

சித்தர் வளர்த்த அருங்கலைகளுள் குறிப்பிடத்தக்கது மருத்துவக் கலை. தமிழகத்தில் இயல்பாவு வழியில் முகிழ்த்த சித்த மருத்துவக் கலையைப் பேணிக் காத்தவர்கள் சித்தர்களே (நெடுஞ்செழியன் 2005). சித்த மருத்துவத்தின் முக்கியக் குறிக்கோள் ''இயற்கை தான் மனிதன்; மனிதன் தான் இயற்கை''. இயற்கையின் மூலமான பிரபஞ்சம் இரண்டு அடிப்படை அமைப்புகளால் ஆனது : பருப்பொருள் மற்றும் ஆற்றல்; பருப்பொருள் ஐம்பெரும் பூதங்களால் ஆனது. சித்த

மருத்துவம் ஐம்பெரும் பூதங்களின் அடிப்படையில் எழுந்தது; ''அண்டமும் பிண்டமும் ஒன்றே'' என்ற பழமொழிக்கிணங்க உலகின் அனைத்துப் பொருட்களும், மனித உடலின் (= பிண்டம்) பொருட்களையும் சேர்த்து, ஐந்து பூதங்களாலானவை என்று சித்தர்கள் (ஆயுர்வேத அறிஞர்களைப் போலவே) நம்பினர்.

இன்றைய நிலையில், அச்சில் வந்தவை வரை முறைப்படுத்தித் தொகுத்தால் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட சித்த மருத்துவப் பாடல்களைக் கண்டறிய முடியும் (இராசேந்திரன் 2002). இந்த ஆசிரியரின் ஆய்விற்குக் கிடைத்த நூல்களில் மட்டும் ஒரு இலட்சத்து ஐயாயிரம் மருத்துவப் பாடல்கள் கண்டறியப் பெற்றுள்ளன என்பது இதற்குச் சான்றாகும். அகத்தியர் பெயரால் மட்டும் 65,000 பாடல்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதேபோன்று, போகர் பெயரில் 12,400 பாடல்களுக்கு மேல் கிடைத்திருப்பது உறுதி செய்யப் படுகிறது. இவ்விரு சித்தர்கள் தவிர நாற்பதுக்கும் மேற்பட்ட சித்தர் களின் பெயரால் மருத்துவப்பாடல்கள் இருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும் (இராசேந்திரன் 2002). எண்ணிக்கையில் மிகுதி யாகச் சித்தர் மருத்துவப் பாடல்கள் இருந்தும், பதிப்பிக்கப் பெற்றும், அவை மருத்துவ ஆய்வில் ஓரளவு புறக்கணிக்கப்பட்டே வந்திருக் கின்றன என்பது வருத்தத்திற்குரிய செயலாகும்.

சித்தமுறையின்படி மனித உடலின் மூன்று அடிப்படை தோஷங்களான வாதம், பித்தம் மற்றும் கபம் போன்றவற்றிற் கிடையே ஒரு சமத்தன்மை நிலவ வேண்டும். இவற்றிற்கிடையே ஒரு சமமின்மை இருந்தால் நோய் வரும் என்ற அடிப்படைக் கருத்தை அடிப்படையாக வைத்துச் சித்த வைத்திய முறை அமைந்தது [1]. ஆரோக்கியமான உடலில் வாதம், பித்தம், கபம் 1:1/2:1/4(4:2:1) என்ற விகிதத்தில் இருக்கும். ஐம்பூதங்களில் வாதம் ஆகாயம் மற்றும் வாயுவையும், பித்தம் தீயையும், கபம் நீர் மற்றும் நிலத்தையும் உள்ளடக்கியவை.

சித்த மருந்துகளில் பல்வேறு தாவரங்களும் (ஏறத்தாழ 1120), 11 உலோகங்களும் 64 பாஷாணங்களும், 120 உபரசங்களும், பல பிராணிகளின் பொருட்களும் அடங்கும். 64 வகை மருந்துகள் உண்டு; 32 உள்மருந்துகள், 32 வெளிமருந்துகள். ஈயம் திரவநிலையில் மருந்துகளுடன் சேர்க்கப்பட்டது. ஈயத்தைத் திரவமாக்க கவிர்ப்பூவின் சாற்றைச் சித்த மருத்துவர்கள் பயன்படுத்தினர்.

---

1) ''மிகினும், குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளி முதலாய எண்ணிய மூன்று'' (குறள்.941)

ஈ) ஆயுர்வேத வைத்தியமுறை

நம் நாட்டின் பாரம்பரிய மருத்துவ முறைகளில் ஆயுர்வேதமும் ஒன்று; மிகப் பழமையானதும் கூட. ஆயுளைப் பற்றியும், நீண்ட பிணியற்ற ஆயுளைப் பெறும் வழிமுறைகளையும் பற்றியும் கூறுவதால் இது ஆயுர்வேதம் எனப்பட்டது. அக்னிவேச சம்ஹிதம், சரகசம்ஹிதம், சுஸ்ருத சம்ஹிதம், பிரகத் சம்ஹிதம், அஷ்டாங்க ஹிருதயம், அஷ்டாங்க சம்கிரகம் போன்ற வடமொழி நூல்களில் (கி.மு. 1500 முதல் கி.பி. 500 வரை) ஆயுர்வேத மருத்துவமுறைகள் விளக்கப்பட்டுள்ளன. இந்த நூல்களைத் தொடர்ந்து 16 முக்கிய மருத்துவ நிகண்டுகள் உருவாக்கப்பட்டு ஆயுர்வேதம் பற்றிய பல புதிய விவரங்கள் வெளிப்படுத்தப்பட்டன. தமிழகத்திற்கு ஆயுர் வேதம் எப்பொழுது வந்து சேர்ந்தது என்பது தெளிவாகத் தெரிய வில்லை எனினும், ஆரியர்களுடன் இதுவும் தமிழகத்திற்கு வந்தது என்று கொள்ளலாம் (ஏறத்தாழ கி.மு. 2ஆம் நூற்றாண்டு). எனினும், இது கி.பி. 3ஆம் நூற்றாண்டிற்குப் பின்புதான் தமிழகத்தில் ஓரளவு பிரபலமாகியிருக்க வேண்டும். ஆயுர்வேதம் பற்றிய முதல் குறிப்பு சிலப்பதிகாரத்தில் காணப்படுகிறது [1]. புகார்ப்பட்டினத்தில் உழவர் களும், ஆயுர்வேத அறிஞர்களும், சோதிடர்களும் (= காலக் கணிதர் கள்) இருந்தார்கள் என்று சிலம்பு கூறுகிறது. எனவே அக்காலத்தி லேயே ஆயுர்வேத மருத்துவம் தமிழகத்தில் இருந்தது என்று அறியலாம். அறுவை மருத்துவமும் தமிழகத்தில் சிறப்பாக இருந்தது. இதனைக் குலசேகர ஆழ்வாரின் பாசுரம் ஒன்று சுட்டிக் காட்டுகிறது [2]. இந்த அறுவை மருத்துவர்கள் சோழர் காலத்தில் சல்லியக்கிரியை செய்வோராகக் குறிக்கப்பட்டனர். கும்பகோணத்திற்கு அருகில் உள்ள திருவிசலூர் சிவயோகநாதர் கோயிலில் உள்ள முதலாம் இராசேந்திரனின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இவர்களைப் பற்றித் தகவல் கொடுக்கிறது. முதலாம் இராசராசனின் தமக்கையாரும் வல்லவரையன் வந்தியத் தேவனின் மனைவியுமான குந்தவை பிராட்டியார் வேம்பற்றூரில் சல்லியக்கிரியை மருத்துவராகப் பணி யாற்றிய அரையன் உத்தமசோழன் ராசேந்திரசோழ பிரயோகதரை யனுக்கு நல்லூர் நாட்டு பிரமதேயம் ராசகேசரி சதுர்வேதி மங்கலத்தில்

---

1) ''வீழ்குடி உழவரொடு விளங்கிய கொள்கை
ஆயுள்வேதரும் காலக்கணிதரும்
பால்வகை தெரிந்த பன்முறை இருக்கையும்'' *(சிலம்பு.5:43-45)*

2) ''வாளால் அறுத்துச்சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல்'' *(நாலா.தி.பி.:பாசுர எண் 691)*

ஒரு வேலி நான்கு மா நிலத்தையும், வேம்பற்றூரில் ஒரு வீட்டையும் சல்லியக்கிரியை போகமாகக் கொடையளித்துள்ளார் (SII.Ser.23. Nos. 350, 351). இதன அடிப்படையில் இம்மருத்துவர் மக்களுக்காக வேம்பற்றூரில் இலவசமாக மருத்துவம் செய்து வந்தார்.

அந்நாளைய மருத்துவமனைகள் ஆதுலர் சாலைகள் என்ற பெயரால் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆதுலர் என்ற சொல்லுக்கு இல்லாதவர், அசத்தர், எளியர் என்ற பொருள்கள் உண்டு (மதுரைத் தமிழ்ப் பேரகராதி). ஆதுலர் சாலைகள் இத்தகையோருக்கு உணவும், உறைவிடமும், பிணி நீக்கும் பணியும் செய்து வந்தன. இவை தனியார்களாலும் அரசர்களாலும் அமைக்கப்பட்டன.

கி.பி. 1067ஆம் ஆண்டைச் சேர்ந்த திருமுக்கூடல் கோவில் கல்வெட்டுகளின் படி (EI.vol.XXI.No.38, pp.220-250) வீரராசேந்திரச் சோழன் (கி.பி.1063-1070) ஒரு மருத்துவக் கூடத்தைத் திருமுக்கூடல் விஷ்ணு கோவிலில் நிறுவினான் என்பது தெரிய வருகிறது. இதன் பெயர் வீரசோழன் ஆதுலர் சாலையாகும். இதில் 15 படுக்கைகள் இருந்தன. இதில் ஆண்கள் தங்கும் விடுதியும் ஒரு மருத்துவப் பள்ளியும் இருந்தன. இம்மருத்துவக் கூடத்தில் அறுவை சிகிச்சைகளும் மற்ற மருத்துவ முறைகளும் மேற்கொள்ளப்பட்டன. இதில் ஒரு மருந்தியல் நிபுணர் (= பொது மருத்துவர்) (physician), அறுவை சிகிச்சை நிபுணர் (surgeon), இரண்டு செவிலியர் (nurses), ஒரு உதவியாளர் ஆகியோர் இருந்தனர். பொது மருத்துவர் ஆண்டுக்குத் தொண்ணூறு கலம் நெல்லும் எட்டு காசுகளும் ஊதியமாகப் பெற்றதோடு, வைத்யபோகமாக நிலமும் பெற்றிருந்தார். அறுவை மருத்துவர் ஆண்டுக்கு எண்பது கலம் நெல்லை ஊதியமாகப் பெற்றார். மருந்துகள் தயாரிப்பதற்கான மூலிகைச் செடிகளைப் பறித்து வருவதற்காகவும், விறகுகள் கொணர்வதற்காகவும் ஆண்டுக்கு அறுவது கலம் நெல் மற்றும் இரண்டு காசுகள் ஊதியத்திற்கு இருவர் பணியமர்த்தப்பட்டிருந்தனர். செவிலியர்கள் ஆண்டுக்கு முப்பது கலம் நெல்லும் ஒரு காசும் ஊதியமாகப் பெற்றனர். மருத்துவ மனையில் நாள்தோறும் நீர்கொணர்ந்து வைப்பவருக்குப் பதினைந்து கலம் நெல் தரப்பட்டது. ஒரு வருடத்திற்குத் தேவையான மருந்துகள் இங்கு இருந்தன. மருந்துகள் தயாரிக்கும் ஒரு அமைப்பும் இங்கு இருந்தது. திருமுக்கூடல் கல்வெட்டுகளில் 20 மருத்துவச் சூத்திரங்களும் (formulae) காணப்பட்டன. இவையனைத்தும் சரகசம்ஹிதம், சுஸ்ருத சம்ஹிதம், அஷ்டாங்க ஹிருதயம் போன்றவற்றில் காணப்பட்ட மருத்துவச் சூத்திரங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு இலவசமாக

மருத்துவம் செய்யப்பட்டது. இங்கு இருந்த நோயாளிகளுக்கு ஒரு நாளைக்கு தலைக்கு ஒரு நாழி அரிசி உணவாகத் தரப்பட்டது. இரவு நேரங்களில் இம்மருத்துவமனை ஒளியுடன் திகழ்வதற்கு விளக்கெரிய இரண்டரைக் காசுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. மருத்துவர் தங்கும் அறைகளும் இருந்தன. நாவித மருத்துவர் (barber surgeon) ஒருவரும் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது [1]. நாவித மருத்துவருக்கு பதினைந்து கலம் நெல் தரப்பட்டது. ராசராசன் பெருநாவிதன் போன்ற பட்டங்கள் சிறந்த நாவித மருத்துவர்களுக்குக் கொடுக்கப் பட்டதையும் இக்கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. பெருநாவிதாச்சிகளும் இங்கு இருந்தனர் (நளினி 1994; Narendran 2005).

திருமுக்கூடல் கல்வெட்டுகள் கூறும் மருத்துவ நிலையத்தை விட பழமையான மருத்துவ நிலையம் பற்றிய தகவலை கோயில் தேவராயன் பேட்டை மத்ஸ்யபுரிசுவரர் கோவிலுள்ள முதலாம் இராசேந்திரரின் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன (ARE 248-249 of 1923). இந்நிலையத்தின் பெயர் 'சுந்தரசோழ விண்ணகர் ஆதுலர் சாலை'. இது அமைந்திருந்த இடம் சரியாகத் தெரியவில்லை. எனினும் இதனைக் குந்தவை நாச்சியார் தன்னுடைய தந்தையின் நினைவாக அமைத்தாள் என்று அறியப்படுகிறது. இங்கும் மருத்துவம் இலவசமாகச் செய்யப்பட்டது. ஒரு அறுவைச் சிகிச்சையாளரும் (மருகல் நாட்டு மருகலைச் சேர்ந்த சுவர்ணன் அரையன் மதுராந்தகன்) இங்கு இருந்தார். மருத்துவச் சேவைக்காக வாழ்நாள் ஊதியமும், நிலங்களுடன் கூடிய வீடுகளும் மருத்துவர்களுக்குக் கொடுக்கப் பட்டன.

மருத்துவர்களுக்கு அரசர் கொடை செய்து (வைத்யக்காணி) மக்களுக்காக இலவச மருத்துவம் செய்யும்படி ஆணையிடுவது பற்றிப் பல கல்வெட்டுகள் கூறுகின்றன.

---

1) சோழர்கள் காலத்தில் நாவித மருத்துவர்கள் இருந்தார்கள் என்பது ஒரு மிகவும் வியப்பளிக்கும் செய்தியாகும். ஐரோப்பாவின் வரலாற்றின் இடைக்காலத்தில், குறிப்பாக 16ஆம் நூற்றாண்டில், ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் நாவித மருத்துவர்கள் இருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது (கிருஷ்ணமூர்த்தி 2005). இவர்கள் சமுதாயத்தின் ஏழை எளிய மக்களுக்கு மருத்துவச் சேவை செய்தனர். மருத்துவப் படிப்பு படிக்காமல், அனுபவத்தால் மருத்துவர்கள் ஆனவர்கள் இவர்கள். நாவித மருத்துவ கருத்துரு (concept of barber surgeons) இந்தியாவிலிருந்து, குறிப்பாக தமிழகத்திலிருந்து, ஐரோப்பிய நாடுகளை அடைந்திருக்கலாமோ? அல்லது 'தொடர்புடைய வரலாறு' (Connected History) கருத்துருவுக்கு ஒரு எடுத்துகாட்டா?

''எங்களூர் வைத்யக்காணி உடைய காசியபன் அரையன் அரையனான
ராஜகேசரி மங்கலப் பேரையன்''

என்று திருத்துறைப்பூண்டிக் கல்வெட்டு (76 of 1976) கூறுகின்றது. பாகூர் என்ற இடத்தில் ஒரு மருத்துவ நிலையம் இருந்தது பற்றிப் பல்லவர் காலக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன; இதேபோன்று பாண்டிச்சேரிக்கு அருகில் உள்ள திருப்பேர் வாணி என்ற இடத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன (Narendran 2005).

கி.பி. 12-13 நூற்றாண்டுகளில் வியாகர்ணா மருத்துவக் கல்லூரி ஒன்று தமிழகத்தில் இருந்ததாகத் திருவொற்றியூர்க் கல்வெட்டுகள் கூறுகின்றன. விக்ரமசோழன் காலத்துத் திருப்புகலூர் இரண்டாம் ஆட்சியாண்டு கல்வெட்டுகள் மற்றொரு ஆதுலர் சாலை இருந்ததாகக் குறிப்பிடுகிறது. இதன் பெயர் வீரராசராசன் ஆதுலர் சாலை (நன்னிலம் கல்வெட்டுகள், 323 of 1978). கி.பி. 1121-ஆம் வருட விக்ரம சோழன் காலத்துத் திருவாவடுதுறை கல்வெட்டு ஒன்று அக்காலத்திய மருத்துவ வசதிகள் பற்றிக் கூறுகிறது. இதன்படி கோமதீசுவரர் கோவி லில் ஒரு மருத்துவக் கல்லூரி செயல்பட்டது. இங்கு சரகசம் கோவி லில் ஒரு மருத்துவக் கல்லூரி செயல்பட்டது. இங்கு சரகசம்ஹிதம் மற்றும் அஷ்டாங்க ஹிருதயம் போன்றவை கற்பிக்கப்பட்டன. இங்கு ஒரு மாணவர் விடுதியும் இருந்தது (ARE 159 of 1925).

ஒய்சாலர் காலத்தில் ஸ்ரீரங்கம் கோவிலின் மருத்துவவசதி கருடவாகன பட்டர் என்ற மருத்துவரின் தலைமையில் அமைந்தது. தோள்மாலை அழகியார் என்ற மருத்துவரும் இங்கு இருந்தார் (SII.Ser.24.No.266). இதே கோவிலில் ஆயுர்வேதப் புகழ் மருத்துவர் தன்வந்திரியின் உருவச்சிலையும் உள்ளது. உத்திரமேரூர்க் கல்வெட்டு ஒன்று (SII.III.No.177) நஞ்சு முறிவுத் துறையில் புலமை பெற்ற மருத்து வர்கள் இருந்தனர் என்று கூறுகிறது. இவர்களுக்கு வாழ்வூதியமாக நிலமளிக்கப்பட்ட செய்தியும் இக்கல்வெட்டில் உள்ளது. இவ்வகை நிலம் விஷஹரபோகம் எனப்பட்டது. ஊர் அவையே இம்மருத்து வரைத் தேர்ந்தெடுத்துப் பணியில் அமர்த்தி நிலமும் அளித்தது (நளினி, 1994).

பரஞ்சோதியார் என்ற நாயன்மார் மாமாத்திரர் குலத்தில் பிறந்தும் ஆயுர்வேதக் கலை பயின்று மருத்துவத் தொழிலை வழி வழியே செய்து வந்ததைச் சிறுத்தொண்டர் புராணத்தின் கீழ்க்கண்ட வரிகள் குறிப்பிடுகின்றன.

''உலகில் வளர் உயிர்க்கெல்லாம் உயர்காவற் றொழில் பூண்டு
மலர் புகழ்மா மாத்திரர்தம் குலம்பெருக வந்துள்ளார்
பலர் புகழும் திருநாமம் பரஞ்சோதி யாரென்பார்'' (பா.2)

''ஆயுள்வே தக்கலையும் அலகில்வட நூற்கலையும்
தூயபடைக் கலத்தொழிலும் துறைநிரம்பப் பயின்றவற்றால்''
(பா.3)

மருத்துவ நிறுவனங்கள் பற்றிப் பேசும் தமிழகக் கல்வெட்டுகள், மருத்துவ நம்பிக்கைகள் பற்றியும் பேசுகின்றன (நளினி 1994). நோயுற்றவர் நலம் பெற்று நீடுவாழ இறையருள் வேண்டி நிறுவப் பட்ட திருமேனிகளும், விளக்குகளும், தரப்பட்ட கொடைகளும் கணக்கிலடங்கா (ARE 393 of 1924; ARE 280 of 1917).

மேற்கூறிய தகவல்களை நன்கு ஆய்ந்தறிந்து பார்க்கும்போது சோழ மற்றும் பல்லவ மன்னர்கள் சித்த மருத்துவத்திற்குப் பதிலாக ஆயுர்வேத மருத்துவ முறைக்கு அதிக ஊக்கமும் முன்னுரிமையும் அளித்தனர் என்பது தெரிய வருகிறது (Narendran 2005). சித்த மருத்துவமனையோ, கல்லூரியோ எங்கும் அமைக்கப் பெற்றதற்கான கல்வெட்டு ஆதாரங்கள் எதுவுமில்லை. மேலும் ஆயுர்வேத மருத்துவ வல்லுநர்களின் சிலைகள் பல சோழர், பல்லவர் மற்றும் பாண்டிய மன்னர்கள் அமைத்த கோவில்களில் காணப்படுவதும் இக்கருத்தை வலியுறுத்துகின்றன. தன்வந்திரிசிலை 13-ஆம் நூற்றாண்டு சுந்தர பாண்டியன் காலத்துத் திருவானைக் கோவில், 15-ஆம் நூற்றாண்டு தாராசுரம் மற்றும் ஸ்ரீரங்கம்[1] கோவில்கள் போன்றவற்றிலும், பதஞ்சலியின் (கி.மு. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்) சிலை 12-13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வடபாதி மங்கலம் சிவன் கோவி லிலும் காணப்படுகின்றன. ஆயுர்வேத மருத்துவ முறை மன்னர் களால் ஊக்குவிக்கப்பட்டுத் தமிழகத்தின் நகர்புறங்களில் தழைத்தது; எனினும் கிராமங்களில் சித்த வைத்தியமும், நாட்டுப்புற வைத்திய மும் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்தன.

ஆயுர்வேதத்தில் ஏறத்தாழ 1770 தாவரங்கள் மருந்துகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் பல வடஇந்தியத் தாவரங் களாகும். இந்த வடஇந்தியத் தாவரங்களில் பல, குறிப்பாக தமிழ கத்தில் இல்லாத தாவரங்கள், தமிழகத்திற்கு ஆயுர்வேத மருத்துவ

1) ஸ்ரீரங்கம் கோவிலில் உள்ள தன்வந்திரி தன்னுடைய கையில் ஒரு அட்டையை (leech) வைத்துள்ளார். கெட்ட இரத்தத்தை நோயாளியிடம் இருந்து நீக்க (blood letting) அட்டை அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டது.

முறையோடு வெவ்வேறு காலகட்டங்களில் வந்து சேர்ந்தன. தமிழகத்தில் வளர முடியாத வடஇந்தியத் தாவரங்கள் வடஇந்தியாவிலிருந்து வாணிகப் பொருட்களாகத் தமிழகத்திற்குக் கொண்டு வரப்பட்டன.

உ) யுனானி மற்றும் ஆங்கில மருத்துவ முறைகள்

யுனானி டிப் (Unani Tibb) என்று அழைக்கப்படும் யுனானி மருத்துவமுறை முகலாய அரசர்கள் காலத்தில் வடஇந்தியாவில் நுழைந்தது. அடிப்படையில் கிரேக்க மருத்துவமுறை என்றாலும், அரேபிய, எகிப்திய மற்றும் பெர்சிய மருத்துவர்களின் பாதிப்பால் பல்வேறு மாற்றங்களைப் பெற்ற ஒரு இசுலாமிய மருத்துவ முறையாக மாறியது. மாலிக்காபூர் தென்னிந்தியாவில் படையெடுத்த போது, இந்த மருத்துவமுறை முதன்முதலாகத் தமிழகத்தில் நுழைந்தது. ஆர்க்காடு நவாப்கள் காலத்தில் தமிழகத்தில் ஓரளவுக்கு வேரூன்றியது.

ஆங்கில மருத்துவமுறைகள் ஐரோப்பியர்கள் இந்தியாவிற்கு வந்திறங்கியபோது அவர்களோடு இங்கு வந்து சேர்ந்தது. தமிழகத் தாவரங்களை வகையறிய உதவிய பல ஆங்கிலேயத் தாவரவியல் அறிஞர்கள் அடிப்படையில் மருத்துவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. ஆங்கில மருத்துவமுறை கடந்த நான்கு நூற்றாண்டுகளாகத் தான் தமிழகத்தில் உள்ளது. பாண்டிச்சேரி ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்புகள் வாயிலாக பிரான்ஸ் மற்றும் போர்ச்சுகீசியர்களின் மருத்துவ விவரங்கள் ஓரளவு கிடைத்துள்ளன. போர்ச்சுகீசியர்கள் புன்னக்காயலில் மருத்துவமனையும் கல்விக்கூடமும் நிறுவினர். இவற்றை நடத்துவதன் பொறுப்பை அந்நாட்டைச் சேர்ந்த துறவிகள் ஏற்றனர். புதுவை மாநில ஓமுகறையில் 1742-இல் புதிய ஆங்கில மருத்துவமனை நிறுவப்பட்டது.

X

தமிழகத்தில் தாவரப் பயன்பாடும் தாவரம் சார் தொழில்களும்

அ) முன்னுரை

உணவாகவும், மருந்தாகவும், சமுதாய மற்றும் இறைவழி பாட்டுச் சடங்குப் பொருட்களாகவும் தாவரங்கள் பயன்படுத்தப் பட்ட விவரங்கள் இந்நூலின் முந்தைய அத்தியாயங்களில் கொடுக்கப் பட்டுள்ளன. மேற்கூறிய அத்தியாயங்களில் கூறப்படாமல் விடுபட்ட மற்ற சிறப்பான தாவரப் பயன்பாடுகள் பற்றிய விவரங்கள் இந்த அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டுள்ளன. மேலும் தாவரப் பயன் பாட்டின் அடிப்படையில் தமிழ்ச் சமுதாயத்தில் எழுந்த முக்கியத் தொழில்கள் பற்றிய விவரங்களும் இந்த அத்தியாயத்தில் விவரிக்கப் பட்டுள்ளன.

''பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடையான் கண் படின்'' (குறள் 216)

என்ற குறளின் கூற்றுப்படி தாவரத்தின் வேர் முதல் தளிர் வரை உள்ள அனைத்து உறுப்புகளும் பயன்தரும் பாங்குடையவை. பயன்பாட்டுத் தாவரவியல் (Economic Botany) என்ற தனித் தாவரஇயலே தோன்றி யிருப்பதிலிருந்து மனித வாழ்க்கையில் தாவரங்களின் முக்கியத்துவம் நன்கு விளங்கும். எடுத்துக்காட்டாக, பனைமரத்தின் பல்வேறு உறுப்புகள் எந்தெந்த வகைகளின் மக்களுக்குப் பயனளிக்கின்றன என்பது பற்றிக் கும்பகோணத்தில் வாழ்ந்த அருணாச்சலப் புலவர் என்பவர் ''தால விலாசம்'' என்றொரு தனிநூலே எழுதியுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் தாவரங்கள் எவ்வெவ் வாறு பயனளிக்கின்றன என்பதை விளக்குவதற்கு ஒரு தனி நூலே எழுதுகிற அளவுக்கு விவரங்கள் இருப்பதினால், இந்த அத்தியாயத் தில் ஒருசில குறிப்பிட்ட பயன்கள் பற்றிய விவரங்கள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, எந்தெந்த தாவரப் பயன்பாடுகள் முக்கியமான வரலாற்று மற்றும் சமுதாயத் தாக்கங்களை ஏற்படுத்தி

யுள்ளனவோ அவை மட்டும் இங்கு விவரிக்கப்பட்டுள்ளன. மேலும் தாவரப் பயன்பாட்டு அடிப்படையில் பல புதிய தொழில்கள் தோன்றியது பற்றியும் இத்தொழிலை மேற்கொண்டவர் தனிப்பட்ட உபசாதியினராகக் கருதப்பட்டமை பற்றியும் இந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இது வருத்தத்திற்குரிய செய்தியானாலும், தவிர்க்க முடியாத ஒன்றாகும். எடுத்துக்காட்டுகளாக, தோட்டத் தாவரங்களைப் பராமரிப்பவர் தோட்டக்காரர் என்றும், மரக்கட்டையைப் பயன்படுத்திப் பொருட்களை உருவாக்குபவர் தச்சர் என்றும், மாலைகள் தயாரிப்பவர் மாலைக்காரர் என்றும், கோவிலில் தாவரப் பொருட்களை வைத்து இறைவழிபாட்டுக்கு உதவுபவர் பூசாரி என்றும் அழைக்கப்பட்டனர்.

ஆ) தாவரச் சாயங்கள்

துணி, பட்டு, பாய்கள், உணவுப் பொருட்கள் மற்றும் ஓவியங்களுக்கு நிறமேற்றுவதற்குப் பல்வேறு சாயங்களைத் தமிழர்கள் பயன்படுத்தினர். இவையனைத்துமே இயற்கையான சாயங்களாகும் (natural dyes). கோவில்களிலும், மாட மாளிகைகளிலும், குகைகளிலும் தீட்டப்பட்ட வண்ண ஓவியங்கள் பல பண்டைய தமிழர் இயற்கைச் சாயங்கள் பற்றிப் பெற்றிருந்த அறிவிற்குச் சான்று பகர்கின்றன. சாயங்களைத் தரும் இயற்கைப் பொருட்களான தாவரங்கள், பிராணிகள், தனிமங்கள் மற்றும் கனிமங்கள் பற்றிய சீரிய அறிவினையும், அவற்றைப் பிரித்தெடுக்கும் முறைகள் பற்றிய தொழில்நுட்பத்தையும், சாயங்களைத் தகுந்த முறையில் சேர்க்கும் நளினமும், சாயங்கள் நிறமிழக்காமல் பலகாலம் நிலைத்திருப்பதற்கான வழிமுறைகளையும் பண்டைய தமிழர் பெற்றிருந்தார்கள். பரிபாடலில் கூறப்படும் பரங்குன்றத்து ஓவியக் கூடமும், நெடுநல்வாடையில் பாண்டிமாதேவியின் அந்தப்புர விதான ஓவியங்களும் (நெடு.வா. *: 159-163*), மணிமேகலையில் ''வெண்சுதை விளக்கத்து கண்ணுள் வினைஞரும்'' *(மணி.:காதை.3:130)* போன்ற கூற்றுகளும் கோவில் மற்றும் மாடமாளிகைகளின் ஓவியங்களின் சிறப்பைக் கூறும். சித்தன்னவாசலின் குகைகளில் காணப்படும் வண்ண ஓவியங்களும் தமிழரின் ஓவியத் திறமைக்குச் சான்றாக உள்ளன; இயற்கைச் சாயங்களைத் தமிழர் பயன்படுத்திய பாங்கும் தெளிவாகிறது. ராஜராஜீசுவரம் கோவிலின் கருவறையின் உட்சுவருக்கும் வெளிச்சுவருக்கும் இடையில் உள்ள திருச்சுற்றுப் பகுதியின் சுவர்கள் முழுவதும் காணப்படும் சோழர், பாண்டியர், பல்லவர், விஜயநகர மற்றும் நாயக்கர் கால ஓவியங்கள் அக்காலத்திய தமிழரின் இலக்கிய மற்றும் சமுதாயப் படப்பிடிப்புகளாகத் திகழ்கின்றன.

சங்க இலக்கியக்கால இறைக் கோவில்களின் சுவர்கள் மீது பூக்கள் மலர்ந்த கொடிகளும், அழகிய பாவைகளும் ஓவியங்களாகத் தீட்டப் பெற்றிருந்தன என்பதற்குப் பின்வரும் இலக்கிய வரிகள் சான்றாகும்.

''........................கேழ்கொளக்
காழ் புனைந்து இயற்றிய வனப்பமை நோன்சுவர்ப்
பாவையும் பலியெனப் பெறா'' *(அகம்.:369:6-8)*

''புனைசுவர்ப் பாவை'' (நற்.:252:6-7)

தமிழக வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களில் அட்டவணை X.1-இல் குறிப்பிட்டுள்ள தாவரங்கள் இயற்கைச் சாயங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன (Sivasankara Reddy et al; Chandramouli 1995).

அட்டவணை X.1 - தமிழர்கள் பயன்படுத்திய தாவரச் சாயங்கள்

வ. எண்.	தாவரப் பெயர்	சாயம் கொடுக்கும் உறுப்பு	சாயத்தின் நிறம்	சாயமேற்றப்பட்ட பொருட்கள்
1.	அவுரி	வேர்	ஊதா/நீலம்	உணவு, மரம், பட்டு, பருத்தி, சுவர் ஓவியங்கள்
2.	குசும்பை	பூ	காவி	துணி
3.	இருப்பை	பூச்சாறு இரும்புத் தூளுடன் குழைத்து	கருப்பு	துணி, சுவர் ஓவியங்கள்
4.	உடைவேலம்	பட்டை	கருப்பு/ பழுப்பு	துணி, மீன் வலை
5.	செங்கருங்காலி (சிறுமாரோடம்)	பட்டை	கருப்பு/ பழுப்பு	பருத்தி, பட்டு, கம்பளி
6.	வெல்வேலம்	பட்டை	கருப்பு	தோல், கயிறு, மீன்வலை
7.	கருவேலம்	பட்டை	கருப்பு/ பழுப்பு	பட்டு, பருத்தி, மை
8.	வெடவேலம்	பட்டை	இளஞ்சிவப்பு/ ஊதா	பட்டு, பருத்தி
9.	மருதோன்றி	இலை	சிவப்பு	மயிர், மனித சருமம், நகம், துணி, தோல், ஓவியங்கள்
10.	கூவிளம்	பட்டை, விதை	மஞ்சள்	துணி, ஓவியம், இதன் கோந்து சாயநிலைப்படுத்தும்

				ஊடகமாகப் பயன்படுத்தப்பட்டது
11.	ஆவிரை	வேர், பட்டை, பூ	மஞ்சள்	தோல், துணி
12.	கொன்றை	பட்டை, பூ	சிவப்பு/ சாம்பல்	தோல், ஓவியங்கள்
13.	திவிதிவி (கோணபுளி)	காய், விதை	கருப்பு/ பழுப்பு	துணி, ஓவியங்கள்
14.	ஆத்தி (ஆர்)	பட்டை, வேர்	மஞ்சள்	துணி
15.	புன்கு (புங்கம்)	பட்டை	பழுப்பு	துணி, ஓவியம்
16.	மரமஞ்சள்	இளம் தண்டு	மஞ்சள்	துணி, ஓவியம், உணவு
17.	மஞ்சள்	கிழங்கு	மஞ்சள்	உணவு, துணி, ஓவியம்
18.	புளியாரை	மொத்த தாவரம்	மஞ்சள்	துணி
19.	வாய்மரம்	பட்டை	மஞ்சள்	துணி
20.	வேப்பனாங் கொடி	கட்டை	சிவப்பு/ இளஞ்சிவப்பு/ அடர்பழுப்பு	துணி, ஓவியம்
21.	வெள்ளமருது	பட்டை	சிவப்பு	ஓவியம், துணி
22.	செம்மரம்	பட்டை, விதை	மஞ்சள் பழுப்பு	ஓவியம்
23.	கடுக்காய்	காய், விதை	மஞ்சள், பழுப்பு	ஓவியம், துணி
24.	ஓதியன்	பட்டை, இலை	பழுப்பு	துணி
25.	மஞ்சநத்தி	விதை	மஞ்சள்/ இளஞ்சிவப்பு/ ஆரஞ்சு	உணவு, குங்குமம் ஓவியம்
26.	சப்பாங்கு (படாங்கம்)	பட்டை, மரக்கட்டை	சிவப்பு	ஓவியம், பாய்
27.	சாயவேர்	வேர்	சிவப்பு	துணி
28.	கொகுட்டை	மரக்கட்டை, பட்டை	மஞ்சள்	ஓவியம், இதன் கோந்து வண்ண ஊடகமாகச் செயல்பட்டது
29.	நுணா	மரக்கட்டை	மஞ்சள்/ சிவப்பு	உணவு, பருத்தி, பட்டு, ஓவியம்
30.	சேரன்கொட்டை (செங்கொட்டை)	கொட்டை	சாம்பல்/ கருப்பு	துணி, ஓவியம், இதன் பிசின் வண்ண ஊடகமாகச் செயல்பட்டது

31.	பாலை	மரக்கட்டை	நீலம்	துணி
32.	வேங்கை	பட்டை	சிவப்பு	துணி, ஓவியம்
33.	ஓடுவன்	இலை, வேர்	கருப்பு/ பழுப்பு	துணி, ஓவியம்
34.	வேதிவேம்பு	பட்டை, மரக்கட்டை	சிவப்பு/ பழுப்பு	துணி, ஓவியம்
35.	கனுபலா (உலக்கைப் பாலை)	பட்டை, இலை, வேர்	சிவப்பு	துணி
36.	கல்பாசிகள் (Lichens)	மொத்த உடலம் (thallus)	பல்வேறு நிறங்கள்	துணி, உணவு, பாய், ஓவியம்

இந்த அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள தாவரங்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட சாயங்கள் தனித்தனியாகவோ மற்ற வற்றுடனோ கலக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டன. ஒருசில சாயங் களின் வண்ணங்கள் நன்றாகப் புலப்படவோ அல்லது நிலைப் பாட்டுடன் திகழவோ அவை சாயஊக்கி (mordant) என்ற பொருட் களுடன்சேர்க்கப்பட்டன. இப்பொருட்கள்தனிம உப்புக்களாகவோ, ஒருசில குறிப்பிட்ட தாவரங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சாறு களாகவோ திகழ்ந்தன. இரண்டாவதாகக் குறிப்பிட்ட பொருட்களுக்கு எடுத்துக்காட்டாகப் பித்தக்கொட்டையை (nuts of *Symplocos racemosa*) கூறலாம். பெரும்பாலான சாயங்களை நிலையாகத் தக்கவைக்க (fixing) ஒருசில தாவரங்களின் கோந்துகள் மற்றும் பிசின்கள் பயன்படுத்தப் பட்டன. இவற்றில் முக்கியமானவை : கூவிளம் (கோந்து), மரா அம் (பிசின்), செங்கொட்டை (பிசின்) மற்றும் சால் மரம் (பிசின்). பண்டைய கோவில் ஓவியங்களின் வண்ணங்கள் இன்றும் நிலைத்து நிற்பதற்குத் தமிழர்கள் மேற்கொண்ட சரியான தொழில்நுட்பம் இன்னும் புலப்படாமல் இருக்கிறது. தற்கால வேதியியல் ஆய்வு முறைகளைக் கடைபிடித்து இந்த தொழில்நுட்பத்தை அறிந்து கொள்ள உடனே முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எஸ்.பாலுசாமி (Centre for Plants, People and Ecosystems, Chennai) தமிழகக் கோவில் ஓவியங்களைப் பற்றி விவரமாக ஆய்வு செய்துள்ளார். அவரின் கூற்றுபடி தமிழகத்தின் ஏறத்தாழ 1000 பழைய கோவில்களில் 30 கோவில்களில் தான் பழைய ஓவியங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

இ) தாவர எண்ணெய்ப் பொருட்கள்

சங்ககாலத்திலும், சங்கம் மருவிய காலத்திலும் புன்னை, புன்கு (புங்கம்), இருப்பை, எள், வேம்பு ஆகிய தாவரங்களில் இருந்து மட்டும்தான் எண்ணெய் எடுக்கப்பட்டது. இவற்றில் எள் எண்ணெய்

(= நல்லெண்ணெய்) மட்டும்தான் உணவுப் பொருளாகச் செயல்பட்டது. எள் எண்ணெய் மற்றும் வேப்ப எண்ணெய் தலையில் தேய்த்துக் கொள்ளவும் பயன்படுத்தப்பட்டன. எள் எண்ணெய்யைத் தலையில் தேய்த்துக் குளிக்கும் வழக்கம் பண்டைய தமிழகத்தில் இருந்தது என்பதை ''பாறு மயிர்க்குடுமி எண்ணெய் நீவி'' என்ற புறநானூற்று பாடல் வரியிலிருந்து அறியலாம். கோவில்களிலும் வீட்டிலும் விளக்கு எரிக்க இலுப்ப எண்ணெயும், புன்னை எண்ணெயும், புன்கு எண்ணெயும் பயன்படுத்தப்பட்டன. இந்த வழக்கம் ஒருசில கிராமக் கோவில்களில் இன்றும் நிலவி வருகிறது. அண்மைக்காலம் வரையில் பசு/எருமைகளின் காம்புகளில் புன்னை எண்ணெய் தடவப்பட்டுத்தான் பால் கறக்கப்பட்டது.

தாவரவித்துக்களில் இருந்து எண்ணெயைப் பிரித்து எடுக்க செக்குகள் உருவாக்கப்பட்டன. கல் மற்றும் மரத்தாலான செக்குகள் இதற்காக உருவாக்கப்பட்டன. தருமபுரி மாவட்டக் கல்வெட்டொன்றில் ''இறையமன் இட்ட செக்கு'' என்ற தொடர் காணப்படுகிறது. இதேபோன்று மதுரை மாவட்டக் கருங்காலக்குடியிலும் பண்டைய செக்கு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு, அது தற்போது மதுரை திருமலை நாயக்கர் மகாலில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளது.

செக்கினைத் தொழிற் கருவியாகக் கொண்டு எண்ணெய் எடுத்தல் என்ற தொழில் ஒரு குறிப்பிட்ட சாதிப் பிரிவைத் தமிழர் சமுதாயத்தில் உருவாக்கக் காரணமாக இருந்தது என்பது ஒரு இழிவான சமூக மாற்றச் செயலாகும். இவர்களை 13-ஆம் நூற்றாண்டு வரையிலான கல்வெட்டுகள் சக்கரப்பாடியார் அல்லது சங்கரப்பாடியார் என்று குறிப்பிடுகின்றன. இவர்களுக்கு செக்கார் என்ற பெயரும் உண்டு. கி.பி.12-ஆம் நூற்றாண்டு தாராசுரக் கோவிலின் சிற்ப வரிசையில் கலியநாயனார் செக்காட்டும் சிற்பமும் இடம் பெற்றுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சோழ மற்றும் பாண்டியப் பேரரசர்கள் காலத்தில் தாவர எண்ணெய் உற்பத்தி அரசால் முழுதும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்பது ஒரு சுவையான தகவலாகும் (பரமசிவன் 2001). அரசர்கள் செக்கின் மீது 'செக்கிறை' அல்லது 'செக்காரப்பாட்டம்' என்ற வரியை இட்டனர் என்று பல கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

ஈ) கரும்புசார் தொழில்கள்

கரும்பு மிகப் பரவலாகப் பயிரிடப்பட்ட தாவரமாகும். குறிப்பாக, மருதநாட்டிலும், தொண்டை மண்டலத்திலும் கரும்பு அதிகமாகப் பயிரிடப்பட்டது. இதன் காரணமாக, கரும்பிலிருந்து

வெல்லமும், சர்க்கரையும் (நாட்டுச் சக்கரையும்) கரும்பாலைகளில் தயாரிக்கப்பட்டன என்ற தகவல் பட்டினப்பாலையிலும் (''கார்க் கரும்பின் கமழாலைத் தீத்தெறுவிற் கவின்வாடி''), சிலப்பதி காரத்திலும், (''கரும்படு சாலையின் பெரும்புகை மண்டக் கூம்பிய நெய்தல்'') காணப்படுகின்றன; கரும்பாலையி லிருந்து பெரும்புகை வெளிப்படும் என்பதும் குறிப்பிடப் பட்டுள்ளது. இயந்திரங்களைப் பயன்படுத்திச் சாற்றினைப் பிழிந்தெடுத்தார்கள் என்று கம்பர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

''கரும்பேந்திரம் முதலாயின
கண்டாள் இடர் காணாள்''

இதேபோன்று பதிற்றுப்பற்றில் குமட்டூர் கண்ணனார் இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனைப் புகழ்ந்து பாராட்டுகின்ற பாடல் களுள் ஒன்றில் கரும்பைக் கட்டுக்கட்டாகக் கொண்டு வந்து வெட்டிச் சாறுபிழியும் இயந்திரத்தில் பலர் கொட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் கூன்வாய்க் கிழியச் சாறு விழுந்து கொண்டிருக்கிறது என்றும் பின்வரும் வரிகள் இயம்புகின்றன:

''அரிநர் கொய்வாள் மடங்க அறைஞர்
தீம்பிழி யந்திரம் பந்தல் வருந்த''

உ) நெசவு மற்றும் பின்னல் தொழில்கள்

சங்க இலக்கியத்தைக் கூர்ந்து ஆய்வு செய்யும்போது, ஆடைகள் அணிவதில் மக்களிடையே இருந்த வேறுபாடுகள் புலப்படுகின்றன. ஒரு பக்கம் உழத்தியர் நெய்தல், ஆம்பல், குவளை, ஞாழல் மற்றும் காவி ஆகிய ஐந்தையும் தனித்தனியாகவும், யாவற்றையும் ஒன்று சேர்த்துக் கட்டியும் தழை உடைகள் அணிந்த செய்திகள் ஒருசில பாடல்களில் காணப்படுகின்றன; இன்னொரு பக்கம், பருத்தி பயிரிடப்பட்டு பருத்தி ஆடைகள் தயாரிக்கப்பட்ட செய்திகள் வேறுசில பாடல்களில் காணப்படுகின்றன. இச்செய்திகளிலிருந்து இடத்திற்கேற்ற ஆடைகள் அணியப்பட்டன என்றும், சமுதாயப் பொருளாதார மட்டத்திற்கேற்ற ஆடைக்ள் அணியப்பட்டன என்றும் கொள்ள வாய்ப்புள்ளது. பருத்தி பயிரிடப்பட்டு பருத்தி விளைந்த ஊர் ஒன்றை ''பருத்தி வேலிச்சீறூர்'' என்று புறநானூறு குறிப்பிடுகிறது (புறம்.:299:1). பருத்திச் செடியிலிருந்து பறித்த பஞ்சை மக்கள் உலர்த்திப் பண்படுத்த இல்லத்தின் முன்றிலில் பரப்பிவைத்திருந்த செய்தியையும் புறநானூறு குறிப்பிடுகிறது[1]. பருத்தியிலிருந்து

1) ''பஞ்சி முன்றிற் சிற்றிலாங்கண்'' (புறம்.:116)

தயாரிக்கப்பட்ட பருத்தி ஆடைகள் பல்வேறு தன்மைகளில் இருந்தன என்றும் புறநானூறு குறிப்பிடுகிறது [1]. நெசவுத் தொழிலில் ஈடுபட்ட பெண்களைப் ''பருத்திப் பெண்டிர்'' என்றும் புறநானூறு குறிப்பிடு கிறது. பண்டைய தமிழகத்தில் பருத்தித்துணி நெசவு செய்த மக்கட் பிரிவினர் யார் என்பதைச் சரியாக அறிந்து கொள்ள முடியவில்லை. புறநானூற்று அடிகள் மூலம் பெண்கள் இரவிலும் சிறிய விளக்கொளி யில் நூல்நூற்ற செய்தியினை அறிகிறோம். இங்கு 'நூல்' என்பதைக் குறிக்கப் 'பனுவல்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. சங்க இலக்கியக் குறிப்புகள் நூற்றல் தொழிலைப் பெண்களோடு சேர்த்தே பேசுகின்றன. உரையாசிரியர்களின் குறிப்பிலிருந்து கைம் - பெண் களே சங்க காலத்தில் நூற்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர் என்று தெரிகிறது (பரமசிவன் 2001).

பண்டைய தமிழர் நெய்த துணியின் மேன்மையை பெரிபிளஸ் பெரிதும் போற்றுகிறது. தமிழர்களின் ஆடைகள் பார்ப்பதற்கு மிக அழகாகவும், பாம்புரிவை போல இருந்ததாகவும் இலக்கியம் பேசு கின்றது (''அரவுரியன்ன அறுவை நல்கி''). பாதுகாக்கப்பட்டு வைத் திருந்த நெய்த பருத்தியும், நூற்கோலும், அதன் நடுவே துளையிடப் பட்டுச் செருகி வைக்கப்பட்டிருந்த இரும்புக் கம்பியும் கொடு மணலில், அகழ்வாய்வின் போது கிடைத்துள்ளன. தமிழக அகழ்வாராய்ச்சியில் துணி கிடைத்திருப்பது இதுவே முதன்முறை எனலாம். இங்கு பருத்தி ஆடை நெய்யும் தொழில் சிறந்து இருந்தமைக்குச் சான்றாகும்.

தாவரத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட நார்கள் அல்லது நார் கொண்ட தாவர உறுப்புகளைப் பயன்படுத்தி நூல் (பனுவல்), ஆடை கள், பாய்கள் மற்றும் கூடைகள் தயாரிப்பவர்கள் நெசவாளர்கள் எனப்பட்டனர். அந்தணர்கள் நூல்களிலிருந்து முப்புரிநூல் எனப்பட்ட மார்பில் அணியும் பூனூலைத் தயாரித்தனர். பாய் நெசவு தொன்று தொட்டுத் தமிழகத்தில் இருந்துவந்த தொழிலாகும். இது பெரும் பாலும் மருதநில மக்களால் செய்யப்பட்ட தொழிலாகும். ஆறுகளின் கரைகளில் வளரும் கோரைகளிலிருந்து பாய்கள் பின்னப்பட்டன. தாமிரவருணி ஆற்றங்கரையில் அமைந்த நெல்லை மாவட்டப் பத்தமடை பகுதியிலும், சிதம்பரம் அருகிலுள்ள கொள்ளிடத்திலும், திருச்சி மாவட்ட முசிறி பகுதியிலும் பாய் பின்னுதல் பன்னெடுங் காலமாகவே இருந்து வந்திருக்கிறது. பாய் நெசவுக்கான மூலப் பொருள் கோரை (= பஞ்சாங்கோரை) ஆகும். சங்க இலக்கியத்தில்

1) ''வேறுபட்ட வுடையுஞ் சேறுபட்ட தசும்பும்'' (புறம்.:377)

மருதத்திணைப் பாடல்களில் இது 'சாய்' என்று குறிக்கப்பெறும். இந்தத் தொழிலில் மருதநிலத்தைச் சேர்ந்த கோரைப்பள்ளர் என்ற ஒரு சாதியினர் ஈடுபட்டனர் என்றும், இவர்களில் பலர் (குறிப்பாக கொள்ளிடம் பகுதியில்) இசுலாமிய மதத்திற்கு மாறிவிட்டனர் என்றும் தெரியவருகிறது (பரமசிவன் 2001).

பாய்கள் பின்னுவது போன்று தாவர நார்களை வேறுவழி களிலும் தமிழர் பயன்படுத்தினர். தாழை விழுதுகளைப் புனைந்து அவற்றின் நாரின் பலத்தால் மகளிர் ஊஞ்சலாடினர். தாழையின் விழுதுகள் (அவற்றில் உள்ள நார்களின் காரணத்தால்) வீட்டிற்கு வண்ண மடிக்கும் துகிலிகைகளாகப் பயன்படுத்தப்பட்டன. பூமாலை கள் தொடுக்கப் பல்வகை நார்கள் கொள்ளப்பட்டன. இங்கு 'அன்பு' எனும் பொருளில் இவ்வாறு கட்டப்பட்ட மாலை ''நார்ச்செறியத் தொகுத்த கண்ணி'' (புறம்.:81) எனப்பட்டது. இதற்காக எளிதில் கிடைக்கும் வாழை நார் பொதுவில் கொள்ளப்பட்டது (இன்றும் கொள்ளப்படுகிறது) என்றாலும், 'ஆர்' எனும் ஆத்தியின் பட்டையை உரித்துக் கிழித்த நாரும் பயன்படுத்தப்பட்டது : ''ஆர்நார் உரிவையின் செம்பூங்கரந்தை புனைந்த கண்ணி'' (அகம்.:269). 'மரல்' நார் கொண்டும் மாலைகள் கட்டப்பட்டன : ''காமர் கண்ணி திரங்கு மரல் நாரில் பொலியச் சூடி'' (மலைபடு.:430, 431). நரைக்கொடியை அப்படியே கொடியாகவும், நாராக்கியும் பயன்படுத்தினர். இந்த நார் வேங்கைப் பூக்களைத் தொடுக்கப் பெரும்பாலும் பயன்படுத்தப் பட்டது : ''நரை நார் வேங்கைக் கண்ணி'' (அகம்.:282:9-10). நார் களைக் கொண்டு மாலை மற்றும் கண்ணி தயாரிப்போர் மாலைக்காரர் எனப்பட்டனர்.

பசுமையான, நார் நிறைந்த, பனை மட்டையைக் குடைவான சிறுகூடை போன்று வளைத்துக் கொண்டு அதில் புதரில் முல்லைப் பூக்களைப் பறித்தனர் [1].

ஊ) அளவிடுதல்

எந்தத் தொழிலிலும் அளவிடுதல் (measuring) மிக முக்கியமானச் செயலாகும். பண்டையத் தமிழர் எண்ணிக்கையைக் (counting) குறிக்க ஆம்பல் குடும்ப மலர்களைப் பயன்படுத்தினர். செல்வக் கடுங்கோ வாழியாதன் என்ற சேர மன்னனைக் கபிலர் ஆயிரம் ஆயிரம் ஆம்பல் ஊழிக்காலம் வாழ்க என்று வாழ்த்தினார் என்பது இலக்கியச்

---

1) ''அவல் வகுத்த பசுங்குடையால்
புதன் முல்லைப் பூப் பறிக்குந்து'' (புறம்.:352:3-4) (அவல் = குடைவாக)

செய்தி[1]. இதில் எண்ணிக்கையைக் குறிக்க ஆம்பல் என்ற சொல் ஏன் பயன்படுத்தப்பட்டது?

இதேபோன்று திருமாலினுடைய கைகளின் பெருமையை அவற்றின் எண்ணிக்கையால் பெருக்கிக் காட்டக் கடுவன் இள வெயினனார் என்ற புலவர் ''ஆம்பல் கைகள்'' என்றார்; ''அடுக்கிய கைகள்'' என்றார்[2]. பரிபாடலின் இந்த வரிகளிலிருந்து ஆம்பல் என்பது நூறாயிரத்துக்கும் மேல் அமைந்த எண்ணிக்கை என்றாகிறது. 'ஆம்பல்' என்பது ஒரு 'எண்ணிக்கைச் சொல்' என்பதை

''ஐ, அம், பல் என வரூஉம் இறுதி
அப்பெயர் எண்ணினும்'' (தொல்.ஃஎழுத்து.ஃபுள்ளி.ஃ98)

என்ற வரிகளின் மூலம் தொல்காப்பியம் சுட்டுகிறது. இவ்வரிகளில் 'ஐ' என்பது தாமரையையும், குவளையையும் குறிக்கும்; 'அம்' என்பது வெள்ளம், சங்கம் (பிற்காலத்தில் இதில் குமுதமும் சேர்ந்து கொண்டது) என்பனவற்றைக் குறிக்கும்; 'பல்' என்பது ஆம்பலைக் குறிக்கும் (கோவை இளஞ்சேரன் 1982).

மற்றொரு பரிபாடல் பாடலில் கீரந்தையார் என்ற புலவர் நெய்தல் மலரையும் ஒரு எண்ணிக்கைச் சொல்லாகக் கருதுகிறார்[3]. மேற்கூறியவற்றிலிருந்து ஆம்பல் குடும்பத் தாவரங்களின் மலர்கள், குறிப்பாக ஆம்பல் மலர், ஒரு பெரும் எண்ணிக்கைக் குறியீடாகக் கொள்ளப்பட்டதை அறியலாம். இந்த ஆம்பல் எத்துணை எண்ணுக்குச் சமமானது என்பதை விளக்குவதற்குப் பிங்கல நிகண்டு ஓரளவுக்கு முயல்கிறது.

---

1) ''அடை அடுப்பு அறியா அருவி ஆம்பல்
ஆயிரம் வெள்ள ஊழி
வாழி ஆத! வாழியவே! (பதிற்.ஃ63ஃ79-81)

2) ''பதிற்றுக்கை மதவலி; நூற்றுக்கை ஆற்றல்;
ஆயிரம் விரித்தகைம்மாய மள்ள
பதினாயிரம் கை முதுமொழி முதல்வ;
நூறாயிரம் கை ஆறறி கடவுள்;
அனைத்தும் அல்ல பல அடுக்கல் ஆம்பல்
இனைத்து என எண்வரம்பு அறியா யாக்கையை'' (பரி.ஃ3ஃ40-45)

3) ''..........................இருநிலத்து ஊழியும்
நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும்
மைஇல் கமலமும் வெள்ளமும் நுதலிய
செய்குறி ஈட்டம் கழிப்பிய வழிமுறை'' (பரி.ஃ2ஃ13-16). (இங்கு 'செய்குறி' என்பது எண்ணிற்குக் கொள்ளப்பட்ட குறியாகும்).

மூன்று ஊழி கொண்டது ஒரு கடல் (மாக்கடல் அன்று) (இது தொல்காப்பியம் கூறாதது)
மூன்று கடல் கொண்டது ஒரு சங்கம் (அம் விகுதி)
எட்டு சங்கம் கொண்டது ஒரு விந்தம் (அம் விகுதி)
எட்டு விந்தம் கொண்டது ஒரு குமுதம் (இங்கு குமுதம் ஆம்பலின் பொதுப் பெயராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது)
எட்டு குமுதம் கொண்டது ஒரு பதுமம் (= தாமரை - ஐ விகுதி)
எட்டு பதுமம் கொண்டது ஒரு நாடு (தொல்காப்பியத்தில் இல்லாதது)
எட்டு நாடு கொண்டது ஒரு மா கடல் (தொல்காப்பியத்தில் இல்லாதது)
எட்டு மாகடல் கொண்டது ஒரு வெள்ளம் (அம் விகுதி)
(பிங்.நி.1647, 1648, 1655-1659)

மேற்கூறியவற்றை உற்று நோக்கினால் ஒரு ஆம்பல் என்பது 576 ஊழிகள் என்பது புலப்படும்.

ஆம்பலின் இதழ்கள் கணக்கற்றவை என்ற காரணத்தால் இவ்வழக்கு ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது. ஆனால் இக்கணக்கு பண்டையத் தமிழகத்தில் எந்த அளவுக்கு நடைமுறையில் இருந்தது என்று கூற முடியாது. எனினும், கோடிக்கு மேல் எண்ணிட இப்படியெல்லாம் குறியீடுகளைக் காண முனைந்த நம்முன்னோர்களின் அறிவுத்திறனும், நோக்கமும் போற்றுதலுக்குரியது (கோவை இளஞ்சேரன் 1982). ஆம்பல், தாமரை என்பவை தாவரப் பெயர்களாக மட்டுமன்றி எண்ணுப் பெயர்க்குறியீடுகளாகவும் வழங்கப் பெற்றுள்ளன என்பது தெளிவு.

நிறுத்தல் அளவைப் பெயர்களுள் பொன்னை நிறுக்கும் அளவை ஒன்று மஞ்சாடி என்பதாம். இது மஞ்சாடி மரத்தின் விதையாகும். ஒவ்வொரு மஞ்சாடியும் இரண்டு குன்றிமணி எடை கொண்டது. பிற்காலத்தில் மஞ்சாடிக்குப் பதிலாகக் குன்றிமணி பொன்னை நிறுக்கப் பயன்படுத்தப்பட்டது. அறுபத்தைந்து குன்றிமணிகள் ஒரு திரமம் (drachma - கிரேக்க எடை அலகு) எடைக்கு ஈடானது. ஒரு குன்றிமணி 0.0648 கிராமுக்குச் சமமானது.

எ) வாசனைப் பொருட்களும் பொருட்பாதுகாப்பும்

தாழையின் பூ மற்றும் தாதுக்கள் மணப்பொருட்களாக மட்டுமன்றி பூச்சிகளையும் அண்டவிடாமல் தடுக்கும் பாதுகாப்புப் பொருட்களாகப் பயன்படுத்தப்பட்டன. இவற்றைத் தானியங்களைப் பாதுகாக்கவும், பனையோலைச் சுவடிகளைப் பாதுகாக்கவும்

பயன்படுத்தினர். இதேபோன்று புன்னை மலரைப் படுக்கையாக அமைத்து அதன்மேல் பரதவர்கள் மீன்புலாலைக் காயவைத்துப் பாதுகாத்தனர்; மீனின் கெடு மணத்தையும் புன்னை மலர் மணம் அகற்றியது. வேப்ப இலையும், பூவும் தானியச் சேமிப்புக் கிடங்கில் பூச்சி தடுப்பான்களாகப் பயன்படுத்தப்பட்டன.

பனை ஓலைச்சுவடிப் பாதுகாப்பில் மரபுவழிமுறைகள் பல கடைபிடிக்கப்பட்டதாக விவரங்கள் கிடைத்துள்ளன (பூமிநாகநாதன் 2001). இவற்றில் முக்கியமானவை பின்வருமாறு : (i) சுவடிகளுக்கு முன்னும் பின்னும் மரச்சட்டங்கள் வைத்தல். இம்மரச்சட்டங்கள் வேம்பு, பலா, தேக்கு, கருங்காலி, பனை மற்றும் மஞ்சள் கடம்பு மரங்களின் கட்டைகளில் இருந்து தயாரிக்கப்பட்டன. இக்கட்டைகள் தான் ஓலைச் சுவடிகளைப் பூச்சிகளில் இருந்தும், தட்பவெப்பநிலை மாறுபாடுகளிலிருந்தும் காப்பாற்ற உதவுகின்றன. (ii) ஓலைகளில் ஒன்று அல்லது இரண்டு துளைகளை இட்டு, அவற்றில் மரக்குச்சி களை நாராசம் என்ற பெயரில் பாதுகாப்பு கருதிச் செருகிப் பல ஓலை களை ஒரே கட்டாக மாற்றுதல். இக்குச்சிகள் பெரும்பாலும் மேற் கூறிய மரங்களிலிருந்தே எடுக்கப்பட்டு, வழவழப்பாக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டன. (iii) ஏடுகளுக்கு எண்ணெய்க்காப்பு செய்தல்; இதற்காகப் பெரும்பாலும் வேப்ப எண்ணெய் பயன்படுத்தப்பட்டது. இந்த எண்ணெய்ப்பூச்சு முடிந்தவுடன் ஓலைகளின் மேல் மஞ்சள் அல்லது வசம்புப் பூச்சு செய்யப்பட்டது. ஏட்டில் எழுதிய எழுத்துக்கள் ஏட்டின் வண்ணத்திலேயே இருந்ததால் எழுத்துக்கள் சரியாகத் தெரிய வசம்பினைச் சுட்டு அதன் கரியை வேப்ப எண்ணெ யில் குழப்பி எழுத்துக்களின் மேல் பூசினர். சில சமயங்களில் மஞ்சள் பொடியை எண்ணெயில் குழைத்தும் பூசினர் (iv) சுவடிகள் வேப்பிலை மேல் அடுக்கி வைக்கப்பட்டன. இதைத்தவிர சுவடிகள் வைக்கப் பட்ட இடங்களில் வசம்பு சிறுசிறு துண்டங்களாக நறுக்கப்பட்டு வைக்கப்பட்டன. ஓமம் சிறுசிறு மூட்டைகளாகக் கட்டப்பட்டும் வைக்கப்பட்டன.

ஏ) குடிநீர் சுத்தப்படுத்துதல்

கலங்கல் நீரைத் தெளிவாக்க தேற்றாங்கொட்டை பயன் படுத்தப்பட்டது[1]. இன்றும் தமிழகத்தின் பலபகுதிகளில் பயன்

---

1) ''மெல்ல மணியுள் பரந்த நீர் போலத் துணிவாம்
கலம் சிதை இல்லத்துக் காழ் கொண்டு தேற்றக்
கலங்கிய நீர் போல் தெளிந்து நலம் பெற்றாள்'' (கலி.:142)
''தேறுபட்ட சின்னீர் போலத் தெளிந்து'' (மணி.:23:142)

படுத்தப்பட்டு வருகிறது. நீரின் சுவை அது பிறக்கும் நிலத்தாலமையும். நிலத்தால் திரிந்து போன (= தன்மை இழந்த) நீரின் சுவையை மேம்படுத்தத் தமிழர்கள் நெல்லித் தாவரத்தைப் பயன்படுத்தினர். கிணற்றுநீர் உவராக இருந்தால் அதனுள் நெல்லி மரத்தின் வேர்களைப் போட்டு வைப்பதும், ஊருணிக் கரைகளிலே நெல்லி மரங்களை நட்டு வைத்து நீரினைச் சுத்தம் செய்ய முயன்றதும் (இவற்றிற்கு 'நெல்லிக் காய் ஊருணி' என்று பெயர்) பண்டைய தமிழரின் பழக்கங்களாகும் (பரமசிவன் 2001).

ஐ) வீடுகட்டும் பொருட்கள்

வீடு, குடிசை, கோவில்கள் போன்றவற்றைக் கட்டுவதற்குக் கற்களைத் தவிரப் பெரும்பாலும் தாவரப் பொருட்களே பயன்படுத்தப் பட்டன. வீடுகள் மரத்தாலும், கரும்புத் தோகையாலும், வைக்கோலாலும், தினைத்தாளாலும் (புறம்.ஃ22ஃ14-15 120ஃ13) புற்களாலும்[1] கட்டப்பட்டன என்று இலக்கியம் கூறும். கரிசல் பகுதிகளில் மண்சுவர் கட்டும்போது கம்மங்கதிரின் சக்கையை மண்ணில் போட்டுப் பிசைந்து கட்டுவர். இதனால் சுவர் உறுதியாக இருக்கும் (சிவசுப்பிர மணியன் 2004). பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை பீரங்கியால் எளிதாகத் தாக்க முடியாததற்கு இத்தகைய கட்டுமானம் தான் காரணம் என்று கருதப்படுகிறது.

ஒ) எழுதுதளங்கள் மற்றும் பொருட்கள்

பனை ஓலைகள் எழுதுதளங்களாகப் பயன்படுத்தப்பட்டன. பண்டைய தமிழ் இலக்கியம் அனைத்துமே பனை ஓலை ஊடகத்தில் தான் எழுதப்பட்டன. தண்டலம் என்ற இடத்தில் காணப்பட்ட கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள் இச்செய்திக்கு வலுவூட்டுகின்றன. இலக்கியங்கள் மட்டுமன்றி ஆவணங்களும் பனை ஓலைகளில்தான் எழுதப்பட்டன (EI.VII.No.5). இந்த வழக்கம் கி.பி. 18ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்தது. 17ஆம் நூற்றாண்டின் முடிவில் எழுது தாள்கள் கிழக்கிந்தியக் கம்பெனியால் நுழைக்கப்பட்டவுடன் பனை ஓலைகளில் எழுதுவது குறைந்து கொண்டே வந்தது.

ஓ) நெருப்பு உண்டாக்குதல்

தீக்குச்சிகளைக் கண்டுபிடிப்பதற்கு முன்பு கற்களைத் தேய்த்தோ, மரக்குச்சிகளைக் கடைந்தோ தான் நெருப்பை உண்டாக்கி

1) ''பைங் கொடிச் சுரைமேற் படர்ந்தபழங் கூரையுடைப்
புற்குரம்பைச் சிற்றில்'' (பெரி.பு.ஃபா.ஃ6)

னர். ஆனால், நெருப்பை உடனே உண்டாக்கவல்ல மரக்குச்சிகளைப் பற்றியோ, நெருப்பைத் தொடர்ந்து எரிய வைக்கும் குச்சிகளைப் பற்றியோ அதிக விவரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. இன்றும் கூட அரசு, புரசு மற்றும் அத்தி மரங்களின் குச்சிகள் நெருப்பைத் தொடர்ந்து எரியவைக்க, குறிப்பாக யாகங்களிலும் சடங்குகளிலும், பயன்படுத்தப்படுகின்றன. தமிழ் நாட்டைச் சேர்ந்த பழங்குடியினர் களான கனிக்கர், நாயதி, பனியர், காடர், தோடர், இருளர், படகர், கோடா போன்றவர்கள் பின்வரும் தாவரங்களின் குச்சிகளை நெருப்பை உண்டாக்குவதற்காகத் தொன்றுதொட்டு பயன்படுத்தி வருகிறார்கள் : உன்னம், கடுவு, மூங்கில், இலவம், செண்பகம், விராலி, ஆத்தி, நீர்வஞ்சி, அத்தி, நரிவிழி, பஞ்சட்டை (செண்பகப் பாலை), காட்டுக்கருவை (செம்பிள்ளை), கிளுவை, *Rhodomyrtus tomentosus, Dalbergia velutina, Elaegnus latifolia, Olea robusta* [1] போன்றவை.

1) இவற்றிற்கான தமிழ்ப் பெயர்கள் வழக்கத்தில் இல்லை.

XI
தமிழகத் தாவரப்பொருட்களின் வாணிகம்

அ) தமிழகத்தின் வாணிகத் தொடர்புகள்

ஒரு நாட்டின் முன்னேற்றத்தையும், பொருளாதாரத்தையும் பாதிக்கும் முக்கியமான காரணி வாணிகம் [1] ஆகும். வரலாற்றின் பண்டைய காலத்திலும் இடைக்காலத்திலும் உலகத்தின் எந்தெந்த நாடுகள் கடல்வழி வாணிகத்தில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டனவோ அவை அனைத்துமே நன்கு வளர்ச்சியுற்று பொரு ளாதார முன்னேற்றமடைந்தன. பண்டைய தமிழகமும் கடல்வழி மற்றும் தரைவழி வாணிகத்தில் ஈடுபடுத்திக் கொண்ட நாடுகளில் முக்கியமானதாகும். இந்தியாவின் பல்வேறு பகுதிகளோடு மட்டு மன்றி உலகின் பிறநாடுகளுடனும் பண்டைய தமிழகம் வாணிகத்தில் ஈடுபட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் தரும் வாணிகம் பற்றிய தகவல்கள் மிக முக்கியமானவை. அக்காலத் தில் தமிழக வாணிகம் உரோம வாணிகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது என்பதை ஐராவதம் மகாதேவன் (2003) விளக்கமாக எடுத்துக் காட்டுகிறார். இந்தோ-உரோம வாணிகப் பாதைகள் என அடையாளங் காணப்பட்டுள்ள பகுதிகளில் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. மத்தியத் தரைக்கடல் பகுதியில் அண்மையில் கண்டெடுக்கப்பட்ட மண்பாண்டப் பகுதி கள் சிலவற்றில் தமிழ்ப்பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. தமிழகத்திற்கும் மத்தியத்தரைக்கடல் பகுதிகளுக்கும் இடையேயான வாணிகத்தொடர்பு அகஸ்டஸ் காலத்திற்கு முன்பே தொடங்கி விட்டது என்பதை இலட்சத்தீவிலும் (Sastri 1992), கோவைக்கு அருகிலுள்ள கள்ளக்கிணறு (Raman 1992) என்ற இடத்திலும், திருப்பூரிலும் கிடைத்துள்ள உரோமக் குடியரசு நாண

1) தமிழ்ப் பிராமி கல்வெட்டுகளில் வணிகம், வாணிகம் ஆகிய இரண்டு சொற்களுமே பயன்படுத்தப்பட்டுள்ளன.

யங்கள் வெளிப்படுத்துகின்றன. வியன்னா அருங்காட்சியகத்திலுள்ள வாணிக ஒப்பந்தம், பண்டைய தமிழகம் மேலை நாடுகளுடன் கொண்ட வாணிகத்தின் தன்மையையும், ஆழத்தையும் புலப்படுத்து கிறது. முசிறி-அலக்சாண்டிரியா வாணிக ஒப்பந்தம் என்று அழைக்கப் படும் இந்த ஒப்பந்தம் கோரைத்தாளில் (papyrus) எழுதப்பட்டதாகும். இதன் காலம் கி.பி. 150 ஆகும். இந்த ஒப்பந்தம் கிரேக்க மொழியில் எழுதப்பட்டுள்ளது. (ராஜன் 2004). பன்னெடுங்காலமாகவே இலங்கைக்கும் தமிழகத்திற்கும் வாணிகத் தொடர்பு இருந்தது என்பதற்கும் பல்வேறு சான்றுகள் உள்ளன.

ஆப்கானிஸ்தான் நாட்டில் மட்டுமே கிடைக்கும் வைடூரியங் களும், குஜராத் மற்றும் மகாராஷ்டிராவில் கிடைக்கும் பவளங்களும், பிராகிருத மொழிச் சொற்களைக் கொண்டுள்ள பானை ஓடுகளும், வடநாட்டு வெள்ளிமுத்திரை நாணயங்களும், மெருகேற்றப்பட்ட வடநாட்டுக் கருப்புப் பானை ஓடுகளும், உரோம நாணயங்களும் (குறிப்பாகச்சேரநாட்டில்), ஆபரணங்களும் தமிழகத்தில் பரவலாகக் காணப்படுவது, தமிழகம் இந்தியாவின் பிறபகுதிகள் மற்றும் வெளிநாடுகளுடன் கொண்டிருந்த வாணிகத்தின் அளவைச் சுட்டுவன வாக உள்ளன (ராஜன் 2004). தருமபுரி மாவட்டக் கம்பைய நல்லூரில் கிடைத்த நாணயம் கரோஷ்டி, கிரேக்கம் என்ற இரு வரிவடிவங்களில் எழுதப்பட்டது என்பதும் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் தட்சசீலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு கி.பி. 30-40-ஆம் ஆண்டுகளில் ஆட்சி புரிந்த சீத்திய மன்னன் (Scythian ruler) இந்திர வர்மனின் மகன் அசுபவர்மனால் வெளியிடப்பட்டது என்பதும் (சுகவன முருகன் 2000) அக்காலக் கட்டத்தில் தமிழகம் அப்பகுதி யுடன் பெற்றிருந்த தொடர்பை வலியுறுத்துகிறது. உண்மையில் இந்தப் பெருவணிகத் தொடர்பில் பெரும்பாலும் ஈடுபட்டிருந்த வர்கள் தமிழ்நாட்டினுள் சமணரே என்பது உறுதியாகிறது.

இப்பாலஸ் (Hippalus) என்ற கிரேக்க மாலுமி தென்னிந்தியா வோடும் தமிழகத்தோடும் மத்தியத் தரைக்கடல் நாடுகள், கிழக்கு ஆப்ரிக்க நாடுகள் மற்றும் அரேபியா ஆகியவை மேற்கொண்ட கடல் வாணிகத்தில் கடல் காற்றுகள் மற்றும் மழைப்பருவங்களின் தாக்கம் பற்றி விவரமாக எழுதியுள்ளார் (Hariharan 1957; Tripati and Raut 2006). மூத்த பிளைனி (Pliny, the Elder கி.பி.23-79) என்ற உரோமானியக் கலைக்களஞ்சிய நிபுணர் தன்னுடைய Natural History என்ற கலைக் களஞ்சிய நூல் தொகுப்பில் பின்வருமாறு கூறுகிறார் : ''இந்தியா வுடன் வாணிகம் செய்வதற்காகக் கடல் பயணம் மேற்கொள்ள நினைக்கும் எவருக்கும் மிகவும் பொருத்தமான ஆரம்பப்புள்ளி (இடம்) ஓசிலிஸ் (Ocilis) (தற்போது அரேபியப் பகுதியிலுள்ள பெபல்

மாண்டேப்) ஆகும். இந்த இடத்திலிருந்து 40 நாட்கள் கடல் பயணத்திற்குப் பின்பு ஹிப்பாலஸ் என்ற காற்று அவரை முசிரிஸ் (Muziris) (= முசிறித் துறைமுகம்) என்ற இந்திய வர்த்தகப் பகுதிக்கு முதலில் கொண்டு செல்லும்; ஆனால் இது வந்து சேர்வதற்கு விரும்பத்தக்க இடமில்லை; ஏனெனில், நிட்ரியாஸ் என்ற கடல் கொள்ளைக் காரர்கள் இருக்கும் இடத்திற்கு அருகாமையில் முசிரிஸ் உள்ளது''. எனினும், சங்க இலக்கியத்தில் முசிறி மிகச் சிறந்த துறைமுகமாகக் காட்டப்படுகிறது [1]. அக்காலத்தில் தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரையில் அரசராக இருந்தவரின் பெயரை பிளைனி Caelobothras மற்றும் Cerobothras (= சேரபுத்திரன்) என்று குறிப்பிடுகிறார். மேலும் பிளைனி கூறுகையில் ''இந்த நாட்டை ஆளும் பாண்டியன் மதுரையில் வாழ்கிறான்; கடற்கரையின் வர்த்தக மையத்திலிருந்து உள்ளே வெகுதூரத்தில் அமைந்துள்ள நகரம் மதுரை'' என்று குறிப்பிடுகிறார்.

கி.பி. முதலாம் நூற்றாண்டின் முடிவில், பெயரறிய முடியாத ஒரு கிரேக்கக் கடல் மாலுமி அரபிக்கடலைக் கடந்து தென்னிந்தியாவின் துறைமுகங்கள் பலவற்றைத் தொட்டுவிட்டு, தன்னுடைய பயணம் பற்றிய அனுபவங்களை Periplus Maris Erithrei (= Periplus of the Erythraean sea : An English translation by W.H.Schoff in 1912) என்ற நூலில் எழுதியுள்ளார். இது மூத்த பிளைனி இறந்து பத்து ஆண்டுகளுக்குப் பின்பு வெளிவந்த நூலாகும். இந்நூல் கிழக்கு ஆப்ரிக்கா, அரேபியா மற்றும் இந்தியாவின் புறப்புவியமைப்பைப் பற்றித் தெளிவாக விளக்கியுள்ளது. இந்நூல் வெளிவந்த காலத்தில் தமிழகத்தைப் பற்றி எகிப்தியர்கள், அரேபியர்கள், கிரேக்கர்கள் மற்றும் உரோமானியர்கள் முழுவதும் வாணிக நோக்கில் நன்கு அறிந்திருந்தனர் என்பது மிகவும் தெளிவாகிறது.

ஆ) தாவரப் பொருட்களின் கடல்வழி வாணிகம்

சங்க காலத்திலும் அதற்குச் சற்று முன்னும் பின்னும் இருந்த ஒருசில நூற்றாண்டுகளில் மற்ற நாடுகளுடன் தழைத்த வெளிநாட்டு வாணிகத்தில் முக்கியப் பங்காற்றியவைகளாகப் புகார், கொற்கை, புதுச்சேரி, தொண்டி, முசிறி போன்ற துறைமுகங்கள் திகழ்ந்ததாகவும், பல கப்பல்கள் இத்துறைமுகங்களை அடைந்ததாகவும் பலராலும் கருதப்படுகிறது. மற்ற பொருட்களைத் தவிர வேளாண் தாவரப் பொருட்கள், மற்றும் இயற்கையாகக் கிடைக்கும் தாவரப் பொருட்களும் இந்த வாணிகத்தில் பெரும்பங்கு வகித்ததாகப் பலர்

1) ''வளம் கெழு முசிறி ஆர்ப்பு எழ வளைஇ.....'' (அகம்.:149:11)

கருதுகின்றனர். பின்வரும்தாவரப் பொருட்கள் வாணிகப் பொருட் களாகத் திகழ்ந்ததாகக் கருதப்படுகின்றன : மணமுள்ள சந்தன மரக்கட்டைகள், தீட்டப்பட்ட கருங்காலி, தேக்கு மரக்கட்டைகள், அகில், புளி, மா, மிளகு, ஏலக்காய், கிராம்பு, இலவங்கப்பட்டை போன்றவை. இவற்றில் மிக முக்கியமானதாக மிளகு கருதப்படு கிறது. தமிழகத்தில் வாணிக வளமையில் பெரும்பங்கு இந்த ஒரு தாவரப் பொருளே வகித்தது என்றும் கருதப்படுகிறது. மேற்கூறிய பொருட்கள் கிரேக்கம், அரேபியா, எகிப்து, மற்றும் உரோம் போன்ற இடங்களுக்குத் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன என்று கூறப்படுகிறது. சாராய வகைகள், குதிரைகள், கண்ணாடி போன்றவை இறக்குமதியான பொருட்களில் மிக முக்கியமானவைகளாகக் கருதப் படுகின்றன. சங்க காலம் முடிந்ததும், களப்பிரர்கள் தமிழகத்தை ஆக்ரமித்துக் கொண்டதும், தமிழகத்தின் வெளிநாட்டு வாணிகம் மேலைநாடுகளுடன் குறைந்து, பின்பு பக்தி இலக்கியக் காலத்தில் கிழக்கு மற்றும் தென்கிழக்கு நாடுகள், சீனா போன்றவற்றுடன் அதிகமாகியது என்றும் கருதப்படுகிறது.

இ) தமிழகத்தின் பண்டைய துறைமுகங்கள்

மேற்கூறிய தாவரப் பொருட்களின் கடல்வழி வாணிகம் நடை பெற்ற தமிழகத்தின் பண்டைய துறைமுகங்கள் பற்றிய சீரிய விளக்கம் இங்கு கொடுக்கப்பட வேண்டும். பெரிபிளஸ் என்ற முன்னரே குறிப்பிட்ட நூல் தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரையில் கோவா விற்கு (= Aegidii) தெற்கே அமைந்துள்ள பின்வரும் துறைமுகங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது (Schoff 1912; Swamy 1976):

Caetinae	-	சிஸ்டர் பாறைகள், கார்வாரை எதிர்நோக்கி கார்வாருக்கு சற்று மேற்கே அமைந்திருந்தது.
Chersonesus	-	கார்வார்
Naura	-	கன்னனூர் (= கண்ணூர்)
Tyndis	-	பொன்னானி (சேர புத்ரன் [1] நாட்டைச் சார்ந்தது; = திண்டில், தொண்டி)
Muziris	-	கிராகனூர் (சேரபுத்ரன் [1] நாட்டைச் சார்ந்தது = முசிறி)

1) சேரபுத்ரன் சேரநாட்டு அரசனா அல்லது மலையாள நாட்டு அரசனா என்பது பற்றிய நீண்ட சர்ச்சை உள்ளது; இரண்டிற்கும் சரியான ஆதாரங்கள் இல்லை. ஆனால் பெரிபிளஸ் சேரபுத்ரன் மற்றும் பாண்டிய அரசுகள் வெவ்வேறானவை என்று கூறுகிறது.

Nelcynda - கோட்டையத்திற்கு அருகாமையில் கிழக்கே *10* கி.மீ. தூரத்தில் அமைந்திருந்த பகுதி *(பாண்டிய நாட்டைச் சேர்ந்தது; = நீர்க்குன்றம்* - Kanakasabai 1904; *ராஜன் 2004)*

Bacare - பொற்காடு (Porkad) *(= வைக்கரை?; ராஜன் 2004)*

Balita - வர்க்கலை

வர்க்கலையிலிருந்து கப்பல் பராலியாவை (திருவாங்கூர் உப்பங்கழி களில் தொடங்கி, கன்னியாகுமரியைச் சுற்றி ஆடம் பாலம் (Adam's Bridge) வரையிலுள்ள கடற்கரைப்பகுதி) தொடாமல் கிழக்குக் கடற் கரையில் பாண்டிய நாட்டைச் சேர்ந்த கொற்கையை (Colchi-பாண்டிய நாடு) அடைந்தது.

அங்கிருந்து இக்கப்பல் வடக்கு நோக்கி சென்று கடற்கரை நாட்டை (Coastal Kingdom) அடைந்தது. இது சோழநாடு என்று அறியப் படுகிறது (Nilakanta Sastri 1939b). இந்த கடற்கரை நாட்டின் மிக உள்ளே அமைந்திருந்தது தான் Argaru. இது உறையூரைக் குறிப்பதாகக் கொள்வர். கடற்கரை நாட்டுக்கு வடக்கே அமைந்திருந்தது Camara என்ற காவேரிப்பட்டினம் [1], Poduca என்ற புதுச்சேரி, Soptama என்ற மரக்காணம் [1], Nikama என்ற நாகப்பட்டினம் (இது பட்டினம் என்றும் எயிற் பட்டினம் என்றும் வழங்கப்பட்டதாகக் கருதுவர் [2]) போன் றவை. கடைசியில் இக்கப்பல் Dasarene என்று அழைக்கப்பட்ட ஒரிசாவை அடைந்தது. ஒரிசாவில் இருந்த பண்டைய துறைமுகங்கள் Sisupalgarh, Jaugada, Tamralipti, Palur, Manikapatna மற்றும் Kaligapatnam (Tripati and Raut 2006).

பெரிபிளஸ் குறிப்பிடும் மேற்கூறிய துறைமுகங்களைத் தவிர, சமீபத்திய அகழ்வாராய்ச்சிகள் மூலம் தமிழகத்தில் மேலும் சில துறைமுகங்கள் இருந்ததாகத் தெரிய வருகிறது (Arul Raj 2005; ஜெயக்குமார் 2001). அவையாவன: மகாபலிபுரம், வாசவ சமுத்திரம்,

---

1) *Camara என்பது காரைக்கால் என்று அருள்ராஜ் (Arul Raj 2005) கருதுகிறார்: இதேபோன்று Sopatma என்பது சென்னை என்று அவர் குறிப்பிடுகிறார்.*

2) *எயிற் பட்டினம் சிறந்த துறைமுகமாக விளங்கியதைச் சிறுபாணாற்றுப்படை (152) கூறுகிறது. 'நீர்ப்பெயற்று' என்ற ஊரின் எல்லையில் இத்துறைமுகம் இருந்ததைப் பெரும்பாணாற்றுப்படையும் எடுத்துக்காட்டுகிறது. இது மரக்காணத்தைக் குறிக்கும் என்று ஒரு சிலரும், மாமல்லபுரத் துறைமுகத்தின் முன்னோடி என்று வேறுசிலரும் (இராசமாணிக்கம் 1970) கூறுகின்றனர்.*

அழகன்குளம் (= மருங்கூர்ப்பட்டினம்? [1]), காயல், பெரியபட்டினம், சிங்கமேடு, அரிக்கமேடு [2] மற்றும் காரைக்காடு.

ஈ) ஏற்றுமதி செய்யப்பட்ட தாவரப் பொருட்கள்

பெரிபிளஸ் நூலில் இருந்து நாம் மேலும் அறிவது என்னவென்றால், Damirike என்று அழைக்கப்பட்ட தமிழகத்தின் சேரபுத்ரனின் பொன்னானி, கிராகனூர் துறைமுகங்கள் மற்றும் பாண்டிய நாட்டின் கோட்டையம் அருகாமையில் இருந்த நெல் சிண்டா (= நீர்க்குன்றம்) மற்றும் பொறகாடு துறைமுகங்களிலிருந்து பின்வரும் தாவரப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன என்பது தான் ஃ மிளகு, மலபாத்ரிகம் மற்றும் சடாமாஞ்சி (= Spikenard). நெல்சிண்டா மற்றும் பொறகாடிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மிளகு, இந்த இரண்டு இடங்களுக்கும் அருகாமையில் அமைந்த Cottanara என்ற இடத்திலிருந்து பெறப்பட்டதாகப் பெரிபிளஸ் கூறுகிறது. மூத்த பிளைனியும் Neacyndon (= Nelcynda) துறைமுகத்திற்கு மிக அதிக அளவில் மிளகு Cottanara - விலிருந்து சிறு படகுகள் மூலம் கொண்டு வரப்பட்டதாகக் கூறியுள்ளார். Cottanara- வைக் குட்டநாடு என்று கனகசபை (Kanakasabhai 1904) கருதுகிறார். ஆனால் தெல்லி சேரிக்கு அருகாமையில் இருக்கும் கொலத்த நாடு (Kolatta-nadu) என்று வேறுசிலர் கருதுகின்றனர். ஏற்றுமதி செய்யப்பட்ட இன்னொரு பொருளான மலபாத்ரிகம் (malabathricum) பாண்டியநாட்டின் உட்பகுதி களிலிருந்து பெறப்பட்டது என்ற கருதப்படுகிறது. ஏற்றுமதியான மூன்றாவது பொருளான சடாமாஞ்சி கங்கைச் சமவெளிப் பகுதிகளி லிருந்து பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

i) மிளகு

சங்க இலக்கியம் முழுவதிலும் மிளகு பற்றி 'மிளகு' என்ற பெயரில் ஆறு இடங்களில்தான் சுட்டப்பட்டுள்ளன என்றும், 'கறி'

---

1) மருங்கூர்ப்பட்டினம் துறைமுகம் பற்றி அகநானூறு கூறுவது:

"..................................
விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்
இருங்கழிப்படப்பை மருங்கூர்ப்பட்டினத்து" (அகம்.ஃ227ஃ19-20)
"பசும்பூண் வழுதி மருங்கை அன்ன" (நற்ஃ358ஃ10)

2) பாண்டிச்சேரிக்கு அண்மையிலுள்ள அரிக்கமேடு பகுதியில் மார்ட்டிமர் வீலர் *(Mortimer Wheeler)* மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியின் மூலம் கிடைத்த எச்சங்களில் உரோமானியப் பானைப் பொருட்கள் மிக முக்கியமானவை. உரோமானியர்கள் இத்துறைமுகத்தின் மூலம் தமிழகத்தோடு வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

என்ற பெயரில் ஏறத்தாழ 20 இடங்களிலும் சுட்டப்பட்டுள்ளன என்றும், மிளகை வாணிகப் பொருளாக இரண்டே இரண்டு இடங்களில் மட்டும்தான் சுட்டி உள்ளன என்பதும் மிகுந்த வியப்பைத் தருகிறது [1]. மிளகு ஒரு முக்கியமான தாவரப் பொருள் என்று கிரேக்கர்களுக்கு கி.பி. முதலாம் நூற்றாண்டிலேயே தெரிய வந்துள்ளது (Gunther 1959). டீயாஸ்கோருடீஸ் (Dioscorides) என்ற கிரேக்க மருத்துவர் இந்தத் தகவலைத் தன்னுடைய மருத்துவநூலில் குறிப்பிட்டுள்ளார். மேலும், மிளகு இந்தியாவிலிருந்து பெறப்படும் ஒரு பொருளாகும் என்றும், இதற்குப் பலவிதமான பண்புகளும் மருத்துவக் குணங்களும் உண்டு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மிளகு தென் இந்தியாவில் மேற்குக் கடற்கரையில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட ஒரு பொருள் என்று Cosmos Indicopleustes என்ற கிரேக்க-எகிப்திய வணிகர் கி.பி.535இல் குறிப்பிட்டுள்ளார் (McCrindle, 1897).

ii) மலபாத்ரிகம்

மலபாத்ரிகம் (malabothricum) அல்லது மலபாத்ரம் (malabothram) என்று பெரிபிளஸ் குறிப்பிடும் பொருளின் சரியான தாவரவியல் பெயர் என்னவென்று நிர்ணயம் செய்ய முடியவில்லை. இப்பெயர் மொத்த தாவரத்தையும் குறிக்கிறதா அல்லது அதன் ஏதோ ஒரு பகுதியைக் குறிக்கிறதா என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. Lauraceae என்ற தாவரக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருசில சிற்றினங்களின் நறுமணம் மிக்க இலைகளை இச்சொல் குறிக்கும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. இத்தாவரக் குடும்பத்தைச் சார்ந்த தொடர்புடைய பல சிற்றினங்களின் நறுமண இலைகள் கலந்த கலவையாக இது சந்தையில் இன்றும் கிடைக்கிறது. பால் (Ball 1885) என்பவரின் கூற்றுப்படி மலபாத்ரிகம் *Cinnamomum* என்ற பேரினத்தின் சிற்றினமாக இருக்கலாம் என்றும், குறிப்பாக *C.tamala* ஆக இருக்கலாம் என்றும், இது பெருமளவு அசாமில் இருந்து பெறப்படுகின்றது என்றும் தெரிய வருகிறது. இவருடைய கூற்று டாலுமீயின் கருத்துடன் ஒன்றியுள்ளது. டாலுமீயின் கூற்றுப்படி மலபாத்ரிகத்தின் மிகச் சிறந்த வகைகள் Sestai என்ற இடத்திலிருந்து பெறப்பட்டு இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது என்றும், முதலில் அவை கங்கைச் சமவெளியிலிருந்து அதன்

---

1) ''யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்'' (அகம்.: 149:9-10)
''நீரின் வந்த நிமிர் பரிப்புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்'' (பட்.பா.:185 & 186)
(நச்சினார்க்கினியர் குதிரைகள் மிளகு மூட்டைகள் ஆகிய இரண்டும் கடல் வழியே வந்தன என உரை கூறுவது குறிப்பிடத்தக்கது)

முகத்துவாரத்தின் வழியாக தென்னிந்தியாவின் கிராகனூருக்கும், நெல் சிண்டாவிற்கும் பட்டு வாணிக வழி (silk trade route) மூலம் அனுப்பப்பட்டது என்றும் தெரியவருகிறது. டீயாஸ்கோருடீஸ் கூற்றுப்படி, தடிப்பான ஆனால் எளிதில் உடையக் கூடிய மலபாத்ரிக வகைதான் உண்மையான மலபாத்ரிகம் ஆகும்; மெல்லிய மற்றும் மென்மையான வகை பொய்யான மலபாத்ரிகம் என்றும் அவர் கூறியுள்ளார். இவருடைய கூற்று தமிழகத்தில் இருந்து அப்பொழுது கிரேக்கத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மலபாத்ரிகத் தில் பல சிற்றினங்களின் கலவை இருந்தது என்பதற்கு ஆதாரமாகத் திகழ்கிறது. எனவே, பாண்டிய நாட்டுத் துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மலபாத்ரிகத்தில் அசாம் பகுதியில் இருந்து பெறப் பட்ட நல்ல மலபாத்ரிகமும், தமிழகப் பகுதிகளில் விளைந்த Lauraceae தாவரக் குடும்பத் தாவரங்களின் இலைகளும் (ஓரளவு தரத்தில் குறைந்த ·மலபாத்ரிகமும்) கலக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப் பட்டிருக்கலாம் என்பது தெளிவாகத் தெரிகிறது. இக்கருத்தினைப் பெரிபிளஸூம் எடுத்துக் கூறுகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பாண்டியத் துறைமுகங்களில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மலபாத்ரிகம் கங்கைப் பிரதேசத்திலிருந்துதான் பெறப்பட்டவை என்று பெரிபிளஸ் மிகவும் திட்டவட்டமாக கூறுகிறது. சிந்துநதியின் மேற்குப் பகுதியில் இருந்தும், இண்டோ-சீத்திய/ (Indo-Scythia) பகுதியில் இருந்தும் பெறப்பட்ட மலபாத்ரிகம் Ozene எனப்பட்ட உஜ்ஜைனி (Ujjain) வழியாக புரோச் (குஜராத்தின் துறைமுகம்) அடைந்து, அங்கிருந்து நேரடியாக எகிப்துக்கு ஏற்றுமதியானதாகவும் தகவல்கள் உள்ளன (Ball 1885). அதேசமயம், பட்டு வாணிக வழியாக அது பாண்டியத் துறைமுகங்களை அடைந்து அங்கிருந்தும் கிரேக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதற்கான ஆதாரங்களும் உள்ளன. கிரேக்கர்களுக்கு மலபாத்ரிகம் அப்பொழுது தமிழகத்தைச் சேர்ந்த மலபார் பகுதியில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது என்ற செய்தி தான் முக்கியமாகப் பட்டதேயொழிய, இவை எங்கிருந்து பெறப் பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டன என்ற விவரம் அல்ல. இதன் காரண மாகத்தான் இப்பொருளுக்கு மலபாத்ரிகம் என்ற பெயர் கிரேக்கர் களால் கொடுக்கப்பட்டது. மலபாத்ரிகமும், மலைப்பத்ரியமும் (malaipattirium) ஒன்று தான் என்று சாமி *(1967)* குறிப்பிடுகிறார். ஆனால், இவை இரண்டும் முற்றிலும் வேறுபட்டவையாகும் (Swamy 1976).

iii) சடாமாஞ்சி

ஏற்றுமதி செய்யப்பட்ட மூன்றாவது முக்கியப் பொருள் சடாமாஞ்சி என்ற ஜடமாஞ்சியாகும். இதில் இந்திய வகை மற்றும்

சிரியா வகை என்று இரு வகைகள் உள்ளன. இந்திய வகையின் தாவரவியல் பெயர் *Nardostachys jatamanshi* (புதுப்பெயர் *N.grandiflora*) ஆகும். சாமி (1967) அவர்களின் கூற்றுப்படி சடாமாஞ்சியின் கிரேக்கப் பெயரான Nard என்பது நரந்தம் என்ற மணமுள்ள புல் தான் என்றும், Nardin மற்றும் Nard என்ற சொற்கள் நரந்தம் என்ற தமிழ்ச் சொல்லி லிருந்து பெறப்பட்டது என்றும் அவர் மேலும் கூறுகிறார். நறுமண முடையது என்ற பொருளின் அடிப்படையில் அமைந்தவை இச்சொற் கள் என்றும் அவர் மேலும் வலியுறுத்துகிறார். சடாமாஞ்சி பற்றிய செய்திகள் பைபிளிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. நேபாளம், பூட்டான், மத்தியஇமாலயம் மற்றும் மேற்கு ஆசியாவின் உயர்ந்த மலைப்பகுதிகளில் இத்தாவரம் இயற்கையாக வளர்கிறது. தென் னிந்தியாவிலும், தமிழகத்திலும் இத்தாவரம் அறவே காணப்படுவ தில்லை. இத் தாவரத்தின் வேரும், தொடுவதற்கு மெல்லிய கம்பளி போன்று இருக்கும் தண்டுப் பகுதியும் (இலைகள் விரியுமுன்) காயவைக்கப்பட்டு, அவற்றிலிருந்து நறுமணப் பொருள் பெறப் படுகிறது. இப்பொருள் மருத்துவப் பண்பு உடையது. பெரிபிளஸ் கூற்றுப்படி, சடாமாஞ்சி Caspapyrene என்று அப்பொழுது அழைக்கப் பட்ட காஷ்மீர் பகுதியிலிருந்தும், Paropanisene என்று அப்பொழுது அழைக்கப்பட்ட இந்துகுஷ் மலைப் பகுதியிலிருந்தும், Eabolitic என்ற காபூல் பகுதியில் இருந்தும் பெறப்பட்டு Ozene என்ற உஜ்ஜைனி வழியாகத் தமிழகத்திற்கு அனுப்பப்பட்டது. டீயாஸ்கோருடீஸ் என்ற பண்டைய கிரேக்க மருத்துவர் இரண்டு வகையான சடாமாஞ்சியைப் (nardo) பற்றித் தன்னுடைய மருத்துவ நூலில் குறிப்பிட்டுள்ளார். ஒருவகை சிரியாவிலிருந்தும் (தாவரப் பெயர் *Patrina scabiosaefolia*), மற்றொரு வகை இந்தியாவிலிருந்தும் (இவ்வகை Gangeticall எனப்பட்ட *Nardostachys jatamanshi*) பெறப்பட்டன என்று அவர் கூறியுள்ளார். எனவே, இந்தியாவில் இத்தாவரத்தின் சொந்த இடம் பற்றிய டீயாஸ்கோருடீஸின் கூற்றுக்கும் பெரிபிளஸின் கூற்றுக்கும் சிறந்த ஒப்புமை உள்ளது.

மேற்கூறிய விளக்கங்களில் இருந்து பாண்டிய நாட்டுத் துறை முகங்களில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மூன்று தாவரப் பொருட் களில் (பெரிபிளஸ் கூறியுள்ள மூன்று பொருள்கள்) மிளகு மட்டும் தான் தமிழ்நாட்டிலேயே பெறப்பட்டது. மற்ற இரண்டும் வடநாட்டி லிருந்து பெறப்பட்டு பின்பு ஏற்றுமதி செய்யப்பட்டவையாகும். இந்த இரண்டில் மலபாத்ரிகம் அதற்குத் தொடர்புடைய தமிழக 'மலபாத்ரிகத்துடன்' கலக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதும் தெளிவாகிறது. சடாமாஞ்சி தமிழகத் தாவரமேயல்ல.

iv) ஏற்றுமதி செய்யப்பட்டதாகக் கருதப்படும் மற்ற தாவரப் பொருட்கள்

தற்கால அறிஞர்கள் பலர், மேலும் பல தாவரப் பொருட்கள் பண்டைய தமிழகத் துறைமுகங்களில் இருந்து மேலைநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன என்று வலியுறுத்தியுள்ளனர். இதற்கான வரலாற்று ஆதாரங்கள் வலிவுடையனவாக இல்லை. இவ்வாறு ஏற்றுமதி செய்யப்பட்ட தாவரப் பொருட்கள் பின்வருமாறு: ஏலக்காய், இஞ்சி, கிராம்பு, ஜாதிக்காய் மற்றும் ஜாதி பத்ரி, தேங்காய், வாழை, நல்லெண்ணெய், வெல்லம், கருங்காலி (எபனி மரக் கட்டை), தேக்கு மற்றும் சந்தனக்கட்டை (Arokiaswami 1967); ஏலக்காய், சந்தனக்கட்டை, இலவங்கப்பட்டை/இலை, அகில், மஞ்சள், குங்குமப்பூ மற்றும் அரிசி (Pillai 1969); தேக்கு, சந்தனக்கட்டை, அரிசி, இண்டிகோ *(சாயப்பொருள்)* (Purnalingam Pillai 1927); சந்தனக்கட்டை, இலவங்கப்பட்டை/இலை, அகில், மஞ்சள், குங்குமம்?, அரிசி *(இராசமாணிக்கம், 1970)*; சந்தனக்கட்டை, புளி, கத்தாழை *(அகில்?)* (Ramachandran 1963-64); சந்தனக்கட்டை, இலவங்கப்பட்டை/இலை, அகில் (Subramanian 1966).

மேற்கூறியவற்றில் ஒன்றான இஞ்சி தமிழ்நாட்டில் (இந்தியா விலும்) எங்கும் இயல்பாக (wild) வளருவதில்லை. ஆனால், இது இந்தியாவில் பலகாலமாகப் பயிரிடப்பட்டு வந்துள்ளது. இதைப் பற்றிப் பெரிபிளஸ் எந்தவிதத் தகவலையும் கொண்டிருக்கவில்லை. ஆனால், டீயாஸ்கோருடீஸ் இஞ்சியைப் பற்றி அறிந்துள்ளார். தன்னுடைய மருத்துவ நூலில் குறிப்பிட்டுள்ளார். இஞ்சியின் அரேபியப் பெயர் Zanjabil ஆகும். இந்தப் பெயரைக் கிரேக்கர்கள் ஏற்றுக் கொண்டனர் என்றும், கிரேக்கத்திலிருந்து தான் இது சமஸ்கிருதத்திற்கு Shringavera என்ற பெயரில் அறியப்பட்டது என்றும் சுவாமி (Swamy 1976) கருத்து தெரிவித்துள்ளார். ஆனால், சரகர் (Charaka) தன்னுடைய ஆயுர்வேத நூலில் *(வடமொழியில் எழுதப்பட்டது)* இஞ்சியை Ordraka என்ற பெயரில் அழைக்கிறார். இதே பெயரோ, இதன் மருவல்களான ardak மற்றும் ardat என்ற பெயர்களால் தான் இஞ்சி வடஇந்தியாவில் இன்றும் அழைக்கப்படுகிறது. இலின்னேய சின் (Linnaeus) இஞ்சிக்கான தாவரப் பெயரான *Zingiber officinalis* அரேபிய/கிரேக்க பெயரில் இருந்து பெறப்பட்டதேயொழிய, தமிழ்ப் பெயரான ‘இஞ்சி’யில் இருந்து பெறப்படவில்லை (Swamy 1976). தமிழகத்தின் வரலாற்றில் எப்பொழுதிலிருந்து இஞ்சி பயன்படுத்தப் பட்டது என்பது பற்றிய தெளிவான விவரங்கள் இல்லை. ஆனால், உணவிற்குக் காரம் ஏற்படுத்த மிளகும், இஞ்சியும்தான் பண்டைய

தமிழகத்தில் பயன்படுத்தப்பட்டன என்பது தெளிவு. தற்போதுள்ள ஆதாரங்களின் அடிப்படையில் பண்டையத் தமிழகத்திலிருந்து இதன் ஏற்றுமதி பற்றி நிச்சயமான முடிவுக்கு வரமுடியாது.

மஞ்சள், இஞ்சியைப் போன்றே, இந்தியாவில் பன்னெடுங் காலமாக வளர்க்கப்பட்டு வந்த தாவரமாகும்; எங்கும் இயல்பாகக் காணப்படுவதில்லை. இதன் தாவரப்பெயர் *Curcuma domestica*; இதன் வேறு சிற்றினங்கள் இந்தியாவிலும், தமிழகத்திலும் இயல்பாக வளருகின்றன. பெரிபிளஸ் மற்றும் டியாஸ்கோருடீஸ் மஞ்சளைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. சங்க இலக்கியத்தில் மஞ்சள் பற்றிய செய்திகள் உள்ளன. ஆனால் இதன் ஏற்றுமதி பற்றி எங்கும் குறிப்புகள் இல்லை.

கிராம்போ (Clove), ஜாதிக்காயோ (மற்றும் ஜாதிபத்ரி) (nutmeg and mace) கி.பி.19-ஆம் நூற்றாண்டு வரை இந்தியாவின் எப்பகுதியிலும் இயல்பாகவோ, பயிர்களாகவோ காணப்படவில்லை. ஆனால், இவை தமிழகத்தின் மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களை பசிபிக் தீவுகளில் இருந்து அடைந்தன என்றும் இங்கிருந்து இவை மத்தியத் தரைக்கடல் நாடுகளுக்குச் சென்றன என்றும் சுவாமி (Swamy 1976) கருதுகிறார். சங்க இலக்கியத்திலோ, பைபிளிலோ, பெரிபிளஸிலோ கிராம்பு பற்றிய குறிப்புகள் எதுவுமில்லை. கிராம்பைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லான இலவங்கமும் சமஸ்கிருத சொல்லான லவங்கா வும் தொடர்புடையன; ஆனால், எது மூலம், எது பெறப்பட்ட சொல் என்பது தெளிவாக இல்லை. கிராம்பு என்ற தமிழ்ச் சொல் 'Cravo' என்ற போர்ச்சுகீசிய சொல்லின் தழுவல்தான் என்பதில் ஐயமில்லை. எனவே இந்த இரண்டு பொருட்களுமே தமிழகத் துறைமுகங்களி லிருந்து ஏற்றுமதி செய்யப்படவில்லை என்பது உறுதி. கிராம்பு பற்றிய செய்திகள் பரவலாக கி.பி.11-ஆம் நூற்றாண்டுக்குப் பின்பு தான் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன (EC.IV.Sa.109, கி.பி. 1042: EI.XIV. எண் 15, கி.பி. 1173-1174). இந்தப் பொருள் சீனாவில் கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து பயன்படுத்தப்பட்டதாகத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன; ஆனால் கிராம்பு சீனாவைச் சேர்ந்ததுமல்ல (Swamy 1976).

கி.பி. முதலாம் நூற்றாண்டில் தமிழகத்திலிருந்தோ, இந்தியா வின் வேறு பகுதியிலிருந்தோ தேங்காயோ, வாழையோ ஏற்றுமதி செய்யப்பட்டதற்கான எந்தவித ஆதாரமும் இல்லை. எனினும் இந்த இரண்டு பொருட்களைப் பற்றிய குறிப்புகள் பல சங்க இலக்கியங் களில் காணப்படுகின்றன. டியாஸ்கோருடீஸ் வாழையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் எனினும், அந்த வாழைக்கும் தமிழக வாழைக்கும்

எந்தத் தொடர்பும் இல்லை (Swamy 1976). பெரிபிளஸ் இந்த இரண்டு தாவரங்களின் ஏற்றுமதி பற்றி எந்தக் குறிப்பையும் சுட்டவில்லை. பிள்ளை (Pillai 1969) குறிப்பிடும் பின்வரும் சொற்கள் ஆதாரமற்றவை : "The Periplus testifies to the South Indian export of coconut oil...... bananas.....". பெரிபிளஸ் பயன்படுத்திய சொல் naupolis. இது பால் (Ball 1885) என்பவரால் தவறாக Nargil என்று எடுத்துக் கொள்ளப்பட்டது. பின்பு தென்னையின் வடமொழிப் பெயரான நாரிகெல் என்பதுடன் தொடர்பு படுத்தப்பட்டது. மேலும், தென்னையின் வடமொழிச் சொல்லே இந்திய வரலாற்றின் மையக் காலத்தில்தான் ஏற்படுத்தப் பட்டது. எனவே வாழையும், தென்னையும் (அவற்றின் பொருட் களும்) தமிழகத் துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதியானதற்கு வலிவான ஆதாரங்கள் இல்லையெனக் கொள்ளலாம்.

நல்லெண்ணெய் ஏற்றுமதி Barygaza என்றழைக்கப்பட்ட புரோச் துறைமுகத்திலிருந்து (குஜராத் மாநிலத்தில் உள்ளது) நடைபெற்றது என்று பெரிபிளஸ் கூறுகிறது. இத்துறைமுகத்திற்கு நல்லெண்ணெய், அப்பொழுது Ariake என்றழைக்கப்பட்ட நர்மதா சமவெளிப் பகுதியி லிருந்து வந்தது என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது (Ball 1885). எனவே, தமிழகத் துறைமுகங்களிலிருந்து நல்லெண்ணெய் ஏற்றுமதி நடை பெற்றதற்கு வலிவான ஆதாரங்கள் இல்லை.

வெல்லம் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதுவோ, இதன் மூலப்பொருளான கரும்போ தமிழகத் துறைமுகங்களிலிருந்து மத்தியத் தரைக்கடல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் எதுவுமில்லை. "Honey from the canes" (பெரிபிளஸின் ஆங்கில மொழிப்பெயர்ப்பு, Schoff 1912) Barygaza என்ற புரோச் துறைமுகத்திலிருந்து Barbaria சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாக பெரிபிளஸ் கூறுகிறது; தமிழகத்தி லிருந்து அல்ல. மேலும் "Honey from the canes" என்பதை ஆரோக்கியசாமி (Arokiaswami 1967) 'வெல்லம்' என்று பொருள் கொண்டது தவறாகும். அக் காலகட்டத்தில், கரும்பு வெல்லத்திற்குப் பதிலாகப் பனை வெல்லம்தான் தமிழகத்தில் பெரிதும் பயன்படுத்தப்பட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எபனி (Ebony) என்று கூறப்படும் *Diospyros ebenum* தாவரத்தின் மரக்கட்டை (timber) தென்னிந்தியாவின் மேற்குப் பகுதிகளில் உள்ள வறண்ட வெப்பமண்டலக் காடுகளில் (Tropical Dry Forests) இருந்து பெறப்பட்டது. இந்தத் தாவரம் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப் பட்டுள்ளது. கருங்காலி என்ற பெயரில் இது அழைக்கப்பட்டது. பைபிள் வல்லுநர்கள் 100 உருளை எபனிக்கட்டைகள் பெர்சிய

மன்னர்களுக்கு எத்தியோப்பியர்களால் ஒவ்வொரு வருடமும் கொடுக்கப்பட்டதாகவும் இவை இந்தியா அல்லது இலங்கையி லிருந்து பெறப்பட்டதாகவும் கருதுகின்றனர் (Moldenke and Moldenke 1962). பெரிபிளஸ் தமிழகத்தில் இருந்து இந்தப் பொருள் ஏற்றுமதி செய்யப்பட்டது பற்றிக் குறிப்பிடவில்லை. வேறு எந்த முறையிலும் பைபிளின் கூற்றை நிரூபிக்க முடியாத நிலையில், தமிழகத்திலிருந்து எபனி ஏற்றுமதி பற்றி எந்த முடிவான கருத்துக்கும் வரமுடியவில்லை.

Rose wood எனப்படும் மரக்கட்டை (தாவரப் பெயர் *Dalbergia latifolia*) பற்றி பெரிபிளஸ், பைபிள் மற்றும் கிரேக்க அறிஞர்களின் நூல்கள் எந்தவிதத் தகவலும் கொடுக்கவில்லை. இது தமிழகத்தில் இயல்பாக வளர்ந்த ஒரு தாவரமாகும். எனினும், இது தமிழகத்தி லிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதற்கான சரியான, வலுவான ஆதாரங்கள் எதுவுமில்லை.

தேக்கு பற்றிய குறிப்புகள் ஏறத்தாழ ஆறு இடங்களில் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. ஆனால் எந்த இடத்திலும் இது தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட வில்லை. ஒருசில அறிஞர்களின் கருத்துப்படி (Purnalingam Pillai 1927), ஊர் (Ur) என்ற பாபிலோனியப் பகுதியிலிருந்து (சால்தியா நாடு) அறியப்பட்ட தொல்லியல் எச்சங்களில் இருந்த 'தேக்குக் கட்டைகள்' (கி.மு. 300-க்கு முற்பட்டது) இந்தியாவிலிருந்து பெறப்பட்டவை யாகும் (பிரேம் ராஜகுமார் 2005). இதில் முக்கியப் பிரச்சனை என்ன வென்றால், ஊர் (Ur) பகுதியிலிருந்து பெறப்பட்ட மரக்கட்டை தேக்கு தான் என்பது இன்றும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட வில்லை. ஆனால், பிள்ளை (Pillai 1969) கூற்றுப்படி பண்டைய காலத்தில் ஊர் பகுதிக்கு அருகாமையிலிருந்த எந்தவொரு நாட்டிலும் தேக்கு மரங்கள் இருந்தன என்று நிச்சயமாகக் கூறமுடியாது.

சந்தனக்கட்டைகள் பற்றி பெரிபிளஸ் எதுவும் குறிப்பிட வில்லை; இதே காலத்து கிரேக்க அறிஞர்களும் எதுவும் குறிப்பிட வில்லை. சங்க இலக்கியத்திலும் 'சந்தனம்' என்ற சொல் மிகவும் அரிதாகத் தான் காணப்படுகிறது (French Institute Index 1968); ஆரம் என்ற சொல்தான் காணப்படுகிறது. இந்த இடங்களிலும் இது ஒரு வியாபாரப் பொருளாகவோ அல்லது ஏற்றுமதிப் பொருளாகவோ குறிப்பிடப்படவில்லை. ஆனால், சந்தனமரம் தமிழகத்தில் இயல்பாக வளர்ந்த/வளரும் மரங்களில் ஒன்றாகும். இதன் ஏற்றுமதிக்கு சாத்தியக்கூறுகள் இருப்பினும் வலுவான ஆதாரம் எதுவு மில்லை.

Cinnamon என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இலவங்கப் பட்டை பற்றி நிறைய குழப்பங்கள் உள்ளன. பால் (Ball 1885) கூற்றுப்படி இது பெரிபிளஸ் குறிப்பிடும் பத்துவகை Cassia[1] - வையும் குறிக்கும். இதன் மற்றும் இதன் தொடர்புள்ள பொருட்களின் தாவரப் பெயர்களைக் கண்டுபிடிப்பதிலும் குழப்பங்கள் உள்ளன. ஒன்றுக்கு மேற்பட்ட, ஒரே மாதிரியான நறுமணத்தைக் கொண்ட பொருட்கள் இந்தப் பெயரால் அழைக்கப்பட்டதென்பது மிகத் தெளிவு. எனினும், இவற்றில் பெரும்பான்மையானவை Lauraceae தாவர குடும்பத்தைச் சார்ந்தவை. பண்டைய கிரேக்க மூலிகையாளர்கள் இரண்டு முக்கியப் பொருட்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள் : Kassia (= Cassia) மற்றும் Kinnamomon (= Cinnamon). இவை முறையே *Cinnamomum iners* மற்றும் *C.cassia* ஆகும். பைபிளில் கூறப்பட்டுள்ள இனிக்கும் Cinnamon, *Cinnamomum zeylanica* ஆகும். *C.iners* பனி படர்ந்த மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் இயல்பாக வளர்கிறது; மற்ற இரண்டு சிற்றினங் களும் இந்தியாவில் இயல்பாகக் காணப்படுவதில்லை. தமிழகத்தி லிருந்து ஏதாவது cinnamon ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கும் என்று கொள்ளப்பட்டால் அது *C.iners* ஆகத்தான் இருக்க முடியும். Cinnamon பற்றியும் அதன் தொடர்பான பொருட்கள் பற்றியும் வழக்கில் உள்ள தகவல்கள் ''தவறாகப் புரிந்துகொண்ட, பண்டைய காலத்தில் தவறாகப் பதிவு செய்யப்பட்ட, தகவல்கள் ஆகும்'' என்று ஸ்கின்னர் (Skinner 1911) கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

அகில் என்ற பொருளின் சரியான தாவரப் பெயரை நிர்ணயம் செய்வதிலும் சிக்கல்கள் மற்றும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. ராமச்சந்திரனின் (Ramachandran 1963/64) 'aloe' இந்தத் தாவரப் பெயரைத் தான் குறிக்கிறது என்று சுவாமி (Swamy 1976) கருதுகிறார். சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள அகில் எரிய வைக்கப்படும் போது நறுமணத்தை வெளிப்படுத்தும் என்பதும், பெண்கள் தம்முடைய ஈரமான கூந்தலைக் காயவைக்க இதன் புகையைக் காட்டுவர் என்பதும் தெரியவருகிறது. எங்கு இந்தக் கட்டை அதிகமாகக் கிடைக்கப் பெற்ற தோ அங்கு இது விறகாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிகிறது (இராசமாணிக்கம் *1970*). ஆனால், எந்த ஒரு இடத்திலும் இது ஒரு ஏற்றுமதிப்பொருள் என்று குறிப்பிடப்படவில்லை (Swamy 1976).

இராசமாணிக்கம் (1970) குறிப்பிடும் குங்குமமும், பிள்ளை (Pillai 1969) குறிப்பிடும் saffron எனப்படும் பொருளும் ஒரே

---

1) இது தாவரப் பேரினம் *Cassia* வைக் குறிக்கவில்லை; ஆனால் *Cassia cinnamomea* என்ற சிற்றினம் இலவங்கப்பட்டைக்குப் பதிலான கலப்படப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.

பொருளைத் தான் (குங்குமப்பூ) சுட்டுகிறது என்று சுவாமி (Swamy 1976) கருதுகிறார். இது Crocus sativus என்ற மத்தியத்தரைக்கடல் பகுதித் தாவரமாகும். பலகாலமாக இது காஷ்மீர் பள்ளத்தாக்கில் பயிரிடப் பட்டு வரும் குங்குமப்பூ தாவரமாகும். இது பற்றி பைபிளிலும் குறிப்புகள் காணப்படுகின்றன. பண்டைய கிரேக்கர்களும் இதைப் பற்றி அறிந்திருந்தார்கள். தமிழ் இலக்கிய ஆதாரங்களின் அடிப்படையில் பார்க்கும்போது இத்தாவரப் பொருள் 6 அல்லது 7-ஆம் நூற்றாண்டில் தான் தமிழகத்திற்கு அறிமுகம் ஆகியிருக்க வேண்டும். அப்பொழுது 'குசும்பை' என்ற பெயரில் அழைக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. எனவே, இது பண்டைய தமிழகத்திருந்து ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதற்கு வாய்ப்பு ஏதும் இல்லை. மத்தியத் தரைக்கடல் பகுதியிலேயே இது அதிகமாக இருந்ததால், அந்நாடு களுக்கு இந்தியாவிலிருந்து இது ஏற்றுமதி செய்யப்பட வேண்டும் என்பதும் தேவையற்ற ஒன்றாகும்.

தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டதாகக் கருதப்படும் மற்றொரு தாவரப் பொருள் புளியாகும். தற்போதைய புளி *Tamarindus indica* என்ற தாவரப் பெயர் கொண்டது என்றாலும், இதன் சிற்றினச் சொல்லான 'indica' இது ஒரு இந்தியத் தாவரம் என்று சுட்டுவதாக எவரும் கொள்ளக்கூடாது. இந்தியாவில் இது எங்கும் இயல்பாக வளர்வதில்லை. இதன் இயற்கையான உறைவிடம் ஆப்ரிக்க கண்ட மாகும். வடஆப்ரிக்காவின் அபிசீனியா பகுதியைச் சேர்ந்த இஸ்லாமிய அடிமைகளால் (இவர்கள் Habishi குடியேறியவர்கள் என்று அழைக்கப்படுவர்) ஏறத்தாழக் கி.பி. 14ஆம் நூற்றாண்டில்தான் இந்தியாவிற்கு வந்திருக்க வேண்டும் (Swamy 1976). எனவே இந்தத் தாவரத்திலிருந்து பெறப்படும் புளி பண்டைய தமிழகத்திலிருந்து ஏற்றுமதி ஆகியிருக்க முடியாது. பண்டைய புளி என்பது எது என்ற வினாவிற்கு இந்த நூலின் நான்காவது அத்தியாயத்தில் விடையளிக்கப் பட்டுள்ளது.

இண்டிகோ (Indigo) பண்டைய தமிழகத்தின் ஒரு ஏற்றுமதிப் பொருளாகக் கூறப்பட்டுள்ளது. இது *Indigofera tinctoria* என்ற அவுரித் தாவரத்திலிருந்து பெறப்படுகிறது. இதன் சாயம் கிரேக்கர்களாலும், உரோமானியர்களாலும் மிகவும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட தாகும். சிந்து நதியின் முகத்துவாரத்தில் அமைந்திருந்த Barbarikon என்ற இடத்தின் Skythik துறைமுகத்திலிருந்து இப்பொருள் ஏற்றுமதி செய்யப்பட்டதாகப் பெரிபிளஸ் கூறுகிறது. எனினும், சங்க இலக்கியத்தில் இந்தப் பொருள் தமிழகத்தின் துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டதாகத் தகவல் எதுவுமில்லை.

சங்க இலக்கியத்தில் அரிசி பற்றிய பல குறிப்புகள் காணப் பட்டாலும், இது தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள் என்று எங்கும் குறிப்பிடப்படவில்லை. Oraia மற்றும் Araike (இன்றைய நர்மதா நதி பள்ளத்தாக்கு) பகுதிகளில் அரிசி உற்பத்தி செய்யப்பட்டு Barygaza என்ற புரோச் துறைமுகத்திலிருந்து (குஜராத் மாநிலம்) Barbaria சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாகப் பெரிபிளஸ் கூறுகிறது.

கமுகு (பாக்கு) தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டி ருக்கலாம் என்பதற்கு மறைமுகமான ஆதாரத்தை மதுரைக்காஞ்சி அளிக்கிறது : கமுகு மூட்டைகள் புகாரின் (துறைமுகம்) சேமிப்புக் கிடங்குகளில் இருந்ததாக இவ்விலக்கியம் கூறுகிறது. மேலும் இந்தக் கமுகுக் கொட்டைகள் கருங்காலி மரச்சாற்றில் பதப்படுத்தப்பட்ட தாகவும் மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது.

மேலே விவரிக்கப்பட்ட செய்திகளிலிருந்து தெளிவாக அமையும் விவரங்கள் பின்வருமாறு : (i) பெரிபிளஸில் கூறப்பட்ட, பண்டைய தமிழகத்திலிருந்து நிச்சயமாக ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் மிளகு (பெருமளவு தமிழகத்திலிருந்தும் ஓரளவு மலேசியாவிலிருந்தும் பெறப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்), சடாமாஞ்சி (இமாலயப் பகுதியிலிருந்து பெறப்பட்டுத் தமிழகத் துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்; இந்தியாவின் வேறுசில துறைமுகங்களிலிருந்தும் இது ஏற்றுமதி செய்யப்பட்டது), மற்றும் மலபாத்ரிகம் (சீனா, அசாம் பகுதிகளி லிருந்து பெறப்பட்டு, தமிழகத்திலிருந்து கலப்புப் பொருட்களுடன் சேர்ந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள். இந்தியாவின் வேறுசில துறைமுகங்களிலிருந்தும் இது ஏற்றுமதி செய்யப்பட்டது). மேற் கூறியவற்றில், மிளகு ஏற்றுமதி பற்றி மட்டும் தமிழிலக்கியம் சுட்டு கின்றது. கமுகு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கலாம் என்பதற்கு மறைமுக ஆதாரம் உள்ளது. (ii) பெரிபிளஸில் கூறப்பட்ட, இந்தியா வின் வேறு துறைமுகங்களிலிருந்து (தமிழகத்தில் இல்லை) ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் நல்லெண்ணெய், கரும்புப் பொருட்கள், இண்டிகோ மற்றும் அரிசி (iii) பெரிபிளஸில் கூறப்படாத, ஆனால் மற்றவர்களால் பண்டைய தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப் பட்டதாகத் தவறாகக் கருதப்படும் தாவரப் பொருட்கள் பின்வரு மாறுஃ இஞ்சி, மஞ்சள், கிராம்பு, ஜாதிக்காய், எபனிகட்டை, ரோஸ்வுட் கட்டை, தேக்குக் கட்டை, சந்தனக்கட்டை, அகில், குங்குமப்பூ, புளி, வாழை, தேங்காய் போன்றவை. இந்தத் தவறுக்கு முக்கியக் காரணம், பெரும்பாலோர் ரெய்னாடு (Reinaud 1845) என்பவர் எழுதிய நூலில் உள்ள செய்திகளை சிந்தனை எதுவும் மேற்கொள்ளா

மல் உடனே நம்பியதுதான். ரெய்னாடு தன்னுடைய நூலில் இவ்வாறு எழுதுகிறார் : ''மலேசியாவிலிருந்து பெறப்பட்ட கிராம்பும் மற்ற பொருட்களும், சீனாவில் இருந்து பெறப்பட்ட பட்டும் தவிர, மேற்குக் கடற்கரையில் அமைந்திருந்த துறைமுகங்களிலிருந்து மிளகு, மலபாரின் யானைத் தந்தங்கள், இண்டிகோ, இரும்பு, மஸ்லின்துணி, எபனி, குமரியின் முத்துக்கள், தேக்கு மரக்கட்டை போன்றவை பெரிசிய வளைகுடா நாடுகளுக்கு அனுப்பப்பட்டன''. ரெய்னாடின் கூற்றுக்கு வரலாற்று, இலக்கிய அல்லது கல்வெட்டு ஆதாரங்கள் இல்லை என்பதுதான் உண்மை. மேலும் இந்தியாவின் மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களில் ஒருசிலதான் தமிழகப் பகுதியில் அமைந்திருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது; எனவே, மேற்கூறிய பொருட்களில் பல தமிழகத்தைத் தவிர்த்த வேறு துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டிருக்க வாய்ப்புள்ளது.

நம்மிடையே கிடைக்கப் பெற்ற ஆதாரங்களின் அடிப்படையில் கிரேக்க/அரேபிய/உரோமானிய கப்பல்கள் தென்னிந்தியாவின் குமரிமுனை வரையிலுள்ள மேற்குக்கடற்கரைத் துறைமுகங்களைத் தொட்டுவிட்டுக் கடைசியில் கங்கை முகத்துவாரத்தை அடைந்தன என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. இங்குதான் இக்கப்பல்களும் மலேசியா மற்றும் சீனக் கப்பல்களும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டன. தாங்கள் கொண்டு வந்த பொருட்களை (தமிழகப் பொருட்கள் உட்பட) சீன, மலேசிய கப்பல்களுக்கு மாற்றிவிட்டு, அவற்றிலிருந்து சீன, மலேசிய மற்றும் வடஇந்தியப் பொருட்களை ஏற்றிக் கொண்டு திரும்பின. இப்பொருட்களில் சிலவற்றைத் தென்னிந்திய (முக்கியமாகத் தமிழக) துறைமுகங்களில் இறக்குமதி செய்தன என்பதும் மிகத் தெளிவாகத் தெரிகிறது; வேறு சில பொருட்களை இத் துறைமுகங்களிலிருந்து தம் நாட்டிற்கு எடுத்துச் சென்றன என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

உ) தமிழகக் கடல் வாணிகம் பற்றிய மற்ற தகவல்கள்

i) தமிழர் மரக்கலங்கள் கட்டிக் கடல் வாணிகம் செய்தார்களா?

சங்க காலத்திலும் அதற்கு முன்பும் பண்டைய தமிழர் கடல் கடந்து சென்று மற்ற நாடுகளுடன் வாணிகம் செய்தார்களா? தமக்கு வேண்டிய கப்பல்களைக் கட்டும் ஆற்றல் பெற்றிருந்தார்களா? இந்த இரண்டையும் தமிழர் மேற்கொண்டார்கள் என்று பல தமிழறிஞர்களும், வரலாற்று அறிஞர்களும் கருதுகின்றனர் (Purnalingam Pillai 1927; Subramanian 1966; Arokiaswami 1967; Pillai 1969; உமாமகேஸ்வரி 2005; Arul Raj 2005). பண்டைய தமிழர் 'சங்கரா' மற்றும் 'கோலாண்டியா' ஆகிய பெரும் கப்பல்களைப் பெற்றிருந்தார்கள் என்று பெரிபிளஸ்

தகவல் அளிக்கிறது. ஆனால், இவை தமிழர்களால் கட்டப்பட்டவை தான் என்று பெரிபிளஸ் தெளிவாகக் கூறவில்லை. வங்கம் (பதிற்.:52:4), நாவாய் [1] (பட்.பா.:174-175), கலம், மதலை, அம்பி, புணை, திமில் போன்ற மரக்கலங்களில் பயணம் மேற்கொண்டு நீர்வழியூடே பொருட்களை ஏற்றிச் சென்றனர். இவையனைத்தும் தமிழர்களால் உருவாக்கப்பட்டன என்று கருதப்படுகிறது (ராஜேஸ்வரி 2005). அம்பி என்பது பாய்மரம் அற்ற கலமாதலால் கடற்கரையிலிருந்து வெகுதூரம் சென்றிருக்க முடியாது; ஆற்றிலும் (அகம்.:98:1-2) கடற்கரையோரப் பகுதிகளிலும் (நற்.:354:5-7), அம்பி பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். புணை அல்லது கட்டுமரம் மீன்பிடிக்கப் பயன்பட்டிருக்க வேண்டும். திமிலும் இதே செயலைச் செய்திருக்க வேண்டும். கலம், மதலை மற்றும்நாவாய் கடல் வாணி கத்தில் பயன்படுத்தப்பட்டன. இவற்றில் கலம் என்பது தமிழரின் மரக்கலமாகவும் நாவாய் என்பது வெளிநாட்டவர் மரக்கலமாகவும் இருந்திருக்க வேண்டும்.

இதற்கு முந்திய பத்தியில் எழுப்பப்பட்ட இரண்டு வினாக் களைப் பற்றித் தெளிவான ஆய்வுகளும், ஆதாரங்களும் தேடப்பட வேண்டும் என்று ஒருசில அறிஞர்கள் (Swamy 1976) கருத்து தெரி வித்துள்ளனர். தமிழர் கடல்வழி செல்லும் அனுபவம் உடையவர்கள் என்பதைப் புறநானூறு (66:23) சுட்டுகிறது. வெண்ணிக்குயத்தியார் சோழமன்னன் கரிகாலனைப் போற்றும்போது கூறும் பின்வரும் வரிகள் இங்கு நோக்கத்தக்கது : ''மன்னனே! ஆழ்கடலில் பயணம் செய்வதற்குக் காற்றுச்சூழல் பாதகமாக இருக்கும்போதும் அடைய வேண்டிய இடத்தை அடையும் சிறப்பான திறன் கொண்ட முன்னோர் களைப் பெற்றவனே!''. பண்டையக் காலந்தொட்டே தமிழர் கடல்சார் வாணிகத்தில் சிறந்து விளங்கியமையை தமிழகப் பாறை ஓவியங்கள், அழகன்குள அகழாய்வில் கிட்டிய கப்பல் உருவம் பொறித்த பானை ஓடுகள் போன்றவைகளும் எடுத்துக் காட்டுகின்றன. எனினும், கப்பல் கட்டும் தொழில்நுட்பத்தைப் பண்டைய தமிழர் பெற்றிருந்தார்கள் என்பதற்கான நேரடியான சான்றுகள் இல்லை. கலைகள் 64-இல் படகு (கப்பல்) மற்றும் தேர் செய்தலும் ஒன்று என்று 'சுக்கிரநீதி' என்ற வடமொழிநூல் குறிப்பிடுகிறது. ஆனால் கப்பல் கட்டுதல் பற்றிய தமிழ் நூல்கள் இரண்டும் 17 மற்றும் 18-ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவை. 'கப்பல் சாத்திரம் '1698-ஆம் ஆண்டும், 'நாவாய் சாத்திரம்' 1741ஆம் ஆண்டும் எழுதப்பட்டன. நாவாய்

---

1) ''தூங்கு நாவாய் துவன்று இருக்கை
மிசைக் கூம்பின் நடைக்கொடியும்..... (பட்.174-175)

சாத்திரத்தில் கப்பல்/படகு கட்டுவதற்கான மரங்கள் பற்றிய விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள 'சதா' என்பது பயன்படுத்தப்படும் மரத்தின் தன்மையையும் 'சுழி' என்பது மரத்தில் காணப்படும் முடிச்சுகள் (கணுக்கள்) பற்றியும் குறிப்பிடும் சொற்களாகும் என்று கருதப்படுகிறது.

ii) வாணிகக் குழுக்கள்

வாணிகத்தில், குறிப்பாகக் கடல்வாணிகத்தில், சிறப்புப் பெற்ற வணிகர்களும், வாணிகக் குழுக்களும் தமிழகத்தில் இருந்ததற்கான ஆதாரங்கள் பல உள்ளன. தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகளில் 'கொழுவணிகன்' பற்றிய குறிப்புகள் உள்ளன. 'கொழு' என்பது கலப்பையிலுள்ள இரும்பாலான ஏர்க்கொழு ஆகும். வாணிகத்திற்குத் தேவையான அளவு கொழு உற்பத்தி செய்யப்பட வேண்டியிருந்தது என்பது அப்பொழுது இருந்த விவசாயத்தின் பரந்த அளவை மறைமுகமாகச் சுட்டும். நெல் உற்பத்தி மற்றும் வாணிகம் தொடர்பான செய்திகளும் தமிழ்ப்பிராமிக் கல்வெட்டுகளில் உள்ளன. ''நூறுகலம் நெல்'', மற்றும் ''நெல்வேலி'' என்னும் கிராமம் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. அழகர் மலைக் கல்வெட்டு (எண்.7) கரும்பு வேளாண்மை மற்றும் உற்பத்தி பற்றிக் கூறுகிறது. எண்ணெய் வணிகன் பற்றிய குறிப்புகளும் தமிழ்ப்பிராமிக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

வணிகர்கள் ஒன்று சேர்ந்து கூட்டமைப்புகளையும், வணிகச் சங்கங்களையும் ஏற்படுத்திக் கொண்டனர். மணிக்கிராமம், நானா தேசிகள், திசை ஆயிரத்து ஐநூற்றுவர், வளஞ்சியார், பதினெண் விசையத்தார், அஞ்சுவண்ணம், பரதேசி, நகரத்தார், அய்யாபொழில் போன்றவை இவ்வமைப்புகளில் முக்கியமானவை. இவற்றில் சமீபகாலம் வரை எஞ்சி நின்றவர்கள் நகரத்தார் ஆவர். அஞ்சு வண்ணம் என்ற சொல் முதன்முதலில் தமிழ்க் கல்வெட்டுகளில்தான் காணப்படுகிறது. சதாசிவ பண்டாரத்தார் 'பல்சந்தமாலை' என்ற நூலில் இப்பெயர் வருவதைக் கண்டுபிடித்தார்[1]. நாகப்பட்டினத்தைப் புகழும் தனிப்பாடல் ஒன்றில், ''அஞ்சு வண்ணமும் தழைத்து அறம் தழைத்த வானவூர்'' என்று வருவதால், நாகப்பட்டினத்தில் அஞ்சு வண்ணத்தவர் இருந்த செய்தி தெரிகிறது. ''ஈசுப்புராப்பனுக்கு மணிக் கிராமும் அஞ்சுவண்ணப் பேறும் கொடுத்தோம்'' என்று பாஸ்கர ரவிவர்மனின், கி.பி. 8ஆம் நூற்றாண்டுக் கோட்டயம் செப்பேடு குறிப்பிடுகிறது. அஞ்சு வண்ணம் ஒரு இஸ்லாமிய வாணிகக்குழு

---

*1) ''யவன அரசன் கலுபதி தாமுதல் எண்ணவந்தோர்
அயல்மிகு தானையர் அஞ்சுவண்ணத்தவர்'' (பல்.மா.)*

என்பது கல்வெட்டு, இலக்கியம், கள ஆய்வு போன்றவை மூலம் தெளிவாகிறது. இவர்கள் கி.பி. 8 முதல் 13-ஆம் நூற்றாண்டு வரை கேரளப் பகுதியிலும், தமிழ்நாட்டிலும் வாணிகம் செய்த இஸ்லாமிய வாணிகக் குழுவினர் ஆவர். முகவை மாவட்டத் திருவாடனைக்கு அருகிலுள்ள தீர்த்தாண்டதானத்தில் கிடைத்த கல்வெட்டும் அஞ்சு வண்ணத்தார் சிறப்பாக வாணிகம் செய்தனர் என்பதைக் குறிப்பிடு கிறது.

iii) பிற செய்திகள்

சங்கம் மருவிய காலத்திலும் அதற்குப் பின்பும் தமிழகத்தின் வெளிநாட்டு வாணிகம் தொடர்ந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. பிள்ளை (Pillai 1969) தமிழகத்தின் வாணிக வரலாறு பற்றி மிகவும் சிறப்பாக விவரித்துள்ளார்; குறிப்பாக, பண்டைய தமிழகத்தில் தென்மேற்கு ஆசியாவிற்கும் தென்னிந்தியாவிற்கும் இடையே இருந்ததாகக் கூறப்படும் வாணிகத் தொடர்பைப் பற்றி விவரித்துள் ளார். இதற்கான ஆதாரங்கள் எந்த அளவுக்கு நம்பகத் தன்மையற்றவை களாக இருக்கின்றன என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேபோன்று தமிழகத்திற்கும் மற்ற நாடுகளுக்கும் இடையே கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் கடல் வர்த்தகம் இருந்தது என்பதை கூறுவதற் காக, தமிழகத்திலிருந்து சந்தனமும் மயிலும் சாலமன் மன்னனுக்கு அனுப்பப்பட்டன என்ற செய்தி கால்டுவெல்லால் வலியுறுத்தப் பட்டதை அவர் குறிப்பிடுகிறார். தமிழ்ச் சொல்லான தோகையையும் (மயிலின்), ஹீப்ரூ மொழியின் Tuki என்ற சொல்லையும் தொடர்பு படுத்த கால்டுவெல் முற்படுகிறார்; இந்த தொடர்பு படுத்துதல் மூலம், மயில்தோகை தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதை வலியுறுத்த கால்டுவெல் முயற்சி மேற் கொண்டார் என்று சுவாமி (Swamy 1976) எடுத்துக் காட்டியுள்ளார். கால்டுவெல்லின் இதே மறைமுக ஆதாரத்தைத் தான் தற்கால அறிஞர்களும் ஏற்றுக் கொள்கின்றனர் என்றும் சுவாமி (Swamy 1976) குறிப்பிட்டுள்ளார்.

கி.பி. 10-ஆம் நூற்றாண்டுக்குப் பின் தாம்பூலப் பொருட்களான வெற்றிலையும், பாக்கும் மிக முக்கிய வாணிகப் பொருட்களாக மாறின. ராஷ்டிரகூட மன்னனான கிருஷ்ணா, தாம்பூல வாணிகர்கள் மீது இரண்டு பணமும் ஒரு அட்டாவும் (adda) வரியாக விதித்தபோது அதற்கு எதிர்ப்பு ஏற்படவில்லை. சாளுக்கிய மன்னர்கள் இவ்வரியை மேலும் கூட்டியபோது, தாம்பூல வாணிகர்கள் அப்போது மன்னனாக இருந்த ஆகவமல்லனிடம் முறையீடு செய்தனர். இதனை ஏற்று, மன்னன் வரியைப் பழைய வரி அளவிற்குக் குறைத்தான் என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது (SII.IX.(i)76, கி.பி. 991).

விஜயநகர மன்னர்கள் காலத்துக் கல்வெட்டுகள் பல கி.பி. 16ஆம் நூற்றாண்டில் ஆமணக்கு ஒரு முக்கிய வியாபாரப் பொருளாகத் திகழ்ந்தது என்று கூறுகின்றன. இதேபோன்று கி.பி. 17-ஆம் நூற்றாண்டில்தான் புகையிலை வருவாய் ஈட்டும் ஒரு முக்கிய வாணிகப் பொருளாக மாறியது; ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அது எடுத்துச் செல்லப்பட அனுமதிக்கப்பட்டது. கி.பி. 1716-ஐச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று நாராயணரெட்டி என்பவரிட மிருந்து தங்கத்தூர் மக்கள் புகையிலைக்கான வரியைப் பெற்றனர் என்று கூறுகிறது.

மார்க்கோபோலோ என்ற இத்தாலிய மாலுமி சீனாவில் இருந்து மலபாருக்கு செல்லும் கடல் வழியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். சீனாவின் சோ சோவில் (Chow Chow) ஆரம்பித்து சுமத்ரா வழியாக பர்மாவின் மார்ட்டபான் (Martaban) துறைமுகத்தை அடையும் கப்பல்களில் உள்ள சரக்குகள் மற்ற கப்பல்களுக்கு மாற்றப்பட்டு அந்தமான், இலங்கை வழியாகக் கொல்லத்தை அடைவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கொல்லத்தை அடையுமுன் இக்கப்பல்கள் Poduke என்ற புதுச்சேரி துறைமுகத்தை அடையும். சீனாவின் செலிடான் மட்பாண்டங்கள் புதுச்சேரிக்கு அருகாமையில் உள்ள அரிக்கமேட்டில் அகழ்வாராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது இதனை மேலும் வலியுறுத்துகிறது.

ஆங்கிலேயரின் கடல் வாணிகத்தோடு போட்டிபோட்ட நாடுகளில் முக்கியமானது பிரான்ஸ் ஆகும். குறிப்பாக, இந்தியாவில் இப்போட்டி மிகக் கடுமையாக இருந்தது. செஞ்சியை ஆண்ட ஷேர்கான்லோடி 17-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பாண்டிச்சேரியை (= புதுச்சேரி), வாணிப நோக்கை மனத்தில் கொண்டு, பிரான்ஸ் நாட்டுக்குத் தானமாகக் கொடுத்தான். இதற்கு முன்னரே Poduke என்ற புதுச்சேரி கி.மு. 2-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு வரை ஒரு சிறப்பான துறைமுகமாகச் செயல்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. பிரான்ஸ்நாட்டவர் French India Company-ஐ அவுரங்கசீப் ஆதரவுடன் 1666-இல் சூரத்திலும் (குஜராத் மாநிலம்), 1669-இல் கோல்கொண்டா நவாபின் ஆதரவுடன் மசூலிப்பட்டினத்திலும் (ஆந்திர மாநிலம்), 1670-இல் கண்ணனூர் அரசன் ஆதரவுடன் தெல்லிசேரி, மீர்ஜாவு மற்றும் ராஜாப்பூர் ஆகிய இடங்களிலும் (கேரள மாநிலம்), 1673இல் புதுச்சேரியிலும் வர்த்தக மையங்களைத் தொடங்கினர்.

இதற்குமுன் இந்தியாவுடன் டென்மார்க் பருத்தி ஆடைகள் வாணிகத்தை மிகச் சிறப்பாகச் செய்து வந்தது. இவ்வாணிகத்தை டென்மார்க் திடீரென நிறுத்தியதால் பருத்தி ஆடைகள் தமிழகத்தில் குவிந்துவிட்டன. எனவே ஷேர்கான்லோடி இதற்காக French India Company-ஐ இந்த வாணிகத்தைத் தொடருமாறு கேட்டுக் கொண்டார். செவ்வாய்க்கிழமை கூடும் பருத்தி ஆடைச்சந்தையில் இவ்வாடைகள் கொள்முதல் செய்யப்பட்டன. புதுச்சேரியில் இன்றும் செவ்வாய்ச் சந்தை தொடர்ந்து நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. புதுச்சேரியில் அந்தக் காலகட்டத்தில் தயாரிக்கப்பட்ட பருத்தி ஆடைகள் மிகவும் நேர்த்தியானவை. ஆடைகளைத் தவிர மிளகும், தேயிலையும் மாகே (Mahe)விலிருந்தும், அரிசி காரைக்காலிலிருந்தும் பெறப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டன. சந்திரநாகூரிலிருந்து பெறப்பட்ட ஓப்பியம் (Opium) இங்கிருந்து சீனாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. அதே சமயம், வெற்றிலையையும், புகையிலையையும் இந்தியா விற்கு பிரஞ்சுக்காரர்கள் விற்பனை செய்தனர் (Thillaivanan 2005). ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்புகளில் பாண்டிச்சேரியி லிருந்து ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்த பொருட்களின் (தாவரப் பொருட்கள் சேர்த்து) விவரங்கள் காணப்படுகின்றன. ஆனந்தரங்கம் பிள்ளை காலத்தில் பருத்தி ஆடைகளும், அரிசியும்தான் மிக முக்கிய ஏற்றுமதி வாணிகத் தாவரப் பொருட்களாகத் திகழ்ந்தன. காப்பிக் கொட்டை, கற்பூரம் போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன. ஏற்றுமதி செய்யப்பட்ட முக்கிய அரிசி ரகங்கள் 'மணக்கத்தாய்' (Manakkathai) மற்றும் சம்பா ஆகியவையாகும்.

தஞ்சையை ஆண்ட மன்னர் சரபோஜி கப்பல் கட்டுவதிலும் கடல்வழி வாணிகம் செய்வதிலும் ஊக்கம் காட்டினார் என்று தெரியவருகிறது (உஷாராணி 2000). கி.பி. 1826-இல் தஞ்சை மாவட்ட சாலுவநாயக்கன் பட்டினத்தில் அவருக்குச் சொந்தமான கப்பல் இருந்தது. கப்பல் கட்டும் முயற்சிகளிலும் அவர் இறங்கினார். கப்பல் கட்டுவதற்குத் தேவையான சுரப்பின்னை மற்றும் கருங்காலி மரக்கட்டைகள் சேகரம் செய்ததாகவும் தகவல்கள் உள்ளன. நெல், முத்துச்சிப்பி, அரிசி, மதுபானம் போன்ற பொருட்களை கொழும்பு, மொலுக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தும், அங்கிருந்து கொட்டைப்பாக்கு போன்ற பொருட்களை இறக்குமதி செய்தும் இவருடைய கப்பல் செயல்பட்டது.



PERMIAN
225 million years ago

TRIASSIC
200 million years ago

JURASSIC
135 million years ago

CRETACEOUS
65 million years ago

PRESENT DAY

படம் 1

புவியின் வரலாற்றுக் காலத்தில் புவியின் புற ஓடுகளும் அவற்றின் மேல் அமைந்த கண்டங்களும் தத்தம் தொடக்க இடங்களிலிருந்து எவ்வாறு மாறி வந்திருக்கின்றன என்பதைக் குறிக்கும் படங்கள்.



படம் 2 15 ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் (கடல் மட்டம் 100 மீ)

ஏறத்தாழ 15,000 ஆண்டுகளுக்கு முன்பு
இந்தியாவுடன் இலங்கை கொண்டிருந்த
குறுகிய நிலப்பரப்பால் ஆன இணைப்பைக் குறிக்கும் படம்.
இப்படம் ஜெயகரனின் (2002) நூலிலிருந்து எடுக்கப்பட்டது.



படம் 3

இரா. மதிவாணன் தயாரித்த லெமூரியா வரைபடம்
(இலெமூரியா முதல் அரப்பாவரை நூலிலிருந்து)

கடற்கோள் கொண்ட குமரி நிலப்பரப்பில் இருந்ததாகக் கருதப்படும் பல்வேறு நாடுகள்



படம் 4

ஆப்ரிக்காவில் முதன்முதலில் தோன்றிய மனித இனம் எவ்வாறு உலகின் மற்ற பகுதிகளுக்கு பரவியது என்பதை விளக்கும் படம்.



படம் 5

மிகப் பண்டைய திராவிடப் பழங்குடி
மக்களின் வழிவந்தவர்கள்.



படம் 6 குறியீடுகள்

"குறியீடு" வகை "எழுத்துக்கள்". இப்படம் ராஜன் (2004) நூலிலிருந்து எடுக்கப்பட்டது.



படம் 7 தமிழ்ப் பிராமி பொறிப்புக் கொண்ட பானை ஓடுகள்

தமிழ்ப் பிராமி எழுத்துக்கள்
இப்படம் ராஜன் (2004) நூலிலிருந்து எடுக்கப்பட்டது.



பண்டைத் தமிழ் எழுத்து அட்டவணை



வட்டெழுத்தாகவும் தமிழ் எழுத்தாகவும் மாற்றம் பெற்றதை விளக்கும் படம்

படம் 8 பல்வேறு காலகட்டங்களில் ஏற்பட்ட தமிழ் வடிவமாற்றங்கள்.

படம் 9

குறிஞ்சிப் பூ

படம் 10

முல்லைத் தாவரமும் முல்லை பூக்களும்

படம் 11

மருத மரத்தின் பூக்கள்

படம் 12

நெய்தல் தாவரமும் அதன் இரண்டு வகை நிறப்பூக்களும்

படம் 13

பாலைத் தாவரமும் அதன் பூக்களும்

படம் 14

கொன்றத் தாவரமும் அதன் பூக்களும்

படம் 15

இருவகை வேங்கைத் தாவரங்களும்
அவற்றின் பல்வேறு உறுப்புகளும்

படம் 16

காந்தள் தாவரமும்
அதன் பூக்களுடன்

படம் 17 குமிழ் மரம் பூக்களுடன்

படம் 18 ஞெமை எனப்படும் ஓமை மரம்

வஞ்சிக்கொடி
(தற்போதைய பெயர் சீந்தில்)

படம் 19

படம் 20

வஞ்சி மரம்
(தற்போதைய பெயர் பூவரசு)

படம் 21

கருவாகை மரமும் அதன் உறுப்புகளும்

படம் 22

ஆர் மரத்தின் கிளை பூக்களுடன் (சோழர்களின் சின்னம்)

படம் 23

வேப்பமரமும் அதன் பூக்களும்
(பாண்டியர்களின் சின்னம்)

படம் 24

போந்தை என்ற பனைமரம்
(இதன் பூ சேரர்களின் சின்னம்)

படம் 25



அரசமரம்
(தொண்டைமண்டில அரசர்களின் சின்னம்)

படம் 26

வெட்சித் தாவரமும் அதன் பூக்களும்
(படம் பேராசிரியர் திருஞானம் அவர்களிடமிருந்து பெறப்பட்டது)

கரந்தைச் செடியும் அதன் மஞ்சரியும் படம் 27

உழிஞைக் கொடி, பூக்கள் மற்றும் கனிகளுடன் படம் 28

படம் 29

நொச்சி மரக்கிளையும், பூக்களும்

படம் 30

தும்பைச் செடியும், பூக்களும்

படம் 31

கடம்ப மரம் மற்றும் அதன் மஞ்சரி



இலவ மரம், முட்கள் நிறைந்த
அதன் அடிப்பகுதி மற்றும் பூக்கள்

படம் 32

படம் 33 ஆவாரைச் செடியும் அதன் பூக்களும்

1

நெறித்துணை இலக்கிய நூல்கள் : சுருக்கக் குறியீட்டு விளக்கம்

எண்.	நூற்பெயர்	குறியீடு
1.	அகநானூறு	அகம்.:
2.	அப்பர் தேவாரம்	அப்.தே.:
3.	அழகின் சிரிப்பு	அழ.சி.:
4.	ஆசாரக் கோவை	---
5.	இரகுவமிசம் (தமிழ்) (நல்லூர் பொன்னம்பலப் பிள்ளை எழுதியது)	இரகு.:
6.	இலக்கண விளக்கம்	இலக்.வி.:
7.	இறையனார் அகப்பொருள்	இறை.அக.:
8.	இன்னா நாற்பது	இன்.நா.:
9.	இன்னிலை	---
10.	ஏலாதி	---
11.	ஐங்குறுநூறு	ஐங்.:
12.	கண்ணன் பாட்டு	கண்.பா.:
13.	கண்ணுடையம்மன் பள்ளு	கண்.ப.:
14.	கம்பராமாயணம்	கம்ப.:
15.	கல்லாடம்	கல்.:
16.	கலித்தொகை	கலி.:
17.	காளமேகப் புலவர் பாடல்கள்	---
18.	குறிஞ்சிப்பாட்டு	குறி.பா.:
19.	குறுந்தொகை	குறு.:

20.	சதுரகராதி	---
21.	சிதம்பரச் செய்யுட்கோவை	சித.செ.கோ.ஃ
22.	சிலப்பதிகாரம்	சிலம்பு.ஃ
23.	சிவஞானமுனிவர் பாடல்	---
24.	சிறுபாணாற்றுப்படை	சிறுபாண்.ஃ
25.	சீவக சிந்தாமணி	சீவ.சி.ஃ
26.	சுந்தரர் தேவாரம்	சுந்.தே.ஃ
27.	சூடாமணி நிகண்டு	சூடா.நி.ஃ
28.	சூளாமணி	சூளா.ஃ
29.	செங்கோட்டுப் பள்ளு	செங்.ப.ஃ
30.	சேந்தன் திவாகரம்	சேந்.தி.ஃ
31.	ஞானசம்பந்தர் தேவாரம்	ஞான.தே.ஃ
32.	தக்கயாகப் பரணி	தக்க.ஃ
33.	திருக்குறள்	குறள்.ஃ
34.	திருத்தொண்டர் திருவந்தாதி	திருத்.திரு.ஃ
35.	திருமந்திரம்	திருமந்.ஃ
36.	திருமுருகாற்றுப்படை	திருமுருகு.ஃ
37.	திருவாசகம்	திருவா.ஃ
38.	திருவாய்மொழி	திருவாய்.ஃ
39.	திருவாரூர்ப் பள்ளு	திரு.ப.ஃ
40.	திருவாலவாய்ப் புராணம்	திருவால.பு.ஃ
41.	திருவிளையாடற்புராணம்	திருவிளை.பு.ஃ
42.	திவ்யப்பிரபந்தம்	திவ்.ஃ
43.	தென்பாங்குப் பூந்தமிழ்	---
44.	தொல்காப்பியம்	தொல்.ஃ
45.	நந்திக்கலம்பகம்	நந்.கல.ஃ
46.	நற்றிணை	நற்.ஃ
47.	நன்னூல்	நன்.ஃ
48.	நாட்டுப் பாடல்கள் - பிணப்பாட்டு	---
49.	நாலடியார்	நாலடி.ஃ
50.	நான்மணிக்கடிகை	நான்.கடி.ஃ
51.	நீலகேசி	---

52.	நெடுநல்வாடை	நெடு.வா.:
53.	நைடதம்	நைட.:
54.	பட்டினப்பாலை	பட்.பா.:
55.	பதிற்றுப்பத்து	பதிற்.:
56.	பரிபாடல்	பரி.:
57.	பல்சந்தமாலை	பல்.மா.:
58.	பழமொழி	பழ.:
59.	பாஞ்சாலி சபதம்	பாஞ்.ச.:
60.	பாரதிதாசன் கவிதைகள்	பா.தா.கவி.:
61.	பாரதிதாசன் : குழந்தைப்பாடல்	பா.கு.பா.:
62.	பாரதியார் பாடல்கள்	பா.பா.
63.	பிங்கல நிகண்டு	பிங்.நி.:
64.	புட்ப விதி	பு.வி.:
65.	புறநானூறு	புறம்.:
66.	பெரியபுராணம்	பெரி.பு.:
67.	பெரியாழ்வார் திருமொழி	---
68.	பெருங்கதை	பெருங்.:
69.	பெரும்பாணாற்றுப்படை	பெரும்பாண்.:
70.	பொருநராற்றுப்படை	பொருநர்.:
71.	மணிமேகலை	மணி.:
72.	மதுரைக் காஞ்சி	மது.கா.:
73.	மலைபடுகடாம்	மலை.:
74.	மலையருவி	---
75.	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்	முத்.கு.பி.த.:
76.	முத்தொள்ளாயிரம்	---
77.	முல்லைப்பாட்டு	முல்.பா.:
78.	யாப்பருங்கல விருத்தி	யாப்பு.வி.:
79.	வாக்குண்டாம்	வாக்கு.:
80.	வெங்கையுலா	வெங்.:

2
நெறித்துணை நூல்களும் கட்டுரைகளும் : ஆங்கிலம்

Achaya, K.T. 1998. **Indian Food - A Historical companion.** Oxford Univ. Press.

Allchin, F.R. 1969. Early cultivated plants in India and Pakistan, pp.323-329. In: **The Domestication and Evolution of Plants and Animals,** (Eds. P.J.Ucko and G.W. Dimbleby). Duckworth, London.

Amirthalingam, M. 1998a. **Sthalavrikshas of Tamil Nadu. The Ecological Traditions of Tamil Nadu.** C.P.R. Environmental Education Centre, Chennai.

Amirthalingam, M. 1998b. **Sacred Groves of Tamil Nadu - A Survey. C.P.R.** Environmetal Education Centre, Chennai.

Amirthalingam, M. 1998c. **Sacred Trees of Tamil Nadu.** C.P.R. Environmental Education Centre, Chennai.

Arokiaswami, M. 1967. **The Classical Age of the Tamils.** University of Madras, Madras.

Arul Raj, V.S. 2005. The History of Traditional Navigation in Tamil Nadu. pp.224-233. In: **Heritage of the Tamils: Science and Technology.** International Institute of Tamil Studies, Chennai.

Balasubramanian, A.V. 2000. The relevance of a vibrant tradition, pp.6-8. In.: The Hindu Folio. **Indian Health Traditions.** October 8, 2000.

Balasubramaniyan, S.R. 1966. **Early Cola Art.** Asia Publ. House, Bombay.

Ball, V. 1885. On the identification of animals and plants of India which were known to early Greek authors. Indian Antiquity 14:274-287; 303-311; 334-340.

Caldwell, 1875. **A Comparative Grammar of the Dravidian Languages.** Madras.

Champakalakshmi, R. 1989. Ideology and the State in South India - Proc. Andhra Pradesh History Congress, 13th Session, Srisailam.

Chandramouli, K.V. 1995. **Sources of Natural Dyes in India.** PPST Foundation, Madras.

Chatterjee, **Race Movements and Prehistoric Culture in the Vedic Age.**

Chowdhury, K.A., Saraswat, K.S., Hasan, S.N. and Gaur, R.C. 1971. 4000-3500 year old barley, rice and pulses from Atranjikhera. Sci. & Cul. 37: 531-532.

De Candolle, A. 1886. **Origin of cultivated Plants.** Hafner Publishing Co., New York & London.

De, D.N., 1974. Pigeon Pea. pp.79-87 . In.: **Evolutionary Studies in World Crops.** (Ed. J.B. Huchinson), Cambridge University Press, Cambridge.

Disotell, T.R. 1999. The Southern Route to Asia. Current Biology 9: R 925-R 928.

Edwin, D., Vishwanathan, H., Roy, S., Usha Rani, M.V. and Majumdar, P.P. 2002. Mitochondrial DNA diversity among five tribal populations of Sourthern India. Curr.Sci.83: 158-162.

Fraser, J.G. 1929. **The Golden Bough.** Macmillan, London.

French Institute Index 1968. Pondicherry.

Gamble, J.S. 1915. **Flora of the Presidency of Madras.** 3. vols. Botanical Survey of India, Calcutta.

Geiger, W. (Tr.). 1993. **The Mahavamsa or the Great Chronicle of Ceylon.** Asian Educational Services, New Delhi.

Ghosh, S.S. 1961. Further Records of Rice *(Oryza* spp.) from ancient India. Indian Forester 87:295-301.

Gode, P.K. 1961. **Studies in Indian Cultural History.** Visvesharanand Vedic Res. Inst., Hoshiarpur.

Gunther, B.T. 1959. **The Greek Herbal of Dioscorides.** New York.

Gurukkal, R. 1989. Forms of Production and Forces of Change in Ancient Tamil Society. Studies in History Vol.5(2). pp. 159-175.

Hariharan, K.V. 1957. J. Univ. Bombay 25: 9-16.

Hart, G.L., and Hank, (Trans. & Eds.) 2002. **The Purananuru,** Penguin Books, New Delhi.

Jain, H.K. and Mehra, K.L. 1980. Evolution, adaptation, relationships and uses of the species of **Vigna** cultivated in India, pp.459-468. In.: **Advances in Legume Science,** (Eds. R.J. Summerfield and A.H. Bunting). Royal Botanic Gardens, Kew.

James Shreeve, 2006. The Greatest Journey. National Geographic, March 2006. pp.61-71.

Jesudasan, C. and Jesudasan, H. 1961. **A History of Tamil Literature.** Y.M.C.A. Publ. House, Calcutta.

Kajale, M.D. 1974. Plant economy at Bhokardan. pp.7-224. In.: **Excavations at Bohkardan** (Bhogavadhana) 1973, Vol.2, (eds. S.B. Deu and R.S. Gupta). Nagpur University, India.

Kanakasabhai, V. 1904. **The Tamils Eighteen Hundred years Ago,** Madras.

Kosambi, D.D. 1962. **Myth and Reality: Studies in the Formation of Indian Culture.** Popular Press, Bombay.

Kramrisch, Stella. 1976. **The Hindu Temple.** Vol.1. Motilal Banarsidass, New Delhi.

Krishnamurthy, K.V. 1999. The Nandavanas of medieval India. C.P.R. Environmental Education Centre, Chennai. (Mimeographed Lecture)

Krishnamurthy, K.V. 2002. Sacred Tanks: Glimpses from Epigraphy, pp.44-49. In: **Sacred Tanks of South India.** C.P.R. Environmental Education Centre, Chennai.

Krishnamurthy, K.V. 2004. **An Advanced Text Book on Biodiversity. Oxford & IBH** Publishing Co. Pvt. Ltd., New Delhi.

Krishnamurthy, K.V., Nelson, R., and Pius, P.K. 1996. Floral changes associated with pollination, pp.243-252. In.: **Advances in Parasitic Plants Research, Cordoba,** Spain.

Kumaraswamy Desikar. **Kumaraswamyiyam, Natchathina Saridha,** Padalam. (Undated).

Lushington, A.W. 1915. **Vernacular List of Trees, Shrubs and Woody Climber in the Madras Presidency.** Madras.

Macdonell, A.A. 1891. **Vedic mythology.** Verlag von Carl J. Trubner, Strasburg.

Mahadevan, I. 2003. **Early Tamil Epigraphy: From the Earliest Times to the Sixth Century.** CRE-A, Chennai and Harvard University, USA.

Malhotra, K.C., Gokhale, Y., Chatterjee, S. and Srivastava, S. 2001. **Cultural and Ecological Dimensions of Sacred Groves of India.** INSA, New Delhi and Indira Gandhi Rashtriya Manav Sangranalaya, Bhopal.

Matthew, K.M. 1983. **The Flora of The Tamil Nadu Carnatic.** 3 vols. The Rapinat Herbarium, St. Joseph's College, Tiruchirappalli.

McCrindle, J.W. 1897. **The Christian Topography of Cosmos.** London (Translated work of Cosmos Indicopleustes of Christian Topography, A.D.535-547).

Moldenke, H.N. and Moldenke, A.L. 1962. **Plants of the Bible.** New York.

Nair, N.C. and Henry, A.N. (Eds.). 1988. **Flora of Tamil Nadu.** 3 vols. Botanical Survey of India, Calcutta.

Narendran, S. 2005. Medical Heritage of Tamil Nadu. pp.155-168. **Heritage of the Tamil - Science & Technology** Vol.1. International Institute of Tamil Studies, Chennai.

Nilakanta Sastri, K.A. 1939a. **History of South India.** Madras.

Nilakanta Sastri, K.A. 1939b. **Foreign Notices of South India.** Madras.

Nilakanta Sastri, K.A. 1972. **Sangam Literature: its cult and culture.** Swati Publications, Madras.

Parker, H. 1984. **Ancient Çeylon.** Asian Educational Services, New Delhi.

Pillai, K.K. 1969. **Social History of the Tamils.** University of Madras, Madras.

Pliny. **Historia Naturalis,** Book VI. 100, 101, 104 and 105.

Purnalingam Pillai, M.S. 1972. **A History of Tamil Literature.** Tinnevelly.

Rajasekharan, S., Mohanan, N., Latha, P.G., Mohanlal, K.G. and Nair, G.M, 2005, **Stars and Trees.** Thenmala Ecotourism Promotion Society, Tiruvananthapuram.

Ramachandran, C.E. 1963-64. **Historical Sketches in the Pathuppattu.** University of Madras, Madras.

Raman, K.V. 1992. Roman coins from Tamil Nadu: an historical assessment. The Srilanka Journal of South Asian Studies 1: 64-75.

Ramanathan, P. 1998. **A New Account of History and Culture of the Tamils.** The Tirunelveli South India Saiva SieddhanthaWorks Publishing Soc. Ltd., Chennai.

Reinaud 1845, **Relation des voyages faits par les Arabes et let persons dans l' Indeet a la chine dans le lye siecle do 1'ere chretienne.** Paris.

Roxburgh, W. 1820. **Flora Indica.** W. Carey Publ. Serampur, India.

Saraswat, K.S. 1980. The ancient remains of the crop plants at Atranjikhera (c 2000-2500 B.C.) J. Ind. Bot. Soc.59:306-319.

Sastri, A.M. 1992. Imperial Roman Coins as Early Decanese Inscriptions. Studies in South Indian Coins. Vol.2, pp.77-78.

Schoff, 1912. **The Periplus of the Erythraean sea.** New York. (English translation of **Periplus).**

Schrader, O. 1930. Aryan Religion. In: **Encyclo. Reli. and Ethics:** Vol.2.

Seneviratne, S. 1989. PreState to State Societies: Transformations in the Political Ecology of South India with Special Reference to Tamil Nadu. Paper presented at **Seminar on the State in Pre-colonial South India,** Jawaharlal Nehru University, New Delhi.

Shankar, D. 2002. My encounter and reflections on Indian medical heritage. Ind.J. Traditional Knowledge 1(1): 51-58.

Shankar, D., Ved, O.K. and Geetha, U.G. 2000. A Green Pharmacy, pp. 14-17. In.: The Hindu Folio. **Indian Health Traditions.** October 8,2000.

Siva Sankara Reddy, C., Suvarna, C. and Tummala, R.(undated). **A Profile of dye yielding plants.** Andhra Pradesh Forest Department, Hyderabad.

Sivaraja Pillai, K.N. 1932. **The Chronology of Early Tamils.** New Delhi.

Sivaraj, N. and Krishnamurthy, K.V. 1989. Flowering phenology in the vegetation of Shervaroys (Eastern Ghats: South India). Vegetatio 79:85-88.

Sivaramamurthi, C. 1950. Geographical and chronological factors in Indian Iconography. Ancient India No.6. pp21-63.

Sivathamby, K. 1981. Early South Indian Society and Economy: The Tinai Concept. **Social Scientist,** New Century Book House, Madras.

Skinner, C.M. 1911. **Myths and Legends of Flowers, Tree Fruits and Plants in all ages and in all climates.** London.

Spencer Wells 2002. Journey of Man. National Geographic Channel. November 19, 2002.

Srinivasa Ayyar, R. 1958. ***Siva Visnukestra Vilakkam.*** Venkatesa Naikar, P.A., B.N. Press, Madras.

Srinivasa lyengar, P.T. 1983. **History of Tamils from the Earliest Times to 1000 AD.** Asian Educational Services, New Delhi.

Subramania Pillai, G. 1948. **Tree Worship and Ophiolatry,** Annamalai University, Annamalai Nagar.

Subramanian, N. 1966. **Sangam Polity.** Bombay.

Subramanian, N. 1988. **The Brahmin in the Tamil Country.** Ennes Publications, Udumalpet, Tamil Nadu.

Subramanian, N. 1996. **The Tamils.** Institute of Asian Studies, Chennai.

Subramanya Mudaliyar, C.K. 1968. **Periapuranam.** Second Edition, Coimbatore.

Swamy, B.G.L. 1973. Sources for a History of Plant Sciences in India. I. Epigraphy. Ind. J. Hist. Sci.8:61-98.

Swamy, B.G.L. 1976. Sources for a History of Plant Sciences in India. III. The Maritime Trade of Ancient Tamils in Plant Products - A Critique. Ind. J. Hist. Sci. 11:33- 48.

Swamy, B.G.L. 1978. Sources for a History of Plant Sciences in India. IV. "Temple Plants" (Sthala-vrksas) - A Reconnaissance.Trans. Arch. Soc. S.Ind. 1978.

Temple, R.C. 1937, Fetishism. In.: **Encyclo. Reli. and Ethics:** Vol.5.

Thillaivanan, S. 2005. Trade in French India, pp.292-298. In: **Heritage of the Tamils - Science & Technology** Vol.1. International Institute of Tamil Studies, Chennai.

Thomas, R., Nair, S.B., and Banerjee, M. 2004. HLA-B and HLA-C alleles and haplotypes in the Dravidian tribal populations of Southern India. Tissue Antigens 64:58-65.

Tripati, S and Raut, L.N. 2006. Monsoon wind and maritime trade: a case study of historical evidence from Orissa, India. Curr.Sci.90:864-871.

Vaiyapuri Pillai. S. 1958. **History of Tamil Language and Literature.** Madras.

Varadarajan, M. 1965. **The Treatment of Nature in Sangam Literature.** Second Edition. Tirunelveli Saiva Siddhantha Noorpathukazhagam, Madras.

Vavilov, N.I. 1949-50. The origin, variation, immunity and breeding of cultivated plants. Chronica Botanica 13: 1-366.

Watt. G. 1891/1892. **A Dictionary of the Economic Products of India.** Vol.V. **Rice.** Govt. of India.

Whitehead. H. 1921. **The Village Gods of India.** O.U.P., Madras.

Yegna Narayan Aiyer, A.K. 1956. **The Antiquity of Some Field and Forest Flora of India.** The Bangalore Press, Bangalore.

Zirnmer, H. 1935. **The Art of Indian Asia.** Pantheon Books, New York.

3

நெறித்துணை நூல்களும் கட்டுரைகளும் : தமிழ்

அருளி, பா. 2002, அருங்கலைச்சொல் அகரமுதலி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

அறவாணன், க.ப. 1984, தமிழரின் தாயகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

இராகவையங்கார், மு. 1964, ஆராய்ச்சித் தொகுப்பு, 2ஆம் பதிப்பு, சென்னை.

இராசமாணிக்கம், மா. 1970, பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

இராசேந்திரன், சோம. 2002, சித்தர் மருத்துவப் பாடல்களும் ஆய்வுத் தேவையும், பக்கங்கள் - 19-23, தமிழியல் ஆய்வு - 2002, கணியன் பூங்குன்றனார் தமிழாய்வு மன்றம், நேரு நினைவுக் கல்லூரி, புத்தனாம்பட்டி, தமிழ்நாடு.

இராசேந்திரன், ம. 2003, மெக்கன்சி சுவடிகளில் தமிழகப் பழங்குடி மக்கள், கணையாழி படைப்பகம், சென்னை.

இராமசாமி, சோம. மற்றும் ரமேஷ், த. 1995, கடல் மட்ட மாறுதல்களும் தமிழகக் கடல் ஓரத்தின் எதிர்கால நிலையும், அறிவியல் தமிழியம், பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், பாண்டிச்சேரி.

உமா மகேஸ்வரி, லொ.ஆ. 2005, மரக்கலங்களும் துறைமுகங்களும், பக்கங்கள் 24-32, தமிழரின் மரபுச் செல்வங்கள் - அறிவியல், தொழில்நுட்பம், Vol.1, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

உஷாராணி, ப. 2000, மராத்தியர் காலக் கப்பல் கட்டும் தொழில், பக்கங்கள் 247-252, காகிதச்சுவடி ஆய்வுகள், அரிய கையெழுத்துச் சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

கலியாணம், ஜி. 1970, சிவாலயம் இரத்தினகிரித் தலவரலாறு, இரத்தினகிரி.

காஞ்சனா, இரா. 2005, இலக்கியத்தில் நிலையியல் உயிர்நூல் கருத்துக்கள், பக்கங்கள் 219-227, தமிழரின் மரபுச் செல்வங்கள் - அறிவியல், தொழில்நுட்பம், Vol.1, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

கிருஷ்ணமூர்த்தி, கு.வி. 2005, அறிவியலின் வரலாறு, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

கிருஷ்ணன், பி.ஏ. 2004, மிளகாயைப் போன்ற பாண்டுரங்கன், தமிழர் உணவு சிறப்பு மலர், காலச்சுவடு, செப்டம்பர் 2004, பக்கங்கள் 28-31.

குணா, 1980. தமிழர் மெய்யியல், பொதுமை வெளியீடு, சென்னை. (முதல் பதிப்பு).

குமார செல்வா, 2004. சொர்க்கத்தில் கட்டெறும்பு, தமிழர் உணவு சிறப்பு மலர், காலச்சுவடு, செப்டம்பர் 2004, பக்கங்கள் 34-37.

கோடப்பிள்ளை, த. 2003, எளிமைத் தமிழ், கோடப்பிள்ளை அறக்கட்டளை, பிச்சாண்டார் கோவில், திருச்சி.

கோவை இளஞ்சேரன், 1982. இலக்கியம் ஒரு பூக்காடு, முதற்பதிப்பு, ராக்போர்ட் பப்ளிகேஷன், சென்னை.

சஞ்சய் சுப்பிரமணியம், 2004, தந்தூரி தொடாத தமிழ் உணவு, தமிழர் உணவு சிறப்பு மலர், காலச்சுவடு, செப்டம்பர் 2004, பக்கங்கள் 18-20.

சண்முகசுந்தரம், ச. 2002, தமிழ்நாட்டுத் தாவரங்கள், முதற்பதிப்பு, மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்.

சண்முகசுந்தரம், ல. 1970, தமிழும் தாவரமும், தென்காசி.

சத்தியமூர்த்தி, எஸ். 1969, சிவலிங்க வழிபாடு, ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில்.

சாமி, பி.எல். 1967, சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம், கழக வெளியீடு, சென்னை.

சாமி, பி.எல். 1992, இலக்கியத்தில் அறிவியல், சேகர் பதிப்பகம், இரண்டாம் பதிப்பு, சென்னை.

சாமிநாதையர், உ.வே. 1955, குறுந்தொகை மூலமும் உரையும், மூன்றாம் பதிப்பு, கபீர் அச்சுக்கூடம், சென்னை.

சாரதாம்பாள், செ. 2005, சங்க இலக்கியமும் பண்பாட்டுச் சூழலியலும் (முல்லை நிலம்), பக்கங்கள் 228-239, தமிழரின் மரபுச் செல்வங்கள் - அறிவியல், தொழில்நுட்பம், Vol.1, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

சாஹுல் ஹமீது, சி. 2000, அகத்திய முனிவரின் வைத்தியக் கும்மி - தெளிவுரை, அந்தியோதயா சங்கம், திருச்சி.

சித்தானந்த மூர்த்தி, எம். 1966, ''கன்னட சாசனகலசம்ஸ்கிருதிகா அத்யாயன'', (கன்னட மொழியில்), மைசூர் பல்கலைக்கழகம், மைசூர்.

சிவசுப்பிரமணியன், ஆ. 2004, புன்செய் உணவுகள்: கம்பங்கஞ்சியும் உளுந்தங்களியும், தமிழர் உணவு சிறப்பு மலர், காலச்சுவடு, செப்டம்பர் 2004, பக்கங்கள் 50-52.

சிவத்தம்பி, கா. 2000, தமிழில் இலக்கிய வரலாறு, என்.சி.பி.எச். மதராஸ்.

சீநிவாசன், கு. 1987, சங்க இலக்கியத் தாவரங்கள், முதற்பதிப்பு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சுகவனமுருகன் 2000, பெண்ணைக் கரையில் சிந்து காசு, தமிழ்நாடு அகழாராய்வுக் கழகத்தின் கருத்தரங்கில் 2000ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் வழங்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை, தஞ்சாவூர்.

சுந்தர சோபிதராஜ், கே.கே. 1994, தல மரங்கள், முதற்பதிப்பு, சோபிதம், சென்னை.

சுப்பிரமணியப்பிள்ளை, கா. 1953, தமிழர் சமயம், இரண்டாம் பதிப்பு, கழக வெளியீடு, சென்னை.

சுப்பிரமணியன், ச.வே. 1993, தமிழர் வாழ்வில் தாவரம், உலகத் தமிழ்க் கல்வி இயக்கம், திருநெல்வேலி.

சுவாமி, பெ.கு.இல. மற்றும் கிருட்டிணமூர்த்தி, கு.வி. 1994, பண்டைய இந்தியாவில் தாவர வளர்ப்பு பற்றி கல்வெட்டுகள் கூறும் செய்திகள். pp. 26-34. In: Proc. Conf. Indigenous Science and Technology. Bharathidasan University, Tiruchirappalli.

செயக்குமார், மரு.க. மருத்துவக் குறளும் பழமொழியும், அந்தியோதயா சங்கம், திருச்சி

சையத் ஜாகீர் ஹசன், அ. 2003, கல்வெட்டுகள் கூறும் பிற்காலப் பாண்டியர்களின் சமுதாயம், பக்கங்கள் 443-445, உலகத் தமிழியல் ஆய்வு வளர்ச்சிக் கருத்தரங்கம் - ஆய்வுமாலை 1, தமிழ் உயராய்வு மையம், பூண்டி, தஞ்சாவூர்.

சோதிப்பிரகாசம், எம்.சி.ஆர்.ஏ. 2002, திராவிடர் வரலாறு, பொன்மணி பதிப்பகம், திருவள்ளூர்.

ஞானசேகரன், தே. 2005, பள்ளு இலக்கியங்களில் மரபுவழி வேளாண் தொழில்நுட்பம், பக்கங்கள் 17-31. தமிழரின் மரபுச் செல்வங்கள் -

அறிவியல், தொழில்நுட்பம், Vol.2, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

ஞானப்பிரகாச பட்டாரகர், கமலை ஸ்ரீ. 1972, புட்பவிதி, தருமையாதீன வெளியீடு, தருமபுரம்.

தங்கத்துரை, சு. 2005, நாட்டுப்புற மருத்துவம், பக்கங்கள் 180-190, தமிழரின் மரபுச் செல்வங்கள் - அறிவியல், தொழில்நுட்பம், Vol.1, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

தங்கப்பா, ம.இலெ. 2004, கரிக்காய் பொரித்தாள் கன்னிக் காயைத் தீய்த்தாள், தமிழர் உணவு சிறப்பு மலர், காலச்சுவடு, செப்டம்பர் 2004, பக்கங்கள் 47-49.

தங்கமணி, வை. 1989, தொல்காப்பியத்தில் வனப்பு, அன்னையகம், திருமங்கலம், மதுரை மாவட்டம்.

தட்சிணாமூர்த்தி, அ. 2003, தமிழியற் சிந்தனைகள், அகல், சென்னை.

திருஞானம், க. 1998, திருக்கோயில் மரங்களின் மருத்துவப் பயன்கள், செல்வி பதிப்பகம், திருச்சிராப்பள்ளி.

தில்லை கோவிந்தராஜன், கோ. 2001, சங்க இலக்கியம் காட்டும் ஆர்க்காட்டுக் கூற்றத்து அரசூர், பக்கங்கள் 25-28, சங்க இலக்கியம் : பன்முகநோக்கு, மக்கள் அச்சகம், சென்னை - 2.

துரையரசன், க. 2005, தமிழர்களின் மரபுசார் உழவுத்தொழில், பக்கங்கள் 32-45, தமிழரின் மரபுச் செல்வங்கள் - அறிவியல், தொழில்நுட்பம், Vol.2, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

நமச்சிவாயம், சே. 2003, தமிழர் உணவு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

நளினி, மு. 1994, அந்நாளைய மருத்துவ நிறுவனங்களும் மருத்துவர்களும், பக்கங்கள் 70-75. In. Proc.Conf.Indigenous Science and Technology, Bharathidasan University, Tiruchirappalli.

நெடுஞ்செழியன், வே. 2005, தமிழர் கண்ட தாவரவியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

பரசுராம் 2006, தமிழ் நிலங்கள் நான்கா? புதிய பார்வை, ஏப்ரல் 1-15.

பரமசிவன், தொ. 2001, பண்பாட்டு அசைவுகள், காலச்சுவடு பதிப்பக வெளியீடு, நாகர்கோவில்.

பரமசிவன், தொ. 2004, புற்றீசல் பிடித்துப் பொரியாக்கி, தமிழர் உணவு சிறப்பு மலர், காலச்சுவடு, செப்டம்பர் 2004, பக்கங்கள் 8-10.

பாபுஜி, கா.மு. 2001, சிலப்பதிகாரம் கூறும் மங்கலவணி, பக்கங்கள் 1056-1058, ஆய்வுக்கோவை, மூன்றாம் தொகுதி, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், திருச்சிராப்பள்ளி.

பாலாஜி, பு. 2005, பண்டைய இலக்கியத்தில் சூழலியல் - சுயச்சூழ்நிலை இயல், பக்கங்கள் 240-258, தமிழரின் மரபுச் செல்வங்கள் - அறிவியல், தொழில்நுட்பம், Vol.1, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

பாவலர் எழுஞாயிறு, 2001, சங்க காலம் எது? பக்கங்கள் 116-120, சங்க இலக்கியம் : பன்முக ஆய்வு, மக்கள் அச்சகம், சென்னை - 2.

பிங்கல நிகண்டு, முதற்பதிப்பு, கழக வெளியீடு, 1968.

பிரேம் ராஜகுமார், பீ. 2005, கடல் வாணிகம், பக்கங்கள் 234-251, தமிழரின் மரபுச் செல்வங்கள் - அறிவியல், தொழில்நுட்பம், Vol.2, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

பிரேமா, சே. மற்றும் ரங்கராசன், ச. 2000, காகித மருத்துவச் சுவடிகள் - ஒரு பார்வை, பக்கங்கள் 105-108, காகிதச்சுவடி ஆய்வுகள், ஆரிய கையெழுத்துச் சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

பூமிநாதன், த. 2001, சுவடிப் பாதுகாப்பில் மரபுவழி பாதுகாப்பு முறைகள், பக்கங்கள் 130-1134, ஆய்வுக்கோவை, மூன்றாம் தொகுதி, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், திருச்சிராப்பள்ளி.

பெருமாள் முருகன், 2004, உள்ளது கொண்டு உண்ணுதல், தமிழர் உணவு சிறப்பு மலர், காலச்சுவடு, செப்டம்பர் 2004, பக்கங்கள் 53-55.

முத்துலிங்கம், அ. 2004, மொரமொரெனவே புளித்த மோர், தமிழர் உணவு சிறப்பு மலர், காலச்சுவடு, செப்டம்பர் 2004, பக்கங்கள் 12-16.

ரவிச்சந்திரன், சு. 2003, திருமுறைத் தலங்கள் - ஆய்வு, பக்கங்கள் 296-300, ஆய்வுமாலை - 1, தமிழ் உயராய்வு மையம், பூண்டி, தஞ்சாவூர்.

ராஜன், கா. 2004, தொல்லியல் நோக்கில் சங்ககாலம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

ராஜேஸ்வரி, ரா. 2005, தொல்காப்பியத்தில் அறிவியல் சிந்தனைகள், பக்கங்கள் 1-11, தமிழரின் மரபுச் செல்வங்கள் - அறிவியல், தொழில்நுட்பம் Vol.1, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

லோகநாத முதலியார், கொ. (பதி.) 1984, சேந்தன் திவாகரம், முதற்பதிப்பு, சென்னை.

வரதராஜன், மு. 1964, பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, முதற்பதிப்பு, பாரிநிலையம், சென்னை.

விஜயலட்சுமி, டி. 2001, பாலக்காடு மாவட்ட இருளப் பழங்குடிகளின் மந்திர மருத்துவம், பக்கங்கள் 1416-1420, ஆய்வுக்கோவை, மூன்றாம் தொகுதி, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், திருச்சிராப்பள்ளி.

வெள்ளைச்சாமி, பெ. 2005, தமிழ் இலக்கியங்களில் வேளாண்மை தொழில் நுட்பங்கள், பக்கங்கள் 56-63, தமிழரின் மரபுச் செல்வங்கள் - அறிவியல், தொழில்நுட்பம், Vol.1, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

வேல்சாமி, பொ. 2004, தமிழர் உணவு சிறப்பு மலர், காலச்சுவடு, செப்டம்பர் 2004, பக்கங்கள் 56-57.

ஜான் பிரிட்டோ, எஸ். 1994, பண்டைய இந்தியத் தாவரவியல், In. Proc. Conf. Indigenous Science and Technology, Bharathidasan University, Tiruchirappalli.

ஜான் பீட்டர், அ. 2001, திருவாரூர் - பெயராய்வு, பக்கங்கள் 1479-1481, ஆய்வுக்கோவை, மூன்றாம் தொகுதி, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், திருச்சிராப்பள்ளி.

ஜெயக்குமார், பா. 2001, தமிழகத் துறைமுகங்கள், தமிழரின் மரபுச் செல்வங்கள் - அறிவியல், தொழில்நுட்பம், Vol.2, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

ஜெயகரன், சு.கி. 2002, குமரி நீல நீட்சி, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.

4

நெறித்துணைக் கல்வெட்டுகளும், செப்பேடுகளும்

1. Annual Reports - South Indian Epigraphy. (AR-SIE) (Numbers followed by year as referred to in this book indicate the serial numbers of the Abstracts of the Inscriptions).
2. Bombay - Karnatak Inscriptions (BKI).
3. Corpus Inscriptionum Indicarum (CII).
4. Epigraphica Carnatica (EC).
5. Epigraphica Indica (EI).
6. South Indian Inscriptions (SII).
7. Dhanika's Nagar Inscriptions.
8. Fleet - Gupta Inscriptions.
9. Rangacharya, V. 1919. A Topographical List of the Inscriptions of the Madras Presidency, Government of Madras, Madras.
10. Royakottai Copper Plates of the Pallava King Skandasisya, TASSi 1957/58.

பின்னிணைப்பு - 1

அ) தொல்காப்பியத் தாவரங்கள்

1) அரை
2) ஆம்பல்
3) ஆர்
4) ஆல்
5) ஆவிரை
6) இல்லம்
7) உதி (ஒதி)
8) உழிஞை
9) உன்னம்
10) எகின்
11) எள் (எண்)
12) ஒடு
13) கடு
14) கரந்தை
15) காஞ்சி
16) காந்தள்
17) காயா
18) குமிழ்
19) குவளை
20) குறிஞ்சி
21) சார்
22) சே
23) ஞெமை
24) தடா(தடவு)
25) தளா(தளவு)
26) தாமரை (கமலம்)

27) தும்பை
28) நமை
29) நெய்தல்
30) நெல்
31) நொச்சி
32) பனை (போந்தை)
33) பாலை
34) பிடா
35) பீர்
36) புளி
37) பூல்
38) பூவை
39) மருதம்
40) மா
41) முல்லை
42) யா
43) வஞ்சி
44) வள்ளி
45) வாகை
46) விசை
47) விரிச்சி
48) வெட்சி
49) வெதிர்
50) வேம்பு
51) வேய்
52) வேல்

இவற்றைத் தவிரப் பாசிகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆ) சங்ககாலத் தாவரங்கள்

1) அகத்தி
2) அகில் (அகரு, காழ்வை, தில்லை)
3) அசோகு (பிண்டி)
4) அடப்பம் (அடும்பு)
5) அதர்வை (அத்தி?)
